# சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள்

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்
முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


**ஆய்வாளர்:**

**சே.சுரேஷ்**

பதிவு எண்: 07639/Ph.D.2/Tamil/Full Time/April 2012/Date:17.04.2012

**நெறியாளர்:**

முனைவர் **க.தமிழ்மாறன்**
உதவிப் பேராசிரியர்

**முதுகலை & தமிழாய்வுத் துறை**

## அரசு கலைக் கல்லூரி

**அரியலூர் - 621 713**


**ஏப்ரல் - 2019**

**சே.சுரேஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவுவெண்: 07639/Ph.D.2/Tamil/Full Time/April 2012/Date:17.04.2012
தமிழாய்வுத் துறை,
அரசு கலைக் கல்லூரி,
அரியலூர் - 621 713.

## ஆய்வாளர் உறுதிமொழி

'**சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள்**' என்னும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வேடு, பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக, அரியலூர், அரசு கலைக் கல்லூரி, தமிழாய்வுத் துறையில், **முனைவர் க.தமிழ்மாறன்** அவர்களின் மேற்பார்வையில், என் சொந்த முயற்சியில் உருவானது என்றும், இந்த ஆய்வேடு இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப்படவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள்:

இடம்: ஆய்வாளர் கையொப்பம்

முனைவர் **க.தமிழ்மாறன்,** எம்.ஏ.,எம்.ஃ.பில்.,பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
அரசு கலைக் கல்லூரி,
அரியலூர் - 621 713.

## நெறியாளர் சான்றிதழ்

'**சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள்**' என்னும் தலைப்பிலான இந்த ஆய்வேடு அரியலூர், அரசு கலைக் கல்லூரி, தமிழாய்வுத் துறையில், பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக என் மேற்பார்வையில் **சே.சுரேஷ்** அவர்களால் செய்து முடிக்கப்பட்டது என்றும், இந்த ஆய்வேடு வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

நாள்:

இடம்: நெறியாளர் கையொப்பம்

துறைத்தலைவர் கையொப்பம்

# நன்றியுரை

‘சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள்’ என்னும் பொருளில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள வாய்ப்பை நல்கிய பெருமைமிகு திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது முனைவர் பட்ட ஆய்விற்கு அனுமதி வழங்கி, கல்விப் பணியில் சிறந்து விளங்குவதுடன், ஆய்வுப் பணிகளுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்கி வரும் அரியலூர், அரசு கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **பெ. பழனிச்சாமி** அவர்களுக்கும், தமிழாய்வுத் துறைத் தலைவர் முனைவர் **சா. சிற்றரசு** அவர்களுக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

முனைவர் பட்ட ஆய்வு மாணவராக என்னை ஏற்றுக்கொண்டு ஆய்வு நெறியாளராக நல்ல கருத்துக்களை தோழமையோடும், அன்போடும், பண்போடும் ஆக்கமும், ஊக்கமும் தந்து நம்பிக்கையூட்டி நெறிப்படுத்தி, எல்லா வகையிலும் எனை ஆற்றுப்படுத்திய ஆய்வு நெறியாளர், அரியலூர், அரசு கலைக் கல்லூரியின் தமிழ்த்துறைப் போராசியர் முனைவர் **க. தமிழ்மாறன்** அவர்களுக்கு என் பணிவான நன்றிகள்.

ஆய்வு சிறப்பாக அமைந்திட உதவிகள் செய்திட்ட ஆய்வறிஞர் குழு உறுப்பினாகள், அரியலூர், அரசு கலைக் கல்லூரியின் தமிழ்த்துறைப் போராசியா் முனைவர் **து. சேகர்** அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் போராசியர் முனைவர் **அ. சையத் ஜாஹிர் ஹசன்** அவர்களுக்கும் நன்றிகள் பற்பல.

ஆய்வு நிகழும் காலத்தில் என்னை ஊக்கப்படுத்திய என் பெற்றோர்கள் **கை.சேகர் சே.சுசீலா** அவர்களுக்கும் அண்ணன் **சே. விஜய்** அவர்களுக்கும், மனைவி **கி. மாகிப்ரித்தி** மற்றும் மகள் **சு. பிரம்மாசுகி** ஆகியோருக்கும் என் அன்பான நன்றிகள்

ஆய்வேடு செம்மையாக அமைவதற்கு உதவிய நண்பர்கள் ஆப்பிள் இளங்கோவன், தி.தர்மராஜ், செ. ராஜா, த. மகேஸ்வரி, மு. முத்துமாறன், ப. செந்தில்நாதன், க. செந்தில்ராஜா, இரா. பழனிச்சாமி, வே. செந்தில்குமரன், ஆப்பிள் செல்வா ஆகியோருக்கு என் அன்பு நன்றிகள்.

ஆய்வுக்கட்டுரை சிறப்புற அமைவதற்குப் பல ஆய்வு நூல்களைத் தந்து உதவிய திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகத்திற்கும், அரியலூர், அரசு கலைக் கல்லூரியின் நூலகத்திற்கும், பெரம்பலூர் மாவட்ட மைய நூலகத்திற்கும், சென்னை கன்னிமாரா நூலகத்திற்கும் நன்றிகள் பல.

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 03 - 08 |
| இயல் 1. சங்ககால தமிழ் - வடமொழி உறவு நிலை | 09 - 46 |
| இயல் 2. எட்டுத்தொகை நூல்களில் வடமொழிக் கூறுகள் | 47 -144 |
| இயல் 3. பத்துப்பாட்டு நூல்களில் வடமொழிக் கூறுகள் | 145 - 193 |
| இயல் 4. சங்ககால தொல்லியல் சான்றுகளில் வடமொழிக் கூறுகள் | 194 - 237 |
| முடிவுரை | 238 - 248 |
| துணைநூற் பட்டியல் | 249 – 266 |
| பின்னிணைப்பு | |

# முடிவுரை

- அறிவியல், தொழில்நுட்பத்திற்கு முன்னோடி என்றும், அறிவியல் வளர்ச்சியில்லை என்றால் தொழில்நுட்பமும் இருக்காது என்றும் பரவலாக நம்பப்படுகிறது. எனினும், பழங்கால வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுவது என்னவென்றால். அறிவியலுக்கு வெகுகாலம் முன்பே பல தொழில்நுட்பங்கள் பிறந்து வளர்ந்திருக்கின்றன என்பதுதான்.
- புவியில் இருந்து தமக்குக் கிடைக்கும் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி பண்டைய மக்கள் பல கருவிகளையும் பயனுள்ள பொருட்களையும் நிர்மாணித்துள்ளார்கள் என்பதும், இந்தக் கருவிகளைக் கொண்டு தம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தை தம்முடைய கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதும் ஆதாரங்கள் மூலம் அறிஞர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளன.
- பழந்தமிழர் உருவாக்கிய எந்திர, தொழில்நுட்ப தயாரிப்பின் பின்னணியில் உள்ள அறிவியல் அவர்களுக்குத் தெரியாது.
- ஒன்றை உருவாக்குவதற்கு பழந்தமிழர்களது அனுபவத்தாலும், முயற்சியின் வெற்றி தோல்விகளாலும் நிகழ்ந்ததே ஒழிய, அறிவியல் ரீதியாக நிகழவில்லை. தாங்கள் செய்யக்கூடிய கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்குப் பின்னால் அமைந்துள்ள அறிவியல் பற்றி மக்கள் அறியவில்லை. இந்த எளிய கருவிகளையும், தொழில்நுட்பங்களையும் அவர்கள் உருவாக்கி பயன்படுத்த முடிந்தது என்றால் அதன் பின்னணியில் அமைந்துள்ள தாக்கம், விவேகம், மற்றும் அறிவுக் கருத்துக்களை ஒன்றாகத் திரட்டுதல் போன்றவை அவர்களிடம் இருந்திருக்க வேண்டும்.
- மனிதனின் அறிவு வளர்ச்சியோடிணைந்த அறிவியல் வளர்ச்சியே சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதையும் அறியலாகிறது. காலத்திற்கேற்ற வளர்ச்சியும், வளர்ச்சிக்கேற்ற மாற்றங்களும் சமுதாயத்திற்குத் தேவையானவையாகும்.
- அறிவியல், கருவிகளின் வளர்ச்சி வேகம் மனித வாழ்வியலை மாற்றியதோடல்லாமல், மனித மனத்தின் கலைவெளியீடான இலக்கியத்தையும் மாற்றியுள்ளது.

- ✷ பண்டைய தமிழர்களின் வானியல் சிந்தனைகள் பிற நாட்டினரின் வானியல் கருத்துகளுக்கு ஒப்ப காப்பியப் புலவர்கள் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளது சிறப்பிற்குரியதாகும்.
- ✷ நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களையும் உள்ளடக்கியதாக புவி காணப்படுகிறது என்ற கூற்றை நீலகேசி குறிப்பிடுகின்றது.
- ✷ கோள்களையும், நாள்மீன்களையும் கண்டறிந்து அவற்றை மனித வாழ்விற்கு ஏற்ப ஒப்பிட்டுக் கூறுவது என்பது அவர்கள் அறிவியலோடு இணைந்து வாழ்வினை நடத்தினர் என்பதை அறியமுடிகிறது. சூரியன் ஒரு வருடத்தில் வடக்கு தெற்கு நோக்கி நகர்ந்து செல்வதால் ஏற்படும் பருவநிலை மாற்றங்களை சிலப்பதிகாரமும், சீவகசிந்தாமணியும் உணர்த்துகின்றது.
- ✷ சூரியன், சந்திரன், கோள்கள் போன்ற விண்பொருட்களின் இயக்கங்கள் தொடர்பான அறிவு சங்ககாலத்தில் தமிழ் மக்களுக்கு இருந்தது. கவனிப்புகள் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளை வைத்தே இவ்வியக்கங்கள் தொடர்பான புரிந்துணர்வுகளை அவர்கள் வளர்த்துக் கொண்டனர். புலன்களால் உணர்ந்து கொள்ளக் கூடியவற்றுக்கு அப்பால், நிகழ்வுகளுக்கு ஊகங்கள் மூலம் விளக்கங்களும் கொடுக்கப்பட்டன.
- ✷ பழுதுபட்ட ஒரு உறுப்பை எடுத்துவிட்டு வேறொரு உறுப்பைப் பொருத்துதல் என்பது இன்றைய மருத்துவ உலகின் சாதனை. இதனைப் பற்றிய குறிப்பொன்று சிலம்பில் காணப்படுவதும் உண்மை.
- ✷ மனிதனின் பறக்க வேண்டும் என்ற ஆசை கற்பனையாக இலக்கியமாக, தேடலாகத் தொடர்ந்து இன்று நிறைவேறியுள்ளது.
- ✷ சீவகசிந்தாமணியில் இடம்பெற்றுள்ள மயிற்பொறியினை வலஞ்சுழி மற்றும் இடஞ்சுழியாக திருகுவதன் மூலம் அம்மயிற்பொறி வானமேகங்களிடையே பறக்கவோ மயிர் சிலிர்க்கும் வகையில் தரையில் இறங்கச் செய்யவோ முடியும் என்கின்றது அந்நூல். இது வியப்பிற்குரிய செய்தியாகும்.
- ✷ இரும்பு, வெள்ளி, பொன், செம்பு ஆகிய உலோகங்களைப் பயன்படுத்தி உள்ளனர். அவற்றைக் கொண்டு பல பொருள்களைச் செய்து பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

- ✷ சீவகசிந்தாமணி எந்திரத்தால் இயக்கப்பட்ட திரைச்சீலை பற்றிப் பேசுகின்றது.
- ✷ ஆர்க்கிமிடிஸ் தத்துவம், பாஸ்கல் விதி, நியூட்டன் புவிஈர்ப்பு விசையின்படி, காய் முதிர்ந்து பூமி நோக்கி கீழே விழுவதைப் பற்றி சீவகசிந்தாமணி குறிப்பிட்டுள்ளது.
- ✷ உலோகத் தொழில்நுட்பம், தச்சுத்தொழில்நுட்பம், தோல் தொழில்நுட்பம், துகிலியல் தொழில்நுட்பம், மட்பாண்டத் தொழில்நுட்பம் ஆகிய தொழில்நுட்பங்கள் பற்றிய குறிப்புகள் காப்பியத்துள் இடம்பெற்றுள்ளன.
- ✷ நீர் புவியீர்ப்பு விசையின் காரணமாக எப்போதும் மேலிருந்து கீழ் நோக்கியே ஓடும் என்ற அறிவியல் உண்மையை அடிப்படையாகக் கொண்டு பாசனம் செய்கின்றனர். அத்தகைய பயிர்த்தொழிலில் ஊடுபயிர் முறையினை எவ்வாறு கைகொள்ள வேண்டும் என சீவகசிந்தாமணி தெளிவாக எடுத்துரைக்கின்றது.
- ✷ நீரை முறைப்படுத்தி சேமிக்க சுருங்கை குழாய், நீர்த்தேக்கம் பற்றியும் காப்பியம் பதிந்துள்ளது.
- ✷ வளர்ச்சியடைந்த சமுதாய மனிதனுக்கு சமூகச்சூழல் மட்டும் போதுமானதல்ல. அதற்குப் பொருத்தமான இயற்கைச் சூழ்நிலையும் இன்றியமையாதது. அதைத் தூய்மையுடன் காக்கும் வாழ்வியல் கோட்பாட்டைக் கண்டது தமிழிலக்கிய நெறி. இன்றைய காலக்கட்டத்தில் சுற்றுப்புறச் சூழலியல் குறித்த அறிவினைப் பெற்றிருத்தல் அவசியம் என வலியுறுத்துகின்றனர். ஆனால் மனிதனை இயற்கைக்குள் கொண்டு வரும் சூழலியல் காப்பியங்களில் மிகுதியும் போற்றப்பட்டுள்ளது. நீர், காற்று, மண் போன்றவை மாசடைந்ததாக காப்பியத்துள் செய்தியில்லை. மாறாக இயற்கையைப் போற்றி வழிபட்ட நிலையினைக் காணமுடிகிறது.
- ✷ காப்பியங்களில் இடம்பெற்றுள்ள வருணனை கூட சுற்றுச்சூழலியலோடு தொடர்புடையதாக அமைந்துள்ளதை காப்பிய இலக்கியம் புலப்படுத்துகிறது. மேலும், இவை குறித்த ஆய்வில் சூழலியல் சார்ந்த வாழ்விற்கு மக்கள் தங்களை தயார்படுத்தியிருந்தனர் என்பதையும் காப்பிய இலக்கியத்தின் வழி அறியலாகிறது.
- ✷ மணிமேகலைக் காப்பியம் சுனாமி பற்றிக் குறிப்பிடுகின்றது.

- தகவல் மேலாண்மை எனும் துறையில் தகவல் அனுப்புதல், பெறுதல், பரப்புதல் எனும் நிலைகளில் வாய்மொழியாகவும் எழுத்து மொழியாகவும் தகவல் மேலாண்மை நிகழ்ந்துள்ளதை காப்பியம் பதிவு செய்கிறது.
- காப்பிய இலக்கியத்துள் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் செய்திகள், தகவல் தொடர்பியல், வானியல், மருத்துவம் யாவும் பிறவும் இன்றைய தொழில்நுட்பக் கூறுகளுடன் ஒப்பிடும் வகையில் தொடக்க அளவிலான அறிவியல் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது எனலாம்.
- மழைவளம் குறையும்போது பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதையும், விளைபொருட்கள் விளையாது போகின்ற நிலையையும், காட்டுத்தீ மிகுதியாகக் காணப்படுவதையும், உயிர்கள் அழிவதையும் பஞ்சம் ஏற்படுவதையும் மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.
- கடல் உள்வாங்கும் நிகழ்வை 'கடல் ஓதம்' என சிலப்பதிகாரம் பதிவுசெய்துள்ளது.
- தொலைக்காட்சி வழி நேரலை ஒளிபரப்பை இன்றைய அறிவியல் நமக்கு காட்டுகிறது. ஆனால் சீவகசிந்தாமணி அன்றே நேரலைக்காட்சியை நமக்குக் காட்டுவது வியப்பிற்குரியது.

## மேலான ஆய்வு

'காப்பியங்களில் சுற்றுச்சூழலியல்' என்ற நோக்கில் ஆய்வு செய்வதை உரிய எதிர்கால ஆய்வுக்களமாகக் கருதலாம்.

இயல் - 1

# சங்ககாலத் தமிழ் - வடமொழி உறவு நிலை

## 1.0 முன்னுரை:

தமிழ்மொழி வரலாறு சங்ககாலம், சங்கம் மருவிய காலம் (களப்பிரர் காலம்) பல்லவர் காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர்காலம் என பகுக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதன்மையான காலம் சங்ககாலம் ஆகும். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலம் சங்ககாலம் ஆகும். சங்கம் முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாகும். அச்சங்கம் இருந்தது என்று சிலரும் இல்லை என்று சிலரும் தத்தமக்குக் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் கூறுகின்றனர். சங்கம் இருந்ததாக இறையனார் களவியல் உரை, சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் போன்றோர் கூறுகின்றனர். 'சங்கம்' என்பது பழங்காலத்தில் இல்லையென சிவராஜபிள்ளை, பி.டி.சீனிவாச ஐயங்கார், நமச்சிவாய முதலியார் போன்ற அறிஞர்கள் தொல்காப்பியத்தின் 'சகரக் கிளவியும் அவற்றோரற்றே' என்ற நூற்பாவை எடுத்துக்காட்டி மறுக்கின்றனர். எனினும் அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களை சங்க இலக்கியம் என்று பெயரிட்டு அழைக்கும் வழக்கம் இன்றுவரை தொடர்கிறது. சங்க காலத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் பண்டைய மக்களின் வரலாற்றுப் பெட்டகமாக இருந்து வருகின்றன.

தமிழர்களின் வரலாற்றினைத் தொடங்கும் இடமாகவும் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க இலக்கியத்தில் பண்டைய மக்களின் உணவு, உடை, இருப்பிடம், வேளாண்மை, அரச உருவாக்கம், தொழில், வாணிபம், போர், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், புழங்குப்பொருட்கள், பிறநாட்டாரின் வருகை மற்றும் வாணிப குறிப்புகள், பிறநாடுகள் பற்றிய குறிப்புகள், பிற மொழிக் குறித்த பதிவுகள் போன்றன குறிப்பாகவும் விரிவாகவும் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் வடநாட்டார் வணிகம், மொழி, சமயம் போன்ற காரணங்களுக்காக பண்டைய தமிழர்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளனர். அதற்கான சான்றுகளை சங்க இலக்கியத்தில் காணமுடியும். அந்த உறவுநிலை வணிகத்தில் தொடங்கி, மொழியின் இலக்கிய இலக்கணங்களோடு ஊடாடி சமயத்தின் வழி தமிழ்ப் பண்பாட்டில் படரத் தொடங்கின. இந்த உறவு நிலை மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய வளத்திற்கும் அடிப்படையாக அமைந்தனவா இல்லையா என்பதனை ஆராய்வது ஆரோக்கியமானதாகும்.

## 1.1 சங்கம் – விளக்கம்:

பண்டையத் தமிழகச் சூழலில் பிறமொழிகளின் வருகை மற்றும் கலப்பு காரணமாக தமிழ் மொழியைப் பாதுகாக்க அல்லது செறிவூட்ட சங்கம் அமைத்திருக்கலாம். அங்ஙனம் தமிழ்ப்புலவர்கள் ஒன்றாக சேர்ந்து முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்கள் உருவாக்கி, தமிழ் வளர்த்தார்கள் என்று கூறுவது மரபாக இருந்து வருகின்றது. இச்சங்கங்கள் பற்றி தமிழ் அறிஞர்களிடையே பல கருத்து முரண்கள் நிலவுகின்றன. 'தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்' என்ற நூலை இயற்றிய கே.கே.பிள்ளை,

''சங்கம் என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்பு கூடல் என்னும் சொல்லே வழங்கியிருக்க வேண்டும்; சமணரும் பௌத்தரும் தத்தம் சமயங்களை வளர்ப்பதற்காகச் சங்கங்கள் நிறுவினார்கள்; மதுரையில் நடைபெற்று வந்த கூடலை முதன்முதல் அவர்களே சங்கம் என்று பெயரிட்டழைத்திருக்கக் கூடும்; ஆரியரும், சமணரும், பௌத்தரும் தமிழகத்தில் நுழைந்தப் பிறகு ஏற்பட்ட ஆயிரக்கணக்கான பெயர் மாற்றங்களுள் இ∴தும் ஒன்றாக இருக்க வேண்டும்''[1] என்றுரைக்கின்றார். மேலும் அக்காலத்தில் உருவான சங்க இலக்கியத்தில் 'சங்கம்' என்னும் சொல் ஓர் இடத்தில்கூட இல்லை எனவும் கூறுகிறார். இதனை மறுப்பதற்கில்லை. சமணர்களும் பௌத்தர்களுமே முதன் முதலில் சங்கம் அமைத்துள்ளனர். தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் கி.பி ஏழாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இறையனார் களவியல் உரையில்தான் முதன்முதல் காணப்படுகின்றது. இந்நூல் மூன்று சங்கங்கள் இருந்த இடம், அதில் இடம்பெற்றிருந்த புலவர்கள், அச்சங்கம் இருந்த கால எல்லை போன்றவற்றை விரிவாக குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாக சங்கம் வைதீகமாக உருமாற்றம் அடைவதை உணரமுடிகிறது.

## 1.2 சங்கம் பற்றி கூறும் நூற்கள்:

முச்சங்கம் பற்றிய குறிப்புகளைத் தமிழ்மொழியில் உருவான பல நூல்கள் கூறுகின்றன. அவை செவிவழிச் செய்தியாக கேட்டதை பதிவு செய்தனவா? அல்லது திட்டமிட்டு பதியப்பட்டதா என்ற ஐயம் எழாமல் இல்லை. இருப்பினும் சங்கம் இருந்தது பற்றி தமிழின் இலக்கண இலக்கியங்கள் சில சான்று பகர்கின்றன.

இறையனார் அகப்பொருள்
முல்லைக்கலி - (4 : 1 – 4)
மதுரைகாஞ்சி - 'புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்புகள்'
சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லாரின் உரை

திருவிளையாடல் புராணம் - பரஞ்சோதியார்

- தேவாரம் - திருஞானசம்பந்தர் ‘கூடல் ஆலவாய்’
- தேவாரம் - திருநாவுக்கரசர்- ‘நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன்’
- மாணிக்கவாசகர் - ‘வான்உயர் மதில் கூடலில் ஆய்ந்த நண்தீந்தமிழ்’ – திருச்சிற்றம்பலம்
- பெரிய திருமொழி - ‘சங்க முத்தமிழ்’
- திருத்தொண்டத்தொகை - ‘பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேள்’
- திருக்கோவையார் - ‘உறைவானுயர் மதிற்கூடலினாய்ந்த வொன் தீந்தமிழ்’

மேற்கண்ட நூற்கள் சங்கம் பற்றித் தெரிவிக்கின்றன. இதனால் சங்கம் இருந்தமை உறுதிசெய்யப்பட காரணிகள் அதிகரிக்கின்றன. இந்நிலையில் வரலாற்றாசிரியர் கே.கே.பிள்ளை, சங்கம் உருவானது தொடர்பான கதை ஒன்றை குறிப்பிடுகின்றார்.

“முன்னொரு காலத்தில் வங்கிய சேகர மன்னன் என்பவன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அப்போது வாரணாசியில் பிரமதேவன் பத்து அசுவமேத யாகங்களை முடித்துக்கொண்டு கங்கையாற்றில் தன் மனைவியர் சரசுவதி, காயத்திரி, சாவித்திரி ஆகிய மூவருடன் நீராடச் சென்றான். கந்தருவப் பெண் ஒருத்தியின் இன்னிசையில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த சரசுவதிதேவி சற்றுப் பின்தங்கினாள். அவளை மானிடப் பிறவி எடுக்குமாறு பிரம்மன் சபித்தான். கலைமகள் தன் பிழையை மன்னித்துத் தனக்குச் சாப விடுதலையளிக்கும்படி தன் கணவனிடம் மன்றாடினாள். நான்முகக் கடவுளும் உளமிரங்கி அருள்சுரந்து தன் சாபத்துக்குக் கழுவாய் ஒன்று கூறினான். அஃதென்னவெனின், கலைமகளின் உடல் ஐம்பத்தொரு எழுத்தால் ஆனது. அவற்றுள் ‘அ’ முதல் ‘ஹக’ வரையிலான 48 எழுத்துக்கள் உலகில் புலமை மிக்க சான்றோர்களாய்ப் பிறப்பார்கள். அவ்வெழுத்துகள் யாவற்றினுள்ளும் வளர்ந்து நின்று அவற்றைச் செலுத்தி வருகின்ற ‘அகரம்’ போன்றவனான சிவபெருமான் நாற்பத்தொன்பதாம் புலவராக வீற்றிருந்து அப்புலவர்கட்குப் புலமையை வளர்த்து முத்தமிழையும் நிலை நிறுத்துவான்”[2] என்று குறிப்பிடுகின்றார். இங்கு தமிழ்மொழி பொது தன்மையினின்று விடுபட்டு ஒற்றை சமயத்திற்குள் குவிக்கப்படுவதை அறியமுடியும். இப்படியான மடைமாற்றத்திற்கான காரணம் பலவாக இருக்க வாய்ப்புண்டு. தமிழ்மொழிக்குச் சமயச் சாயலிடுவதன் வாயிலாக அம்மொழி பேசும் மக்களை தமது சமயத்திற்குள் கொண்டுவரும் முயற்சியாகவும் பார்க்க இடமுண்டு. எனினும் தமிழ்மொழி அக்கூண்டை உடைத்து அனைத்து சமயக் கருத்துக்ளையும் தன்னகத்தே கொண்டதாக விளங்குவது அதன் தனிச்சிறப்பாகும்.

## 1.3 இறையனார் அகப்பொருள்:

தமிழ் மொழியில் தவிர்க்க முடியாத நூல் இறையனார் அகப்பொருள் ஆகும். சங்காலத்திற்குப் பிறகு கி.பி ஏழாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இறையனார் அகப்பொருளை 'இறையனார்' எழுதினார் என்ற குறிப்பிலிருந்து இந்நூல் தமிழ்மொழி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. இறையனார் அகப்பொருளில்தான் சங்கம் தொடர்பான கதை முதன்முதலில் இடம்பெற்றுள்ளது. அகப்பொருள் இலக்கணத்தைக் கூறும் நூல்களில் ஒன்றான இறையனார் அகப்பொருள் பல வரலாற்றுக் கதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூல் உருவானது குறித்து,

"பாண்டிய நாட்டில் 12 ஆண்டுகள் மாபெரும் பஞ்சம் ஒன்று தோன்றி மக்கள் அவலப்பட்டனர். உணவின்றிப் பசியினால் வாடினர். இதனால் மனமுடைந்த பாண்டியன் கேட்டுக்கொண்டபடி புலவர்கள் அனைவரும் நாடுவிட்டு வேறு இடத்திற்குச் சென்று தங்கினர். 12 ஆண்டுகள் கழித்து மழை பெய்து பஞ்சம் நீங்கியதும். புலவர்கள் அனைவரையும் தேடித் தன் அவைக்கு வருவித்தான். ஆனால் திரும்பி வந்த புலவர்கள் அனைவரும் எழுத்து, சொல் இலக்கணங்களில் மட்டுமே வல்லுநராக காணப்பட்டனர். பொருள் இலக்கணத்தில் யாரும் சிறந்தவராக இல்லை. இதனால் மன்னன் கவலை அடைந்தான். அவனுடைய கவலைக்கு இரங்கிய ஆலவாய்க் கடவுள் அகப்பொருளை விளக்கும் அறுபது சூத்திரங்களை 3 செப்பேடுகளின் மேல் பொறித்துக் கோயில் கருவறையில் தன் பீடத்தின்கீழ் இட்டு வைத்தான். கோயில் அருச்சகன் அவ்வேடுகளைக் கண்டெடுத்து மன்னன் கைகளில் சேர்த்தான். அதனால் மனமகிழ்வு கொண்ட மன்னன் அவற்றிற்கு உரை காண முயன்றான். நக்கீரனார் அவற்றுச் சிறப்பானதொரு உரையை இயற்றிக் கொடுத்தார். முருகப்பெருமானின் கூறான உருத்திரசன்மன் என்பான் இவ்வுரையை அரங்கேற்றக் கேட்டு மகிழ்ந்தான்"[3] என்று இறையனார் அகப்பொருள் நூன்முகம் தெரிவிக்கின்றது. இக்கதை பெரியதொரு ஐயத்தை எழுப்புகிறது. தமிழின் முதல்நூலான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பொருளதிகாரம் தமிழ்மொழியின் தனிச்சிறப்புமிக்கது என்று போற்றிவந்த நிலையில் பொருளிலக்கணமே சைவ சமயத்தார்கள்தான் தமிழர்களுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளனர் என்ற பதிவை உருவாக்க முயல்வதாக எண்ண இடமுண்டு.

முதல் சங்கம் கடல்கொண்ட மதுரையில் இருந்ததாக கூறப்படும் நிலையில் ந.சி.கந்தையா, முதற்சங்கம் மற்றும் இரண்டாம் சங்கம் இருந்த கபாடபுரம் பற்றிய பின்வரும் கருத்துகளை முன்வைக்கிறார்.

''தமிழ் ஆராய்ச்சி என்னும் நூல் (Tamil Studies – M.Srinivasa Aiyangar) எழுதியவர் வடநாட்டினின்றும் வந்த ஆரிய பிராமணரே தமிழருக்குச் சீர்திருத்தத்தை அளித்தார்கள் என்றும்

முதற்சங்கம் ஆரியப் பிராமணர் கூட்டத்தின் தலைவராகத் தென்னாட்டுக்கு வந்த அகத்தியர் தலைமையில் நிறுவப்பட்டதென்றும் கூறியுள்ளார்"[4] என சீனிவாச அய்யங்கார் கருத்தைக் குறிப்பிடுகின்றார். மேலும் கபாடபுரம் என்பது திருச்செந்தூருக்கு அருகே இருந்த 'அலைவாய்' என்னும் துறைமுகத்தையே இராமாயணக்காரர் கவாடம் என வடமொழிப்படுத்திக் கூறியதாகவும் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து காட்டுமிராண்டிகளாக தமிழர்கள் வாழ்ந்து வந்ததாகவும் ஆரிய அகத்தியர் போல சிலர் தமிழர்களுக்குப் பண்பாடு கற்றுத் தந்ததாக வரலாறு இயற்றியதை அறிந்துகொள்ள முடிகிறது. அதேபோல சங்கம் பற்றிய கே.என்.சிவராஜபிள்ளையின் கருத்தை வின்சென்ட்,

''சங்கம் பற்றிய மரபு சில இலக்கிய மற்றும் சமயவாதிகளால் அவர்களுடைய சித்தாந்தப் பார்வைக்கேற்ப உருவாக்கப்பட்டது' இது கே.என்.சிவராஜபிள்ளையின் குற்றச்சாட்டு''[5] என்று குறிப்பிடுகின்றார்.

"இறையனார் களவியலுரையிலே தரப்பட்டுள்ள சங்கம் பற்றிய கட்டுக்கதை தமிழை வைதீகப்படுத்துவதற்கான, முக்கியமாக அதனைச் சைவ மரபினர் ஓர் சங்கமாக ஆக்குவதற்கான முயற்சியாகும்.''[6] என்று வின்சென்ட் கூறுவதிலிருந்து பொது தன்மையிலிருந்து தமிழை வைதீகத்திற்கு மடைமாற்றம் செய்யும் முக்கிய சான்றாக இறையனார் அகப்பொருள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

சங்கம் பற்றிய கருத்துகள் அண்மைக் காலம்வரை விவாதிக்கப்பட்டு வருகின்றது. இதில் குறிப்பிடத்தக்க ஒன்று 'சங்கம்' என்ற சொல் குறித்த ஆய்வு. காரணம் இச்சொல்லில் இடம்பெறும் 'ச' என்பதுதான். தமிழ் மொழி கட்டமைப்பில் 'ச' முதலில் இடம்பெறுமா? இல்லையா? என்பதுதான் அந்த விவாதம். இந்நிலையில் தமிழில்கிடைத்த முதல்நூலான தொல்காப்பியத்தின் 'ச'கர கிளவி மொழி முதல் வருமென தி.நடராசன் தன் கருத்தை முன்வைக்கின்றார். இவர்,

''தொல்காப்பியர் சகரம் 'அ, ஐ, ஔ' என்னும் மூன்று நீங்கலாக உள்ள ஒன்பது உயிரெழுத்துக்களும் இணைந்து மொழி முதல் வரும் எனக் கூறியுள்ளார்.

**சகரக் கிளவியும் அவற்றோரற்றே**

**அ ஐ ஔ என்னும் மூன்றலங்கடையே**

என்கிறது தொல்காப்பியம். சங்க இலக்கியத்தில் சகரம் தொல்காப்பியர் கூறியதுபோல ஒன்பது உயிர்களோடு இணைந்து மொழிமுதல் வருவதோடு அமையாது, அவர் இணைந்து வராதெனக் கூறிய உயிர்களாகிய அகரத்தோடும், ஐகாரத்தோடும் இணைந்து மொழி முதலில் வரும். சங்க இலக்கியத்தில் ஒரு சில இடங்களில் வந்துள்ளது என்கிறார்.

"ச் - அ சகடம், (நற்.41, அகம்.136)
சதுக்கம், (நற்.315)
சடை, (பரி.9 : கல.1)
சந்தனம், (பரி.21) (பதிற்.87)
சலம், (பரி.10)
சமம், (கலி.101) (புறம்.14)
ச் +ஐ சையம், (பரி.6)

சங்க இலக்கியத்தில் சகரம் அகரத்தோடும், ஐகாரத்தோடும் இணைந்து மொழி முதலில் வந்தமையால் பிற்கால மொழி வளர்ச்சியால் அல்லது கடன் வாங்கியமையால் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்று நம்ப முடிகிறது"[7] என்று குறிப்பிடுகின்றார். சங்கம் என்ற சொல் குறித்த ஆய்வுகளும் சர்ச்சைகளும் நீடிக்கத்தான் செய்கின்றன. எனினும் சங்கம் பற்றிய குறிப்புகள் உருவாக்கப் பின்புலத்தில் உண்மைக்கு மாறாக சமய சார்பே மேலோங்கி இருப்பது வெளிப்படையாகும்.

## 1.4 சங்க காலம்:

சங்கம் என்ற சொல் குறித்த முரண் கருத்துக்கள் இருப்பதைப்போலவே 'அக்காலம்' குறித்த வரையறைகளும் இன்றுவரை இறுதி செய்ய முடியாததாக உள்ளது. அதற்குக் காரணம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆண்டுகள். எவ்வித காரண காரியங்களுமின்றி, ஆதாரமும் இன்றி ஏதோ ஒரு கணிப்பின் காரணமாக ஆண்டுகள் குறிப்பிடப்படுவதால் அக்கருத்து எளிதில் புறந்தள்ளப்படுகிறது.

முதல் சங்கம் - 4440 ஆண்டுகள்
இரண்டாம் சங்கம் - 3700 ஆண்டுகள்
மூன்றாம் சங்கம் - 1850 ஆண்டுகள்

புவியில் மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகினான் என்பதற்கு அறிவியல் சான்றுகள் உள்ளன. அதேபோல தமிழ்ச் சங்கங்களும் இருந்திருக்கலாம் ஆனால் இதற்கான சான்றுகள் இன்று நம்மிடம் இல்லை. ஒரிசா பாலு என்ற கடல்சார் ஆய்வாளர் 40,000 ஆண்டுகளுக்கு முன்பே ஆஸ்திரேலியாவிற்குச் சென்று வாழ்ந்துள்ளனர். ஆஸ்திரேலிய பழங்குடிகள் பேசும் மொழியில் தமிழகத்தின் தென்மாவட்ட மக்களிடம் காணப்படும் 'ஆயி' என்ற சொல் இன்றும் வழக்கில் உள்ளதாக குறிப்பிடுகின்றார். மேலும் தமிழகத்திற்கு வெளியே 12,000 ஊர் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றைப் பார்க்கும்போது தமிழர்களின் இடப்பெயர்ச்சி பன்னெடுங்காலம் அதாவது சங்க இலக்கிய காலத்திற்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் நம்மிடம் போதிய சான்றுகள் இல்லாமையால் இக்கருத்து கட்டுக்கதையாக பார்க்கப்படுகின்றது. முதல் இரண்டுச் சங்கங்கள்

பற்றிய விவாதங்ளைவிட, மூன்றாம் சங்கத்தின் விவாதமே ஓரளவுக்கு நிகழ்த்தும்படியாக இருக்கின்றது. அங்ஙனம் மூன்றாம் சங்கத்தின் காலத்தை,

கி.பி.7 ஆம் அல்லது 8ஆம் நூற்றாண்டு - எல்.டி.சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும்,
கி.பி.6 ஆம் நூற்றாண்டு. என்று மு.இராகவையங்கார் அவர்களும்,
கி.பி.6 ஆம் நூற்றாண்டு என்று என்.பி.சக்கரவர்த்தி அவர்களும்,
கி.பி.2 ஆம் நூற்றாண்டுக்கு முன் என்று கே.கே.பிள்ளை அவர்களும்,
கி.பி.6 ஆம் நூற்றாண்டு என வையாபுரிப்பிள்ளை அவர்களும்

குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சங்ககாலம் பற்றிய பல்வேறு கால வரையறை நிலவுவதற்குக் காரணம் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக்களே ஆகும். மேற்கண்ட அனைத்து கருத்திற்கும் சங்க இலக்கியத்தில் இடமுண்டு. காரணம் சங்க இலக்கியம் குறிப்பிடும் காலம், சங்க இலக்கியம் தொகுக்கப்பெற்ற காலம் இவைகளில் பல இடைச்செருகல்கள் நிகழ்ந்திருக்கின்றன. எனினும் கி.மு.4 முதல் கி.பி.4 வரை என்று அறிஞர்கள் பெரும்பாலானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.5 சங்க இலக்கியம்:

தமிழ் இலக்கிய மரபில் பன்னெடுங்காலம் கண்டுகொள்ளப்படாத இலக்கியமாக சங்க இலக்கியங்கள் இருந்துள்ளன. ஏன் அந்த நிலை என்று தெரியவில்லை. சமயம் சார்ந்த இலக்கியங்களை வாசிப்பதும் பகிர்ந்து கொள்ளப்படுவதுமாக இருந்த அக்காலத்தில் சங்க இலக்கியம் பாதுகாக்கப்பட்டதே பெரிது எனலாம். அதோடு சங்க இலக்கியத்தை முன்னிறுத்த வேண்டிய பெரும் தேவையும் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அதற்குக் காரணம் மனிதர்கள் தமது வரலாற்றைத் தேடி பெருமைப் பட்டுக்கொள்வதாக இருக்க வேண்டும். எனினும் அதனை தமது கடமையாக சிரமேற்கொண்டுச் சிலர் செய்தனர். அதில் குறிப்பிடத்தகுந்தோர்கள் சி.வை.தா., உ.வே.சா. போன்றோர். சங்க இலக்கியங்கள் தேடி கண்டுபிடித்தாகிவிட்டது, அந்த இலக்கியங்களை எவ்வாறு அழைப்பது என்பது பெரும் சிக்கலாக இருந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக 1940-களில் தான் அச்சொல் விரிவாக ஆராயப்பெற்றுள்ளது. அதற்கு முன்பு சங்க இலக்கியம் கி.பி.5 முதல் 9ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பாண்டிய மன்னர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. அதற்குப்பின் பல நூற்றாண்டுகள் கடந்து அவ்விலக்கிய நூற்களை உரையாசிரியர்கள் எடுத்து உரையெழுதியுள்ளனர். இவர்களுள் நச்சினார்க்கினியர், பரிமேலழகர் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர். அதன்பின்பு தமிழகத்தில் அரசியலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகவும் படித்தவர்கள் மட்டுமே அவ்விலக்கியங்களைப் படித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் பத்தோடு பதினொன்றாக கிடந்த சங்க இலக்கிய ஓலைச் சுவடிகளைத் தமிழ் அறிஞர்கள் எடுத்து அதனை வெளிப்படுத்தினர். இதனைப் பேராசிரியர் வீ.அரசு,

"உலகம் முழுவதும் கி.பி.17ஆம் நூற்றாண்டு முதல் சமஸ்கிருதமொழி குறித்த ஆய்வுகள் ஐரோப்பியர்களால் மேற்கொள்ளப்பட்டன. இந்தியவியல் என்ற ஆய்வுப்புலம், அம்மொழி சார்ந்தே நிகழ்ந்தது. இந்தியவியல் என்பது திராவிட இயலை உள்ளடக்கியதாகக் கருதப்பட்டது. மாக்ஸ் முல்லர் போன்றவர்களால் பேசப்பட்ட இந்தியவியலுக்குள் திராவிட இயல் என்பது இல்லாமல் இருந்தது. தமிழ் என்பது மூலத் திராவிட மொழி; அதனை அடிப்படையாகக் கொண்டு, தனிப்பட்ட மரபும் பண்பாடும் உருப்பெற்றுள்ளன. அதனைத் திராவிட இயல் என்று அடையாளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது"[8] என்று குறிப்பிடுகின்றார்.

இத்தேவையைப் பலர் முன்னெடுத்துள்ளனர். அவர்களில் எல்.டபிள்யூ.எல்லீஸ் பணி குறிப்பிடத்தகுந்தது. திராவிடமொழிகள் ஏழு என்று தமது ஆய்வை அவர் வெளியிட்டார். அதன்பின்பு கால்டுவெல் 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலின் வாயிலாக திராவிடமொழிகள் பதிமூன்று என்று கூறினார். அதன் தொடர்ச்சியாக சங்க இலக்கியப் பதிப்புப் பணி தொடங்கியுள்ளது. மேலும் இவ்விலக்கியத்தின் தொன்மை கண்டறியப்பட்டு சமஸ்கிருதத்திற்கு இணையாக முன்னிறுத்தப்பட்டிருக்கிறது.

## 1.6 தமிழ்மொழி குறித்த கதைகள்:

சங்கம், சங்க இலக்கியம் பற்றிய கேள்விகள் தொடங்கும் இடத்தில் தமிழ்மொழி குறித்த கேள்விகளும் தொடங்கி விடுகின்றன. 'தமிழ்' என்னும் சொல் அடைந்த மாற்றங்களும் பன்னெடுங்காலமாகவே தீவிர பன்முகவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் இரா.இராகவையங்கார்,

"தமிழ் என்னும் இயற்சொல்லானது வழங்கும் இம்மொழியின் பெயர்க்காரணத்தைப் பலர் பலவாறாக வெளியிட்டு வருகின்றனர். தமிழரல்லாத வடமொழியாளரும், பிறநாட்டுக் கல்வி வல்லார் சிலரும் தமிழ் என்னுஞ்சொல், "த்ரமிளம்" என்னும் வடமொழியின் சிதைவெனக் கொண்டு தம் கொள்கையை நிறுத்தப் பல காரணங்காட்டுவர். முந்நூறாண்டுகட்கு முன்தோன்றிய சுப்பிரமணிய தீக்சதர், தமிழ்ப் பிரயோக விவேக நூலிலே முதன்முதலில் இக்கருத்தைப் புகவிட்டனர். இவ்வாறு அவர் துணிதற்குத் தலையாய காரணம் தமிழரையும் தமிழையும் த்ரமிள சப்தத்தால் வடநூல்கள் வழங்கிக் காட்டலேயாகும். த்ரவிடம் என்னுஞ்சொல் த்ரவிடம், த்ரமிளம், தமிளம் எனச் சிறிது சிறிதாக மாறி முடிவிலே தமிழ் என வழங்கலாயிற்றென்பது இக்கொள்கையோர் கருத்தாகும்"[9] என்று இரா.இராகவையங்கார் எடுத்துரைக்கின்றார். இதிலிருந்து தமிழ் - வடமொழி குறித்த தொடர் சர்ச்சைகள் இருந்து வருவது தெளிவாகின்றது. அதற்குக்

காரணம் தெளிவான போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாமல் இருப்பதே ஆகும். அல்லது சான்றுகள் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

‘‘தமிழ், ஓர் இனம் அல்லது ஒரு நிலம் அடிப்படையில் தோன்றிய மொழியன்று, பல இனங்கள் கலந்து பல நிலங்களில் வாழ்ந்தவர்களும் ஒன்று கலந்தும் உருவாக்கிய ஒருவகைக் கலப்பின மொழி”[10] என்று வின்சென்ட் இலா கூறுகிறார். இக்கருத்தினை முற்றிலும் மறுத்துவிட முடியாது. காரணம் தமிழ்மொழியின் ஆரம்ப கட்டுமானம் விளங்கிக்கொள்ள முடியாமல் உள்ளன.

மனிதனின் கருத்துப் பரிமாற்றக் கருவியான ‘மொழி’ தனக்கான பொதுப்பெயரோடு சில முன்னொட்டு, பின்னொட்டுக்களோடு வேறுபடுத்தப்படுகின்றது. இத்தகைய வேறுபாடு அம்மொழி வழங்கும் எல்லைகள் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. எனினும் ஒரு செல் உயிரிலிருந்து உயிரின உருவாக்கம் பரிணாமம் தொடங்கியது போல மொழியும் ஒன்றிலிருந்து பலநூறாக கிளைத்திருக்க வேண்டும். அங்ஙனம் தமிழ்மொழி உருவானது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் சமயம் சார்ந்து நிலவி வருகின்றன.

“அகத்தியர், ஒரு நாட்டுக்குச் சென்று வாழ வேண்டுமானால் அந்நாட்டு மொழியில் தக்க திறமை வேண்டுமே என்ற கருத்தை வெளியிட்டார். உண்மைதானே? உடனே சிவபெருமான் அகத்திய முனிவருக்குத் தமிழ் இலக்கணத்தை உபதேசித்தருளினார். கூரிய மதிபடைத்த முனிவர் தமிழ்நெறியை உணர்ந்து கொண்டார். திருவருளும் தவமும் துணையாகித் தென்னாட்டுக்கு வந்தார்”[11] என கி.வா.ஜகந்நாதன் குறிப்பிடுகின்றார். இதைப்போலவே தமிழ்மொழி சிவன் வைத்திருக்கும் உடுக்கையின் ஒரு பக்கத்திலிருந்து பிறந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. மேலும் சிவனது திருமண நிகழ்ச்சியோடு தொடர்புப்படுத்தி அகத்தியர் குற்றால மலையில் அமர்ந்து தமிழ் ஓதினார் என்றும், புராணங்கள் கூறும் கருத்தைத் தமிழ் இலக்கியலாளர்களும் வழிமொழிகின்றனர். இக்கருத்து தமிழ் மொழியை சைவமாக ஆக்கும் முயற்சியின் முதற்படி என்பதை அறியமுடிகிறது. மேலும் தமிழ்மொழி சார்ந்துள்ள மொழிக்குடும்பத்தை திராவிட மொழிக் குடும்பம் என அழைக்கும் வழக்கமும் உள்ளது. இதனை தென்மொழி என்றும் அழைத்தனர்.

### 1.7 தமிழர்:

மனிதனின் கருத்துப் பரிமாற்றுக் கருவியாக பயன்பட்ட மொழி பிற்காலங்களில் அம்மொழி பேசிய மனிதனின் அடையாளமாக மாறிப்போனது. அவ்வாறு உலகில் உருவான மனித இனத்தின் தொடக்கம் ஒன்றிலிருந்து தொடங்கி பல இனமாக பிளவுப்பட்டு தனித்தனி இனக்குழுவாக குடில், எல்லை, நம்பிக்கைகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், தெய்வம், மொழி என்று வேறுபடுத்திக் கொண்டு உருவானது என்பது எல்லோரும் அறிந்ததே. அங்ஙனம் இந்தியா முழுவதும்

பரவியிருந்த இனமாக இருந்தது ‘தமிழ்’ மொழி பேசிய இனம். அதற்கான சான்றுகள் சிந்துவெளிப் பகுதிகளில் கிடைத்த வண்ணம் உள்ளன.

“தென்னிந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் தீவிரத் தொடர்பு ஏற்படும் முன்பே கி.மு. 1000ன் இரண்டாம் பாதியிலும், முதல் பாதியின் இறுதியிலும் வடமேற்கு இந்தியாவில் இயற்றப்பட்ட சமஸ்கிருத நூல்களில் திராவிட மொழிகளிலிருந்து கடன்பெற்ற எண்ணற்ற சொற்களும், இரவல் வாங்கப்பட்ட சொற்றொடர் அமைப்புகளும்கூட அடையாளம் காணப்பட்டுள்ளன. கி.மு. 2000 வாக்கில் சுமார் பத்து லட்சம் பேரால் பேசப்பட்ட சிந்துவெளி மொழி, இவ்விதமான சுவடுகளை அதனிடத்திற்குப் புதிதாக வந்த மொழிகளின் மீது விட்டுச் சென்றிருக்க வேண்டும். ஹரப்பர்கள் திராவிட மொழியைத்தான் பேசியிருக்கக் கூடும் என்ற முடிவுடன் குறிப்பிட்ட சில சிந்துவெளிக் குறியீடுகளில் உட்பொதிந்துள்ள அர்த்தங்களை வரையறுக்கும் பணிக்கு நாம் திரும்பலாம்”[12] என்று கூறுகிறார் அஸ்கோ பர்போலா, இதன்வழி சிந்துவெளிப் பகுதிகளில் மிக செழுமையாக வாழ்ந்த இனமாக தமிழினம் (திராவிடம்) இருந்துள்ளது. இங்கு டாக்டர். கே.கே. பிள்ளையவர்களின் கருத்தும் மிக இன்றியமையாததாகும்.

“ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும் போது வடமேற்கு இந்தியாவிலும், வட இந்தியாவிலும் திராவிட இனத்து மக்கள் வாழ்ந்து வந்தனர் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த பேராசிரியர் பர்ரோ (Burrow) என்பார் அவர்களுள் ஒருவர். ஆரிய மொழியை நன்கு ஆய்ந்து இருக்கு வேதத்தில் இருபது திராவிட மொழிச் சொற்கள் ஆளப் பட்டிருப்பதாகக் கூறுகின்றார். ஏற்கனவே சிந்து கங்கை வெளியில் செழித்து வாழ்ந்திருந்த திராவிட இனமிடமிருந்து பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர் பல திராவிட மொழிச் சொற்களைத் தம் மொழியில் ஏற்றுக் கொண்டனர் என்பது இவருடைய முடிவாகும்”[13] என்று கூறுகிறார். தமிழ் மொழியைப் பேசும் தமிழரின் தமிழக நிலவியல் தமிழகம் தாண்டி இந்தியா முழுமையும் விரிந்து கிடந்துள்ளதனை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் கடல்தாண்டி வாணிபம் செய்ய கடலில் சென்ற வணிகர்கள் பல்வேறு நாடுகளில் தங்களது நிலையான குடியிருப்பை அமைத்து கொண்டுள்ளமை தற்கால மானுடவியல் ஆய்வுகளின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் இவ்வினம் தனக்கென தனித்த சிறப்பு அடையாளங்களான இயற்கை மற்றும் முன்னோர் வழிபாடு, தாய்வழிச் சமூக மரபை பின்பற்றுதல், தனித்து இயங்கும் மொழி, செழுமையான இலக்கிய இலக்கணங்களை கொண்டுள்ளமை உள்ளிட்ட பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ளதும் அண்மைக்கால சான்றுகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## 1.8 தமிழ் இலக்கிய, இலக்கணங்கள்:

இந்தியா முழுவதுமாக பரவியிருந்த தமிழினத்தின் பண்பாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. தமிழர் பண்பாடு இயற்கை பண்பாடு, தமிழர் வாழ்வியல் இயற்கையோடு இயைந்தது. இயற்கையினைத் தெய்வமாக வணங்கியப் பண்பாட்டு மக்கள் தமிழர்கள். அவ்வழிப்பாட்டு முறைகள் இன்றுவரை நீர்த்துப் போகாமல் மிக ஆழமாக வேரூன்றி உள்ளது எனின் அதுமிகை ஆகாது. இவ்வினம் முன்னோர்களைக் குறிப்பாக பெண்களை மதித்து போற்றி வணங்கி உயர்வு தாழ்வு பார்க்காத சமூகமாக பண்டைய காலத்தில் இருந்துள்ளது. இவ்வினத்தின் வாழ்வியல், நிலவியல் கோட்பாடுகள் இயற்கையிடம் பெறப்பட்டவையாக உள்ளன. இவை அவர்தம் தொன்மை இலக்கியங்களில் நிரம்ப கொட்டிக் கிடக்கின்றன. 21ஆம் நூற்றாண்டில் இருக்கும் பொதுவுடமைச் சிந்தனையை அன்றே மிக நேர்த்தியாக கட்டமைத்துக் கொண்ட இனமாக இவ்வினம் திகழ்ந்துள்ளது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நில அமைப்பை வகைப்படுத்தி மனித வாழ்வை அகம், புறம் என்று இரண்டாக பாகுபடுத்தி இவ்விரண்டினையும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்த ஒப்பற்ற இனமாக இவ்வினம் வாழ்ந்துள்ளது. இவர்தம் விருந்தோம்பல் பண்பாடு, ஈகை, கடமை குறித்த சிந்தனைகள் இன்றும் பல நூறு சிறந்த பண்புகளைக் கொண்ட மிக அறிவார்ந்த இனமாக திகழ்ந்தது என்பதற்கு இவர்தம் இலக்கிய, இலக்கணங்கள் சான்றுகளாகும். அவற்றின் மணிமகுடமாக சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் திகழ்கின்றன. தொல்காப்பியத்தைப் பின்பற்றியே பிற்கால இலக்கண நூற்கள் தோன்றின.

## 1.9 வடமொழி:

இந்தியாவின் இருபெரும் மொழிக்குடும்பங்களாக விளங்கியவை திராவிட மொழிக் குடும்பமும், ஆரிய மொழிக் குடும்பமுமாகும். ஆரிய மொழிக்குடும்பத்தை வடமொழி என்றழைத்தனர். இம்மொழிக் குடும்பத்தில் பல மொழிகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன, சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் முதலியனவாகும். இவைகள் ஒன்றுக்கொன்று பல தொடர்பு கொண்டுள்ளன. இருப்பினும் ஒவ்வொன்றும் தனித்த செழுமையான இலக்கிய, இலக்கணங்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் இடையே பல முரண்பாடுகள் நிலவும் நிலையில் சமஸ்கிருதமே முன்னிறுத்தப்படுகின்றது. இவ்வாறு ஒன்றிணைத்துக் கூறுவது கூட தவறு என்று கருதுவோரும் உண்டு.

ஒரு காலத்தில் சிவன் கூத்தாடினார். கூத்தின் இறுதியில் அவர், தன் வலக்கையில் வைத்திருந்த உடுக்கையினை அசைத்தார். அவ்வசைவு ஒலிகளை உருவாக்கியது. அங்ஙனம் பதினான்கு அசைவுகளினால் வெளிப்பட்ட அவ்வொலி அலைகள் பதினான்கு சூத்திரங்களாக

அமைந்தன. அவைகள் 'மகேஸ்வர சூத்திரங்கள்' எனப் பெயர் பெற்றன. இப்பதினான்கு சூத்திரங்களில் சமஸ்கிருதமொழிக்கு இன்றியமையாது தேவைப்படும் எழுத்துக்கள் எல்லாம் இடம் பெற்று இருப்பதாக வடமொழி இலக்கிய வரலாறு கூறுகின்றது.

வடமொழியை வடமொழி வல்லுநர்கள் இரு பிரிவுகளாகப் பிரிப்பர். காலத்தினால் மிகவும் முற்பட்ட வைதீகமொழி ஒன்று, பாணினி ஆசிரியரால் செம்மைபடுத்தப்பட்ட சமஸ்கிருதமொழி ஒன்று. சமஸ்கிருதம் பாணினியின் கைகளால்தான் மெருகிடப்பட்டிருக்கிறது.

எனவேதான் மேலைநாட்டு அறிஞர்கள் சமஸ்கிருதத்தின் தந்தையாக பாணினியைக் கூறுகின்றனர். மேலும் பிராகிருத மொழியே முந்தையது எனவும் அதனை சீர்படுத்தியதின் விளைவே சமஸ்கிருதம் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

### 1.9.1 சமஸ்கிருதம்:

சமஸ்கிருதம் என்ற சொல்லுக்கு 'செம்மை செய்யப்பட்டது' என்பது பொருளாகும். அங்ஙனம் சமஸ்கிருத மொழியின் முதல் இலக்கணமாகக் கருதப்படுவது 'பாணினி' உருவாக்கிய 'அஷ்டாத்யாயி' ஆகும். இந்நூலை தமிழில் மொழிபெயர்த்த மீனாட்சி கூறும் சில கருத்துகளை சு.இராசாராம்,

"பாணினி எழுதிய அஷ்டாத்யாயி உலகத்திலேயே தலைசிறந்த இலக்கணமாகப் போற்றப்படுகின்றது. இவ்விலக்கணம் சமஸ்கிருத மொழியை நன்றாக விளக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. விதிமுறை இலக்கண நோக்கம் இதற்கு இல்லையென்று குறிப்பிடுகின்றார் மீனாட்சி (அஷ்டாத்யாயி - தமிழ் மொழிபெயர்ப்பாளர்). 'மேனாட்டினரால் மிகச்சிறந்த இலக்கணமாகப் பாராட்டப்பட்ட அஷ்டாத்யாயிதான் சமஸ்கிருத மொழியில் நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழமையான இலக்கண நூல், பாணினி இந்த இலக்கணம் எழுதியதின் நோக்கம் சரிவரத் தெளிவாகவில்லை. அவர் பேசும் மொழியை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதற்கு விதிகளமைத்து, மற்ற கிளைமொழிகளான வேதம், பிராம்மணம், கிழக்கே பேசும் மொழி முதலியவற்றோடு ஒப்பிட்டு அவைகள் மாறுமிடங்களாகக் குறிப்பிடுகின்றார். மேற்கூறிய காரணங்கள் (வேதமந்திரங்கள் புனிதத் தன்மை கெடாமலிருக்கவும், மற்ற மொழிகளோடு ஏற்பட்ட போட்டியில் தங்கள் மொழி வழக்கிழந்து விடாமல் இருக்கவும் எடுத்துக் கொண்ட பாதுகாப்பு முறைகள்) எதுவுமே அஷ்டாத்யாயி நோக்கமாகத் தெரியவில்லை. வரலாற்றுப்படி, அவ்வித அச்சம் பாணினியின் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அதன் உள்ளடக்கமும் இந்நோக்கத்தில் அந்த இலக்கணம் எழுதியதை நிரூபிக்கவில்லை."[14] எனக் கூறுகிறார். மேலும் அவர் கூறுகையில், "இதிலிருந்து பாணினி காலத்து மொழிச் சூழலை அறிய முடிகிறது. மேலும் இம்மொழியானது இந்தியாவில் வடப்பகுதி மட்டுமின்றி, இந்தியா முழுவதும் பரவியிருந்துள்ளது.

அதுமட்டுமன்றி இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் பன்னிரண்டு சமஸ்கிருத இலக்கணச் சிந்தனைகள் நிலவியதாகவும், கிட்டதட்ட முந்நூறு இலக்கண அறிஞர்கள் இலக்கண ஆய்வில் ஈடுபட்டிருந்ததாகவும், ஆயிரத்துக்கு மேற்பட்ட இலக்கண நூல்கள் மூலமாகவும் விளக்கவுரையோடு கூடியும் எழுதப்பட்டதாகவும் மொழியியலறிஞர் புளும்பீல்டு குறிப்பிட்டுள்ளார்"[15] என குறிப்பிடுகின்றார்.

இந்தியா முழுவதும் பரவியிருந்த சமஸ்கிருதத்தின் சொல், எழுத்து, யாப்பு, அணி, பாட்டியல் உள்ளிட்ட இலக்கணப் பிரிவுகள் தனித்தும், ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் சேர்ந்தும் நூல்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

இலக்கண வளத்தைப் போலவே இலக்கிய வளமையும் நிரம்பப் பெற்ற மொழியாக சமஸ்கிருதம் விளங்கி இருக்கின்றது. அத்தகைய மொழியில் முதலில் கிடைக்கும் நூலாக ரிக் வேதம் அறியப்படுகின்றதென்று ரிக் வேதத்தை தமிழில் செவ்விதாக்கம் செய்த வீ.அரசு குறிப்பிடுகின்றார். மேலும் அவர்,

"கி.மு.1000 தொடங்கி தரவுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தரவுகளில் தொடக்க கால ஆரியர் மொழியும் பின்னர் உருவான மொழியும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருந்தன. இம்மொழி சமஸ்கிருதம் ஆகும். 'ஸமஸ்கிருதம் (ஸம்யக் + கிருதம்)' என்ற சொல்லுக்கு 'நன்றாகச் செய்யப்பட்டது' என்பது பொருள். இப்படி உருவான மொழியில் ஆதியில் கிடைக்கும் பிரதியாக ரிக் வேதம் அமைந்துள்ளது"[16] என்றும் குறிப்பிடுகின்றார்.

'ரிக் வேதம்' தொகுப்பு முறையினைத் தமிழ் மொழியின் முதன்மை இலக்கியப் பிரதியாக அடையாளப்படுத்தப்படும் சங்க இலக்கிய தொகுப்பு முறையோடும் ஒப்பிட்டு பேசுகிறார் வீ. அரசு,

"செம்மொழிகளில் தொகுப்பு முறைமை என்பது இயல்பாக நடைபெற்ற செயல், வேத மந்திரப் பாடல்களும் அவ்வகையில் தொகுக்கப்பட்டவைதாம். சமூக வளர்ச்சியில் வாய்மொழிப் பாடல்களைத் தொகுத்து வழங்கும் தொகுப்பு முறைமை உருவானது. நமது சங்க இலக்கியங்களும் அவ்வகையில் தொகுக்கப்பட்டவைதாம்"[17] என்றும் வீ. அரசு குறிப்படுகின்றார்.

ரிக் வேதத்தைத் தொடர்ந்து, யசூர், சாமம், அதர்வன ஆகிய வேதங்கள் உருவாகியுள்ளன. இதனைத் தொடர்ந்து சங்கிதைகள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் போன்ற பகுதிகளாக இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. இதில் பாணினி காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களை வைதீக நூல்கள் எனவும், பாணினிக்குப் பின் உருவான நூல்களை சமஸ்கிருத நூல்கள் என்று கூறும் வழக்கமும் உள்ளது.

வைதீக நூல்களில் காணப்படும் சொற்கள் பல சமஸ்கிருதத்தில் இடம்பெறவில்லை. பல புதிய சொற்கள் சமஸ்கிருதத்தில் இடம் பெற்றிருக்கின்றன. சில சொற்களின் பொருள் மாற்றம் அடைந்தும் காணப்படுகிறது. ‘அசுர’ என்ற சொல் சமஸ்கிருதத்தில் ‘தேவர்களின் பகைவர் அசுரர்’ என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. ஆனால் வேதத்தில் ‘தெய்வத்தன்மை வாய்ந்த’ என்னும் கருத்தை உணர்ந்து அடைமொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே சமஸ்கிருதத்திற்கு முற்பட்டது வேதம் எனவும் அது சமஸ்கிருதம் அல்லாத மொழியில்(தமிழ்) உருவாக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு எனவும் உறுதிசெய்ய முடியும்.

### 1.9.2 பாலி:

சமஸ்கிருதத்தின் சிதைவுதான் பாலிமொழி என்பர். இம்மொழிக்கு ‘அர்த்த மாகதி’ என்ற பெயரும் உண்டு. பிராகிருத இலக்கணக் கோட்பாடுகளைப் போல பாலி இலக்கணக் கோட்பாடுகளும், சமஸ்கிருத இலக்கண, இலக்கிய கோட்பாடுகளோடு நெருங்கிய தொடர்புடையன. அங்ஙனம் பாலி மொழியில் உள்ள சில சொற்கள் சமஸ்கிருதத்தோடு தொடர்புடையதாகக் கூறும், மு.கு.ஜகநாதராஜா,

“ஒரு சில பாலிச் சொற்கள் மூலவேத மொழியோடும் தொடர்புள்ளதாக இருப்பதால் மூலவேத மொழியின் திரிபு என்கின்றனர். எனினும் சமஸ்கிருத உபசர்க்கங்களையும் அதன் திரிபுகளையும் பாலி அப்படியே ஏற்றுக்கொண்டிருப்பதால் சமஸ்கிருதமே பாலியாகத் திரிந்தது என்று கூறினும் தவறில்லை தான்”[18] எனக் கூறுகிறார்.

மேலும் பாலி மொழியானது பௌத்த சமயத்தின் தேவமொழியாகக் கருதப்பட்டது. அங்ஙனம் சிறப்புமிக்க பாலிமொழியானது சமஸ்கிருதம் மற்றும் பிராகிருத மொழிகளுள் உள்ளது போன்றே செழுமையான இலக்கண மரபைக் கொண்டுள்ளது. பாலி இலக்கணங்களில் முதன்மையானது ‘கச்சாயனர்’ இயற்றிய ‘கச்சாயனமாகும்’, அதனைத் தொடர்ந்து, ‘மொக்கலான வியாகரணம்’ பிக்கு அக்கவம்ஸரின் ‘சத்$^3$த$^3$ந்தி’ தரும கீர்த்தியின் ‘பாலாவதாரம்’ உள்ளிட்ட பல நூல்கள் பாலிமொழியில் தோன்றியுள்ளன.

### 1.9.3 பிராகிருதம்:

பிராகிருதம் சமஸ்கிருதத்தின் கிளைமொழி என்பர். மேலும் சமஸ்கிருதத்தின் பேச்சுமொழி எனப் பிராகிருதம் கருதப்படுகின்றது. இருப்பினும் இதனை சமஸ்கிருதத்திலிருந்து பிரிந்த இலக்கிய மொழியெனப் பெரும்பான்மையான ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அங்ஙனம் பிராகிருத மொழி உருவானது பற்றி இலக்கண ஆசிரியர் ஹேமச்சந்திரன் கூறுவனவற்றை மு.கு.ஜகநாதராஜா,

“சமஸ்கிருதத்திலிருந்தே பிராகிருதம் வந்தது என்பதும் சரிதான். ‘இயல்பான மூலமொழி சமஸ்கிருதம், அதனின்றும் உருவானது பிராகிருதம்’ என்று ஹேமசந்திரன் எனும் இலக்கண நூலாசிரியர் கூறுகிறார்”[19] எனக் கூறுகிறார்.

அதைப் போலவே சித்தரிஷி என்பவர் பிராகிருதத்தின் உருவாக்கம் குறித்து கூறுவனவற்றை, மு.கு,ஜகநாதராஜா, “மொழிகளில் சமஸ்கிருதம் பிராகிருதம் முதன்மைக்குரியன வென்றும் அவற்றுள்ளும் சமஸ்கிருதம் மனத்தில் நிலைத்தல் கடினம் என்றும், சாதாரண மக்களும் புரிந்து கொள்வதாகவும், காதுக்கினிமையுடையதுமாகப் பிராகிருதம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்”[20] எனக் கூறுகிறார்.

அங்ஙனம் கிளைமொழியாக உருவான பிராகிரும் தனக்கென ஒரு மொழிக்குடும்பத்தைக் கொண்டுள்ளது. அவற்றுள் மகாராஷ்டிரம், சௌராஷ்டிரம் (குஜராத்), கௌடம் (வங்காளம்), பைசாசம், மாகதி, ஆபீரம் உள்ளிட்ட மொழிகள் அக்குடும்பத்தில் குறிப்பிடத்தக்கன.

மேலும் சமஸ்கிருத்தைப் போன்றே செழுமையான இலக்கிய, இலக்கண மரபையும் பிராகிருதம் கொண்டுள்ளது. அங்ஙனம் இம்மொழியின் முதல் நூல் ‘ப்ராகிருத ப்ரகாசடம்’ ஆகும். இதனை இயற்றியவர் ‘வரருசி’ ஆவார். இவருக்குப்பின் ‘சண்டர் – ப்ராக்கிருத லக்ஷணத்தையும், ‘ராவணன் - ப்ராகிருதகாமதேனு’ எனும் நூலையும். தர்க்கவாசீகர் – ப்ராகிருதகல்பதரு’ என்ற நூலையும் உருவாக்கியுள்ளனர். இந்நூல்களைப் போல் பல நூல்கள் காலந்தோறும் உருவாக்கப்பட்டு பிராகிருத மொழியை வளப்படுத்தி வந்துள்ளன.

### 1.9.4 ஆரியம்:

வடமொழியை ஆரியமொழி என்று பொதுவாக கூறுகின்றனர். ஆரியர்கள் பேசிய மொழி என்பதாலேயே இது ஆரிய மொழி எனப்படுகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் வில்லியம் ஜோன்ஸ், சமஸ்கிரும் என்கிற மொழி கிரேக்கம், இலத்தீன் மற்றும் ஐரோப்பிய மொழிகளின் சாயலுடையது என்று கண்டுபிடித்ததன் விளைவாக பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.

> “ஆரியர்கள் மத்திய ஆசியாவிலோ, மேற்கு ஐரோப்பியாவிலோ வசித்திருக்க வேண்டும். ஆரிய எனும் சொல் இந்தோ – ஐரோப்பிய மொழிச் சொல்லன்று; அடுத்துள்ள கீழையத்தேயத்தை ஒட்டிய ஒரு வேளை உகாரிடிக் (Ugaritic) எனும் மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கலாம் என (O.szemerenyi) ஓ. சிமரென்யி என்பவர் குறிப்பிடுகின்றார்.

எனினும் ரிக் வேதத்திலும், அவெஸ்தாவிலும் ஆர்ய எனும் சொல் காணப்படுகின்றது எனவும், ஆப்கானிஸ்தான் இந்தோ ஆரியர்களாலும் ஈரானிய ஆரியர்களாலும் கைப்பற்றப்பட்டபோது

அந்நிலத்தின் ஒருபகுதி ‘அரைய’ ‘Araiya’ or ‘ஹரைவ’ ‘Haraiva’ என்று அறியப்பட்டிருந்தது எனவும், கி.மு. ஆறாம் நூற்றாண்டின் பெர்சிய அரசனான டேரியஸ் தன்னை ‘ஆரியன்’ என்று அழைத்துக் கொண்டான் எனவும், ரிக் வேதத்தில் உள்ள ஆரிய எனும் சொல் பண்பாட்டுக் குழு “(Cultural community) என்ற பொருளைத் தருவதாகவும், முடிவில் இந்தோ-ஆரியன், இந்தோ-ஈரானியன் மொழிகளைப் பேசக் கூடியவர்களும் ஆரியன் என்றே அழைக்கப்பட்டுள்ளார்கள்”[21] என்று ஆர்.எஸ்.சர்மா தனது ‘ஆரியரைத் தேடி’ என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இதன்வழி ஆரியர்கள் பண்டைய நிலப்பகுதிக்குப் புதியவர்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 1.9.5 ஆரியர்:

ஆரியர் யார்? என்ற கேள்வி பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. ஆரியர்கள் பண்டைய இந்திய வடநிலப்பகுதிக்குப் புதிதாக வந்ததாகவும் அதற்கு முன்பு அங்கிருந்த திராவிடர்களை அடித்து விரட்டி நிலத்தை அபகரித்ததோடு தெற்கு நோக்கியும் வந்துள்ளனர். இந்த ஆரியர்களைப் பற்றியக் குறிப்புகள் தமிழின் சங்க இலக்கியத்தில் (ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்) காணக்கிடக்கின்றன.

“ஆரியர் என்ற பதம் வரையறுக்கபட்ட ஓரினத்தையன்றிக் குறிப்பிட்ட மொழி, கலாச்சாரத்தினைக் கொண்ட மக்களையே குறிப்பதாகும். இவ்வாரியர் எங்கிருந்து வந்தாலும் அவர்களின் வீரம், துணிச்சல், நாகரிக வளர்ச்சி ஆகியன குறிப்பிடத்தக்கன. இந்தியாவிற்கும் பிற இடங்களுக்கும் இவர்கள் சென்று அவ்வவ் இடங்களிலே நிலவிய மேம்பட்ட மேம்படாத கலாச்சாரங்களைச் சில வேளைகளில் அழித்துத் தமது பண்பாட்டினைத் திணித்தனர், சில வேலைகளிலே தம்மினும் மேம்பட்ட பண்பாடுள்ள மக்களை வென்றபோது அம்மக்கள் கலாச்சரத்தினைத் தாம் ஏற்றுக்கொள்ளப் பின்னின்றிலர். தேவையான தவிர்க்க முடியாத வேளைகளிலே ஒத்துமேவல் (Compromise) செய்தும் வந்தனர். தம்முடன் உறவாடிய, தொடர்புகொண்ட பிறமக்களின் பண்பாடுகள் வளர்ச்சியடையவும் பல வேளைகளில் உதவி அளித்தும் வந்தனர்”[22] என வி.சிவசாமி கூறுகின்றார்.

‘ஆரிய’ என்ற சொல் ‘உயர்குடிச் சேர்ந்த’, ‘மிக நேர்மையுள்ள’, ‘சிறப்பு வாய்ந்த’ ‘பெருந்தன்மையுடைய’, ‘மிக மரியாதையுள்ள’ என்று பொருள்படுகின்றது. மேலும் ஆரியர்கள் மஞ்சள் நிறம், வெண்ணிறத்தோடு உயரமாக நீலக்கண் கொண்டிருந்துள்ளனர்.

மேலும், ஆரியரை தமிழகத்தில் பிராமணர் என்று கூறும் வழக்கம் இருந்து வருகின்றது. இதனை கா.சு.பிள்ளை, “ஆரியப் பிராம்மணர் தாங்கள் தங்கும் நாட்டில் மொழியைத் தமது வீட்டு மொழியாகவும், வடமொழியைத் தங்கள் பொதுச் சமய மொழியாகவும் இந்நாட்டில் கொண்டனர்”[23] எனக் கூறுகின்றார்.

அந்தணர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் வந்துள்ளது. மேற்கண்டதைப்போல ஆரியர் வருகை, "கி.மு. 900 வாக்கில் வடநாட்டிலிருந்து ஆரியர்கள் கூட்டம் தென்னாட்டிற்குள் நுழையவாரம்பித்தன. அவர்கள் தமிழரசர்களின் செல்வாக்கைப் பெற்று நாட்டில் ஆதிக்கம் செலுத்தலாயினர். மன்னர்கள் ஆரிய நாகரிக மோகத்திற்கு அடிமைப்பட்டனர். ஆரியர்கள் பிரம்ம, சத்திரிய, வைசியர், சூத்திரர் என்னும் நான்கு விதி வருணப் பாகுபாடுகளையுடையவராதலின் அம்முறையாது தமிழ் மன்னர்களிடம் அமைச்சர்களாகவிருந்த ஆரியர்கள் மூலம் தமிழர் அரசியலிலும் புகுந்தது"[24] என பி.முத்துத்தேவர் கூறுகிறார்.

இதனால் ஆரியர் தமிழக அரசியலிலும் ஈடுபட்டு ஆட்சி செய்யும் அளவுக்கு இருந்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. ஆனால் சி.இலக்குவனார் ஆரியர் வருகை கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்தான் என்று கூறுகிறார்.

"ஆரியர் தமிழகத்துக்கு வந்த காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் என்று வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துள்ளனர். தொல்காப்பியர் வாழ்ந்த காலமும் கி.மு. ஏழாம் நூற்றாண்டு அளவில் இருக்கக் கூடும் என்று துணிய இயல்கின்றது"[25] என்கிறார் பேராசிரியர் சி.இலக்குவனார். இதன் வாயிலாக தமிழகத்தில் ஆரியர் நுழைவு உறுதியாகின்றது. ஆரியர்கள் தமிழகத்தில் வணிகம், சமயம் பரப்புதல் உள்ளிட்ட காரணங்களுக்காக வந்து பின்னர் படிப்படியாக வேதம் ஓதுதல், யாகம் இயற்றுதல், புலவராக இருத்தல், தமிழ் அரசர்களின் ஆலோசனை குருவாக இருத்தல் என பல நிலைகளில் செல்வாக்குடன் இருந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 1.10 ஆரியரும் – பிராமணரும்:

வடவர் என்பவரை ஆரியர் என்றும் ஆரியரை பிராமணர், அந்தணன் என்றும் கூறுகின்றனர். இத்தகைய பிராமணரைப் பற்றிய குறிப்புகள் சங்ககாலப் பதிவான சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன. இருப்பினும் அந்த பிராமணர்கள் வேறு, ஆரிய பிராமணர்கள் வேறு என்ற இரு கருத்துகள் உண்டு. அங்ஙனம் உள்ள பிராமணர் நுழைவு குறித்து தேவநேயப்பாவாணர்,

"வடமொழியாளர் எனப்பட்ட பார்ப்பார் (பிராமணர்) தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ்நாடு புகுந்து நகரிலும் நாட்டிலும் கோயில் வினைஞராகவும் அரசியல் வினைஞராகவும் புலவராகவும் பெருமக்கள் தூதராகவும் அமர்ந்திருந்தனர்"[26] எனக் கூறுகிறார்.

மேலும் பிராமணர் குடியேற்றம் குறித்து, "சங்ககாலச் சமூகம் அமைப்பினை அக்கால இலக்கியம் கொண்டு ஒருவாறு உய்த்துணர முடிகின்றது. இந்நாட்டின் பழைமையான குடியினரோடு வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய வைதீகப் பிராமணரும் கலந்து வாழ்ந்துள்ளனர்.

சமணரும் பௌத்தரும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் இங்கு வந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர்”[27] என்றுரைக்கின்றார் அ. தட்சிணாமூர்த்தி. இவ்வாறு குறிப்பிடுவதிலிருந்து பிராமணர் பார்ப்பனர் ஆகியோர் வடநாட்டினர் என்பது அறிய முடிகின்றது.

ஆரியரது நுழைவு தமிழகத்தில் எப்போது நிகழ்ந்தது என்பதற்கு விடைகூறும் கா.சுப்பிரமணியப்பிள்ளை, ஆரியரை பிராமணர் என்று கூறியே தமது கருத்தை முன் வைக்கின்றார். இதனை, “கடல்கோட்குச் சற்று முன்னோ பின்னோ ஆரியரது கலப்பு இந்நாட்டில் ஏற்பட்டுவிட்டது. ஆரிய ஆசிரியராகிய பிராமணர் தென்னாட்டிற் புகுந்து தமிழரசர்களிடம் வேள்வி செய்வதனாற் பெரும்பயன் விளையுமென்று வற்புறுத்தி அவரால் வேள்வி பல இயற்றுவித்தாரென்பது ‘பல்யாகசாலை முதுகுடுமி’ என்னும் சொற்றொடரின் பொருளாற்றலால் யூகித்தற்குரியது. அம்முதுகுடுமி முக்கட் செல்வர் வழிபாட்டையுடையார் என்பதும் அவனைப் பற்றிக் கூறும் புறநானூற்றது 6-வது செய்யுளால் தெரிகின்றது”[28] என பதிவு செய்கின்றார். எனவே ஆரியரும் பிராமணரும் ஒருவரே என்று அறிந்து கொள்ள முடிகின்றது. இவர்கள் தமது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டது கடவுள் கொள்ளை ஆகும். கடவுள் கொள்கை ஓர் இனத்திற்கு பல நூற்றாண்டுகளாக உயர் இடத்தையும், உணவையும், பாதுகாப்பையும் கொடுத்துள்ளதெனில் அக்கொள்கையினை அவர்கள் கட்டமைத்த விதமும் அக்கொள்கையினை மக்களிடையே பரப்பி தங்களுக்கென தனித்த இடத்தை ஏற்படுத்திக்கொண்ட விதமும் கற்பனைக்கும் எட்டாத கட்டமைப்பாக திகழ்வதை அறிந்துகொள்ள முடிகின்றது. இதன் கலங்கரை விளக்கமாக வேதம் எனும் புத்தகம் திகழ்கிறது என்பதையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

### 1.11 ஆரியரின் இடப்பெயர்வு:

புவியில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் வாழ்தல் வேண்டி இடப்பெயர்ச்சியை நிகழ்த்துகின்றன. அவ்வாறு சூழலை விளங்கிக் கொள்ளாத உயிரினம் புவியில் வாழத் தகுதியற்றதாகிவிடும். எனினும் ஒருசில தலைமுறைகள் தாண்டி அவ்வினம் சூழலை உள்வாங்கிக் கொண்டு உயிருடன் வாழ்கின்றன. விலங்குகள், பறவைகள் கோடைக்காலங்களில் புதிய இடத்திற்காக பல மைல் தூரம் பயணிக்கின்றன. வாழ்தல் வேண்டி. மனித இனமும் அப்படித்தான். அந்த வரிசையில் ஆரியரின் இடம் பெயர்ச்சி வரலாற்றில் இன்றியமையாததாகும். ஆரிய இனத்தின் இடப்பெயர்ச்சி குறித்த வரலாறுகள் அழிக்கப்பட்டும், திரிக்கப்பட்டும், மடைமாற்றம் செய்யப்பட்டும் வெளிவந்துள்ளன. இதனை,

“ஆரியர் வேற்று நாட்டவர் என்பதற்கோ, புலம் பெயர்ந்ததற்கோ தக்க சான்றுகளில்லை. இருக்கு வேதகால ஆரியர் சப்த சிந்துப் பகுதியினையே தெய்வத்தால் ஆக்கப்பட்ட தேசமாகவும் தாயகமாகவும் கொண்டனர். புலம் பெயர்ந்து செல்வோர் தமது தாயகத்தினைப் பல

நூற்றாண்டுகள் பின்னும் நினைவு கூறுவர். ஆனால், ஆரியர் இவ்வாறு செய்திலர். ஆதிவடமொழிக்கும், ஆதி இரானிய மொழிக்கும், ஐரோப்பிய மொழிகளுக்கு மிடையிற் காணப்படும் ஒற்றுமையியல்புகள் புலப்பெயர்ச்சிகான சான்றுகளல்ல. மேலும் வேத இலக்கியம் முழுவதையும் கூர்ந்து கவனிக்கும்போது ஆரியர் படிப்படியாக வடமேற்கு இந்தியாவிலிருந்து கங்கைச் சமவெளிக்கும், பின் தக்காணம், தென் இந்தியா ஆகியனவற்றிற்கும் சென்றமையினை, அவதானிக்கலாம்"[29] என்று வி.சிவசாமி கூறுகின்றார்.

இக்கூற்று ஆரியரின் தென்னாட்டு வருகையை உறுதி செய்கின்றது. இதனைப் பின்வரும் தேவநேயப் பாவாணரின் கூற்று மெய்ப்பிக்கின்றது.

"ஆரியர்க்கு, பழங்குடி மக்களாகிய திராவிடரை அடிமைப்படுத்தி என்றும் தாம் உயர்வாயிருக்க வேண்டுமென்று பெருவிருப்பமிருந்தமையாலும் திராவிடர் தென்னாட்டில் நாகரித்திலும் பண்பாட்டிலும் கல்வியிலும் செல்வத்திலும் தலை சிறந்திருந்தமையைக் கேள்வியுற்றதினாலும், வேத ஆரியருட் சிலர் தென்னாடு வந்து, தம் வெண்ணிறத்தையும் தம் வேதமொழியின் பொலிவொலியையும், தமிழரின் ஏமாறுந் தன்மையையும் மதப்பித்தையும், முற்றும் பயன்படுத்திக் கொண்டு, தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றும், தம் வேதமொழியைத் தேவ மொழியென்றும், மூவேந்தரும் நம்புமாறு செய்துவிட்டனர். அக்காலத்தில் அரசன் இட்டது சட்டமாயிருந்ததினாலும், பொதுமக்களின் பழங்குடிப் பேதைமையாலும், தமிழர் உள்ளத்தில் ஆரிய ஏமாற்று எளிதாய் பதிந்து வேரூன்றிவிட்டது"[30] என்ற பாவாணரின் கூற்றிலிருந்து ஆரிய நுழைவு தமிழகத்தில் பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே இருந்துள்ளமைப் புலனாகின்றது.

ஆரியர்கள் வேற்று நிலத்திலிருந்து வளமாக வாழ்தல் வேண்டியே இந்தியாவிற்குள் நுழைந்துள்ளனர். அப்போது இந்தியா முழுவதும் திராவிடர்கள் வாழ்ந்துள்ளனர். ஆரியர்கள் வடக்கிலிருந்த தமிழர்களை அடித்து துரத்தியுள்ளனர். அங்கிருந்து தென்னகம் வந்த தமிழர்களுக்கு வடநாடு பற்றிய தாகம் இருந்துள்ளது. இதனை சங்க இலக்கியத்தில் வரும் இமயம் குறித்த பதிவுகளின் அறிந்துகொள்ள முடிகிறது.

### 1.12 சங்ககால தமிழ் – வடமொழி உறவு:

தமிழ் - வடமொழி குடும்பங்களுக்கும், அவை வழங்கப்படும் நிலப்பகுதிக்கும் இடையே உள்ள உறவு நிலையை ஆராய்வது இன்றியமையாததாகும். மொழி, இன, பண்பாட்டுக் கலப்புடன் காணப்படும் வரலாற்றுக்கு இரு மொழிகளுக்கிடையேயான உறவுநிலைகள் குறித்த வரலாற்றுப் பதிவுகள் தனிச் சிறப்புடையன.

### 1.12.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் உறவு:

ஆரியர் வருவதற்கு முன்பிருந்தே தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளன. அவை அண்மைக்கால தொல்லியல் சான்றுகளாலும் நிரூபிக்கப்பட்டு வருகின்றன. தொல் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகம் முதலில் இந்தியாவின் வடபகுதியாக இருந்ததாகவும், பல நூற்றாண்டுகள் கடந்தே தென்பகுதிக்குப் புலம் பெயர்ந்ததாகவும் கூறுவர். இதனை,

“நடுகோட்டுப் பகுதியில் தோன்றிப் பல்கிய மக்கள் தம் தாய்நாட்டின் சில பகுதிகள் கடல்வாய்ப்படுவதையும், புதிய இடங்கள் வடக்கில் வெளிப்படுவதையும் உணர்ந்தபோது அவர்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றனர். இவ்விடப்பகுதி பின்னர்ப் பல ஏதுக்களால் குளிர்ச்சியடையத் தொடங்கிற்று, அக்குளிர்ச்சி பொறுக்க முடியாவளவு மிகவே, அங்கிருந்து உயிர்திரல்கள் தெற்கு நோக்கியோடத் தலைப்பட்டன”[31] என்று மாணிக்க நாயக்கர் குறிப்பிடுகின்றார். இக்கருத்துத் தமிழர் நிலவியலை விரிவுபடுத்துகின்றது. இக்கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக இரா.மதிவாணன் கருத்து அமைகின்றது.

“ஆரியர் வருகைக்கு முன் (கி.மு.1500) இந்திய நாடு முழுவதிலும் தமிழ் பேச்சு மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் இருந்தது. தமிழின் தாக்கமும் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கமும் ஆப்கானித்தானத்திலிருந்து அசாம் உள்ளிட்ட வடபுல மொழிகளில் நின்று நிலவுவதைக் காண முடிகிறது”[32] என இரா. மதிவாணன் வலியுறுத்துகின்றார்.

தமிழ் மொழியினை ஈரானிய மொழிகளோடு தொடர்புபடுத்தும் வழக்கமும் இருந்து வருகின்றது.

“சிந்துவிற்கு மேற்கே, பலுசிஸ்தானத்தில் திராவிடக் குடும்பத்தின் பிராகுயி மொழி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிராகுயி மொழி பேசப்படும் பகுதி பரந்த அளவில் திராவிடமொழி பேசப்பட்டு வந்த ஒரு பெரும் நிலப்பரப்பில் எஞ்சிய பகுதியாகத் தோன்றுகிறது. தற்போது இப்பகுதி இந்தோ-ஆரியமொழி பேசப்படும் கடல் போன்ற ஒரு பெரும் நிலபரப்பின் தீவுபோல் உள்ளது. ஆனால் இது பண்டைக்காலத்தில், இன்று ஈரான் என்று அறியப்படும் நிலப்பரப்பின் தொல் திராவிட வாழிடங்களுடன் தொடர்பு கொண்டு இருந்திருக்கலாம். அண்மையில் விளக்கப்பட்டுள்ள கருத்து என்னவெனில் திராவிட மொழி எலாமைட்டுடன் தொடர்புடையது; எலாமைட்டுகள் கி.மு. ஐந்தாயிரத்தில் ஒரு பெரிய அரசினைத் தென் ஈரானில் நிறுவியது. கி.மு. மூவாயிரத்து நாலாயிரத்தாண்டுகளில் தெற்கு ஈரானில் இந்தோ-ஆரியர்கள் இருந்தார் என நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஏனென்றால் அங்கு திறம் வாய்ந்த எலாமைட்

கல்வெட்டிலுள்ள மொழியினைத் திராவிட மொழிகளோடு தொடர்பு படுத்தலாம்”[33] என்பார் ஆர்.எஸ்.சர்மா.

தமிழர் நிலவியல் இந்திய நாட்டினைத்தாண்டி விரிவடைந்து நிற்கின்றது. இதற்கு வலுசேர்க்கும் விதமாக வடமொழி இலக்கிய, இலக்கண வரலாறுகள் இயற்றிய கா.கைலாசநாத குருக்கள் குறிப்பிடும் கருத்து அமைந்துள்ளது.

“இந்திய வணிகர்கள் சிறப்பாகத் தமிழர்கள் - பாபிலோனியர்களுடன் கி.மு. எட்டாம், ஏழாம் நூற்றாண்டுகளில் தொடர்பு பூண்டு அதன் விளைவாக ஆரியர்களது எழுத்து முறையை இந்தியாவுக்குக் கொண்டு வந்தனர். இது. இந்தியாவின் தேவைக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டது.

பல ஆண்டுகளுக்குப்பின் இது பிராமி எழுத்தாக உருவெடுத்தது. தொடக்கத்தில் எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன. இவ்வுண்மையை நாணயங்களில் காணப்படும் எழுத்துமுறை நிரூபிக்கின்றது”[34] என்கிறார் கா.கைலாசநாதக் குருக்கள்

இதன் வாயிலாக வடஇந்தியாவிற்கு தமிழர்களிடமிருந்துதான் எழுத்து உறவு சென்றது உறுதிபடுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வடஇந்தியாவில் பரவியிருந்த தமிழர்கள் படிப்படியாக தெற்கு நோக்கி வந்திருக்கின்றனர் என்பது தெள்ளிதின் புலனாகின்றது.

### 1.12.2 சிந்துவெளி காலத்தில் வடநாட்டோடு தொடர்பு:

உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களுள் ஒன்றாகத் திகழ்வது ‘சிந்துவெளி நாகரிகம்’. இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் விளைவாகவே இந்நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் இருந்த உருவங்களும், குறியீடுகளும் பல வருடங்களாக ஆராயப்பட்டு உண்மைகள் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் இரண்டு நிலைப்பாடுகள் விவாதிக்கப்படுகின்றன. ஒன்று ஆரிய பண்பாடு, மற்றொன்று திராவிடப் பண்பாடு என்பதாகும்.

“தென்னிந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் தீவிரத் தொடர்பு ஏற்படும் முன்பே கி.மு. 1000-ன் இரண்டாம் பாதியிலும், முதல் பாதியின் இறுதியிலும் வடமேற்கு இந்தியாவில் இயற்றப்பட்ட சமஸ்கிருத நூல்களில் திராவிட மொழிகளிலிருந்து கடன்பெற்ற எண்ணற்ற சொற்களும், இரவல் வாங்கப்பட்ட சொற்றொடர் அமைப்புகளும்கூட அடையாளம் காணப்பட்டுள்ளன. கி.மு.2000 வாக்கில் சுமார் பத்து இலட்சம் பேரால் பேசப்பட்ட சிந்துவெளி மொழி, இவ்விதமான சுவடுகளை அதனிடத்திற்குப் புதிதாக வந்த மொழிகளின் மீது விட்டுச் சென்றிருக்க வேண்டும். ஹரப்பர்கள் திராவிட மொழியைத்தான் பேசியிருக்கக்கூடும் என்ற முடிவுடன் குறிப்பிட்ட சில சிந்துவெளிக் குறியீடுகளில் உட்பொதிந்துள்ள அர்த்தங்களை

வரையறுக்கும் பணிக்கு நாம் திரும்பலாம்”[35] என்று குறிப்பிடுகின்றார். எனவே சிந்துவெளி மொழி திராவிட மொழி என்பதையும் திராவிட மொழிச்சொற்கள் பலவற்றை சமஸ்கிருதம் எடுத்து ஏற்றுக்கொண்டு செம்மாந்து நிற்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

### 1.12.3 வேதகால உறவு:

சிந்துவெளி காலத்தைத் தொடர்ந்து வேத காலத்தில் இரு நிலப்பகுதிக்கும் தொடர்பு இருந்துள்ளது. வேதத்தில் இடம் பெற்றுள்ள கருத்துகளும் சங்க இலக்கியக் கருத்துகளும் ஓரளவு ஒத்திருக்கின்றன. வேத காலத்தில் வடஇந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் பல நிலைகளில் உறவு இருந்துள்ளது.

“ரிஷிகள் காலத் தொடக்கத்திலிருந்து, தென்னிந்தியாவுக்கும், வடஇந்தியாவுக்கும் இடையில், வழிபாட்டு முறையில் பகை இருந்தது என்றாலும், நெருக்கமான வாணிகத் தொடர்புகள் இருந்தன என்பதை மந்திரங்களிலிருந்து அறிகிறோம். தென்னிந்தியாவைச் சேர்ந்தனவாகிய முத்து, தாய் முத்து. மணம் தரு மரத்துண்டு(சந்தனக் கட்டை), யானை, பொன், பெட்டைக் கோழி மற்றும் பிற, ஆரிய நாட்டில் அதாவது ஆரிய வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்டன”[36] என்று கா.கோவிந்தன் குறிப்பிடுவதைப் போலவே இரு நிலப்பகுதிக்குமான உறவை கா.சுப்பிரமணியப்பிள்ளையின் கூற்றும் உறுதிபடுத்துகின்றது.

“தமிழர் இமயமலை முதல் குமரி ஈறாக உள்ள நாடு முழுவதிலும் பரவியிருந்தனர் என்று சரித்திர நூலார் கூறுகின்றார்கள். ‘ழகர’ எழுத்துள்ள மொழிகள் இமயமலைச் சாரலில் இன்றும் வழங்குகின்றன. தமிழ் மக்களுள் சிறந்த வேளாளரே கங்கை மைந்தர் என்பது அவர் கங்கைத் துறையில் ஒரு காலத்தில் வாழ்ந்ததைக் குறிக்கும் இருக்கு வேதத்தில் நன்கு ஆராய்ந்த மேல்நாட்டுக் கவிஞராகிய (Ragozin) ரகோசின் என்பவர் தமது ‘வேடிக் இந்தியா’ (Vedic India) என்னும் நூலில் ‘சிவன்’ என்னும் தெய்வம் திராவிடரால் வணங்கப்பட்டதென்றும் திராவிட மன்னர் பலர் அரசு புரிந்தனர் என்றும் கூறியுள்ளார். வடநாட்டில் தமிழர் நிலவிய காலத்துப் பொன்மலையின் ஒரு பகுதியாகிய கைலை என்னுமிடத்தைக் தமது சமயகலையமாகக் கொண்டனர்”[37] என்கிறார் கா.சுப்பிரமணியபிள்ளை. இதனைப் போலவே இரா.மதிவாணனின் பின்வரும் கருத்தும் வேதகாலத்தில் இருநிலப் பகுதிக்கும் இடையே இருந்த உறவை உறுதிபடுத்துகின்றது.

“இருக்கு வேதத்தில் உள்ள தமிழ்ச் சொற்களே இதற்குச் சான்றாகின்றன. நடுவண் இந்தியாவில் ஆட்சிபுரிந்த பல்பூதன், நன்மாறன் எனும் இரண்டு பாண்டிய மன்னர்களின் கொடைகளை இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. இந்திரன் குழுவினர் தமிழ் ஓலைச் சுவடிகளைக் கொளுத்திய போது ‘எலே, எலா’ என உள்ளூர் மக்கள் ஓலமிட்டதையும் இருக்கு வேதம்

குறிப்பிடுகிறது. சமஸ்கிருத மொழியில் 40 விழுக்காடு தமிழ்ச் சொற்கள் இருப்பதைப் பாவாணர் சுட்டிக் காட்டியிருக்கிறார்"[38] என்று இரா.மதிவாணன் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து கொடுக்கல் வாங்கல் இவ்விரு மொழிகளுக்கும் இடையே இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

மேற்கண்டதைப்போலவே ஆர்.எஸ்.சர்மா அவர்கள் ரிக் வேதத்தில் இடம் பெற்றிருக்கும் ஆரிய-திராவிட நாட்டத்தை விவரிக்கின்றார். ஆரியர்கள் திராவிட மக்களுக்குச் செய்த தீமைகளையும் வேதம் விவரிப்பதாக அவர் கூறுகிறார்.

"ரிக் வேதம், இனக்கலப்பு கொண்ட மக்கள் கூட்டம் இருந்ததைக் காட்டுகிறது. அக்கூட்டம் பத்து அரசர்கள் அல்லது தொல்குடித் தலைவர்கள் இடையேயான புகழ்பெற்ற சண்டையில் (Battle of Ten Kings) பங்கு பெற்றுள்ளதாகத் தெரிகிறது. அச்சண்டைக் குழுக்களின் பெயர்களின் அடிப்படையில் அவற்றில் ஆரியரும் இருந்து உள்ளனர். ஆரியரல்லாதோரும் இருந்து உள்ளனர் என்று தெரிகிறது. வேத காலத்துக்கு முந்தைய பண்பாட்டில் காளையை வழிப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. திமிலுடன் கூடிய காளைகள் சிந்துவெளி நாகரிகத்தின் வரையப்பட்ட சின்னங்களாக வெளிப்பட்டுள்ளன. ரிக்வேத காலத்தில் காளை முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதும், அது தெய்வத்தன்மை பெற்றிருப்பதும் வேதகால மக்கள் அரப்பன் மக்களுடன் கொண்ட தொடர்பினால் இருக்கலாம்"[39] என்கிறார் ஆர்.எஸ்.சர்மா.

மேலும், வேதகாலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்திற்கும் வடநாட்டிற்கும் தொடர்பு இருந்துள்ளது எனவும், அவ்வாறு கூறினால் எவரும் ஏற்பதில்லை எனக் கூறும் அருணன்,

"வேதகாலம் தொட்டு இங்கே பிராமணிய ஆதிக்கம் உள்ளது என்று சொன்னால் சிலர் ஏற்பதில்லை. வெள்ளைக்காரன் ஆட்சி காலத்தில்தான் அது உருவானது என்றும், அதுவும்கூட பிராமணர்கள் தம் திறமையால் கற்றுக்கொண்ட ஆங்கில அறிவால் ஏற்பட்டது என்றும் அவர்கள் தீவிரமாக வாதாடுகிறார்கள்."[40] பிராமணியத்தின் வயது தமிழகத்தில் மூவாயிரம் என்கின்றார். இதனை ஏற்றுக்கொண்டால் வேதத்தில் திராவிடச் சொற்கள் பல இருப்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேபோல சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமாகத்தான் இருக்கவேண்டும் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

### 1.12.4 சங்ககால உறவு:

பன்னெடுங்காலமாகவே தமிழகத்திற்கும் வடபுலத்திற்குமான உறவு சங்க காலத்திற்கு முன்பிருந்தே இருந்துள்ளது. எனினும் சங்க காலத்திற்கு சற்று முன்பும் சங்க காலத்திலும் வட நாட்டாரோடு இருந்த தொடர்பு ஆரிய தொடர்பாக இருந்துள்ளது. மேலும் இதில் பெரும் பங்கு வகிப்பது சமயங்கள்தான். சமயத்தொடர்பின் விளைவாக பிற தொடர்புகள் இயல்பாக ஏற்பட்டிருக்கின்றன அல்லது இயல்பை மாறிய வளமையான நிலப்பகுதியான திராவிட

பகுதிகளைக் கைப்பற்றுவதும்கூட நோக்கமாக இருந்தது. அது நிறைவேறாதபோது தங்களது வாழிடங்களை நிலைப்படுத்திக்கொள்ள சமய போர்வையில் மக்களை அணுகி அரசனுக்கு அடுத்த இடத்தை வகித்திருக்கின்றனர். வரலாற்று ஆய்வாளர்கள் இதனை உறுதி செய்கின்றனர்.

### 1.12.5 இலக்கண உறவு:

தமிழ் மொழியில் கிடைத்த முதன் நூலான தொல்காப்பியம் வடநாடு பற்றியும், வடநாட்டின் மொழி குறித்தும், அம்மொழி தமிழில், புகும் விதத்தையும், வடநாட்டின் நம்பிக்கைகளையும், சடங்குகளையும் எடுத்து இயம்புகின்றது.

> **“மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த**
> **தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்**
> **பல்புகழ் நிறுத்த படிமையோனே.”[41]**

என தொல்காப்பியத்தின் பாயிரத்தை இயற்றிய பனம்பாரணர், தொல்காப்பியர் வடமொழியில் உருவான ஐந்திர இலக்கண நூலின் அறிவை நிரம்பப் பெற்றுத் திகழ்ந்தார் எனக் கூறுகின்றார்.

பனம்பாரணர் பாடிய தொல்காப்பியப் பாயிரத்தில் இடம்பெறும் அவையினைக் தேவநேயப்பாவாணர், “பாரதக் காலத்திற்குப் பிற்பட்டவரும் ஐந்திரவிலக்கணத்தை நன்கு கற்றவரும் பாணினிக்கு முற்பட்டவருமான தொல்காப்பியர் கி.மு. ஏழாம் நூற்றாண்டு போல் (காலக்கட்டத்தில்), சேரநாட்டின் தென்கோடியில் வாழ்ந்திருந்தது. தமிழிலக்கண விலக்கியங்களைக் கற்றப்பின் உ.வே.சாமிநாதையர் போற் பல செந்தமிழ் முந்துநூல் கண்டு முறையாக ஆய்ந்து, தம் பெயரால் தொல்காப்பியம் என ஒரு பிண்டநூலைத் தொகுத்து, நிலந்தரு திருவின் பாண்டியன் அவைக் களத்தில் (அக்காலத்துக் கழகமின்மையில்) திருவிதங்கோட்டில் நான்மறையில் முற்றத்துறை போயிருந்த ஓர் ஆரியத் தமிழ்ப்புலவர் தலைமையில், அரங்கேற்றினார்”[42] என்றுரைக்கின்றார். இதிலிருந்து ஆரியம் தமிழகத்தில் நிலை பெற்று இருந்ததை அறிய முடிகின்றது.

மேலும், எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் வடமொழி இலக்கணங்களைக் கூறவில்லை. மாறாக பிற்கால ஆராய்ச்சியாளர்கள் வடமொழியோடு தொல்காப்பியம் பொருந்தி வருவதை எடுத்து இயம்புகின்றனர். அங்ஙனம் தொல்காப்பியத்தின் பிறப்பியலும், பாணினி முனிவர் இயற்றிய இலக்கணத்தோடு ஒத்திருப்பதாகக் கூறும் எஸ்.வையாபுரிப்பிள்ளை, பாணினிக்கும் தொல்காப்பியப் பிறப்பியலுக்குமான ஒற்றுமையை விளக்குகிறார்.

“பாணினி முனிவரியற்றிய ஸிக்ஷையில் ‘அஷ்டௌஸ் தாநாநி வர்ணநாம் 2;ஸிர:ததா:ஜிவற்வாமூ லம் ச சந்தாஸ் ச் நாஸி தோஷ்டௌ ச தாலு ச’ என்று காணப்படுகின்றது. இதனோடொப்ப எழுத்ததிகாரத்தின் பிறப்பியலில்,

**“ ‘தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**……………………………………**
**பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல**
**திறப்படத் தெரியுங் காட்சி யான’**

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ‘ஸீப்தங்ந்தம் பதம்’ என்பது பாணினீயம். இதற்கேற்பத் தொல்காப்பியரும் ‘சொல்லெனப் படுப பெயரே வினையென்று ஆயிரண்டென்ப அறிந்திசினோரே’ என்று கூறியிருக்கின்றார். இங்ஙனமாக நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது”[43] என எஸ்.வையாபுரிப்பிள்ளை கூறுகின்றார்.

மேலும் சு.இராசாராம் அவர்கள், “சுப்பிரமணிய சாஸ்திரியாரும், தொல்காப்பிய வேற்றுமைக் குறித்துக் கூறும்போது வேற்றுமை எட்டாகும் என்பது தொல்காப்பியர் கருத்து. மேலும் பெயர்கள் விளியேற்கும் இயல்பை எட்டாம் வேற்றுமையாக எண்ணிக்கையில் அடக்கித் தொல்காப்பியர் காட்டுவது ஐந்திரவியாகரணம் வேற்றுமையை வீரசோழிய இலக்கணத் தழுவியதாகும்”[44] என்று கூறுகிறார். மேலும் அவரே, “தொல்காப்பியரின் தொகை இலக்கணம் சமஸ்கிருத ‘சமாச’ இலக்கணத்துக்கு இணையாக உள்ளதென்றும், தொகைகளின் எண்ணிக்கை சமஸ்கிருத மொழியில் முதனிலைத் தொகைகளின் எண்ணிக்கைக்கு இணையாக உள்ளதென்றும்”[45] என்று சாஸ்திரியார் குறிப்பிடுவதாகக் குறிப்பிடுகிறார்.

ஆய்வாளர்கள் இவ்வாறு கூற தொல்காப்பியர் சொற்களின் வகைக் குறித்துக் கூறும்போது வடசொல்லையும் ஒரு வகையாகப் பின்வருமாறு கூறுகிறார்.

**“இயற்சொற் திரிசொற் திசைச்சொல் வடசொல்லென்**
**றனைத்தே செய்யு னீட்டச் சொல்லே”[46]**

என்பது தொல்காப்பியம்.

மேலும் சொற்களின் வகையுள் ஒன்றான வடசொல்லிலக்கணம் குறித்து,

**“வடவொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
**யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே”[47]**

என இவ்வாறு தொல்காப்பியர் கூறுகிறார். மேலும் அதனோடொப்ப,

**“சிதைந்தன வரினு மியைந்தன வரையார்”[48]**

என மற்றொரு நூற்பாவையும் எடுத்தியம்புகிறார். இதன்மூலம் வடமொழி புழக்கத்தில் இருந்ததை அறிய முடிகிறது. இதனாலேயே வடமொழி குறித்தப் பதிவுகளை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதை அறிய முடிகிறது.

தொல்காப்பியத்தின் எழுத்து, சொல் இலக்கணங்களைக் காட்டிலும் பொருளதிகாரத்தில் பாடபேதம் மிகுதியாக உள்ளது என்கின்றனர். அதேபோன்று இடைச்செருகல்களும் மிகுதியாக நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்நிலையில் தொல்காப்பியர்,

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணுங் காலை**
**மறைஓர் தேயத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே”[49]**

என்று அன்பொடு புணர்ந்த ஐந்திணையில் உள்ள மணங்களை, வடமொழி மரபான எண்வகை மணத்துள் அடக்குகிறார். இங்கு ஏற்கனவே உள்ள களவு வழி முறையை புதிய மணமுறையோடு தொல்காப்பியர் ஒப்பிடுவது வெளிப்படையாகவே தெளிவாகிறது.

வருணமென்பது வடமொழிப் பற்றி வந்தது என்று சேனாவரையரும் கூறுகிறார். அவரைப்போலவே ஆய்வாளர்களும் வருணம் பற்றியக் கருத்துக்கள் அனைத்தும் வடமொழிக்குரியது என்றே கூறுகின்றனர்.

**“நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயும் காலை அந்தணர்க்கு உரிய”[50]**

**“வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை”[51]**

**“வேளாண் மாந்தர்க்கு வழுநூண் னல்லது**
**இல்லைஎன மொழிப் பிறவகை நிகழ்ச்சி”[52]**

என்று தொல்காப்பியர் வருணம் பற்றி குறிப்பிட்டுள்ளார். சங்க கால இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உள்ள கருத்துக்கள்வழி தமிழகத்தில் வடமொழியின் உறவு புழக்கத்தில் இருந்ததைத் தெளிவாக அறியமுடிகிறது.

தமிழ்நாட்டில் வாழ்ந்து தமிழ் இலக்கணத்தில் சிறந்து விளங்கிய காத்தியாயனார் வடமொழியில் ஓர் சிறந்த இலக்கண நூலை இயற்றியிருக்கின்றார். அவர் குறித்து கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,

“கி.மு.4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், தென்னகத்தவர் எனக் கருதப்படுபவருமான காத்தியாயனர் எனும் இலக்கண ஆசிரியர் பாணினியின் இலக்கண நூற் சூத்திரங்களுக்கு அநுபந்தம் எழுதி அந்நூலைக் காலத்திற்கேற்றவாறு அழைத்தார். இவர் தூர தெற்கில் பாண்டிய, சோழ, கேரள நாடுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கௌடில்யர் இந்த நாடுகளை நன்கு அறிந்திருந்தார். அசோகர் கல்வெட்டுகளும் இந்நாடுகளைக் குறிப்பிடுகின்றன. கிரேக்கக் குறிப்புகள் ஏரக்கிளிசு (கிருட்டிணன்) கதைப்பற்றிக் கூறும்போது அவன் தனது மகளை தென்கடலை எல்லையாகக் கொண்ட இராச்சியத்தின் தலைவியாக்கினான் என்று கூறுகின்றன. இலங்கையிலும், சாவகத்திலும் மதுரா என்ற பெயர் கொண்ட இடங்களைக் காண்கிறோம். இவைகளைவிட இந்தியாவிலிருந்து தென்னகம் நோக்கி வந்த ஆரியப் பண்பாடு கடல் கடந்தும்

சென்றது என்பதைக் குறிக்கின்றன"[53] என இவ்வாறு குறிப்பிடுவதிலிருந்து அறிவுசார் உறவும் இரு நிலப்பகுதிகளுக்கும் இடையே இருந்ததை அறிய முடிகின்றது.

மேலும் இந்திய மொழிகள் குறித்த ஆய்வுகள் மேற்கொண்ட க.பூரணச்சந்திரன் அவர்கள், இந்திய மொழிகளின் அடிப்படை கட்டமைப்பு மொழி – தமிழ்தான் என்று சுநீதிகுமார் சார்டர்ஜி கூறுவதாக பின்வரும் கருத்தை முன் வைக்கின்றார். "இந்திய மொழிகளின் அடிப்படை தொடரமைப்பு நிலையில் திராவிட மொழிகளின் அமைப்பும், சொற்களஞ்சிய அளவில் சமஸ்கிருதமும் என்று சொல்லலாம். இதைத்தான் சுநீதிகுமார் சார்டர்ஜி மறைமுகமாக, 'இந்திய மொழிகளின் அடிக்கட்டமைப்பு ஆரியத்திற்கு முற்பட்ட கூறுகளையும் (திராவிடத்தையும்) மேற்கட்டமைப்பு ஆரியத்தையும் (சமஸ்கிருதத்தையும்) சார்ந்தவை' என்று குறிப்பிட்டார்"[54] என்று குறிப்பிடும். க.பூரணச்சந்திரன்,

"தமிழ் மொழி ஒட்டுநிலை மொழி. எனவும், சமஸ்கிருதம் தவிர ஏனைய மொழிகள் அனைத்தும் ஒட்டுநிலைத் தன்மையே கொண்டுள்ளன. எனவே வடநாட்டு மொழிகள் அனைத்தும், சமஸ்கிருத்திலிருந்து பிறந்தவை என்று சொல்லப்பட்டாலும், சமஸ்கிருதத்தின் தொடரமைப்பும் வாக்கிய அமைப்பும் எந்த வடநாட்டு மொழிக்கும் இல்லை. மாறாகத் தமிழ்மொழி போன்ற ஒட்டுநிலை அமைப்பே எல்லா இந்திய மொழிகளிலும் உள்ளது"[55] என்று மொழியியல் அடிப்படையில் கூறுவதின் வாயிலாக இவ்விரு நிலப்பகுதிக்கும் இடையே இருந்த மிக நுட்பமான தொடர்பை அறிய முடிகிறது. மேலும் இந்திய மொழிகளின் தாயாகவும் தமிழ்மொழி விளங்கியுள்ளது. இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயின் வடமொழியின் அடிப்படை கட்டமைப்பிற்கு தமிழ் மொழியின் பங்களிப்பினை முழுமையாக வெளிக்கொணர முடியும்.

### 1.12.6 சமயத் தொடர்பு:

வடநாடு தமிழகத்தோடு தொடர்பு வைத்திருந்ததில் இன்றியமையாத பங்கு வகிப்பது சமயமாகும். தமிழர் சமயமானது, இயற்கை வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாடு மற்றும், முன்னோர் வழிபாடு கொண்டவையாக இருக்கிறது. வடநாடு பல சமயங்கள் உருவாக களமாக இருந்திருக்கிறது. இன்றைய இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றக்கூடிய சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்களின் பிறப்பிடமாக வடநாடு திகழ்ந்திருக்கின்றது. அப்பகுதியில் உருவான இச்சமயங்கள் படிப்படியாக தென்னகம் நோக்கி நகர்ந்து தமிழகம் வந்தடைந்தது மட்டுமின்றி, இலங்கையிலும் வேரூன்றி இன்றுவரை நிலைபெற்று இருக்கின்றன. இச்சமயங்கள் இன்றைய தமிழகத்தில் பிரித்து அறியமுடியா சூழலில் இரண்டறக் கலந்து இருப்பினும், பண்டையத் தமிழ் இலக்கியங்கள் பிரித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பை சுமந்து நிற்கின்றன. அங்ஙனம்,

“பண்டைய இந்திய துணைக்கண்டத்தில் தமிழகம் தனித்த ஓடையாக விளங்கவில்லை. பல்வேறு நிலப்பகுதிகளில் உருவான அறிவு மரபுகள் ஒன்றோடொன்று ஊடாடித் தொழிற்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழின் தனித்துவமான இலக்கியமான அகம், புறம் என்ற சமயச் சார்பற்றதும் மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுமான பாடல் மரபும், வடஇந்திய நிலப்பரப்பில் உருவான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சமய மரபை அடிப்படையாகக் கொண்ட நூல் மரபும் ஒன்றோடொன்று ஊடாடியுள்ளன”[56] எனக் கூறும் அ.சதிஷ் கருத்தின் வாயிலாக சமய தொடர்பு இருந்ததை அறிய முடிகின்றது.

தமிழகத்தில் செல்வாக்குடன் திகழும் சைவ சமயத்தின் கடவுளான சிவன் பற்றி க.நெடுஞ்செழியன், “சிவன் பற்றிய அடையாளங்கள் யாவும் வடமொழிக்கும் வடமொழி சார்ந்த வைதீகச் சமயத்திற்கும் உரியன எனும் பெ.சு.சு சாஸ்திரியின் கூற்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்”[57] எனக் கூறுகிறார்.

இதைப்போலவே சமண, பௌத்த வடநாட்டு சமயங்கள் பண்டைய தமிழக நிலப்பகுதிக்குள் இருந்ததை ராஜ்கௌதமனின் கூற்றும் மெய்ப்பிக்கின்றது.

“ஆந்திரமும் இலங்கையும் பெரும் பௌத்த மையங்களாக இருந்தன. கி.மு.258-இல் அசோக சக்ரவர்த்தியின் முயற்சியால் ஆந்திரம், தமிழகம் மற்றும் இலங்கைப் பகுதிகளில் தேவாத பௌத்தம் அறிமுகமாகிப் பரவியது. வைதீகம், சமணம், பௌத்தம் (சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி) ஆகிய மதங்களும், கருத்துக்களும் வாழ்க்கை முறைகளும் கி.மு.300 முதல் கி.பி.200 வரை சுயாட்சி நடத்திய தமிழர்களுக்கு அறிமுகமாயிருந்தன”[58] என்ற ராஜ்கௌதமனின் குறிப்பின்வழி சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்களின் அறிமுகம் பண்டையத் தமிழகத்தில் இருந்தது என்பதையும் மேலும் அச்சமயங்கள் தமிழகத்தின் எல்லைகளைக் கடந்திருந்த வடநிலப்பகுதிகளிலிருந்து வந்தது என்பதையும் அறிய முடிகின்றது.

இதை உறுதிப்படுத்தும் விதமாக சி.பத்மநாதன் அவர்களின் கருத்து இருக்கின்றது. “தமிழ்ப்பிராமிச் சாசனங்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை. அவை தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன; பெரும்பாலும் அவை சமண சமயம் தொடர்பானவை. அவற்றிலே ஏறக்குறைய 20 விதமான சொற்கள் பிராகிருத மொழிச் சொற்கள். பேச்சு வழக்கான மொழியில் அதேயளவிற் பிராகிருதச் சொற்கள் இடம் பெற்றிருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆயினும் மிகப் புராதனமான ஆவணங்களில் அறிமுகமாகின்ற தமிழ் வழக்கிற் பிராகிருதச் செல்வாக்கு கணிசமான அளவில் ஏற்பட்டுள்ளமை கவனித்திற்குரியது. அது தமிழகம் வாணிபத்திலும் பண்பாட்டுத் துறையிலும் அயல்நாடுகளோடு ஏற்படுத்தியிருந்த தொடர்புகளின் விளைவாகும்”[59] என்கிறார் சி.பத்மநாதன்.

நாணயங்களைப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுவரும் பரமு. புஷ்பரட்ணம் அவர்களின் கூற்றும் தமிழகத்தில் பிறச்சமயங்கள் இருந்ததை உறுதிப்படுகின்றன. “வால்டர் எலியட்டின் ஆய்வைத் தொடர்ந்து தமிழக நாணயங்கள் தொடர்பாக வெளிவந்த முக்கிய ஆய்வாக டுபினல் என்ற ஆங்கில நாட்டவரது ஆய்வைக் குறிப்பிடலாம். இவர் 1886-87 காலப்பகுதியில் Madras Journal of Literature and Science என்ற சஞ்சிகையில் Hints to Coins – Collectors in south India என்ற விரிவான இரு கட்டுரைகளை வெளியிட்டார். மதுரையில் கிடைத்த சங்க காலப் பாண்டிய நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவரும் வால்டர் எலியட்டைப் போல் இவற்றைச் சங்க கால நாணயங்கள் எனக் குறிப்பிடாது மிகத் தொன்மையான பௌத்த நாணயங்கள் என்றே குறிப்பிட்டுள்ளார்”[60] என்கிறார் பரமு. புஷ்பரட்ணம்.

இவரின் கூற்றிலிருந்து வடநாட்டில் உருப்பெற்ற பௌத்தம் தமிழகத்தில் பலகாலம் செழிப்புற்று இருந்ததை அறிய முடிகின்றது. சமய தொடர்பினால் பண்பாடும், மொழியும் ஏனையனவும் இலகுவாக ஊடுருவமுடியும் என்பது கண்கூடு. இதனை வலியுறுத்தும் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கருத்தை வே.இரா.மாதவன், “தமிழகத்தில் புத்த மதமும் சமண மதமும் பரவிய சமயத்தில் பல்வேறு சொற்கள் பாலி மொழியிலிருந்தும் பிராகிருத மொழியிலிருந்தும் தமிழில் வந்து வழங்கின. இச்சொற்கள் தமிழுக்கும் பாலி மொழிக்கும் உள்ள உறவை இன்னொரு பக்கமும் காட்டுகின்றன. வரலாற்றின் ஒரு காலக்கட்டத்தில் இம்மொழி பேசும் மக்களுக்கிடையில் ஏற்பட்ட சமுதாயத் தொடர்பை இவ்வாராய்ச்சிவழி தமிழுக்கும் பாலி மொழிக்கும் பிராகிருத மொழிக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார்”[61] என்று குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியங்களின் பெரும்பான்மையான பாடல்கள் நீதிக் கருத்துக்களைக் கூறுகின்றன. அத்தகைய நீதி கூறும் வழக்கம் வடநாட்டினர் தொடர்பால் பெறப்பட்டது என்று மு.வரதராசன் கூறுகிறார். “அதனை அடுத்த காலத்தில் வடநாட்டு அறிஞர்களின் வாயிலாகவும் சமண பௌத்த சமயங்களின் தொடர்பு ஏற்பட்டது. மக்களின் வாழ்விற்கு இலக்கிய நூல்கள் மட்டும் போதா, நீதி நூல்களும் வேண்டும் என்ற கொள்கை தலையெடுத்த காலம் அது. இந்த உலக வாழ்விற்கும் நீதிமுறைகள் வேண்டும் என்றும் அறிஞர்கள் உணர்த்த முன் வந்தனர். தமிழ் அவர்களின் தொண்டுக்கும் இடம் தந்தது”[62] எனக் கூறும் மு.வரதராசன் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் ‘மனுவை’ பின்பற்றி நீதி சொல்லும் மன்னனான மனுநீதிச் சோழன் என்பவன் குறித்தும் சிலப்பதிகாரம் (மதுரைக்காண்டம்), கம்பஇராமாயணம் (ஆரண்ய காண்டம், அகத்தியப்படலம்), பெரியபுராணம் (86-135) போன்ற இலக்கியங்கள் விளக்குகின்றன.

சமய தொடர்பு குறித்து ஆராயும்போது தமிழண்ணல் கூறும் கருத்தையும் மறுப்பதற்கில்லை. இவர், சமண பௌத்த சமயங்களை வடநாட்டுச் சமயங்கள் எனவும், சைவ,

வைணவ சமயங்கள் தமிழகத்தின் சமயங்களாகும் எனவும் கூறுகின்றார். மேலும் அதனை ஆரியர்கள் ஏற்றுக் கொண்டு பின்பற்றினர் என்றும் கூறுகின்றார்.

“ஆரியர்கள் சமண, புத்த சமயங்களினால், தாம் நிலை குலைந்தபோது, தமிழரது ஆகம வழிபாட்டுக்குத் திரும்பிக் கொண்டு, இம்முக்கடவுளரையும் ஏற்றுக் கொண்டு, அக்கடவுள்களைப் பற்றி உபநிடதங்களிலும் புராணங்களிலும் நூற்றுக்கணக்கான புனைவுகளை எழுதி வைத்துக் கொண்டனர்”[63] என்று தமிழண்ணல் கூறுகின்றார். இக்கருத்து ஏற்புடையதன்று என முழுமையாக ஒதுக்கிவிட முடியாது. காரணம் இன்று கிடைக்கும் ஆதாரங்களை வைத்து நாம் விவாதிக்கின்றோம். பன்னெடுங்காலத்திற்கு முன்பு, வரலாறுகள் இல்லாத அல்லது அழிக்கப்பட்ட காலப்பகுதியில் எதுவும் நடந்திருக்க வாய்ப்புண்டு. எனினும் இன்றைய தமிழ்த்தாய்மொழியாளர்களின் குடும்பங்களில் பண்டைய முன்னோர் வழிபாட்டு முறைமைக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இதனால் முன்னோர் வழிபாடு அகச்சமயமாகவும் வைதீகச் சமயங்கள் புறச்சமயங்களாக வீட்டின் புறத்தே பின்பற்றப்படும் சமயமாகவும் திகழ்வதை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 1.12.7 எழுத்து – உறவு:

தமிழக மற்றும் வடபுல நிலத்தினும் இருந்த உறவுகளில், எழுத்து உறவும் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். எழுத்து உறவு குறித்து விவாதிக்கையில் மொழி உணர்வு மேலோங்கி விடுவது தவிர்க்க இயலாமல் போய்விடுகின்றது. எனினும் தொல்பொருட்களின் கண்டுப்பிடிப்புகள் இந்த உறவுநிலை மனித எண்ணவோட்டங்களுக்கு அப்பால் நிலைப்படுத்தப்படுகின்றன. அங்ஙனம் பிராமி எழுத்துக்குறித்து அ.தட்சிணாமூர்த்தி அவர்கள்,

“பிராமி எழுத்தினைக் கண்டவர் புத்தபிரான் என்பர். அசோகர் காலத்தில் இது தமிழகத்திற்கு வந்தது. பாண்டி நாட்டு மலைக் குகைகளிலும் பல பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றின் மொழி தமிழாகவும் எழுத்து மட்டும் பிராமியாகவும் உள்ளது. இதன் நுழைவினால் பழைய தமிழெழுத்து மறைந்து வட்டெழுத்து மலர்ச்சியுற்றதென்பர். சமணரும் பௌத்தரும் பிராமியிலிருந்து புதிய கிரந்த எழுத்தை உண்டாக்கினர்”[64] எனக் குறிப்பிடுகின்றார்.

பாலி, பிராகிருத எழுத்துக்களில் உருவான இலக்கியத்தைச் சங்க இலக்கியக் காலத்தோடும், கருத்தோடும் ஒப்பிடுகின்றார் ஞானி. இந்த இலக்கியங்களின் வழி எழுத்து உறவு நமது பக்கத்து நிலப்பகுதியான ஆந்திராவிலும் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. “தமிழகத்தில் சங்க காலம் என்று சொல்லப்படுகிற அதே கால அளவில் ஆந்திர நாட்டில் பாலி பிராகிருத மொழியில் வழங்கிய பாடல்களின் தொகுப்பான “காதா சப்தசதி” என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த உண்மை உறுதிப்படுகிறது”[65] என ஞானி கூறுகிறார்.

எழுத்துக்குறித்து ஆராயும்போது சொற்களும் தவிர்க்க முடியாதிருக்கின்றன. அங்ஙனம் ரா.சீனிவாசன் அவர்கள் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள பண்பாட்டுச் சொற்கள் குறித்து, "திராவிட மொழிகளில் பல வடசொற்கள் புகுந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை மாற்றாமலும், சிலவற்றைத் தம்மியல்புக்குக்கேற்பத் திரித்தும் திராவிட மொழிகள் ஏற்றுக் கொண்டுள்ளன. பழங்காலத்து வழங்கிய பண்பாட்டுச் சொற்களுள்ளும் தொழில் நுட்பச் சொற்களுள்ளும் சிலவற்றை வடமொழியினின்றும் திராவிடம் கடன் பெற்றிருக்கலாம்."[66] என்றுரைக்கின்றார்.

தமிழகத்தில் வடமொழி உறவை முதலில் பேணிய நாடாக சேரநாடு திகழ்கின்றது என்று கா.கோவேந்தன் குறிப்பிடுகின்றார். "கிரேக்கர்களால், 'தமிரிகே என அழைக்கப்பட்ட சேரநாடு, ஆரிய ஆதிக்கத்தின்கீழ், ஏனைய தென்னிந்தியா வருவதற்கு முன்பே வந்துவிட்டது. ஆகவேதான், சேர அரசர்கள்மீது பாடப்பெற்ற, பாடல்களிலும், பதிற்றுப்பத்திலும், சோழ பாண்டிய நாடுகளைக் காட்டிலும், சேரநாடு முழுவதுமாக ஆரிய மயமாக்கப்பட்டுவிட்டது என்பதற்கான எண்ணிலா அகச் சான்றுகளை நாம் காண்கிறோம்."[67] என்கிறார் கா.கோவேந்தன். எனவே பண்டைய இந்தியாவிற்கு எழுத்தை தமிழ் வணிகர்கள் கொடையாக கொடுத்துள்ளனர் எனில் அதுமிகையாகாது. காரணம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலக்கணம் இயற்றிய தொல்காப்பியர் வாக்கியத்தை, சொற்களைக் கட்டி மிக நேர்த்தியாக உருவாக்கியுள்ளார் எனில் அம்மொழிக்குரிய எழுத்துக்கள் எத்தனை ஆயிரம் வருடங்களுக்கு முன்பு உருவாகியிருக்க வேண்டும். எனவே மேலே குறிப்பிட்டதைப்போல பண்டைய இந்தியாவில் தமிழ் எடுத்துக்களே தாயாக விளங்கியமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 1.12.8 வணிக உறவு:

சங்க காலத்திற்கு முன்பும் சங்க காலத்திலும் தமிழகம் பிறநாடுகளோடு வணிக உறவு கொண்டிருந்தது. இதற்கு வெளிநாட்டாரின் பயணக் குறிப்புகளும் சங்க இலக்கிய பாடல்களும் சான்று பகர்கின்றன. தமிழர்கள் பிறநாட்டோடு வணிக உறவு வைத்திருந்தாற் போல் வடநாட்டோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்திருந்தனர்.

"மௌரியர்கள் தென்னாட்டை நோக்கிப் படையெடுத்து வந்து பொதியமலையில் உள்ள நாடுகளைத் தாக்கினார்கள் என்று சிலர் கூறுவர். ஆயினும் அதற்குத் தக்க சான்று யாதொன்றும் கிடையாது. கௌடில்யருடைய அர்த்தசாஸ்த்திரம் என்னும் நூலில் தென்னாட்டுக்கும் வட இந்தியாவிற்கும் வியாபாரம் மிகுதியாக நடந்து வந்ததாகக் காண்கிறோம். பாண்டிய சேரநாடுகளிடமிருந்து முத்துக்களும், வைரம், வைடூரியம், சந்தனம் முதலிய அருமைச் சரக்குகளும் வடநாட்டிற்கு ஏற்றுமதியாயின என்று தெரிகிறது"[68] என்று கலைக்களஞ்சியம்

தெரிவிப்பதிலிருந்து இரு நிலப்பகுதிகளுக்கும் இடையே நல்ல நட்புறவு வணிகத்தில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

தமிழகத்தில் நிகழ்ந்த பண்பாட்டு நிகழ்வுகளைத் தொகுத்து அளித்திருக்கும் அ.தட்சிணாமூர்த்தி அவர்கள் தென், வடநாட்டு வணிகர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து கடல் வாணிபத்தில் ஈடுப்பட்டதைக் கூறுகின்றார்.

"தென்னிந்தியாவுக்கும் வடநாட்டுக்கும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே மிகப்பெரிய அளவுக்கு வாணிகம் நடைபெற்றது. மெகஸ்தனிசு பாண்டிய நாட்டு முத்துக்களைப் பாராட்டுகின்றார். கௌடில்லரின் அர்த்தசாஸ்திரம் தாமிரவருணி, பாண்டிய கவாடம் ஆகிய இடங்களின் முத்துக்களையும், மதுரையிற் செய்த பருத்தி ஆடைகளையும் பற்றிப் பேசியுள்ளது. தென்னாட்டு வணிகருடன் வடநாட்டு வணிகர் கடல்கடந்து சென்று வணிகம் செய்ததனைப் 'போதாயனர்' கண்டித்துள்ளார். சிந்துவெளி கம்பளி, தோல், குதிரை ஆகிய மலிவான சரக்கையே அனுப்பியதாகவும், தென்னாடோ முத்து, வைரம், தங்கம் ஆகிய விலை மதிப்புள்ள பொருள்களை அனுப்பிற்று என்றும் குறித்துள்ளார். எனவே நெடுநாட்கட்கு முன்பே தமிழர் வடநாட்டோடும், மேற்கு நாடுகளோடும். கிழக்கு நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என உறுதி செய்யலாம்"[69] என அ.தட்சிணாமூர்த்தி கூறுவதிலிருந்து தமிழகத்திற்கும் வடநாட்டுக்குமான வணிக உறவு இருந்தது உறுதிப்படுவதோடு, தமிழர்களின் வாணிபத்தின் மீது வடநாட்டினர் ஒரு கண் வைத்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. அதற்குக் காரணம் தமிழர்கள் கடும் உழைப்பாளிகளாகவும் அந்த உழைப்பினால் வருவனவற்றை அறிவியல் அறிவோடு, கடலில் காற்றின் திசையை அறிந்து வீரத்தோடு வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தான் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 1.12.9 அரசியல் உறவு:

தமிழகமும் வடநாடும் கொண்டிருந்த இன்றியமையாததொரு உறவு அரசியல் உறவு ஆகும். அரசியல் உறவு காரணமாக நெருங்கிய நட்பு அனைத்து தளத்திலும் விரிவுப்படுத்தப்படுகின்றது. ஏனைய உறவுகளுக்குத் திறவுகோலாக அமைவதும் இவ்வரசியல் உறவே ஆகும். பாரதப்போர் காலத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் உறவு குறித்து கா.கோவேந்தன்,

"பாரதப்போர் குறித்த கதையில் வடஇந்தியாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் இடையில், அரசியல் உறவுகள் இருந்தன என்பதற்கான அகச்சான்று இருக்கிறது. திரௌபதியின் சுயம்வரத்திற்கு வந்திருந்தவர்களில் பாண்டியனும் ஒருவன் என்கிறது. இவ்வாறெல்லாம் கூறியதன் மூலம் பாரதத்தின் தலையாய கதாபாத்திரமாகிய கிருஷ்ணனைத் தமிழ்நாடு கி.மு. ஆயிரம்

ஆண்டளவிலேயே அறிந்திருந்தது என்பதைத் திரு அய்யங்கார் ஒப்புக் கொண்டுள்ளார் என்பது உறுதியளிக்கிறது”[70] என்றுரைக்கின்றார்.

மு.இராகவையங்கர் அவர்களும், “அர்ச்சுனனும் பாண்டிய மரபும் பற்றி ஆராய்ந்த மு.இராகவையங்கார், அருச்சுனனுக்குப் பெண் கொடுத்தவன் தமிழ்ப் பாண்டியனே என்றும் முடிவுக்கு வருகிறார்”[71] என்று கூறுவதிலிருந்து, குடும்ப உறவாக இருநிலப்பகுதிகளிலும் அரசியல் உறவு இருந்துள்ளதை அறிய முடிகின்றது. அதன்காரணமாவே அரசர்களுடனும் குறுநிலமன்னர்களுடன் முதலில் ஆரியர்கள் கைகோர்த்துள்ளனர். அரசனை தன் இச்சைக்கு இணங்க வைக்கக் கடவுள் கொள்கையை ஆரியர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

### 1.12.10 இலங்கைவுடனான வடநாட்டு உறவு:

தமிழியல் ஆய்வுகளுக்கு உலகியல் அறிவு இன்றியமையாததாகின்றது. தமிழியல் புலம் தமிழக எல்லைகளைக் கடந்து பரந்து விரிந்து இருக்கின்றது. அவ்வகையில் தமிழக நிலப்பகுதியோடு மட்டுமல்லாது தொப்புள்கொடி உறவாகவும் விளங்கும் இலங்கையுடான வடநாட்டு உறவும் இங்கு நோக்கத்தக்கதாகும். இலங்கையில் சங்க காலத்திற்கு முன்பே பௌத்தம் சென்றிருக்கிறது. அவர்கள் சிங்களம் என்னும் மொழியைப் பேசியிருக்கின்றனர்.

“ஈழத்து வரலாறு பெருமளவுக்குப் பௌத்த சிங்கள மக்களது வரலாறாகவே நிறப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பல அடிப்படைக் காரணங்கள் உள. பௌத்த மதம் ஈழத்தின் வரலாற்றுக் காலத்தின் ஆரம்பம் எனக் கொள்ளப்படும் தேவநம்பியதீஸ்னின் (கி.மு.247-210) ஆட்சிக் காலத்தில் இங்கு புகுத்தப்பட அநுராகபுரத்திலுள்ள பௌத்த விகாரங்களில் இம்மதத்தின் வரலாறு சம்பந்தமாக நிகழ்வுகளைக் கோவைப் படுத்தும் மரபும் தோன்றி வளர்ந்துள்ளது. சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து வந்தனர் என்பதற்கு ஆதாரமாக விளங்குவது வட இந்தியாவோடு இவர்களை இணைக்கும் இடப்பெயர்களும், வம்சப் பெயர்களும் ஆகும்”[72] என்று க.சிற்றம்பலம் கூறுவதிலிருந்து வடநாட்டோடு இலங்கை கொண்டிருந்த நிலைத்த உறவு புலனாகின்றது. மேலும் தமிழகத்தில் இருந்ததைக்காட்டிலும் வடநாட்டின் தொடர்பும் பல்வேறு பரிமாற்றங்களும் இலங்கையுடன் சற்று மிகுதியாக இருந்துள்ளன.

### 1.13 சங்ககாலப் புலவர்களின் வடமொழி அறிமுகம்:

சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்களை இயற்றிய புலவர்களில் சிலருக்கு வடமொழி அறிமுகம் இருந்திருக்கின்றது. இதனாலேயே அவர்கள் வடமொழியின் பண்பாட்டுக் கூறுகளைத் தமது பாடல்களில் இயல்பாக குறிப்பிட்டுள்ளனர்.

"சங்க இலக்கியப் பாடல் உருவாக்கப் பின்புலத்தில் செயல்பட்ட மற்றுமொரு சிறு மரபாக மொழிபெயர்ப்பு மரபாக இருந்திருக்கலாம். பண்டையத் தமிழ்ச் சமூகத்திலிருந்த புலவர்கள் சிலர் சமஸ்கிருதம், பாலி, பிராகிரும் ஆகிய மொழிகளை அறிந்திருந்ததுடன் பெரும் புலமையாளர்களாகவும் இருந்துள்ளனர். இடைக்கால உரையாசிரியர்கள் சங்கப் பாடல்களில் பயின்று வரும் சில சொற்களை ஆரிய சிதைவு என்றும், பாகதச்சிதைவு என்றும் குறிப்பிடுகின்றனர். வட இந்திய மரபின் செல்வாக்கு சில சங்கப்பாடல்களில் வெளிப்படையாகவே தெரிகிறது"[73] என அ.சதீஷ் குறிப்பிடுவதிலிருந்து இன்றையச் சூழலில் உள்ள மொழிப் பிரச்சினை அன்று இல்லையென்பதும், இயல்பாகவே புலவர்கள் பல மொழிகளைக் கற்றறிருந்தனர் என்பதும் புலனாகின்றன. இத்தகைய மொழியாக வடமொழி திகழ்ந்திருக்கின்றது.

### 1.14 தொகுப்புரை:

தமிழ்மொழியின் முதல் இலக்கியவடிவமாகத் திகழ்வது சங்க இலக்கியமாகும். இவ்விலக்கியம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலத்தில் உருவாக்கப்பட்டதாகும். இத்தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் கி.பி ஏழாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இறையனார் களவியல் உரையில்தான் முதன்முதல் காணப்படுகின்றது. சங்கம் இருந்தது பற்றி தமிழின் பிற்கால இலக்கண இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இவ்வாறு சங்ககாலம் பற்றிய பல்வேறு கால வரையறை நிலவினாலும் கி.மு.4 முதல் கி.பி.4 வரை என்று அறிஞர்கள் பெரும்பாலானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சங்க காலம் என்பது நிலை பெற்ற பின்பு அக்காலத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களை எவ்வாறு அழைப்பது என்பது பெரும் சிக்கலாக இருந்தது. அதோடு இந்த இலக்கியத்தை முன்னிறுத்த வேண்டிய பெரும் தேவை இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக 1940களில்தான் அச்சொல் விரிவாக ஆராயப்பெற்றது. இந்நிலையில் பத்தோடு பதினொன்றாக கிடந்த சங்க இலக்கிய ஓலைச் சுவடிகளைத் தமிழ் அறிஞர்கள் எடுத்து அதனை வெளிப்படுத்தினர். இத்தேவையைப் பலர் முன்னெடுத்துள்ளனர். அவர்களில் எல்.டபிள்யூ.எல்லீஸ் திராவிடமொழிகள் ஏழு என்று தமது ஆய்வை வெளியிட்டார். அதன்பின்பு கால்டுவெல் 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலின் வாயிலாக திராவிடமொழிகள் பதிமூன்று என்று கூறினார்.

தமிழை உள்வாங்க வடமொழியும் அதன் கிளைமொழிகளும் தேவைப்பட்டன. மொழியை ஆராய்கையில் அம்மொழி மாந்தர்களும் விவாத பொருளாகின்றனர். அதில் இன்றியமையாதது வடமொழி பேசும் ஆரியர்களின் இடம்பெயர்வு ஆகும். ஆரிய நுழைவு தமிழகத்தில் பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே இருந்துள்ளமையை பல ஆய்வாளர்களின் கூற்று மெய்ப்பிக்கின்றது. ஆரியர் வருவதற்கு முன்பிருந்தே தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் இடையே

மிக நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளன. அவை அண்மைக்கால தொல்லியல் சான்றுகளாலும் நிரூபிக்கப்பட்டு வருகின்றன. தொல் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகம் முதலில் இந்தியாவின் வடபகுதியாக இருந்ததாகவும், பல நூற்றாண்டுகள் கடந்தே தென்பகுதிக்குப் புலம் பெயர்ந்ததாகவும் தெரிகிறது. தமிழர் நிலவியல் இந்திய நாட்டினைத்தாண்டி விரிவடைந்து நிற்கின்றது.

உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களுள் ஒன்றாகத் திகழ்வது ‘சிந்துவெளி நாகரிகம்’ ஆகும். இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாகவே இந்நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் இருந்த உருவங்களும், குறியீடுகளும் பல வருடங்களாக ஆராயப்பட்டு, உண்மைகள் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் இரண்டு நிலைப்பாடுகள் விவாதிக்கப்படுகின்றன. ஒன்று அது ஆரிய பண்பாடு, மற்றொன்று அது திராவிடப் பண்பாடு என்பதாகும். சிந்துவெளி காலத்தைத் தொடர்ந்து வேத காலத்தில் இரு நிலப்பகுதிக்கும் தொடர்பு இருந்துள்ளது. வேதத்தில் இடம் பெற்றுள்ள கருத்துகளும் சங்க இலக்கியக் கருத்துகளும் ஓரளவு ஒத்திருக்கின்றன. சங்க காலத்திற்கு சற்று முன்பும் சங்க காலத்திலும் வட நாட்டாரோடு இருந்த தொடர்பு ஆரிய தொடர்பாக இருந்துள்ளது. மேலும் இதில் பெரும் பங்கு வகிப்பது சமயங்கள்தான். சமயத்தொடர்பின் விளைவாக பிற தொடர்புகள் இயல்பாக ஏற்பட்டிருக்கின்றன அல்லது இயல்பை மாறிய வளமையான நிலப்பகுதியான திராவிட பகுதிகளைக் கைப்பற்றுவதும் கூட நோக்கமாக இருந்தது. அது நிறைவேறாதபோது தங்களது வாழிடங்களை நிலைபடுத்திக்கொண்டு சமய சார்போடு வாழ்ந்தது இன்றியமையாததாகும்.

தமிழ் மொழியில் கிடைத்த முதன் நூலான தொல்காப்பியம் வடநாடு பற்றியும், வடநாட்டின் மொழி குறித்தும் அம்மொழி தமிழில், புகும் விதத்தையும். வடநாட்டின் நம்பிக்கைகளையும், தமிழர் சமயமானது, இயற்கை வழிபாடு, தாய் தெய்வ வழிபாடு மற்றும், முன்னோர் வழிபாடு கொண்டவையாக இருக்கிறது. வடநாடு பல சமயங்கள் உருவாக களமாக இருந்திருக்கிறது.

இன்றைய இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றக்கூடிய சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்களின் பிறப்பிடமாக வடநாடு திகழ்ந்திருக்கின்றது. அப்பகுதியில் உருவான இச்சமயங்கள் படிப்படியாக தென்னகம் நோக்கி நகர்ந்து தமிழகம் வந்தடைந்தது மட்டுமின்றி, இலங்கையிலும் வேரூன்றி இன்றுவரை நிலைப்பெற்று இருக்கின்றன. இச்சமயங்கள் இன்றைய தமிழகத்தில் பிரித்து அறியமுடியா சூழலில் இரண்டறக் கலந்து இருப்பினும், பண்டையத் தமிழ் இலக்கியங்கள் பிரித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பை சுமந்து நிற்கின்றன. தமிழக மற்றும் வடபுல நிலத்தினும் இருந்த உறவுகளில் எழுத்து உறவும் குறிப்பிடத்தகுந்த

ஒன்றாகும். எழுத்து உறவு குறித்து ஆராயும்போது மொழி உணர்வு மேலோங்கி விடுகிறது எனினும் தொல்பொருட்களின் கண்டுபிடிப்புகள் இந்த உறவுநிலை மனித எண்ணவோட்டங்களுக்கு அப்பால் நிலைப்படுத்தப்படுகின்றன.

தமிழர்கள் பிறநாட்டோடு வணிக உறவு வைத்திருந்தாற் போல் வடநாட்டோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்திருந்தனர். தமிழர்களின் வாணிபத்தின் மீது வடநாட்டினர் ஒரு கண் வைத்துள்ளனர். தமிழகமும் வடநாடும் கொண்டிருந்த இன்றியமையாததொரு உறவு அரசியல் உறவு ஆகும். அரசியல் உறவு காரணமாக நெருங்கிய நட்பு அனைத்து தளத்திலும் விரிவுப்படுத்தப்படுகின்றது. தமிழியல் ஆய்வுகளுக்கு உலகியல் அறிவு இன்றியமையாததாகின்றது. தமிழியல் புலம் தமிழக எல்லைகளைக் கடந்து பரந்து விரிந்து இருக்கின்றது. இலங்கையில் சங்க காலத்திற்கு முன்பே பௌத்தம் சென்றிருக்கிறது. சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்களை இயற்றிய புலவர்களில் பலருக்கு வடமொழி அறிமுகம் இருந்திருக்கின்றது. இதனாலேயே அவர்கள் வடமொழியின் பண்பாட்டுக் கூறுகளைத் தமது பாடல்களில் இயல்பாக குறிப்பிட்டுள்ளனர் என்பதை தவிர்க்க இயலாத, இரண்டறக்கலந்த வரலாற்று உண்மையாக தமிழ் வடமொழி உறவுநிலை அமைந்துள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.73
2. மேலது, பக்.75,76
3. நக்கீரர், இறையனார் அகப்பொருள் நூன்முகம், ப.18
4. ந.சி.கந்தையா, முச்சங்கம், ப.19
5. இலா.வின்சென்ட், தமிழ் நிலமும் இனமும், ப.56
6. மேலது, ப.56
7. தி.நடராசன், சங்க கால எழுத்தியல், பக்.83-93
8. வீ.அரசு, சங்க இலக்கியம் பன்முக வாசிப்பு, ப.20
9. இரா.இராகவையங்கார், தமிழ் வரலாறு, ப.6
10. வின்சென்ட் இலா.2010, ப.6
11. கி.வா.ஜகந்நாதன், கன்னித்தமிழ் கட்டுரைகள், ப.16
12. அஸ்கோ பர்போலா, சிந்துவெளி எழுத்து, ப.13
13. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.40
14. சு.இராசாராம், வீரசோழிய இலக்கணக் கோட்பாடு, பக்.9-10
15. மேலது, ப.137
16. வீ.அரசு, ரிக் வேதம், ப.13
17. மேலது, ப.14
18. மு.கு.ஜகநாதராஜா, தமிழும் பிராகிருதமும், ப.18
19. மேலது, ப.26
20. மேலது, ப.27
21. ஆர்.எஸ்.சர்மா ஆரியரைத் தேடி, ப.18
22. வி.சிவசாமி ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும், ப.1
23. கா.சு.பிள்ளை, மொழிநூற் கொள்கையும் தமிழ் மொழி அமைப்பும், ப.19
24. பி.முத்துத்தேவர், சங்க இலக்கியத்தில் ஆயர், ப.81

25. சி.இலக்குவனார், பழந்தமிழ், ப.94,
26. ஞா.தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, பக்.6-7
27. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.43
28. கா.சுப்பிரமணிய பிள்ளை, செந்நதமிழ்ச் செல்வி, ப.156
29. வி.சிவசாமி, ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும், பக்.223-4
30. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு 2, ப.103
31. பா.வே. மாணிக்க நாயக்கர், செந்தமிழ்ச் செல்வி முதல் தொகுதி, ப.74
32. இரா.மதிவாணன், பிறமொழி இலக்கியங்களில் சங்க இலக்கியங்கள் தாக்கம் கட்டுரைத் தொகுதி, பக்.58-59
33. ஆர்.எஸ்.சர்மா, ஆரியரைத்தேடி, ப.22
34. கா.கைலாசநாதக் குருக்கள், வடமொழி இலக்கிய வரலாறு, ப.35
35. அஸ்கோ பர்போலா, சிந்துவெளி எழுத்து, ப.13
36. கா.கோவிந்தன், ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு, ப.5
37. கா.சுப்பிரமணியபிள்ளை, செந்தமிழ்ச் செல்வி தொகுதி-2, பக்.62-63
38. இரா.மதிவாணன், பிறமொழி இலக்கியங்களில் ச.இலக்கியங்களின் தாக்கம், ப.52
39. ஆர்.எஸ்.சர்மா, ஆரியரைத் தேடி, ப.24
40. அருணன், ஆழம், இதழ், ப.28
41. தொல்காப்பியம். பாயிரம் .ப.01
42. ஞா.தேவநேயப்பாவாணர், தமிழ் வரலாறு-2, ப.106
43. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கணச் சிந்தனைகள், பக்.4-5
44. சு.இராசாராம், வீரசோழிய இலக்கணக் கோட்பாடு, ப.213
45. மேலது, ப.17
46. தொல். சொல். நூ.397
47. மேலது, நூ.401
48. மேலது, நூ.402
49. தொல். பொருள். நூ.1033
50. மேலது, நூ.1570
51. மேலது, நூ.1578
52. மேலது, நூ.1581
53. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென் இந்திய வரலாறு, ப.76
54. முனைவர் க.பூரணச் சந்திரன், இந்திய மொழிகள் ஓர் அறிமுகம், ப.12
55. மேலது., ப.23
56. அ.சதிஷ், அறியப்படாத தமிழ் உலகம், ப.133
57. க.நெடுஞ்செழியன், அறியப்படாத தமிழ் உலகம், ப.145
58. ராஜ்கௌதமன், பாட்டும் தொகையும், தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப.28
59. சி.பத்மநாதன், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், முன்னுரை
60. பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், பக்.22-23
61. வே.இரா.மாதவன், பதிப்புலகில் வையாபுரிப்பிள்ளை, பக்.21-22
62. மு.வரதராசன், காலந்தோறும் தமிழ், பக்.23-24
63. தமிழண்ணல், தமிழர் சமயமும் சமஸ்கிருதமும், ப.14
64. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும், பண்பாடும், ப.447
65. ஞானி, தமிழில் படைப்பியக்கம், ப.25
66. ரா.சீனிவாசன், மொழி ஒப்பியலும் வரலாறும், பக்.187-188
67. கா.கோவேந்தன், தமிழர் இலக்கியம், ப.328
68. கலைக்களஞ்சியம், தொகுதி-1, ப.645
69. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.101
70. கா.கோவேந்தன், தமிழர் இலக்கியம், ப.361
71. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.36
72. க.சிற்றம்பலம், ஈழத் தமிழர் வரலாறு, ப.5
73. அ.சதீஷ், அறியப்படாத தமிழ் உலகம், ப.175

## இயல் -2

# எட்டுத்தொகை நூல்களில் வடமொழிக் கூறுகள்

### 2.0 முன்னுரை:

சங்க இலக்கியம் எனும் தொகுப்பில் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் சேர்த்து கூறப்பட்டுள்ளது. எட்டுத்தொகையில் தனித்தனியாக எட்டு நூற்கள் அடங்கியுள்ளன. அவ்வெட்டு நூல்களும் தொகை நூல்களாகும். அவை அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் ஆகியன. பத்துப்பாட்டுத் தொகுப்பில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. எட்டுத்தொகையில் உள்ள நூற்கள் பலநூறு பாடல்களின் தொகுப்பாகும். இவை பாடலின் அடிகளை வைத்து பகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அகம் மற்றும் புறக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களில் தலைவன் தலைவியை ஒப்புமைப்படுத்த உவமைகள் கூறப்பட்டுள்ளன. அவ்வுவமைகளில் வடமொழிக் கூறுகளான நிலம், மக்கள், நூல்கள், சமயங்கள் போன்றன இடம்பெற்றுள்ளன. புறப்பாடல்களில் வடமொழிக் கூறுகள் நேரடியாகவும் உவமைகளாகவும் இடம்பெற்றுள்ளன. இவை எட்டுத்தொகை நூல்களில் வடமொழியின் தாக்கத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளன.

### 2.1 சங்க இலக்கியம் :

சங்க இலக்கியம் தமிழ் பேசும் மக்களின் அடையாளமாகவும் சான்றாகவும் உள்ளது. எனினும் இதுபோன்ற விவாதங்கள் கற்றறிந்தோர் தளத்திலேயே நின்று விடுகின்றது. தமிழ்ப் பண்பாடுகள் மிக ஆழமாக வேரூன்றி கிடக்கும் மக்களிடம் இது பற்றிய எவ்வித சலனமும் இல்லை. அம்மக்கள் தம் அடையாளங்களை மறந்தவர்களாக மாற்று அடையாளங்களின் முகமூடிகளைச் சூடிக்கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். ஏனெனில் இம்மக்களிடம் மேல் மட்டத்தில் தென்படும் விழுமியங்கள் பெரும்பாலும் இன்றைய ஆரிய சடங்குகளாக அறியப்பட்டவையாகவே இருக்கின்றன. ஒருகால் அச்சடங்குகளும் திராவிடச் சடங்குகளாக இருந்திருக்கவும் வாய்ப்புண்டு. உளவியல் அணுகுமுறையில் ஆராயின் பிரித்து அறிய முடியாத, பிரித்தெடுக்க முடியாத நிலையில் அப்பண்பாட்டுக் கலப்புகள் இரண்டறக் கலந்துவிட்டன. எனினும் மிக நுணுக்கமாக பல ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றி ஆராய்ந்தால் பிரித்தெடுக்கவும் முடியும். அங்ஙனம் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியின் கருத்து இதற்கு வலு சேர்ப்பதாக உள்ளது.

“அக்காலத்தியப் பண்பாட்டின் மிக முக்கிய அம்சம் இதன் இணைப்புத் தன்மையேயாகும். தமிழ்ப்பண்பாடு, ஆரியப் பண்பாடு என்று ஆரம்பத்தில் தனித்து நின்ற இரு கலாச்சாரங்களின் இணைப்பால் ஏற்பட்ட விளைவே இப்பண்பாடாகும். இவ்விரு கலாச்சாரங்களின் தன்மைகளைப் பற்றியும், இவை எவ்வாறு படிப்படியாக இரண்டறக் கலந்தன என்பதைப் பற்றியும், இதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றியும் ஆராய்வது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினமானதாகும். சங்க இலக்கியத்தின் மூலம் இக்கலப்புக் கலாச்சாரத்தைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் எளிதாக உள்ளது”[1] என்று குறிப்பிடுகின்றார். இக்கூற்றை முழுவதுமாக ஒதுக்கிவிட முடியாது என்றாலும், இக்கலப்பு விழுக்காடு என்பது சொற்கள் அளவிலேயே இருக்க முடியும். காரணம் இலக்கியச் சான்றுகளில் காணப்படுகின்ற தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் இன்றளவும் தமிழ்ப்பேசும் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. கடினம் என்று பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுவதற்குக் காரணம் சங்க இலக்கியம் கடந்த வந்த நெடும் பயணத்தில் அதன் உண்மை தன்மை அப்படியே இருந்திருக்க வாய்ப்பு குறைவு. பல படையெடுப்புகளினால் பல மொழி சமயங்களைப் பின்பற்றுபவர்கள் இவ்விலக்கியத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்க வாய்ப்புண்டு.

## 2.2 சங்க இலக்கியச் சிறப்புகள் :

சங்க இலக்கியம் 473 புலவர்களால் எழுதப்பெற்ற 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல தொழில் செய்வோரும் பெண்களும் நாட்டை ஆளும் மன்னனும் என சமச்சீரற்ற வாழ்க்கை முறையினைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மனித வாழ்க்கையை அகமாகவும் புறமாகவும் பிரித்து அக வாழ்க்கையினையும் இலக்கணத்தோடு வாழ்ந்துள்ளனர் பண்டையத் தமிழ் மக்கள். நிலத்தை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என பாகுபடுத்திய பாங்கு உலகில் வேறு எங்கும் காணமுடியாது. ஆண்களும் பெண்களும் வீரத்தோடு வாழ்ந்துள்ளனர். விருந்தோம்பல் எண்ணும் பசிப்பிணி போக்கும் அறம் சங்க இலக்கியத்தின் மணிமகுடம். சங்க இலக்கியத்தில் கூறப்படும் கற்புநெறி தமிழப் பண்பாட்டின் உச்சமாகும். நடுகல் வழிபாடு, தாய்தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு போன்றன தமிழ்ப்பண்பாட்டின் உண்மை ஆணிவேர்களாகும். பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள் காரண காரியங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. தமிழகம் வாணிபத்தில் உலக அளவில் சிறந்து விளங்கியுள்ளதை சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. சங்ககால மக்கள் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாக கருதியுள்ளனர். ‘செம்புல பெயல்நீர் போல’ என்னும் பாடல் காதலின் மகத்துவத்தை உளவியல் நோக்கில் வெளிப்படுத்தியுள்ளது. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் பாடல் தமிழர்களை உலக குடிமகனாக பிரகடனப்படுத்துகிறது. ‘சாதலும் புதுவதன்று’ என்ற அடிகள் தமிழர்களின் எதார்த்தமான வாழ்வினை பதிவு செய்வதாக அமைந்துள்ளது. இத்தனைச் சிறப்புகளைத் தாங்கி நிற்கும் சங்க இலக்கியங்கள் தமிழர் அடையாளம் ஆகும்.

## 2.3 எட்டுத்தொகை:

கடைச்சங்க காலத்தில் உருவான நூல்களைப் பண்டைய இலக்கியச் சான்றோர்கள் பாட்டு, தொகை எனப் பாகுபாடு செய்துள்ளனர். அவை பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும். அவ்வாறு எழுந்த 2381 செய்யுட்களையும் பாட்டு, அளவு, பொருளின் சிறப்புப் பற்றி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றழைத்தனர். அதில் இடம் பெற்றுள்ள எட்டு நூல்களின் பெயரை,

> **“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
> **ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
> **கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென**
> **இத்திறத்த எட்டுத்தொகை”[2]**

என வெண்பா ஒன்று குறிப்பிடுகின்றது. இவற்றில் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை என்ற நூல்கள் அகப்பொருள் பற்றியன. புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றியன. பரிபாடல் என்னும் நூல் அகம், புறம் என்ற இரண்டையும் இணைத்து எடுத்துரைக்கின்றது.

## 2.4 தொகை:

மனிதர்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் என்பது கதைகளாக தொடங்கி பாணர்களால் வாய்மொழிப் பாடல்களாக உருமாற்றம் அடைந்ததை, புலவர்கள் இலக்கணம் அமைத்து சிலவற்றை கூட்டியும் நீக்கியும் உருவாக்கினர். இதனை பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சிலர் தொகுக்க முற்பட்டனர். இந்த முறையில் அமைந்தது சங்க இலக்கியமும் ரிக்வேதமும் கிரேக்க வீரயுகப்பாடல்களும் ஆகும். ‘தொகை’ என்ற சொல்லுக்குப் பொருளதிகாரத்தின் மரபியலில்,

> **“தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து**
> **அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே”[3]**

என இலக்கணம் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர். தொகை என்ற சொல்லிற்கு அகராதிகளில் பலப் பொருள் கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து அகராதி, ந.கதிர்வேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி ஆகிய இரண்டிலும் ‘கணக்குவகை நான்கினொன்று’, ‘கூட்டம்’, ‘தொக்கு நிற்றல்’, ‘மொத்தம்’, ‘சுருக்கம்’ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வின்சுலோவின் தமிழ் - ஆங்கில அகராதியில், ‘அஸம்பலி’ (Assembly), ‘கலெக்ஸென்’ (Collection), ‘கூட்டம்’ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் ‘கூட்டம்’, ‘சேர்க்கை’, ‘விலங்கு முதலியவற்றின் திரள்’, ‘கொத்து’, ‘மொத்தம்’, ‘பணம்’, ‘எண்’, ‘கணக்கு’, ‘கூட்டல்’, ‘தொகுத்துக் கூறுகை’, ‘தொகைச் சூத்திரம்’, ‘உருபு முதலியன மறைகை’, ‘ஒரு சொன்னீர்மைப்பட்ட தொடர்சொல்’, ‘ஆசிரியம்’, ‘எட்டுத்தொகை நூல்களின் பெயர்கள்’, ‘ஆன்மா, புலவர் சங்கம்’,

‘கலந்திருப்பதை இனமினமாகப் பிரித்தெடுத்தல்’ என பதினெட்டு பொருள்கள் தரப்பட்டுள்ளன. ‘ஆந்தாலஜி’ என்பது கிரேக்கத்தில் உள்ள தொகை நூல்களைக் குறிக்கும். வடமொழியில் தொகை நூலைச் சுட்டும் பெயராய் ‘சுபாஷிதம்’ என்னும் சொல் இருந்துள்ளது.

இத்தொகுப்புமரபு சங்க காலத்தை ஒட்டிய காலப்பகுதியில் உலகின் வேறு சில பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளது. கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், சீனம், வடமொழி போன்ற மொழிகளில் இத்தொகுப்பு பணிகள் நடைபெற்றுள்ளன. தகவல் தொழில்நுட்பம் முற்றில் இல்லாத காலத்தில் இப்படியான ஒத்த பணிகள் நடைபெற்று இருப்பது வியப்புக்குரியதாக உள்ளது.

## 2.5 நற்றிணையில் வடமொழிக் கூறுகள்:

நற்றிணை ‘நல்ல திணை’ என்ற அடிப்படையில் உயர்ந்த நெறியைக் குறிப்பிடுவது ஆகும். இது 275 புலவர்களால் பாடப்பெற்ற 400 அகப்பாடல்களைக் கொண்டது. இதனைப் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி என்பவர் தொகுத்தார். இது 9 அடி முதல் 12 அடி வரையிலான பாடல்களாக அமைந்துள்ளது.

இந்த நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியிருக்கிறார். இயற்கைநெறி காலமான சங்ககாலத்தின் இலக்கியத்தில் கடவுள் வாழ்த்து இடம்பெற்றுள்ளது பிற்காலத்து வழக்கமாகும். கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சங்க இலக்கிய வாசிப்பிற்கு ஒரு தடைக்கல் எனில் அது மிகையாகாது. அது தவிர்க்கப் பட்டிருக்க வேண்டும். பாரதம் பாடிய பெருந்தேவனார் வடமொழியில் உருவான பாரதத்தை தம் பெயரின் அடைமொழியாகக் கொண்டவர். இந்த ஒட்டுப்பெயர் சங்க இலக்கியத்தை வடமொழி புராணமான மகாபாரதத்திற்குப் பிற்பட்டதா சங்க இலக்கியம் என்ற ஐயப்பாட்டை எளிதில் எழுப்பிட காரணமாய் இருக்கின்றது. கடவுள் வாழ்த்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் வேதமுதல்வன் என்ற அடியை,

**“வேத முதல்வன் - என்ப**
**தீது அற விளங்கிய திகிரியோனே”[4]**

என்று குறிப்பிடுகின்றார். வேதம் என்பது வடமொழயில் உருவான ரிக், யசூர் உள்ளிட்ட வேத நூல்களைக் குறிக்கின்றது. அத்தகைய வேதத்தின் தலைவன் என ஒரு கடவுளைக் குறிப்பிடும் பதிவு நற்றிணையில் இடம்பெற்றுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. இந்த ஒட்டுப்பாடலை வைத்து முழு நூலையும் வடமொழி சார்போடு பார்க்க முடியாதெனினும் புதிய வாசகருக்கு அப்படியான புரிதலை இக்கருத்து ஏற்படுத்திவிடும். இது ஓர் இலக்கியத்தின் மீது நடத்தப்படும் ஒருவகையான உளவியல் தாக்குதல் என்பர்.

### 2.5.1 திருமால், பலராமன்:

தமிழ்மொழியை பக்தி மொழி என்று கூறுகின்றனர். மூவாயிரம் வருடம் இலக்கியப் பாரம்பரியம் கொண்ட தமிழ் மொழியில் பக்தி என்ற இழையை நீக்கிவிட்டால் தமிழ் இலக்கிய வரலாறு என்ற பிரமீடு சரிந்துவிடும் என்று கூறும் அளவிற்கு பக்தியோடு பின்னிப்பிணைந்ததாக தமிழ் இலக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பக்தி காலத்திற்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்களாக மாற்றம் பெற்றிருந்தாலும் பக்தியின் நெருப்புப் போர்வைக்குள்தான் தமிழ் இலக்கியங்கள் இருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

ஆதிகால இயற்கை வழிபாட்டு மரபில் ஏற்பட்ட வேற்றுமை காரணமாக உருப்பெற்ற சமயங்கள் பிற்காலங்களில் ஒரு குடையின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தாலும் இடைப்பட்ட காலத்தில் அவை தனித்தனி மரமாக உயர்ந்தோங்கி நின்றுள்ளன. வைதீகத்திற்குள் சைவமும் வைணவமும் இருந்தாலும், இவ்விரண்டிற்கும் இடையே பெரிய வேறுபாடுகள் உள்ளன. அங்ஙனம் வடமொழி புராணங்களில் இடம்பெறும் திருமால் குறித்தப் பதிவு நற்றிணையில் இடம் பெற்றுள்ளது. அதுவும் உவமையாகவே இடம் பெற்றுள்ளது. திருமால் போன்று உயர்ந்து நிற்கின்ற மலை என்று இதனை கபிலர் இயற்றியுள்ளார்.

**“மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்”[5]**

என்று, தோழி கூற்றாக அமைந்த பாடலுக்குள் திருமாலைக் கூறுகின்றார். இதே பாடலில் மகாபாரதத்தில் கண்ணனின் அண்ணனாக வரும் பலராமன் குறித்த உவமையினை கபிலர்,

**“வாலியோன் அன்ன உயங்குவெள் அருவி”[6]**

என்று, பலதேவன் போன்று வெண்மையான அருவி வீழ்ந்தது என்று, நிறத்துக்கு உவமையாக குறிப்பிடுகின்றார். இங்கு ‘மாயோன்’ என்பதனை தொல்காப்பியரும் குறிப்பிட்டுள்ளார். மாயோன் தமிழ் முல்லை நிலக்கடவுளாக பார்க்கும் நிலை உள்ளது. எனினும் மகாபாரத பலராமனோடு இணைத்து கூறப்படுவதால் இது வடமொழி சாயலைப் பெறுகின்றது.

‘பலராமன்’ என்ற கதாபாத்திரம் இராமாயணத்தில் இடம் பெறும் இலக்குவனின் மற்றொரு வடிவவமாகவும் கருதும் வழக்கம் உள்ளது. பலராமன் கையில் ஓர் ஏர்கலப்பை வைத்திருப்பதாக சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஏர்கலப்பை வேளாண் தொழிலுக்கு உரியது. எனவே பலராமன் வேளாண் கடவுளாக இருந்திருக்க வேண்டும். தமிழ் முருகன் கார்த்திகேயனாக மாறி சிவனின் மகனாக தற்போது நிலைபெற்றுவிட்டதைப்போல பலராமனும் மகாபாரத கிருஷ்ணனின் அண்ணனாக உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் முல்லை நிலக்கடவுளான திருமால் கிருஷ்ணன் என்ற வடநாட்டு கடவுளுக்குள் கரைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### 2.5.2 வருணன் வழிப்பாடு:

பண்டைய தமிழர்கள் இயற்கையை இயற்கையாகப் பார்த்தனர். வடநாட்டார் இயற்கைக்கு மனித உருவம் கொடுத்து மனிதனைவிட ஆற்றல் கொண்டவர்களாக தம் கற்பனை திறத்திற்கு ஏற்றவாறு வடிவம் கொடுத்துள்ளனர். அதில் ஒன்றுதான் வருண வழிபாடு. திருவள்ளுவர் மழை என்றே பதிவுசெய்துள்ளார். மாறாக வருணன் என்று குறிப்பிடவில்லை. மழை, மாரி என்பது தமிழாகவும் வருணன் என்பது வடமொழிக் கூறாகவும் பிரிந்து நிற்கின்றன. மேலும் தமிழ்ச் சமூகம் உயிர் உற்பத்திக்குக் காரணமானவற்றை பெண்ணாக உருக்கொண்டது. ஆரிய சமூகம் உயிர் உற்பத்திக்குக் காரணமானவற்றை ஆணாக உருக்கொண்டது. நற்றிணை 165 ஆவது பாடல் மழை பெய்ய வருணனுக்கு வழிபாடு செய்வதைக் குறிப்பிடுகின்றது.

> **“அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்**
> **கடவுள் ஓங்கு வரை பேண்மார் வேட்டு எழுந்து**
> **கிளையொடு மகிழும் குன்ற நாடன்”[7]**

என்பது அப்பாடல். இதுகுறித்து கே.சி. லட்சுமிநாராயணன்,

“வருணன் என்ற தேவதை மழைக்கு அதிபதி என்றும், அவனை வேண்டிப் பிரார்த்தனை செய்தால் மழை பெய்யும் என்றும் வேதங்கள் கூறுகின்ற அந்த மரபு தமிழகத்தில் சங்க காலத்திலேயே நிலவி இருந்தது என்பதை இங்கே காண்கிறோம்”[8] என்று கூறுகின்றார்.

இக்கருத்து வடமொழிக் கருத்தாக இலட்சுமிநாராயணன் குறிப்பிட்டுள்ளார். எனினும் இது திரிக்கப்பட்டு கூறப்பட்டுள்ளதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. காரணம் இன்றைய தமிழகத்தில் மேற்கண்ட மழைவேண்டும் சங்ககால பண்பாட்டு நிகழ்வை காணமுடிகிறது. தமிழ்ச்சமூகம் மழை வேண்டி மாரியம்மன் எனும் பெண்தெய்வத்தை வணங்கும் வழக்கத்தை இன்றுவரை பின்பற்றி வருகின்றது. இப்பண்பாட்டுச் சடங்கினை நிகழ்த்துவதற்குப் பொங்கல் வைப்பது, அரிசிமாவு இடித்து விளக்குப்போட்டு வழிபடுவது என நிகழ்த்தப்படுகிறது.

### 2.5.3 பார்ப்பனர்:

அந்தணர் என்பவர்கள் பார்ப்பனர்கள் ஆவார்கள். இவர்கள் வேதம் ஓதுதல், யாகம் செய்தல், மன்னர்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற தொழில்களைச் செய்தனர். இவர்கள் வடமொழியின் வேதத்தை கற்றவர்கள். அகப்பாடலாக அமைந்த நற்றிணையில் புறக் கருத்துக்கள் குறைவு. அகப்பாடல்களில் இடம் பெற்றிருந்தாலும் அது புறம் பற்றியதாக இருக்கின்றன. அங்ஙனம் பார்ப்பனர் என்னும் வடநாட்டவர் பற்றி,

> **“பார்ப்பன மகளிர் சாரற் புறத்து அணிய”[9]**

என்று மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் குறிப்பிடுகின்றார். காட்டு முல்லையின் மலரை மலைபுறத்தே (சாரல்) குடியிருக்கும் பார்ப்பன மகளிர் பறித்து அணிவர் என்று விவரிக்கின்றார். இதிலிருந்து பார்ப்பனர் குடியேற்றம் சங்ககால தமிழகத்தில் நிலைபெற்று இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.5.4 பலி உணவு:

விலங்குகளுக்கு, பறவைகளுக்கு உணவு வழங்குதல் மனிதநேயப் பன்பாகும். ஆனால் பலி உணவளித்தல் என்பது நம்பிக்கை தொடர்பானது. பலி கொடுத்தல் தொல் பழங்குடிகளிடம் காணப்படும் வழக்கமாகும். சிறுதெய்வங்களுக்கு பலி கொடுக்கும் வழக்கம் இன்றும் தமிழகத்தின் கிராம பகுதிகளில் நடைபெறுகின்றது. இது எல்லா இடங்களிடமும் காண முடியும். எனினும் இவ்வழக்கம் வடமொழி வழக்கமாக அறியப்படுகிறது.

**"மாசு இல் மரத்த பலிஉணர் காக்கை**
**வளிபொரு நெடுஞ் சினைதளியொடு தூங்கி**
**வெல் போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்**
**நல்வகை மிகுபலிக் கொடையோடு உகுக்கும்**
**அடங்கச் சொன்றி, அம்பல் யாணர்**
**விடக்குடைப் பெருஞ்சோறு, உள்ளுவன இருப்ப"**[10]

என்று கழார்க் கீரன் எயிற்றியார் குறிப்பிடுகின்றார். சோழ நாட்டின் 'கழார்' என்னும் ஊரில் காற்று மோதும் கிளையில் பலிசோறு உண்ணும் காக்கை அமர்ந்திருக்கும். அதற்கு, நல்ல வகையான மிகுந்த பலிக் கொடையோடு போடப்படும். அடங்காத சோற்றுத் திரள்களோடு, புதுவருவாய் போன்ற இறைச்சியுடைய பெருஞ்சோற்றுத் திரள்களையும் நினைத்துக் கொண்டு காக்கை உட்கார்ந்திருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

### 2.5.5 கங்கையின் வரலாறு:

பண்டைய தமிழ்நாட்டிற்கும் கங்கை நதியின் எல்லைக்குமான இடைவெளி பலநூறு மைல் ஆகும். அப்படியிருக்கும் நிலையில் கங்கைநதி பற்றி சங்கப் புலவர்கள் எங்ஙனம் அறிந்திருந்தனர் என்பது கேள்வியாக உள்ளது. பாடல் இயற்றியவர் வடக்கிருந்து வந்தவராக இருக்க வேண்டும். அங்ஙனம், நற்றிணையில் 369 – வது பாடல் வைதிக நெறிப்படியான கங்கை நதியின் வரலாற்றைக் கூறுகிறது. இதனை,

**"சுடர் சினம் தணிந்து குன்றம் சேர**
**நிறை பறைக் குருதினம் விசும்பு உகந்து ஒழுக**
**எல்லை பைபயக் கழிப்பி, பெரும் புன் மாலை**
**இன்றும் வருவதுஆயின் நன்றும்**
**ஞெமை ஓங்கு உயர்வரை இமையத்து உச்சி**
**வா அன் இழிதரும் வயங்கு வெள் அருவிக்**

**கங்கை அம் பேர் யாற்றுக்கரை இறந்து இழிதரும்**
**சிறை அடு கடும் புனல் அன்ன என்**
**நிறை அக காமம் நீந்துமாறே "[11]**

என இப்பாடல் அறிவிக்கின்றது. பொருள் திரட்டுவதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அந்தப் பிரிவைச் சகித்துக்கொள்ள முடியாத தலைவி, மரங்கள் வளர்ந்துள்ள உயர்ந்த மலையாகிய இமயமலை உச்சியில் தோன்றி ஆகாயத்தில் இருந்து கீழே இறங்கி, பளிச்சென்ற வெள்ளை நிறம்கொண்ட அருவியாக ஆகி, கங்கை ஆறு என்ற பெயரைப் பெற்று, கரையைக் கடந்த, அணைகளை உடைத்து எறிகின்ற கடும்புனல் போன்றது எனது காம வெள்ளம் என்று தலைவி கூறுகின்றாள். இமயமலையை நேரில் கண்ட ஒருவராலேயே இவ்வாறு பாடல் இயற்ற முடியும் என்பதனை இதன் வாயிலாக அறிந்துகொள்ள முடியும்.

### 2.5.6 ஆரியர்கள் நிறைந்த ஊர்:

பழங்காலத் தமிழகம் வணிகத்தில் சிறந்து விளங்கியது. அதன் காரணமாக பல நாட்டினரும் தமிழ்நாட்டில் குடியேறினர். அவர்களில் ஆரியர்கள் மிகுதி. அங்ஙனம் குடியேறிய ஆரியர்கள் பற்றிய குறிப்பு நற்றிணையில் இடம்பெற்றுள்ளது. அந்த வரலாற்றுக் குறிப்புகளைக் குறிப்பிடும் சாமி. சிதம்பரனார்,

"பழைய வரலாறுகள் பல நற்றிணைப் பாடல்களிலே காணப்படுகின்றன. அகத்திணைப் பாடல்களிலே பழைய நகரங்களையும், ஊர்களையும், மலைகளையும், வீரர்களையும் உவமையாக அமைத்துப் பாடுவது பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வழக்கம்.

முள்ளூர் என்பது சிறந்த புகழுடைய நகரம். அந்நகரிலே ஆரியர்கள் நிறைந்திருந்தனர்"[12] என்று குறிப்பிடுவதிலிருந்து ஆரியக் குடியேற்றம் வேரூன்றி இருந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.5.7 வைதீக திருமணமுறை:

மனிதர்கள் ஒன்றாக இருந்தாலும் அவர்கள் செய்யும் செயல்கள் அவர்களை வேறுபடுத்தும். அதுபோல சடங்குகள் இனத்திற்கு இனம் மாறுபட்டு காணப்படுகிறது. திருமணச்சடங்குகளும் தமிழ் மற்றும் ஆரியம் என்ற அடிப்படையில் அமையப்பெற்றுள்ளன. தொல்காப்பியர் 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்று பொருளதிகாரத்தின்கண் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் எண்வகை திருமணம் குறித்தும் கூறியுள்ளார். அவை பெரும்பான்மையாக வடமொழி மணமுறையாக இருக்கின்றன. இந்நிலையில் நற்றிணையின் 35ஆம் (அம்மூவனார்) பாடலுக்கு அ.நாராயணசாமி ஐயர் உரை எழுதுகையில் பின்வரும் வடமொழிக் கருத்தைத் தெரிவிப்பதாக அ.மாணிக்கம் குறிப்பிடுகின்றார்.

“கரணத்தின் அமைந்து திருமணம் முடிந்த காலை தலைவனும் தலைவியும், கணவனும் மனைவியுமாகிய பின் முதல் நாள் இரவு, மனைவியைச் சந்திரனுக்குக் கொடுத்தும், இரண்டாம்நாள் கந்தவர்னுக்குக் கொடுத்தும், மூன்றாம் நாள் அக்கினி தேவனுக்குக் கொடுத்தும், நான்காம் நாள் அக்கினி தேவன், திருமணம் செய்துகொண்ட கணவனுக்குக் கொடுக்க அவன் அவள் நலம் நுகர்வான் என்றும் இது தேவவிதி என்றும், நற்றிணை முதல் உரையாசிரியர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் அவர்கள் இப்பாட்டின் உரைப் பகுதியில் வேதவிதி – கரணத்தின் அமைந்து முடிந்த காலை முதல் மூன்று நாளும் முறையே தண்கதிர்ச் செல்வற்கும், கந்தருவற்கும், அங்கியக் கடவுட்கும் அளித்து நான்காம் நாள் அங்கியக் கடவுள் தலைமகனுக்களிப்ப அவன் துய்ப்பானாக வென்பது எனக் குறிப்பிடுவர்”[13] எனக் கூறுகின்றார். இக்கருத்து மனிதனின் தன்மானத்திற்கு எதிரானது. இப்போக்கு பெண்ணினத்தை இழிவுபடுத்தும் செயலாகும். ஆரியர்கள் கையாண்ட ஒடுக்குமுறைகளில் பெண்ணொடுக்குமுறை இன்றியமையாதது. இவ்வாறு ஆரியர்கள் பெண்ணை ஒடுக்குவதற்குக் காரணம் இந்தியாவிற்குள் அவர்கள் வரும்போது பெண்களோடு வரவில்லை எனவும், அதனாலேயே ஆரியர்கள் திராவிடப் பெண்களைப் பிள்ளை பெரும் இயந்திரமாகவும் விலங்குகளை விட கீழத்தரமாகவும் நடத்தினார்கள் என்று செவிவழிச்செய்தி ஒன்று உள்ளது. இதிலிருந்து ஆரியர்களின் பிற்போக்கு தன்மையை அறிந்துகொள்ள முடியும். நானூறு பாடல்கள் கொண்ட நற்றிணையில் சில பாடல்களில் மட்டுமே வடமொழிக் கூறுகள் இடம்பெற்றிருப்பதன் காரணமாக அக இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள் குறைந்து இருக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## 2.6 குறுந்தொகையில் வடமொழிக் கூறுகள்:

‘நல்ல’ என்ற அடைமொழியோடு கூறப்படும் நூல் குறுந்தொகை ஆகும். சங்க இலக்கிய நூற்களில் அகம் சார்ந்த அழகியப் பாடல்களைக் கொண்ட தொகுதியாக குறுந்தொகை விளங்குகின்றது. இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இந்நூலின்கண் 401 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதனை 205 புலவர்கள் பாடியுள்ளனர். இத்தொகை நூலில் உள்ள பாடல்கள் நான்கடி சிற்றெல்லையும், எட்டடி பேரெல்லையாகவும் கொண்டு அமையப் பெற்றுள்ளன. இதில் ‘307, 391ஆம் செய்யுட்கள் மட்டும் ஒன்பதடிகளை உடையவையாகக் காணப்படுகின்றன’. (குறுந்தொகை : ப.707) என்று உ.வே.சா குறிப்பிடுகின்றார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப்பாடல் முருகனைப் போற்றுகின்றது. இதனை முதன் முதலில் வெளியிட்டவர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆவார். அதன்பின் இதற்குப் பதவுரை, கருத்துரை, விளக்கவுரை, எழுதி பதிப்பித்தவர் உ.வே.சாமிநாததையர் ஆவார்.

### 2.6.1 புலவர்களின் பெயரும் – சமயமும்:

மனிதர்களுக்குப் பெயர் வைப்பதற்கான காரணம் ஒருவரிடமிருந்து மற்றொருவரை வேறுபடுத்தவே ஆகும். அவ்வாறு பெயர் வைக்கும்போது இயற்கைப் பொருள்களது பெயரும், முன்னோர்கள் பெயரும் வைப்பது தொடக்ககால மரபாக இருந்தது. பின்னர் இனப்பெயரும் சமயப்பெயரும் சூட்டிக்கொண்டனர். அங்ஙனம் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய புலவர்களுடைய பெயரில் சில சமயம் சார்ந்து விளங்குகின்றன. எச்சமயச் சார்பும் அற்ற சங்க இலக்கியத்தில் இவ்வாறு புலவர்கள் பெயர்கள் சமயத்தோடு தொடர்பு படுத்துகையில் அவ்விலக்கியம் குறிக்கும் பன்மைத்தன்மை கேள்விக்குள்ளாகின்றது. அங்ஙனம் உ.வே.சாமிநாதன் அவர்கள்,

“புலவர்க்குரிய பெயர்களால் இறையனார், உருத்திரன், கண்ணன், கந்தன், குமரன், சத்திநாதன், சாத்தன், தாமோதரன், தேவன், பதுமன், பெருந்தேவனார், பேரெயின் முறுவலார், வெண்பூதி என்பன தெய்வப் பெயர்களாகத் தோன்றுகின்றன. கந்தன் என்பது தந்துடை நிலையில் வழிபடப்பெறும் கடவுளின் பெயர். சாத்தன் என்பது ஐயனார் பெயர். பதுமன் என்பது பிரமதேவன் பெயர். கண்ணன், தாமோதரன் என்பன திருமாலின் பெயர்கள், குமரன் என்பது முருகவேள் பெயர். இறையனார், உருத்திரன், சத்திநாதன், பெருந்தேவனார், பேரெயின் முறுவலார். வெண்பூதி என்பன சிவபிரானைக் குறிக்கும் பெயர்கள். பெருந்தேவன் என்பது மகாதேவன் என்னும் திருநாமத்தின் பொருளுடையது. பேரெயின் முறுவலார் என்பது திரிபுரங்களை முறுவலால் எரித்ததைக் குறிக்கும் பெயர் என்றும், வெண்பூதியார் என்பது திருநீற்றை அணிந்தாதக் குறிப்பதென்றும் தோற்றுகின்றன”[14] என்று கூறுகின்றார். இதன்வாயிலாக புலர்வர்தம் சமயமும் அக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய சமய செல்வாக்கையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. புலவர்களுடைய சமயம் பற்றிக் குறிப்பிடும் உ.வே.சா. புலவர்தம் சாதி, அவர்தம் பெயர் இடம்பெறுகின்ற வரலாற்றுப் பின்புலங்களையும் குறிப்பிடுகின்றார். அங்ஙனம் யாழ்ப் பிரமதத்தன் குறித்து,

“புலவர்களுடைய சாதியை வெளிப்படுத்தும் பெயர்கள் பல. கபிலர் முதலிய சிலர் அந்தணர் என்பது வேறு வகையில் தெரிய வருகின்றது. ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் (184) அரசர்களுள் ஒரு வகையினன் என்பதை அவர் பெயர் தெரிவிக்கின்றது. பாரதத்தில் காணப்படும் சல்லியனது பெயரை ஒரு புலவர் பூண்டுள்ளார். சாண்டிலியன் (307), கார்க்கியர் என்னும் முனிவர் பெயர்களைச் சிலர் கொண்டுள்ளனர்”[15] என்று குறிப்பிட்டுள்ளார். இதேபோல ஒரு புலவர் பெயர் வடசொற்றொடரால் அமைந்தது எனக் குறிப்பிடும் உ.வே.சா அவர்கள், சில புலவர்களது பெயரினை சமயத்தோடு தொடர்பு படுத்தியும் கூறுகின்றார்.

“ஓதஞானி (227) : ஓதஞானி – பரந்த ஞானி வடசொற்றொடர் கருவூரோத ஞானி (71) : ஓத ஞானி – பரந்த ஞானி : வடசொற்றொடர். தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லச்

செலவழுங்கியதாக இவர்கூறும் ஒரு பாடலே இவர் புலமையை நன்கு தெரிவிக்கின்றது. 227-ஆம் செய்யுளை இயற்றிய ஓத ஞானி வேறு; இவர் வேறு" [16]

"இறையனார் (2) : மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் இறையனார் என்ற பெயரால் வழங்கப் பெறுவர் என்பர்."[17]

"கடியலூர் உருத்திரங் கண்ணனார் (352) : இவர் அந்தணர். பத்துப்பாட்டுள் பெரும் பாணாற்றுப்படையும் பட்டினப்பாலையும் இவரால் இயற்றப்பெற்றன. இவர் திருமாலிடம் அன்புடையவர். பல சாதியர்களுடைய ஒழுங்கங்களையும் அவர்கள் இருக்கும் குடியிருப்பினையும் சுவைப்படத் தெரிவிக்கும் ஆற்றல் உடையவர்."[18]

"கள்ளிலாத்திரையனார் (293) : கள்ளில் என்பது தொண்டை நாட்டின்கண் ஸ்ரீஞானசம்பந்தர் தேவாரம் பெற்ற ஒரு சிவஸ்தலம். ஆத்திரையனார் அத்திரி குலத்தில் பிறந்த ஓர் அந்தணர்."[19]

"கொற்றனார் (218, 358) : இவர் நக்கீரருடைய புதல்வர். கீரங்கொற்றன் எனவும் வழங்கப்படுபவர். இறையனாரகப் பொருளுக்கு முதலில் நல்லுரை கண்டு அதனை நக்கீரர் தம் புதல்வராகிய இவருக்குக் கூறினார் என்பது இறையனாரகப் பொருளுரை கூறும்."[20]

"நக்கீரனார்: இவருடைய ஊர் மதுரை. இவர் அந்தணர். இவரது இயற்பெயர் கீரனார். கடைச்சங்க காலத்தில் சங்கப் பலகையில் முதல் இடத்தை முதலில் ஏற்றவர் இவரே. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்குச் சிவபிரான், பலதேவர், மாயோன், முருகவேள் என்பவர்கள் உவமையாக்கி இவர் பாடிய பூவை நிலையும் (புறநா. 56) பொதுவாகப் பாடிய பொருண்மொழிக் காஞ்சியும் (புறநா.189) மிக்க அழகு வாய்ந்தது."[21]

"பதுமனார் (6) :பதுமனார் என்ற பெயர் சைனரைக் குறிக்கும் என்பாரும் உளர்."[22]

"மதுரை நல்வெள்ளியார் (365) : இவர் பெண்பாற் புலவர். வெள்ளியார் என்னும் சுக்கிரனுக்குரிய பெயர் இவருக்காயிற்று போலும்."[23]

"மாமூலனார் (11) : இவர் அந்தணர்; யோகி என்றும் கொள்ளல் பொருந்தும். இது தொல்,பொருள். 75-ஆம் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர், "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமுணர்ந்த மாமூலனார் முதலியோர் அறிவன் றேயத்து அனைநிலை வகையோராவர்" என்று பார்ப்பன வாகையை விலக்குவதனால் விளங்குகின்றது."[24]

“வடம வண்ணக்கன் தாமோதரனார் (85) : இவர் பெயர் வட மன்றோமோதரனார் என்றும் பிரதிகளில் காணப்படுகின்றது. வண்ணக்கன் - நாணய பரிசோதகன், நோட்டக்காரன்; இப்பொருள் நீலசேகி உரையில் கண்டது. இவர் கூட திசையில் இருந்து வந்தவராக எண்ணப்படுகின்றார்.”[25]

“வெண்சதியார் (79, 174, 219) : வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் என்பாரும் இவரும் ஒருவரே பெயர் அளவில் பெண்பாலாக இருக்கலாம் என்று தோன்றினாலும் வெள்ளூர் கிழார் மகனார் என்று இருப்பதனால் ஆண்பால் என்றே கொள்ள வேண்டும். இவர் வேளாண் மரபினர்; சைவ சமயத்தாய் ; பூதி – விபூதி; திருநீறு.”[26] இங்ஙனம் உ.வே.சா. அவர்கள் புலவர்களின் சமயத்தினை மிக நீளமாக விவரிப்பதிலிருந்து புலவர்கள் காலத்திற்கு முன்பிருந்தே சங்கத் தமிழகத்தில் வடநாட்டின் சமயங்கள் வேரூன்றி இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

### 2.6.2 குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள வடசொற்கள்:

தொல்காப்பியர் பிறமொழிச் சொற்கள் குறித்து குறிப்பிடும்போது திசைச்சொல், திரிசொல்லுடன் சேர்த்து வடசொல் பற்றியும் கூறியுள்ளார். பண்டையத் தமிழகம் உலகின் சிறந்த வாணிப முனையமாக இருந்ததால் பலநாட்டினரும் வந்து சென்றுள்ளனர். எனவே பல மொழிகளின் சொற்கள் தமிழ் இலக்கியங்களில் இருந்திருக்க வாய்ப்புண்டு. அங்ஙனம் குறுந்தொகையில் வடசொற்கள் காணப்படுகின்றன.

“வடசொற் கிளவிகள் வடவெழுத்தொரீஇ தமிழ் எழுத்தைப் பெற்றும், தமிழுக்கு ஏற்ற விகாரங்களை அடைந்தும், வேறு பல வகையில் திரிந்தும் வழங்குகின்றன. அவை வருமாறு :- அகில், அச்சிரம், அமயம், அமிழ்தம், அரசன், அவை, ஆரியர், இமயம், உலகம், ஏமம், கடிகை, கமண்டலம், கலாவம், காமம், காலம், குணன், குவளை, சகடம், சூலி, சேமம், தண்டு. தாது, தூது, தெய்வம், நகர், நிலம், நேமி, பக்கம், பணிலம், பருவம், பலி, பவழம், பிச்சை, மண்டிலம், மணி, மதம், மதி, மாலை, முகம், முத்து. முரசு, யாமம், வாசம் முதலியன. இவற்றில் சிலவற்றைத் தமிழ் எனவே கொள்வாரும் உளர்.”[27]

உ.வே.சா. குறிப்பிடும் குறுந்தொகையில் இடம்பெற்ற வடசொற்களும பாடல் எண்களும்,

“தாது -10, 46, 192, 323, 311, 273, 239, தூது -182, 254, 266, 269, 98, 106,

தெய்வம் -210, 87, 378, 263, 89, நகர் -338, நீலம் -366, நேமி -189, பக்கம் -129, பணிலம் -15, பருவம் -285, 358, 382, 159, 66,

பலி -210, 262, பவழம் -354, பிச்சை-277, மண்டிலம் -300

மணி -86, 155, 239, 243, 256, 274, 275, 279, 336, 367, 379, 392, 193, 190, 49, 173, 240, 301, 55, 138, 274, 182, 367, 212, 279, 256,

மதம் -136, மதி - 18, 395, 226,400

மாலை -32, 118, 122, 139, 162, 172, 189, 195, 245, 314, 319, 338, 358, 391, 92, 250, 64, 344, 398, 214, 46, 361, 346, 200, 32, 64, 386, 310, 108, 162, 234, 384, 310, 122, 352, 359, 155

முகம் -252, 304, அகில்-339, 286, அச்சிரம் -82, 68, 76, 82, 277, 338,

அமயம் -154, அமிழ்தம் -83, 201, 236, 14 அரசன் -276, 392, 243, 292,

அவை -146, 276, 36, 157, 320, ஆரியர் -7, இமயம் -158,

உலகம்- 99, 6, 44, 57, 83, 101, 174, 199, 273, 361, 143, 252, 273, 327, 398, 77

ஏமம் - 220, 214, கடிகை -267, சமண்டலம் -156, கலாவம் -225,

காமம் - 2, 32, 42, 57, 78, 102, 136, 177, 204, 206, 217, 231, 241, 290, 305, 308, 400,136, 30

,

காலம் -200, 251, 40, குணன் -206,

குவளை-13, 59, 62, 291, 321, 588, 270, 342, 346, 276, 300, 30, 13, 167, 337,

சகடம் -165 ஆலி -218, சேமம் -277, தண்டு -156, 146, 291, 382, 91, 370,

முத்து -51, 104, முரசு - 270, 328, 365, 38,

யாமம் - 6, 32, 42, 86, 107, 160, 198, 244, 261, 279, 302, வாசம் -309” [28]

என்று உ.வே.சா குறிப்பிடுவதைப் போலவே மா. இராசமாணிக்கனாரும் குறுந்தொகைக்கண் இடம்பெற்றுள்ள வடசொற்களைக் குறிப்பிட்டுள்ளார்.

‘‘தொல்காப்பியருக்கு முன்னரே தமிழகத்தில் வடமொழியாளர் இடம் பெற்றுவிட்டனர் என்பதும். அவர்தம் சமயக் கருத்துகளும் சொற்களும் தமிழ் மொழியில் இடம் பெற்றுவிட்டன என்பதும் முன்பே பலமுறைக் கூறப்பட்டன அல்லவா? எனவே, இந்நூற்பாக்களிலும் சில வடசொற்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் அவுணர் (1), யாமம் (2), சகடம் (165), நேமி (189), ஆத்திரை (யாத்திரை – 293), ஆதி (293), ஆரம் (மாலை – 321) என்பன குறிக்கத்தக்கவை. முருகன் அவுணரை கொன்றமை (1) கூறப்பட்டுள்ளது. அமிழ்தம் கூறப்பட்டுள்ளது (83, 201) அந்தணர்க்கு நீரொடு சொரிதல் வழக்கத்திற்கு வந்துவிட்டது (233). பார்ப்பனப் பாங்கன் களவு மணத்தில் இடம் பெற்றுவிட்டான் (156). இந்நூற்பாக்களால் பாடிய புலவருள் ஏறத்தாழ முப்பதின்மர் பெயர்களில் வடசொற்கள் காணப்படுகின்றன. ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன், உருத்திரன், உருத்திரன் கண்ணன், உரோடகத்துக்காரன், உலோச்சன், ஓதஞானி, (கருவூர்) ஓதஞானி, சாண்டிலியன், கருவீரன், தத்தன், கபிலர், பவுத்திரன் ஆத்திரையன், தேவகுலத்தார், நோதரன், பதுமனார், பரணர், பாரகாபரன், பூதத்தேவன், பூதம் புல்லன், கண்டத்தன், மாதிரத்தன், மோதசன், பிரமந்தன் என்றும் பெயர்களைத் தமிழ்ப் புலவர்கள் பெற்றிருந்தனர் என்பது

கவனித்தற்குரியது. இவற்றை நோக்க, வடமொழியாளர் செல்வாக்குத் தமிழகத்தில் படிப்படியாக உயர்ந்து வந்ததை அறியலாம்."[29] என்று குறிப்பிடுவதிலிருந்து வடசொற்கள் மக்களிடையேயும் இலக்கிய வழக்கிலும் ஆழமாக தமிழகத்தில் வேரூன்றி இருந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது. இது செயற்கையானதாகத் தெரியவில்லை. தற்காலத்தில் ஆங்கிலம் கலந்து பேசுவது இயல்பானதாக இருப்பதைப்போல் சங்ககாலத்திலும் வடமொழி கலந்து பேசுவது இயல்பாய் இருந்திருக்க வேண்டும்.

### 2.6.3 முருகன்:

குறிஞ்சி நிலக்கடவுளாக விளங்கும் முருகன் பிற்காலங்களில் சிவனது மகனாக அடையாளப்படுத்தப்படுகிறார். அவ்வாறு அடையாளப் படுத்துதல் திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் காண முடியும். ஆனால் குறுந்தொகை போன்ற நூல்களில் மேற்கண்ட இரண்டு நிலைகளிலும் முருகன் காணப்படுகிறார். ஆரிய வழக்கமும் தமிழ் வழக்கமும் கலந்து குறுந்தொகைக்குள் 2, 105, 111, 214, 218, 248, 360, 366 ஆகியப் பாடல்களில் முருகன் குறித்த கருத்துக்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் கடவுள் வாழ்த்தும், 1ம் பாடலும் ஆரிய சாயலோடு உள்ளன. ஏனையப் பாடல்கள் முற்றிலும் பழந்தமிழ்க் கூறுகளுடனே காணப்படுகின்றன.

**"தாமரை புரையுங் காமர் சேவடிப்**
**பவழத் தன்ன மேனித் திகழொளிக்**
**குன்றி பேய்க்கு முடுக்கைக் குன்றின்**
**நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்**
**சேவலங் கொடியோன் காப்ப**
**ஏம வைக லெய்தின்றா லுலகே"[30]**

**"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த**
**செங்கோட லம்பிற் செங்கோட்டி யானைக்**
**கழறொடிச் சோய் இன்றம்**
**குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"[31]**

என்று திப்புத் தோளார், முருகன் அரக்கர்களைக் கொன்றதனால் போர்க்களம் இரத்தத்தால் நிறைந்திருந்த கருத்தைக் குறிப்பிடுகின்றார். இதற்கு விளக்கவுரை தரும் உ.வே.சா அவர்களும்.

''முருகன் கடவுளின் ஊர்திருளுள் யானை ஒன்றென்பதும். அதன் பெயர் பிணிமுகம் என்பதும், அருள் செய்வதற்கும் போர் செய்வதற்கும் எழுந்தருள்கையில் அதனை அவர் ஊர்ந்து செல்வார் என்பதும், ''வேழமேல் கொண்டு'', ''அங்குசங் கடாவ வொருகை'', ''ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'' (முருக 82, 110, 247). ''கடுஞ்சின விறல்வேல் களிறூர்ந் தாங்கு'' (பதிற்.11:6), ''சேயுயர் பிணிமுக மூர்ந்தமருழக்கி'' (பரி.5:2) என்பவற்றிலும் அவற்றின்

உரைகளிலும் அறியலரும்'' [32] என்று குறிப்பிடுகின்றார். இங்கே கவனிக்கத்தக்கது என்னவெனில் இந்திரனின் வாகனமாக அறியப்படும் யானை முருகனுக்குரியதாக கூறப்பட்டுள்ளது. ரிக் வேதத்தில் முதன்மைக்கடவுளாகவும் தமிழ் மருதநிலத் தலைவனாகவும் விளங்கும் இந்திரன் புராணங்களில் இழிவானவனாகவும் சபலப்புத்திக் கொண்டவனாகவும் காட்டப்பட்டுள்ளார். இதுவும் ஒரு சதியாக அல்லது சைவ வைணவக் கடவுளை முதன்மைபடுத்த இந்திரனை இழிவாக சித்தரித்திருக்க வேண்டும். அதே போல பாலை நிலக்கடவுளான கொற்றவை மற்றும் மழை தெய்வம் மாரியம்மன் சிவனின் மனைவியின் அவதாரங்களில் ஒன்றாக மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு உற்று நோக்க வேண்டியது என்னவெனில் போர்க்கடவுளான கொற்றவை எனும் பெண்தெய்வம் உள்ளிட்ட பெண் தெய்வங்கள் தந்தைவழிச் சமூகமாக அறியப்படும் ஆரியபண்பாட்டுக்காரர்களால் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலும் 105, 111, 214, 218, 248, 360, 366 ஆகிய பாடல்கள் வேலன் வெறியாட்டினை விவரிக்கின்றன. இது முற்றிலும் எவ்வித ஆரிய கலப்பும் இன்றி காணப்படுகின்றன. இங்கு முருகனது உருவமோ, அவருடைய குடும்பமோ, அவரது வீரத்தீரச் செயல்களோ குறிப்பிடப்படவில்லை. குறுந்தொகை 362ஆம் பாடலில் முருகனுக்கு ‘ஆடு’ பலி கொடுப்பது இடம் பெறுகிறது.

### 2.6.4 சைவ சமயத்தோடு தொடர்பு படுத்தப்படும் பாடல் :

குறுந்தொகைக்கண் ஒரே ஒரு சைவ சமயம் சார்ந்த பாடல் இடம் பெறுகின்றது. எனினும் அப்பாடலில் சைவசமயக் கருத்து இடம் பெறவில்லை. அப்பாடல் குறித்த புனைவுகள் அப்பாடலுக்கு அத்தகைய தோற்றத்தை வழங்குகிறது.

**“கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி**
**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ**
**பயலியது கெழிஇய நட்பின் மயிலியற்**
**செறியையிற் றரிவை கூந்தலின்**
**நறியவு முனவோநீ யறியும் பூவே”[33]**

என பெண்ணின் கூந்தலுக்கு இயற்கை மணமா? செயற்கை மணமா என்ற ஐயத்திற்கு விளக்கம் தருவதாக அமைந்த அழகான இப்பாடல் சைவ சமயம் சார்புடையதாக சித்தரிக்கப்படுகிறது.

‘‘இச்செய்யுளை, ‘ஆலவாய் இறையனார் தருமி என்னும் பிரம சாரிக்குப் பொற்கிழி வாங்கிக் கொடுத்த சித்தாசமூர்த்தி யகவல் என்று தமிழ்நாவலர் சரிதை கூறும். இது. பாண்டியனால் சங்க மண்டபத்தின் முன் கட்டப்பட்ட பொற்கிழியைத் தருமி என்றும் பிரமசாரி ஒருவன் பெறும் பொருட்டு ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் இயற்றி அவனுக்கு அளித்ததென்று கூறப்படும்”[34] என்று உ.வே.சா கூறுகின்றார். இப்பாடல் ஒன்றே சிவன் குறித்து இடம்பெறுகின்ற

பாடல் ஆகும். இப்பாடலுக்கு ஏன் சைவசமய சாயம் பூசப்படுகிறது என்பதனை அறியமுடியவில்லை.

### 2.6.5 ஆரியக் கூத்து:

குறுந்தொகையின் ஏழாவது பாடல் ஆரியக்கூத்து நடந்த நிகழ்வை குறிக்கின்றது. குறுந்தொகைக்கண் வேறுசில கூத்து வகைகளும் காணப்படும் நிலையில், ஆரியக் கூத்து மிகுந்த கவனத்துக்கு உள்ளாகின்றது.

**“யார்கொ லளியர் தாமே யாரியர்**
**கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி”[35]**

என்ற அடிகளில் பெரும்பதுமனார் ஆரியக்கூத்து நடைபெற்றதை மேலோட்டமாக விவரிக்கின்றார். இதற்கு விளக்கவுரை எழுதிய உ.வே.சா.,

‘‘ஆரியர் – ஆரிய நாட்டில் உள்ள கூத்தர்; அவர் இயற்றும் கூத்து ஆரியக் கூத்து எனப்படும்; ‘ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்’ என்ற பழமொழி அக்கூத்தின் அருமையைப் புலப்படுத்தும்; விலக்குறுப்பின் வகையாகிய பதினான்கனுள் ஒன்றாகிய தேசமென்பது இரு வகைத்தென்பதும் அவ்விரண்டினுள் ஆரியக் கூத்து ஒன்று என்பதும் சிலப்பதிகார உரையால் அறிந்த செய்திகள்; ‘‘அரியந் தமிழெனுஞ் சீர் நடமிரண்டினும் (சிலப்.3 : 12-25, அடியார். மேற்). அக்கூத்தர் கழையை நட்டுக் கயிறு கட்டி அக்கயிற்றின்மேல் ‘‘ஆடியற் பாணிக்கொக்கு மாரிய வமிழ்தப் பாடற், கோடியர் ‘‘(கம்ப. கார்காஸ்.33) என்று கம்பரும் இக்கூத்தரைப் பற்றிக் கூறியுள்ளார்.’’[36] என குறிப்பிடும் உ.வே.சா.வின் விளக்கத்தின் வழி புலவர் மரபில் மட்டுமன்றி கூத்து அளவிலும் வடமொழியினரின் செல்வாக்கு இருந்ததை அறிய முடிகின்றது. மேலும் இக்கூத்து சிலப்பதிகார காலத்திலும் தொடர்ந்து கம்பர் காலத்திலும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

### 2.6.7 அமிழ்தம்:

இந்திய மருத்துவத்தின் அல்லது ஆராய்ச்சியின் உச்சம் அமிழ்தம் ஆகும். மனிதனை மரணத்திலிருந்து எப்படியாவது மீட்டெடுக்க வேண்டும் என்கிற அளவில் அறிவியல் உலகம் போராடிவரும் நிலையில் பண்டைய இந்தியர்கள் மரணத்தைத் தடுக்கும் மருந்தாக அமிழ்தத்தை உருவாக்கியுள்ளனர். அவ்வாறு அமிழ்தம் தயாரிக்கும் அவர்களது முறை தொடர்பான கருத்தியல் அல்லது கற்பனை உலக மருத்துவ துறையில் மைல்கல் ஆகும். அங்ஙனம் அமிழ்தம் பற்றிய உவமைகள் ஐந்து பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இங்கு புராண இதிகாசங்களோடு இவை தொடர்பு படுத்தப்படவில்லை.

**"அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த"[37]**

**"அரும்பெற லமிழ்த மார்பத மாக"[38]**

**"அமிழ்த முண்களும் மயலி லாட்டி"[39]**

**"அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி"[40]**

**"உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்**
**றமிழ்த மூறுமஞ் செவ்வாய் கமழகில்"[41]**

ஆகிய பாடல்கள் அமிழ்தம் குறித்து குறிப்பிட்டுள்ளன. இவ்வமிழ்தம் என்றும் சொல்லை உ.வே.சா. வடசொல் என்று குறிக்கின்றார். இவரைப் போல கே.சி. இலட்சுமி நாராயணன்,

"இந்த நூலின் 83-வது பாடல் அமிழ்தம் பற்றிக் குறிப்பிடுகிறது. தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் பெற்ற வரலாறு வேதங்களில் உள்ளது. அது இங்கே குறிப்பிடப்படுகிறது என்கிறார்." [42]

எனவே, வடமொழியின் புராணங்களில் கூறப்படும் அமிழ்தம் என்ற கருத்து புலவர்கள் மத்தியில் அறிமுகமானதோடு அகப்பாடல்களில் உவமையாக இடம்பெறும் அளவில் இருந்துள்ளது. இதேபோல அதியமானும் ஔவைக்கு நீண்டநாள் வாழவைக்கும் நெல்லிக்கனியைக் கொடுத்ததாக சங்க இலக்கியம் தெரிவிக்கிறது. வடமொழியாளர்கள் கற்பனையாகக் கூறிய அமிழ்தத்தைப் போன்றதொரு பொருளாக நெல்லிக்கனியை தமிழர்கள் ஆராய்ந்து கண்டு தெளிந்துள்ளனர் என்று தெளிய முடிகிறது. இன்றும்கூட இயற்கை மருத்துவத்தில் நெல்லிக்கனிக்கு இன்றியமையாதொரு இடமுண்டு.

### 2.6.7 சாரணர்:

சாரணர்கள் சமண சமயத்துறவிகள் ஆவர். இவர்கள் மலைகளைக்குடைந்து கல்லாலான பள்ளிகள் செய்து கல்வி மற்றும் மருத்துவம் உள்ளிட்ட சேவைகளைச் செய்துள்ளனர். சாரணர்கள் வானத்தில் பறந்து பயணம் செய்வதாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இன்றும்கூட பள்ளிக்கூட மாணவர்களிடையே பொது சேவை மனப்பான்மையை வளர்க்க சாரணர் இயக்கம் என்ற அமைப்பு அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சாரணர்கள் பற்றி குறுந்தொகையில் ஒரே ஒரு பாடலில் குறிப்பு ஒன்று இடம் பெறுகின்றது.

**"நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்**
**விலங்கு முந்நீர் காலிற் செல்லார்**
**நாட்டி னாட்டி னூரி னூரிற்" [43]**

என்ற அடிகளில், சாரணர்கள் வானத்தில் பறப்பவர்கள், கடலில் நடப்பவர்கள் என்பது போன்றவற்றை உவமையாக்கி வெள்ளிவீதியார் பாடுகின்றார். வடமொழி குடும்பத்தில் ஒன்றான

பாலி மொழியை வைத்து சமயப் பரப்புதலை மேற்கொண்ட சமண சமயத்தின் செல்வாக்கு தமிழகத்தில் நிலை பெற்றிருப்பதையே இது காட்டுகின்றது.

‘‘பாண்டிய நாட்டு மலைகளில் சமய முனிவர்கள் தங்கினர். மன்னரும் வணிகரும் அமைத்துக் கொடுத்த இக்குகைகளில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் காலம் கி.மு.3 ஆம் நூற்றாண்டாகும். சங்க நூல்களில் சமண கருத்துக்கள் விரவியுள்ளன. எனவே கிறித்துவுக்கு முன்னரும் பின்னும் உள்ள சில நூற்றாண்டுகளில் சமணம் இங்கே பரவித் தொடங்கிற்றெனலாம்’’[44] என்ற அ.தட்சிணாமூர்த்தி அவர்களின் கூற்றின் வழியாகவும் சமண சமயத்தின் செல்வாக்கை அறிய முடிகிறது. எனவே பண்டைய தமிழர்களின் இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடென்னும் நடுகல் வழிபாடு, சமண சமய வழிபாடு, பௌத்த சமய வழிபாடு, சைவ சமய வழிபாடு, வைணவ சமய வழிபாடு, குறிஞ்சி நிலத்தலைவன் முருகன் வழிபாடு, முல்லை நில கடவுளான மால் வழிபாடு, இந்திரன் வழிபாடு, வருண வழிபாடு, மாரியம்மன் வழிபாடு, கொற்றவை வழிபாடு, இல்லுறை தெய்வ வழிபாடு என்று பண்டையத் தமிழ்நாடு சமயப்பொதுமைக்கு முன்னுதாரனமாக திகழ்ந்தது எனில் அது மிகையாகாது. அப்படி பலதரப்பட்ட சமயங்களையும் சங்ககால மக்கள் ஏற்றுக்கொண்டனர் எனில் எத்தகைய பண்பட்டவர்களாக அவர்கள் இருந்திருக்க வேண்டும்.

### 2.6.8 வடநாட்டு நிலவியல்:

தமிழ்ப்புலவர்களுக்கு வடநாட்டின் நிலவியல் தெரிந்துள்ளது. தெரியாத ஒன்றை அல்லது செவி வழியாக கேட்ட ஒன்றை எப்படி அவர்கள் பாடல்களில் குறிப்பிட்டிருக்க முடியும். குறுந்தொகையில் இரண்டு இடங்களில் வடநாட்டின் நிலப் பெயர்கள் இடம் பெறுகின்றன.

**‘‘வெண்கோட் டியானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி வெறீஇயர்’’**[45]

என்று படுமரத்து மோசிகீரனார் குறிப்பிடுகிறார். இதனை உ.வே.சா. அவர்கள்,

“சோணை – ஒரு நதி (சிலப். 5 : 99 – 100, அடியார்). இதன் வட கரையிலுள்ளது பாடலிபுத்திரமென்னும் நகரம்; பழைய காலத்தில் மகத நாட்டின் தலைநகரமாக இருந்தது. இது பாடலியென வழங்குதும் பொன்னாற் சிறப்புடையதென்பதும்

**“பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்**
**சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை’’**
**‘‘பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும்’’**

என்பவற்றால் அறியப்படும்”[46] என்று கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது. இதேபோல,

அங்ஙனம் பாடலிபுத்திரம் குறித்து தமிழண்ணல், ‘‘இந்திய வரலாற்றின் தொடக்கத்திலிருந்த பேரரசர்களுள் நந்தர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். பேரரசர் அலெக்சாண்டருக்கு முன்பு அரசன் பிம்பிசாரனும் அவன் மகன் அஜாதசத்துருவும் (கி.மு. 525 – 475) பாடலிபுத்திரத்தைத் தம் தலைநகராகக் கொண்டு மகத அரசை ஆண்டு வந்தனர். சோணையாறு கங்கையோடு கலக்குமிடத்தே அவ்வாற்றின் கரையில் அஜாதசத்துரு இப்பெரு நகரை நறுவினான் என்ற புகழுரிக்குரியவனாக இருந்தான். இப்பெருநகரம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை ஆயிரம் ஆண்டுகளுக்குப் புகழ்பெற்று விளங்கியது. அஜாத சத்துருவுக்குப் பின் நந்தர்கள் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். இந்நந்தர்கள் பெருஞ்செல்வம் உடையவராயிருந்தனர். நந்தர்களைப் பற்றியும் பாடலிபுத்திரத்தைப் பற்றியும் தெளிவான குறிப்புகளை நாம் சங்க இலக்கியங்களிலிருந்து பெருகின்றோம்’’[47] எனக் கூறுகின்றார். இதே கருத்தை எஸ். வையாபுரிப்பிள்ளை,

**“வெண்கோட்டி யானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்**

என்பதே உண்மையான பாடமெனத் தெளியலாம். பாடலிபுத்திரம் சோணை நதிக்கரையில் நிருமாணிக்கப்பட்டிருந்தென்பது சரித்திரக்காரரால் நெடுங்காலமாக அறியப்படாமலிருந்ததோர் உண்மை. இவ்வுண்மையைப் பற்றிய குறிப்பொன்று குறுந்தொகையிற் காணக்கிடக்கின்றமை தமிழ் மக்களாகிய நாம் அறிந்து பெரிதும் இன்புறத்தக்கதாம்”[48] என்று குறிப்பிடுவதன் வாயிலாக நன்கு உணர முடியும். இதே போல இமயம் குறித்து,

**‘‘இமயமுஞ் துளக்கும் பண்பினை’’**[49]

என்ற அடிகளில் ஔவையார் கூறுகின்றார். இதிலிருந்து புலவர்கள் அறிந்து வைத்திருக்கும் அளவுக்கு மேற்கண்ட வட நிலங்கள் சிறப்புற்று இருந்தன என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.6.9 அட்டமி மற்றும் அருந்ததி:

‘சாதலும் புதுவதன்று, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன’ என்பது தமிழர் மரபு. மனித வாழ்க்கையில் நடைபெறும் நன்மை தீமைகளுக்கு கிரகங்களும் நட்சத்திரங்களுமே காரணம் என்பது வடமொழியாளர் மரபு. அங்ஙனம் வடமொழியாளர்கள் குறிப்பிடும் இரண்டு நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்பு குறுந்தொகையில் காணப்படுகின்றன. அவை அட்டமி மற்றும் அருந்ததி ஆகும். அட்டமி குறித்து,

**“மாக்கட் நடுவ ணெண்ணாட் பக்கத்து”**[50]

என்று கோப்பெருஞ்சோழன் கூறுகிறார். இதற்கு உ.வே.சா. “எட்டாந் திதிக்குரிய இளைய வெற்றிய திங்கள், எண்ணாட்பக்கம் - எட்டாவது திதி; அட்டமி” [51] என்று குறிப்பிடுகின்றார். அதே போல அருந்ததி குறித்து நக்கண்ணன்,

**“கடவுட் கற்பி னவனெதிர் பேணி”**[52]

எனக் கூறுகின்றார். இதற்கு உரையெழுதும் உ.வே.சா. ‘கடவுட் கற்பு – மழை தருல் முதலிய தெய்வத் தன்மையை உடைய கற்பு; அருந்ததி போன்ற கற்பெனும் ஆம் (அகநா. 16:4) (ப.466) என்று குறிப்பிடுகின்றார். தமிழர் மரபில் வரும் கற்பு என்பது தமிழர் மரபா? அல்லது ஆரிய மரபா? என்பது கேள்வியாக உள்ளது. அதுவும் பெண்ணுக்கு மட்டும் வைத்திருப்பதனால் அது வடமொழி மரபாக இருக்க வேண்டும். பெண்ணொடுக்குமுறைகளில் இதுவும் ஒன்றாகும். பரத்தையர் ஒழுக்கமும் ஆணுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், பெண்மட்டும் கற்போடு இருக்கவேண்டுமென கடிந்துரைப்பது ஆரியர்கள் பின்பற்றும் தந்தைவழிச் சமூகத்தால் மட்டுமே கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### 2.6.10 அந்தணர், வேதம், வேள்வி :

அந்தணர் வேதம் வேள்வி இம்மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. இவை வடமொழிக் கூறுகளில் மிக இன்றியமையாதவையாகும். அங்ஙனம் அந்தணர் குறித்து,

**“தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்”**[53]

**“காராரதிர் புறவி னதுவே யுயர்ந்தோர்க்கு**
**நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்”**[54]

என்று பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதே போல பார்ப்பானிடம் குறிகேட்டல் பற்றி,

**“பார்ப்பன மகனே பார்ப்பன மகனே**
**செம்பூ முருக்கி னன்னார் களைந்து**
**தண்டொடு பிடித்த தாழ்கிமண்டலத்துப்**
**படிவ வுண்டிப் பார்ப்பன மகனே”**[55]

என பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன் புதிவு செய்துள்ளார். இதுக்குறித்து தமது கருத்தினை கே.சி. லட்சுமி நாராயணன். “குறுந்தொகையில் 156-வது பாடல், ஓர் அந்தணனைப் பார்த்துத் தலைவன் பாடுவதாக அமைவது. அந்தண மகனே! அந்தண மகனே! சிவந்த பூக்களைக் கொண்ட புரச மரத்தின் நல்ல பட்டையை நீக்கிவிட்டு, அதன் தண்டோடு ஏந்திய, தாழ்கின்ற கமண்டலத்தையும், விரத உணவையும் உடைய பார்ப்பன மகனே! கேள்வியின் வழி, எழுதப்படாத வேதத்தை அறிந்த நின்னுடைய அறிவுரைகளுள் பிரிந்த தலைவியரையும், தலைவர்களையும் சேரச் செய்யும் மருந்து உண்டோ” என்று இந்தப் பாடலில் தலைவன், அந்தணச் சிறுவனைக் கேட்கின்றான். இங்கு அந்தணர்கள் வேதங்களை அறிந்தவர்கள் என்ற

செய்தியும், வேதங்கள் எழுதப்படாதவை என்ற செய்தியும் கிடைக்கின்றன. யாகங்களில் அந்தணர்க்கு நீர் வார்த்துப் பொருட்களைத் தானம் செய்வது வேதங்களில் வழியான ஒரு சடங்கு. இதைக் குறுந்தொகையின் 233-வது பாடல் கூறுகிறது."[56] என்று குறிப்பிடுகின்றார். இதே போல வேள்வி குறித்த ஒரு பாடலை கபிலர் கூறுகின்றார்.

**"நெய்பெய் தீயி னெதிர்கொண்டு**
**தான்மணந் தனையமென விடுகந் தூதே"[57]**

என்று வேள்வியில் நெய் சொரியும் நிகழ்வை கபிலர் குறிப்பிட்டுள்ளார். இதன் வாயிலாக வடமொழியின் தாக்கம் சங்ககாலத்தில் இருந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. சிலர் இப்படியான தாக்கம் சமூகத்தின் மேல்நிலை மக்களிடையே மட்டும் இருந்ததாக குறிப்பிடுகின்றனர். எவ்வாறெனினும் இக்குறிப்புகள் சங்க இலக்கியத்துள் உள்ளது. எனவே இதனை புறந்தள்ளிவிட முடியாது.

### 2.6.11 வடமொழிப் பண்பாட்டில் பெண்:

பெண் பற்றிய பார்வை நிலம் சார்ந்தும், இனம் சார்ந்தும் வேறுபடுகின்றன. தமிழினம் பெண்ணுக்கு முதன்மையிடம் கொடுக்கிறது. நிலம், மொழி, தெய்வம் இவற்றைப் பெண்ணாக கருதுகின்றது. ஆரியர் பெண்ணை இரண்டாம் இடத்தில் வைக்கின்றனர். சமணர்களும் பௌத்தர்களும் பெண்களைத் துறவிகளாக்கி, வைதீகம் பெண்களுக்கு மறுத்த இடங்களை வழங்கின. அங்ஙனம் தமிழ்ப பெண்கள் குறித்து அ.தட்சிணாமூர்த்தி,

"பெண்ணை வீட்டுக்கு விளக்கு என்று கருதினர் (புறம், 314). பிள்ளைப் பேறடைந்த தாய் 'புதல்வன் தாய்' என்று பாராட்டப்பட்டாள். ஆடவர் பரத்தை காரணமாய் பிரிந்தபோது தம் மனைவியர்க்கு அஞ்சினர். மறக்குடி மகளிர் அஞ்சாமையுடன் வாழ்ந்தனர். இவர்களின் வீரமும் நாட்டுப்பற்றும் 'மூதின் முல்லை என்றும் துறையைத் தோற்றுவித்தன. தன் கணவனும், உடன் பிறந்தானும் போரில் இறந்த பின்னும், துணிவுடன் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பிய தாயையும் நாம் காண்கின்றோம். புறமுதுகிட்டு ஓடினான் மகன் என்று கேள்விப்பட்ட தாயொருத்தி அவன் வாய் வைத்து உண்ட மார்பை அறுத்தெறியவும் வஞ்சினம் உரைத்தாள்"[58] என்று கூறுகின்றார். இதிலிருந்து சங்கப் பெண்களின் நிலையினை நன்கு உணர முடியும். ஆனால் குறுந்தொகைக்கண் ஒரு பாடலில் கைம்மை நோம்பு கூறப்படுகின்றது.

**"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்**
**கைம்மை யுய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ்கிளைமுதற் சேர்த்தி**
**ஓங்குவரை யமுன்கத்துப் பாய்ந்துயிர் செருக்கும்"[59]**

என்று கடுந்தோட்கரவீரன் பாடியுள்ளார். ஆண் குரங்கைப் பிரிந்த பெண்குரங்கு கைம்மை நோம்பு நோற்றதாகவும், இறந்ததாகவும் இப்பாடல் குறிப்பிடுகின்றது. கணவன் இறந்தப்பின்பு

குழந்தைகளைக் காப்பற்றுதல் என்ற பெரிய பொறுப்பு பெண்ணுக்கு உள்ளது. ஏதோ அவள் ஆண் இச்சைக்காக வாழ்வது போன்று சித்தரிப்பது தவறு. பெண்ணை ஆண் சார்ந்தே முற்றிலும் இயங்க வைப்பது ஆரிய நெறியாகும்.

''பல்லவர் காலத்தில் நுழைந்த வடநாட்டு மரபுகள் அழுத்தமாகவும் வேரூன்றின. பெண்கள் வீட்டுக்குள் அடைப்பட்டுக் கிடந்தனர். குழந்தை மணம். உடன்கட்டை ஏறல், கைம்மை கொடுமை ஆகியவை பெரிதும் இடம் பெற்றன''[60] என்று கூறுவதிலிருந்து நன்கு புலனாகும். பெண் உயர்வாக தமிழ்ச் சமூகத்தில் கருதப்பட்டால். பெண் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது தமிழ்ச் சமூகம் தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தை வழிச்சமூகமாக மாற்றப்பட்டதன் விளைவேயாகும். அதனை,

''கால்நடைகளின் பெருக்கத்துக்கு ஆண் காரணமாக இருந்தான். அதனால் சமூகத்தில் ஆணின் கை ஓங்கியது. நிலை உயர்ந்தது. அந்தஸ்து மேம்பட்டபடது. இங்கு ''கால்நடை வளர்ப்பு தந்தை வழிச் சமுதாயத்தை ஏற்படுத்தியது. அது ஆணின் ஆதிக்கத்திற்கும் தனிச் சொத்துடைமைக்கும் வழிகோலியது'' என்று பேரறிஞர் ராகுல்ஜி அவர் கூறியிருப்பது நம் கவனத்திற்குரியது''[61] என்பதை கவனிக்க வேண்டியுள்ளது. குறுந்தொகைக்கண் ஒரு பாட்டில் பெண்கொலை புரிந்த நன்னன் குறித்த பதிவை பரணர் வெளிப்படுத்துகிறார்.

**''மண்ணிய சென்ற வொண்ணுத லரினு**
**புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்**
**கொண்பதிற் றொன்டது களிற்றொ டவனிரை**
**பொன்செய் பாவை கொடுபவுங் கொள்ளார்.**
**பெண்சொலை புரிந்த நன்னன் போல''**[62]

என்ற இப்பாடலுக்கு உ.வே.சா. ''நன்னன் என்றும் சிற்றரசன் ஒருவன் ஆற்றங்கரையில் இருந்த தன் தோட்டத்தில் அரிதின் வளர்த்த மாமரத்தின் காயொன்று அவ்வாற்றிலே வீழ்ந்து மிதந்துவர, அதனை ஆற்றிற்கு நீராடச் சென்ற பெண் ஒருத்தி எடுத்துத் தின்றாள். அது கண்ட காவலர் அவளை நன்னன்முன் கொண்டு நிறுத்த. அவன் அவளுக்கு கொலைத்தண்டம் விதித்தான். அதனை அறிந்த அவள் தந்தை அவளது நிறைக்கேற்ற பொன்னால் செய்த பாவையும், எண்பத்தொரு களிற்றையும் தண்டமாக இருப்பதாகக் கூறவும், நன்னன் அதற்கு உடன்படாமல் கொலை புரிவித்தான்''[63] என்று கூறுகின்றார். இதிலிருந்து ஆரியர்கள் பெண்களை இழிவாகக் கருதியது புலனாகிறது.

### 2.6.12 சுடுகாடு:

பிணத்தை எரியூட்டும் வழக்கம் ஆரியர்தம் வழக்கமாகும். தமிழர் மரபில் புதைத்தலே மேற்கொள்ளப்பட்டது. அதனை நடுகல் வழி நன்கு அறியமுடிகிறது. அதோடு இவ்வழக்கம் இன்றளவும் நிகழ்ந்து வருவதிலிருந்தும் அறிய முடியும். இந்நிலையில் குறுந்தொகையில்,

**“ஏதி லாளர் சுடலை போலக்”**[64]

என்ற அடியில் அயலாருடைய சுடுகாட்டைப் போல என்றதொரு சொற்றொடர் உவமையாக கூறப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சங்ககாலத்தில் பிணத்தை எரியூட்டும் ஆரிய வழக்கம் சுடுகாடுவரை பதிந்துள்ளதை அறிய முடிகிறது.

### 2.6.13 சூலி:

சூலி என்ற சொல்லை உ.வே.சா. வடசொல் என்று கூறுகின்றார். இச்சொல் இடம்பெறும் தொடர் ஒன்று குறுந்தொகையின் 218-வது பாடலில் இடம் பெற்றுள்ளது.

**“விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாங் கைநூல் யாவாம்”**[65]

என்று ‘கொற்றன்’ என்ற புலவர் பாடியுள்ளார். அதற்கு உ.வே.சா. துர்க்கை என்று பொருள் கொள்கிறார். துர்க்கை வழிபாடு இன்றளவும் வடநாட்டில்தான் நடைபெற்று வருகின்றது. அதனை இப்புலவர் குறிப்பிட்டதன் காரணம் துர்க்கையை தமிழ் மண்ணில் பரப்புவதற்காக இருக்க வேண்டும்.

### 2.6.14 சொர்க்கம்:

மனிதனின் இறப்பில்லா வாழ்விடமாக கருதப்படும் கற்பனையிடம் சொர்க்கம் ஆகும். சொர்க்கத்தை குறிக்க தமிழில் உயர்நிலை உலகம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் வரும் உலகம் என்ற சொல்லை உ.வே.சா வடசொல் என்று குறிப்பிடுகின்றார்.

**“குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை”**[66]

என்ற அடிகள் தேவர்கள் வாழும் உலகினை குறிக்கின்றது. இது ஆரிய வழக்கமாகும். அறிவியல் பெரிதும் வளர்ச்சியடையாத காலத்தில் தனக்கு மேல் மற்றும் கீழ் பகுதிகளில் வேறு உலகங்கள் இருக்கவேண்டும் என்ற சிந்தனை சிறப்பு வாய்ந்ததாகும்.

குறுந்தொகையில் வடசொற்கள், வடநாட்டின் இடம் குறித்தப் பதிவுகள், வடநாட்டின் சமயங்கள் குறித்தப் பதிவுகள், வடநாட்டினராகிய பார்ப்பனர் குறித்த கருத்துக்கள், வேள்வி இயற்றியது தொடர்பான கருத்து நிலைகள், ஆரியக் கூத்து தொடர்பான கருத்துகள், சொர்க்கம்

மற்றும் அமிழ்தம் தொடர்பான குறிப்புகள், ஆரியர்களின் பெண்பற்றிய மனநிலை, பிணத்தை எரியூட்டும் சடங்கு போன்ற வடமொழிக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதன்வழி அக இலக்கியமான குறுந்தொகை வடமொழிக் கூறுகளை நிரம்ப தாங்கிய இலக்கியமாக திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.7 ஐங்குறுநூற்றில் வடமொழிக் கூறுகள்:

ஐங்குறுநூறு நூலானது மூன்றடி முதல் ஆறடிக்கு உட்பட்ட பாக்களைக் கொண்டது. இந்நூலை மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை என்னும் ஐந்து திணைகளாக பகுத்துள்ளனர். இதனை முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகியோர் இயற்றியுள்ளனர். நூறாகப் பாடப்பட்ட ஐந்நூறு பாடல்களைக் கொண்ட நூலாக ஐங்குறுநூறு திகழ்கின்றது.

இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஆவார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்ற சேர மன்னனர் ஆவார். ஐங்குறுநூற்றுப் புலவர்களில் ஒருவரான பேயனார் குறித்து சாமி. சிதம்பரனார்,

"இவர் பெயர் பேயன். பேயார், பேயனார் என்று வழங்குகின்றது. பேயன் என்பது சிவபெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று. பேய்கள் வாழும் சுடுகாட்டில் இருப்பவன். பேய்களைப் படைகளாகக் கொண்டவன். ஆகையால் பேயன் என்று சிவனை அழைப்பர். இத்தகைய சிவபெருமான் பெயரையே இப்புலவரும் புனைந்திருந்தார் என்று கருதலாம்"[67] எனக் குறிப்பிடுகின்றார். சைவம் என்ற வடநாட்டின் சமயக்கடவுளான சிவனின் பெயர்களில் ஒன்றினை மேற்கண்ட புலவர் கொண்டுள்ளதால் இப்புலவர் குடும்ப மரபு ஆரிய மரபை பின்பற்றியவர்களாக இருக்க வேண்டும். சைவசமயம் தென்னாட்டிற்கு உரியது என்ற கருத்துநிலை இருப்பதனையும் நாம் ஒதுக்கிவிடலாகாது. சிவன் தென்னாட்டின் கடவுள் எனின் தொல்காப்பியர் ஏன் சிவனைக் குறிப்பிடவில்லை என்ற வாதத்தினையும் ஒப்புநோக்க வேண்டியுள்ளது.

#### 2.7.1 ஐங்குறுநூறு – காலம்:

சங்க இலக்கியம் என பொதுவாக கூறினாலும் அதற்குள் இடம்பெற்றுள்ள கருத்துக்களின் அடிப்படையில் அதன் காலத்தை அறிஞர்கள் கணிக்கின்றனர். ஐங்குறுநூறு காலம் குறித்து எஸ். வையாபுரிப்பிள்ளை, "இனி ஐங்குறுநூற்றை நோக்குவோம். இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்: தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலரும் பொறை. யானைகட்சேய் 'மேலோருலகம்' எய்திய செய்தியை புறம் 229-ம் செய்யுள் குறிக்கின்றது. இதனால், புறநானூறு தொகுக்கப் பெற்றதற்கு முன்பே ஐங்குறுநூறு தொகுக்கப்பெற்றதாதல்

ஒருதலை."[68] எனக் கூறுகிறார். எனவே புறுநானூற்று காலத்திற்கும் முற்பட்டது ஐங்குறுநூறு என்று துணிய முடிகிறது.

### 2.7.2 ஐங்குறுநூற்றில் வடசொற்கள்:

பலமொழிகள் பேசுவோர் வந்து சென்ற சங்க காலத்தின் இலக்கியத்தில் வடசொற்கள் இருப்பது இயல்பானது. இதனால் சங்க இலக்கியம் பன்முகத்தன்மை கொண்டதாக விளங்குகிறது. அதோடு பிறமொழிச் சொற்கள் இலக்கியங்களில் இருப்பது பிறமொழியாளர்கள் வந்து செல்லும் களமாக தமிழ்நாடு இருந்ததற்கான சான்றாகும். அங்ஙனம் ஐங்குறுநூற்றில் சில வடசொற்கள் இடம்பெற்றுள்ளன. அவை,

"அவை அஞ்சனம் -மை - ஐங்குறு.16, எந்திரம் - ஐங்குறு.55
சிமையம் -உச்சி - ஐங்குறு.100, 268, தவம் - ஐங்குறு.11
அச்சிரம் - முன்பனி - ஐங்குறு.223,464,470, பிரசம் -வண்டு -406
தேசம் -317, கருவி, கற்பம் - ஐங்குறு.461"[69]

ஆகிய வட சொற்கள் இடம்பெற்றுள்ளதாக கா. கோவேந்தன் குறிப்பிட்டுள்ளார். இதன்வாயிலாக சங்ககாலத்தில் வடமொழியாளர்கள் இருந்தனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.7.3 கடவுள் வாழ்த்து:

சங்க இலக்கிய நூற்களில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் என்றும் விவாதத்திற்குரியனவாக விளங்குகின்றன. சங்க இலக்கியப் பாடல்களை கடவுள் வாழ்த்துப் பாடலோடு தொடர்பு படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. அங்ஙனம் ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப்பாடல்,

**"நீலமணி வாலிழை பாகத்து**
**ஒருவன் இருதாள் நிழல்கீழ்**
**மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"**[70]

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார், நீலநிறமான மேனியையும் உடைய உமையம்மைத் தன் உடலில் ஒரு பாகமாய்க் கொண்ட ஒப்பில்லாத சிவனின் இரண்டு திருவடிக் கீழ் மூன்று வகைப்பட்ட உலகங்களும் நிலைபெறுவன. ஆதலால் நாமும் அம்முதல்வனை வணங்கி அவனது தாள்நிழல் வாழ்வைப் பெறுவோமாக என குறிப்பிடுகின்றார்.

சி. செல்வகுமார் சிவனை தென்னாட்டின் கடவுள் என்கிறார். "ஆரிய வர்த்தம் எனப்படும் விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்தவர்கள் சிவனை முழுமுதல் கடவுளாக எண்ணி வழிபட்டு வந்தனர். ரிக்வேதத்தில் சிவன் தட்சிணாபதி அதாவது சிவன் தென்னாட்டு மக்களால்

வழிபட்டுவரக் கூடிய தெய்வம் எனச் சொல்லப்படுகிறது. சிவனை வணங்கி வந்த சைவ நெறி, தாய்வழிபாடாகிய கொற்றவை (காளி) வழிபாடு ஆகிய இரண்டும் குமரிக் கண்டத்தில் நடைமுறையில் இருந்து வந்த வழிபாட்டு முறைகள் ஆகும்”[71] என வலியுறுத்துகின்றார். ஆனால் ஐந்து நிலக் கடவுள்களில் சிவனுக்கு இடமில்லை என்பதையும் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது. மேலும் சங்ககால ஐந்துநிலக் கடவுள்களை இன்றுவரை பெரும்பாலான தமிழ் மக்கள் வழிபட்டு வருகின்றனர். சைவம் என்றால் தமிழ் மக்களுக்கு முருகன் மட்டுமே முதல்கடவுள் ஆவார். சிவன் மேட்டுக்குடி தெய்வமாக மட்டுமே விளங்குகிறார். ஆனால் சிவனின் தோற்ற அமைப்பு நாடோடி மற்றும் வேட்டையாடுச் சமூகத்தின் மாந்தர்களைப்போல் இருக்கின்றது.

### 2.7.4 வேதம் ஓத வேண்டும்:

நாட்டுப்புற மக்கள் மழைவேண்டி நாட்டார் தெய்வங்களை வணங்குகின்றனர். ஆரியர்கள் தங்கள் வேண்டுதல்களை வேள்வி இயற்றி பெற்றுக்கொள்ள முனைகின்றனர். இதுதான் தமிழ் மற்றும் ஆரியப்பண்பாடு வேறுபடும் இடமாகும். ஆதன் அவனி என்ற சேர மன்னனை ஓரம்போகியார் பாடும் போது வேதம் ஓத வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார்.

**“வாழியாதன் வாழி அவனி**
**பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக**
**எனவேட்டோளே யாயே யாமே**
**பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்**
**கழனிஊரன் மார்பு**
**பழனமா கற்க எனவேட்டேமே.”**[72]

எனக் கூறுகின்றார். ‘மன்னன் செங்கோல் நடத்த பார்ப்பார் வேதம் ஓத, வானம் தவறாது பெய்ய, விளைபொருள் மிக, இல்லறம் இனிது நிகழும். பார்ப்பார் வேதம் ஓதுதலால் மன்னன் வாழ்நாள் பெருகும். ஆதலால் பார்ப்பார் ஓதுக’ என்றார் என்று குறிப்பிடுகின்றார்.

இதே கருத்தை சாமி. சிதம்பரனார்,

“ஆதன் அவினி என்னும் மன்னன் வாழ்க, அவனுடைய பகைவர்கள் போரிலே அடிப்பட்டு வீழ்ந்து மாண்ட இடத்திலே புல் முளைத்துப் போகட்டும். நாட்டின் நன்மையைக் கருதிப் பார்ப்பார்கள் வேதங்களை ஓதுவார்களாக என்று விரும்பினான்”[73] என்று விளக்குகிறார்.

அதேபோல் ஓதலாந்தையார் அருமறை என்பதை,

**“சேட்புல முன்னிய அசைநடை அந்தணிர்**
**நும்மொன்று இரந்தனன் மொழிவல்: எம்மூர்.”**[74]

**“அறம்புரி அருமறை நவின்ற நாவின்**
**திறம்புரி கொள்கை அந்தணிர் தொழுவல் என்று.”**[75]

என கூறுகின்றார். அறத்தை உரைக்கும் அரிய மறைகளை ஓதிப் பயின்ற நாவையும் அது விதிக்கும் செயல்வகை அறிந்து ஆற்றும் ஒழுக்கத்தையும் உடைய அந்தணரே என்று செவிலித்தாய் அழைப்பதாய் இடம்பெற்றுள்ளது. ஐங்குறுநூற்றின் இடம் பெறும் 387ஆவது பாடலில் இடம்பெற்றுள்ள 'அறம் புரியருமறை' என்ற தொடருக்கு பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி பின்வரும் கருத்தை முன் மொழிகின்றார்.

"வேதங்கள் தர்மத்தைப் பற்றிக் கூறுகின்றன என ஓதலாந்தையார் ஐங்குறுநூற்றில் உணர்த்தின அறம் புரியருமறை"[76] என்று வேதத்தை ஓதலாந்தையார் அறிந்திருந்தார் என குறிப்பிடுகின்றார்.

அகச் செய்தியை பாட வந்த கபிலர் பிராம்மணனைப் பிரும்மசாரி குடுமி வைத்திருந்தான் என்பதனை,

> **"………………. நம்மூர்ப்**
> **பார்ப்பனக் குறுமப் போலத் தாமும்**
> **குடுமித் தலைய."[77]**

என்று கூறுகின்றார். இதிலிருந்து பார்ப்பனர்கள் எனும் வடநாட்டார்கள் தமிழகத்தில் குடுமிவைத்து வாழ்ந்து வந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. இதன்வாயிலாக பண்டை சேரநாட்டில் வேதம் ஓதப்பட்டதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.7.5 வேள்வி:

வேள்வி பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மறைமுகமாகவும் இடம்பெறுகின்றன. தலைவியின் சிறப்பைத் தலைவனுக்கு உணர்த்த, 'சிறந்த ஒளி பொருந்தியவள்' என கூறப்படுகிறது.

> **"பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின்**
> **ஆம்பல்அம் செறுவின் தேனூரன்ன**
> **இவள் நலம் புலம்பப் பிரிய**
> **அனை நலம் உடையளோ."[78]**

என இதில் வேள்வி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளதாக கே.சி. லட்சுமிநாரணன் குறிப்பிடுகின்றார்.

"பல்கதிர்த் தீ என்றால் பல கதிர்களைக் கொண்ட வேள்வித் தீ என்று அர்த்தம். சூரியனது ஒளியைப்போல ஒளியுடையது யாகத்தில் எழும் தீ என்று இங்கே வலியுறுத்தப்படுகிறது. யாக அக்னியின் பெரும் சிறப்பை இந்தப் பாடல் ஒருவாறு பேசுகிறது."[79] என்று விவரிப்பதிலிருந்து வேள்வித் தீயை உவமையாக புலவர் கையாண்டதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

### 2.7.6 இந்திரன்:

மருதநிலத் தலைவனாக அறியப்படுபவர் இந்திரன். ரிக் வேதத்தில் முதன்மையான கடவுளாக இந்திரன் இருக்கிறார். இவர் தேவர் தலைவனாவார் எனவும், வெள்ளை யானையின் மீது வருவார் எனவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரத்தில் இருபத்தொரு நாட்கள் இந்திரவிழா நடந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இப்படி பல நிலைகளில் விளங்கும் இந்திரனுக்கு விழா எடுத்தது குறித்து ஐங்குறுநூறு,

**"இந்திரவிழவில் பூவின் அன்ன."**[80]

என்கிறது. இந்திர விழாவில் வெவ்வேறு ஊரினின்று மலர்களைக் கொணர்ந்து பயனடைவதைப் போல் வெவ்வேறு ஊரினின்று மகளிரைக் கொணர்ந்து இன்பம் கொள்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து வேதம் குறிப்பிடும் வடபகுதியில் உள்ள மருதநிலப் பகுதியில் தமிழர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என கருத இடமுண்டு.

### 2.7.7 அருந்ததி:

பெண்களுக்குப் போதிக்கப்படும் கற்பெனும் காப்பின் வடமொழி உருவமாக அருந்ததி திகழ்கிறாள். படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய செயல்களுக்கு ஆண் தெய்வங்களை விரல் நீட்டும் சமூகத்தில் கற்பிற்கு மட்டும் பெண்ணை அடையாளப்படுத்தும் ஆரிய அரசியலை விளங்கிக் கொள்ள முடிகிறது. அங்ஙனம் பேயனார் பாடிய பாடலில் கற்பின் அடையாளமாக வடமொழிப் புராணங்கள் சுட்டிக்காட்டும் அருந்ததி பற்றிய குறிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

**"இருண்டு தோன்றும் விசும்பின் உயர்நிலை**
**உலகத்து அருந்ததி அனைய கற்பின்."**[81]

என்று, 'இருண்டு தோன்றுகின்ற வானத்தில் உயர்ந்த நிலையை உடைய தேவர் உலகில் விளங்குகின்ற அருந்ததியைப்போன்ற கற்பினை உடையவளாகுக' என வாழ்த்துகிறாள் தோழி.

ஐங்குறுநூற்றில் வடசொற்களும் வேதம் ஓதியது தொடர்பான குறிப்புகளும் அந்தணர்கள் குடுமி வைத்து வாழ்ந்த கருத்தும் இந்திரனுக்கு விழா எடுத்த குறிப்புகளும் கற்பின் அடையாளமாக விளங்கும் வடமொழி புராணங்கள் போற்றும் அருந்ததி போல் வாழவேண்டுமென பெண்ணை வாழ்த்தும் கருத்துகள் போன்ற வடமொழிக் கூறுகள் ஐங்குறுநூற்றில் மிகுதியாக காணப்படுகின்றன.

## 2.8 கலித்தொகையில் வடமொழிக் கூறுகள்:

எட்டுத் தொகை நூல்களில் கலிப்பாவால் அமைந்த நூல் கலித்தொகையாகும். இந்நூலில் ஐந்து பிரிவுகள் காணப்படுகின்றன. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்பவை அவை. அதனை முறையே கபிலர் (29) சோழன்நல்லுருத்திரன் (17), மருதன் இளநாகனான் (35), நல்லந்துவனார் (33), சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ (35) ஆகியோர் இயற்றினார்கள். கடவுள் வாழ்த்தோடு மொத்தம் நூற்றைம்பது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலினை முதன் முதலில் சி.வை. தாமோதரம்பிள்ளை 1887-ல் பதிப்பித்தார். அதன்பின்னர் இ.வை. அனந்தராமையர் (1925), தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1938), மர்ரே ராஜம் (1957) போன்றோர்களும் பதிப்பித்தனர். இந்நூல் கி.பி.500-600-களில் தொகுப்பட்டிருப்பது போலத் தெரிவதாக ராஜ்கௌமன்,

“சோ.ந.கந்தசாமியும், பொ.வே.பெருமழைப்புலவர் சோமசுத்தரனும் ஐயுறுவதை நோக்கும்போது கலித்தொகையிலுள்ள கலிப்பாக்களும், பரிபாடல் தொகையில் உள்ள பரிபாடல்களும் தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய பாடல்களின் தொகுப்புகளாகத் தெரியவருகின்றன. தேவாரப் பாடல்களைப் போலப் பரிபாடலும் பாடகர்களால் பாடப்பட்டு வந்தன என கருத இடமுள்ளது என்று மர்ரே ராஜம் பதிப்பின் பதிப்புக்குழுவினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் கலித்தொகையும் பரிபாடலும் ஏறத்தாழ கி.பி.500-600ஆண்டுகளில் தோன்றித் தொகுக்கபட்டவை போலத் தெரிகின்றது”[82] என குறிப்பிடுகின்றார். கலித்தொகையை 1938-ல் பதிப்பித்த சைவ சித்தார்ந்த நூற்பதிப்புக் கழகம் பாடியோர் வரலாற்றினை இடம்பெறச் செய்துள்ளது. அதன்கண் நல்லந்துவனார் குறித்து குறிப்பிடுகையில்,

“நெய்தணிலப் பழக்க வழக்கங்கள் பலவற்றையும், வைதீக ஒழுக்கங்கள் சிலவற்றையும் இவர்தம் நெய்தற்கலியையும் நன்கெடுத்து விளக்கியுள்ளார். உலக மாந்தர்க்கு நன்னெறி காட்டும் அறிவுரைகள் இவர் பாடிய கலியுள் மலிந்து காணப்படுகின்றமை இவர்தம் ஒழுக்க சிறப்பையும் கல்வியின் மேன்மையையும் புலப்படுவதாகும்”[83] என்று விளக்குவதிலிருந்து இப்புலவர்தம் பாடல்களில் வடமொழிக் கூறுகளில் ஒன்றாகிய வைதீக ஒழுக்கங்கள் இடம்பெற்றுள்ளதை காண முடிகின்றது. இதனைப்போல தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் எழுதிய டாக்டர் கே.கே. பிள்ளை அவர்கள் குறிப்பிடும் கலித்தொகைக் குறித்த கருத்தாவது,

“சங்க இலக்கியங்கள் அனைத்தும் களவியலுக்கு உடன்பாடான ஒத்த காமத்தை அடிப்படையாக்க கொண்டவை. கைக்கிளை, பெருந்திணை என்னும் ஒவ்வாக் காமத்தைப் பற்றிய பாடல்களை அவற்றுள் காண முடியாது. ஆனால், குறிஞ்சிக்கலியில் பொரும்பாலான பாடல்கள்

கைக்கிளையையும் பெருந்திணையையும் பற்றியனவாகவே காணப்படுகின்றன. ‘மையின் மதியின் விளங்கு முகத்தாரை வவ்விக்கொளலும் அறன் எனக் கண்டன்று’ என்று குறிஞ்சிக் கலிப்பாடல் (கலித்.62) ஒன்று கூறுகின்றது. மகளிரைக் கவர்ந்து சென்று மணத்தலை வடமொழியாளர் இராக்கத மணம் என்பர். தொல்காப்பியர் பெருந்திணையாவது ஒவ்வாத காமம் என்று கூறினாரேயன்றி மகளிரை வெளவிச் செல்லும் இராக்கத மணமுறைக்கு விதி ஏதும் வகுத்திலர். ‘இராக்கத மணம் அறன்’ என்று தொல்காப்பியரோ, சங்ககாலம் புலவர்களோ எங்கும் எடுத்துக் கூறினார்கள். ஆரியர்பால் வழங்கிய எண்வகை மணங்களுள் இராக்கத மணமும் காலத்து வழங்காத ஒரு பழக்கத்தைப் பாராட்டிப் பழந்தமிழ்ப் புலவர்கள் செய்யுள் இயற்றினர். எனவே, ‘இராக்கத மணம் அறன்’ என்னும் செய்யுள்களும் இதைப் போன்ற ஏனைய கலிப்பாக்களும் கடைச் சங்க காலத்துக் பிற்பட்டவை எனக்கொளல் வேண்டும். மற்றும் ‘தெருவின்கண் காரணமின்றிக் கலங்குவார்க் கண்டு நீ வாரணவாசிப் பதம் பெயர்த்தல் ஏதில’ என்றும் கூற்று ஒன்று குறிஞ்சிக் கலியில் (கலித்.60) காணப்படுகின்றது. வாரணவாசி என்னும் சொல் சங்க நூல்கள் ஒன்றிலேனும் வழங்கப்படாத தொன்றாகும்”[84] என்று கலித்தொகையில் இடம்பெற்றுள்ள வடமொழிக்கூறுகளைக் குறிப்பிட்டுள்ளார். அங்ஙனம் உருவாக்கப்பட்ட கலித்தொகையானது ஒருவரால் எழுதப்பட்டது என்ற கருத்தும் உள்ளது. இதனை முதல் பதிப்பாசிரியரான சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களும் கே.என். சிவராசப்பிள்ளையவர்களும் கருதியுள்ளனர்.

### 2.8.1 கலித்தொகையில் இடம் பெற்றுள்ள வடசொற்கள்:

எட்டுத்தொகை நூல்களில் காலத்தில் பிந்தைய கலித்தொகையில் வடசொற்கள் இடம் பெற்றுள்ளன. இவை குறிப்பிடத் தகுந்த அளவில் இல்லை எனினும் அக்காலச் சூழலை அறிய பெரிதும் துணை புரிகின்றது. அங்ஙனம், புலவர் த.கோவந்தன்,

“சிகரம்-பாத்திரம் (51), காரணம் (60), தம்பலம் (65), பிசாகர் (65), குணங்கள் (71), உயந்தம் - ஒரு வகை அணி (79), ஆரம் - மாலை (79), நூபுரம் - சிலம்பு (83), வச்சிரம் (105), நேமி (105), சாமன், காமன் (94), மேகரை (96), உத்தி (97), விச்சை – வித்தை (148) என்பவை குறிக்கத்தக்கவை.”[85] என்று கலித்தொகையில் இடம்பெற்றுள்ள வடமொழிச் சொற்களைக் குறிப்பிடுகின்றார். இவரைப் போலவே டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களும் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள வடசொற்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“ஐங்குறுநூறு முதலிய அகப்பொருள் நூல்களில் வடசொற்கள் மிகக் குறைந்து காணப்படுகின்றன. கலித்தொகைப் பாக்களில் அவற்றைவிடச் சில சொற்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. இந்நூற்பாக்களில் வடநூற் கதைகளும் பிறவும் மிகுதியாக இடம் பெற்றிருத்தல் முன்பே குறிக்கப்பட்டதன்றோ? கடவுள் வாழ்த்து (3) நீங்கிய இந்நூற்பாக்களில்

காணப்படும் வடசொற்களுள் சிகரம் - பாத்திரம் (51), காரணம் (60), தம்பலம் (65), பிசாசர் (65), குணங்கள் (71), உயந்தம் - ஒருவகை அணி (79), ஆரம் - மாலை (79), நூபுரம் - சிலம்பு (83), வச்சிரம் (105), நேமி (105), சாமன், சாமன் (94), மேகலை (96), உத்தி (97), விச்சை – சித்தை (148) என்பகைவ் குறிக்கத்தக்கவை. காலம் செல்லச் செல்லத் தமிழர் வாழ்வில் வடசொற்களும் வடநூற் செய்திகளும் பிறவும் எங்ஙனம் படிப்படியாக மிகுந்துவந்துள்ளன என்பதை இக்கலித்தொகைச் செய்திகள் நன்கு புலப்படுத்துதல் காண்க"[86] என்று கூறுகின்றார். ராஜ்கௌதமன் அவர்களும் மேலும் ஒரு சொல்லை எடுத்துக்கூறி, அது பயின்று வருகின்ற வேறு சில இடங்களையும் குறிப்பிடுகின்றார்.

"7-வது பாடலில் 'உசாவுசோஜய சிறிது' என்ற தொடரில் உசாவுதல் என்ற வடசொல் இடம் பெற்றுள்ளது. போருக்குப் போகும் முன் ஆண் மகன் கையில் அணியும் சச்சு அல்லது கைச்சட்டை 'சாழசம்' என்ற வடசொல்லால் குறிக்கப்படுகின்றது. உசாவுதல், உசாசம் என்ற சொற்கள் தொல்காப்பியத்திலும் கலித்தொகையிலும் அதிக அளவில்"[87] காணப்படுவதாகக் கூறுகின்றார். ஏனைய சங்க நூற்களைக் காட்டிலும் கலித்தொகையில் வட எழுத்துக்கள் சில இடம்பெற்றிருப்பதை காணும் போது வட எழுத்துக்கள் தமிழோடு கலந்து நின்றமையை அறிந்துகொள்ள முடிகிறது. இதன் வாயிலாக கலித்தொகையில் வடமொழிச்சொல் பயன்பாட்டை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.8.2 புராண இதிகாசக் கூறுகள்:

கலித்தொகையும் பரிபாடலும் எட்டுத்தொகை நூற்களில் காலத்தால் பிந்தியது. எனவே அதில் ஏனைய குறுந்தொகை, அகநானூறு போன்ற நூல்களைக் காட்டிலும் புராண இதிகாச கருத்துக்கள் சற்று கூடுதலாக இடம் பெற்றுள்ளன. கலித்தொகையின் கடவுள் வாழ்த்துப்பாடல் சைவ சமயம் சார்ந்ததாக அமைந்துள்ளது. இதில் சிவபெருமான் அந்தணர்க்கு வேதத்தை அருளியது, கங்கையை அடக்கி தலையில் வைத்தது. முப்புரங்களை எரித்தது, நீல நிறம் உடை கழுத்தினை கொண்டிருப்பது, கொட்டி, பாண்டரங்கன், திரு ஆகிய கூத்துக்களை ஆடியது, புலியைக் கொன்று தோலினை உடுத்திக்கொண்டது ஆகிய புராணக்கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

**"ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து**
**தேறுநீர் சடைக் கரந்து, திரிபுரம் தீ மடுத்து**
**கூறாமல் குறித்ததன் மேல் செல்லும் கடுங் கூளி"[88]**

என்பது கலித்தொகை. இங்கு அருமறை என்பதனை நிருத்தம், வியாகரனம், கற்பங்கள், கணிதம் என்று வடமொழியின் வகைகளைக் கூறி, அதற்கு 'நிருத்தம்' – என்பதற்கு உலகில்

சொல்லை ஒழித்து வைதீகச் சொல்லை ஆராய்வது எனவும், ‘வியாசரனம்’ என்பதற்கு – உலகியல் சொல்லையும் வைதீகச் சொல்லையும் ஆராயும் ஐந்திரம் முதலியவை எனவும், ‘கற்பங்கள்’ என்பதற்கு – பாரத்துவாசம், பரமார்க்கம் பரமாத்திரையும் முதலியவை எனவும், ‘கணிதம்’ என்பதற்கு நாரணீயம், வராசம் என்றும் விளக்கத்தினைப் புலவர் அ.மாணிக்கம் தமது உரையின்கண் குறிப்பிடுகின்றார். இவரைப்போலவே டாக்டர் மா.இராசமாணிக்கனார் குறிப்பிடும் கருத்துக்களும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

“சிவபெருமான் முப்புரம் எரித்தது (1,150), துரியோதனன் அரக்கு மாளிகையில் கொல்ல முயன்றமை (25), முருகன்-சூரபதுமன் போர் (27), இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தது (38), வீமன் துரியோதனனைத் துடையில் அடித்தது (52), கண்ணன் கம்சனால் ஏவப்பட்ட மல்லரை அழித்தது (52, 134), வீமன் துச்சாதனன் நெஞ்சைப் பிளந்தது (101), சிவன் எமனை உதைத்தமை(101), அசுவத்தாமன் தன் தந்தையைக் கொன்ற சிகண்டியைக் கொன்றமை (101), கம்சனால் ஏவப்பட்ட உருவத்தில் வந்த அசுரனைக் கொன்றமை (103), கண்ணன் தன் ஆழியான் மறைத்த சூரியனை மீட்டமை (104), கண்ணன் சூரியனுக்கு மகன் (108), ஊர்வசி திலோத்தமை பற்றிய செய்தி (109) யயாதி அரசன் கதை (139), சிவன் தன் சடையில் கங்கையை மறைத்தமை (150). இவற்றுள் சிவன் முப்புரம் எரித்தமையும், முருகன் சூரபதுமனை அழித்தமையும் பிறநூல்களில் இடம் பெற்றுள்ளன. ஏனையவை முதன் முதலாக இந்நூலில்தாம் கூறப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கதாகும். இவை அனைத்தும் இந்நூலிற்கே உரிய புதுமைகளாகும்”[89] என்று மிக விரிவாக எடுத்துரைக்கின்றார். இத்தனை கருத்துக்களும் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன. இராசமாணிக்கனார் குறிப்பிடும் கருத்துக்கள் அனைத்தும் உவமையாகவே கூறப்பட்டுள்ளன. அங்ஙனம் வரும் ஓர் உவமை குறித்து எஸ்.வையாபுரிப்பிள்ளை,

> **“கலித்தொகையில்,**
> **இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்**
> **உவமையர்ந் துயர்மலை யிருந்தன னாக**
> **நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்**
> **கோடு புய்க்கல்லா துழக்கும் நாடகேள்**

என குறிப்பிடுகின்றார். இங்கே வேங்கை மரத்தின் அடிமூலத்தை மதயானை தன் கொம்புகளால் குத்திப் பெயர்க்க முயன்றதில், அதன் கொம்பு ஆழத்தில் பாய்ந்து மீண்டும் அதனால் எடுக்க முடியாத துன்பநிலைக்கு, இராவணன் இமய மலையை அடியோடு பெயர்த்தெடுக்க எண்ணி, அம்மலை கீழாகப் புகவிட்ட கரங்களை மீண்டும் எடுக்க முயன்று வருந்தி நிற்கும் நிலை ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.”[90] என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு பாடலின் முதல் மற்றும் இறுதியில்தான் இத்தகைய உவமைகள் இடம் பெறுகின்றன. புராணக் கூற்றைப் பொறுத்த

அளவில், பாரதக் கதையும், சிவன் திரிபுரம் எரித்த கதையும் பெரிதும் இடம் பெறுகின்றன. அங்ஙனம் கலித்தொகையின்,

**"வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற**
**முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்**
**…………………….**
**குழுவொடு புணர்ந்து போம், குன்று அழல் வெஞ்சுரம்"[91]**

**"முறம் செவி மறைப் பாய்பு முரண் செய்த புலி செற்று**
**முறம் தலைக்கொண்ட நூற்றுவர் தலைவனைக்**
**……………..**
**கல் உயர் நனஞ் சாரல், கலந்து இயலும் நாட கேள்"[92]**

**"நோக்கு அஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்தி**
**கோட்டிடைக் கொண்டு, குலைப்பதன் தோற்றம்காண்**
**……………**
**வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்"[93]**

ஆகிய பாடல்களில் வடமொழி புராணக்கூறுகள் இடம்பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக மகாபாரத கருத்துகள் மிகுதியும் இடம்பெற்றுள்ளன. துரோபதையினது தூய்மையான கூந்தலில் கையை நீட்டிய துச்சாதனின் நெஞ்சைப் பிளந்து, தான் சொன்ன வஞ்சினத்தை முடித்த வீமனைப்போல் விளங்குகிறது. மேலும் அருந்ததி பற்றிக் குறிப்பும் இடம் பெறுகின்றது.

### 2.8.3 சிவன் பற்றியக் கூறுகள்:

கலித்தொகையில் பல புதிய கருத்துக்கள் ஏனைய சங்க நூற்களில் காணமுடியாதவைகள் இடம்பெற்றுள்ளன. சிவன் பற்றியக் கூறுகள் ஆங்காங்கே தென்பட்டாலும் இங்கு முழுமையாகக் கிடைக்கின்றது. கிடைக்கும் பாடல்களிலும் உவமையாகவே இக்கூறுகள் இடம் பெறுகின்றன. கலித்தொகையின் இரண்டாவது பாடலில் பாலை நிலத்தின் வெம்மையைக் குறிப்பிட்ட வந்த பெருங்கடுங்கோ, அவுணர்களை தேவர்களெல்லாம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க அழிக்க முற்படும்போது, அவரது முகம் தீயாக மாறியது அதனைப் போன்று பாலை நிலம் உள்ளது, என்பதனை,

**"தொடங்கற்கண் தோன்றிய முதியவள் முலாக**
**அடங்காதார் மிடல் சாய, அமரர் வந்து இரத்தலின்**
**மடங்கல் போல், சினைஇ, மாயம் செய் அவுணரைக்**
**கடந்து அடு முன்பொடு, முக்கண்ணனான் மூஎயிலும்**
**உடன்றக்கால், முகம்போல் ஒண் கதிர் தெறுதலின்"[94]**

என்று குறிப்பிடுகின்றார் இதுபோல கலித்தொகை பாடல்களில் சிவன் பற்றிய குறியீடுகள் காணப்படுகின்றன.

**“மாறு எதிர் கொண்ட தம் மைத்துடன் நிறுமார்**
**சீறு அரு முன்பினோன் கணிச்சி போல் கோடுசீஇ”[95]**

**“கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல்”[96]**

**பெரும் பெயர்க் கணிச்சியோன் மணி மிடற்று அணிபோல**
**இரும்பிணர் எருத்தின் ஏந்து இமில் குராலும்”[97]**

**“பிறங்கு நீர் சடைக் கரந்தான் அணி அன்ன நின் நிறம்**
**பசந்து நீ இனையையாய் நீத்தலும் நீப்பவோ”[98]**

ஆகிய பாடல்களில் ஏறக்குறைய நான்குப் புலவர்களுமே சிவன் பற்றிய குறியீடுகளைக் கூறிச் செல்கின்றனர். அனைத்து நிலங்களிலும் சிவ வழிபாடு இருந்ததனை இது காட்டுகின்றது என்றால் அது மிகை ஆகாது.

சான்றாக,

**“இமைய வில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்”[99]**

**“ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்”[100]**

**“மருப்புப் பூண் கையுறையாக அணிந்து”[101]**

**“ஆல் அமர் செல்வன் அணிசால் மகன் விழாக்**
**கால்கோள் என்று ஊக்கி”[102]**

**“ஐயம் தீர்த்து யின்கண்ணும் அருந்தது முதல்வன்போல்”[103]**

என்று வரும் இவ்விடங்களில் எல்லாம் சிவன் என்றே உரையாசிரியர் அ.மாணிக்கம் கூறுகின்றார். இங்கு வரும் சிவன் குறித்து கருத்துக்களுக்கு கே.சி.லட்சுமிநாராயணன்,

“கலித்தொகையின் கடவுள் வாழ்த்து, ‘ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து தேறுநீர் சடைக் கரந்து’, என்று தொடங்குகிறது. அந்தணர்கள் ஆறு அக்கங்களையும் அறிந்தவர்கள் என்றும், இறைவன் அந்தணர்களுக்கு அரிய வேதங்களை அருளியவர் என்றும் இந்த வரிகள் கூறுகின்றன தெளிந்த நீர் நிரம்பிய கங்கை நதியின் வேகத்தை அடக்க, அதனைச் சிவபெருமான் தனது சடையின் ஒரு பகுதியில் அடக்கிக் கொண்டார் என்றும் இந்த வரிகள் தெரிவிக்கின்றன. “ஆறு அறி அந்தணர்” என்ற சொற்றொடருக்கு வேதங்களின் ஆறு அங்கங்களாக சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், கல்பம் ஆகியவற்றை அறிந்தவர்கள் அந்தணர்கள் என்று பொருள்”[104] என்று கூறுகின்றார். சிவன் குறித்த பாடல்கள் இடம்பெற்ற விதம் குறித்து ராஜ்கௌதமன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“கடவுள் வாழ்த்திலும், அடுத்துப் பாலைக்கலியின் முதல் பாட்டிலும், கடைசியில் நூற்றைம்பதாவது பாட்டிலும், இதே சிவபிரானின் மூன்று எயில் எரித்த வீரட்டானமும், கங்கையின்

வேகத்தைத் தன் உடையில் தாங்கி மறைத்த புராணமும், அவனது காளை வாகனமும், திங்களைச் சடையில் கண்ணியாகச் சூடிய பௌராணிகத் தோற்றமும், 'ஆதிரையான்' என்ற நாமமும் விதந்து ஓதப்படுவதைப் பார்க்கும்போது, கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவன் தொடக்கமும் முடிவும் காப்புச்செய்யுள் போலச் சிவபுராணக் கதைகளை அடை கொடுத்த திட்டத்தோடு செயல்பட்டமை புரியும்"[105] என்று கூறுவதிலிருந்து திட்டமிட்ட சைவ சமய பதிவாக கலித்தொகையை உருவாக்கியுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

### 2.8.4 கலித்தொகையில் திருமால் கூறுகள்:

திருமால் குறித்தக் கூறுகள் நெய்தல் கலியில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. முல்லைக் கலியில் ஒரே ஒரு பாடலில் மட்டும் இடம் பெற்றுள்ளது. அங்கும் சிவன் வருகிறார். ஆனால் நெய்தற்கலியில் நல்லந்துவனார் பல பாடல்களில் திருமாலை எடுத்துக்காட்டுகின்றார். கலித்தொகையில் இடம்பெற்றுள்ள திருமால் குறித்த பாடல்களாவன 105, 119, 123, 134, 140, 145 ஆகும். இப்பாடல்களிலும் உவமையாகவும், வழிபாட்டுத் தெய்வமாகவும் திருமால் வருகின்றார். சான்றாக,

**"வள் உருள் நேமியான் வாய் வைத்த வளை போலத்**
**தெள்ளிதின் விளங்கும் சுரி நெற்றிக் காரியும்".[106]**

**"அகன் ஞாலம் விளங்கும் தன் பல் கதிர் வாயால்**
**பகல் நூங்கியது போலப் படு கூடர் டல்கோ**
**இகல் மிகு நேடியான் நிறம் போல இருள் இவர்" [107]**

**"அரும் பொருள் மரபின் மால் யாழ் கேளாக் கிடந்தான் போல்" [108]**

**ஞாலம் மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்"[109]**

**"மல்லரை மறம் சாய்த்த மலர்த் தண்தார் அசலத்தோன்**
**ஒல்லாதார் உடன்று ஓட, வருத்து உடன் எரிதலின்"[110]**

**"நெடியோன் மகன் நயந்து தந்து ஆங்கு அனைய"[111]**

**"மாயவன் மார்பில் திருப்போல் அவள் சேர"[112]**

என்று இதுபோன்ற பாடல்களில் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு ஆ.தட்சிணாமூர்த்தி அவர்களின் கருத்தும் ஒப்பு நோக்கத்தக்கது.

"சிவனும், திருமாலும் அன்று வணங்கப்பட்டு வந்ததும், சைவம், வைணவம் என்னும் சமயங்கள் அன்று உருவாகவில்லை. ஆனால் இவை உருவாவதற்கு அடிப்படையான கோட்பாடுகள் அன்று தோன்றியிருந்தன. பண்டைத் தமிழருக்கே உரிய நடுகல் வழிபாடும், வெறியாட்டும் செல்வாக்குச் செலுத்தின. அத்தோடு ஆரிய நாகரிக கலப்பினால் வேத வேள்வியும்

இடம் பெற்றிருந்தது. நகர்ப் புறங்களில் இருந்த மேன்மக்களிடமே ஆரிய சமயமும் அதன் சடங்குகளும் வேரூன்றினவேயன்றி, நாட்டுப்புறத்து மக்களிடம் அவை செல்வாக்குச் செலுத்திடவில்லை. சிவன், திருமால், முருகன், பலராமன், கொற்றவை, திருமகள் போன்ற தெய்வங்கள் அன்று அறிமுகமாயிருந்தன. சமணமும் பௌத்தமும் அன்று பரவியிருந்தன. வைதீகங்கள் அச்சமயங்களை எதிர்த்துள்ளன எனினும் சமயப் போராட்டங்கள் உருவாகவில்லை என்று கருத வேண்டியுள்ளது"[113] என்று கூறுவதிலிருந்து, அக்கால வழக்கத்தில் திருமால் மற்றும் சிவன் போன்ற தெய்வங்கள் தமிழகத்திற்கு வெளிப்பகுதியிலிருந்து வந்த கடவுள்கள் என்பது தெளிவாகின்றது.

### 2.8.5 நான்முகன்:

சிவன், திருமால் குறித்த கருத்துக்கள் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கும் நிலையில் பிரம்மன் குறித்த பதிவுகள் இரண்டுப் பாடல்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் பிரம்மன் என்று கருத்துநிலை உருவாகாத காலம் அது. ஆனால் இங்கு இடம்பெற்றுள்ளது. காரணம் இதன் காலச்சூழல் பொறுத்ததே ஆகும். அவை 2 மற்றும் 106ஆம் பாடல்களில் இடம்பெறுகின்றன. நான்முகன் என்னும் பிரம்மன் படைக்கும் தொழிலை தனியாக மேற்கொள்கையில் இங்கு கூட்டிக்காட்டப் பெறுகின்றார்.

**“தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக**
**அங்காதார் மிடல் சாய, அமரர் வந்து இத்தலின்”**[114]

**“இரு திறனா நீக்கும் பொதுவர்**
**உருகெரு மாநிலம் இயற்றுவான்”**[115]

என்ற இருப்பாடல்கள் வரும் ‘முதியவன்’ ‘இயற்றுவான்’ ஆகிய சொற்களுக்கு நான்முகன் என்ற பொருள் கொள்கின்றார் உரையாசிரியர் அ.மாணிக்கம். மெய்யப்பன் தமிழ் அகராதியும் ‘பிரமன்’ என்கின்ற பொருளைத் தருகின்றது. எனவே வடமொழி புராணங்கள் குறிப்பிடும் படைப்புக் கடவுளான பிரம்மன் வழிபாடும் கலித்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.8.6 அந்தணர் பற்றியக் கூறுகளும் வேள்வியும்:

கலித்தொகைக் குறிப்பிடும் அந்தணர்கள் வேள்வி இயற்றுகின்ற முக்கோலினை கையில் வைத்திருக்கும் அந்தணர்களாக உள்ளனர். அந்தணர் பற்றிய குறிப்புகள் கலித்தொகையில்: 9, 11, 69, 119, 126, ஆகியப் பாடல்களில் இடம்பெறுகின்றன. வேள்விப் பற்றி கலித்தொகை, 69, 130ம் பாடல்’கள் தெரிவிக்கின்றன. அங்ஙனம் கீழ்க்காணும் பாடலில் அந்தணர் இயல்பை,

**“எரித்தளு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்**
**உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்**
**நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத் நீ**
**குறிப்பு வெல் செயல் மாலைக் கொளை நடை அந்தணர்”[116]**

என்று பெண்ணொருத்தி தன் மகளைத் தேடிச் செல்லும்போது, அந்தணர்கள் முக்கோல் வைத்திருந்தனர். அரி, அயன், அரன் என்று மூன்று கடவுளர்களையும் ஒன்றாக வழிபடக்கூடியவர், செயல் குடை வைத்திருப்பவர் என்று அவர்தம் இயல்பை குறிப்பிடுகின்றது இப்பாடல். இது வேதப் பிராமணர்கள் வைத்திருக்கும் அதே பொருட்களே ஆகும். அந்தணர் என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் தரும் பொருளை,

“அந்தணர் என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர், அந்தந்த அணவுபவர், அதாவது வேதங்கள் முறையே – வேதாந்தத்தையே – உண்மையான பொருள் என்று மேற்கொண்டு ஒழுகுபவர்.”[117] என்று கே.சி.லட்சுமி நாராயணன் குறிப்பிடுகின்றார். அங்ஙனம் அந்தணர்கள் குறித்து பின்வரும் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

**“அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்”[118]**

**“ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்”[119]**

**“அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து”[120]**

**“முக்கோல் கொள் அந்தணர் முதுமொழி”[121]**

இதேபோல ஒரு பாடலில் தலைவி ஒருத்தி, தலைவனை நினைத்து ஏக்கப் பெருமூச்சு விடுவது அந்தணர்கள் இயற்றும் வேள்வித் தீ போல பெருமூச்சு விடுகின்றது என்று குறிப்பிடுகின்றாள்.

**“நீள்இடைப் படுதலும் ஒல்லும்; யாழ நின்**
**வாள் இடைப்படுத்த உயங்கு ஈர் ஓதி!**
**நாள் அணி சிதைதலும் உண்டு என நயவந்து**
**கேள்வி அந்தணர் கடவும்**
**வேள்வி ஆவியின் உயிர்க்கும், என்நெஞ்சே”[122]**

என்று குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. இதன்மூலம் வேள்வி இயற்றும் அந்தணர்கள் சங்ககாலத்தில் நன்கு உயர்ந்த நிலையில் வாழ்ந்ததை அறிய முடிகின்றது.

### 2.8.7 பலதேவன்:

பலதேவன் வழிபாடு தமிழகத்தில் தற்போது எங்கும் காண முடிவதில்லை. ஆனால் கலித்தொகையில் பாடல் எண் 26, 36, 104, 105, 124 ஆகியப் பாடல்களில் இக்கருத்து காணப்படுகிறது. பலதேவன் கையில் ஏறுடன் இருப்பதாக கூறப்படுகின்றது. இப்பலதேவன் கதாபாத்திரம் இதிகாசங்களில், குறிப்பாக மகாபாரதத்தில் கிருஷ்ணனுக்கு அண்ணனாக

அமைக்கப்பட்டுள்ளது. கலித்தொகையின் பாடல் ஒன்றில் பலராமன் வெண்மை நிறம் எனவும், அவர் நிறத்தை மரம் ஒன்றிற்கு உவமையாகவும் கூறப்பட்டுள்ளது

**"ஒரு குழை ஒருவன்போல், இணர் சேர்ந்த மராஅமும்"[123]**

**"கொடு மிடல் நாஞ்சிலான் தார் போல், மராத்து"[124]**

**"வான் உற ஓங்கிய வயங்கு ஒளிர் பனைக்கொடிப்
பால் நிற வண்ணன் போல் பழி தீர்ந்த வெள்ளையும்"[125]**

**"வள் உருள் நேமியான் வாய் வைத்த வளை போலத்
தெள்ளிதின் விளங்கும் கரி நெற்றிக் காரியும்
ஒருகுழையவன் மார்பில் ஒண்தார் போல் ஒளி மிகப்"[126]**

**"ஞாலம் மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பால் அன்ன மேனியான் அணி பெறத் தைஇய"[127]**

என குறிப்பிட்டுள்ளது. இங்கு உவமையாக பலதேவன் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பலதேவனைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. எனவே தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட வழக்கமாக பலதேவன் இருந்திருக்க வேண்டும். கையில் ஏருடன் பலதேவன் உள்ளதால் இவர் திராவிட தெய்வமாக குறிப்பாக வேளாண் தெய்வமாக இருந்திருக்க வேண்டும். காரணம் ஆரியர்களுக்கும் வேளாண் தொழிலுக்கும் தொடர்பு இல்லை.

### 2.8.8 காமன்:

மனதை மனதுக்குள் இருக்கின்ற பாசவுணர்வை ஓர் உருவமாக பாவித்து அதனை ஆண் என்றும், பெண் என்றும் இரண்டாகப் பகுந்து அவர்களுக்குள் காதல், திருமணம், அவர்கள் தாய் தந்தை என்ற உறவுகளைச் சேர்த்து கூறியிருப்பது பண்டைய மனிதனின் மிகப்பெரிய கற்பனைத் திறன் ஆகும். எனினும் இத்தகைய 'காமன்' என்ற பெயர் வடமொழிப் புராணங்களில் சிவனின் மருமகனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. காமன் பண்டிகை என்ற விழா மாசி மாதங்களில் இன்றளவும் நமது கிராமங்களில் நடைபெற்று வருகின்றது. கலித்தொகைகளில் 26, 84, 92, 109, 139, 140, 147 ஆகிய பாடல்களில் காமனது பெயர் இடம்பெற்றுள்ளன.

**"மீன் ஏற்றுக் கொடியோன் போல் மிஞிறு ஆர்க்கும் காஞ்சியும்"[128]**

**"ஆனா விருப்போடு அணி அயர்ப காமற்கு
வேனில் விருந்து எதிர்கொண்டு"[129]**

**"உடை வனப்பு எல்லாம் இவட்கு ஈத்தார்கொல்லோ
படை இடுவான்மன் கண்டீர் காமன் மடை அடும்
பாலொடு கோட்டம் புகின்"[130]**

**"மாண் இழை மாதராள் ஏஎர் என காமனது**

**ஆணையால் வந்த படை**
**காமக் கடும் பகையின் தோன்றினேற்கு ஏமம்"[131]**

**"நெடியோன் மகன் நயந்து தந்து ஆங்கு அனைய"[132]**

**"சுறாஅக் கொடியான் கொடுமையை நீயும்**
**ஊறாஅ அரைச நின் ஓலைக்கண் கொண்டீ**
**................**
**அன்னவோ காம நின் அம்பு"[133]**

என கலித்தொகைப் பாடல்கள் காமன் பற்றி குறிப்பிடுவதிலிருந்து பண்டையத் தமிழகத்தில் காமன் வழிபாடு புழக்கத்தில் இருந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது. தற்போது நடைபெறும் விழாவானது வேளாண் குடிகளிடம் மட்டுமே காணப்படுகின்றது. மாசி மாதத்தின் ஒரு முச்சந்தி அல்லது நாற்சந்தியில் ஒரு மேடை அமைத்து கரும்பு, ஆமணக்கு மரம், தர்ப்பை புல் இவைகளை ஒன்றாக இணைத்து வைக்கோல் பிரியால் நன்கு கட்டி அதன் மீது நவதானியங்களைக் கட்டி மேடையில் புதைத்து வைப்பர். செவ்வரளி குச்சியால் வில்லம்பு செய்து ரதி மற்றும் காமனாக இரண்டு சிறுவர்களுக்கு வேடமிட்டு ஆட வைத்து சில நாட்கள் கழித்து கரும்பு உள்ளிட்ட தொகுப்பை எரித்துவிடுவர். இந்நடைமுறை இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

### 2.8.9 ஆரிய முருகன்:

சங்க இலக்கியம் குறிப்பிடும் முருகன் இருவர். ஒருவர் குறிஞ்சி நிலத்தலைவன். மற்றொருவர் ஆரிய முருகனாக சிவனின் மகனாக கார்த்திகேயனாக வீரதீர செயல்கள் புரிபவராக வடமொழி புராணங்கள் குறிப்பிடுகின்றன. கலித்தொகையில் இரண்டு பாடல்களில் ஆரிய முருகன் குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

**"ஆல் அமர் செல்வன் அணிசால் மகன் விழாக்**
**கால்கோள் என்று ஊக்கி கதுமென நோக்கி"[134]**

**"சூர் கொன்ற செவ்வேலாற் பாடி பல நாளும்**
**ஆராக் கனை காமம் குன்றத்து நின்னொடு"[135]**

என்கின்றன கலித்தொகை பாடல்கள். குறிஞ்சி நிலக்கடவுளான முருகன் ஆரிய கார்த்திகேயனாக மாற்றப்பட்டு அசுரர்களை அழிக்கும் வல்லமை கொண்ட சிவன் மகனாக காட்டப்பட்டுள்ளார். இங்கு சூரபன்மாவை அழித்த புராணக் கருத்து உவமையாக இடம்பெற்றுள்ளது.

### 2.8.10 இமயம்:

வடநாட்டின் இமயம் குறித்த பதிவு ஒன்று கலித்தொகையில் காணமுடிகின்றது.

"இடன்விட்டு இயங்கா இமயத்து ஒருபால்"[136]

தமிழ்ப்பண்பாட்டின் தை நீராட்டு 59ஆம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் வேறு எங்கும் சொல்லப்படாத கருத்து ஒன்று கலித்தொகையில் இடம் பெறுகிறது. பெண் எருமை மாட்டின் கொம்பினை வழிபடும் வழக்கம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண் காமத்திற்காக ஏங்குபவளாக கலித்தொகையின் பாடல் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்களில் ஏனைய பாடல்களில் இத்தகைய நிலையை காணமுடியாது. தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சி என்பது, தாய்வழிச் சமூகத்தின் வீழ்ச்சியிலிருந்து தொடங்குகிறது. தமிழ்ச்சமூகம் பெண்ணை வெறும் போகப் பொருளாக பார்ப்பதன்று. பெண்ணை உயிர்களின் பிறப்பிடமாக வைத்துப் போற்றிய பண்பாடு தமிழ்ப்பண்பாடு. ஆனால் கலித்தொகைக்கண் இந்நிலை மாறுபட்டே காணப்படுகின்றது. காரணம் இதன் காலமாகும். மேலும் கலித்தொகையில் வடமொழிக்கூறான இமயம் பற்றிய பதிவும், வடநாட்டுத் தெய்வங்களான இந்திரன், சிவன், திருமால் பற்றிய குறிப்புகளும், அந்தணர்களும் அவர்கள் இயற்றிய வேள்விகள் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது.

## 2.9. அகநானூறு:

நெடுந்தொகை என்று அழைக்கப்படும் அகநானூற்றுப் பாடல்கள் சிறுமை பதின்மூன்று அடியாகவும், பெருமை முப்பத்தொன்று அடியாகவும் அமைந்துள்ளன. இதனைத் தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. தொகுத்தவர் மதுரை உப்பூரி குடிகிழான் மகன் உருத்திரசன்மன். இந்நூலில் முதல் நூற்றிருப்பது பாக்கள் 'களிற்றியானை நிரை' எனவும் 121 முதல் 300 வரையில் உள்ளவை 'மணிமிடை பவளம்' எனவும், இறுதிநூறு 'நித்திலக்கோவை' என்றும் பெயர் பெற்றுள்ளன. இதனை நூற்றைம்பத்தைந்து புலவர்கள் பாடியுள்ளனர்.

### 2.9.1 அகநானூற்றில் வடசொற்கள்:

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய இலக்கியங்களைத் தொடர்ந்து நானூறு அகப்பாடல்களைக் கொண்ட அகநானூற்றிலும் வடசொற்கள் இடம் பெற்றுள்ளதை காணமுடிகிறது.. அதுகுறித்து மா. இராசமாணிக்கனார்,

“இந்நூற்பாடல்களில் வடசொற்கள் தமிழ் உருப்பெற்றுப் பெறாமலும் வழங்கப் பெற்றுள்ளன. நிதி (60), இராமன் (70), வதுவை (86), அரமியம் (124), வீதி (147), கலாபம் (152), சிகரம் (181), சிமயம் (208), பதி (299), கேயம் (333), இவை போன்ற சில சொற்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன”[137] என்று குறிப்பிடுகின்றார். இதிலிருந்து அகநானூற்றுப் பாடல்களிலும் வடசொற்கள் இடம்பெற்றுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.9.2 ஆரியர்:

பண்டையத் தமிழகத்தில் வடக்கே வாழ்ந்த இனமான ஆரியர் குறித்து நான்குப் பாடல்களில் குறிப்புகள் வருகின்றன. அந்தக் குறிப்புகள் தமிழ் மன்னர்களின் சிறப்பை வெளிப்படுத்தும்போது இடம்பெறுகின்றன.

**“தாரும் தானையும் பற்றி, ஆரியர்**
**பிடிபயின்று தரூஉம் பெருங்களிறுபோலத்”**[138]

**“ஆரியர் படையின் உடைக, என்**
**நேர் இறை முன்கை, வீங்கிய வளையே”**[139]

**“ஆரியர் அலறத் தாக்கி, பேர் இசைத்**
**தொன்று முதிர் வடவரை வணங்குவில் பொறித்து**
**வெஞ்சின வேந்தரைப் பிணிந்தேன்”**[140]

**“மாரி புறந்தர நந்தி, ஆரியர்**
**பொன் படுநெடு வரை புரையும் எந்தை**
**பல்நுங் கானத்து அல்கி, இன்று, இவண்”**[141]

என முறையே பரணர். பாவைக் கொட்டிலார், இம்மென்கீரனார் குறிப்பிடுகின்றனர். முதல் பாடலில் ஆரியர்கள் யானைகளைப் பழக்கியதாக பரணர் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது பாடலில் காவல்காட்டில் ஆரியப்படை வந்தடைந்த கருத்தினைப் பாவைக்கொட்டிலார் குறிப்பிடுகின்றார். அகநானூற்றின் 396ஆவது பாடலிலும் ஆரியர் பற்றி கருத்தொன்று பரணர் குறிப்பிட்டுள்ளார். அது சேரமன்னன் இமயத்தில் வில்பொறித்து கடுஞ்சினம் உடைய பகை மன்னரைப் பிடித்து வந்தது என்ற கருத்தாகும். பொன்பொதிந்துள்ளது ஆரியரின் இமயமலை என்று இம்மென்கீரனாரும் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து ஆரியர் என்ற சொல், அவர்தம் நாடு, அவர்தம் செயல்கள் போன்றக் கூறுகள் பண்டையத் தமிழகத்தில் அறிமுகமாகியிருந்ததை அறிய முடிகின்றது.

### 2.9.3 இமயம்:

வடநாடாக திகழ்ந்த பகுதிகளில் இமயம் பற்றிய குறிப்புகளே சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. இதனை வெறுமனே நில அறிமுகம் என்று ஒதுக்கிவிட முடியாது. அதனையும் தாண்டி அந்நிலம் மீது பண்டையத் தமிழர்களுக்கு இருந்த தணியாத தாகத்தை

காணவேண்டியுள்ளது. ஓர் இடத்தில் பன்னெடுங்காலம் வாழ்ந்த இனம் இயற்கை, அல்லது செயற்கை காரணங்களால் அவ்விடத்தை விட்டு புலம்பெயரும்போது இருக்கும் வலியானது தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக மனித மனங்களில் வடுவாக இருந்துள்ளது. இதன் விளைவே சங்க இலக்கியத்திலும் இமயம், குறித்தப் பதிவுகள் இடம் பெறுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

**"முந்நீா் ஒட்டிக் கடம்புஅறுத்து இமயத்து**
**முன்னோா் மருள வணங்குவில் பொறித்து"**[142]

**"இமயச் செல்வரை மாறும் கொல்லோ"**[143]

**"சிமையக் குரல் சாந்து அருந்தி, இருள்**
**இமையக் கானம் நானும் கூந்தல்"**[144]

என்று மாமூலனார், (1 – 2) இளங்கீரனார் ஆகியோர் இமயம் பற்றிய குறிப்புகளை பதிந்துள்ளனர். அதிலும் இளங்கீரனார் பெண்ணின் கூந்தலுக்கு இமயமலையில் உள்ள காட்டினை உவமையாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த அளவுக்கு இமயம் சங்ககால மக்கள் மனத்தில் ஆழமாக பதிந்துள்ளது என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.9.4 பாடலிப்புத்திரம்:

வடநாட்டில் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்று பாடலிப்புரத்திரம் ஆகும். சங்க இலக்கியங்களில் இந்நகர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அகநானூற்றில் ஓர் இடத்தில் மட்டுமே இந்நகரின் பெயர் இடம் பெற்றுள்ளது.

**"பல்புகழ் நிறைந்த வேல்போர் நந்தர்**
**சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை"** [145]

என்று மாமூலனார், வடநாட்டில் நந்தர் ஆட்சி செய்த பாடலிபுத்திரத்தில் நிறைந்துள்ள செல்வம் பின்னர் கங்கையின் நீர் ஆழத்தில் மறைந்து போனது போன்று, தலைவன் பிரிவானது திகழ்கிறது என்று ஆற்றாமைக்கு உவமை கூறியுள்ளார். அகப்பாடலில் தமக்குத்தெரிந்த வரலாற்று நிகழ்வையும் பொருத்திக்கூறும் வழக்கம் சங்கப் புலவர்களின் தனிச் சிறப்பான அணுகுமுறையாக உள்ளது.

### 2.9.5 யமுனை:

தமிழகத்தின் வடக்கே ஓடிய நதிகளில் யமுனையும் ஒன்று. இந்நதி இராமாயண காலத்தோடு தொடர்பு கொண்டது ஆகும். இந்த வடநாட்டின் நதி குறித்து, மதுரை மருதன்

இளநாகன் குறிப்பிடுகையில் இராமாயண புராணக் கதையினையும் இணைத்தே பதிவு செய்துள்ளார்.

> **“........ வடாஅது**
> **வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை**
> **அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்**
> **மரம் செல மிதித்த மாஅல் போல”[146]**

என்று யமுனை நதியின் மணலை உடைய அகலமான படித்துறையில் நீராடிய ஆயர் மகளிர் குளிர்ந்த தழையை உடுத்திக்கொள்ளக் குருந்த மரம் வளையும்படி மிதித்துத் தந்தான் கண்ணன் என்று மதுரை மருதன் இளநாகனார் குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரையெழுதிய அ.மாணிக்கம் இந்த கதையை சற்று விளக்கிக் கூறுகின்றார்.

“வண்புனல் தொழுநை ... மாஅல்போல ... இதில் அமைந்த வரலாறு கண்ணன் யமுனை ஆற்றில் ஆய மகளிர் குளித்த போது அவர்கள் கரையில் இட்டு வைத்த ஆடைகளை எடுத்துக்கொண்டு மரத்தின் மீது ஏறினான். அச்சமயத்தே பலராமன் அங்கு வந்துவிட, அந்த ஆயமகளிர் மானத்தைக் காக்க, அவர்கள் ஒருசேரக் குருந்த மரத்துத் தழையால் மறைத்து விடுமாறு தான் ஏறியிருந்த குருந்த மரக் கிளையை வளைத்துத் தாழ்த்திக் கொடுத்தான்.”[147] என பலராமனையும் இப்புராணக்கதையில் இருந்ததை தெளிவுபடுத்துகின்றார் அ.மாணிக்கம்.

### 2.9.6 கங்கை:

இந்திய வரலாற்றிலும் சமயங்களிலும் உயர்வாக குறிப்பிடப்படும் ஆறு கங்கை. இந்நதி சிவனது தலைமுடியில் இருப்பதாகவும், மேலும் அதனை பெண்ணாக உருவகம் செய்து சிவனின் இரண்டாவது மனைவி என்றும் பழங்கதைகள் கூறுகின்றன. அப்படிப்பட்ட கங்கை ஆற்றைப் பற்றியக் குறிப்பினை தலைவனது பிரிவுக்கு உவமையாகக் குறிப்பிட்டுள்ளார் மாமூலனார்.

> **“சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை**
> **நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ”[148]**

என்று, பாடலிப்புத்திரத்தில் திரண்டிருந்து பின் கங்கையின் நீர் அடியில் மறைந்து போன செல்வமோ என்று பிரிவிற்கான காரணத்தை நினைத்துப் புலம்புகிறாள் தலைவி என குறிப்பிட்டுள்ளார்.

### 2.9.7 வடக்கு நோக்கி இருத்தல்:

வடக்கு நோக்கி இருந்து உயிர்விடுதல் என்பது சமண சமய நெறியாகும். தமிழ்ப்பண்பாட்டில் உயிரை தானாக மாயத்துக் கொள்வது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அதனால்தான் விருந்தோம்பல், கொடை போன்ற அறங்கள் பின்பற்றப்பட்டிருக்கின்றது. அப்படியான கருத்தினை அகநானூற்றின் 55ஆவது பாடலில் மாமூலனார் குறிப்பிடுகின்றார்.

**"பொருது புண்நாணிய சேரலாதன்**
**அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென,**
**இன்னா இன் உரை கேட்ட சான்றோர்**
**அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்"**[149]

என கரிகாலனுடன் வெண்ணிப் போர்க்களத்தில் போரிட்டபோது புறப் புண்ணிற்குப் பெரிதும் நாணமடைந்த சேரலாதன் என்ற சேரமன்னன் தான் தோல்வியடைந்த போர்க்களத்திலேயே வாள் ஏந்திய கையுடன் வடக்கு நோக்கி உண்ணா நோன்புடன் இருந்து உயிர் நீக்க இருந்தான். அதனைக்கண்ட சான்றோர்கள், பலரும் உயிர்விட்டனர். என்று மாமூலனார் குறிப்பிடுகின்றார். இது ஒரு கோழைச்செயலாகுமென்கின்றனர் இன்றைய உளவியலாளர்கள்.

### 2.9.8 இராமன்:

இன்றைய இந்தியாவியலில் தவிர்க்கமுடியாத சர்ச்சைக்கு உரிய பெயர் இராமன். இராமன் ஆண்ட இடமும் சென்ற இடமும் வரலாற்றுப் பூர்வமாக நிரூபிக்க ஆய்வுகள் நடந்து வருகின்றன. அங்ஙனம் வடமொழிப் புராணங்களில் இடம்பெரும் இராமனது பெயரினை, மதுரைத்தமிழக்கூத்தனார் கடுவன்மள்ளனார் பதிவிட்டுள்ளார்.

**"முழங்கு இரும்பௌவம் இரங்கும் முன்துறை**
**வெல்போர் இராமன் அரு மறைக்கு அவித்த**
**பல்வீழ் ஆலம் போல**
**ஒலி அலிந்தன்று, இவ் அழுங்கல் ஊரே"**[150]

என்று குறிப்பிடுகின்றார். அதாவது, பறவைகள் ஒலிக்கும் ஒலிக்கு உவமையாக, இராமன் இலங்கை மீது செல்வதற்கு முன்னம் திருவணைக் கரையில் உள்ள பெரிய ஓர் ஆல மரத்தின் கீழ்த் தம் துணைகளுடன் மறைவான கருத்துக்களை கலந்துரையாடினர். அவ்வாறு தாங்கள் பேசுவதை கேட்டு பறவைகள் சத்தமிடக்கூடாது என்பதற்காக தமது ஆணையில் இராமன் அவ்வொலிகளை அடக்கினார் என்று கடுவன் மள்ளனார் உவமை கூறுகிறார். அந்த அளவிற்கு வடநாட்டின் இராமாயணக்கூறு தமிழகத்தில் ஆழமாக வேரூன்றி இருந்துள்ளது.

### 2.9.9 பரசு இராமன்:

வடநாட்டுத் தெய்வமான கிருஷ்ணரின் பல அவதாரங்களில் பரசுஇராம அவதாரமும் ஒன்று. அந்த அவதாரம் குறித்தப் பதிவை மதுரை மருதனிள நாகனார்,

**"கெடாஅத் தீயின், உருகெழு செல்லூர்**
**கடாஅ யானைக் குழூஉச்சமம் ததைய**
**மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்**
**முன்முயன்று அரிநினின் முடித்த வேள்விக்**
**கயிறுஅரையாத்த காண்தகு வனப்பின்"[151]**

என்ற அடிகளில், என்றும் நீங்காத வேள்வித்தீயை உடைய 'செல்லூரில்' மதம் பொருந்திய யானையின் கூட்டம் போர் முனையிலே அழிய மன்னர் பரம்பரையை அழித்தவர் பரசுஇராமன். அவர்முன் காலத்தில் அரிதாய் முயன்று செய்த வேள்வியில் கயிற்றால் சுற்றப்பட்ட அழகையுடைய காவலைக் கொண்ட நீண்ட தூணைப்போல் எல்லாரும் காண இயலாத சிறந்த அழகை உடையது எம் தலைவியின் மார்பு என்று உவமையால் விளக்குகிறார் மதுரை மருதனிள நாகனார்.

### 2.9.10 இந்திரன்:

வடஇந்தியா முழுவதும் வேத வேள்விகளில் இடப்படும் அவி உணவை ஏற்கும் கடவுள்களில் முதன்மையானவன் இந்திரன். ஆற்றுப்படுகையாக விளங்கிய சமநிலப் பகுதிகளில் வானவெளிக் கார்மேகத்தைப் பனிகொள்ளும் தலையாய கடவுளும் ஆவான். ஆனால் தென்னிந்தியாவில் மருத நிலத்துக்கு மட்டுமே அவன் கடவுள். அதுவுமல்லாமல் அவன், ஆரியர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட தீ வழிபாடற்ற வழிபாட்டு நெறிகளில் மக்களால் தொழப்பட்டான். இங்கு கள்ளையும், மாலையையும், நிமிர்ந்த கொம்பு, தொங்கும் காதுகளையுடைய ஆட்டுக்கிடாயினையும் மக்கள் பலியாகக் கொடுக்கும் நிலத்துக் கடவுள்.

**"கள்ளும் கண்ணியும் கையுறையாக நிலக்கோட்டு**
**வெள்ளை நால் கெவிக்கிடாஅய் நிலத்துறை கடவுள்"[152]**

என்று குறிப்பிடுகின்றார் ஆவூர் மூலங்கிழார் புலவர். இந்திரனின் அடையாளம் யானை. யானையை அழிப்பது என்பது இந்திரனுக்கு நிகரானது. மேற்கண்ட பாடலில் பரசுராமன் யானைகளை வெட்டிவீழ்த்தியுள்ளார். சைவ இலக்கியத்தில் எறிபத்த நாயனார் மதம்கொண்ட யானையை மழுவால் வெட்டியுள்ளார். ஆக சைவ, வைணவ சமயங்கள் தனக்கு முன்னால் தோன்றிய இந்திர வழிபாட்டு சமயத்தை அழிப்பதற்காக முயற்சிசெய்துள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது. மேலும் இந்திரனின் பயன்படுத்தும் யானையின் முகத்தோற்றத்திலேயே ஒரு கடவுளும் உருவாக்கப்பட்டுள்ளார் என்று கருதுவாரும் உண்டு.

### 2.9.11 சிவன் கோவில்:

கடைச்சங்க காலத்தில் சிவன் கோயில்கள் இருந்துள்ளன. இதனை கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிடும் அ. தட்சிணாமூர்த்தி,

“ ‘இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரம்கோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
ஒழுாலி மறந்த மெழுகாப் புன்றினை’

என்னும் சங்கச் செய்யுளால் அக்காலக் கோயில்கள் நெடிய சுவர்களோடு கட்டப்பட்டிருந்தமை அறியப்படும். கடைச்சங்க காலத்தின் இறுதியில் ஆண்ட செங்கணான் சிவபெருமானுக்கு எழுபத்தெட்டுக் கோயில்கள் கட்டியதாக திருமங்கையாழ்வாரும் குறிப்பிடுவர்.”[153] எனக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து சங்ககாலத்தில் சிவன் கோயில்கள் இருந்துள்ளன என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

## 2.9.12 பார்ப்பனர்:

வடநாட்டிலிருந்து வந்து வாழ்ந்த பார்ப்பனர்கள் பற்றியக் குறிப்புகள் அகநூலான அகநானூற்றின் இரண்டுப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இதனை, ஆவூர் மூலங்கினார். பாலை பாடிய பெருங்கடுங்கோ,

**“வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளை களைந்து ஒழிந்த தொழுந்தன் அன்ன”[154]**

**“கணநிரை அன்ன, பல்கால். குறம்பொறை
தூது ஒய் பார்ப்பான் மடி வெள் ஓரைப்
படையுடையக் கையர் வருதொடர் நோக்கி”[155]**

என்று குறிப்பிடுகின்றனர், ஆவூர் மூலங்கினார். வேள்வியைச் செய்யாத பார்ப்பான் கூர்மையான அரத்தால் அறுத்தெடுத்த வளையல்கள் என்று, பார்ப்பனர்கள் சங்கு அறுத்த கருத்தினை குறிப்பிட்டுள்ளார். மேலும் இரண்டாவது பாடலில், பார்ப்பனர்கள், உப்பு வாணிகர் கூட்டமாகச் செல்லும் கழுதை வரிசை போன்று பாறைகளின் வழியே பலமுறை தூதாக சென்ற கருத்தினை இரண்டாவது பாடலில் பாலை பாடிய பெருங்கடுங்கோ வெளிப்படுத்தியுள்ளார். இதன்காரணமாக பார்ப்பனர்கள் செய்த தொழில்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

## 2.9.13 வேள்வி:

பண்டைய வடவரின் வாழ்வியலில் வேள்வி மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. வேள்வியினால் கடவுளைத் தொடர்பு கொள்வதாக அவர்கள் கருதுகின்றனர். அத்தகைய வேள்விகள் குறித்து,

**“கெடாஅத்தீயின் உருகெழு செல்லூர்
.......
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி”[156]**

**"அழல் எழு தித்தியம் அடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல் ரேட்டா அங்கு"**[157]

**"வேள்முது மாக்கள் வியல் நகர்க் கரந்த
அருங்கல வெறுக்கையின் அரியோள் பண்புநினைந்து"** [158]

என மதுரை மருதன் இள நாகனார் வேள்வித்தீ இருந்தது குறித்தும், இரண்டாவது பாடல் அடிகளில் எயினந்தை மகனார் இளங்கீரனார், வாடாத மாலைகளைத் தன் உடலில் அணிந்திருக்கும் தேவர் உண்டதற்காகத் தீ ஓங்கிய வேள்விக் குண்டத்தில் இடப்பெற்ற யாமை தான் முன்பு இருந்த நிழல் பொருந்திய பெரிய பொய்கையில் போவதைப்போல் என்று உவமையாகக் குறிப்பிட்டுள்ளார். அதேபோல பாழி மலையில் உள்ள ஊரில் வேள்வியியற்றும் மக்கள் அரிதான அணிகலமாகிய செல்வத்தை மறைத்து வைத்தனர் என்ற கருத்தைக் கூறியுள்ளார். இதுபோல களவேள்வி குறித்த கருத்தும் இடம் பெற்றுள்ளது.

**"பண்ணி தைஇய பயம்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வது ஆயினும்"**[159]

**"கொன்று, களம் வேட்ட ஞான்றை"**[160]

என்று பெருந்தலைச் சாத்தனாரும் மதுரை நக்கீரரும் களவேள்வி போர்க்களத்தில் நடத்தப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளனர். இது கொற்றவைக்கு உயிர்பலி கொடுத்தலை குறிப்பதே ஆகும். போரில் கலந்துகொண்டு வீரத்தை வெளிப்படுத்துவது ஆண்கள். ஆனால் போருக்குரிய தெய்வமே பெண்தெய்வமான கொற்றவை எனும்போது திராவிட மரபே இந்தியா முழுவதும் மேலோங்கி இருந்தை அறியமுடிகிறது. இது இவ்வாறெனில் நாம் நமது நாட்டில் உருவாக்கிய ஆடையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அங்கு அந்த ஆடைக்கு அவர்கள் நாட்டின் முத்திரை இடப்பட்டு விற்கப்படுகிறது. அங்கு வேலைசெய்யும் நம் நாட்டுக்காரர் அந்த ஆடையை வெளிநாட்டு தயாரிப்பாக ஆடையை தயாரித்தவனிடமே கொடுப்பது போன்று கொற்றவை வழிபாட்டில் வேள்வியை இணைத்து அது ஆரியமாக மாற்றம் செய்யப்படுவதை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.9.14 முருகன்:

குறிஞ்சி நிலத் தலைவனான முருகன் வடவர் பண்பாட்டுக் கலப்பால் ஆரிய (முருகனாகவும்) கார்த்திகேயனாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அந்த வரிசையில்தான் அகநானூற்றுப் பாடல்களில் கார்த்திகேய முருகன் தொடர்பான கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

**"படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவள் இவள்' என
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூற**

**களம் நன்கு இழைத்து கண்ணி சூட்டி**
**வளநகர் சிலம்பப் பாடி', பலி கொடுத்து**
**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்**
**முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடு நாள்"[161]**

என்று வெறிபாடிய காமக் கண்ணியார், முருகனை வணங்காத சூரபன்மன் முதலான அரக்கர்களைக் கொன்ற முருகனை வழிப்பாடு செய்தால் துன்பம் தீரும் என்று வலியுறுத்துகின்றார். இதேபோன்றொருக் கருத்தினை மதுரை மருதன் இளநாகனார்,

**"சூர் மிகு முருகன் தண் பரங்குன்றத்து**
**அந்துவன் பாடிய சந்து கதெழு நெடுவரை"[162]**

என்று, சூரபன்மனையும், அவன் உறவினர்களையும் முருகன் அழித்ததாக ஒரு கருத்தைப் பதிவு செய்துள்ளார். அகநானூற்றின் 118-ஆம் பாடலில் முருகனுக்கு ஆறுமுகம் இருந்ததனை தலைவனது ஒப்பீடுக்காக கபிலர்,

**"இயல் முருகு ஒப்பினை, வய நாய் பிற்பட**
**பகல் வரின், கவ்வை அஞ்சுதும், இகல் கொள"[163]**

என்று கூறுகின்றார். தலைவனை முருகனோடு ஒப்பிட்டும், பிறகு இல்லை இல்லை முருகனுக்கு ஆறுமுகங்கள் உண்டு தலைவனுக்கு அது இல்லை என்றும் கபிலர் குறிப்பிட்டுள்ளார். ஆரியர்கள் தமது சமயங்களை உயர்வாக கூறியதோடு தாம் செல்லும் இடங்களில் சிறப்பாக உள்ள சமயங்களை தனதாக்கிக்கொள்ளவும் செய்தனர். அப்படியொரு மாற்றம் முருகன் வரலாற்றிலும் நடந்துள்ளது. தொழிலாளி செய்து கொடுத்த செருப்பினாலேயே தொழலாளியை முதலாளி அடிப்பதுபோல் தமிழ்க்கடவுளான முருகனை ஆரிய கடவுளாக்கி திராவிடர்களை அரக்கர்களாக்கி அரக்கர்களை முருகன் அழித்ததாக வரலாற்றை உருவாக்கியுள்ளனர். அதன் நீட்சிதான் இந்திரனை ஆபத்துகளில் காக்கும் முருகன் கதையுமாகும்.

### 2.9.15 அமிழ்தம்:

மனிதர்கள் இறப்பினை வெல்வதற்காக போராடிய போராட்டத்தின் வெளிப்பாடு அமிழ்தம் தொடர்பான ஆராய்ச்சி. இது குறித்து பல்வேறு கதைகள் பக்தி இலக்கியங்களில் தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன. இதில் சைவ, வைணவ கடவுள்களான சிவன், விஷ்ணுவின் இடம் மிகவும் இன்றியமையாதது. அமிழ்தம் கடையும்போது கயிறாக பயன்பட்ட வாசுகி என்ற பாம்பு கக்கிய நஞ்சை சிவன் தன் கழுத்தில் தாங்கிக் கொள்கிறார், மோகினி வடிவம் கொண்டு விஷ்ணு அரக்கர்களிடமிருந்த அமிழ்தத்தை மீட்டுத் தேவர்களுக்குக் கொடுப்பதுமாக அக்கதை அமைந்திருக்கும். அந்த அமிழ்தத்தை அகநானூற்றில் ஓர் இடத்தில் குறிப்பிடுகின்றார் தாயங்கண்ணனார்.

**"அரும்பெறல் உலகம் அமிழ்தொடு பெறினும்
சென்று, தாம் நீடலோ இலரே என்றும்"[164]**

என்று, தேவர்கள் வாழும் உலகில் பெறுவதற்கு அரிய அவ்வானவர் உலகத்தை அங்குள்ள அமிழ்தத்துடன் பெறுவதாயினும் அங்கு தலைவன் தங்கமாட்டார் என்று தலைவியை நோக்கி தோழி ஆற்றுப்படுத்துவதாக தெரிவித்துள்ளார் தாயங்கண்ணனார். இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவெனின் தேவர்களைக் காப்பாற்றுபவர்களாக சைவர்களும் வைணவர்களும் இருந்துள்ளனர். இதற்கான சான்றுகளை புராணங்களில் காண முடியும். சிவனும் திருமாலும் இந்திரனுக்கும் அவரைச் சார்ந்த தேவர்களுக்கும் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பவர்களாக புராணங்களில் காட்டப்பட்டுள்ளனர். முருகன் தேவர்களின் படைத்தளபதியாகவும், இந்திரனின் மகளான தெய்வயானையை திருமணம் செய்த நிகழ்வும் நாம் அறிந்ததே. பழனிமுருகன் மலையில் இருந்து இறங்கிவந்து மலையடிவாரத்தில் இருக்கும் இந்திரமடத்திற்கு வந்து தங்கி தெய்வயானையை அழைத்துச்செல்லும் நிகழ்வு இன்றும் பழனிமுருகன் கோயிலில் நடைபெற்று வருகிறது. இந்திர வழிபாடு சைவ வைணவ சமய உருவாக்கங்களுக்கு முன்பு இந்தியா முழுவதும் பரவியிருக்க வேண்டும். ரிக் வேதத்தில் மிகுதியான இடங்களில் வரும் இந்திர வழிபாடு இந்தியா மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படுகின்றது. எனவே அவ்வழிபாட்டாளர்களை தம் பக்கம் இழுப்பதற்காக சைவமும் வைணவமும் போட்டிப் போட்டுள்ளன என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. அதேபோல் சமண, பௌத்தத்தை எதிர்ப்பதற்கு இந்திர, சைவ, வைணவ, சமயங்கள் ஒன்றிணைந்துள்ளன என்பதனையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

### 2.9.16 அருந்ததி:

வடநாட்டில் கற்புக்குத் தெய்வமாக அறியப்படும் பெண் தெய்வம் அருந்ததி. இவர் இறந்த கற்புக்கரசியாக போற்றப்படுகின்றார். மேலும் இவர் வானில் விண்மீனாக உள்ளதாகவும், திருமணம் ஆன தம்பதியர் அருந்ததியை வழிபடுவதும் இன்றும் ஆரிய வழி திருமணங்களில் ஒரு சடங்காக இருப்பதும் கண்கூடு.

**"அணங்கு அருங் கடவுள் அன்னோள் நின்
மகன் தாய் ஆதல் புரைவது ஆங்கு எனவே"[165]**

என்று சாகலாசனார், வானத்தில் காண்பதற்கு அரிய கடவுளான அருந்ததியைப் போன்ற அவள் உனது மகனுக்குத் தாயாவது தகுதியானது என தலைவி பரத்தையின் முன் சொல்லியனுப்பியதாகத் தலைவனிடம் குறிப்பிடுகின்றார். இதுபோல் அருந்ததியின் கற்பினை,

**"வணங்குறு கற்பொரு மடம்கொளச் சாஅய்
நின் நோய்த் தலையையும் அல்லை"[166]**

என்று எருமை வெளியனார், “அருந்ததி போன்ற கற்பால் மிக மெலிவடைந்து நீ அடையும் நோயினால் மட்டும் வருந்திடவில்லை” என்று தோழி தலைவிக்கு குறிப்பிடும்படி பாடல் புனைந்துள்ளார். இங்கு புலவர் பெயரில் வரும் எருமை என்பது கலித்தொகையில் வரும் எருமை கொம்பு வழிபாட்டுச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்திருக்க வேண்டும். அல்லது எருமை நாட்டுக்காரராக இருக்க வேண்டும். இங்கு மற்றொரு கருத்தும் விவாதிக்கப்பட வேண்டியுள்ளது. எருமை வழிபாட்டுக்கு மாற்றாகத்தான் பசு வழிபாடும் உருவாகியிருக்க வேண்டும் என்பதாகும்.

### 2.9.17 உரோகிணி:

பழங்கால சோதிட முறையில் ரோகிணி விண்மீன் சிறப்பு வாய்ந்தது. இதன் பெயர் அமைப்பு முறையில் வடமொழி சார்ந்ததாக உள்ளது. இதனைத் தமிழ்ப்படுத்தியும் புலவர்கள் தமது பாடலின்கண் குறிப்பிட்டுள்ளனர்.

> **“உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை**
> **பெருஞ் சோற்று அமலெ நிற்ப, நிரை கால்**
> **தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி**
> **மனை விளக்குறுத்து, மாலை தொடரி”**[167]

என்று சங்ககாலப் புலவர் நல்லாவூர்கிழார், விடியற்காலத்தில் தீய கோள்களின் தொடர்பு நீங்கப் பெற்ற வளைந்த வெண்மையான திங்களினைக் குற்றமில்லாத சிறந்த புகழை உடைய உரோகிணி என்ற நாள் (நட்சத்திரம்) அடைந்தது எனக் கூறியுள்ளார். இவரைப்போலவே விற்றூற்று மூதெயினனாரும்,

> **“அம்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்**
> **சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து**
> **கடிகம் புனைந்து, கடவுள் பேணி”**[168]

என்று வானம் களங்கம் இல்லாது விளங்க, சந்திரன் உரோகிணி கூடிய நல்ல நாள் சேர்க்கையில் திருமண இல்லத்தை அழகாக அலங்கரித்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் தமிழ்த் திருமண முறையினையும் புலவர் விளக்கிச் செல்கின்றார்.

### 2.9.18 வணிக உறவு:

பண்டையத் தமிழகம் வடநாட்டினரோடு கொண்டிருந்த உறவுகளில் இன்றியமையாதது வணிகம். இரு நிலப்பகுதியில் இடையே இருந்த வணிக உறவினை அகநானூறும் உறுதி செய்கின்றது.

> **“வடவர் தந்த வான் கேழ் வட்டம்**
> **குடபுல உறுப்பின் கூட்டு நிகழ்த்திய”**[169]

என்று நக்கீரர், தலைவனை இரவிலும் தங்கியிருந்தால் உனக்கு, வடநாட்டில் உள்ளவர் கொணர்ந்த வெண்மையான நிறத்தையுடைய வட்டக்கல்லில் குடமலையான பொதிகை மலைச் சந்தனக்கட்டையால் பிற நறுமணப் பொருள்களையும் கூட்டி உண்டாக்கிய வண்டுகள் ஒலிக்கும் நறுமணச் சாந்தை அணிவிப்போம் என்று தோழி கூறுவதாகக் குறிப்பிடுவதிலிருந்து தமிழகத்தில் வடநாட்டுப் பொருட்கள் புழக்கத்தில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

### 2.9.19 சமணர்:

வடநாட்டில் உருவாகி வடநாடு, தென்னாடு முழுவதும் பரவிய சமயம் சமணம். இச்சமயம் குறித்தப் பதிவுகள் ஆங்காங்கே சங்க இலக்கியத்தில் காணக்கிடக்கின்றன. அகநானூற்றிலும் சமணச் சமயம் குறித்த பதிவு ஒன்று இடம் பெற்றுள்ளது.

**"உண்ணா மையின் உயங்கிய மருங்கின்**
**ஆடாப் படிவத்து ஆன்றோர் போல**
**வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லும்**
**கான யானை கவின் அழி குன்றம்"**[170]

என்று, காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். உணவு உண்ணாமையால் வாடிய வயிற்றையும், நீராடாத நோன்பையும் உடைய சமண சமயத்துத் துறவியர் போல், மலைகள் நெருங்கியுள்ள சிறிய வழியிலே நிறைந்து ஒன்றாகக் கூடிச் செல்கின்ற இயல்புடைய காட்டுப் பகுதியில் என யானைக்கு உவமையாக சமணர்களை எடுத்துக் கூறுகின்றார்.

அகம் தொடர்பான நெடும்பாட்டுக்கள் நானூறு கொண்ட அகநானூற்றில் வடசொற்கள் காணப்படுகின்றன. வடநாட்டினராகிய ஆரியர், பார்ப்பனர் பற்றிய குறிப்புகள், வடநாட்டின் நிலங்களான இமயம், பாடலிப்புத்திரம், யமுனை, கங்கை தொடர்பான குறிப்புகள், வடநாட்டினரின் சமயக் கொள்கையான வடக்கு நோக்கி இருத்தல் குறிப்புகள், வடநாட்டின் புராண கதாபாத்திரங்களான இராமன், பரசு இராமன், இந்திரன் ஆகியோர் பற்றிய குறிப்புகள், சிவன் கோயில் இருந்தமை தொடர்பான குறிப்புகள், வேள்வி இயற்றியது தொடர்பான கருத்துகள், ஆரிய முருகன் பற்றிய செயல்பாடுகள், அமிழ்தம் குறித்த கருத்துகள், அருந்ததி, ரோகிணி குறித்தப் பதிவுகள், வடநாட்டினரோடு கொண்டிருந்த வணிக உறவு, சமணர் தொடர்பான கருத்துகள் என அகநானூறு வடமொழிக் கூறுகள் பலவற்றை கொண்ட இலக்கியமாக திகழ்கிறது. எவற்றையும் வலிந்து திணித்ததாகத் தெரியவில்லை. இவை சங்ககால இயல்பாகத் தென்படுகிறது.

### 2.10 புறநானூறு:

எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு வரலாற்றுச் சிறப்புடையது. இது 400 பாடல்களைக் கொண்ட நூல் ஆகும். இதனை 157 புலவர்கள் பாடியுள்ளனர். 267, 268 ஆகிய இரண்டுப் பாடல்கள் காணப்படவில்லை. பதினான்கு பாடல்களைப் பாடியவர் இன்னவர் என்பது தெரியவில்லை. அக்கால மக்கள் பயன்படுத்திய போர்க் கருவிகள், பலவகை நகைகள், உலோகங்கள், உடைகள், உணவுகள், ஊர்திகள், தெய்வங்களின் பெயர்கள், கோவில்களின் பெயர்கள், விலங்குகள், பறவைகள், மரங்கள், உழவு, கைத்தொழில், வாணிகம், பழக்கவழக்கங்கள் முதலியவற்றையும் இந்நூல் கூறுகின்றது.

### 2.10.1 புறநானூற்றில் வடசொற்கள்:

முழுமையும் புறப்பொருள் குறித்தப் பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளதால் பல வரலாற்றுத் தகவல்களை இந்நூலில் காணமுடிகின்றது. அகத்தைப் பாடும்போது உவமையாக, இலைமறை காயாக வரலாற்றுக் குறிப்புகளை கூறும் புலவர்களுக்கு புறப்பொருள் கட்டற்ற சுதந்திரத்தை வழங்கியிருக்கிறது. அங்ஙனம் சிறப்பு வாய்ந்த புறநானூற்றில் வடசொற்கள் இடம்பெற்றுள்ளன. இதுகுறித்து மா. இராசமாணிக்கனார்,

“புறநானூற்றில் இடம்பெற்றுள்ள வடசொற்கள் பின் வருபவை குறிப்பிடத்தக்கவை. அசுரர், அஞ்சனம்(174), அந்தி (2), அமிழ்தம் (182), ஆகுதி (99), இயக்கன் (71), ஈமம்(231), உற்கம்(41), கபிலம்(337), கரகம்(1), கலாபம்(133), குமரி(67), கௌரியர்(3), சடை(251), சாபம்(70), சாமரம்(50), சிகரம்(125), சித்திரம்(251), தருப்பை(360), நேமி(3), பிண்டம்(234), பூதம்(369), மதுரை(351), மாயம்(363), மார்ச்சனை (164), முண்டகம்(24), யூபம்(400)”[171] என்று குறிப்பிடுகின்றார். இதனால் வடசொல் பேசுபவர்களின் வருகை அல்லது குடியேற்றம், சங்கப்பாடல்கள் இயற்றப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.2 கடவுள் வாழ்த்து:

புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். பாரதம் என்பது வடமொழியில் உருவாக்கப்பட்ட மகாபாரதத்தையேக் குறிக்கின்றது. பாரத கதைகள் வடநாட்டில் உருவான வைதீக சமயங்களில் ஒன்றான வைணவச் சமயத்தை சார்ந்தாகும். அந்நூலின் பெயரை தனது பெயருக்கு முன் ஒட்டாகக் கொண்ட இப்புலவர் பாடிய கடவுள் வாழ்த்துப்பாடலோ வடநாட்டில் வேத இலக்கியங்களில் ருத்ரன் என்றழைக்கப்பட்ட, தமிழ்மொழியில் நாயன்மார்களால் இன்னாரென்று அடையாளப்படுத்திப் பாடப்பட்ட சிவனைப் புகழ்வதாக அமைந்துள்ளது.

**“கண்ணி கார்நறுங் கொன்றை காமர்**
**வண்ண மார்பின் தாருங் கொன்றை**
**ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப”[172]**

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் குறிப்பிடுகின்றார். புறநானூற்றில் இடம்பெற்றுள்ள சமயம் குறித்து மா. இராசமாணிக்கனார்,

“தமிழகத்தில் சிவபெருமான், கண்ணன், பலதேவன், முருகன் ஆகிய நால்வரும் நாற்பெரும் தெய்வங்களாகக் கருதப்பட்டனர்(56). மக்களுக்கு மறுமை உலகம் உண்டு என்ற நம்பிக்கை இருந்தது(18). தெய்வத் திருவுருவங்கள் வழிபடப்பட்டன(106). உலகத்தைப் படைத்தவன் இறைவன் என்ற நம்பிக்கை இருந்தது(104). உலகில் எப்பொருளும் நிலையாதது – புகழ் ஒன்றே நிலைபெறும் என்று சான்றோர் நம்பினர்(105). வாழ்க்கையின் இறுதியில் யமன் உயிரைக்கொண்டு செல்லுதல் உறுதி. ஆதலால் நல்வினைகளைச் செய்யுங்கள்: அவற்றைச் செய்ய முடியவில்லையாயின் தீவினையாவது செய்யாதிருங்கள். அதுவே நன்னெறியில் செலுத்தவல்லது(195) என்பது புலவர் அறிவுரையாகும். “மற்றொரு புலவர், நல்லது செய்வோர் துறக்கம் பெறுவர் - அல்லது செய்பவர் மாறிப் பிறப்பர்”(214) என்று கூறியுள்ளார்”[173] என்று குறிப்பிடுகின்றார். இதன் வாயிலாக பழந்தமிழரிடையே இருந்த வடநாட்டு நம்பிக்கைகளை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.3 அந்தணர்கள் மேற்கொள்ளும் அந்திகடன் :

புறநானூற்றின் இரண்டாவது பாடலை முரஞ்சியூர் முடிநாகனார் பாடியுள்ளார். இப்பாடலில் வடநாட்டில் உருவான இலக்கியங்களில் ஒன்றான மகாபாரதம் குறித்த கதையைப் புலவர் பதிவு செய்கிறார்.

**“அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம் பதின்பரும் பொருது களத்து ஒழியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தாய்”[174]**

என முரஞ்சியூர் முடிநாகனார் கூறுவதிலிருந்து வடநாட்டு வேந்தர்களுக்கு தமிழ் மன்னர்கள் உணவளித்து நட்போடு இருந்தமை புலனாகின்றது. மேலும் நான்கு வேதங்கள் குறித்தும் (அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும் முத்தீ விளக்கிற் றுஞ்சம்) அந்தணர்கள் மேற்கொள்ளும் அந்திகடன் மற்று முத்தீ என்னும் வேள்வி குறித்த கருத்துக்களையும் புலவர் குறிப்பிடுகின்றார். இதன்வழி வடநாட்டில் இருந்து தமிழகம் வந்த அந்தணர்கள் மேற்கொண்ட வடநாட்டு சடங்குகளை அறிய முடிகின்றது.

### 2.10.4 வடநாட்டில் உள்ள இமயமலை:

இந்தியாவின் வடபகுதியில் இந்தியாவிற்குப் பாதுகாப்பு அரணாக இருந்து வருவது இமயமலை ஆகும். இமயமலை பல சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமானது சமயத்தொடர்பு. இன்றளவும் ஆன்மிகத்தோடு அதிலும் குறிப்பாக சைவ சமயக் கருத்தினையே இமயத்தை ஒப்பிட்டு பேசி வருகின்றனர். அங்ஙனம் சிறப்புற்றுத் திகழும் இமயம் குறித்தப் பதிவுகள் புறநானூற்றுப் பாடல்களில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன.

**''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கம்''**[175]

**''தென்குமரி வடபெருங்கல்''**[176]

**''இமயத் தீண்டி யின்கரல் பயிற்றிக்''**[177]

**''இமயஞ்சூட்டிய வேம விற்பொறி''**[178]

**''வடமலைப் பெயர்குவை யாயி னிடையது''**[179]

**''வடதிசை யதுவே வான்றோ யிமயம்**
**தென்றிசை யாஅய்குடி யின்றாயிற்''**[180]

**''கழைவள ரிமயம் போல**
**நிலிஇய ரத்தை நிலமிசை யானே''**[181]

**''மாறிப் பிறவா ராயினும் மிமயத்துக்''**[182]

**''பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன''**[183]

இவ்வாறு வடநாட்டில் உள்ள இமயமலை குறித்து பதினொரு பாடல்களில் குறிப்புகள் உள்ளன. இதனால் வடநாட்டின் நிலவியல் குறித்து பண்டையத் தமிழர்கள் அறிந்து வைத்திருந்தனர் என்பதனைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.5 கங்கை:

வடநாட்டில் ஓடும் ஆறுகளில் கங்கையும் ஒன்று. 'கங்கை நதி' புனித நதி என்று இன்று வரை அழைக்கப்படுகின்றது. கங்கையை சிவன் தலையில் சூடியுள்ளார் என்ற கருத்துகள் புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அங்ஙனம் சிறிது விளங்கும் கங்கை ஆறு குறித்த பதிவு,

**''மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்**
**கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாய்''**[184]

என்று பெருஞ்சித்தினார் கங்கை நதியினை எடுத்துக்கூறி விளக்குகிறார். வடநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் பல இருப்பினும் சங்க இலக்கியங்கள் தொடர்ந்து குறிப்பிடுபவை கங்கை நதியும் இமயமும் ஆகும். ஆற்றங்கரைகளில் நாகரிகங்களை மனிதர்கள் உருவாக்கியுள்ளனர். சிந்து நதியின் அருகே பண்டைய தமிழர்கள் நாகரிகத்தை உருவாக்கி இருக்கின்றனர். அதேபோல கங்கை நதியின் அருகே ஏதேனும் நாகரிகத்தை உருவாக்கியிருந்தனரா என்ற ஐயம் எழுகிறது. காரணம் யமுனை நதிக்கரையில் பாடலிபுத்திரம் என்ற நகரம் இருந்த குறிப்பை குறுந்தொகை குறிப்பிட்டுள்ளது.

### 2.10.6 கற்பு தெய்வம்:

'அருந்ததி' என்ற பெயர் வடமொழியில் கற்பு தெய்வமாகக் கருதப்படுகின்றது. திருமணத்தின் போது அருந்ததி பார்க்கும் வழக்கம் நடைமுறையில் சடங்காக உள்ளது. அருந்ததி பற்றி புறநானூற்றுப் பாடல்களில் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**"வடமீன் புரையும் கற்பின் மடமொழி"[185]**

**"பங்குனி உயர் அழவத்துத்**
**தலைநாள்மீன் நிலைதிரிய**
**நிலைநாள்மீன் அதன் எதிர் ஏர்தரத்**
**தொல் நாள்மீன் துறைபடியப்"[186]**

என்று 122ஆம் பாடலில் கபிலர், அருந்ததி குறித்தும், 229ம் பாடலில் கூடலூர் கிழார் பல நட்சத்திரங்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். அவ்வரிகளுக்கு உரையெழுதும் அ.மாணிக்கம்,

"மேடராசி பொருந்தியுள்ள முதல் நாளில் நிறைந்த இருளையுடைய பாதி இரவில், முடப்பனை போன்ற வடிவம் கொண்ட நாளில் வெள்ளி முதலாக, குளத்தின் வடிவம் போன்ற வடிவையுடைய புனர்ப்பூசத்துக் கடையில் வெள்ளிக்கோர் எல்லையாய் அமைய, பங்குனி மாதத்தின் முதல் பதினைந்தின் உச்சமான உத்தரம் அந்த உச்சியினின்று சாய, அதற்கு (உத்தரத்திற்கு) எட்டாம் நட்சத்திரமான மிருகசீரிடமான நாள்மீன் துறையிடத்தில் படிய, கிழக்குத் திசையில் செல்லாது வடக்குத் திக்கில் செல்லாது கடலால் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக ஒலிக்கும் தீப்பரக்க, காற்றினால் பிரிந்து கிளர்ச்சியுற்று, ஒருமீன் வானத்தினின்றும் வீழ்ந்தது"[187] என்று வடநாட்டின் அருந்ததி நட்சத்திரம் இருந்த குறிப்பைக் குறிப்பிட்டுள்ளார். இதன்வாயிலாக பழந்தமிழரிடையே இருந்த வடநாட்டின் விண்மீன் தொடர்பான நம்பிக்கையை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.7 புத்தர்:

வடநாட்டில் உருவான சமயங்களில் ஒன்று பௌத்தம். பௌத்த சமயம் பற்றிய கருத்துகள் நிறைந்தவைகளாக தமிழ்க்காப்பியங்கள் திகழ்கின்றன. பௌத்த சமயம் தமிழகத்திற்கு எப்போது வந்தது என்ற கேள்விக்கு பல பதில்கள் இருந்தாலும் சங்க இலக்கியத்தின் புறநானூற்றில் ஒரு பாடலில் புத்தர் குறித்த பதிவு இடம் பெற்றுள்ளது.

> **''ஆறுணர்ந்த ஒருமுதுநூல்
> இகல்கண்டோர் மிகல்சாய்மார்
> மெய்அனை பொய் உணர்ந்து''**[188]

என்று ஆவூர்மூலங்கிழார் புத்தர் வேதத்திற்கு மாறான ஒரு நூலை உருவாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து வைதீகத்திற்கும் பௌத்தத்துக்குமான போராட்டத்தை விளங்கிக் கொள்ள முடிகிறது. அங்ஙனம் மு.கு. ஜகநாதராஜா சமணம், பௌத்தம், வைதீக சமயங்களை வடநாட்டில் இருந்து வந்ததாக குறிப்பிடுகிறார்.

### 2.10.8 புராணம்:

வடமொழி இலக்கிய வகைகள் மிக இன்றியமையாதது புராணங்கள். புராணங்கள் ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் பெரும்பான்மையான மக்களால் விரும்பக் கூடியதாக இருந்துள்ளன. இத்தகைய புராணங்கள் கதைகளாக இந்தியா முழுவதும் வழங்கி வந்திருக்கின்றன. கோதமனாரும், உளன் பொதி பசுங்குடையாரும் தமது பாடலின்கண் புராணச் கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளனர். இப்பாடல்கள் பாண்டவர்கள் பற்றியது. இப்பாட்டுடைத் தலைவன் தருமன் ஆவார்.

> **''விழுக்கடிப்பு அறைந்த முழுக்குரல் முரசம்
> ஒழுக்குடை மருங்கின் ஒருமொழித் தாக
> அரவுஏறி உருமின் உரறுபு சிலைப்ப
> ………………..
> காவு தோறும் இழைத்த வெறியயர் களத்தின்
> மடங்கல் உண்மையாக மாயமோ அன்றே''**[189]

என்று எடுத்துரைக்கின்றார் கோதமனார். இவரைப் போலவே ஊன்பொதி பசுங்குடையாரும், இளஞ்சேட் சென்னியும் 'பாழி' என்ற இடத்தில் இருந்த வட வடுகரை வென்றுபெற்ற அணிகலன்களைக் கொடுத்தமையைப் புகழ்ந்து பாடுகையில்,

> **''விரல்செற் மரபின செவித்றொடக் குநருமும்
> செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
> அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்**

**நடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை**
**வலித்தகை அரக்கன் வெளிய ஞான்றை**
**… … … …**
**அறாஅ அருநகை இனிது பெற்றிருமே''[190]**

என்று இராவணன் சீதையை தூக்கிச் செல்லும் போதும், சீதை கழற்றி எறிந்ததை எடுத்து குரங்குகள் அணிந்து மகிழ்ந்தக் கருத்தினை ஒப்புமைப்படுத்தி வெளிப்படுத்தி உள்ளார். இதனைப் போல திருமால் ஞாயிறு மீட்டது தொடர்பான கருத்தை, மாறோக்கத்து நப்பசலையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**''அணங்குடை அவுணர் கணம்கொண்டு ஒளித்தெளச்**
**சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது**
**… … … …**
**அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு''[191]**

என்று, அசுரர் ஞாயிற்றை எடுத்துக் கொண்டுபோய் மறைத்தனர். ஞாயிற்றை காணாமல் மக்கள் வருத்தப்பட திருமால் அதனைக் கண்டுபிடித்து வானத்தில் நிறுத்தியமை குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் வைதீக சமயங்களின் கருத்துக்கள் புராணக் கதைகளின் வாயிலாக சங்ககால மக்களிடம் பரப்பப்பட்டுள்ளதை மேற்கண்ட பாடல்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.9 வேதம்:

சமஸ்கிருத மொழியில் தொகுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பான வேதம், காலத்தால் முந்தியதாக கருதப்படுகிறது. அங்ஙனம் இந்தியாவின் வடப்பகுதியில் உருவான வேதம் குறித்த பதிவு புறநானூற்றின்கண் பதிவாகி உள்ளன.

**''நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே''[192]**

**''நற்பனுவல் நால்வேதத்து''[193]**

**''ஆன்ற வேள்வி அடங்கிய கொள்கை**
**நான்மறை முதல்வர் சுற்ற மாக''[194]**

**''அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்**
**திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பா''[195]**

**''ஆறுணர்ந்த ஒருமுதுநூல்**
**இகல்கண்டோர் மிகல்சாய்மார்''[196]**

என்று முறையே காரிக்கிழார், நெட்புமையார், மாங்குடிக்கிழார், ஔவையார். ஆவூர்மூலங்கிழார் ஆகியோர் நான்மறை என்ற சொல்லை பதிவு செய்துள்ளனர். இறுதியாக உள்ள ஆவூர்மூலங்கிழார் பழைய நூலான சிவன் உருவாக்கிய வேதத்திற்கு மாற்றாக புத்தர் நூல் இயற்றிய நிகழ்வை குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து வேதம் தமிழகத்தில் அறிமுகமாகியிருந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 2.10.10 அந்தணர்:

தமிழகத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வந்த இனம் அந்தணர் இனம். இவர்கள் வேதம் ஓதுபவர்களாகவும், வேள்வி செய்பவர்களாகவும் விளங்கி உள்ளனர். அவர்கள் சங்ககாலத்தில் அரசனுடன் ஆலோசகர்களாக இருந்து இன்றியமையாத செயல்களைச் செய்துள்ளனர். புறநானூற்றின் பல பாடல்களில் அந்தணர் அல்லது பார்ப்பனர் குறித்தப் பதிவு உள்ளன. அவை வருவமாறு,

**"அந்த அந்தணர் அருங்கடன் இறுக்கும்**
**முத்தீ விளக்கிற் றுஞ்சும்"[197]**

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்"[198]**

**"ஆன்ற வேள்வி அடங்கிய கொள்கை**
**நான்மறை முதல்வர் சுற்றமாக"[199]**

**"குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்"[200]**

**"ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்**
**பார்ப்பார் நோவன செய்யலர் மற்றஇது"[201]**

**"அழல்புறம் தரூஉம் அந்தணர் அதுவே" [202]**

**"நன்றாய்ந்த நீள்நிமிர்சடை**
**… … … …**
**நிலிஇயர் அத்தை நீ நிலமிசை யானே" [203]**

**"அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே**
**நீயே வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்**
**….**
**நாற்பத்து ஒன்பது வழிமுறை வந்த"[204]**

**"துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்" [205]**

**"கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு**
**அருங்கலம் நீரொடு சிதறிப் பெருந்தணத்"[206]**

**"தாக்குரல் கேண்மின் அந்த ணாளிர்"[207]**

**"ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப**
**பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து"[208]**

என புலவர்கள் பலரும் அந்தணர், பார்ப்பனர் என்ற சொல்லை வேள்வி, வேதம் இவற்றோடு தொடர்புபடுத்தியே கூறுகின்றனர். அதிலும் 166-ஆம் பாடல் முழுவதும் பார்ப்பனச்

சடங்குகளை முன்னிருத்தி ‘பார்ப்பன வாகை’ என்ற தனித்துறையாக ஆவூர் மூலங்கிழார் படைத்துள்ளார். அப்பாடல் முழுமையாக சிவன், வேதம், வேதத்திற்கு மாற்றாக புத்தர் இயற்றிய நூல், வேள்வி இயற்றும் முறை, அவ்வேள்விகள் பல இயற்றுதலுக்குக் காரணமாய் அமைந்த மன்னர் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அந்தணர்கள் சங்க காலத்தில் செல்வாக்கோடு திகழ்ந்ததை அறிய முடிகின்றது.

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள அந்தணர் பற்றிய கருத்தினை மா. இராசமாணிக்கனார், “புறநானூற்றுப் பாடல்கள் பல தோன்றிய காலத்தில் வடமொழியாளர் செல்வாக்குத் தமிழகத்தில் நன்கு பரவியிருந்துள்ளது. அந்தணர்களை,

**ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை**
**நான்மறை முதல்வர் (26)**

என்று புலவர் பாராட்டினர். அவர்கள் எதிரே தலைவணங்குக என்று அரசர்க்கு அறிவுறுத்தினர். வேள்வி செய்தல் சிறப்பாகக் கருதப்பட்டது(15). அந்தணர்க்கு ஊர்களும் செல்வமும் நீர்வார்த்துக் கொடுக்கப்பட்டன (361,362,367.). அவர்கள் தூண்டுதலால் தமிழரசர் சிலர் வேள்வி செய்யத் தொடங்கினார். சேர மன்னருட் பலர் வேள்வி செய்தமையைப் பதிற்றுப்பத்து உணர்த்துகிறது. சோழருள் பெருநற்கிள்ளி என்பவன் இராஜசூய யாகம் செய்து, ‘இராஜசூய வேட்ட பெருநற்கிள்ளி’ என்று பெயர் பெற்றான். பாண்டியருள் ஒருவன் பல யாகசாலைகளை அமைத்துப் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி எனப்பெயர் பெற்றான். அவன் வேள்விசெய்த அந்தணர்க்கு ஊர்களைக் கொடுத்து உதவினவன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் செப்புகின்றன. பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் பல வேள்விகள் செய்துள்ளான். இவை அனைத்தும் சங்ககாலப் பிற்பகுதியில்(கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகளில்) தமிழகத்துச் சமயத்துறையில் (பெருமக்கள் அளவில்) வடமொழியாளர் செல்வாக்கு வேரூன்றி வளர்ந்து வந்தது என்பதை உள்ளங்கைக் கனியென அறிவிக்கின்றன. இவர்கள் சேர்க்கையால் வடமொழிச் சொற்கள் பல தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றமை ஒவ்வொரு நூலைப்பற்றிய ஆராய்ச்சியிலும் கூறப்பெற்றதன்றோ?.” [209] என்று கூறுகின்றார். இதனால் அந்தணர் செல்வாக்கு தமிழகத்தில் மிக ஆழமாக வேரூன்றி இருந்ததை விளங்கிக்கொள்ள முடியும்.

## 2.10.11 பிறப்பில் உயர்வு தாழ்வு :

பிறப்பால் ஒருவரை தாழ்வாக நினைக்கும் வழக்கம் சங்ககாலத்தில் இல்லை. தொழில்முறையிலான பாகுபாடுகள் இருந்ததே தவிர, பிறந்த குலம் அடிப்படையிலான பாகுபாடுகள் இல்லை. இப்பாகுபாடு முறையினை ஆரியர்கள் ஏற்படுத்தினர். தங்களை உயர்வானவர்களாகக் காட்டிக்கொள்ள, அடுத்தவர்களைத் தாழ்த்திய அத்தகைய பாகுபாட்டு வழக்க முறையினைப் புறநானூற்றில்,

**‘‘இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப’’[210]**

**‘‘வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்பால் ஒருவன் நிற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே’’[211]**

**‘‘கைக்கொண்டு பிறக்கு நோக்காது**
**இழிபிறிப்பினோன் ஈயப்பெற்று’’[212]**

என்றும் புறப்பாடல்கள் இழிந்த பிறப்பு பற்றி எடுத்துரைக்கின்றது. வீரம் பெரிதாகப் போற்றப்பட்ட காலத்தில் கல்வியால் ஒருவரை உயர்த்தவும் தாழ்த்தவும் நினைத்த முறையினைக் காண முடிகிறது. இது பண்டையத் தமிழ் வழக்கம் அன்று. ஆரிய வழக்கமே ஆகும்.

### 2.10.12 சிவன்:

மூன்று கண்களைக் கொண்டவராக அறியப்படும் சிவன் பற்றிய பதிவுகள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. எனினும் நேரடியாக ‘சிவன்’ என்ற சொல் இடம் பெறவில்லை. சிவனுக்குக் கூறப்படும் வேறு சொற்களும், தோற்றமும் வைத்து சிவனாக அடையாளப் படுத்தப்படுகின்றார்.

**‘‘முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே’’ [213]**

**‘‘பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீல மணிமிடற்று ஒருவன் போல’’ [214]**

**‘‘ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ**
**ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்**
**பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த**
**கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்**
**பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல’’[215]**

**‘‘நன்றாய்ந்த நீள்நிமிர்சடை**
**முதுமுதல்வன் வாய் போகாது’’[216]**

**‘‘ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை**
**மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்’’[217]**

என சிவனின் திருவிளையாடல்கள் பற்றிய கருத்துக்களை இங்கே காண முடிகிறது. சிவ வழிபாடு மூன்று நிலைகளில் காணப்படுகின்றது. ஒன்று வேட்டையாடுச் சமூக சிவன். இரண்டாவது லிங்க குறியீடாக விளங்கும் சிவன், மூன்றாவது நடராஜர் வழிபாடு. இவை அனைத்தும் சைவமாக கருதப்படுகிறது. ஆனால் இவை மூன்றும் தனித்தனியாக வெவ்வேறு மக்களால் பழங்காலத்தில் வழிபடபட்டுள்ளனர். பாண்டிய மன்னர்களில் முதலாவதாக ஆட்சிசெய்தது சிவன் என்கின்ற செவிவழிச் செய்தியும் உள்ளது. கோவை பகுதியில் பட்டீஸ்வரர் என்று சிவன் வேளாண்மையின் கடவுளாக இன்றும் வணக்கப்பட்டு வருகின்றார். சிவனும் முருகனும் வைத்திருக்கும் ஆயுதங்களை

வைத்துப் பார்க்கும்போது முருகன்தான் சிவனைவிட பழமையான கடவுளாக இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அது பண்பாட்டுக் கலப்பினால் கீழது மேலாக, மேலது கீழாக மாற்றமடைந்து நிலைப்பெற்றுவிட்டது என்பதனையும் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் சிலர் சிவன் என்பது தவத்தின் ஓர் உன்னத நிலை என்று பார்க்கும் வழக்கமும் உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

### 2.10.13 முருகன்:

முருகன் சூரபன்மாவை கொன்ற கருத்தினை கல்லாடனார் குறிப்பிட்டுள்ளார்,

**“கார்நறுங் கடம்பன் பாசிலைத் தெரியல்**
**சூர்நவை முருகன் சுற்றத்து அன்னநின்**
**கூர்நல் அம்பின் கொடுவல் கூளியர்”**[218]

என்று கார்காலத்தில் மலரும் கடம்பமரத்தின் பச்சிலை கலந்து தொடுத்த மாலையைச் சூடிய சூரபன்மனைக் கொன்ற முருகப்பெருமானின் கூளிக் கூற்றத்தைப் போன்ற கூரிய அம்பையும் வில்லையும் உடைய நின் மறவர் என்று கல்லாடனார் குறிப்பிட்டுள்ளார். இதன்வழி ஆரிய முருகன் வீரச்செயல்களை அறிந்துகொள்ள முடிகிறது. குறிஞ்சி நிலத்தலைவன் முருகன் உருவம் அற்றவனாக, மக்களுக்கு ஏற்படும் சிறுசிறு துன்பங்களைப் போக்குபவனாக சங்க அக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளார். இது ஏற்புடையது. காரணம் அறிவியல் உலகமான இன்றைய காலத்தில்கூட குழந்தைகளுக்கு ஏற்படும் சிறு துன்பங்களை களைய இல்லுறை தெய்வங்களையே மக்கள் வழிபட்டு குறியும் கேட்கின்றனர். என்னைப் பொறுத்தவரையில் தமிழ் முருகனின் அடையாளமாக வேல் மட்டுமே இருந்துள்ளது. இக்கருவி அதீத சக்திகள் நிறைந்தவை அல்ல. மாறாக அக்கருவி புதிய கற்கால கருவிகளின் நீட்சியாக தொழில்நுட்பம் நிறைந்ததாக பார்க்க முடியும். மேலும் முருகன் குறிஞ்சி நிலத் தலைவன் என்று பார்க்கும் நிலைக்கு மாறாக வேட்டையாடும் மற்றும் ஒட்டுமொத்த கற்காலத்தின் கடவுளாக இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

### 2.10.14 திருமால்:

வடநாட்டு கடவுள்களில் இன்றியமையாத இடத்தைப் பெறுபவர் திருமால். திருமால் குறித்த கருத்துகள் வடநாட்டுப் புராணங்கள் சுட்டும் நிலையிலேயே அமைந்திருக்கின்றன. தமிழகத்தில் காணப்படும் கோயில்களில் இடம்பெற்றுள்ள திருமால்கள் கிருஷ்ணராகவும், இராமனாகவுமே காட்சியளிக்கின்றனர்.

**“விண்ணுயிர் புட்கொடி விறல்வெய் யோனும்”**[219]

**“புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன”**[220]

**‘‘நீல்நிற உருவின் நேமியோறும் என்று’’** [221]

**‘‘ஆல்அமர் கடவுள் அன்னநின் செல்வம்’’** [222]

என்று நான்குப் பாடல்களில் திருமால் குறித்த பதிவுகளைப் புலவர்கள் பதிந்துள்ளனர். அதுவும் அவர் நிறம், அவரது வாகனம், கையில் வைத்திருக்கும் கொடி முதலானவை மேற்கண்ட பாடல்களில் இடம்பெற்றுள்ளன. திருமால் வேட்டையாடும் சமூக காலத்தின் பிற்பட்ட கடவுளாக இருந்திருக்க வேண்டும். காரணம் அவர் கழுகுமீது பயணம் மேற்கொண்டிருக்க வேண்டும் அல்லது கழுகை வைத்து வேட்டையாடி இருக்க வேண்டும். மேலை நாடுகளில் கழுகை வைத்து மலையை அடுத்த சமவெளி பகுதிகளில் வேட்டையாடும் மக்கள் இன்றும் தங்கள் வாழ்க்கையை அவ்வாறே வாழ்ந்து வருகின்றனர். மேலும் சிவன் முருகனைப் போலவே திருமாலும் பல பகுதிகளில் வழிபட்ட வெவ்வேறு உருவங்களின் தொகுப்பாக உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

### 2.10.15 ஏர் கலப்பை கடவுள்:

மகாபாரதத்தில் கண்ணனின் அண்ணனாக வரும் பலராமன் பற்றிய குறிப்பு புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. பாரதத்தில் பலராமன் கையில் ஏர் கலப்பை வைத்திருந்த நிலையினை சங்ககாலப் புலவர்களும் பதிவு செய்துள்ளனர்.

**‘‘கடல்வளர் புரிவளை புரையும் மேனி**
**அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோறும்’’** [223]

**‘‘பால்நிற உருவின் பனைக்கொடி யோறும்**
**நீல்நிற உருவின் நேமி யோறும் என்று**
**இருபெருஞ் தெய்வமும் உடன்நின் றாஅங்கு**
**உருகெழு தோற்றமொடு உட்குவர விளங்கி’’** [224]

என்று மதுரைக்கணக்காயனார் மகன் நக்கீரனும், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் குறிப்பிடுகின்றனர். இதில் பனைக்கொடியையும் சங்கு போன்ற வெண்மையான உருவத்தையும் பெற்றவராக இடம் பெற்றுள்ளனர். ஆனால் பலராமன் வழிபாடு தமிழகத்தில் இன்று காண முடிவதில்லை. ஆரியர் வேளாண்மை தெரியாதவர்களாக உள்ள நிலையில் ஏர்கலப்பையோடு வணங்கப்பட்ட பலராமன் வேளாண்மை குடியினரான திராவிடராகவே இருந்திருக்க வேண்டும். வைணவத்தை ஒரு குடையின்கீழ் கொண்டும் வரும்போது பலராமன் வைணவத்திற்குள் ஈர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.16 வேள்வி:

ஆரியர்களின் சடங்குகளில் இன்றியமையாதது வேள்வி. வேள்வி எல்லாநிலைகளிலும் ஆரியர்தம் வாழ்வில் கலந்ததாக உள்ளது. அவர்கள் எங்கே சென்றாலும் அச்சடங்கு

முறையினைத் தொடர்ந்து வந்தனர். அதனை மேற்கொண்டால் நன்மை ஏற்படும் என்று சென்ற பகுதியைச் சார்ந்த மன்னர்களுக்குக் கூறினர். மன்னர்களும் வேள்விச் செய்வதற்குத் துணைபுரிந்துள்ளனர். புறநானூற்றின் பல பாடல்களில் வேள்வி தொடர்பானப் பதிவுகள் காணப்படுகின்றன. இந்த வேள்வியினை வேள்வி, களவேள்வி என்று பிரிக்கின்றனர். புறநானூற்றின்கண் போருக்காக போர்க்களத்தில் நிகழ்த்தப்பட்ட களவேள்வி குறித்தப் பதிவுகளே மிகுதியும் இடம் பெற்றுள்ளன.

**‘‘நற்பனுவல் நால்வேதத்து**
**அருஞ்சீர்த்தப் பெருங்கண்ணுறை**
**நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்**
**வியாச் சிறப்பின் வேள்வி முற்றி’’** [225]

**‘‘அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய**
**ஆன்ற வேள்வி அடங்கிய கொள்கை’’** [226]

**‘‘அமரர்ப் பேணியும் ஆவுதி அருந்தியும்**
**அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்’’** [227]

**‘‘ஈரேழின் இடம் முட்டாது**
**நீர்நாண நெய்வழங்கியும்**
**எண்நாணப் பலவேட்கும்’’** [228]

**‘‘அறம் அறக் கண்ட நெறிமாண் அவையத்து**
**முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த**
**தூவியற் கொள்கைத் துகளறு கேளிரொடு**
**பருதி உருவின் பல்படைப் புரிசை**
**எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்**
**வேத வேள்வித் தொழில்முடித் ததூஉம்**
**அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்’’** [229]

என்று புறப்பாடல்களில் வேள்வி இயற்றும் விதம், வேள்வியில் நெய்யிடுதல், புகை எழும்புதல் என வேள்வி பற்றிய கருத்துக்கள் பதிவாகியுள்ளதை அறிய முடிகிறது. வேள்வி வாயிலாக இறைவனை தொடர்பு கொள்ள முடியும் என்ற கருத்துநிலை மிகவும் அழகானது. மேலும் தீ அல்லது ஒளி வழிபாட்டின் நீட்சி வேள்வி வழிபாடு என்பதனையும் அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.10.17 பார்ப்பனவாகை:

வடமொழியின் வேதத்தைக் கற்று, வேத முறைப்படி சடங்குகளை இயற்றும் பார்ப்பனருக்கென்று தனித்த பார்ப்பனவாகையை அமைத்துப் பாடல் புனைந்துள்ளனர் புலவர்கள். அங்ஙனம் மதுரை வேளாசான்,

**“வயலைக் கொடியின் வாடிய மருங்குல்**
**உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்**
**……………..**
**மாண்வினை யானையும் மணிகளைந்தனவே.”[230]**

என்ற பார்ப்பனர் ஒருவர் போரை நிறுத்திய கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். பார்ப்பனர்கள் வாயில்களாக அகப்பாடல்களிலும், வரிவசூலிக்கும் முறையினை மன்னர்களுக்கு எடுத்துக் கூறுபவர்களாகவும், ஒரு குடும்பத்திற்குள்ளே மனக்கசப்புகள் ஏற்படுவதை தீர்ப்பவர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

### 2.10.18 அவி உணவு:

வேள்வி இயற்றும் போது அதன் வழியாக இறைவனுக்கு உணவு வழங்குதலையே அவி உணவு என்கின்றனர். இது புறநானூற்றில் இரண்டுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது.

**‘‘வாடாப் பூவின் இமையா நாட்டத்து**
**நாற்ற உணவி னோரும் ஆற்ற**
**அரும்பெறல் உலகம் நிறைய**
**விருந்துபெற் றனரால் பொலிகனும் புகழே’’[231]**

என்று கழாத் தலையார், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் மற்றும் சோழன் வேற்ப.ஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி ஆகியோர் போரிட்டு விழுப்பிண்பட்டு வீழ்ந்து கிடக்கும்போது பாடியுள்ளார். இவரைப் போலவே உலோச்சனார் என்ற புலவரும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி தனக்குக் கொடுத்த கொடையை விளக்கும்போது அவி உணவு குறித்து குறிப்பிடுகின்றார்.

**‘‘இனையல் அகற்ற என்கிணை தொடாக்குறுகி**
**அவிஉணவினோர் புறங் காப்ப’’[232]**

என்று, தான் தடாரிப்பறையை வாசித்துச் சென்றதாகவும் அங்கே அவி உணவை உண்கின்ற தேவர்கள் வெளியே நின்று காத்துக்கொண்டு நிற்கின்றனர் என விவரிக்கின்றார். அதேபோல் ஔவையார்,

**“அமரர்ப் பேணியும் ஆவுதி அருந்தியும்**
**அரும்பெறல் மரபின் கரும்புஇவண் தந்தும்**
**நீர்அக இருக்கை ஆழி சூட்டிய”[233]**

என்று வானவரைப் போற்றி வழிபட்டும், அவர்களுக்கு வேள்வியில் செய்யப்படும் ஆவுதி என்ற அவி உணவைத் தந்தும் வழிபட்ட கருத்தினை குறிப்பிட்டுள்ளார். இதன்வழி ஆரிய வழிபாட்டு முறையை அறிந்துகொள்ள முடிகிறது

### 2.10.19 பெண் கைம்மை நோம்பு:

தமிழ்ச்சமூகம் தாய்வழிச் சமூகம் என்பர். பெண்ணால் வழிநடத்தப்பட்டச் சமூகமும் ஆகும். பெண்களுக்கு அன்றிலிருந்து இன்றுவரை சிறப்பிடம் கொடுத்ததும் தமிழ்ச்சமூகம்தான். தமிழ்ச்சமூகக் கட்டமைப்பு பெண் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் முன்னுரிமைக் கொடுத்த நிலையை இன்றுவரை காண முடிகிறது. ஆனால் ஆரியச் சமூகம் பெண் ஒடுக்குமுறையை முன்னெடுத்தது. ஆணை முதல் இடத்தில் வைத்து, பெண்ணை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது. இந்நிலையை இன்றும் காண முடிகிறது. பெண் ஒடுக்குமுறைச் சடங்குகளில் 'கைம்மை நோம்பு' மிகவும் கொடுமையானதாகும். இது ஆரியச் சடங்காகும். இதனை பண்டையத் தமிழகத்தில் காண முடிகிறது.

**"களங்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர**
**உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்**
**பாசடகு மிசையார் பன்நீா மூழ்கார்**
**மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே"[234]**

**"பிடிஅடி அன்ன சிறுவழி மெழுகித்**
**தன்அமா் காதலி பின்மேல் வைத்த**
**இன்சிறு பிண்டம் யாங்குஉண் டனன்கொல்"[235]**

**"தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்"[236]**

**"யாங்குப் பெரிது ஆயினும் நோய் அளவு எனைத்தே**
**உயிர்செகுக் கல்லா மதுகைன்று அன்மையின்**
**… … … …**
**இன்னும் வாழ்வில் என்இதன் பண்பே"[237]**

**"பல்சான்றிரே பல்சான்றிரே**
**செல்கெனச் செல்லாது ஒழிகென விலக்கும்**
**… … … …**
**நள்இரும் பொய்கையும் தீரம் ஒருற்றே"[238]**

**"யானை தந்த முளிமர விறகின்**
**காவவா் பொத்திய நெலிதீ விளக்கத்து**
**… … … …**
**இன்னுயிர் நடுங்குந்தன் இளமைபுறங் கொடுத்தே"[239]**

**"அறிய றாமே சிறுவெள்ளாம்பல்**
**இளையம் ஆகத் தழையா யினவே இனியே**
**… … … …**
**அல்லிப் படூஉம் புல்ஆ யினவே"[240]**
**"கதிர்மூர்க்கு ஆரல் கீழ்ச்சேற்று ஒளிப்பக்**
**… … …**
**மெழுகு ஆப்பிகண் கலுழ்நீ ரானே" [241]**

ஹ“கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியொடு இனியே
… … … …
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே”[242]

“வளையில் வறுங்கை ஓச்சிக்
கிளையுள் ஓய்வலோ கூறுநின் உரையே”[243]

“கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறுக் கலங்கி
கழிகலம் மகடூஉப் போலப்
புல்என் றனையால் பல்அணி இழந்தே”[244]

“மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதாம் உடுத்த அம்பகைத் தெரியல்
… … …
வழிநினைந்து இருத்தல் எதனினும் அரிதே” [245]

என்னும் பறநானூற்றுப் புலவர்களின் புதிவுகளின் வாயிலாக சங்க காலத்தில் ‘கைம்மை நோம்பு’ என்கிற வடமொழி சடங்குமுறை இருந்தது புலப்படுகிறது.

### 2.10.20 பெண் தீப்பாய்தல்:

உடன்கட்டை ஏறும் வழக்கம் அல்லது சடங்கு மிகவும் கொடுமையானது. சங்ககாலம் தாய்வழிச் சமூகத்தின் வீழ்ச்சியையும், ஆரியரின் தந்தை வழி சமூகத்தின் தொடர்ச்சியினையும் காட்டுகின்றது. உயிரோடு இருக்கும் பெண் கணவன் இறந்து எரியூட்டப்படும் தீயில் இறங்குவதென்பது மனித உரிமைக்கு எதிரானதாகும். இது பெண்ணடிமையின் உச்சம் என்பர். அப்படியான நிகழ்வு ஒன்றை புறநானூறு வெளிப்படுத்துகின்றது.

‘‘பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
… … …
பெருந்தோள் கணவன் மாய்ந்றென அரும்புஅற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள்இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே”[246]

“யானை தந்த முளிமர விறகின்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான்பெருநிரை வைகுதுயில் எழுப்பி
மந்தி சீக்கும் இருபுறம் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம தானேதன் கொழுநன்
முழவுகண் துயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமியள் ஆயினும்
இன்னுயிர் நடுங்குந்தன் இளமைபுறங் கொடுத்தே”[247]

என்று பூதப்பாண்டியன் மனைவியான பெருங்கோப்பெண்டு, பூதப்பாண்டியன் இறந்தபின்பு தீப்பாய போவதாக அவரே பாடியுள்ளார். இதுபோல தீப்பாய்ந்த பெண்களை பிற்காலங்களில் கடவுளாக 'தீப்பாய்ந்த அம்மன்' என்ற பெயரில் வழிபட்டுள்ளனர்.

### 2.10.21 சுடுகாடு:

ஒவ்வொரு இனத்திற்கென்று தனித்தப் பண்புகளும் இயல்புகளும் உள்ளன. பல பண்பாட்டுக் கலப்புகள் ஏற்பட்டாலும் அவ்வினத்துக்கென உள்ள இயல்புகளை மாற்ற இயலாது. அங்ஙனம் பண்டையத் தமிழர்களின் சடங்குகளில் ஒன்று இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம். இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கமானது தமிழர்களிடையே இன்றுவரை காணமுடிகின்றது. பிணங்களை எரியூட்டும் வழக்கம் ஆரியர்களுடையது. அவர்களது இம்முறை சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

**"எரிபுனக் குறவன் குறையல் அன்ன**
**கரிபுற விறகின் ஈம ஒள்அழல்"[248]**

**"பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்**
**காடுமுன் னினனே கட்கா முறுநன்" [249]**

**"இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ"[250]**

**"மேலோர் உலகம் எய்தினன் எனாஅப்**
**பொத்த அறையுள் போழ்வாய்க் கூகை**
**… … … …**
**வாடிய பசயிா ஆகிப் பிறர்" [251]**

**"தள்ளிபோகிய களரியம் பறந்தலை**
**வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து**
**ஒள்ளழற் பள்ளிப்பாயல் சேர்த்தி**
**ஞாங்கள் மாய்ந்தனள் மடந்தை"[252]**

**"கலம்செய் கோவே கலம்செய் கோவே**
**ஆச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய"[253]**

**"களரி பரந்து கள்ளி போகிப்**
**பகலும் கூவும் கூகையொடு பேழ்வாய்**
**ஈம விளக்கின் பேஎய் மகளிரொடு**
**அஞ்சுவர் தன்று இம்மஞ்சுபடு முதுகாடு**
**…………………..**
**துன்புறம் காண்போர்க் காண்பு அறியாதே"[254]**

**"ஈம விளக்கின் வெருவரப் பேரும்**
**காடுமுன் னினரே நாடுகொண்டோரும்"[255]**

**“கள்ளி போகிய களரி மருங்கின்**
**வெள்ளில் நிறுத்த பின்றைக் கள்ளொடு”**[256]

**“பகலும் கூவும் அக்லுள் ஆங்கண்**
**காடுகண் மறைத்த கல்லென் சுற்றமொடு”** [257]

**“இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்**
**காடுபதி யாகப் போகித் தத்தம்”**[258]

என்பது போன்ற பாடல்கள் வழி, சங்க காலத்தில் பிணங்களைச் சுடும் வழக்கம் செல்வந்தர்களிடம் இருந்ததை அறிய முடிகின்றது. இதனைவிட பல பாடல்கள் நடுகல் வழிப்பாட்டையும், இடுகாட்டையும் குறிப்பிடுகின்றன.

புறநானூறு வடநாட்டின் நிலவியல் கருத்துக்கள், வடமொழிச் சொற்கள், வடநாட்டின் நம்பிக்கைகள், சடங்குகள், வடநாட்டின் தெய்வங்கள், வேள்வி இயற்றிய கருத்துகள், பெண் தீப்பாய்ந்தது, கைம்மை நோம்பு மேற்கொள்வது, பிணங்களை சுடுவது உள்ளிட்ட கூறுகளை உள்ளடக்கி நிற்பதைக் காண முடிகிறது.

## 2.11 பதிற்றுப்பத்து:

சேரவேந்தர் ஒவ்வொருவரையும் பற்றிப் பத்துப்பாக்களாகச் சேரவேந்தர் பதின்மறைப் பற்றிய நூறு பாடல்களைக் கொண்டமையால், இந்த நூல் பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. இன்றுள்ள நூலில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

### 2.11.1 பாடப்பெற்ற சேர மன்னர்கள்:

இரண்டாம்பத்து உதியஞ் சேரலின் மகனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றியது: மூன்றாம்பத்து நெடுஞ்சேரலாதன் தம்பியான பல்யானைச் செல்கெழுக் குட்டுவனைப் பற்றியது: நான்காம் பத்து நெடுஞ்சேரலாதன் மகனான களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைப் பற்றியது. ஐந்தாம் பத்து நெடுஞ்சேரலாதன் மகனான செங்குட்டுவனைப் பற்றியது. ஆறாம் பத்து நெடுஞ்சேரலாதன் மகனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பற்றியது. ஏழாம் பத்து அந்துவஞ்சேரல் இரும்பொறையன் மகனான செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பற்றியது. எட்டாம் பத்து வாழியாதன் மகனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனான இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றியது. ஆக இவ்வெட்டுப் பத்துப்பாடல்களும் இரண்டு குடும்பத்தினரைப் பற்றியவையாகும்.

## 2.11.2 புலவர்கள் பெற்ற பரிசில்கள்:

மேற்கண்ட எட்டுப் பத்துப் பாடல்களையும் பாடிய புலவர்களுக்கு சேர மன்னர்கள் அளவற்ற பரிசு கொடுத்தாக பாடலின் தொடக்கப் பதிகம் குறிப்பிடுகின்றது. பாணர் மரபிலிருந்து புலவர் மரபிற்கு மாற்றமடைந்த பின்பு, பரிசில்கள் அளவு அதிகரித்து இருப்பதை காண முடிகிறது. சங்க கால பாணர்கள் பெரும்பான்மையாக வறுமை நிலையில் இருந்துள்ளனர். ஆனால் புலவர்களோ பல மன்னர்களுடன் நட்பு கொள்ளுதல், ஆலோசனை வழங்குதல் என அவர்களின் செல்வாக்கு அதிகரித்து மன்னரையே எச்சரிக்கும் அளவில்கூட உயர்ந்த இடத்தில் இருந்துள்ளது.

“இரண்டாம் பத்தைப் பாடியவன் குமட்டூர் கண்ணன் என்பவர். சேரமான் அவருக்கு உம்பற்காட்டைச் சேர்ந்த ஐந்நூறு ஊர்களைப் பிரமதேயமாகக் கொடுத்தான். தன் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் தென்பகுதி வருவாயில் முப்பத்தெட்டு ஆண்டுகள் பாகம் கொடுத்தான் என்று அவனைப் பற்றிய பதிகம் கூறுகிறது.

மூன்றாம் பத்தைப் பாடியவர் பாலைக் கௌதமனார். சேரன் அவர் விருப்பப்படி பத்து பெருவேள்விகளைச் செய்வித்து அவரையும் அவர் மனைவியையும் துறக்கம் புகுவித்தான். நான்காம் பத்தைப் பாடியவர் காப்பியாற்றுக் காப்பியனார் என்பவர். சேரன் அவருக்கு நாற்பது நூறாயிரம் பொன் பரிசளித்தான். தான் ஆண்ட நாட்டின் ஒரு பகுதியையும் கொடுத்தான். ஐந்தாம் பத்தைப் பாடியவர் பரணர் என்பவர். சேரன் உம்பற்காட்டு வரியை அவருக்கு அளித்தான்.

ஆறாம் பத்தைப் பாடியவர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்பவர். சேரன் அவருக்கு ஒன்பது காப்பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசிலாய் வழங்கினார். ஏழாம் பத்தைப் பாடியவர் கபிலர் என்பவர். சேரமன்னன் அவருக்கு நூறாயிரம் காணம் பரிசில் கொடுத்தான். ‘நன்றா’ என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் அவருக்கு வழங்கினான். எட்டாம் பத்தைப் பாடியவர் அரிசில் கிழார் என்பவர். சேரன் அவருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் வழங்கினான். தன் அரசாட்சியும் கொடுத்தான். புலவர் ஆட்சியை அவனிடமே ஒப்புவித்தார். தாம் அவனுக்கு அமைச்சராய் இருந்தார். ஒன்பதாம் பத்தைப் பாடியவர் பெருங்குன்றூர்கிழார் என்பவர். சேரன் அவருக்கு முப்பத்தோராயிரம் பொன் கொடுத்தான். அவருக்குத் தெரியாமல் ஓர் ஊரையும் மனையையும் வழங்கினான். அம்மனையில் செல்வத்தை நிரப்பினான்.”[259] என்று மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். இவற்றை நோக்கும் போது புலவர்களுக்கு சேரமன்னர்கள் ஏன் இவ்வளவு பரிசு கொடுக்க வேண்டுமென்ற ஐயம் இயல்பாக தோன்றுகிறது. சோழ, பாண்டிய மன்னர்களோடு ஒன்றிணைத்து பாரியை முற்றுகையிட்ட சேர மன்னர்கள், பாடல் பாடியதற்காக இத்தனை பொருளையும் நிலத்தையும் கொடுத்தது வியப்பளிக்கின்றது.

### 2.11.3 பதிற்றுப்பத்தில் சமயக் கருத்துக்கள்:

புறநூல்களில் சமயக் கருத்துக்கள் மிகுதியும் இடம்பெறுவதுண்டு. பதிற்றுப்பத்து புறநூலாகும். எனவே இதில் புறக் கருத்துக்களில் ஒன்றான சமயம் இடம்பெற்று இருப்பது இயல்பு. வரலாற்று ஆசிரியரான மா. இராசமாணிக்கனார் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள சமயக் கருத்துகளைப் பட்டியலிடுகின்றார்.

“முனிவர்கள் பிற உயிர்களுக்குத் தீங்கு நினையாதவர்: வாய்மை தவறாதவர்: பிறர் மதிக்கத்தக்க பெருமையினை உடையவர். அரசர்கள் அவர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்தனர். அம்முனிவர்கள் கடவுளர் என்று கூறப்பட்டனர் (21). உண்ணாநோன்பு மேற்கொண்ட விரதியர் கோவில்மணி அடித்தும் விடியற்காலையில் குளிர்ந்த நீர்த்துறைக்குச் சென்று நீராடுவர் பின்பு திருமாலின் அடியில் வணங்கி அப்பெருமாளை வாழ்த்திடுவர் (31). இங்குக் குறிப்பிட்ட திருமால் திருவனந்தபுரத்துத் திருமால் என்று பழைய உரைக்காரர் கூறியுள்ளனர் (31). இஃது உண்மையாயின், அவ்வூர்த் திருமால் சங்ககால முதலே புகழ்பெற்று வருபவர் என்பது அறியப்படும்.

பெருஞ்சேரல் இரும்பொறை அரியமறைப் பொருளை அறிவர் உரைப்பக்கேட்டான்; அவர் உரைத்த விரதங்களை மேற்கொண்டு ஒழுகினான்; அறிவு ஒழுக்கங்களால் உயர்ந்த நன்மக்கள் உள்ளம் மகிழும்படி வேள்விகளைச் செய்து முடித்தான் (74). அவர் தன் புரோகிதனைத் துறவு மேற்கொள்ளும்படி செய்தான். கொடை, மன அமைதி, செல்வம், மகப்பேறு, தெய்வ உணர்வு முதலியன தவமுடையார்க்கு உண்டாகும் என்பதை அறிவுறுத்தி அப்புரோகிதனை மன்னன் தவம் செய்யும்படி காட்டிற்கு அனுப்பினான்(74). இதனால் அம்மன்னன் தவத்தில் கொண்டிருந்த நம்பிக்கையை நன்குணர முடிகிறது.

பல்யானைச் செல்கெழு குட்டுவன் பாலைக் கௌதமனார் என்ற அந்தணப்புலவர் சொர்க்கம் செல்லும் பொருட்டு பெரும் பொருள் செலவிட்டுப் பத்துப் பெரு வேள்விகளை வேட்பித்தான் என்று அவனைப் பற்றிய பதிகம் கூறுகின்றது. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் வேதியர்க்குப் பசுக்களோடு குடநாட்டு ஓர் ஊரும் வழங்கினான். இக்கருத்துக்கள் அனைத்தும் சேரநாட்டில் வேதநெறி தழைத்து ஓங்கிய உண்மையை உணர்த்துவனவாகும்.”[260]

என்று மா.ராசாமாணிக்கம் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து சேரநாட்டில் வடநாட்டின் வேத வழக்கம் வழக்கில் இருந்ததை அறிய முடிகின்றது. புலவர்களால் சேரமன்னர்கள் ஒற்று ஆராய்தல், பிற நாட்டு மன்னர்களை உளவியல் அடிப்படையில் தாழ்வுபடுத்துவது, ஆலோசனை வழங்குவது போன்ற நன்மைகள் அடைந்தார்கள் என மேற்கண்ட பரிசு பொருட்களின்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.11.4 பதிற்றுப்பத்தில் வடமொழியாளரின் செல்வாக்கு:

வடமொழி பேசுவோரின் செல்வாக்கு அரசன் வரை இருந்ததுள்ளது. அவர்கள் குருவாகவும் அமைச்சர்களாகவும், புரோகிதர்களாகவும், புலவர்களாகவும் இருந்துள்ளனர்.

“முருகன் பிணிமுகம் என்னும் யானையை ஊர்ந்தமை (11). கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரதத்தின் குறிக்கப்பட்ட அக்குமரனின் ஈகைத்தன்மை (14) என்பன இந்நூலில் குறிக்கப்பட்ட கதைகளாகும்.

எட்டுப் பத்துக்களையும் பாடிய புலவர் எண்மருள் குமட்டூர் கண்ணனார், பாலை கோதமனார், பரணர், கபிலர் பற்றிய நால்வரும் அந்தணப் புலவர் ஆவர். இப்பாடல்களில் வேத வேள்விகள் குறிக்கப்பட்டுள்ளன. சான்றாகப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனார் விருப்பப்படி பத்துப்பெருவேள்விகளைச் செய்வித்தான்.

வேதங்களில் வல்ல மறையவரைச் சேரமன்னர் மதித்தனர்: அவர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்வித்தனர்; அவர்களுக்குப் பல ஊர்களை அளித்தனர். அவர்களைத் தம் குருமார்களாகக் கொண்டனர் என்பன போன்ற செய்திகள், அச்சேர வேந்தர் காலத்தல் வேதநெறியினர் சேரநாட்டில் பெற்றிருந்த செல்வாக்கை இனிது உணர்த்துவனவாகும்” [261] என்று மா. இராசமாணிக்கனார் குறிப்பிட்டுள்ளார். இது பார்ப்பனர் செல்வாக்கை உணர்ந்துகொள்ள ஏதுவாக அமைகின்றது.

### 2.11.5 இமயம்

வடநாட்டில் உயர்ந்து நிற்கும் மலையான இமயம் குறித்து பல இடங்களில் புலவர்கள் குறித்துள்ளனர். பதிற்றுப்பத்திலும் அத்தகைய பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

**“ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்”[262]**

**“கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை**
**வடதிசை எல்லை இமயமாகத்**
**தென்குமரி யொடாயிடையரசர்”[263]**

**“பெருமலை உயின் உயின் விலங்கும் அருமணி”[264]**

என்று, குமட்டூர்க் கண்ணனார், பரணர், நச்செள்ளையார் ஆகிய புலவர்கள் இமயம் குறித்தப் பதிவை குறித்துள்ளனர். இதிலிருந்து இமயம் குறித்த பதிவு பதிற்றுப்பத்தில் இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

### 2.11.6 ஆரியர்

பழந்தமிழகத்தின் வடக்கே பரந்து விரிந்து வாழ்ந்த இனம் ஆரிய இனம். இவ்வினம் குறித்தப் பதிவு பதிற்றுப்பத்தில் வருகின்றது.

**"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்"[265]**

**"பேரிசை மரபின் ஆரியர் வணங்கி"[266]**

என்று, பெரும் புகழுடைய ஆரிய மன்னர்களைப் போர்க்களத்தில் வெற்றி கொண்டு அவரை வணங்கச் செய்த சிறப்புப் பெற்றவன் என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார். ஆரியர் பற்றிய குறிப்பை ஆறாம் பத்தின் பதிகத்தில் நச்செள்ளையார்,

**"தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்**
**தொண்டியுள்தத்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்கு**
**கபிலையொடு குடநாட்டு ஓரூர் ஈத்து**
**வானவரம்பன் எனப்பேரினிது விளக்கி"[267]**

என்று குறிப்பிடுகின்றார். இதற்கு உரை எழுதியுள்ள அ.மாணிக்கம் சரித்திரக் குறிப்பொன்றைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு காலத்தில் தண்டகாரணியத்தில் ஆரியரின் ஆதிக்கம் இருந்தது. அவர்களுள் சிலர் சேரநாட்டுள் புகுந்து ஆடுகளைக் கவர்ந்து சென்றனர். அவற்றை இச்சேரன் மீட்டு வந்தான். இக்காரணத்தால் இவன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என வழங்கப்பெற்றான்"[268] எனக் குறிப்பிடுள்ளார்.

பரணர் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடிய ஐந்தாம் பத்தில் வடநாடு பற்றியும், ஆரியரைப் பற்றியும்,

**"வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக்**
**குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச்**
**சோழன் மணக்கிள்ளியின்ற மகன்**
**கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டிக்**
**கான்நவில் கானம் கணையில் போகி**
**ஆரிய அண்ணலை வீட்டிய பேரிசை**
**இன்பல் அருவிக் கங்கை மண்ணி**
**இனந் தெரிபல்லான் கன்றொடு கொண்டு**
**மாறா வல்வில் இடும்பில் புறத்திறுத்து"[269]**

என்று குறிப்பிட்டுள்ளார். வடநாட்டு மன்னர் அச்சம் கொள்ள விளங்கிய கொடியை உடையவன். சேர நாட்டவரின் மன்னன் கடவுள் தன்மை பெற்ற பத்தினியாம் கண்ணகிக்குச் சிலை சமைப்பதற்குரிய கல்லைக் கொள்ள விரும்பி எண்ணினான். எண்ணிய வண்ணம் முடிக்க, காட்டு

வழியில் அம்பைப் போன்று விரைவாய்ச் சென்றான். ஆரிய மன்னரைப் போரில் வீழ்த்தினான். பெரும்புகழினை உடைய இனிய பல அருவிகளைக் கொண்ட கங்கையில் அக்கல்லை நீராட்டினான் என்று ஒரு சரித்திரக் குறிப்பை பரணர் விளக்கியுள்ளார். இதனால் ஆரியரை தமிழ் மன்னர்கள் படையெடுத்து வென்ற குறிப்பை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.11.7 முருகன்:

ஆரிய முருகனாக மடைமாற்றம் செய்யப்பெற்ற கார்த்திகேய முருகனை பதிற்றுப்பத்துப் பதிவு செய்துள்ளது.

**"வரைமருள் புணரி வான்பிசி ருடைய**
**வளிபாய்ந்தட்ட துளங்கிருங் கமஞ்சூல்**
**நளி இரும் பரப்பின் மாக்கடல் முன்னி**
**அணங்குடை அவுணர்ஏமம் புணர்க்கும்**
**சூருடை முழு முதல் தடித்த பேரிசைக்"**[270]

என்று குமட்டூர்க் கண்ணனார் நெடுஞ்சேரலாதனை போற்றிப் பாடும்போது, மலை போல் உயர்ந்து எழும் அலைகள் வெண்மையாக சிறு துளிகளாக உடையும்படி காற்று அவற்றினிடையே வீசிச் சிதைகின்றது. இத்தகைய நிறைந்த நீரையுடைய மிக்க பரப்பையுடைய கரிய கடல், அதனுள் போய், அவுணர் கூட்டமாய்க் கூடியிருந்து காவல் செய்யும் சூரபன்மனின் மாமரத்தை வேருடன் வெட்டிக்குறைத்த கொடிய சினமும் வீரமும் உடைய முருகனைப்போல என்று உவமையாகக் குறிப்பிடுகின்றார். இவரைப்போலவே ஆரிய முருகனை பாலைக் கௌதமனார்,

**"பெயில் மழை புரவின்றாகி வெய்துற்று**
**வலிமனிறம்ம காலையது பண்பெனக்**
**கண்மணி மலர்நிறை தாங்கிக் கைபுடையது**
**… … …**
**திருந்து தொழில் வாயவ சீறிய நாடே"**[271]

என்று, முருகன் சினந்து போரிட்டத்தை எடுத்துரைத்துள்ளார்.

### 2.11.8 புராணம்:

வடமொழியின் இலக்கிய வடிவங்களுள் புராணங்களுக்குத் தனியிடம் உண்டு. புராணங்கள் சமயக் கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன. குறிப்பாக சிவன், விஷ்ணுவின் கதைகளாகவே அவைகள் விளங்குகின்றன. பதிற்றுப்பத்தின் 5-ஆம் பத்தினைப் பாடிய பரணர்,

**"போர்தலை மிகுந்த ஈரைம் பதின்மரொடு**
**துப்புத்துறைபோகிய துணிவுடை ஆண்மை**
**ஆக்குரல் அனைய கைவண்மையையே"**[272]

என்று, மகாபாரதத்தில் வரும் கௌரவர்கள் குறித்தும் கொடை வள்ளல் அக்குரன் என்று கருதப்படும் கர்ணன் என்ற கதாப்பாத்திரம் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

### 2.11.9 பார்ப்பனர்:

பார்ப்பனர்களை மன்னர்கள் வணங்கிப்போற்றிப் புகழ்ந்ததோடு அவர்கள் வேண்டுவனவற்றை கொடுத்துள்ளனர். இந்நிலை சேர, சோழ, பாண்டிய, குறுநில மன்னர்கள் வரை தொடர்ந்துள்ளது.

**“தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்**
**தொண்டியுள்தந்து கொடுப்பித்துப் பர்ர்ப்பார்க்கு”**[273]

**“பார்ப்பார்க்கு அல்லது பணிபறியலையே**
**பணியா உள்ளமொணிவரக் கெழீஇ”**[274]

**“அறங்கரைந்து வங்கிய நாவிற் பிறங்கிய**
**உரைசால் வேள்வி முடித்த கேள்வி**
**அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்டு**
**இருஞ்சேறாடிய மணல்மலி முற்றத்து”**[275]

என்று, கபிலர் பார்ப்பனர்கள் பற்றிய குறிப்புகளைப் பதிந்துள்ளார். வாழியாதனைப் புகழும்போது பார்ப்பனரை அல்லாது மற்றவரை பணியமாட்டாய் என்கிறார். மேலும் அடுத்தப்பாடலில் அறநூல்களை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தும் வேள்விகள் பல இயற்றும் இயல்புடைய அந்தணர்களுக்கு அணிகலன்களை நீர்வார்த்து கொடுப்பாய் என ஆரிய நீர்வார்த்து கொடுக்கும் சடங்கினையும் குறிப்பிட்டுள்ளார் கபிலர்.

### 2.11.10 வேள்வி:

உலகெங்கும் வாழும் பெரும்பாலான மக்கள் மனித ஆற்றலை விஞ்சும் சக்தி ஒன்றுள்ளதென்று நம்புகின்றனர். அது ஆபத்து காலங்களில் தம்மை காப்பாற்றும் என்றும் நம்பிக்கைக் கொண்டிருக்கின்றனர். அந்த நம்பிக்கையை வெளிப்படுத்த ஒவ்வொரு இனக்குழுவும் வேறுபட்ட சடங்குமுறையினை கொண்டிருந்தனர். அதில் ஆரியர்கள் வேள்வி மூலம் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்த முடியும் என்று நம்பினர். வேள்வி வாயிலாகவே இறைவனுக்குத் தேவையான உணவினையும் அளித்தனர். அங்ஙனம் பதிற்றுப்பத்தில் 21-ஆம் பாடல் முழுவதும் வேள்விப்பற்றி குறிப்பிட்டுள்ளார் பாலை கௌதமனார்.

**“சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சம் என்று**
**ஐந்துடன் போற்றிஅ வை துணையாக**
**எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கை**
**காலையன்ன, சீர்சால் வாய்மொழி**
**உருகெழு மரபில் நடவுட் பேணியர்**
**கொண்ட தீயின் சுடரெழுதோறும்**
**விரும்பு மெய் பரந்த பெரும் பெயர் ஆவுதி**

**… … …**
**… … …**
**வேயுறழ் பணைத் தோளிவளோடு**
**ஆயிர வெள்ளம் வாழிய பலவே."[276]**

என்ற இப்பாடலுக்கு தொகுப்பாசிரியர்கள் 'அடுநெய் ஆவுதி' என பெயரிட்டே பாடலைத் தொகுத்துள்ளனர். இதில் வேள்வித்தீ, அதிலிருந்து வெளிப்படும் தீ என்று பாடல் முழுவதும் வேள்வி பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

வேதம் ஓதுதல், அவற்றைப் பயிற்றுவித்தல் குறித்து குறிப்பிடும் பாலை கௌதமனார்.

**"ஓதல் வேடடல் அவைபிறர்ச் செய்தல்**
**ஈதல் ஏற்றலென்று ஆறுபுரிந்தொழுடும்**
**அறம்புரி அந்தணர் வழிமொழிந்தொழுகி**
**ஞாலநின்வழி ஒழுகப்பாடல் சான்று**
**நாடுடன் விளங்கு நாடா நல்லிசைத்**
**திருந்திய இயன்மொழித் திருந்திழைகணவ"[277]**

என, வேதம் ஓதல், வேட்டல் அவையிரண்டையும் பிறர் செய்யச் செய்தல், வேள்வியை இயற்றல் போன்றவற்றை எடுத்துக் கூறியுள்ளார். இதனைப் போல கபிலர் ஏழாம் பத்தின் பதிகத்தில்,

**"ஏத்தல்சான்ற இடனுடைவேள்வி**
**ஆக்கிய பொழுதின் அறத்துறைபோகி"[278]**

என்று செல்வக்கடுங்கோ வாழியாதன் பல வேள்விகளை இயற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். எட்டாம் பத்தினைப் பாடிய அரிசில்கிழாரும் வேள்விப் பற்றியக் குறிப்பினைப் பதிந்துள்ளார்.

**"கேள்வி கேட்டுப் படிவம் ஓடியாது**
**வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்பச்**
**சாய்அறல் கடுக்கும் தாழிருங் கூந்தல்"[279]**

என்று, வேள்வி செய்யும் வேத முறைகளையும், அவற்றுக்கு உரிய விரதங்களுள் எதுவும் குறைவின்றி மேற்கொண்டு வேள்விகளை செய்துமுடித்தவர் பெருஞ்சேரலிரும்பொறை என்று போற்றுகிறார்.

பெருங்குன்றூர்கிழார் இளஞ்சேரலிரும்பொறையை ஒன்பதாம் பத்தில் பாடும் போது வேள்வி குறித்தும் வேள்வித் தலைவன் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

**"புரையறுகேள்விப் புரோசு மயக்கி**
**அருந்திறல் மரபின் பெருந்சதுக் கமர்ந்த"[280]**

என்று, வேள்வி இயற்றும் புரோகிதனைவிட சிறந்தவனாக தன்னை இளஞ்சேரல் இரும்பொறை ஆக்கியதாக, அதாவது 'வேள்வித் தலைவனாக' என விளக்குகிறார். அந்த அளவிற்கு

சேரமன்னர்கள் வடமொழிச் சடங்காம் வேள்வியியற்றுதலுக்கு முன்னுரிமை கொடுத்திருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது.

### 2.11.11 வைதீக சடங்குகள்:

சேரமன்னர்கள் வைதீக சடங்குகளை மிகுதியும் செய்துள்ளனர், அதுகுறித்து ராஜ்கௌதமன்,

"கி.மு -1 முதல் கி.பி. - 3ஆம் நூற்றாண்டுவரை ஆண்டதாக அறியப்பட்ட மூவேந்தர்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் இன்னும் மறையாமல் எச்சங்களாகப் பல்வேறு சடங்குகளில் படிந்திருந்த பெருங்கற்காலத்தைச் சேர்ந்த மிகவும் புராதனமான கலாச்சார அம்சங்கள் உள்ளன. இதே காலகட்டத்தில் அம்மூவேந்தர்தம் ஆட்சி இறையாண்மைக்கு மரபான பிறப்புத் தகுதியோடு கூட புதிய வைதீக 'தருமங்கள்' தேவைப்பட்டது என்பதைப் புலவர் மரபால் அறியலாம். குறிப்பாகச் சேரவேந்தர் பற்றிய பதிற்றுப்பத்துப் பாடல்கள் சேரவேந்தரின் ஆளும் குடிகளிடையே நன்கு பரவிய வைதீக தருமங்களைக் குறித்துள்ளன. பதிற்றுப்பத்துப் பாடி பிரமதாயம் பெற்ற குமட்டூர்க்கண்ணனும், ஒன்பது பெரும் வேள்விகளை வேட்பிக்கக் கேட்ட பாலைக் கௌதமனும், கபிலனும், பிராமணப் புலவர்கள் ஆவர். பிராமண வருணத்தின் தலைமை இடத்தை மூன்றாம் பத்தில் பாலைக் கௌதமன் ஐயத்திற்கிடமின்றி முன்மொழிந்துள்ளார்."[281] என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து பிராமணரின் செல்வாக்கு சேரர்களிடம் நிறைந்திருந்ததை அறிய முடிகிறது.

### 2.11.12 அருந்ததி:

பதிற்றுப்பத்தில் இரண்டு இடங்களில் நான்காம் பத்தில் அருந்ததி பற்றிய குறிப்புகள் வருகின்றன. அதனை விளக்கும் காப்பியாற்று காப்பியனார்,

**"ஒலித்தகூந்தல் அறஞ்சால் கற்பின்**
**குழைக்கு விளக்காகிய ஒண்ணுதல் பொன்னின்**
**இழைக்கு விளக்காஇய அவ்வாங்குந்தி**
**விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த"[282]**

என்று, அரசியை வான் உலகத்தில் இயங்கும் அருந்ததிக்கு ஒப்பாக குறிப்பிட்டுள்ளார். ஒன்பதாம் பத்தினை இயற்றிய பெருங்குன்றூர்க்கிழார்,

**"வாழ்நாளறியும் வயங்குசுடர் நோக்கத்து**
**மீனொடு புரையும் கற்பின்**
**வாணுதல் அரிவையொடு காண்வரப் பொலிந்தே"[283]**

என்று, “ஒளியுடைய அருந்ததி போன்ற கற்பையும், ஒளியுடைய நெற்றியையும் உடைய அரிவையான உனது மனைவியுடன் அழகுடன் நீ நோயின்றி வாழ்வாய்” எனப் போற்றுகின்றார்.

பதிற்றுப்பத்தில் சமயக் கருத்துக்கள், வடமொழியாளரின் செல்வாக்கு, இமயம் குறித்தப் பதிவுகள், வடநாட்டினராகிய ஆரியர் தொடர்பான குறிப்புகள், வடமொழி புராணங்கள் குறிப்பிடும் கார்த்திகேய முருகன் பற்றிய கருத்துகள், வடமொழியின் இலக்கிய வடிவமான புராணம் குறித்தக் குறிப்புகள், பார்ப்பனர் பற்றிய பதிவுகள், சேரநாட்டில் வேள்வி இயற்றிய முறைகள், வைதீக நியதிகள், வடமொழியாளர் குறிப்பிடும் கற்பின் அடையாளமான அருந்ததி குறித்தக் கருத்துகள் என வடமொழிக் கூறுகள் இடம்பெற்றிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## 2.12 பரிபாடல்:

‘பரிபா’ என்னும் இசைப்பாக்களால் தொகுக்கப்பெற்றமையால் இப்பாடல்களின் தொகுதி பரிபாடல் எனப் பெயர் பெற்றது. அழிந்தன போக இன்று இந்நூலில் இருப்பவை இருபத்திரண்டு பாடல்களாகும். இவற்றுள் திருமால் பற்றியவை ஆறு, முருகனைப் பற்றியவை எட்டு, வையைப் பற்றியவை எட்டு ஆகும். ஆசிரியர்கள் நல்லந்துவனார், இளம்பெருவழுதியார், கடுவன் இளவெயினார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழுசியார், நல்லெழுனியார், நல்ல வழுதியார், மையோடக்கோவனார் ஆகிய பதின்மூன்றுபேர் இந்நூற் பாடல்களைப் பாடியுள்ளனர். டாக்டர் உ.வே.சாமிநாதையர் இந்நூலைப் பதிப்பித்தார்.

### 2.12.1 பரிபாடல் வைப்பு முறை:

சங்கப்பாடல்களின் சமயம் ஆங்காங்கே இலைமறைக் காயாகவும் காட்டப்பட்டிருக்கும் நிலையில் பரிபாடல் வைப்புமுறையே சமயம் சார்ந்ததாக அமைந்திருக்கின்றது. இதனை,

> **“திருமாற்கு இருநான்கு செவ்வேட்கு முப்பத்**
> **தொரு பாட்டு காடுகிழாட் கொன்று – மருவிளியனி**
> **வையை இருப்பத்தாறு மாமதுரை நான்கென்ப**
> **செய்ய பரிபாடல் திறம்”**[284]

என்று குறிப்பிடுகின்றது வெண்பா. வெண்பாவில் மேற்கண்ட எண்ணிக்கைகள் காணப்பட்டாலும் இப்போது கிடைப்பவை இருபத்திரண்டு மட்டுமே ஆகும். மேலும் தொல்காப்பிய உரை முதலியவற்றால் கிடைப்பன பதினொன்று. இப்பதினொன்றும் முழுமையாக உடையவை அல்ல. இவை இசை பொருந்திய பாடல்கள் ஆகும். ஆகவே இதற்கு இசை அமைத்தனர். பிற்காலத்தில் தேவார திவ்விய பிரபந்த நூல்கள் தோன்றக் காரணமாக பரிபாடல் அமைந்துள்ளது.

### 2.12.2 பரிபாடலின் காலம்:

இந்நூலுக்கு பரிமேலழகர் உரை செய்துள்ளார். இதன் காலத்தைப் பற்றி குறிப்பிடுகையில் உரையாசிரியர்களில் ஒருவரான அ. மாணிக்கம், “இதில் வடமொழிப் புராணக்கதைகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இவை பிற்காலத்து எழுந்தனவோ என எண்ணத் தோன்றுகின்றது. அறிஞர் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. முதல் நூற்றாண்டிற்கு இடைப்பட்டது எனக் கருதுவர்”[285] எனக் கூறுவதிலிருந்து பரிபாடலின் காலத்தை அறிய முடிகின்றது. தொல்காப்பியத்தில் ‘பரிபா’ வகை குறித்து குறிப்பிட்டு இருப்பதால் இதன் காலத்தை முன்னோக்கி பார்ப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

### 2.12.3 பரிபாடல் குறித்து தொல்காப்பியம்:

பரிபாடல் என்ற பாவகை பற்றித் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

> **“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
> **பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
> **கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
> **உரியதாகும் என்மனார் புலவர்”[286]**

எனத் தொல்காப்பியர், தமிழுக்கே உரிய தனி இலக்கணமாகத் திகழும் அகப்பொருள் இலக்கணத்தை கலி மற்றும் பரிபாடலால் பாடுவது வழக்கம் என்று குறிப்பிடுகின்றார்.

### 2.12.4 பரிபாடலில் உள்ள வடசொற்கள்:

எட்டுத்தொகை நூல்கள் பலவற்றிலும் வடசொற்கள் காணப்படும் நிலையில் பரிபாடலிலும் பல வடசொற்கள் இடம்பெற்றுள்ளன. அவைகள் குறித்து, டாக்டர் மா. இராசமாணிக்கனார்,

“நேமி(1); கமலம், நித்திலம், மதாணி, ஆசான்(2) ; பிருங்கலாதன் (4) ; மாதவர், பதுமம், குணம், போசம் (5) ; கவிதை, ஆராதனை, சாரிகை, சலதாரி, காமன்(6) ; மேகலை, வாகுவலயம், சிரம்(7) ; காரணம், தமனியம், குடாரி, அருச்சித்தல், அமிர்தபானம்(8) ; நயனம், தடாகம்(9) ; சனம், சரணத்தார், அத்திரி, தண்டம், திசைசலம்(10) ; மிதுனம், மகரம், சையம், நதி, கன்னி, அம்பா(11) ; அரவிந்தம், மந்தகம், முஞ்சம், கங்கை(16)˙ சுருதி (18) ˙ ரதி, காமன், இந்திரன், அகலிகை, கவுதமன், சோபனம்(19) ˙ கணிகை, சிந்திக்க, வந்திக்க, வச்சிய வசீகரித்தலையுடைய(20) ˙ சருமம், மண்டிலம்(21)”[287] என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து பரிபாடல் இயற்றப்பெற்ற காலத்தில் வடசொற்கள் மிகுதியாக பயன்பாட்டில் இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.12.5 வடமொழிப்பெயர் மொழிபெயர்ப்பு:

வடசொற்கள் குறித்து தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு தமிழ் மொழியில் கலக்கும் சொற்களைத் தமிழ்மொழிக்கு ஏற்றவாறு மொழிபெயர்த்து வழங்குவது மொழிபெயர்க்காமல் ஒலிபெயர்த்து குறிப்பிடுவது ஆகிய நிலைகளில் அமைக்கும் வழக்கத்தை சங்ககால மொழி அறிஞர்கள் மேற்கொண்டுள்ளனர். அங்ஙனம் பரிபாடலில் வடமொழிப் பெயர்கள் சிலவற்றை பின்வரும் பாடல்களில் புலவர்கள் மொழிபெயர்த்துள்ளதாக டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

“(1) கண்ணன் குதிரை உருவத்தில் வந்து போரிட்ட கேசி என்னும் அசுரனைக் கொன்றான். இப்பெயர் ‘கேசம்’ என்னும் வடமொழி முதல் நிலையாக முடிந்தமையின் அதன்பொருள் பற்றிக் கடுவன் இள எயினார் என்ற புலவர் ‘ கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல்’ (3,வரி 31) என்றார்.

(2) அவரே மேருமலையை அப்பெயரால் குறியாது ‘நடுவண் ஓங்கிய பலர் புகழ்குன்று’ (4-24) என்று மாற்றிக் கூறியுள்ளார்.

(3) கற்பிற் சிறந்தவரும் தெய்வத்தன்மை பொருந்தியவருமாகிய அருந்ததியை அவ்வாசிரியரே, ‘கடவுள் ஒருமீன் சாலினி’ (5-44) என்று குறித்துள்ளார்.

(4) ஆசிரியன் நல்லந்துவனார் என்ற புலவர் பல விண்மீன்களின் பெயர்களைத் தமிழில் மாற்றியுள்ளளார். கார்த்திகை – எரி, திருவாதிரை – சடை, பரணி – வேழம், இராசி - இருக்கை (11, வரி 1-3)” [288]

என்று குறிப்பிடுகின்றார் இராசமாணிக்கனார். இதன் வாயிலாக வடமொழிச் சொற்களை மொழிபெயர்க்கும் அளவிற்கு மொழியியல் ஆராய்ச்சி சங்ககாலத் தமிழகத்தில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

### 2.12.6 பரிபாடல் உரையாசிரியர்:

பரிபாடலுக்கு உரையெழுதியவர் பரிமேலழகர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் திருக்குறளுக்கும் உரைகண்டவர் ஆவார். பரிமேலழகர் சமயம் குறித்து, வர்தமானன் பதிப்பு கூறுகையில்,

“இந்நூல் உரைப்பாயிரத்தில் நீணிலங் கடந்தோன் தாள்தொழு மரபின் ‘பரிமேலழகன்’ என்று கூறப்பட்டுள்ளது. இதனால் இவர் திருமால் அடியவர் - வைணவர் என உணர்கின்றோம்.

அருச்சகரில் பலர் முன்காலத்தில் வடமொழி தென்மொழிகளில் சிறந்த பயிற்சியுள்ளவர்களாக இருந்தனர் என்பதற்குக் கச்சியப்பச் சிவாச்சாரியர் முதலியவர் சான்றாவார். இவர் வைணவராயினும் சிவபெருமான் செவ்வேள் பற்றி எழுதும் இடங்களில் அவரவர் பெருமைகளைக் குறைவுபடாமல் விரித்து எழுதிச் சென்றுள்ளார்." [289]

என்று குறிப்பிடுகின்றது. இதிலிருந்து பரிமேலழகர் வடநாட்டின் சமயமான வைணவத்தைச் சார்ந்தவர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

### 2.12.7 பலதேவன்:

பலதேவன் தோற்றம் குறித்து பரிபாடலில் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

**"சேய் உயர் பணைமிசை எழில் வேழம் ஏந்திய**
**வாய் வாங்கும் வளை நாஞ்சில் ஒருகுழை ஒருவளை"** [290]

என்று, "அழகிய யானைக்கொடியை உயர்த்தியவனும் கூர்மையான வளைந்த கலப்பைப் படையை உடையவனும், ஒரு காதில் அணிந்த காதணியை உடையவனும் ஆன பலதேவனாய் நீ விளங்குகின்றாய்" என்று பலதேவனையே கண்ணனாகக் குறிப்பிடுகின்றார். இதனைப் போலவே கீரந்தையாரும் பலதேவன் குறிப்பொன்றை தெரிவித்துள்ளார்.

**"நீயே வளையொடு புரையும் வாலியோற்கு அவன்**
**இளையன் என்போர்க்கு இளையை ஆதலும்**
**புதை இருள் உடுக்கைப் பொலம் பனைக்கொடியோற்கு**
**முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்"** [291]

என கண்ணன் பலதேவனுக்கு இளையவன் என்பதும், அவர் இருள் போன்ற ஆடையை உடைய பனைக் கொடியுடைய பலதேவனுக்குச் சிறப்பினால் கண்ணன் உயர்ந்தவன் ஆனான் என்றும் குறிப்பிடுகின்றார் கீரந்தையார். இவர்,

**"மறம் மிகு மலி ஒலி மாறு அடு தானையால்**
**திறன் இகத்துவரூஉம் அவர் உயிர் அகற்றும்**
**விறல் மிகு வலி ஒலி பொலிவு அகழ் புழுதியின்**
**நிறன் உழும் வளைவாய் நாஞ்சிலோனும்"** [292]

என்று நல்லெழுதியார், புழுதியை உழுவதைப்போல் பகைவரின் மார்பை உழுகின்ற வளைந்த வாயையுடைய கலப்பைப் படையை உடைய பலதேவன் என்று கண்ணனை போற்றும்போது பலதேவனைப் போற்றுகின்றார்.

### 2.12.8 கேள்வி:

வேள்வி குறித்த பதிவுகள் சங்க இலக்கிய நூல்களில் ஆங்காங்கே காணக்கிடப்பதைப்போல் பரிபாடலிலும் காணமுடிகிறது. அங்ஙனம் கீரந்தையார் திருமால் குறித்து பாடும் பாடலில் வேள்வி குறிப்பினை,

**‘‘கெடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்’’**[293]

என குறிப்பிட்டுள்ளார். நல்லெழுதியாரும் திருமாலைப் போற்றிப் பாடுகையில்,

**‘‘கேள்வி அறிவும் அறத்தொடு நுண்ணியை**

**வேள்வியும் மறனும் விருப்பொடு வெய்மை’’** [294]

என திருமால் வேள்வியிடம் விருப்பம் உடையவன் என்று விளக்குகிறார். வேள்வியின் வாயிலாக இறைவனுக்கு உணவு படைக்கும் வழக்கத்தை ஆரியர்கள் கொண்டிருந்த நிலையில் திருமாலே வேள்விமீது விருப்பம் கொண்டிருந்தார் என குறிப்பிடுவதன் வாயிலாக, ஆரியர்கள் வேள்வி இயற்றுதலில் கொண்டிருந்த நம்பிக்கையை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.12.9 அந்தணர்:

வேள்வி இயற்றுதல், வேதம் ஓதுதல். வேதத்தின் வாயிலாக இறைவனை தொடர்புகொண்டு தனக்கு வேண்டியவற்றை கேட்கவும், தான் கேட்டவற்றை இறைவன் தந்தால், தான் தன்னிடம் இருக்கும் பொருட்களை வேள்வியின் வாயிலாக இறைவனுக்குத் தருவதான ஒப்பந்தத்தை ஆரியர்கள் செய்துகொண்டுள்ளனர். அங்ஙனம் வேதம் ஓதிக்கொண்டு வேள்வி இயற்றும் அந்தணர் குறித்து பரிபாடலில் பதிவுகள் காணப்படுகின்றன.

**‘‘நா வல் அந்தணர் அருமறைப் பொருளே’’**[295]

**‘‘சாயல் நின வான் நிறை என்னும்**
**நா வல் அந்தணர் அருமறைப் பொருளே’’**[296]

**‘‘ஏனோர் நின் வலத்தினதே**
**ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ’’**[297]

**‘‘புலம்புரி அந்தணர் கலங்கிளர் மருண்டு’’**[298]

**‘‘மா இருந் திங்கள் மறுநிறை ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்**
**புரிநூல் அந்தணர் பொலம்கலம் ஏற்ப**
**வெம்பாதாகவியல் நில வரைப்பு என**
**அம்பா ஆடலின் ஆய் தொடிக் கன்னியர்**
**முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட**
**புனிப் புலர்பு ஆடிப் பருமணல் அருவியின்**
**ஊதை ஊர்தர உறைசிறை வேதியர்’’**[299]

என பல்வேறு குறிப்புகள் பரிபாடலின்கண் காணப்படுகின்றன. வேதம் ஓதியவர்கள் வேதியர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### 2.12.10 வேதம்:

வடமொழியின் இலக்கிய வடிவங்களில் முதன்மையானதாக விளங்கும் வேதம் பற்றிய பதிவுகள் பரிபாடலில் காணக்கிடக்கின்றன. அது நான்மறை, மறை, கேள்வி ஆகிய சொற்களினாலும் அழைக்கப்படுகின்றன.

**‘‘ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்**
**வாய்மொழிப் புலவ நின்தாள் நிழல் தொழுதே’’**[300]

**‘‘கெடு இல் கேள்வியுள் நடு ஆகுதலும்**
**கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும்’’**[301]

என்று கீரந்தையார் வேதம் பற்றி குறிப்பிட்டுள்ளார். இவரைப் போலவே கடுவனிள எயினனார்,

**‘‘தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்**
**ஞாயிறுந்த திங்களு மறறு மைவரும்**
**திதியின் சிறாரும் விதியின் மக்களும்**
**………………………………………**
**தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும்**
**நீஎன மொழியுயுமால் அந்தணர் அருமறை’’**[302]

எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் வேதம் குறிப்பிடும் கருத்துக்களாக உரையாசிரியர் அ.மாணிக்கம்,

‘‘தீ, காற்று, வானம், நிலம், நீர் என்ற ஐந்து பூதங்களும் ஞாயிறும் திங்களும் வேள்வி முதல்வனும் கோள்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஐவரும் அசுரர்களும் விதியின் மக்களான ஆதித்தர் பன்னிருவரும் (எண்மர் - வசுக்கள் எட்டுப்பேர் ; இவர்கள் நான்முகனின் மைந்தர்கள் ; அனலன், அணிலன், ஆபத்ரசவான், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷன், பிரபாசன்) (கபிலர் - ஏகாதச உருத்திரர் ; அவர்கள் பதினொருவர்) (தாமா இருவர் - அசுவினிதேவர், ஆதித்தன். உருப்பசி என்பவள் பெண் குதிரையாகியிருப்பதைக் கண்டு தானும் குதிரை வடிவு கொண்டு அவளிடம் சென்றான். அப்போது அவனது நாசித் துளைகளில் இரண்டு வீரிய வித்துக்கள் விழுந்தன. அவ்விரண்டும் அசுவினி தேவராய் ஆயின) குற்றம் அற்ற எட்டு வசுக்களும் உருத்திரர் பதினொருவரும் அசுவினி தேவர் இருவரும் இயமனும் அவனுடைய ஏவலனான கூற்றுவனும், இருபத்தொரு உலகங்களும் அவ்வுலகத்தில் வாழும் உயிர்க்கூட்டங்களும் ஆகி விரிந்து விளங்குபவனே. இவ்வாறு நின்னிடத்துத் தோன்றியவற்றை வேதம் கூறும். அந்த உண்மை மொழியான வேதம் என்ற ஓடையில் மலர்ந்த தாமரை மலரில் பிறந்த நான்முகனும் அவனுடைய தந்தையும் நீயே ஆவாய் என்று அவ்வேதங்கள் சொல்லும்’’[303]

என்று குறிப்பிடுவதிலிருந்து வேதத்தின் ஆழத்தை அறிந்துகொள்ள முடிகின்றது. அதேபோல சாமவேதம் பற்றிய குறிப்பையும் கடுவனிள எயினனார்,

**''திணி நிலம் கடந்தக்கால் திரிந்து அயர்ந்து அகன்று ஓடி**
**நின் அஞ்சிக் கடற் பாய்ந்த பணி நெகிழ்பு அவிழ்தண்தார்**
**………………………………………………………..**
**வகையும் உண்டோ நின் மரபு அறிவோர்க்கே''**[304]

என்று குறிப்பிடுகின்றார். இதற்கு உரை இயற்றிய அ. மாணிக்கம், ''ஆயிரமாகக்' கிளர்ந்த தலைகளை உடைய ஆதிசேடன் என்ற பாம்பையும் தன் வாயில் பற்றிக்கொண்டது, நின் ஊர்தியான கருடச் சேவல். அத்தகையவனும் சிவந்த கண்களை உடையவனுமான திருமாலே, யான் அறியாமல் கெட்டேன். என்னை உயிர் பிழைக்க அருள்வாயாக என்று அலறி நீண்ட காலம் அழைக்கும்படியான காலத்திற்கு முதல்வனும் நீயே, நீ இத்தன்மை உடையவன் என்னும் சாமவேதம் விளக்கிச் சொல்லும்'' [305] எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து சாமவேதம் வேதம் குறித்து குறிப்பிட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

குறும்பூதனாரும் வேத குறிப்பை,

**''நான்மறை விரித்து நல்இசை விளக்கும்''**[306]

என்று பதிவுசெய்துள்ளார். இந்த அடிகளுக்கு உரை இயற்றிய அ. மாணிக்கம்,

'' 'நான்மறை விரித்து நல்லிசை விளக்கும் புலவீர்' எனச் சுட்டியது பொருள் இலக்கணம் அமையாத வடமொழிப் புலவரை வேதம் ஓதும்போது அதன்பொருள் புலப்பாட்டைவிட ஓசை புலப்பாடே சிறந்து நிற்கும்" [307] எனக் குறிப்பிடுகின்றார். நல்லெழுதியார் வேதம் குறித்து,

**"கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை**
**ஏவல் இன்முது மொழி கூறும்"**[308]

என வேதத்தை முதுமொழி என பதிந்துள்ளார். இதனை தமிழ்வேதம் என்று கருதும் நிலையும் உள்ளது. ஆனால் அந்த தமிழ்வேதம் இன்னதென்று யாரும் குறிப்பிட்டாரில்லை.

### 2.12.11 ஆகமங்கள்:

வடமொழியில் வேதங்களுக்குப் பிறகு தோன்றியவை ஆகமங்கள் ஆகும். அத்தகைய ஆகமங்கள் குறித்த பதிவு ஒன்று பரிபாடலின்கண் இடம்பெற்றுள்ளது.

**"முன்னை மரபின் முதுமொழி முதல்வ**
**நினக்கு விரிந்து அகன்ற கேள்வி அனைத்தினும்"**[309]

என்று கடுவன் இளவெயினனார் குறிப்பிட்டுள்ளார். இங்கு அ. மாணிக்கனார், 'கேள்வி' என்ற சொல்லுக்கு ஆகமங்கள் எனப்பொருள் கொள்கின்றார்.

‘‘அநாதியாய் வரும் முறைமையுடைய வேதத்தின் தலைவனே! பலப்பலவாக விரிந்து பரந்த ஆகமங்கள் யாவற்றினாலும் அகங்காரத்தானும் நெஞ்சத்தானும் நின் வனப்பும் எல்லையும் அறியப்படாத முறைமை உடையோய்’’[310] எனக் குறிப்பிட்டுள்ளளார். ஆகமங்கள் குறித்தக் குறிப்புகள் முற்கால சங்க நூல்களில் காணமுடிவதில்லை. இதிலிருந்து பரிபாடல் காலத்தால் பிந்தையது என்னும் எண்ணத்திற்கு வரமுடியும். மேலும் சங்காலத்தின் இறுதி காலத்தில் வடமொழியின் பிற்கால நூல்களும் அறிமுகமாகும் அளவிற்கு இரு நிலப்பகுதியினரிடையே தொடர்ச்சியான தொடர்புகள் இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 2.12.12 புராணம்:

பரிபாடலில் வடமொழியின் ஆகமங்களுக்குப் பிறகு உருவான புராணங்கள் குறித்த கருத்துக்கள் பெருமளவு இடம்பெற்றுள்ளன. அங்ஙனம் திருமால் குறித்து பாடும் கீரந்தையார்,

**‘‘கருவளர் வானத்து இசையின் தோன்றி**
**வரு அறிவாரா ஒன்றன் ஊழியும்**
**உந்து வளி கிளர்ந்த ஊழ்ஊழ் ஊழியும்**
**……………………………………..**
**ஊழி யாவரும் உணரா**
**ஆழி முதல்வ நிற் பேணுதும் தொழுதும்’’**[311]

என்று உலகம் தோன்றி அழிந்தபோது திருமால், நீருள் மூழ்கிக் கிடந்த நிலத்தை பன்றி உருவம் கொண்டு மேலே எடுத்து வந்து அதில் உயிர்கள் தோன்றி வாழத் தகுந்ததாகச் செய்த காரணத்தால் அப்பன்றியின் அவதாரத்தோடு சேர்க்கப்பட்ட பெயருடன் விளங்குவதாக குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை இயற்றிய அ. மாணிக்கம்,

‘‘பரம்பொருளினின்று வானம் தோன்றியது. அதனின்றும் காற்றுத் தோன்றியது. அதனின்றும் தீத் தோன்றியது. அதனின்றும் நீர் தோன்றியது. அதனின்றும் நிலம் தோன்றியது என வேதம் கூறுகின்றது. அதாவது வேதத்தின் புருஷ ஸூக்தம் என்பதில் இப்படிக் கூறப்பட்டுள்ளது”[312] எனக் கூறுகின்றார்.

அதே பாடலில் கீரந்தையார்,

**“நனி முரல் வளை முடி அழிபு இழிவு**
**தலை இறுபு தாரொடு புரள**
**……………………..**
**சேரார் இன் உயிர் செருக்கும்**
**போர் அடு குரிசில் நீ ஏந்திய படையே’’**[313]

என்று, திருமால் சக்கரப்படை கொண்டு அவுணர்களின் உயிரை அழித்ததாக குறிப்பிடும் கீரந்தையார் மேலும் ஒரு புராணக் கருத்தைக் கூறுகின்றார்.

**“வாயடை அமிர்தம் நின் மனத்தகத்து அடைத்தர**
**மூவா மரபும் ஒவா நோன்மையும்**
**………………………………..**
**கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்**
**கொடும்பாடு அறியற்க எம் அறிவு எனவே”[314]**

என வானத்தில் வாழ்பவர்களுக்காகப் பாற்கடலில் அமிழ்தம் கடைந்தப் புராணக் கருத்து இடம்பெற்றுள்ளது.

கடுவன் இளஎயினனார் திருமால் குறித்து பாடும்போது,

**“ஏள் வயங்கு பூண் அமரரை வௌவிய வௌவிய அமிழ்தின்**
**புயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை**
**நிவந்து ஓங்கு உயர் கொடிச் சேவலோய் நின்**
**சேவடி தொழாரும் உளரோ அவற்றுள்”[315]**

என்று, கருடன் தேவரிடமிருந்து அமிழ்தத்தை கவர்ந்தக் கருத்தை பதிவிட்டுள்ளார். இதற்கு அ. மாணிக்கம், “கருடனின் தாய் விநதை. அவள் இந்திரனின் குதிரையின் வால் வெண்ணிறம் உடையது எனச் சொன்னாள். அதைக் கத்துரு என்பவள் கேட்டாள். அவள் குதிரையின் வால் கருமை நிறமுடையது என்றாள். அது கரிதாயின் நான் உனக்கு அடிமையாவேன் என்றாள் வினதை. கத்துரு என்பாள் தன் மக்களால் குதிரையின் வால் கரியதாகும்படி ஒரு சூழ்ச்சியைச் செய்தாள். ஓப்புக் கொண்டபடி விநதை கத்துருவுக்கு அடிமை ஆனாள். பின் கத்துரு ‘எனக்குத் தேவ அமிழ்தத்தைக் கொணர்ந்து தருவாயாயின் உன்னை விடுவிக்கிறேன் என்றாள். விநதை தன் மகனான கருடனுக்குச் சொன்னாள். அவன் அமிழத்தைக் காத்து நின்ற தேவரை ஓட்டிவிட்டுக் கொணர்ந்தான். விநதை விடுதலை பெற்றாள்”[316] என்று குறிப்பிடுகின்றார். இதேபொன்றதொரு கருத்தை பின்வரும் அடிகளிலும் கடுவனிள எயினனார் பதிவு செய்துள்ளார்.

**“சேவடி தொழாரும் உளரோ அவற்றுள்**
**கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை**
**………………………………….**
**பாடும் வகையே எம் பாடல்தாம் அப்**
**பாடுவார் பாடும் வகை”[317]**

என்று திருமால் பன்றி அவதாரம் எடுத்து தனது கொம்பால் உலகத்தை கடலின் அடியிலிருந்து மீட்டு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பின்வரும் பாடல் வரிகளில் புராணங்கள் குறிப்பிடும் திருமாலின் உருவம் குறித்தும், பாற்கடலில் அமிழ்தம் கடைந்த புராணக் கருத்தினையும் கூறியுள்ளார்.

**“கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல்**
**எரிசினம் கொன்றோய் நின்புகழ் வருவினகை**
**……………………………**

**ஆனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்**
**அனைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை"[318]**

என இப்பாடல் முழுதும் திருமாலின் பல அவதார சிறப்புகளை மிக விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

நான்காம் பாடலை பாடியுள்ள கடுவன் இளஎயினனார்,

**"திருமணி திரைபாடு அவிந்த முந்நீர்**
**வருமழை இருஞ் சூழ் மூன்றும் பரையும் மாமொய்**
**…………………………………………..**
**வேடி படா ஒடி தூண் தடியொடு**
**தடி தடி பல படவகிர் வாய்த்த உகிரினை"[319]**

என இந்தப்பாடல் திருமாலின் நரசிம்ம அவதாரத்தின் கருத்தினைப் புலப்படுத்துகின்றது. திருமாலைப் பாடிய கடுவன் இளஎயினனார் முருகன் குறித்தும் பாடியுள்ளார்.

**"பாய்இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு**
**சேய் உயர் பிணிமுகம் ஊர்ந்து அமர் உழக்கி**
**………………………………..**
**குருகொடு பெயர் பெற்ற மால்வரை உடைத்து**
**முலை ஆற்றப் படுத்த மூஇரு கயந்தலை"[320]**

என்று முருகன் மாமர வடிவில் இருந்த சூரபன்மனை அழித்த புராணக்கதையினைக் கடுவன் இளஎயினனார் குறிப்பிட்டுள்ளார்.

**"மூஇரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்**
**……………………………………**
**வேலன் ஏத்தும் வெறியும் உளவே"[321]**

என, முருகன் ஆறுதலை பனிரெண்டு தோள்களைப் பெற்று சரவணப் பொய்கையில் தாமரை மலரில் தோன்றியதாக குறிப்பிடப்பெற்றுள்ளார்.

சிவன் முப்புரம் எரித்த புராணக் கதையினை,

**"வேத மாபூண் வையத் தேர் ஊர்ந்து**
**நாகம் நாணா மலை வில்லாக**
**……………………………….**
**எரி கனன்று ஆனாக் குடாரி கொண்டு அவன்உருவு**
**திரித்திட்டோன் இவ் உலகு ஏழும் மருள"[322]**

என்று வேதங்கள் என்னும் குதிரை பூட்டப்பட்ட பூமி என்ற தேரில் ஏறிப்போய் வெள்ளி, பொன், இரும்பு ஆகிய உலோகங்களால் ஆன முப்புர மதில்களை இமயமலையை வில்லாகக்கொண்டு, வாசுகி என்ற பாம்பை நாணாகக்கொண்டு, தீக்கணையால் அழித்தான் என்று கடுவன் இளவெயினனார் குறிப்பிட்டுள்ளார். இதனுள் கூறப்பட்டுள்ள கதையை அ. மாணிக்கம்,

"அப்பெருமான் சிவன் உமையை மணந்தான் இந்திரன் அப்பெருமானிடம் வந்தான். நின் புணர்ச்சியால் உண்டான கருவை அழித்திட வேண்டுமென வேண்டிக்கொண்டான். அதை ஏற்ற சிவபெருமான் தன் மழுவாயுத்தால் சிதைத்தான்"[323] என்று குறிப்பிடுகின்றார். இந்த கதை திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினியர் உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கடுவன் இளவெயினனார் முருகன் பிறப்பு குறித்த புராணக் கருத்தை,

**"மறு அறு கற்பின் மாதவர் மனைவியர்**
**நிறைவயின் வழாஅது நிற் சூலினரே**
**நிவந்து ஓங்கு அமயத்து நீலப்பைஞ்சுனைப்**
**………………………………………**
**திருந்து கோல் ஞமன் தன் மெய்யின் பிரிவித்து**
**இருங்கண் வெள்யாட்டு எழில்மறி கொடுத்தோன்"[324]**

என்று இந்திரனிடமிருந்து சிதைந்த கருவை ஏழு முனிவர்கள் பெற்றுக்கொண்டனர். தாய் வயிற்றினின்றும் கழிந்த இக்குழவி உடலைப் பிளந்த செயலைக் கண்டனர். அந்தக் கருவானது அறுமுகத் தேவனாய்த் தேவர் படைக்குத் தலைவனாய் விளங்கக் கூடியவன் என்பதை தம் ஞானத்தால் நன்கு உணர்ந்தனர். சிதைக்கப்பட்ட அக்கருவை தம் மனைவியரிடம் தந்து வயிற்றில் குழவியாக முதிரச் செய்தால் கற்புடையவர் ஆகமாட்டார் என எண்ணி ஒரு வேள்வியைச் செய்து அவ்வேள்வியில் உண்டான தீயே இவற்றைத் தாங்குக என இட்டனர். அதனை அருந்ததி நீங்க மற்ற கார்த்திகை மகளிர் அறுவரும் அப்போதே அக்கருவை உண்டனர். பிறகு இமயமலையில் சரவணம் என்ற சுனையில் தாமரை மலரான படுக்கையில் ஒன்றாய் முருகனை ஈன்றனர். எனக் புராணக்கதையைக் குறிப்பிட்டுள்ளார்.

குறும்பூதனாரும் ஒன்பதாம் பாடலில்,

**"எரி மலர்த் தாமரை இறை வீழ்த்த பெருவாரி**
**விரி சடைப் பொறை ஊழ்த்து விழுநிகர் மலர் ஏய்ப்பத்**
**………………………………………..**
**மணி மழை தலைஇயென மா வேனில் கார் ஏற்றுத்**
**தணி மழை தலையின்று தண் பரங்குன்று"[325]**

என்று முருகன் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட கருத்தினைக் குறிப்பிட்டுள்ளார். முருகன் சூரபன்மனை கொன்ற புராணக்கதையைக் குறும்பூதனார்,

**"கடுஞ் சூர் மாமுதல் தடிந்து அறுத்த வேல்**
**அடும் போரான நின் குன்றின் மிசை**
**…………………………………..**
**தடாகம் ஏற்ற தண் சுனைப் பாங்கர்**
**படாகை எ∴கினவை"[326]**

என்று வள்ளியைத் திருமணம் செய்த கதையோடு இணைத்துக் கூறியுள்ளார்.

நல்லெழுதியார் திருமாலைப் பற்றிக் குறிப்பிடும்போது,

**''இலங்கு ஒளி மருப்பின் களிறும் ஆகி**
**மூஉரு ஆகிய தலைபிரி ஒருவனை**
**படர் சிறைப்பல் நிறப் பாப்புப் பகையைக்''[327]**

என்று திருமால் ஆதிவராக அவதாரம் எடுத்த நிகழ்வும் சிவனே பிரம்மனாகவும் திருமாலாகவும் விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது புலவுருக்கு இருந்த சைவ பற்றையே காட்டுகிறது.

கேசவனார் முருகனின் வளர்ப்புப் பற்றியும் உருவம் பற்றியும் குறிப்பிடுகையில்,

**''கார் மலிந்தன்று நின் குன்றுபோர் மலிந்து**
**சூர் மருங்கு அறுத்த சுடர்ப் படையேயே**
**……………………………………..**
**கெழீஇக் கேளீர் சுற்ற நின்னை**
**எழீஇப் பாடும் அமர்ந்தோயே"[328]**

என முருகன் ஆறுமுகம் பன்னிரண்டு கைகளும் பெற்று வள்ளியை மணந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இளம்பெருவழுதி பலதேவனின் சக்கரப்படை குறித்த புராணக் கருத்தை,

**''கள் அணி பசுந் துளவினவை கருங்குன்றனையவை**
**ஒள் ஒளியவை ஒரு குழையவை**
**……………………………..**
**புகர் இணர் சூழ் வட்டத்தவை புகர் வாளவை''[329]**

என்று, கலப்பையினைக் கையிலேந்தி பல சிறப்புகளைப் பெற்றதாக குறிப்பிடுகின்றார். நல்லச்சுதனார் முருகன் இந்திரனின் வானவில்லை வளைத்து சூதுப் போர் செய்ததாக விளக்குகிறார்.

**"அச்சிரக்கால் ஆர்த்து அணிமழை கோலின்றே**
**வச்சிரத்தான் வான வில்லு**
**…………………**
**போர்த்ததும்பும் அரவம் போலக்**
**கருவி ஆர்ப் கருவி நின்றன குன்றம்"[330]**

என்று நல்லச்சுதனார் முருகன் அசுரர்களை அழிக்க செய்த போரினைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஒரு பாடலில் சூரபன்மாவுடன் நிகழ்த்திய போரினைக் குறிப்பிட்டுள்ளார்.

**"தையதை கொள்ளத் தெவ்வர் கொள்மாமுதல் தடிந்து**
**புள்ளொடு பெயரிய பொருப்புப் புடை திறந்த வேல்**
**……………………………..**
**அரை வரை மேகலை அணி நீர்ச்சூழி**
**தரை விசும்பு உகந்த தண் பரங்குன்றம் "[331]**

என்று குறிஞ்சி நிலத் தலைவனான முருகனை ஆரிய மயப்படுத்திய நிகழ்வினை நல்லச்சுதனார் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

இங்கு முருகனின் கோயிலில் வரையப்பட்டிருந்த ஓவியங்கள் குறித்து குறிப்பிடும் மயிலை சீனி வேங்கடசாமி, "மதுரைக்கு அடுத்துள்ள திருப்பரங்குன்றின்மேல் அக்காலத்தில்

முருகப்பெருமானுக்குக் கோயில் இருந்தது. அந்தக் கோயிலைச் சார்ந்த மண்டபத்தில் ஓவியங்கள் எழுதப்பட்ட மண்டபம் இருந்தது. அது ‘எழு தொயில் அம்பலம்’ என்று பெயர் பெற்றிருந்தது. அந்த ஓவியச் சாலை காமவேளின் ஆயுதப் பயிற்சிசாலைப்போல இருந்ததாம். மண்டபத்தில் இரதி, காமன், இந்திரன், பூனை, அகலிகை கவுதமன் முதலான பலருடைய ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தனவாம்.”[332]

திருமால் மற்றும் முருகனின் செயல்களாக புலவர்கள் குறிப்பிடும் மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் இயற்கைநெறி காலமான சங்ககால கருத்துநிலையிலிருந்து மாறுபட்ட பல்வேறு மாயத்தந்திரங்கள் செய்யும் கடவுள்களாகவும், வேதநெறியினைப் பின்பற்றுபவர்களாகவும் விளங்குகின்றனர். இது பண்டையத் தமிழ் மரபிற்கு மாற்றாக அமைந்துள்ளதை எளிதில் விளங்கிக்கொள்ள முடியும்.

### 2.12.13 பிரம்மன்:

தொல்காப்பியத்தில் இடம்பெறாத கடவுள் பிரம்மன். இந்திரன், திருமால், சிவன், முருகன், கொற்றவை ஆகிய தெய்வங்களைக் காட்டிலும் பிரம்மன் பற்றிய பதிவுகள் மிகக் குறைவு. அங்ஙனம் குறும்பூதனார் முருகனைப் பற்றி பாடும் பாடலில் பிரம்மனைக் குறிப்பிட்டுள்ளார்.

“எரி மலர்த்தாமரை இறை வீழ்த்த பெருவாரி”[333]

என்று நான்முகன் தாமரையில் வீற்றிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். கடவுள்களில் நான்முகன் குறித்த குறிப்புகள் மிகவும் அருகியே காணப்படுகின்றன. ஆனால் நான்முகன் பொய்கூறிய காரணத்தால் சிவனால் சாபம் பெற்றதாக ஒரு பழையக் கதை உள்ளது. இந்நிகழ்விற்கு நான்முகன் மற்றைய கடவுள்களைக் காட்டிலும் மென்மையானவராகவும் எவ்வித ஆயுதம் ஏந்தாமல் இருப்பதும் காரணமாக இருக்க வாய்ப்புண்டு.

### 2.12.14 இந்திரன் – முருகன் சமயப் பூசல்

கடுவன் இளவெயினார் முருகனைப் பாடும் பாடலில் முருகனுக்கும் இந்திரனுக்கும் இடையே பகைவுணர்வு இருந்ததை வெளிப்படுத்தியுள்ளார்.

**‘‘மறு அறு கற்பின் மாதவள் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற் சூலினரே
நிவந்து ஓங்கு அமயத்து நீலப்பைஞ் சுனைப்
பயந்தோர் என்ப பதுமத்துப் பாயல்
……………………………………..
அறுவேறு துணியும் அறுவர் ஆகி
ஒருவனை வாழி ஓங்கு விறல் சேஎய் ’’**[334]

என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை எழுதிய அ. மாணிக்கனார், ‘‘பெரும்புகழையுடைய முருகப் பெருமானே, இங்ஙனம் நின்னைக் கார்த்திகை மங்கையர் பெற்ற பொழுதே பிறர் கிட்டுதற்கு அரிய விரும்புதற்குக் காரணமான சிறப்பையுடைய தேவர் தலைவன் இந்திரன், மிக்க பகைமை காரணமாக மடமுனிவர்க்குத் தான் கருவைத் தந்ததையும் மறந்து தான் அவர்க்குத் தந்த வரத்தையும் மீறித் தீயைக்கக்கும் தன் வச்சிரப் படையினால் வெட்டி முன்னம் ஆறு வெவ்வேறான துண்டுகளும் ஆறு வடிவமாய்ப் பின் ஒரு வடிவம் ஆனாய், அப்போதே அந்த இந்திரனை வென்று உயர்ந்த வெற்றியை உடையவனே’’ [335] என்று குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட பாடலில் குறிப்பிடப்படும் முருகன் இந்திரன் இடையே இருந்த பகைமை வெளிப்படுகின்றது. குறிஞ்சி நிலக்கடவுள் முருகன், மருதநிலக்கடவுள் இந்திரன் இவர்களுக்கு இடையே பகைமை இருப்பதன் மூலம் இவ்விருவரில் யார் உயர்ந்தவர் என்ற நிலை அல்லது நிலவேட்கை இருந்திருக்க வேண்டும். மற்றொரு நிலையில் ரிக்வேதத்தில் முதன்மைக் கடவுளாக அறியப்படும் இந்திரனுக்கு மாற்றாக முருகனை முன்னிறுத்தியிருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

### 2.12.15 சிவன் திருவிழா:

சங்ககாலத்தில் இயற்கை மற்றும் தெய்வங்களுக்கு விழாக்கள் பல நடைபெற்றுள்ளன. அங்ஙனம் வையை குறித்துப் பாடுகையில் சிவனுக்குத் திருவிழா நடந்ததைக் குறிப்பிடுகின்றார் நல்லந்துவனார்,

**‘‘பனிப்படு பைதல் விதலைப் பருவத்து**
**ஞாயிறு காயா நளி மாரிப்பின் ஆதிரை**
**மாஇருந் திங்கள் மறுநிறை ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்**
**புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப’’** [336]

என்று திருவாதிரை நாளில் விரிந்த மெய்ந்நூல்களையுடைய அறவோர் திருவாதிரைக்குத் தெய்வமான சிவபெருமானுக்குத் திருவிழாவை நடத்தினர். இதில் பூணூலை அணிந்த பார்ப்பனர் சிவனுக்குப் பலிப் பொருட்களை இட்ட பொன் கலன்களை ஏந்தி நிற்கின்றனர் என நல்லந்துவனார் குறிப்பிட்டுள்ளளார்.

பரிபாடலில் வடமொழிக்கூறான புராணக் கருத்துகள் ஏனைய எட்டுத்தொகை நூல்களைக்காட்டிலும் சற்று மிகுந்து காணப்படுகின்றன. வடசொற்களும் இடம்பெற்றுள்ளன. இது பரிபாடலின் காலத்தைத் தெரிந்துகொள்ள உதவுகிறது. வடமொழிப்பெயர்களை மொழிபெயர்த்து கூறியிருப்பதையும் பரிபாடலின்கண் காணமுடிகிறது. மேலும் பலதேவன் பற்றிய குறிப்புகள், வேள்வி இயற்றப்பட்டது தொடர்பான கருத்துகள், அந்தணர் குறித்த பதிவுகள், வேதம் பற்றிய கருத்துகள், வடமொழியின் புராணங்களுக்குப் பிறகு உருவான ஆகமங்கள் குறித்த பதிவுகள், பிரம்மன் தொடர்பான பதிவுகள், இந்திரன் - முருகன் இடையேயான சமயப் பூசல், சிவன் திருவிழா நடந்த கருத்து என வடமொழிக் கூறுகள் நிரம்பியவையாக பரிபாடல் திகழ்கிறது.

## 2.13 தொகுப்புரை:

இலக்கியங்கள் காலத்தைக்காட்டும் கண்ணாடியாக திகழ்கிறது என்பர். எனினும் இலக்கியங்கள் குறிப்பிடும் கருத்துகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. காரணம் அதில் சில மிகைப்படுத்தப்பட்ட கருத்துகள் இருப்பதால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சங்க இலக்கியங்களும் அவ்வாறு பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது கிடைத்துவரும் அகழாய்வு சான்றுகளில் சங்க இலக்கிய கருத்துகள் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளமையால் சங்க இலக்கியம் குறிப்பிடும் கருத்துகள் நம்பகத்தன்மையை பெற்றுள்ளன. நானூறு பாடல்கள் கொண்ட நற்றிணையில் குறைவானப் பாடல்களில் மட்டுமே வடமொழிக் கூறுகள் இடம்பெற்றிருக்கின்றன.

குறுந்தொகையில் வடசொற்கள், வடநாட்டின் இடம் குறித்தப் பதிவுகள், வடநாட்டின் சமயங்கள் குறித்த பதிவுகள், வடநாட்டினராகிய பார்ப்பனர் குறித்தக் கருத்துக்கள், வேள்வி இயற்றியது தொடர்பானக் கருத்து நிலைகள், ஆரிய கூத்துத் தொடர்பான கருத்துகள், சொர்க்கம் மற்றும் அமிழ்தம் தொடர்பான குறிப்புகள், ஆரியர்களின் பெண் பற்றிய மனநிலை, பிணத்தை எரியூட்டும் சடங்கு போன்ற வடமொழிக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதன் வழி அக இலக்கியமான குறுந்தொகை வடமொழிக் கூறுகளை நிரம்ப தாங்கிய இலக்கியமாக திகழ்கிறது.

ஐங்குறுநூற்றில் வடசொற்களும் வேதம் ஓதியது தொடர்பான குறிப்புகளும் அந்தணர்கள் குடுமி வைத்து வாழ்ந்த கருத்தும், இந்திரனுக்கு விழா எடுத்த குறிப்புகளும் கற்பின் அடையாளமாக விளங்கும் வடமொழி புராணங்கள் போற்றும் அருந்ததி போல் வாழவேண்டுமெனப் பெண்ணை வாழ்த்தும் கருத்துகள் உள்ளிட்ட வடமொழிக் கூறுகள் காணப்படுகின்றன.

பெண் காமத்திற்காக ஏங்குபவளாக கலித்தொகையின் பாடல் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்களில் ஏனைய பாடல்களில் இத்தகைய நிலையை காணமுடியாது. இங்கு தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சி என்பது தாய்வழிச் சமூகத்தின் வீழ்ச்சியிலிருந்துத் தொடங்குகிறது. தமிழ்ச்சமூகம் பெண்ணை வெறும் போகப் பொருளாக பார்ப்பதன்று. பெண்ணை உயிர்களின் பிறப்பிடமாக வைத்துப் போற்றிய பண்பாடு தமிழ்ப்பண்பாடு ஆனால் கலித்தொகைக்கண் இந்நிலை மாறுபட்டே காணப்படுகின்றது.

அகம் தொடர்பான நெடும்பாட்டுக்கள் நானூறு கொண்ட அகநானூற்றில் வடசொற்கள் காணப்படுகின்றன. வடநாட்டினராகிய ஆரியர், பார்ப்பனர் பற்றியக் குறிப்புகள், வடநாட்டின் நிலங்களான இமயம், பாடலிப்புத்திரம், யமுனை, கங்கை தொடர்பானக் குறிப்புகள், வடநாட்டினரின் சமயக் கொள்கையான வடக்கு நோக்கி இருத்தல் குறிப்புகள், வடநாட்டின் புராண கதாபாத்திரங்களான இராமன், இந்திரன் ஆகியோர் பற்றியக் குறிப்புகள், சிவன் கோயில் இருந்தமை தொடர்பானக் குறிப்புகள், வேள்வி இயற்றியது தொடர்பான கருத்துகள், ஆரிய

முருகன் பற்றிய செயல்பாடுகள், அமிழ்தம் குறித்தக் கருத்துகள், அருந்ததி, ரோகிணி குறித்தப் பதிவுகள், வடநாட்டினரோடு கொண்டிருந்த வணிக உறவு, சமணர் தொடர்பானக் கருத்துகள் என அகநானூறு வடமொழிக் கூறுகள் மிகுதியாய்க் கொண்ட இலக்கியமாக திகழ்கிறது. இது சங்ககால இயல்பாக தென்படுகிறது. எவற்றையும் வலிந்து திணித்தாகத் தெரியவில்லை.

புறநானூறு வடமொழியின் நிலவியல் கருத்துக்கள், வடமொழிச் சொற்கள், வடநாட்டின் நம்பிக்கைகள், சடங்குகள், வடநாட்டின் தெய்வங்கள், வேள்வி இயற்றிய கருத்துகள், பெண் தீப்பாய்ந்தது, கைம்மை நோம்பு மேற்கொள்வது, பிணங்களைச் சுடுவது உள்ளிட்ட கூறுகளை சுமந்து நிற்பதாக திகழ்கிறது.

பதிற்றுப்பத்தில் சமயக் கருத்துக்கள், வடமொழியாளரின் செல்வாக்கு, இமயம் குறித்த பதிவுகள், வடநாட்டினராகிய ஆரியர் தொடர்பானக் குறிப்புகள், வடமொழி புராணங்கள் குறிப்பிடும் கார்த்திகேய முருகன் பற்றியக் கருத்துகள், வடமொழியின் இலக்கிய வடிவமான புராணம் குறித்தக் குறிப்புகள், பார்ப்பனர் பற்றியப் பதிவுகள், சேரநாட்டில் வேள்வி இயற்றிய முறைகள், வைதீக நியதிகள், வடமொழியாளர் குறிப்பிடும் கற்பின் அடையாளமான அருந்ததி குறித்தக் கருத்துகள் என வடமொழிக் கூறுகள் இடம்பெற்றிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

பரிபாடலில் வடமொழிக்கூறானப் புராணக் கருத்துகள் ஏனைய எட்டுத்தொகை நூல்களைக்காட்டிலும் சற்று மிகுந்து காணப்படுகின்றன. வடசொற்கள் பல இடம்பெற்றுள்ளன. வடமொழிப் பெயர்கள் சிலவற்றை மொழிபெயர்த்து கூறுவதையும் பரிபாடலின்கண் காணமுடிகிறது. பலதேவன் பற்றியக் குறிப்புகள், வேள்வி இயற்றப்பட்டது தொடர்பான கருத்துகள், அந்தணர் குறித்தப் பதிவுகள், வேதம் பற்றிய கருத்துகள், வடமொழியின் புராணங்களுக்குப் பிறகு உருவான ஆகமங்கள் குறித்தப் பதிவுகள், பிரம்மன் தொடர்பானப் பதிவுகள், இந்திரன் - முருகன் இடையேயான சமயப் பூசல், சிவன் திருவிழா நடந்த கருத்து என வடமொழிக் கூறுகள் நிரம்பியதாக பரிபாடல் திகழ்கிறது.

எட்டுத்தொகை நூற்கள் சொற்களாலும் கருத்துக்களாலும், கூறப்படும் கதைகள் மற்றும் நிகழ்வுகளாலும் வடமொழிக் கூறுகளால் நிரம்பியவனாக அமைந்துள்ளன. அக்கால மக்கள் வாழ்வியலையும் வடமொழியின் தாக்கத்தோடு இயைந்து வாழ்ந்ததையும், புலவர்களின் வடமொழி அறிவினையும், வடமொழியோடு இணைந்த அக்கால மானுட வாழ்வியலையும் எட்டுத்தொகை நூற்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

# சான்றெண் விளக்கம்

1. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சங்க கால ஆட்சி முறையும் சமூக வாழ்வும், பக். 3–4
2. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.22
3. தொல். பொருள். மரபியல், நூ.99
4. நற். கடவுள், வாழ்த்து
5. நற். பா.32:1
6. மேலது, பா.32:2
7. மேலது, பா.165:1-3
8. கே.சி. லட்சுமிநாராயணன், வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள், ப.18
9. நற். பா.32:4
10. மேலது, பா.281:1-6
11. மேலது, பா.369:1-6
12. சாமி. சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், பக்.74-76
13. அ.மாணிக்கம், நற். உரை, ப.73
14. உ.வே.சா, குறுந். ப.cix
15. மேலது, பக்.cv-cix
16. மேலது, பக். Cxxi – cxxviii
17. மேலது, ப.cxvii
18. மேலது, பக். Cxxv
19. மேலது, ப. cxxx
20. மேலது, ப. cxxvi
21. மேலது, ப. cxlvii
22. மேலது, ப. cxlvi
23. மேலது, ப. clvi
24. மேலது, ப. clx
25. மேலது, பக். clxiil-clxiv
26. மேலது, ப. clxv
27. மேலது, ப.c
28. மேலது, பக்.713-714
29. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, பக்.131-132
30. குறுந். கட. வாழ். பா.
31. குறுந். பா.1
32. உ.வே.சா. குறுந். ப.5
33. குறுந். பா.2
34. உ.வே.சா. குறுந். ப.9
35. குறுந். பா.7
36. உ.வே.சா, குறுந். ப.20
37. குறுந். பா.14
38. மேலது, பா.83
39. மேலது, பா.201
40. மேலது, பா.206
41. மேலது, பா.286
42. கே.சி.லட்சுமிநாராயணன், வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள், ப.188
43. குறுந். பா. 130
44. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.424
45. குறுந். பா 75
46. உ.வே.சா, குறுந். ப.153
47. தமிழண்ணல், சங்க மரபு, ப.39

48. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், ப.221
49. குறுந். பா.158
50. மேலது, பா.129
51. உ.வே.சா, குறுந். ப.251
52. குறுந். பா.252
53. மேலது, பா.146
54. மேலது, பா.233
55. மேலது, பா.156
56. கே.சி.லட்சுமிநாராயணன், வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள், பக்.189-190
57. குறுந். பா.106
58. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.543
59. குறுந். பா.142
60. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்.546-546
61. வெ.பெருமாள்சாமி, சங்க காலத் தமிழகத்தின் சமூக நிலை, ப.56
62. குறுந். பா.292
63. உ.வே.சா, குறுந்தொகை மூலமும் உரையும், ப.537
64. குறுந். பா.231
65. மேலது, பா.218
66. மேலது, பா.361
67. சாமி.சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.25
68. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், ப.189
69. கா.கோவேந்தன், சங்க இலக்கியச் செய்திக் களஞ்சியம், ப.127
70. ஐங்குறு. கடவுள் வாழ்த்து பாடல்
71. சி.செல்வகுமார். தமிழ்ச் செவ்விலக்கிய மரபின் சமயம், ப.25
72. ஐங். பா.4
73. சாமி. சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.32
74. ஐங். பா.384
75. மேலது, பா.387
76. பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, சங்க நூல்களும் வைதீக மார்க்கங்களும், ப.24
77. ஐங். பா.202
78. மேலது, பா.57
79. கே.சி.லட்சுமி நாராயணன், வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள், ப.193
80. ஐங். பா.62
81. மேலது, பா.442
82. ராஜ்கௌதமன், கலித்தொகை – பரிபாடல் ஒரு விளிம்புநிலை நோக்கு, ப.28
83. கலித்தொகை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1938, ப.32
84. கே.கே. பிள்ளை, தமிழக மக்களும் பண்பாடும், ப.87
85. த.கோவேந்தன், சங்க இலக்கியச் செய்திக்களஞ்சியம், ப.260
86. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.170
87. ராஜ்கௌதமன், கலித்தொகையும், பரிபாடலும், ப.32
88. கலித். கடவுள் வாழ்த்து பாடல்
89. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.158
90. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், பக். 89-90
91. கலித். பா.25
92. மேலது, பா.52
93. மேலது, பா.101
94. மேலது, பா.02
95. மேலது, பா.101
96. மேலது, பா.103

97. மேலது, பா.105
98. மேலது, பா.150
99. மேலது, பா.38
100. மேலது, பா.81
101. மேலது, பா.82
102. மேலது, பா.83
103. மேலது, பா.100
104. கே.சி.லட்சுமிநாராயணன், வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்,பக்.252-253
105. ராஜ்கௌதமன், கலித்தொகை-பரிபாடல் ஒரு விளிம்புநிலை நோக்கு, ப.30
106. கலித். பா.105
107. மேலது, பா.119
108. மேலது, பா.123
109. மேலது, பா.124
110. மேலது, பா.134
111. மேலது, பா.140
112. மேலது, பா.145
113. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.185
114. கலித். பா.02
115. மேலது, பா.106
116. மேலது, பா.09
117. கே.சி.லட்சுமிநாராயணன், வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள், ப. 253
118. கலித். பா.11
119. மேலது, பா.69
120. மேலது, பா.119
121. மேலது, பா.126
122. மேலது, பா.130
123. மேலது, பா.26
124. மேலது, பா.36
125. மேலது, பா.104
126. மேலது, பா.105
127. மேலது, பா.124
128. மேலது, பா.26
129. மேலது, பா.92
130. மேலது, பா.109
131. மேலது, பா.139
132. மேலது, பா.140
133. மேலது, பா.147
134. மேலது, பா.83
135. மேலது, பா.93
136. மேலது, பா.92
137. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.156
138. அகம். பா.9
139. மேலது, பா.336
140. மேலது, பா.396
141. மேலது, பா.398
142. மேலது, பா.127
143. மேலது, பா.265
144. மேலது, பா.399
145. மேலது, பா.265
146. மேலது, பா.59

147. அ.மாணிக்கம், அகநானூறு, ப.314
148. அகம். பா.265
149. மேலது, பா.55
150. மேலது, பா.70
151. மேலது, பா.220
152. மேலது, பா.156
153. மேலது, பா.187
154. மேலது, பா.24
155. மேலது, பா.337
156. மேலது, பா.220
157. மேலது, பா.361
158. மேலது, பா.372
159. மேலது, பா.13
160. மேலது, பா.36
161. மேலது, பா.22
162. மேலது, பா.59
163. மேலது, பா.11
164. மேலது, பா.213
165. மேலது, பா.16
166. மேலது, பா.73
167. மேலது, பா.86
168. மேலது, பா.136
169. மேலது, பா.340
170. மேலது, பா.123
171. மா. இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.206
172. புறம். கடவுள்வாழ்த்து
173. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.203
174. புறம். பா.02
175. மேலது, பா.06
176. மேலது, பா.17
177. மேலது, பா.34
178. மேலது, பா.39
179. மேலது, பா.67
180. மேலது, பா.132
181. மேலது, பா.166
182. மேலது, பா.214
183. மேலது, பா.369
184. மேலது, பா.161
185. மேலது, பா.122
186. மேலது, பா.229
187. அ.மாணிக்கம், புறநானூறு, 269ம் பாடலின் உரை, ப.346
188. புறம். பா.166
189. மேலது, பா.366
190. மேலது, பா.378
191. மேலது, பா.174
192. மேலது, பா.06
193. மேலது, பா.15
194. மேலது, பா.26
195. மேலது, பா.93
196. மேலது, பா.166

197. மேலது, பா.02
198. மேலது, பா.09
199. மேலது, பா.26
200. மேலது, பா.34
201. மேலது, பா.43
202. மேலது, பா.122
203. மேலது, பா.166
204. மேலது, பா.201
205. மேலது, பா.221
206. மேலது, பா.261
207. மேலது, பா.362
208. மேலது, பா.367
209. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, பக்.205-206
210. புறம். பா.170
211. மேலது, பா.363
212. மேலது, பா.363
213. மேலது, பா.06
214. மேலது, பா.91
215. மேலது, பா.55
216. மேலது, பா.166
217. மேலது, பா.56
218. மேலது, பா.23
219. மேலது, பா.56
220. மேலது, பா.57
221. மேலது, பா.58
222. மேலது, பா.198
223. மேலது, பா.56
224. மேலது, பா.58
225. மேலது, பா.15
226. மேலது, பா.26
227. மேலது, பா.99
228. மேலது, பா.166
229. மேலது, பா.224
230. மேலது, பா.305
231. மேலது, பா.62
232. மேலது, பா.377
233. மேலது, பா.99
234. மேலது, பா.62
235. மேலது, பா.234
236. மேலது, பா.238
237. மேலது, பா.245
238. மேலது, பா.246
239. மேலது, பா.247
240. மேலது, பா.248
241. மேலது, பா.249
242. மேலது, பா.250
243. மேலது, பா.253
244. மேலது, பா.261
245. மேலது, பா.280
246. மேலது, பா.246

247. மேலது, பா.247
248. மேலது, பா.231
249. மேலது, பா.238
250. மேலது, பா.239
251. மேலது, பா.240
252. மேலது, பா.245
253. மேலது, பா.256
254. மேலது, பா.356
255. மேலது, பா.359
256. மேலது, பா.360
257. மேலது, பா.362
258. மேலது, பா.363
259. மா. இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.186
260. மேலது, பக்.191-192
261. மேலது, பக். 93-194
262. பதிற். பா.11
263. மேலது, பா.43
264. மேலது, பா.51
265. மேலது, பா.11
266. மேலது, பதிகம்.7
267. பதிற். ஆறாம் பத்தின் பதிகம்
268. அ.மாணிக்கம், பதிற்றுப்பத்து ப.346
269. பதிற். ஐந்தாம் பத்தின் பதிகம்
270. பதிற். பா.11
271. மேலது, பா.26
272. மேலது, பா.14
273. பதிற். ஆறாம் பத்தின் பதிகம்
274. பதிற். பா.63
275. மேலது, பா.64
276. மேலது, பா.21
277. மேலது, பா.24
278. பதிற். ஏழாம் பத்தின் பதிகம்
279. பதிற். பா.74
280. பதிற். ஒன்பதாம் பத்தின் பதிகம்
281. ராஜ்கௌதமன், பதிற்றுப்பத்து ஐங்குறுநூறு சில அவதானிப்புகள், பக்.75-76
282. பதிற். பா.31
283. மேலது, பா.89
284. பரிபாடல் மூலமும் உரையும், ப.5
285. அ.மாணிக்கம், பரிபாடல், ப.7
286. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், .அகத்.நூற். 56
287. மா. இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, பக். ப.183
288. மேலது., ப.184
289. பரிபாடல் பதிப்புரை, வர்த்தமானன் பதிப்பகம், பக்.9-10
290. பரி. பா.01
291. மேலது, பா.02
292. மேலது, பா.13
293. மேலது, பா.02
294. மேலது, பா.13
295. மேலது, பா.01
296. மேலது, பா.02

297. மேலது, பா.05
298. மேலது, பா.06
299. மேலது, பா.11
300. மேலது, பா.01
301. மேலது, பா.02
302. மேலது, பா.03
303. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், பக்.57-59
304. பரி. பா.03
305. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப. 66
306. பரி. பா.09
307. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப.226
308. பரி. பா.13
309. மேலது, பா.03
310. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப.65
311. பரி. பா.02
312. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப.39
313. பரி. பா.02
314. மேலது, பா.02
315. மேலது, பா.03
316. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப.60
317. பரி. பா.03
318. மேலது, பா.03
319. மேலது, பா.04
320. மேலது, பா.05
321. மேலது, பா.05
322. மேலது, பா.05
323. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப.106
324. பரி. பா 05
325. மேலது, பா.09
326. மேலது, பா.09
327. மேலது, பா.13
328. மேலது, பா.14
329. மேலது, பா.15
330. மேலது, பா.18
331. மேலது, பா.21
332. மயிலை சீனி வேங்கடசாமி, நுண்கலைகள், ப.68
333. பரி. பா.09
334. மேலது, பா.05
335. அ.மாணிக்கம், பரிபாடல் உரை, வர்த்தமானன் பதிப்பகம், ப.110
336. மேலது, பா.11

**இயல் -3**

# பத்துப்பாட்டு நூல்களில் வடமொழிக் கூறுகள்

## 3.0 முன்னுரை:

சங்க இலக்கியத் தொகுப்பில் எட்டுத்தொகைக்கு அடுத்துள்ள பகுதி பத்துப்பாட்டு என வைக்கப்பட்டுள்ளது. இது முறையே திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் உள்ளிட்ட பத்து நூல்களின் தொகுதியாகும். பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள நூல்கள், எட்டுத்தொகை நூல்களின் பாடல்கள் இயற்றப்பட்ட காலத்திலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று, மரபாகவும் அகச்சான்றுகளைக் கொண்டும் அறிஞர்கள் கூறுகிறார்கள். பத்துப்பாட்டில் வரும் மன்னர்களையும் புலவர்களையும் எட்டுத்தொகையிலும் காணமுடிகின்றது. தொகுப்பில் சேர்த்துள்ள பத்துப்பாட்டு நூல்கள் ஒரே காலத்தில் இயற்றப்படவில்லை. ஒவ்வொன்றுக்கும் இடையே கால வேறுபாடு உண்டு என்பதை பாடல்களின் மொழிவழி அறிய முடிகிறது. ஆற்றுப்படைத் துறையில் ஐந்து பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை அந்தந்த கால நிகழ்வுகளையும் அக்கால மக்கள் வாழ்வியலையும் எடுத்து இயம்புகின்றன. பத்துப்பாட்டு நூல்களின் பதிவுகளிடையே வடமொழிக் கூறுகளான வடநாட்டின் நிலவியல், வடநாட்டில் உள்ள பண்டைய நகரங்கள் பற்றிய குறிப்புகள், வடநாட்டின் நூல்கள் குறித்த குறிப்புகள், வடநாட்டின் தெய்வங்கள் தொடர்பான கருத்துகள், வடநாட்டின் சடங்குகளான பிணம் எரிப்பு, வேள்வி இயற்றுதல், வடக்கு நோக்கி இருத்தல், கைம்மை நோம்பு இருத்தல் போன்றவைகளைக் காணமுடிகிறது.

## 3.1 ஆற்றுப்படை நூல்கள் :

சங்க காலத்தில் ஆற்றுப்படை என்பது ஒரு தனி இலக்கிய வடிவமாக உருவாகி வந்தது. பத்துப்பாட்டில் தனித்த மரபாக காணப்படும் ஆற்றுப்படையின் அமைப்பு பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. பாணர், கூத்தர், பொருநர், விறலியர் ஆகியோர் மன்னன் அல்லது வள்ளல் ஒருவரிடம் தாம் பெற்ற பரிசிலைத் தம்மை எதிர்நோக்கி வந்த இரவலர்க்கு எடுத்துக்கூறி, அவர்களும் அம்மன்னன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசு பெறுமாறு அறிவுறுத்தல் ஆற்றுப்படை செய்யுள் வகையாகும். இத்தகைய கலைஞர்கள் பலர் அந்தக் கலைகளைத் தமது குடும்பச் செல்வங்களாகவும் வழிவழியாகவும் போற்றி வந்திருக்கிறார்கள். அந்த கலைகளைத் தொழிலாகக் கொண்டு தனித்தனி இனங்களாகவும் வாழ்ந்து வந்துள்ளனர். அங்ஙனம் சிறந்து விளங்கிய கலைஞர்களின் பெயர்க் காரணத்தை மு.வரதராசன் அவர்கள்,

“யாழ் என்னும் பழைய இசைக் கருவியும் குழல், முழவு முதலான மற்ற இசைக் கருவிகளும் கொண்டு இசையை வளர்த்த ஆண்கள் பாணர்கள். அவர்களுடைய மனைவியர் பலர் அந்தக் கலையில் வல்லவர்களாய் (பாடினியர், பாட்டியர் என்று) விளங்கினார்கள். மனைவியர் சிலர் இசைக் கலையோடு நாட்டியக் கலையிலும் வல்லவர்களாய்ச் சிறப்படைந்தார்கள். அவர்கள் விறலியர் எனப்பட்டார்கள். ஆண்களிலே அவ்வாறு நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் கூத்தர் என்று கூறப்பட்டனர். வேடம் தாங்கி நடித்து வந்தவர்கள் பொருநர்”[1] என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கிய கலைஞர்கள் பாடிய பாடல்களில் அவர்கள் பயணக் குறிப்புகள், அவர்கள் கண்டவைகள் போன்றன நேரடியாகவும் உவமை, உள்ளுறையின் வாயிலாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகளே சங்க கால சமூகச் சூழலை உள்ளவாறு படம்பிடித்துக் காட்டவல்ல அகச்சான்றுகளாக உள்ளன.

### 3.1.2 திருமுருகாற்றுப்படையில் வடமொழிக் கூறுகள் :

பத்துப்பாட்டுத் தொகுப்பில் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது திருமுருகாற்றுப்படை. திருமுருகாற்றுப்படை என்பது முருகக் கடவுளின் அருளைப் பெற்ற ஒருவர் அந்த அருளை நாடும் மற்றவர்களுக்கு வழிகாட்டுவதாக அமைவது ஆகும். இதனை நக்கீரர் பாடியுள்ளார். இது 317 அடிகளால் அமையப்பெற்றது. சங்க காலத்தில் பக்தி உணர்ச்சி நிரம்பப் பெற்ற முதல் நூலாக திருமுருகாற்றுப்படை கருதப்படுகிறது. பரிபாடலில் முருகன், திருமால் ஆகியோரைப் பற்றி எண்ணிக்கையில் குறைவான பாடல்களே இருப்பினும், சங்க இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படை நீண்ட பக்திப் பாடலாகச் உள்ளது.

### 3.1.3 திருமுருகாற்றுப்படை வைப்பு முறை :

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள நூல்களின் வைப்பு முறை, ஆய்வாளர்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்புகின்றது. குறிஞ்சிப்பாட்டு திருமுருகாற்றுப்படை நீங்கலாக உள்ள ஏனைய ஆற்றுப்படை நூல்கள் முந்தியது என்பதையும் திருமுருகாற்றுப்படை போன்ற நூற்கள் பிந்தையது என்பதையும் புலவர்கள், மன்னர்கள், மொழியமைப்பு, சமயச் சார்பு போன்ற அடிப்படையில் முன்வைக்கின்றனர். உதாரணமாக புறநானூற்றினைச் சங்க இலக்கியங்களில் முதலாவதாக வைத்துப் பார்க்கும் போக்கு உள்ளது. காரணம் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள பாரதப் போரில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் உணவு கொடுத்தது இடம் பெற்றுள்ளதாகும். இது போன்ற கருத்துக்களைப் பொறுத்தே புறநானூற்றினை முதன்மையானதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

“பத்துப்பாட்டுத் தொகுப்பில் இறுதியாகச் சேர்க்கப்பட்டது திருமுருகாற்றுப்படையென ஆய்வாளர்கள் கருதுவர், ஏனெனில், இந்நூலில் வடமொழி சொல்லாட்சியும், புராணக் கதைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன; ஏனைய ஆற்றுப்படைகளில் அவற்றை அவ்வளவு காணமுடியாது”[2] எனக் குறிப்பிடும் கே.கே.பிள்ளையவர்களின் கருத்து குறிப்பிடத்தக்கது. ஏனெனில் குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகன் இந்நூலில் புதிய உறவு முறையுடனும் வடிவத்துடனும் பல வீரச் செயல்கள் புரிந்த சாதனை நாயகனாக, அரக்கர்களை அழிக்கக் கூடிய சிவனின் மகனாக காட்டப்பட்டிருக்கிறார். வடமொழிப் புராணக் கதைகளை அடியொற்றியே இந்நூல் பாடப்பட்டுள்ளது.

### 3.1.4 திருமுருகாற்றுப்படையின் காலம் :

கால ஆராய்ச்சி உலக அளவில் பெருமளவு முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் தமிழியலிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்ஙனம் திருமுருகாற்றுப்படையின் காலம் கி.பி.300 முதல் கி.பி.600 வரை என பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புலவரை ஆற்றுப்படுத்தும் மரபு தொல்காப்பியர் காலத்துக்கும் முன்பும் தொல்காப்பியர் காலத்திலும் இல்லை. கி.பி.11ஆம் நூற்றாண்டு நூலான புறப்பொருள் வெண்பாமாலையில் புலவராற்றுப்படைக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதேபோல பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கம் போன்ற நூல்களும் புலவராற்றுப்படை இலக்கணத்தைக் கூறியுள்ளன.

பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சாமிநாதையருக்குக் கிடைத்த பெரும்பான்மையான ஏடுகளுள் திருமுருகாற்றுப்படை சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

### 3.1.5 திருமுருகாற்றுப்படையின் சமய சார்ப்பு :

சங்க காலத்தை இயற்கை நெறி காலம் என்று அழைப்பர். அக்காலத்தில் மனிதன் இயற்கையை வழிபட்டு வாழ்ந்து வந்தான். சில இடங்களில் முன்னோர்களை வழிபடும் மரபும் இருந்துள்ளது. தாய் தெய்வ வழிபாடு இன்றியமையாததாகப் பின்பற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் சங்க இலக்கியத் தொகுப்பிலுள்ள திருமுருகாற்றுப்படையில் தமிழகத்தில் வழக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த நெறிகளுக்கு மாறாக, வடநாட்டில் அக்காலத்தில் பெரிதும் பின்பற்றப்பட்ட வைதீக கருத்துகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. டாக்டர் கே.கே.பிள்ளையின் கூற்று திருமுருகாற்றுப்படையின் சமயசார்புக்கு வலுவாக அமைகின்றது.

“சமயக் கருத்துகளை உள்ளிட்டு இந்நூல் யாக்கப்பட்டதாகும். சமய வழக்கில் ஏற்கனவே வடமொழி சொற்களும் கருத்துகளும் புராண வரலாறுகளும் கலந்துவிட்டன. அந்த வகையில் இந்த ஆற்றுப்படையில் அவை மலிந்து காணப்படுவதில் வியப்பேதுமில்லை. தாம் தேடிப்பெற்ற

பத்துப்பாட்டு ஏட்டுச் சுவடிகள் பலவற்றுள் திருமுருகாற்றுப்படை சேர்ந்திருக்கவில்லை என்று மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் தெரிவிக்கின்றார். அதைக்கொண்டு இந்நூல் இத்தொகுப்பில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதோ என்று ஐயுறவிடமுண்டு"[3] என்று டாக்டர் கே.கே.பிள்ளை கூறுகின்றார்.

திருமுருகாற்றுப்படை பிற்காலத்தது என்பதால், அதில் மட்டுமே வடமொழிக் சொற்களும், கருத்துக்களும், சமய சார்பும் புதிதாக உருவாகிவிடவில்லை, அதற்கு முன்னர் உள்ள இலக்கியங்களிலும் இப்போக்கு காணப்படுவதாக கூறுவதிலிருந்து அக்கால வழக்கு நிலையில் வடமொழி செல்வாக்குப் பெற்றிருந்ததை அறிய முடிகின்றது.

### 3.1.6 திருமுருகாற்றுப்படை உருவான விதம் :

கதைகள் உலகம் முழுதும் நிரம்பக் காணப்படுகின்றன. கதைகளிலிருந்து மனிதனை பிரித்தெடுக்க முடியாது. அங்ஙனம் மனித வாழ்வின் ஓர் அங்கமாக கதைகள் விளங்குகின்றன. அவ்வளவு கதைகளும் உண்மை என்று சொல்வதற்கில்லை. எனினும் அவற்றை முற்றிலும் புறந்தள்ளிவிடவும் முடியாது. இந்திய நிலப்பரப்பில் உருவான கதைகள் பெரும்பான்மையும் சமயச் சார்புடையனவாக காணப்படுகின்றன. கதைகளிலிருந்து எவ்வாறு மனிதனைப் பிரித்தெடுக்க முடியாதோ அதேபோன்று சமயத்தோடு மனிதன் நெருங்கிக் காணப்படுகின்றான். இப்போக்கு தென்னிந்தியாவைக் காட்டிலும், வட இந்தியாவில் சற்று மிகுதியும் காணமுடியும். இப்படியான கதைகள் தமிழ்மொழி உருவானதற்கும், அதில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு இலக்கியங்களுக்கும் உண்டு. அவ்வாறான ஒரு கதையைத்தான் திருவிளையாடல் புராணமும், திருமுருகாற்றுப்படையும் விளக்குகின்றன. இதனை எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள்,

"திருப்பரங்குன்றத்திற் சரவணப் பொய்கையின் கரையில் ஓர் அரசமரம் நின்றது. அதிலுள்ள இலை நீரில் வீழ்ந்ததால் மீனாகவும் நிலத்தில் வீழ்ந்ததால் பறவையாகவும் மாறும். ஒரு கால் ஓர் இலை பாதி கரையிலும், பாதி நீரிலுமாக விழுந்தது. கரையில் விழுந்த பகுதி பறவையாகவும், நீரில் விழுந்தது மீனாகவும் அமைந்த விசித்திரப் பிராணியாக அந்த இலை மாறிற்று. பறவைப் பகுதி ஆகாயத்திற் பறக்கவும் மீன்பகுதி நீருள் மூழ்கவும் முயன்றன. அப்போது அங்குக் கரையில் பூசை செய்து கொண்டிருந்த நக்கீரர் தியான சிந்தனையில் வழுவி இந்த அதிசயத்தைக் கண்ணுற்று இரண்டையும் விடுவிக்க வந்தார். சிவ பூசையில் வழுவிய காரணத்தால் ஒரு – பிரமராட்சசு நக்கீரரைப் பிடித்துக் கொண்டு போய் ஒரு குகையில் அடைத்துவிட்டது. அக்குகையில் இவரைப்போல் வழுவிய 999 பேர்கள் ஏற்கனவே அடைப்பட்டிருந்தனர். இவரையும் சேர்த்து ஆயிரம் பேராகவே, அவ்வளவு பேரையும் உண்டுவிட வெண்ணி அப்பிரமராட்சசு நீராடி வருவதற்குப் போயிற்று. அப்பொழுது நக்கீரர்

முருகாற்றுப்படையைப் பாட, முருகப்பிரான் அவரைக் குகையினின்றும் விடுவித்தார். இந்நூலை ஓதுவாருக்கு வரங்கொடுப்போம் என்றும் முருகப்பிரான் அருள் செய்தார்”[4] என்றுரைக்கின்றார்.

இக்கதையானது திருமுருகாற்றுப்படை தொடர்ந்து சைவத்தோடு இரண்டற கலந்து நிற்க வழிவகுத்தது. திருமுருகாற்றுப்படையில் வரும் கடவுளான முருகன் என்ற பெயர் ஏற்கனவே குறிஞ்சி நில கடவுளாக உள்ள நிலையில் இந்நூல் அத்துடன் இணைந்துவிடுகிறது. குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை, திருமுருகாற்றுப்படை முருகனோடு இணைந்து சைவமாக்குகிற முயற்சியாகவும் இதனைக் கருத இடமுண்டு.

### 3.1.7 நக்கீரர் :

தமிழ் இலக்கிய உலகில் சில பெயர்கள் என்றென்றும் விவாதத்திற்கு உரியனவாக உள்ளன. அவற்றுள் ஒன்று நக்கீரர் ஆகும். நக்கீரர் பெயரால் அமைந்த பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. அவை குறுந்தொகையுள் 8, அகநானூறு 17, நற்றிணை 7, புறநானூறு 3 பாடல்களும் பத்துப்பாட்டில்: நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை ஆகியவை ஆகும். அதோடு நக்கீரர் குறித்த சுவையான கதைகளும் காணப்படுகின்றன. மேலும் இப்பெயர் தொடர்ந்து பல புலவர்களால் எல்லா காலங்களிலும் தமது நூலினுள் பயன்படுத்தப்பெற்று, அப்பெயர் அழியாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இவர் சைவ சமயத்தோடு தொடர்புடையவர் மட்டுமின்றி, இவர் வடமொழி நன்கு அறிந்த அந்தணராகவும் இருந்திருக்கிறார். சங்க காலத்தில் இருந்த பல நூறு புலவர்களின் பெயர்கள் நம் நினைவை விட்டு அகன்று போன நிலையில் ‘நக்கீரர்’ என்ற பெயர் தொடர்ந்து நிலைபெற்றுவிட எதார்த்தத்தைக் காட்டிலும் வேறு காரணங்களும் இருக்க இடமுண்டு. இங்ஙனம் நக்கீரர் குறித்து திருப்புகழ் ‘கீத விசை கூட்டி வேதமொழி சூட்டுகீரர்’ (திருப்புகழ்) என்று குறிப்பிடுகின்றது. இதன்வழி இவருக்கு வடமொழி பயிற்சி உண்டென்பதையும் அதன் காரணமாகவே தமது பாடல்களில் வடமொழிக் கருத்துகளை எழுதியிருக்க வாய்ப்புள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

### 3.1.8 நக்கீரர் குறித்த கதைகள் :

நக்கீரர் குறித்து இன்று வழக்கத்தில் உள்ள ‘நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே’ என்ற கதைபோல இன்னும் பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. அக்கதைகளும் நக்கீரரை சைவத்தோடு தொடர்புபடுத்துகின்றன. வடமொழியில் சிறந்து விளங்கிய குயக்கொண்டான் ‘தமிழ்’ தாழ்ந்தது என்று கூறியது கேட்டு,

**"முரணில் பொதியின் முதற்புந்தேள் வாழி**
**பரண கபிலரும் வாழி – அரணிய**
**ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்**
**ஆனந்தம் சேர்க சுவா"[5]**

என்று கூற அவன் இறந்ததாகவும், பிறகு புலவர்கள் வேண்ட நக்கீரர் ஆணையிட உயிர் பெற்றதாகவும் கதை ஒன்றுளது என்று ச.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். இதில் தமிழ்மொழியைப் பாதுகாக்கும் பணியைச் சைவ சமயத்தார் மேற்கொண்டனர் என்பது உட்கருத்தாகின்றது. மேலும் இப்பாடல் பரணர், கபிலரையும் குறிப்பிடுகின்றது. இவர்களும் அந்தணர்கள் என்பதோடு இவர்கள் வடமொழிப் புலமை கொண்டவர்கள் என்பதையும் அறிவிக்கின்றது. இவர்கள் இருவரையும் தமிழ் முன்னோடிகளாக இப்பாடல் முன்னிலைப்படுத்துகிறது.

### 3.1.9 முருகனின் ஆறுமுகம்:

வடமொழி புராணங்கள் குறிப்பிடும் ஆரிய முருகன் ஆறு முகங்கள் கொண்டவராக திகழ்கிறார். அந்த ஆறுமுகங்களின் செயல்பாடுகளை நக்கீரர் எடுத்துரைக்கின்றார்.

**"மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒரு முகம்**
**……………………..**
**ஆங்குஅம் மூஇரு முகனும்முறை நவின்று ஒழுகலின்"[6]**

என்று ஆறுமுகங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஒருமுகம் இருளால் மறைக்கப்பட்ட உலகத்தை இருள் நீங்கும்படி பல சுடராக நின்றது. இரண்டாவது முகம் தன்னை நாடும் அடியவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தது. மூன்றாவது முகம் அந்தணர்களின் வேள்விகளைக் காக்கும். நான்காவது முகம் முனிவர்களுக்குக் காவலாய் நிற்கும். ஐந்தாவது முகம் அசுரர்களை அழிக்கும். ஆறாவது முகம் குறமகளான வள்ளியுடன் மகிழச்சியாய் இருந்தது. என்று நக்கீரர் குறிப்பிடுகின்றார். இதில் ஐந்து முகங்கள் ஆரியர்களைப் பாதுகாக்கும் கடவுளாக முருகன் திகழ்வதை குறிப்பிடுகின்றது. ஆறாவது முகம் மட்டும் தமிழ் குறிஞ்சி நிலத்தலைவனான முருகனைச் சுட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த முகம் பற்றிய குறிப்புகளே இரு முருகன் கருத்தை வலுப்பெற வைப்பதாக அமைந்துள்ளது.

### 3.1.10 முருகனின் பன்னிரு கைகள்:

ஆறு முகங்கள் கொண்ட முருகனுக்கு பன்னிரு கைகள் இருக்கத்தானே வேண்டும். அங்ஙனம் ஆரிய முருகனின் பன்னிரு கைகளின் செயல்பாடுகள் குறித்து நக்கீரர்,

**"விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்திய**
**ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை**
**………………..**
**ஆங்கு அப் பன்னிரு கையும் பாற்பட இயற்றிய"[7]**

என்று குறிப்பிடுகின்றார். முதலிணை கைகள் துறவிகளுக்குப் பாதுகாவலாய் உள்ளது. இரண்டாம் இணை கைகள் அங்குசத்தை செலுத்தியது. மூன்றாம் இணை வேலினை கையிலேந்தியுள்ளது. நான்காம் இணை முனிவர்களுக்குத் தத்துவங்களைச் சொல்லிக் கொடுத்தது. ஐந்தாம் இணை கைகள் களவேள்விக்கு முத்திரை கொடுத்து நின்றது. ஆறாம் இணை கைகள் மழையைக் கொடுக்கவும் தெய்வ மங்கையான தெய்வானைக்கு மணமாலையும் சூட்டியது. என்று வடமொழி புராணக்கூறினை விரிவாக எடுத்துரைத்துள்ளார் நக்கீரர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.1.11 முருகன் வழிபாடு:

ஒவ்வொரு கடவுளுக்கும் தனித்த வழிபாட்டு முறைகள் இருக்கின்றன. அவ்வழிபாட்டுச் சடங்குகளை வைத்து அக்கடவுளின் குணநலன்களை அறிந்துகொள்ள முடியும். சில கடவுள்கள் சைவத்தை விரும்புவர்களாகவும், சிலர் அசைவத்தை விரும்புவர்களாகவும் இருக்கின்றனர். சிலருக்குப் பலி கொடுக்கப்படுகிறது. சிலருக்கு உயிர்பலி கொடுப்பதில்லை. முருகன் வழிபாட்டிலும் அத்தகைய கூறுகள் காணப்படுகின்றன.

**"மாண் தலைக் கொடியொடு மண்ணி அமைவர**
**நெய்யோடு ஐயவி அப்பி ஐது உரைத்து**
**குடந்தம்பட்டு கொழு மலர் சிதறி"[8]**

என்று நக்கீரர் முருகனுக்கு வெண்சிறுகடுகினை அப்பி, முருகனை வழிபடுவதற்குரிய மந்திரத்தை பிழையில்லாமல் சொல்லி வழிபடவேண்டும் என்றுரைக்கின்றார். மேலும் முருக வழிபாட்டில் குருதி பலி குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**"முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇச்**
**செந்நூல் யாத்து வெண் பொரி சிதறி**
**மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைச்**
**குருதியொடு விரைஇய தூவெள் அரிசி**
**சில்பலிச் செய்து பல் பிரப்பு இரீஇ"[9]**

என முருகனை வழிபடும்போது கையில் காப்புக்கட்டி, வெண்மையான பொரியை சிதறி, பெரிய தொடையையுடைய கொழுவிய கிடாயினது குருதியுடன் பிசைந்த தூய்மையான வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டுப் பலபரப்பும் வைத்து வழிபட்ட முறையை குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து முருக வழிபாட்டில் சிலைவழிபாடு இருந்ததென்பதையும் முருகனுக்கு உயிர்பலி கொடுக்கப்பட்டது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.1.12 அந்தணர் வழிபாடு:

கடவுள் வழிபாட்டில் ஒவ்வொரு இனக்குழுவும் தனக்கென தனித்த வழிபாட்டு முறைகளைக் கொண்டுள்ளன. அங்ஙனம் அந்தணர் முருகனை வேறு விதமாக வழிபட்டுள்ளதை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

**"இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது**
**இருவர்ச்சுட்டியப பல்வேறு தொல்குடி**
**…………………..**
**விரை உறு நறு மலர் ஏந்திப் பெரிது உவந்து"[10]**

**"மாலை மார்ப நூல் அறி புலவ**
**செருவில் ஒருவ பொருவிறல் மள்ள**
**…………………..**
**பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்"[11]**

என்று அந்தணர் வழிபாட்டைப்பற்றி குறிப்பிடுகையில், "அந்தணர் ஓதல் ஓதுவித்தல் போன்ற தொழிலை தவறாமல் செய்பவர். தாய் தந்தையர் இருவர் குலமும் நன்று என்று உலகத்தவர் போற்றும் பிறப்பினர். நாற்பத்தெட்டாண்டு பிரமசரியம் மேற்கொண்டவர். மூவகை வேள்விகளை இயற்றுபவர். பூணூலை அணிந்தவர். தலைமீது குவித்த கையினர். முருகனைப் புகழ்ந்து ஆறெழுத்து மந்திரத்தை நாப்புடை பெயரும் அளவில் ஓதுபவர்". என அந்தணர் சிறப்பை முழுமையாக கூறி முருகனை பின்னொட்டாக ஒட்டிக்கொண்டதை அறிந்துகொள்ள முடிகியது. காரணம் இங்கு வேதியர்களுக்குத்தான் முதன்மையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. முருகனுக்கு இரண்டாம் இடத்தை நக்கீரர் கொடுத்துள்ளார். மேலும் இரண்டாவது எடுத்துக்காட்டுப் பாடலில் அந்தணர்க்குச் செல்வமாக முருகன் திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார் நக்கீரர்.

### 3.1.13 முருகனின் மனைவியர்:

முருகனின் மனைவி குறித்த குறிப்புகள் திருமுருகாற்றுப்படையின்கண் காணப்படுகின்றன.

**"உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்**
**செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை**
**……………………..**
**மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்"[12]**

என்று முருகனின் சிறப்பைப் பற்றிக் கூறுமிடத்து 'கற்பு' என்பதனை விளக்குகிறார். கற்பின் அடையாளமாக மறக்கற்பில்லாத அறக்கற்பையும் ஒளி பொருந்திய நெற்றியையும் உடைய இந்திரனின் மகள் தெய்வயானை என நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

### 3.1.14 திருமால்:

நக்கீரர் முருகனின் சிறப்பு குறித்து குறிப்பிடும்போது வடமொழிப்புராணங்கள் குறிப்பிடும் திருமாலினையும் விளக்கிச் செல்கிறார்.

> **"கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று**
> **அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்**
> **பாம்பு படப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்**
> **புள் அணி நீள் கொடிச் செல்வனும் வெள் ஏறு"[13]**

என நஞ்சுடனும் வெண்மையான பற்களையும் உடைய பாம்புகளை அவை மடியும்படி அடிக்கின்ற கருடனை அணிந்த கொடியையுடைய திருமால் என குறிப்பிடுகின்றார். இதில் சைவத்துக்கும், வைணவத்துக்குமான பகைமையினை கருடன் மற்றும் பாம்புகள் போராட்டத்தின்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.1.15 உருத்திரன்:

நக்கீரர் சிவனை உருத்திரன் என்று குறிப்பிட்டுள்ளார். உருத்திரன் வெண்மையான ஆண் ஏற்றை வாகனமாக உடையவராகவும் 'உமையை' தனது இடப்பக்கத்தில் கொண்டவராகவும் திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

> **"உமை அமர்ந்து விளங்கும் இமையா முக் கண்**
> **மூஎயில் முருக்கிய முரண் மிகு செல்வனும"[14]**

என உருத்திரன் என்னும் சிவன் அசுரர்கள் மறைந்துகொண்ட திரிபுரத்தை எரித்து அழித்ததாக நக்கீரர் பதிவுசெய்துள்ளார்.

### 3.1.16 இந்திரன்:

தேவர்களின் தலைவனாக விளங்கும் இந்திரன் பற்றிய குறிப்பு ஒன்றை நக்கீரர்,

> **"நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்து நூறு பல்**
> **வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து**
> **.........**
> **எருத்தம் ஏறிய திருகிளர் செல்வனும"[15]**

என குறிப்பிட்டுள்ளார். இதில் இந்திரன் ஆயிரம் கண்களை உடையவனாக காட்டப்பட்டுள்ளார். மேலும் பல வேள்விகளை இயற்றியவராகவும் பெரிய யானையின் மீது ஏறி திருமகள் போல் செல்வம் கொடுக்கும் ஆற்றல் பெற்றவராகவும் இந்திரன் விளங்கினார் என பதிவுசெய்துள்ளார்.

### 3.1.17 தேவர் வருகை:

தேவர்கள் குறித்த பதிவுகளை வடமொழிப்புராணங்கள் பெரிதும் எடுத்தியம்புகின்றன.

> **"பகலில் தோன்றும் இகல் இல் காட்சி**
> **நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு**
> **..................**
> **அந்தரக் கொட்பினர் வந்து உடன் காணத்"[16]**

என முப்பத்து முக்கோடி தேவர்கள் இடி இடித்ததைப்போன்று முருகனை வணங்க வருகை புரிந்ததாக நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். இதனை சற்று விளக்கிக் கூறும் உரையாசிரியர் அ.மாணிக்கம்,

"பதினெண் கணத்தவரை 'ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்' என்றார். பதினெண் கணத்தார்: தேவர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், சித்தர், சாரணர், பூதர், பைசாசர், தாராகணம், நாகர், ஆகாயவாசிகள், போகபூமியர்"[17] எனக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து முருகனை வழிபட தேவர்கள் பலர் வந்ததை வடமொழி புராணங்கள் மேற்கண்டவாறு குறிப்பிடுவதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.1.18 புராணக் கருத்துக்கள்:

புராணம் நீண்டக் கதையமைப்பைக் கொண்ட இலக்கிய வகையாகும். இது பெரும்பாலும் சமய சார்ந்ததாக இயற்றப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக வைதீக சமயங்களை மட்டுமே விவரிப்பதாக அமைந்துள்ளது. இவ்வகையான இலக்கிய வடிவங்கள் மக்கள் வழக்கத்திலிருந்து பின்பு நூலாக உருபெற்றிருக்கக் கூடுமென்பர். இந்திய மரபில் புராணங்கள் முதலில் வடமொழி மொழிகளில் ஒன்றான சமஸ்கிருதத்தில்தான் உருவாகியுள்ளன. மேலும் இவ்வகைப் புராணங்களில் வரும் கதைமாந்தர்கள் ரிக் வேதத்தில் இடம்பெறும் கதைமாந்தர்களின் மாற்று வடிவமாகவும், சில நேரங்களில் அதே கதாப்பாத்திரங்கள் எவ்வித மாறுபாடு இன்றியும் அமைந்துள்ளன. அந்தவகையில் அமைந்தது 'இந்திரன்' என்னும் பாத்திரம். 'உருத்திரன், கிருஷ்ணன்' போன்றன மாற்று வடிவம் பெற்ற பாத்திரங்களில் குறிப்பிடத் தகுந்தனவாகும். இலக்கியம் என்பது பொதுச்சொல்லாக இருப்பினும் அது உருவாகும் நிலப்பரப்பின் சாயலைப் பெரும்பாலும் ஒத்திருக்கும். அந்த வகையில் புராணங்கள் வடநாட்டின் கருத்துகளை முழுமையாக தாங்கியுள்ளன. ஓர் இலக்கியம் பற்றிய குறிப்புகள் தனக்கென தனித்த செழுமையான வளம் கொண்ட வேற்றுமொழி இலக்கியத்துள் இடம் பெற்றிருப்பது இயல்பானதாகத் தோன்றினாலும் அதற்கு அப்பாலும் ஆராய வேண்டியுள்ளது. அவ்வாறு மாற்று மொழியின் புராணக்கூறு வேறொரு மொழியில் இடம் பெற்றிருக்கும்போது, அதனால் அவ்விலக்கியம் பெருகின்ற மாற்றத்தினையும்

அதனால் பயனடைபவரின் சமூக அல்லது பொருளாதார நன்மையினையும் கருத்தில் கொண்டு நோக்குவது இன்றியமையாததாகிறது.

இங்ஙனம் வடநாட்டில் உள்ள இந்திரனின் மகள் தெய்வானையை முருகன் திருமணம் செய்த கருத்தும், சூரபன்மாவை இரண்டாக பிளந்த புராணக் கருத்தும், சரவணப் பொய்கையில் முருகன் கார்த்திகேயனாக பிறந்த புராணக் கதையும், முருகனுக்கு உரிய மந்திரம் (சடாச்சரம், சரவணபவ) போன்றனவும் திருமுருகாற்றுப்படையில் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத் தலைவனை ஏன் ஆரிய மயமாக்க வேண்டும் என்கிற கேள்வி எழுகின்ற நிலையில் ஆ.தட்சிணமூர்த்தி அவர்களின் கூற்று இதற்கு வலு சேர்க்குமாறு அமைகின்றது.

“திருமுருகாற்றுப்படையில் முருகன் ஆரியக் கடவுளான கார்த்திகேயனுடன் இணைந்தமை தெளிவாகின்றது. கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப்பட்டவன். வானோர் தானைக் தலைவன், ஆல்கெழு கடவுட்சிறுவன், கொற்றவை சிறுவன், குறிஞ்சிக் கிழவன் எனப் பலவாறு கூறப்படுகிறான். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், பழமுதிர்ச்சோலைமலை, திருவேரகம், குன்று தோராடல் போன்றவை அவன் இருப்பிடங்களாகக் கூறப்பட்டுள்ளன. முருக வழிபாட்டில் இருவேறு நிலைகளை இந்நூலில் காண்கிறோம். தமிழர்க்கே உரிய பழைய வழிபாடும் வேதவழிபாட்டு முறையும் இடம் பெறுதல் காணலாம்”[18] என்பதில் முருக வழிபாடு, வேத வழிபாட்டோடு இணைக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

**“சூர் முதல் தடித்த சுடர் இலை நெடுவேல்”**[19]

என்று கார்த்திகை முருகன் கொன்ற சூரபன்மாவை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். மேலும் சூரபன்மா அஞ்சி ஓடிக் கடலில் புகுந்தான். அவனது உடல் அழிந்து வேறாகும்படி செய்ய முருகன் அவுணரின் வெற்றி அடங்க மாமரமாய் நின்ற அவனை வென்றான் என்ற குறிப்பையும் திருமுருகாற்றுப்படையின்கண் பதிவுசெய்துள்ளார்.

**“இருபேர் உருவின் ஒரு பேர் யாக்கை**
**அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி**
**அவுணர் நல் வலம் அடங்க, அவிழ் இணர்**
**மா முதல் தடிந்த மறு இல் கொற்றத்து”**[20]

என்று கூறுகிறார். மேலும் முருகன் ஆட்டுக்கிடாயை அடக்கியது, சூரபன்மாவை கொன்று கோழியாகவும், மயிலாகவும் ஆக்கிக்கொண்ட கந்த புராணக் கருத்தையும் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

**“தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங்**
**கொடியன் நெடியன் தொடி அணி தோளன்”**[21]

என இடம்பெற்றுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் முருகன் அறுவரால் பெற்றெடுக்கப்பட்ட குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

**“ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப**
**அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ**
**ஆல் கெழு கடவுட் புதல்வ மால் வரை**
**.... ..................**
**இழை அணி சிறப்பின் பழையோள் குழவி”[22]**

என்று கூறியுள்ளார் நக்கீரர். மேலும் சூரபன்மாவை அழித்து மதவலி என்ற பெயரைப் பெற்றதான குறிப்பையும் குறிப்பிட்டுள்ளார்.

**“சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி**
**போர்மிகு பொருந குரிசில் எனப் பல”[23]**

எனக் குறிப்பிடுவதிலிருந்து தமிழ் முருகன் ஆரிய முருகனாக பல வீரதீர செயல்கள் புரிபவராக வடமொழப் புராணங்கள் குறிப்பிடுவதை அறிந்துகொள்ள முடிகிறது.

திருமுருகாற்றுப்படை காலத்தால் பிற்பட்டதற்கான காரணமாக திகழ்வது அதில் இடம்பெற்றிருக்கும் சமய சார்பே ஆகும். ஆரிய முருகனான கார்த்திகேயன் பற்றிய குறிப்புகள், திருமுருகாற்றுப்படை உருவான விதத்தில் உள்ள வடமொழி வைதீக சார்பு, நக்கீரர் குறித்த ஆரியம் தொடர்பான கதை, முருகனின் ஆறுமுகம், முருகனின் பன்னிரு கைகள், முருகன் வழிபாட்டில் இடம்பெறும் ஆரிய சடங்குகள், ஆரிய வழியில் முருகனை அந்தணர் வழிபட்ட முறை, திருமால், உருத்திரன், இந்திரன் உள்ளிட்ட வடநாட்டின் கடவுளர் தொடர்பான கருத்துக்கள், வடமொழி புராணங்கள் குறிப்பிடும் தேவர் வருகை குறித்த கருத்துகள் என திருமுருகாற்றுப்படை வடமொழிக் கூறுகளை நிரம்பப் பெற்ற இலக்கியமாக திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.2 பொருநராற்றுப்படை :

பொருநராற்றுப்படை கரிகாலச் சோழனின் சிறப்பினைக் கூறுகிறது. இது 248 அடிகளைக் கொண்டது. கலைஞர்களிடம் சோழன் கொண்ட அன்பையும், காவிரி ஆற்றின் பெருமையையும் இப்பாடல் விளக்குகின்றது. இந்நூலை இயற்றியவர் முடத்தாமக் கண்ணியார் ஆவார். இந்நூல் சோழ மன்னன் கரிகாலனிடம் பரிசில் பெற்ற பொருநர் ஒருவர், தன்னைப் போலவே நெடுநாள் பசியால் வாடிவரும் பொருநருக்குத் தான் பரிசில் பெற்றதையும், எவ்வாறு பரிசில் பெற வேண்டும் என்பதையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

### 3.2.1 நூல் அமைப்பு:

பொருநனை அறிவுறுத்துமாறு தொடங்கும் இப்பாடல் யாழின் இயல்பினையும், யாழினைச் செப்பனிடும் முறையினையும் முதற்கண் விளக்குகின்றது. அடுத்து பாடினியின் இயல்பினை விளக்குகிறது. பிறகு கடவுள் வழிபாடு குறித்தும் விளக்குகிறது. இதனைத் தொடர்ந்து தான் பரிசில் பெற்ற விதத்தையும் பொருநன் கரிகாலச் சோழனைப் போற்றிய முறையினையும் விளக்குகிறது. பொருநன் தனது வறுமை நிலையையும், சோழ நாட்டில் தன்னை விருந்தோம்பிய முறையினையும் மிகவும் இயல்பாக எடுத்துரைப்பதுபோல அமைக்கப்பட்டுள்ளது. தனது நிலையைக் கனவோ என்று எண்ணும் அளவிற்கு நிலை மாறியிருந்ததை மிகவும் இயல்பாக முடத்தாமக் கண்ணியார் விளக்குகிறார். மேலும் கரிகாலன் கொடுத்த கள், பண்ணியாரம், இன்சோறு போன்றவற்றையும் பொருநன் வியப்பாக கூறுவதைப்போல் கூறுகிறார். மேலும் சோழநாட்டின் சிறப்பினையும், கரிகாலனின் பெரும் சிறப்பினையும் பொருநன் வாயிலாக விளக்குகிறார். காவிரி பாயும் சோழநாட்டின் வளம், வேற்று நிலப்பகுதியில் வாழும் பிற உயிரினங்கள்கூட சோழநாட்டில் தஞ்சம் அடைந்து வாழும் முறை போன்றவற்றுடன் ஒரு முழுமையான வரலாற்று நூலாகப் பொருநராற்றுப்படை அமைந்துள்ளது.

### 3.2.2 பொருநராற்றுப்படையில் வடமொழிக் கூறுகள்:

திருமுருகாற்றுப்படையில் சமயம் சார்ந்த பதிவுகள் வடமொழிச் சார்ந்து அமைந்திருந்த நிலையில், பொருநராற்றுப்படையில் எவ்வித வடமொழிக் கூறுகளும் இடம்பெறாமல் இருப்பது வியப்பை ஏற்படுத்துகின்றது. 248 அடிகளைக் கொண்ட இந்நெடும்பாட்டில் கடவுள் வழிபாடு குறித்த பதிவுகள் (அடிகள் 48-52) இடம்பெற்ற போதிலும், அத்தெய்வங்கள் இன்னது என்று பெயர் எதுவும் குறிப்பிடவில்லை. இது,

**“காடு உறை கடவுள் கடன்”**[24]

என பொதுவாக அமைந்துள்ளது. இதிலிருந்து பொருநராற்றுப்படையின் தெய்வச் சார்பின்மைப் புலனாகிறது. இங்கு காட்டில் வாழும் தெய்வங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காட்டுத் தெய்வங்கள் குறித்த வழிபாடு இன்றும் தமிழ் மக்களால் பெரிதும் நிகழ்த்தப்படுகின்றது. தமிழகத்தில் உள்ள கிராமங்களில் இதுபோல் நூற்றுக்கணக்கான தெய்வங்கள் வயல்வெளிகளில் காணப்படுகின்றன. இத்தெய்வங்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை பொங்கல் வைத்து வழிபடும் முறையும் நிகழ்த்தப்படுகின்றது. இந்நிகழ்ச்சியில் பெரும்பாலும் ஊர் முழுதும் திரண்டு திருவிழாவாக முன்னெடுப்பதில்லை. ஒருசில குடும்பங்கள் மட்டும் இவ்வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர்.

விளைநிலங்களில் அடிக்கடி பாம்புகளைக் கண்டாலோ, அல்லது அவ்வயலுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டு விளைச்சல் குறைவாகக் கிடைத்தாலோ உடனடியாக அக்காட்டுத் தெய்வங்களுக்குப் பூசை நிகழ்த்தப்பெறுகின்றது. இதில் பலியும் இடம்பெறுகிறது.

### 3.2.3 தவம் குறித்த கருத்து இடம் பெறுதல்:

கரிகாலனின் நாட்டின்கண் தவம் புரியும் இடங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றில் பொருநன் தங்கினான். அங்கு எல்லாப் பொருட்களும் இருந்தன. இதனை முடத்தாமக் கண்ணியார்,

**“தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது**
**அதன் பயம் எய்திய அளவை மான**
**ஆறு செல் வருத்தம் அகல நீங்க”**[25]

என்று குறிப்பிடுகிறார். “தவம் செய்பவர்கள் இப்பிறவி நீங்கி அடுத்தப் பிறவியில் சொர்க்கத்தை அடைந்து இன்புறுவர். ஆனாலும் இந்த உடம்புடனேயே அவர் இன்பத்தை பெறுவதில்லை. ஆனால் இவ்வுடம்போடே இன்பம் அனுபவித்தால் அத்தவத்தினர் பெறும் இன்பத்தைக் காட்டிலும் சிறந்தது” என்று அவர் குறிப்பிடுகின்றார். இது வடநூற்கள் கூறும் முக்தி நிலையாகும். இதனை பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி வைதீக கருத்தாகக் கருதுகின்றார்.

“எந்நிலையிலிருப்பவரும் ஜீவன் முக்தியை அடையலாம். அதனை முடத்தாமக் கண்ணியார் தவஞ்செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது, அதன்பய மெய்திய வளவை”[26] எனக் கூறுகிறார். எனவே கரிகாலனின் சோழநாட்டில் தவச்சாலைகள் இருந்ததை அறியமுடிகின்றது. கரிகாலன் மன்னனாக இருந்தாலும் கலைஞர்களைப் பெரிதும் மதித்தான். எனவே உயர்ந்த குலத்தவர், நண்பர், பெரியவர்களை எதிர்சென்று வரவேற்றான். விருந்தோம்பல் என்ற உயர் பண்பைக் கலைஞர்களிடம் காட்டினான் என்று பொருநராற்றுப்படைக் குறிப்பிடுகிறது.

**“பால் புரை புரவி நால்கு உடன் பூட்டி**
**காலின் ஏழ் அடிப்பின் சென்று கோல் இன்”**[27]

பொருநராற்றுப்படையின் இவ்வடிகள் குறித்து கருத்து கூறும் பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள், “ஒருவரை ஒருவர் ஏழடி பின் சென்றால் அவர் அவர்க்கு நண்பர் ஆவர் என்பதைப் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார், காலினேழடிப் பின் சென்று (166) என்ற விடத்து குறித்தனர். இதே கருத்தினை வேதயர் மஹாபாரதம் ‘வனபர்வத்தில் ஸதாம் ஸாப்தபஉம் மித்ரம் ஆஹீ!ஸந்:குலோசிதா:’ என்றனர் (261.37)”[28] எனக் குறிப்பிடுகின்றார். இதன்மூலம் இரு நிலப்பகுதியில் வாழ்ந்த புலவர்களின் ஒத்த சிந்தனையினை அறிய முடிகின்றது.

இங்ஙனம் சங்க காலத்தின் வழக்கம் இன்னும் தமிழ் மக்களால் எவ்வித ஆரிய புனைவும் இன்றி நிகழ்த்தப்படுகிறது. பொருநராற்றுப்படையில் வடமொழிக் கூறுகளான வடமொழி நம்பிக்கை,

பண்பாடுகள், கதைகள், மனிதர்கள் என்று எவையும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.3 சிறுபாணாற்றுப்படை :

சிறுபாணாற்றுப்படை இருநூற்று அறுபத்து ஒன்பது அடிகளை உடையது. இது 'பாணர்' என்னும் இசைக் கலைஞர்களைப் பற்றிய பாடலாகும். இப்பாடலைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார். ஒய்மாநாடு நல்லியக்கோடனைச் சிறப்பித்து பாடியுள்ளார்.

### 3.3.1 சிறுபாணாற்றுப்படை அமைப்பு முறை :

சிறுபாணாற்றுப்படை, பரிசில் பெற்ற பாணர் வறுமையில் வாடும் மற்றொரு பாணருக்குத் தான் பரிசில் பெற்ற திறத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. பொதுவாக மனம் பற்றிய கருத்தியலை ஆராயும்போது மனத்தின் இயல்பு மனிதருக்கு மனிதர் பெரும்பாலும் வேறுபடுவதில்லை என்கின்றனர். தான் மட்டுமே நலமாக வாழ்ந்தால் போதும் என்ற மனப்பான்மை பெருகி பொதுநலம் குறைந்துவிடும் காலக்கட்டத்தில் ஆற்றுப்படை இலக்கியங்கள் குறித்த வாசிப்பு மனநிறைவு தருவதாக உள்ளது.

பாணர் மற்றும் விறலியர் வந்த வழியைக் கூறுவதாகத் தொடங்கும் சிறுபாணாற்றுப்படை விறலியர் இயல்பையும் அவர்தம் உடல் அழகையும் பெரிதும் விவரிக்கின்றது. அடுத்து சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பரிசளிப்பில் ஏனைய மன்னர்களைக் காட்டிலும் குறைவாக வழங்குவதாகக் கூறுகின்றது. தொடர்ச்சியாக கடையெழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய், அதியன், நள்ளி, ஓரி முதலியோரை அவர்தம் கொடைத்திறத்தோடு புலவர், பாணன் கூற்றாக விளக்குகிறார் நத்தத்தனார். நல்லியக்கோடனின் பிறப்பு, அவனது சிறப்புகளில் ஒரு சிறு பகுதியை முடிவுரையாக வழங்கும் புலவர், நல்லியக்கோடனைக் காண்பதற்குமுன் இருந்த தனது குடும்ப நிலையை மிகவும் விரிவாக எடுத்துரைக்கின்றார். அதன்பிறகு பரிசில் பெறாத அப்பாணற்கு நல்லியக்கோடனைச் சென்றடையும் வழியினையும், அங்கு அவர்களுக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களையும் கூறி அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகிறார். பிறகு நல்லியக்கோடனின் அரண்மனை சிறப்பை விளக்குகிறார். நல்லியக்கோடனைப் புகழும் புலவர், பரிசிலர், வீரர் எனப் பட்டியலிடும் பாணன், யாழின் சிறப்பினையும் கூறுகின்றார். மேலும் பரிசிலர்க்கு கொடுக்கும் உணவைக் குறிப்பிடும்போது பாரத கதையின் குறிப்பினை ஒப்புமைப்படுத்திக் கூறுகின்றார். இறுதியாக நல்லியக்கோடன் பரிசிலர்க்குக் கொடுத்து 'இன்றே செல்க' என்று அனுப்பி வைப்பதையும் கூறி அவனைச் சென்று பார்ப்பாயாக என்று அனுப்பி வைப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

### 3.3.2 இமயத்தில் வில் பொறித்த குறிப்பு:

சேர மன்னன் வடநாட்டின் இமயமலை வரை சென்று இமயத்தில் வெற்றியின் அடையாளமாக தனது ‘வில்’ சின்னத்தைப் பொறித்த நிகழ்வு ஒன்று சிறுபாணாற்றுப்படை,

> **“குடபுலம் காவலர் மருமான் ஒன்னார்**
> **வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த**
> **எழு உறழ் திணி தோள் இயல் தேர்க்குட்டுவன்”[29]**

என்றுரைக்கிறது. சேர மன்னர்கள் வடநாடுவரை சென்றதன் குறிப்புகள் மிகுதியாக உள்ளன. இதன்வழி சேரமன்னர்கள் வடநாட்டின் மொழி, பண்பாடு, நம்பிக்கைகள் போன்றவைகளைத் தெரிந்து, அவற்றில் தனக்கு ஏற்புடையதைச் சேரநாட்டிற்குக் கொண்டு வந்திருக்க வாய்ப்புகள் உண்டு என்பதை அறிய முடிகின்றது. ஒரு நிலத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ளும்போது மொழி, சமயம், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவை ஒன்றோடு ஒன்று கலந்துபோவது இயல்பாகும்.

### 3.3.3 சிவனுக்கு ‘ஆய்’ கொடுத்த பரிசில்:

கடையேழு வள்ளல்களைக் குறிப்பிட்டு வரும் பாணன் 95 முதல் 98 வரையிலான அடிகளில் ஆய் என்ற குறுநில மன்னனைக் குறிப்பிடுகின்றான். அப்போது அவரது சிறப்பினை,

> **“நீல நாகம் நல்கிய கலிங்கம்**
> **ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த**
> **சாவம் தாங்கிய சாந்து புலர்திணி தோள்**
> **ஆர்வ நன்மொழி ஆயும் மால்வரைக்”[30]**

எனக் குறிப்பிடுகின்றான். நாகம் கொடுத்த ஆடையை ஆலமரத்தின் கீழ் அமர்ந்த சிவபெருமானுக்குத் தந்தவன் என்று பொருளாகிறது.

இங்கு ஆலமர் செல்வன் என்பதை சிவன் என்று பெரும்பான்மையோர் குறிக்கின்றனர். மெய்யப்பன் தமிழகராதியும் ஆலமர்கடவுள், ஆலமர்ச்செல்வன் என்ற சொல்லுக்கு ”கல்லால மரத்தின் கீழ்த் தென்முகக் கடவுளாய் வீற்றிருக்கும் சிவன்”[31] என்று பொருள் கூறுகின்றது. கழத் தமிழ் அகராதியும் (2004) ஆலமர் செல்வன், ஆலமுண்டோன் என்பதற்கு “சிவபெருமான்”[32] என்று பொருள் கொள்கின்றது. சிவபெருமான் ஆரியர்களிடமிருந்து தமிழகம் வந்ததாக,

“ஆரியரல்லாதோர் குறிப்பாகத் திராவிடர் தொடர்புகள் அதிகரித்தன. இருசாராரும் பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். சமயத்துறையில், முக்கியமாக இருக்கு வேத காலத்திற்குப் பிந்திய வேதஇலக்கியம், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றிலே, உதாரணமாகச் சிவபிரானைப் பற்றிய கருத்துக்களிலே ஆரியரல்லதோர் கருத்துக்களே

மேலோங்கின எனலாம்''[33] என வி.சிவசாமி குறிப்பிடுகின்றார். இங்ஙனம் வடநாட்டில் உருவான 'சிவன்' பற்றியக் குறிப்புகள் சிறுபாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

### 3.3.4 இராமாயணக் கதைக்கான கூறு இடம் பெற்றிருத்தல்:

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான ஓய்மாநாட்டு நல்லியக்கோடனை அறிமுகப்படுத்தும் பாணன் அவரை இலங்கையில் உள்ள ஓவியக்குடியில் பிறந்தவன் எனக் குறிப்பிடுகின்றார். அப்போது இராமயணத்தில் இடம்பெறும் இலங்கை இராவணன் குறித்த வடமொழிப் புராணப் பதிவை மேலோட்டமாக குறிப்பிட்டுச் செல்கிறான் பாணன்.

> **"தொல் மா இலங்கைக் கருவொடு பெயரிய**
> **நல் மா இலங்கை மன்னருள்ளும்**
> **மறு இன்றி விளங்கிய வடு இல் வாய் வாள்"[34]**

என இராவணனின் இலங்கை தீயது எனவும், நல்லியக்கோடனின் இலங்கை நன்மையுடையது என்றும் பாணன் குறிப்பிடுவதன் வாயிலாக வடநாட்டில் உருவான புராணக் கதையின் புழக்கம் அக்காலத்தில் இருந்ததையும், அதனை மக்கள் தம் வாழ்வோடு பொருந்திப் பார்த்ததையும் அறிய முடிகின்றது.

### 3.3.5 பாரத கதையில் வீமன் பற்றிய குறிப்பு:

வடநாட்டில் உருவான புராணக் கதைகள் சங்க காலத்தில் படித்தோர், படிக்காதோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று அனைத்து மட்டங்களிலும் இருந்துள்ளன. இவை இரு நிலப்பகுதிக்குமான நீண்ட கால உறவை வெளிப்படுத்துகின்றன. அங்ஙனம் ஓய்மாநாட்டு நல்லியக்கோடனின் அரண்மனையில் கிடைக்கும் உணவு குறித்துப் பாணனுக்கு விளக்கும் பரிசில் பெற்ற பாணன்,

> **"பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கிக்**
> **கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்**
> **பூ விரி கச்சைப் புகழோன் தன்முன்**
> **பனிவரை மார்பன் பயந்த நுண் பொருட்**
> **பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்"[35]**

என விளக்குகிறான். காண்டவ வனத்தை நெருப்புக் கடவுளுக்குத் தந்து உண்ணச் செய்து, பகைவரின் உயிரைக் கவரும் அம்பினை உடைய அர்ச்சுனனின் அண்ணன் இமயமலை போன்ற மார்பை உடையவன். அவன் எழுதிய மடைநூலில் கூறிய முறைப்படி சமைக்கப்பட்ட உணவை வள்ளல் உண்ணச் செய்வான் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை இயற்றிய அ. மாணிக்கம்,

"பதின்மூன்று ஆண்டு மறைந்து வாழ்ந்தபோது வீராட நாட்டில் வீமன் பலாயனன் என்ற பெயருடன் மடைத்தொழில் தலைவனாக இருந்து வந்ததாக பாரதம் கூறுகின்றது. அரச வேள்வி

(இராச சூய யாகம்) செய்த காலத்தில் யுதிட்டிரன் வீமனை நோக்கி ‘முந்நீர் வேலையின் மணலிற் சாலும் மிகுசனம் அருந்தத் தேவர் ஆலயத்து அமுதம் அன்ன அடிசில் நீ அளித்தி’ என்று கூறினான். இதுவும் வீமன் மடைத்தொழில் வல்லவன் என்பதை உணர்த்தும். வீமன் செய்த மடைநூல் அக்காலத்து இருந்து பிற்காலத்தில் அழிந்தது போலும். முடைத்தொழில் நூல்வல்லார் வீமனும் நளனும் என்ப பீமபாகம், நளபாகம் என்பது வழக்காறு”[36] என்று குறிப்பிடுவதிலிருந்து சிறுபாணாற்றுப்படை குறிப்பது வடமொழி புராணம் என்பது உறுதியாகிறது. வடநாட்டில் வியாசரால் உருவாக்கப்பட்ட இக்கதையின் சிறிய கூறுகூட தமிழ் மண்ணில் ஆழமாக பரவியுள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

சிறுபாணாற்றுப்படையில் சேரன் இமயத்தில் வில் சின்னம் பொறித்த குறிப்பு இடம்பெற்றுள்ளது. மேலும் சிவனுக்கு ஆய் என்னும் குறுநில மன்னன் கொடுத்த பரிசில், இராமாயண கதையின் சிறுகூறு ஒன்று, மகாபாரத புராணத்தின் வீமன் பற்றிய குறிப்பு ஆகிய வடமொழிக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. நெடும்பாட்டான சிறுபாணாற்றுப்படையில் குறைந்த அளவில் வடமொழிக் கூறுகள் பதிவாகியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.4 பெரும்பாணாற்றுப்படை:

தொண்டை நாட்டின் மன்னனான இளந்திரையனிடம் பரிசில் பெற்று வரும் பெரும்பாணன் தன் எதிர்ப்பட்ட வறிய பெரும்பாணனை அந்த வள்ளலிடம் ஆற்றுப்படுத்தியது இந்நூல். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இ∴து ஐநூறு அடிகளால் ஆசிரியப்பாவில் அமையப் பெற்றதாகும்.

#### 3.4.1 தொண்டைமான் இளந்திரையன்:

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவனாகிய இளந்திரையன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். தொண்டையர் ஆண்டதால் இந்நாட்டுக்குத் தொண்டை நாடு எனப் பெயர். இம்மரபினரைப் பல்லவர் என்றும் கருதுவர்.

#### 3.4.2 பெரும்பாணாற்றுப்படையின் காலம்:

கால ஆராய்ச்சியில் சிறந்து விளங்கிய எஸ்.வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள நூல்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அது இன்ன காலத்தது எனக் குறிப்பிடுகின்றார். அங்ஙனம் பெரும்பாணாற்றுப்படையானது அவர் வரிசைப்படுத்திய கால வரிசையில் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது.

### 3.4.3 கடியலூர் உருத்திரங்கண்ணனார்:

பெரும்பாணாற்றுப்படையை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் ‘பட்டினப்பாலை’ நூலையும் இயற்றியுள்ளார். இவரது பெயர் வடசொற்களால் ஆனது என்பார் புலவர் த.கோவேந்தன். இவர் திருமாலிடத்து அன்பு கொண்டவராக இருந்துள்ளார். இவரது இந்நூல் சங்க காலத்தை முழுவதுமாக நம் கண் முன் நிறுத்தும் சிறப்பு கொண்டதாகத் திகழ்கின்றது.

### 3.4.4 பெரும்பாணாற்றுப்படையின் அமைப்பு :

சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள ஏனைய நூற்களைக் காட்டிலும் பெரும்பாணாற்றுப்படை தனிச்சிறப்புடையதாகத் திகழ்கின்றது. காரணம் ஒரு பாடல் ஒரு குறிப்பிட்ட நிலத்தையும் அது சார்ந்த சூழ்நிலைகளையும் விளக்கும். ஆனால் இந்நூல் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்று எல்லா நிலப்பகுதியையும் அதற்குரிய தனித்த இயல்புகளோடு படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும் அப்பகுதிகளை மேம்போக்காக கூறவில்லை. நன்கு நுணுகி ஆராய்ந்து இயற்றியதைப்போல் மிக மிக நேர்த்தியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு புலவருக்கு இத்தனை நிலம் குறித்த தகவல்கள் அன்றைய காலத்தில் தெரிந்திருப்பது வியப்பாகவும் அவர்தம் உழைப்பை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. மேலும் வடநாட்டின் நிலவியல் குறித்த பதிவும் இவரது ஆற்றலை வியக்க வைக்கிறது. சங்ககால நிலவியலை அறிய விரும்புவர் பெரும்பாணாற்றுப்படையைப் பயின்றால் போதுமானது என்கிற முறையில் அமையப் பெற்றுள்ளது இந்நூல்.

### 3.4.5 திருமால் மரபில் வந்தவன் இளந்திரையன்:

வைணவம், சைவம், சமணம், பௌத்தம் உள்ளிட்ட சமயங்கள் நான்குமே வடநாட்டிலிருந்து வந்துள்ளது என்பது க.நெடுஞ்செழியன், ராஜ்கௌதமன், சி.பத்மநாதன் போன்ற அறிஞர்களின் கூற்றுவழி அறிய முடிகிறது. அங்ஙனம் வடமொழியில் ரிக் வேதத்தில் குறிக்கப்பெற்றுள்ள ‘திருமால்’ வழி வந்தவன் தொண்டைமான் இளந்திரையன் என்று அவரை வைணவராக்கிக் காட்டுகிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இவ்விடத்தில் சமயச் சார்பற்றது சங்க இலக்கியம் என்ற கருத்துநிலை கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

> **“இருநிலம் கடந்த திரு மார்பின்**
> **முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்**
> **திரை தரு மரபின் உரவோன் உம்பல்”**[37]

என்று குறிப்பிடும் உருத்திரங்கண்ணனார், திருமால் மாவலியாம் மூன்றடி மண் வேண்டும் எனக் கேட்டுப் பெற்ற புராணக் கதையை இணைத்து, கடலின் நீல நிறம் போன்ற நீல நிறம்

கொண்டவன், திருமாலின் வழித் தோன்றல் எனக் கூறுகிறார். இவ்விடத்து த.கோவேந்தன் அவர்களின் கருத்து வலு சேர்க்கும் விதமாக உள்ளது.

“பெரும்பாணாற்றுப்படை ஆசிரியராகிய, உருத்திரன் என்பாரின் மகனாகிய கண்ணனார் என்ற உறவினை உணர்த்தும் உருத்திரன் கண்ணனார், ஒரு பார்ப்பனர். மேலும் அவருடைய பாடற்பொருள், நான் முன்பே குறிப்பிட்டது போல், இவ்வாசிரியரியரின் காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆரிய மயமாக்கப்பட்டுவிட்டது காஞ்சி”[38] எனக் குறிப்பிடுகிறார். எனவே பெரும்பாணாற்றுப்படையில் வடமொழிக் கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

### 3.4.6 இளந்திரையனின் கதை :

உருத்திரங்கண்ணனார் ‘திரை தரு மரபின் உரவோன்’ என்று பெரும்பாணாற்றுப்படையின் 31வது அடியில் குறிப்பிட்டுள்ளார். இவ்வடிக்கு நச்சினார்க்கினியர் ‘நாகப்பட்டினத்துச் சோழன் ஒருவன் வரத்தால் நாகவுலகம் சென்றான். அங்கு நாகக் கன்னி ஒருத்தியை மணந்தான். அவள் கருக்கொண்டாள். அப்போது ‘நான் பெறப்போகும் மகனை என்ன செய்வேன்? என்று வினவ, ‘தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் குழந்தையைக் கடலில் விடுக? அவன் வந்து கரையேறின்? அவனுக்கு நான் அரசவுரிமையை அளிப்பேன்’ என்று அம்மன்னன் உரைத்தானாம். அவளும் அப்படியேச் செய்தாளாம். அவன் அரசன் ஆனான். திரை தருதலால் திரையன் எனப் பெற்றான்’ என்று அக்கதை நிறைவடைகிறது.

இங்ஙனம் இயல்பை விட்டு விலகிய விதமாக மேற்கண்ட கதை வடமொழி மரபைப் பின்பற்றியதாய் அமைந்துள்ளது.

### 3.4.7 இந்திர வில்:

ஐந்நூறு அடிகளைக் கொண்ட இப்பாடலில் சமயம் சார்ந்த கருத்துக்கள் இடம் பெறுகின்றன. இது ஓர் ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. இது போன்ற கருத்துக்கள் இல்லாமல் இருப்பின் இவ்விலக்கியம் தனித்தமிழ்ச் சிறப்புடையதாக அமைந்துவிடும். அங்ஙனம் உருத்திரங்கண்ணனார்,

**“அகல் இரு வானத்துக் குறை வில் ஏய்ப்ப”[39]**

எனக் குறிப்பிடுகின்றார். இங்கு ‘குறைவில்’ என்ற இடத்தில் ‘இந்திர வில்’ என்றே உரையாசிரியர்கள் பொருள் கொள்கின்றனர். இந்திரவில் குறித்த கதை வேதத்தில் உள்ளதென்பதையும், உரையாசிரியர் மாணிக்கம் பின்வருமாறு கூறுகிறார்.

"யசூர் வேத தாருண முதற் பிரசினத்துள்ள ஐந்தாம் அநுவாக முதற் பஞ்சாதியில் இந்தரவில் உண்டான வரலாறு கூறிய விடத்தில், அது முதலில் 'உருத்திரன் வில் என்றும், உருத்திரன் அவ்வில்லை வளைத்துத் தரையில் ஊன்றி நின்று, அக்னியும் இந்திரனும் பவமானனும் (வாயுவும்) தன்னை எதிர்க்க வல்லார் இல்லை என்று வஞ்சினம் கூறியதாகக் கேட்டு, இந்திரன் பொறுக்காது, (உம்ரி) கரையான் ஆகி அவ்வில்லை அறுத்தான். அது கிளம்பி அவ்வுருத்திரன் தலையோடு வானில் போய் நின்றது என்றும், பின்பு தேப்ரவர்க்கியம் என்னும் வேள்வியை இயற்றி இந்திரனைத் தலையை உடையவன் ஆக்கினான் என்றும் கூறப்பட்டுள்ளது. இது வேதக் கதை, ஆதலால் இதை உணர்ந்த உருத்திரங்கண்ணனார் அப்பொருள்பட இங்கு உரைத்தார் எனலாம்"[40] எனக் குறிப்பிடுகின்றார். இவர் கூற்றும் புலவரின் மொழியறிவும் வைத்து ஒப்பு நோக்கின் வடமொழிச் சார்புடைய சாயலை ஏற்க முடியும்.

மேலும் இந்திரன் என்ற கடவுள் ரிக் வேதத்தில் இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அங்ஙனம் வி.சிவசாமி அவர்களின் கூற்றும், ஒருங்கே வைத்து ஆராயத்தக்கது. "இருக்கு வேதத்தில் வரும் பிரபல்யமான போர்த் தெய்வமான இந்திரன் கறுத்த நிறமும், தட்டையான மூக்குள்ள தாசர், தஸ்யுக்களின் அரணுள்ள நகரங்களைத் தகர்த்து ஆரியர் வெற்றியினை மேம்படுத்திய வீரனாக, புரந்தரனாக, புரபித் (நகரங்களைத் தகர்த்தவன்) ஆகப் போற்றப்படுகிறான்"[41] என்ற வி.சிவசாமியின் கூற்றின் கருத்தும் இந்திரன் வடநாட்டின் கடவுள் என்பதை உய்த்துணரச் செய்கிறது.

### 3.4.8 அந்தணர் இல்லம்:

உமணர் குடியிருப்பு, ஆயர் குடியிருப்பு, உழவர் குடியிருப்பு, மீனவர் குடியிருப்பு எனக் கூறிவரும் உருத்திரங்கண்ணனார் அந்தணர் குடியிருப்பை,

> **"பைஞ் சேறு மெழுகிய படிவ நல் நகர்**
> **மனை உறை கோழியொடு ஞமலி துன்னாது**
> **வளை வாய்க் கிள்ளை மறை விளி பயிற்றும்**
> **மறை காப்பாளர் உறை பதிச் சேப்பின்"[42]**

என்று படம் பிடித்துக் காட்டுகிறார். 'வீட்டில் கிளிக்கு வேத ஒலியைக் கற்பிக்கின்ற வேதத்தைக் காக்கும் தொழிலைச் செய்பவர் அந்தணர்' என்று அவர்தம் இல்லத்தைக் குறிப்பிடுகின்றார். இதன்வழி வடமொழியின் வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்கள் சங்க காலத்தில் நிலையான குடியிருப்புகளை அமைத்திருந்ததை அறிய முடிகின்றது. அதுவும் ஒரு குழுவாக வாழ்ந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.

### 3.4.9 அருந்ததி:

சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படும் பெயர்களில் ‘அருந்ததியும்’ ஒன்றாகும். அருந்ததி குறித்த கதை சமயசார்புடையதாகவும், அக்கதை ஆரிய மயமாக்கப்பட்டதாகவும் இருக்கின்றது. அங்ஙனம் குறிப்பிடப்படும் அருந்ததி குறித்த பதிவையும் உருத்திரங்கண்ணனார்,

> **“சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்**
> **வளைக் கை மகடூஉ வயின் அறிந்து அட்ட”[43]**

எனக் குறிப்பிடுகின்றார். இங்கு ‘சிறுமீன்’ என்பதற்கு உரையாசிரியர்கள் அருந்ததி என்று பொருள் கொள்வதோடு, இம்மீன் வசிட்ட முனிவரின் மனைவி; கற்பில் சிறந்தவள்; வடிவத்தால் சிறியது; எனவே சிறுமீன் என்கின்றனர். கற்பு என்னும் அக அழகும் நறுநுதல் என்ற புற அழகும், வளையல் என்ற செயற்கை அழகும் கூறப்படுகின்றன.

### 3.4.10 உணவுமுறை:

அந்தணர் விருந்தோம்பும் முறையை விரிவாக எடுத்து இயம்புகின்றார் உருத்திரங்கண்ணனார். இவ்விருந்தோம்பல் முற்றிலும் வேறுப்பட்டதாக அமைந்திருப்பதைக் காணமுடியும். ரிக் வேதகால ஆரியர்களின் உணவுமுறைகள் குறித்து ராகுல சாங்கிருத்தியாயன்,

“வேதங்களுக்குப் பின்னர் பிராமண நூல்களின் காலத்திலும் (கி.மு.800) மாமிசம் ஆரியர்களின் முக்கிய உணவாகவே இருந்தது. புலாலைக்கொண்டு மந்திரமாயங்களும் புழக்கத்தில் இருந்தன. “தன் மகன் புலவனாகவும், புகழ் பெற்றவனாகவும், நல்ல பேச்சாளனாகவும், சபைகளிலே திறமையுள்ளவனாகவும், எல்லா வேதங்களையும் படித்தவனாகவும், முழு ஆயுளைக் கொண்டவனாகவும் இருக்க வேண்டுமென விரும்பினால், தாயானவள் நெய்யுடன் கலந்த பொலி எருது அல்லது எருதுவின் மாமிசம் சேர்ந்த சாதம் சாப்பிட வேண்டும் என்று ‘பிரகதாரண்யசம்’ (6-4-8) கூறுகிறது”[44] எனக் குறிப்பிடுகிறார். இங்ஙனம் படிப்படியாக ஆரியர்கள் புலாலை கைவிட்டு வந்துள்ளனர். இத்தகைய உணவுமுறையைப் பெரும்பாணாற்றுப்படை வெளிப்படுத்துகிறது.

### 3.4.11 வேள்வி:

ஆரியரின் வழிபாட்டு முறையில் மிக இன்றியமையாதது ‘தீ’ வழிபாடு ஆகும். அதிலும் வேள்வி குறிப்பிடத்தக்கதாகும். வேள்வி இயற்றுவதில் ஆரியர்கள் மட்டுமே பங்கு கொண்டுள்ளனர். இக்குறிப்பு எட்டுத்தொகை நூல்களில் ஆங்காங்கே காணப்படுவதை போல பெரும்பாணாற்றுப்படையிலும் இடம் பெற்றுள்ளது. இதனை,

**“கேள்வி அந்தணர் அருங் கடன் இறுத்த**
**வேள்வித் தூணத்து அசைஇ யவனர்”[45]**

என்று குறிப்பிட்டுள்ளார் உருத்திரங்கண்ணனார். இங்கு பெண்கள் குளிக்கும் இடத்திலிருந்து பறவைகள் பொன் மகரக் குழையை எடுத்துக் கொண்டு அந்தணர் வேள்விச் சாலையில் உள்ள வேள்வித் தூணில் சென்று அமர்ந்தது எனக் கூறும் புலவரின் கூற்றுவழி அந்தணர்கள் வேள்வி மேற்கொண்டது உறுதியாகின்றது.

மேலும் இதுபோன்றொரு வேள்வி நிகழிடத்தையும் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

**“மந்தி சீக்கும் மா துஞ்சு முன்றில்**
**செந்தீப் பேணிய முனிவர் வெண் கோட்டுக்**
**களிறு தரு விறகின் வேட்கும்**
**ஒளிறு இலங்கு அருவிய மலை கிழவோனே…”[46]**

என்று குறிப்பிடுகின்றார். ‘இளம் திரையன் ஆளும் வேங்கட மலையின் யானைகள் கொண்டு வந்து கொடுத்த விறகினை வைத்து இடைவிடாது வேள்வி தீ எரிந்து கொண்டிருக்கும் மலைப் பகுதிகளை உடைய நாடு’ என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார். ஆய்வாளர்கள் இதனை உற்றுநோக்ககுங்கால் இளந்திரையன் ஆண்ட தொண்டை நாட்டை முழுவதுமாக வைணவ நாடாக்க முயற்சி நடைபெற்றதாகக் கருதுகின்றனர். உமணர், எயினர், உழவர் மீனவ மக்கள் வாழும் பகுதிகளில் வடமொழி புராணக் கதைகளையோ, வேள்வி இயற்றியதாகவோ எந்த குறிப்பும் மேம்போக்காகக் கூடக் காணப்படவில்லை. இந்த வடமொழிக் கூறுகள் அனைத்தும் மன்னன், மன்னன் வாழும் அரண்மனை, அதனைச் சுற்றியிருந்த பகுதிகளையே மிகுதியாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

### 3.4.12 வடநாட்டின் பொருட்கள்:

சங்ககால மக்களுக்கும் வடநாட்டினருக்கும் இடையே பல நிலைகளில் தொடர்பு இருந்துள்ளது. அதில் மிக இன்றியமையாதது வணிகத் தொடர்பு ஆகும். உலக உருண்டையில் பண்டையத் தமிழகம் மட்டும் தனித்திருந்திருக்க வாய்ப்பில்லை. கிரேக்கம், யவனர்களோடு தொடர்பு வைத்திருந்தைப் போலவே வடநாட்டோடும் தொடர்பு இருந்துள்ளது. அங்ஙனம் தொடர்பு ஏற்பட்டபோது பல்வேறு கலப்புகளும் ஏற்பட்டன. இத்தகையத் தொடர்பு குறித்த குறிப்புகளை உருத்திரங்கண்ணனாரும் கொடுத்துள்ளார். இது குறித்து அ.தட்சிணாமூர்த்தி அவர்கள்,

“தொண்டை நாட்டில் உள்ள நீர்ப் பெயற்றுத் துறையில் வெள்ளிய தலையாட்டதையுடைய குதிரைகளும், வடநாட்டு நுகர் பொருள்களும் ஏற்றிய நாவாய்கள் நிரம்பியிருந்தன”[47] என குறிப்பிடுகின்றார். இதனை,

**"நீர்ப்பெயற் றெல்லை போகிப் பாற்கேழ்**
**வாலுஉளைப் புரவியொடு வடவளம் தரூஉம்**
**நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை"[48]**

என்கிறது பொருநராற்றுப்படை. இதன்மூலம் வடநாட்டினர் தமிழகத்தில் வாழ்ந்து வந்துள்ளதையும் வடநாட்டினரோடு தமிழகம் வணிக உறவு வைத்திருந்ததையும் அறிய முடிகிறது.

### 3.4.13 திருமால்:

சங்க இலக்கியங்களில் வடநாட்டினரின் பதிவுகள் பெரும்பாலும் சமயம் தொடர்பானதாக இருக்கின்றன. வேறு பல காரணிகள் இருக்கின்றபோது சமயத் தொடர்பை மட்டும் ஏன் விடாப்பிடியாக வடவர்கள் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. வாழ்தலுக்கானப் போராட்டத்தில் தன்னை முன்னிலைப்படுத்தாமல் சமயத்தை முன்னிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருதுவாரும் உண்டு.

**"பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்**
**வெயில்நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்"[49]**

என கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார். இவ்வடிகளுக்கு உரையெழுதும் உரையாசிரியர் மாணிக்கம், பாம்பு அணையில் துயில் கொண்ட திருக்கோலத்துடன் திருமால் எழுந்தருளியுள்ளார் என்கின்றார். மேலும் காஞ்சியில் உள்ள திருமால் திருப்பதி, திருமாலின் நூற்றெட்டுப் பதிகளில் ஒன்றெனவும் கூறுகின்றார். மேலும் திருமாலை பாணன் வணங்கிவிட்டுச் செல்லும்படி புலவர் தமது சமய கருத்தினை வெளிப்படுத்துவதை இங்குக் காணமுடிகின்றது.

**"அருந்திறற் கடவுள் வாழ்த்தி சிறிது நும்**
**கருங் கோட்டு இன் இயம் இயக்கினிர் கழிமின்"[50]**

என்று, திருமால் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலினியையும் நிகழ்த்துவார் என்றும், இரணியன் போன்றோரை அழித்தார் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொள்கின்றனர். இக்கருத்துகள் வடமொழியின் புராணங்களில் கூறப்பட்டவையாகும். புலவர்கள் வடமொழியின் தாக்கத்தைத் தலைமேற் கொண்டதை உணர முடிகிறது.

### 3.4.14 பாரதக் கதை:

இராமாயணக் கதையினைக் காட்டிலும் பாரதக் கதையை மிகுதியான இடங்களில் சங்க காலப் புலவர்கள் பதித்துள்ளனர். கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் பாரதக் கதையைக் குறிப்பிடுகின்றார். பாரதக் கதை தமிழகத்தில் நிகழ்ந்தது இல்லை என்பர். கதையில் இடம்பெற்றுள்ள இடம், கதை மாந்தர்கள் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் வடநாட்டோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

**“வெண் கோட்டு இரும் பிணம் கருதி ஈர்ப்ப**
**ஈர் ஐம்பதின்மரும் பொருது களத்து அவியப்**
**பேர் அமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஆராச் செருவின் ஐவர் போல”**[51]

என பாரதக் கதையைக் குறிப்பிட்டுள்ளார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். வெண்மையான கொம்புகளை உடைய கரிய யானை பிணத்தை இரத்த ஆற்றில் இருந்து கொண்டு போவதைப் போல துரியோதனன் உள்ளிட்ட நூறுபேரை இறக்கச் செய்தவர் பெரிய தேரையுடைய தருமன் முதலிய பாண்டவர் என்றும், அவரைப் போல பல படைகளை உடையவன் இளந்திரையன் என்றும் உவமையாக இக்கருத்தைக் கூறுகின்றார். மேலும் காஞ்சியில் பல சமயத்தவரும் இருந்தனர் என்ற குறிப்பையும் உருத்திரங்கண்ணனார் பதிவு செய்துள்ளார்.

### 3.4.15 கங்கையாறு :

கங்கை ஆறு வடநாட்டின் எல்லையோரத்தில் ஓடும் நதி. அந்நதி குறித்த பதிவையும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறிச் செல்கிறார். இது குறித்து டாக்டர் மெ.சுந்தரம் அவர்கள்,

**“பெருநீர் போகும் இரியல் மாக்கள்**
**ஒருமரப் பாணியில் தூங்கி யாங்கு**

என்ற வரிகள், கங்கையாற்றைக் கடக்கும் மக்கள், கலங் கவிழ்ந்து தண்ணீரில் மூழ்குங்கால் ஒரு மரத்தையே பற்றிக்கொண்டு, அது எப்போது கரையில் ஒதுங்குமெனத் தொங்குவது போல”[52] என்றுரைக்கின்றார். மன்னன் இளந்திரையனைக் காண மன்னர்கள் காத்து நிற்கின்றனர் என பாரதக்கதை உவமையோடு கூறப்பெற்றுள்ளது.

இளந்திரையனை எப்படி அழைக்க வேண்டும் எனவும் கூறுகிறார். அதாவது கடலில் போய்க் கடிய சூரனைக் கொன்ற முருகப் பெருமானைப் பெற்ற இறைவனுக்குப் பேய்மகள் கூறியதைப் போல் உன்னைப் புகழ்ந்து வந்தேன் என்று கூறும்படி வற்புறுத்துகின்றார்.

**“வேண் திரைப் பரப்பின் கடுஞ் சூர்க் கொன்ற**
**வைம் பூண் சேஎய் பயந் மா மோட்டுத்**
**துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு**
**தண்டா ஈகை நின் பெரும் பெயர் ஏத்தி”**[53]

என்று கூறுவதிலிருந்து அவர்தம் புலமை திறத்தைக் காணமுடிகின்றது. இவர் ஒரு சமயம் மட்டும் அன்றி பல்வேறு சமயக் கருத்துக்களையும் உள் வாங்கியுள்ளார் என்பது தெரிகிறது.

மேலும் மன்னரும் அவ்வாறு கூறும்படி உரைப்பதனால், மன்னனுக்கும் அப்புராணங்கள் தெரிந்துதான் இருக்க வேண்டும். எனவே வடமொழியின் பல புராணக் கதைகள் பண்டையத் தமிழகத்தில் நன்கு வேரூன்றி இருந்ததை அறிய முடிகின்றது.

பெரும்பாணாற்றுப்படை திருமால் வழி வந்தவன் தொண்டைமான் இளந்திரையன் என்று எடுத்தியம்புகின்றது. இந்திர வில் பற்றிய குறிப்பும் அந்தணர் எவ்வாறு குடியிருப்பை அமைத்திருந்தனர் என்பதனையும் வடநாட்டின் கற்பின் அடையாளமான அருந்ததி குறித்தும் அந்தணர் விருந்தோம்பும் முறை மற்றும் வேள்வி இயற்றுவதில் சிறந்து விளங்கிய நிலையையும் தமிழகம் வடநாட்டோடு கொண்டிருந்த வணிக உறவையும் திருமால் குறித்தப் பதிவுகளையும் கொண்டும் பாரதக் கதை மற்றும் கங்கை ஆறு போன்ற வடமொழிக் கூறுகள் இடம்பெற்ற இலக்கியமாக பெரும்பாணாற்றுப்படை திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.5 மலைபடுகடாம்:

ஆற்றுப்படை நூல்களின் வரிசையில் மலைபடுகடாமும் ஒன்று. இதனைக் கூத்தராற்றுப்படை என்றும் அழைப்பர். இந்நூலை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் இயற்றியுள்ளார். இவர் ஓர் அந்தணர். இந்நூலின் பாட்டுடைத் தலைவனாக செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் விளங்குகிறார். இந்நூலின்கண் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களின் இயல்புகள் மிகவும் இயல்பாக இடம்பெற்றுள்ளன. இது ஒரு பயண நூலாகவும் கருதப்படுகிறது. வழிநெடுக்க எவ்வாறு பயணிக்க வேண்டும், எங்கு ஓய்வெடுக்க வேண்டும், எங்கு விலங்குகள் இருக்கும், விலங்குகளை எதிர்கொள்வது எப்படி, எவ்வகையான உணவுகள் கிடைக்கும். செல்லும் வழியின் பருவ மாற்றநிலை, அங்கு வாழும் இனக்குழு மக்களிடம் பேசும் விதம், பின்னால் வருபவருக்காக வழியில் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் போன்றவற்றை மிக அழகுற எடுத்துரைக்கின்றார்.

#### 3.5.1 நூல் அமைப்பு:

மலைபடுகடாம் என்பதற்கு கூத்தராற்றுப்படை என்னும் வேறு பெயரும் உண்டு. இது பரிசில் பெற்று மீண்டுவந்த கூத்தன் ஒருவன், வறிய கூத்தனையும் அவன் சுற்றத்தவரையும் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் என்பானிடம் ஆற்றுப்படுத்தும் முறையில் பாடப்பட்டது. இது நூற்றென்பத்து மூன்று அடிகளையுடையது.

#### 3.5.2 சைவ சமயக்கூறு:

சைவ சமயம் குறித்த விவாதங்களில் இன்றியமையாதது அச்சமயத்தின் தோற்றுவாய் ஆகும். சைவ சமயத்தைப் பிற்காலப் புலவர்கள் தென்னாட்டிற்கு உரியதாக குறிப்பிடினும் தமிழின் முழு முதல் இலக்கண நூலாக அறியப்படும் தொல்காப்பியத்தில் அச்சமயம் குறித்த பதிவுகள் இல்லை. மேலும் ரிக் வேதத்தில் உருத்திரனாக அறியப்படும் சிவனின் செயல்பாடுகள் சங்க இலக்கியத்தினுள் இடம் பெற்றுள்ளன. சைவம் வடநாட்டில் உருவாகி தென்னாடு நோக்கி வந்து தழைத்தோங்கியது என்ற கருத்தும் உள்ளது. அங்ஙனம் வடநாட்டின் புராணங்கள்

குறிப்பிடும் சைவ சமயக் கடவுளான சிவன் குறித்தப் பதிவை புலவர் மலைபடுகடாமில் கூறுகிறார்.

**“நீர் அகம் பனிக்கும் அஞ்சு வரு கடுந்திறல்**
**பேர் இசை நவிரம் மேஎய் உறையும்**
**கோநி உண்டிக் கடவுளது இயற்கையும்”[54]**

என்று இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் குறிப்பிடுகிறார். இங்கு ‘நஞ்சினை உட்கொண்ட சிவன் வீற்றிருக்கும் நவிரம் மலை’ என்று பொருள் கொள்கின்றனர் உரையாசிரியர்கள். சிவன் ஆலகாலம் நஞ்சு உண்ட கதை வடமொழி புராணங்களில் இடம் பெற்றுள்ளன.

### 3.5.3 வடமொழிச் சொல் பயன்பாடு:

தொல்காப்பியர் காலத்திலேயே வடசொற்கள் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்துள்ளன. அச்சொற்கள் பெரும்பான்மையாக சமயத்தோடு தொடர்பு கொண்டனவாக இருந்துள்ளன. இந்நிலையில் யானைகளைப் பழக்கப்படுத்த வடமொழிச் சொற்களை முழுமையாக பயன்படுத்தியுள்ளனர் என்ற குறிப்பைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. இது போன்றொரு பதிவைப் பெருங்கௌசிகனார் மலைபடுகடாமில் குறிப்பிடுகின்றார்.

**“நெடுஞ் சுழிப்பட்ட கடுங்கண் வேழத்து**
**உறவுச் சினம் தணித்து பெரு வெளிற் பிணியார்**
**விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை”[55]**

என்று, கூத்தர்கள் பரிசில் பெற செல்லும் வழியில் யானையைப் பழக்கும் பாகன் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தும் ஓசை கேட்பதாக புலவர் குறிப்பிட்டுள்ளார். இதன்வழி யானையைப் பழக்கப்படுத்த தமிழகத்தில் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தினர் என்பதைத் தெளிவுற அறிய முடிகிறது.

மலைபடுகடாம் இரண்டு வடமொழிக் கூறுகளை மட்டும் பெற்றுள்ளது. ஒன்று சைவ சமயத்தின் கூறு, அதுவும் ‘நஞ்சினை உட்கொண்ட சிவன் வீற்றிருக்கும் நவிரம் மலை’ என்று இடம்பெற்றுள்ளது. மேலும் வடசொற்கள் தமிழ் மொழியில் யானையைப் பாகன் பழக்கப்படுத்தும்போது பயன்படுத்தியதாக குறிப்பிடுகின்றது. இதனைத் தவிர வேறு வடமொழிக் கூறுகள் எதுவும் இடம்பெறவில்லை.

## 3.6 குறிஞ்சிப்பாட்டு:

குறிஞ்சிப்பாட்டு என்னும் இப்பெயர் குறிஞ்சித் திணையைப் பற்றிய பாடல் எனப் பொருள்படுகிறது. குறிஞ்சி என்பது மலை நிலத்தில் பூக்கும் பூவின் பெயரினைக் குறிக்கின்றது.

பாட்டு என்பது பாட்டால் ஆன நூலைக் குறிப்பதாகிறது. இதனைக் கபிலர் இயற்றியுள்ளார். இப்பாடல் மொத்தம் இருநூற்று அறுபத்தொன்று அடிகளைக் கொண்டு சிறப்புற்று விளங்குகிறது.

### 3.6.1 நூல் அமைப்புமுறை:

தலைவி இச்செறிக்கப்பட்டமையால் தலைவனை எண்ணி உடல் மெலிகிறாள். இவ்வுண்மை காரணத்தை அறியாத செவிலித்தாய், கட்டுவிச்சியை அழைத்து உடல் மெலிவிற்குக் காரணம் கேட்கிறாள். அவர்கள் தெய்வத்தால் வந்த கெடுதல் என்கிறார்கள். அதனை நம்பிய செவிலி, பல தெய்வங்களுக்குப் பூசையிடுகிறாள். இப்பூசைகளால் தலைவியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்த நிலையில் தலைவி தன் துயரினை தோழியிடம் கூறுகிறாள். தோழி இதனை பக்குவமாக செவிலியிடம் கூறுகிறாள். இதில் கபிலர் தொண்ணூற்றொன்பது வகை மலர்களின் பெயர்களையும், அந்தி காலத்து மக்கள், பறவை, விலங்குகளின் செயல்கள், தலைவன் வருணனை, தலைவனின் இரவுக் குறியை நினைத்து வருந்தும் தலைவி என சுவைபட இயற்றியுள்ளார்.

### 3.6.2 கபிலர்:

சங்க இலக்கியங்களில் ஏறக்குறைய 235 பாடல்களை இயற்றியவர் கபிலர் ஆவார். எனவே இவர் சங்க காலப் புலவர்களில் மிகவும் உற்று நோக்க வேண்டியவராக உள்ளார். அதோடு வேறு எந்தப் புலவரைக் காட்டிலும் இவரது பெயரைப் பிற்காலப் புலவர்கள் பெரிதும் தமது நூலின்கண் குறித்துள்ளனர். ஒரு சிறந்தப் புலவரை நினைவுகூறுதலின் பொருட்டே பிற்கால நூல்கள் முன்னிலைப்படுத்துகிறது என்று வைத்துக் கொண்டாலும், அதைத் தாண்டிய காரணங்களும் இருக்க வாய்ப்புண்டு. கபிலரை பாடிய புலவர்களாக,

"நக்கீரர் - **'உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை**
**வாய்மொழிக் கபிலன்' (அகம்.78)**

பெருங்குன்றூர்க்கிழார் – **'உவலைக் கூடராக் கவலையில் நெஞ்சினன்**
**நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்**
**பெற்றவூரிலும் பலவே' (பதிற்.85)**

இளங்கீரனார் -**'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்'(புறம்.53)**

மாறோக்கத்து நப்பசிலையார் – **'புலனழுக்கற்ற அந்தணாளன்**
**இரந்து சென்மாக்ககட்கினியிடனின்றிப்**
**பரந்திசை நிற்கப் பாடினன் (புறம்.174)"** [56]

என்று ந.சுப்ரமணியம் குறிப்பிடுகின்றார். இத்தனை நூல்களும் குறிப்பிடும் கபிலர் தன்னைத்தானே 'அந்தணாளன்' என்று குறிப்பிடுகின்றார். மேலும் இவர் பாரியின் நெருங்கிய நண்பராகவும் இருந்துள்ளார். அப் பாரி மன்னனை மூவேந்தர்கள் படையெடுத்து வந்தபோது, பறம்பு நாட்டின்

மக்களின் உணவுக்காக உதவியிருக்கிறார். மேலும் இவருடைய பயணம் குறிஞ்சி நிலத்திலேயே இருந்துள்ளது. கபிலரின் நெருங்கிய நண்பரான பாரி இறப்பு இன்னும் ஆய்வுக்குரியதாகவே உள்ளது. இந்நிலையில் கடையேழு வள்ளல்களின் இறப்புகள் புதிர் நிறைந்ததாக இருக்கும் நிலையில் அவற்றை சற்று விரிவாக ஆராய்ந்தால் நிறைய தெளிவு கிடைக்கும். அவர்தம் நிலங்கள் பிற்காலங்களில் பெரு வேந்தர்கள் என்றழைக்கப்பட்ட சேர, சோழ, பாண்டியர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன. அந்த வரிசையில் இடம் பெற்றுள்ள சேர மன்னர் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் நூறாயிரம் காணம் அதாவது 'நன்றா' என்ற குன்றின் மீது நின்று கண்ணுக்குத் தெரிகின்ற நிலம் முழுவதையும் பெற்றுள்ளார். எனவே மிகுந்த கவனத்திற்கு உரிய இப்புலவர் குறித்து பன்முக ஆய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஆராய்ந்தால் பல புதிர்களுக்கு சரியான விடை கிடைக்கும் என்பது திண்ணம்.

### 3.6.3 ஆரிய அரசன் பிரகதத்தன்:

'குறிஞ்சிப்பாட்டு' என்னும் இந்நூலைக் கபிலர், 'ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு' தமிழ் மரபினை உணர்த்துவதற்காக இயற்றியதாக குறிப்பு ஒன்று நூலின் முகமையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்து பல நிலைகளில் வைத்து ஆராய வேண்டியதாகும். கபிலர் எம்மொழியில் குறிஞ்சிப்பாட்டினைப் பாடினார்? தமிழில் என்றால் ஆரியர்களுக்குத் தமிழ் அறிமுகமாகியிருந்ததா? அப்படியென்றால் தமிழ் வடநாடு வரை பரவி இருந்ததா? முதலிய கேள்விகள் எழத்தான் செய்கின்றன. இக்குறிப்பு குறிஞ்சிப்பாட்டினைத் திசை திருப்புகின்றது. ஆரிய அரசனுக்குத் தமிழ் மரபினை உணர்த்த அனைத்து நிலப்பகுதியையும் ஒருங்கிணைத்து ஒரு பாடல் இயற்றியிருக்க வாய்ப்புண்டு. குறிஞ்சி நிலத்தை மட்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என்பது நோக்கத் தக்கதாகும். பண்டைய சேர, சோழ, பாண்டிய நாடுகளில் சேரநாடுதான் முழுமையான ஆரிய மையமாக்கப்பட்டிருக்கிறது. எனவே இக்குறிப்பு முழுவதையும் ஒதுக்கி விடுவதற்கு இல்லை. மேலும் கபிலர் ஒரு சமயத்தைப் பின்பற்றுபவராக அன்றி பல சமய கருத்துக்களைத் தமது பாடலின்கண் குறிப்பிட்டுள்ளார். அதைப்போலவே பெருவேந்தர்கள், குறுநில மன்னர்களோடும் நட்பு கொண்டிருந்த நிலையில் வடநாட்டு அரசர்களோடும் கபிலருக்கு நட்பு இருந்ததை இக்குறிப்பு காட்டுகிறது. இந்நிலையில் ஒரு புலவர் எங்ஙனம் இத்தனை மன்னர்களோடு அக்காலத்தில் இருந்திருக்க முடியும்? வியப்பானப் புலவராக இருக்கும் கபிலர் குறித்த ஆராய்ச்சி மேலும் தமிழியல் ஆய்வில் புது திருப்பத்திற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் ஆரிய அரசன் பிரகதத்தன் குறித்து சாமி சிதம்பரனார், "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டிலே ஆரிய அரசன் பிரகதத்தன் என்பவன் ஒருவன் ஏதோ ஒரு சிறு நிலப்பகுதியை ஆண்டு வந்தான் என்று அறிகின்றோம். திருநெல்வேலிச் சீமையிலே

திருக்குற்றாலத்தையுள்ளிட்ட ஒரு பகுதிக்கு ஆரிய நாடு என்ற பெயர் வழங்கியிருக்கின்றது. திருக்குற்றாலத்தைப் பற்றிய நூல்களிலே இதைக் காணலாம்."[57] வரலாற்று ஆய்வை மிகுதிப்படுத்தும் வகையில் ஆரிய நாடு தமிழ் நிலப்பரப்பின் ஒரு பகுதி என சாமி.சிதம்பரனார் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

### 3.6.4 ஆரியக் கருத்து:

குறிஞ்சிப்பாட்டின் துவக்கத்திலேயே அறிவுடையவர்கள் சான்றாண்மை, பெருமை, ஒழுக்கம் இவற்றில் ஏதேனும் ஒன்று கெடுமானால் திரும்பவும் அதனை மீட்பது எளிதல்ல என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**"சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்றின்**
**மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்**
**ஆசு அறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை**
**எளிய என்னார் தொல் மருங்கு அறிஞர்"[58]**

என்று பதிவு செய்கிறார் கபிலர். இக்கருத்து ஆரியரின் வருகைக்குப்பின்பு தமிழகத்தில் நிலை பெற்றுவிட்ட ஆரியக் கருத்து என்று கூறுகிறார் கா.கோவேந்தன்.

"இப்பாட்டு பாடப்பெற்ற காலத்தில், ஆரிய நாற்கதி முறைகளும், ஆரிய தர்ம சாஸ்திரங்களும், தமிழரின் வாழ்க்கை முறைகளை நடத்திச் செல்லும் வழிகாட்டிகளாகி விட்டன என்பதை உணர்த்துகிறது"[59] என்று குறிப்பிடும் கோவேந்தன் அவர்கள் கபிலர் வலிந்து சில ஆரியக் கருத்துக்களை வெளியிட்டதாக கூறுகிறார். அதற்கு மேலும் ஒரு சான்றினைக் காட்டுகிறார்.

'நீரால் நிறைந்த பெரிய கடலும் குறைந்து போகுமாறு அதன் நீரை முகந்து கொண்டு, அகன்ற பெரிய வானில், வீசுகின்ற காற்று தன்னோடு கூடியதனால், போர்முரசு முழங்கினாற்போலும், இனிய குரலை உடைய இடியேற்றோடு, நிரல் நிரலாக எழுந்து இயங்கும் கார்முகில்' எனக் கூறும் போது, வலிந்து பாடப்பெற்ற பிற்காலச் சமஸ்கிருதப் பாடல்களின் ஆதிக்கத்தின்கீழ்த் தமிழ்ப் பாக்களைப் பற்றிக்கொண்ட உயர்வு நவிற்சி அணியின் நிழலாட்டம் நன்கு காணப்படுகிறது.

" **'நிறை இரும்பௌம் குறைபட, முகந்து கொண்டு**
**… … … … … … …**
**நிரைசெலல் சிவப்பின் கொண்டு'**

என இதனை வெளிப்படுத்தி நிற்கிறது குறிஞ்சிப்பாட்டு"[60] என்கிறார் கா.கோவேந்தன். இதிலிருந்து படைப்பாளன் எத்தனை கவனமாக தனது படைப்பினைப் படைத்தாலும் அவன் சுய சார்பு

வெளிப்பட்டுநிற்கும் என்ற கருத்துநிலை புலப்படுத்துகிறது. இயல்பாகவோ, வலிந்தோ வடமொழி சார்ந்த கருத்துக்களைச் சங்கப் புலவர்கள் கையாண்டுள்ளமையைக் குறிஞ்சிப்பாட்டு எண்ண வைக்கிறது.

### 3.6.5 அந்தி அந்தணர் வழிபாடு:

உலகில் உருவாக்கப்பட்டுள்ள சமயங்கள் ஒவ்வொன்றும் பல தனித்த நெறிமுறைகளை, கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அது வெறும் சொற்களாக அல்லாமல் அச்சமயத்தைத் தழுவுகின்றோரும் அதனைப் பின்பற்றுகின்றனர். அங்ஙனம் உலகில் வழிபாடு என்பது மனிதனது வாழ்வில் இரண்டற கலந்த ஒன்றாகத் திகழ்கின்றது. தாய், தந்தை வழிபாடு, இயற்கை வழிபாடு போன்றனவும் அதில் இடம்பெறும். குறிஞ்சிப்பாட்டில் தெய்வத்தைப் பற்றி குறிப்பிடும் கபிலர் அன்றைய மக்கள் இல்லுறை தெய்வங்களை வழிபட்டுள்ளதைத் தெரிவிக்கின்றார். முருகனைக் குறித்தும் கபிலர் குறிப்பிடுகின்றார், எனினும் அது சமயத்திற்குத் தொடர்பு படுத்தப்படவில்லை. வெறியாட்டு, குறிகேட்டல் போன்றனவற்றையும் கபிலர் பதிவு செய்யத் தவறவில்லை. இந்நிகழ்வை இன்னும்கூட பரவலாக காண முடிகின்றது. குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிட்டதைப் போலவே, குறி மற்றும் வெறியாடல்கள் சமயங்களோடு தொடர்பு கொண்டவைகளாக அல்லாமல் பழைய இனக்குழு மரபு சார்ந்ததாக திகழ்கின்றன. அவ்வாறு கூறி வரும் கபிலர் குறிஞ்சி நிலத்தில் அந்தணர் வழிபாடு குறித்தும் பதிந்துள்ளார்.

**“அந்தி அந்தணர் அயர கானவர்”[61]**

என்று, அந்தணர்கள் மாலை நேரம் மேற்கொண்ட வழிபாட்டினைக் கூறுகிறார். இதன்வழி குறிஞ்சி நிலப்பகுதியில் ஆரியர்களின் குடியேற்றம் இருந்ததை அறிய முடிகிறது. குறிஞ்சிப்பாட்டை இயற்றிய கபிலர் அந்தண இனத்தைச் சேர்ந்தவர் என்பது புலனாகிறது. குறிஞ்சிப்பாட்டில் வடமொழி சார்ந்த கருத்துக்களைச் சங்கப் புலவர் கபிலர் பதிவுசெய்துள்ளார். மேலும் அந்தணர்கள் மாலை நேரம் மேற்கொண்ட வழிபாட்டினைக் கூறுகிறார். இங்ஙனம் வடமொழிக் கூறுகள் குறைந்த இலக்கியமாக குறிஞ்சிப்பாட்டு திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

## 3.7 முல்லைப்பாட்டு:

பத்துப்பாட்டுள் ஐந்தாம் பாட்டாகத் திகழ்வது முல்லைப்பாட்டு ஆகும். இதனைக் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் இயற்றியுள்ளார். இவர் வாணிகக் குலத்தவர். இந்நூல் முல்லை நிலத்தையும், அதன் தலைவன் தலைவியின் பிரிவையும், அவர்தம் இருத்தலும் இருத்தல் நிமித்தத்தையும் சார்ந்து அமைந்துள்ளது. இது நூற்று மூன்று அடிகளைக் கொண்ட நூலாகும்.

### 3.7.1 முல்லைப்பாட்டு அமைப்பு:

தலைவன் போர் காரணமாக பாசறையில் தங்கியுள்ளான். அவனது பிரிவாற்றாமை காரணமாக தலைவி, தலைவன் வரவை எதிர்பார்த்துக் காத்து இருக்கின்றாள். இடையே தலைவனது பாசறை இயல்பு, பாசறையில் உள்ள கூடாரங்கள், வேல் அமைக்கப்பட்டுள்ள விதம், மன்னன் கூடாரம், மன்னன் கூடாரத்தில் விளக்குகள் வைக்கப்பட்டது, யானைகள் உணவு உண்ண மறுப்பதும் அதற்கு உணவு ஊட்டுதல், தலைவன் இறந்துபோன வீரர்களின் நினைவாகவும், குதிரைகள் நினைவாகவும் இருத்தல், தலைவி ஆற்றி இருந்து அதிலிருந்து மீளுதல், தலைவன் வருதல் என முல்லைப்பாட்டு அமையப் பெற்றுள்ளது.

### 3.7.2 முல்லைப்பாட்டில் வடமொழிக் கூறுகள்:

முல்லைப்பாட்டில் மூன்று இடங்களில் மட்டும் உவமையாக வடமொழிக் கூறுகளில் ஒன்றான புராணக் கதைகளைத் தொடர்புப்படுத்தி நப்பூதனார் குறிப்பிட்டுள்ளார். இதனை உறுதிசெய்ய கா.கோவேந்தன் அவர்கள் பின்வரும் கருத்தை முன்வைக்கின்றார்.

“இம்முல்லைப்பாட்டு (முல்லைப் பாட்டின் பாட்டுடைத் தலைவன், தன் பாசறைக்கண், மற்றவர்களோடு யவனர்களையும், மிலேச்சர்களையும் பணியில் அமர்த்தியிருந்தான் என்றும், அதனால், அப்பாசறைக்கண் பலமொழிகள் பேசப்பட்டன என்றும் கூறுவதல்லது; பாட்டுடைத் தலைவன் யார் என்று குறித்து, அப்பாட்டின் ஆசிரியர் நப்பூதனார் எவ்வித குறிப்பும் தந்திலர். இப்பாட்டிலும் ஆரியக்கருத்துக்கள், இங்கொன்றும் அங்கொன்றுமாக அல்லாமல், நிறையவே இடம் பெற்றுள்ளன”[62] எனக் குறிப்பிடும் கா.கோவேந்தன், பண்டையத் தமிழ் கடவுளாக மாயோன் விஷ்ணுவாக முழு அளவில் அடையாளம் காட்டப்பட்டுள்ளான் என்று கூறுகிறார். நப்பூதனார் பாட்டுடைத் தலைவனை அறிமுகப்படுத்தும்போது,

> **“நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
> **வலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை**
> **நீா் செல நிமிர்ந்த மாஅல் போலப்**
> **பாடு இமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு”[63]**

என்றுரைக்கின்றார். திருமால் சங்கும், சக்கரமும் கையில் ஏந்தியபடி திருமகளைச் சேர்த்து கொண்டதும், மாவலி மன்னன் வார்த்த நீர் தன் கையில் விழுந்த உடனே வானளவில் உயர்ந்தவன் என்பதுமான வடமொழிப் புராணக் கதைகளை நப்பூதனார் கூறுகிறார்.

### 3.7.3 யானையினை உண்ணச் செய்ய வடமொழி பயன்படுத்தியமை:

பாசறையில் உள்ள தெருக்களில் சிறிய கண்களை உடைய, யானைகள் உணவு உண்ண மறுக்கின்றன. அதனை உணவு உண்ண வைக்கப் பல உத்திகளைக் கையாளுகின்றனர். இதனை,

> **"உவலைக் கூரை ஒழுகிய தெருவில்**
> **கவலை முற்றம் காவல் நின்ற**
> **தேம் படு கவுள சிறு கண் யானை**
> **ஓங்கு நிலைக் கரும்பொடு கதிர் மிடைந்து யாத்த**
> **வயல் விளை இன் குளகு உண்ணாது நுதல் துடைத்து**
> **அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டெனக்**
> **கவை முட் கருவியின் வடமொழி பயிற்றிக்**
> **கல்லா இளைஞர் கவளம் கைப்பக்"**[64]

என்றுரைக்கிறது முல்லைப்பாட்டு. யானையினை உணவு உண்ண வைக்க பாகர்கள், கையில் அங்குசத்தை வைத்தப்படி வடமொழி சொற்களைப் பயன்படுத்தினர் என்று நப்பூதனார் கூறுகிறார். இதனை உரையாசிரியர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். அச்சொற்களாக 'அப்புது, அப்புது, ஆது, ஐ, ஐ' என்று கூறுவதோடு சீவகசிந்தாமணியையும் சான்று காட்டுகின்றனர்.

> **"அங்கையந் தலத்தினால் அப்புது, ஆது, ஐ எனக்**
> **கொங்கலர் கண்ணியான் கொம்மைதான் கொட்டலும்**
> **பொங்கிய உவகையில் பொலிந்துமாக் களிறவன்**
> **தங்கிய பயிர்த்தொழில் தடக்கையால் செய்ததே"**[65]

என்பது அச்சான்றாகும். எனவே யானைப் பாகர்களும் யானையைப் பழக்குவதற்கு வடமொழிகளைப் பயன்படுத்தினர் என்பதும், வடமொழி பற்றிய அறிவு அவர்களுக்கும் இருந்தது என்பதும் புலனாகின்றது.

### 3.7.4 முக்கோல் அந்தணர்:

தலைவனது பாசறையில் துணிகள், அம்புகள் மீது காய வைக்கப்பட்டள்ளது. அது காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனாருக்கு முக்கோல் அந்தணர் தமது துணிகளைக் காய வைப்பது போல் இருக்கிறது என்று உவமையாக கூறுகின்றார்.

> **"கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்**
> **முக்கோல் அசைநிலை கடுப்ப நல் போர்"**[66]

எனக் குறிப்பிடும் நப்பூதனாரின் பாடல் வரிகள் மூலம் வடமொழியின் வேதங்களைப் பின்பற்றக் கூடிய அந்தணர்கள் தமிழகத்தில் இருந்துள்ளனர் என்பதனை அறிவதற்குத் துணை செய்கின்றன.

முல்லைப்பாட்டு மாவலி மன்னன் வார்த்த நீர் தன் கையில் விழுந்த உடனே வானளவில் உயர்ந்தவன் என்ற புராண கருத்தினை தாங்கியுள்ளது. அதேபோல் யானையினை உணவு

உண்ண வைக்கப் பாகர்கள், கையில் அங்குசத்தை வைத்தப்படி வடமொழி சொற்களைப் பயன்படுத்தினர் என்று நப்பூதனார் கூறுகிறார். தலைவனது பாசறையில் துணிகள், அம்புகள் மீது காய வைக்கப்பட்டள்ளது. அது மூன்று கோல்களை வைத்திருக்கும் அந்தணர் தமது துணிகளைக் காய வைப்பது போல் இருக்கிறது என்று உவமையாக கூறுகின்றார். இதன்மூலம் இவ்விலக்கியம் உருவான காலத்தை அறிந்துகொள்ள முடிகின்றது.

### 3.8 மதுரைக்காஞ்சி:

மதுரைக் காஞ்சியின் தலைவன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன். சங்க கால பாண்டிய மன்னர்களுள் சிறந்து விளங்கியவர், இவர் இளம் வயதிலேயே அரசு கட்டில் ஏறினார். தலையாலங்கானம் என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. அதில் இவரை ஏழு மன்னர் எதிர்த்தனர். அவர்களைப் போர்நெறி தவறாது வென்றவர் என்ற சிறப்பும் இவருக்கு உள்ளது. இந்நூலின் ஆசிரியர் மாங்குடி மருதனார் ஆவார். இது மொத்தம் எழுநூற்று எண்பத்து இரண்டு அடிகளைக் கொண்டதாகும்.

### 3.8.1 காஞ்சி – விளக்கம்:

காஞ்சி என்ற சொல்லுக்கு 'எண் கோவைமணி', 'ஆற்றப்பூவரசு', 'காஞ்சிப் பூமாலை', 'காஞ்சித்திணை', 'செவ்வழிப் பண்வகை', 'மருதப்பண்', 'ஓர் ஊர்' 'நிலையாமை', 'மகளிர் இடையணி', 'ஒரு மரம்' என்று கழகத் தமிழகராதியும் மெய்யப்பன் தமிழ் அகராதியும் பொருள் கூறுகின்றன. மேலும் தொல்காப்பியம் காஞ்சித் திணையின் இலக்கணத்தை,

> **"காஞ்சிதானே பெருந்திணைப் புறனே**
> **பாங்கு அருஞ் சிறப்பின் பல்லாற்றானும்**
> **நில்லா உலகம் புல்லிய நெறித்தே"**[67]

எனக் கூறுகின்றது. காஞ்சித் திணை நிலையாமையினை உணர்த்துவதாக அமைகின்றது.

### 3.8.2 மாங்குடி மருதனார்:

மதுரைக் காஞ்சிப்புலவன், மாங்குடி கிழார் என்றழைக்கப்படும் இவரது ஊர் மாங்குடி என்பதாகும். இதில் கிழார் என்ற சொல் இவர் வேளாளர் என்பதைப் புலப்படுத்துகின்றது. இவர் சமயம் எதுவென்று தெரியவில்லை. எனினும் 'மழுவாள் நெடியோன் தலைவனாக' என்ற அடியை வைத்து சைவ சமயத்தார் எனவும் கூறுகின்றனர்.

### 3.8.3 மதுரைக்காஞ்சி அமைப்பு:

'யானை தாங்கிய' உலகம் குறித்த தொன்மத்தில் தொடங்கும் இப்பாடல், பாண்டிய மன்னனின் வீரச்சிறப்பினையும், அவன் வென்ற நாடுகளையும் பட்டியலிடுகிறது. மேலும் அந்நாடுகளில் போருக்குப் பின் நிகழ்த்தப்படும் வன்முறைகளை நெஞ்சை உருக்கும் அளவுக்கு மிகவும் இயல்பாக எடுத்துரைக்கின்றது. இடையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலத்தின் இயல்பினை மேலோட்டமாகக் குறிப்பிடும் மாங்குடி மருதனார், மதுரை நகருக்குச் செல்கிறார். அங்கு காலை முதல் இரவு தொடங்கி விடியும் வரையிலான நிகழ்வுகளையும், அரசன், வணிகர், செல்வந்தர், அந்தணர், சமணர், பௌத்தர், கடைக்காரர், கள்வர், காவலர், இல்லப்பெண்கள், கருவுற்றப்பெண்கள், பரத்தையர் என்று பலதரப்பட்ட மக்களின் நிலைகளையும் கண்முன் நிறுத்துகின்றார். இறுதியாக பரிசிலர்கள் வாழ்த்திய விதத்தினைக் கூறும் புலவர் 'என்றும் இன்புற்று இருப்பாயாக' என வாழ்த்தி முடிக்கின்றார்.

### 3.8.4 மதுரைக்காஞ்சியில் வடமொழிக் கூறுகள்:

நம்பிக்கைகள், புராணக்கதைகள், பண்பாடுகள் போன்ற வடமொழிக் கூறுகள் பாடலின் தொடக்கத்திலும், முடிவிலுமே காணப்படுகின்றன. பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிலும் இப்போக்கே இடம்பெற்றுள்ளது. மதுரைக் காஞ்சியில் இடம்பெறும் வடமொழிக் கூறுகள் குறித்து கா.கோவேந்தன், "மதுரைக்காஞ்சி; மதுரை நகரில் ஆரிய ஆகம நெறி வழிபாட்டு முறைகள் விரைந்து பரவியதற்கான எண்ணற்ற அகச் சான்றுகளை நாம் பெறலாம்"[68] எனக் குறிப்பிட்டுள்ளார்.

### 3.8.5 சிவனும் அகத்தியனும் :

சிவன் மற்றும் அகத்தியர் குறித்த கருத்துக்கள் சைவ சமயத்தோடு தொடர்பு கொண்டவைகளாக உள்ளன. இங்கு சிவன் என்ற சொல் நேரடியாக இடம்பெறவில்லை. இது,

> **"தென்னவற் பெயரிய துன் அருந் துப்பின்**
> **தொல்முது கடவுட் பின்னர் மேய**
> **வரைத் தாழ் அருவிப் பொருப்பின் பொருந"[69]**

என இடம்பெற்றுள்ளது. இதற்கு உரையாசிரியர்கள், 'பழைமை முதிர்ந்த கடவுளான சிவனுக்குப் பின்னர் அவனுக்குச் சமம் என்று வந்த அகத்தியனார் உறையும்' என உரை கூறுகின்றனர். இங்கு நச்சினார்க்கினியரின் உரை கவனத்திற்குரியதாகிறது.

'தென்னவன் பெயரிய துன் அருந்துப்பின் தொல்முது கடவுள் பின்னர் மேய பொருந. இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கிய வலிமையுடைய பழைய முதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருந்தற்கு மேவின ஒப்பற்றவனே.' எனக் குறிப்பிடுகின்றார்

நச்சினார்க்கினியார். இராவணன் சிவனை வணங்கியதாக புராணங்கள் கூறும் நிலையில், அகத்தியர் ஏன் இராவணனை தமிழ்நாட்டை விட்டு ஏன் போக்க எண்ணினார் என்ற ஐயம் புலப்படாமல் உள்ளது. இங்கு அகத்தியர் ஆரியர் என்பதை நாம் மறந்துவிடலாகாது. தமிழ்க்கவிஞர் பாரதியும் அகத்தியரை ஆரிய மைந்தன் என்று குறிப்பிட்டுள்ளார்.

### 3.8.6 வடவரை வென்றது:

பாண்டிய மன்னன் பல குறுநில மன்னர்களையும் வென்றுள்ளார். அதே போல வடநாட்டின் மன்னர்கள் பலரையும் வென்றதாக மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார். இது சிறப்பு கருதி கூறியதாக இவர் கூறினும் பாடலில் இடம்பெற்ற காரணத்தால் அதுவும் அகச்சான்றாகிறது.

> **“இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப்**
> **பொருது அவரைச் செரு வென்றும்**
> **இலங்கு அருவிய வரை நீந்தி**
> **சுரம் போழ்ந்த இகல் ஆற்றல்”**[70]

என்ற அடிகளில் இடம்பெறும் ‘இலங்கருவி வரை நீந்தி’ என்ற அடிக்கு உரையாசிரியர் மாணிக்கம் அவர்கள், ‘எழுவரை வென்றும் இவன் மனநிறைவு அடையவில்லை வடவர் நாட்டிலும் போய் அங்கிருந்த குறிஞ்சி நில மன்னரையும் வென்றான்.’ என்று உரையெழுதுகிறார். இதன்வழி இம்மன்னன் வடநாடுவரையிலும் படையெடுத்தான் என்பதும், அதன்வழி வடநாட்டின் மொழி, பண்பாடு, நம்பிக்கை, இலக்கியங்கள் இவனுக்கு அறிமுகமாகியுள்ளன என்பதையும் உணர இயலுகிறது.

### 3.8.7 பௌத்தப் பள்ளி:

சைவ, வைணவர்கள் சமண, பௌத்த சமயங்களை வடநாட்டின் சமயங்கள் என்கின்றனர். சமண பௌத்தர்கள், தமிழகத்தின் மிகத் தொன்மையான சமயம் சமணமும் பௌத்தமும் தான் என்று வாதிடுகின்றனர். இந்நான்கு சமயங்களும் தமிழக நிலவியலில் உரிமை கொண்டாடினாலும் சங்க காலத்தில் மேற்கண்ட நான்கு சமயங்களும் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்படவில்லை. இச்சமயங்கள் தமிழகத்தில் உருப்பெற்று வளர்ச்சியடைந்து வடக்கு நோக்கு சென்றது என்பதை நமது நீண்ட இலக்கிய வரலாற்று பின்புலம் ஏற்றுக் கொள்வதில்லை. இச்சமயக் கருத்துக்கள் இங்குள்ள மக்கள் பின்பற்றினார்கள் என்று உறுதி செய்யவில்லை. அவர்தம் பாடல்கள் அனைத்தும் சமயப் பரப்புதலையே மையமாகக் கொண்டன என்பர். புத்த வழிபாட்டு முறையை,

> **“திண் கதிர் மதாணி ஒண் குறுமாக்களை**
> **ஓம்பினர்த் தழீஇ தாம் புணர்ந்து முயங்கி**
> **தாது அணி தாமரைப் போது பிடித்தாங்கு**

**தாமும் அவரும் ஓராங்கு விளங்கிக்**
**காமர் கவினிய பேர் இளம் பெண்டிர்**
**பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்**
**சிறந்து புறங்காக்கும் கடவுட் பற்றியும்''[71]**

என்று குறிப்பிடுகின்றார் மாங்குடி மருதனார். இதில் பௌத்தப் பள்ளியில் பூவோடு புத்தர் வழிபாட்டுக்கு காத்திருந்தமை விளக்கப்படுகிறது.

### 3.8.8 அந்தணர் பள்ளி :

பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட மதுரை நகர் பற்றிய குறிப்பு உலகின் பல்வேறு நாடுகளில் காணக்கிடக்கின்றன. சிறப்பு வாய்ந்த மதுரை நகரில் 'அந்தணர் பள்ளி' இருந்துள்ளது. அந்தக் குறிப்பை மாங்குடி மருதனார் குறிப்பிட்டுள்ளார்.

**"சிறந்து வேதம் விளங்கிப் பாடி**
**விழுச் சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து**
**நிலம் அமர் வையத்து ஒருதாம் ஆகி**
**உயர்நிலை உலகம் இவண் நின்று எய்தும்**
**அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்**
**பெரியோர் மேஎய் இனிதின் உறையும்**
**குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்''[72]**

என்று குறிப்பிடும் மாங்குடி மருதனாரின் அடிகளுக்கு உரையெழுதும் உரையாசிரியர், மதுரையின் அந்தணர் பள்ளியில் அந்தணர்கள் 'அதர்வன வேதம்' தவிர ஏனைய இருக்கு, யசூர், சாமம் ஆகிய வேதங்களைக் கற்றவர்கள் எனவும், இதுவே சிறந்த வேதம் என்றும் உரைக்கின்றனர். மேற்கூறிய வேதங்கள் அனைத்தும் வடமொழியில் உருவானவை ஆகும். இவ்வகை வேதங்கள் குறித்து கா.கைலாசநாத குருக்கள் கூறும் கருத்துக்கள் மேற்கண்டவையோடு ஒப்பு நோக்கத்தக்கன.

"வேதங்கள் அறிவின் இருப்பிடம் அறிதல் என்னும் கருத்தை உணர்த்தும் 'வித்' என்றும் வினையடியில் பிறந்ததே வேத என்னும் சொல். வேத இலக்கியம் மிகவும் அகன்ற பரப்பினை உடைய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்னும் பகுதிகளால் அமைந்து விளங்கும் வேதங்கள் இருக்கு, யசூர், சாமம், அதர்வன என நான்கு பிரிவுகளையுடையன"[73] என்று குறிப்பிடுகின்றார். இங்ஙனம் வடமொழியின் வேத நூல்களைப் பயின்ற அந்தணர்கள் மதுரை நகரில் 'பள்ளி' அமைத்து வாழ்ந்தனர் என்ற குறிப்பின் வாயிலாக ஆரியர் குடியேற்றத்தினையும், அவர்வழி அவர்தம் பண்பாடுகளும், மொழியும், இலக்கியங்களும் தமிழகத்தின் புழக்கத்தில் இருந்தமையையும் அறிய முடிகின்றது.

### 3.8.9 அமண் பள்ளி:

'அமண்' என்ற சொல்லுக்குச் 'சமண சமயம், சமணர்' என்று மெய்யப்பன் தமிழ் அகராதி பொருள் பகர்கின்றது. மேலும் கழகத் தமிழ் அகராதியோ 'சமண மதம், ஆடையின்மை' என்று பொருள் கூறுகின்றது. அத்தகைய சமண சமயம் வட நாட்டில் தோன்றி படிப்படியாகத் தமிழகத்திலும் நிலைப்பெற்று இருந்ததை மாங்குடி மருதனார் பின்வரும் அடிகளில் பதிவு செய்துள்ளார். இதுகுறித்து,

**"வண்டு படப் பழுநிய தேன் ஆர் தோற்றத்துப்**
**பூவும் புகையும் சாவகர் பழிச்ச**
**சென்ற காலமும் வரூஉம் அமயமும்**
**இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து**
**வானமும் நிலனும் தாம் முழுது உணரும்**
**… … … … … … … … …**
**… … … … … … … … …**
**குறும்பூது சான்ற நறும் பூஞ் சேக்கையும்**
**குன்று பல குழிஇப் பொலிவன தோன்"[74]**

என்று கூறுகிறார். இதற்கு விளக்கம் அளிக்கும் உரையாசிரியர் மாணிக்கம், 'மதுரையில் அமைந்திருந்த அமண் பள்ளி, குளிர்ச்சியாக இருந்ததாகவும், சுவர்களில் சிவந்த நிறத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன எனவும், அமண் பள்ளி நன்கு உயரமானதாக இருந்ததாகவும், பள்ளியைச் சுற்றி பூஞ்சோலைகள் அமைந்திருந்ததாகவும், அத்தகையப் பள்ளியில் இல்லத்திலிருந்து விரதம் மேற்கொள்பவர்களான சாவக் நோன்பிகள் பருவம் முதிர்ந்த தேன் நிறைந்த அழகியப் பூக்களுடன் அருகக் கடவுளை வாழ்த்தினர்' என்றும் குறிப்பிடுகின்றார்.

இதன் வாயிலாக பாண்டிய மன்னன் பல்வேறு சமயங்களை மதித்து அவற்றுக்குத் தேவையான உதவிகளையும் செய்திருக்கிறான் என்பதனை உணர முடிகிறது. சமண சமயத்தைத் தோற்றுவித்த மகாவீரர் பிறப்பு குறித்து ந.சி.கந்தையா அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

"மகத நாட்டில் மகா வீரரும், புத்தரும் தோன்றினார்கள், இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சைனம், புத்தம் என்னும் மதங்கள் ஆரிய மதத்துக்கு மாறுபட்டவை"[75] என்று கூறுகிறார். இங்ஙனம் அவர் குறிப்பிடும் சமண சமயம் வடநாட்டில் தான் தோன்றியுள்ளது. என்பது தெளிவாகிறது.

### 3.8.10 திருமால் பிறந்த நாள்:

திருமால் குறித்த கதைகள் தமிழ் இலக்கியங்களில் நிலவுகின்றன. எனினும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் 'மாயோன்' என்ற சொல்லிற்குத் திருமால் என்று பொருள் கொள்ளினும், சங்க இலக்கியங்களில் திருமாலாக சுட்டப்படும் பெயர், வடமொழியின்

வேதங்களில் குறிப்பிடப்படும் 'விஷ்ணு'வின் செயல்பாடுகளை ஒத்தே அமைகின்றன. அங்ஙனம் குறிப்பிடப்படும் திருமாலின் பிறந்த நாளினை மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் குறிப்பிட்டுள்ளார்.

> **"மாயோன் மேய ஓணநல் நாள்**
> **கோணம் தின்ற வடு ஆழ் முகத்த"[76]**

என்று ஓண நாளைக் குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடும் இந்நாள் இன்று கேரளப்பகுதியில் 'ஓணம்' பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றது.

### 3.8.11 வேள்வி:

ஆரியரின் செயல்பாடுகளில் இன்றியமையாதது வேள்வி ஆகும். இவ்வேள்வி குறித்தப் பதிவுகள் வேத இலக்கியங்களில் காணப்படுகின்றன. வேள்விகள் இயற்றும்போது தனக்குத் தேவையானவற்றை அவர்கள் இறைவனிடம் வேண்டுவார்களாம். அங்ஙனம் புலவர் மன்னனிடம் 'நீயும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போல பல வேள்விகளை இயற்றுக' என்று குறிப்பிடுகின்றார். வேள்வி இயற்றப்படும் வழக்கம் பாண்டிய நாட்டில் நிலவியது என்பதை,

> **"பல் சாலை முது குடுமியின்**
> **நல் வேள்வித் துறை போகிய**
> **தொல் ஆணை நல் ஆசிரியர்**
> **புணர் கட்டு உண்ட புகழ்சால் சிறப்பின்"[77]**

என்று மதுரையில் வேள்வி இயற்றிய நிகழ்வைக் குறிப்பிட்டுள்ளார். மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் வடமொழிக் கூறுகளில் சிவன் மற்றும் அகத்தியர் குறித்தக் கருத்துக்கள் இன்றியமையாதது. வடநாட்டின் மன்னர்கள் பலரையும் வென்றதாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. மதுரையில் பௌத்தப் பள்ளியில் பூவோடு புத்தர் வழிபாட்டுக்கு மக்கள் காத்திருந்தமை விளக்கப்படுகிறது. அந்தணர் பள்ளியில் அந்தணர்கள் 'அதர்வன வேதம்' தவிர ஏனைய இருக்கு, யசூர், சாமம் ஆகிய வேதங்களை மாணவர்களுக்குப் போதித்துள்ளனர். மதுரையில் அமைந்திருந்த அமண் பள்ளி, குளிர்ச்சியாக இருந்ததாகவும், சுவர்களில் சிவந்த நிறத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தை மதுரைக்காஞ்சி விளக்குகிறது. மேலும் திருமாலின் பிறந்த நாளினை பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளதை காணமுடிகிறது. வேள்வி இயற்றப்பட்டதற்கான குறிப்புகள் போன்றன மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்ளன.

### 3.9 நெடுநல்வாடை:

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது நெடுநல்வாடை ஆகும். இது 188 அடிகளைக் கொண்டது. நெடுநல்வாடை என்பது, நெடிய நல்ல

வாடை என்று விரியும். வாடை என்பது கூதிர்க் காலத்தில் வீசும் வாடைக் காற்றைக் குறிக்கின்றது.

### 3.9.1 நூல் அமைப்பு முறை:

தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்பம் தீரும் பொருட்டுத் தலைவன் பகைவரை வென்று விரைவில் வர வேண்டும் என்று தலைவி கொற்றவையிடம் வேண்டுவதாக நெடுநல்வாடை அமையப்பெற்றுள்ளது. அவ்வாறு தலைவனைப் பிரிந்த காலம் கூதிர்க் காலமாகும். எனவே புலவர் கூதிர்க் காலத்தில் நிகழும் செயல்பாடுகளை மிக விரிவாகவும் மிகவும் ஆழமாகவும் விவரிக்கின்றார். அக்கால ஆநிரைகளின் நிலை, ஆயர்களின் நிலை, பறவைகளின் நிலை போன்றவற்றை நம் கண்முன் நிலை நிறுத்துகின்றார். அரண்மனை வாயில்கள், கதவுகள் மற்றும் கருவறை அமைக்கப்பட்ட விதத்தினையும் நக்கீரர் மிக விரிவாக விளக்குகிறார். மேலும் அரசியின் அறையில் கட்டில் வடிவமைக்கப்பட்டது, அறையில் இடம் பெற்றிருந்த ஓவியங்கள் என நீளும் இப்பாடல் தலைவனின் பாசறை நிகழ்வில் நிறைவடைகிறது. அங்கு தலைவனின் இரவு நேர பாசறை நிகழ்வு முருகியல் உணர்வுடன் படம்பிடித்துக் காட்டப்படுள்ளது.

மனிதனது வாழ்வை காலமும் சூழலும் எங்ஙனம் ஆட்கொள்கிறது என்பதை நெடுநல்வாடை உணர்த்தி நிற்கிறது. இதிலிருந்து மனிதனது செயல்பாடுகளில் இயற்கை எங்ஙனம் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதையும், மனித வாழ்வு இயற்கையோடு இரண்டறக் கலந்த ஒன்று என்பதையும் அறிய முடிகின்றது.

### 3.9.2 தாய் தெய்வ வழிபாடு:

நக்கீரர் திருமுருகாற்றுப்படையின்கண் வடநெறிகளைச் சுட்டிச் செல்லும் நிலையில், இங்கு அதே போல் பயன்படுத்தாமை பல்வேறு ஐயங்களை எழுப்புகிறது. இங்கு அதற்கான இடமிருந்தும் அதனை அவர் கையாளாமையால் நக்கீரர் ஒருவர் என்ற கட்டுமானம் உடைபடுகிறது. பெண்கள் இல்லுறை தெய்வத்தை வணங்கினர் என்று குறிப்பிடுகின்றார். அது எந்த தெய்வம் என்று எங்கும் குறிப்பிடவில்லை. அதேபோல அரசி கொற்றவையை வணங்கினார் என்று குறிப்பிடும்போது, வடநாட்டுப் புராணங்கள் கூறுகின்ற தெய்வங்களை வழிபடாமல் இருப்பதும் கேள்விகளை எழுப்புகின்றன. தமிழர்களுக்கு உரிய தாய் தெய்வ மற்றும் முன்னோர்களை வழிபடும் வழிபாட்டு முறைமைகளை பாண்டிய நாட்டு மக்கள் மேற்கொண்டனர் என்பதை அறிய முடிகின்றது. இதனை,

> **“இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ**
> **நெல்லும் மலரும் தூஉய் கைதொழுது**
> **மல்லல் ஆவணம் மாலை அயர”[78]**

> **“புலம்பொடு வதியும் நலம்கிளர் அரிவைக்கு**

**இன்னா அரும்படர் தீர விறல் தந்து**
**இன்னே முடிகதில் அம்ம மின் அவிர்''[79]**

என்று குறிப்பிட்டுள்ளார். இதே போல சிலப்பதிகாரத்திலும் மகளிர் மாலையில் விளக்கேற்றி இல்லுறை தெய்வத்தை வழிபட்டதை இளங்கோவடிகள்,

**"அகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை**
**நிகர்மலர் நெல்லொடு தூஉய் பகல்மாய்ந்த**
**மாலை மணி விளக்கம் காட்டி இரவிற்கோர்**
**கோலம் கொடி யிடையார் தாங்கொள்ள''[80]**

எனக் குறிப்பிட்டுள்ளார். பத்துப்பாட்டின் ஏனைய நூல்கள் ஆரிய கடவுளரை ஏதேனும் ஓர் இடத்தில் பதிவு செய்திருந்த நிலையில், நெடுநல்வாடை அதில் இருந்து மாறுபட்டு அமைந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.9.3 வடநாட்டின் பொருட்கள்:

தமிழகம் பிற நிலப்பகுதிகளோடு கொண்டிருந்த உறவுகளில் வணிகம் இன்றியமையாததாகும். வணிகத்தின் வாயிலாகவே பல கலப்புகள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நெடுநல்வாடையில் மிலேச்சர், யவனர், வடவர் போன்றவர்களின் தொடர்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே தமிழர் இயங்கியலை முழுமையாக விளங்கிக்கொள்ள பிறநாட்டாரின் குறிப்புகள் இன்றியமையாததாகும். அங்ஙனம் வடநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டப் பொருட்களை நக்கீரர் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

**"கொள் உறழ் கல் பல கூட்டு மறுக**
**வடவர் தந்த வான் கேழ் வட்டம்**
**தென் புல மருங்கில் சாந்தொரு துறப்ப"[81]**

என்று, தென்நாட்டின் சந்தனம், தந்தூரி முதலியவற்றை அரைக்க வடநாட்டில் உள்ளவர் கொண்டு வந்த (சிலாவட்டம்) அம்மி, தலைவனைப் பிரிந்த காரணத்தால் பயன்படுத்தப்படாமல் தென்திசையில் அப்படியே கிடந்தது என நக்கீரர் குறிப்பிடுகின்றார். இதன் வாயிலாக வடநாட்டிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்ட பொருட்கள் புழக்கத்தில் இருந்தன என்பதனை அறிய முடிகின்றது.

### 3.9.4 கருவறை:

'கருவறை' என்பது கோயிலின் உள்ளே கடவுள் சிலை வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் குறிப்பதாகும். மெய்யப்பன் தமிழகராதி கருவறை என்ற சொல்லுக்கு 'கோயிலிலுள்ள மூலத்தானம், கருக்குழி' என்று பொருள் தருகின்றது. நக்கீரர் பாண்டியனின் அரண்மனையினைக்

குறிப்பிடும் போது அதன் உள் அறையினைக் ‘கருவறை’ என்று குறிப்பிடுகின்றார். இது குறித்து குறிப்பிடும் கோவேந்தன் அவர்கள்,

“அரண்மனைக்குள்ளே, அரசன் இருந்து ஆட்சி நடத்தும் உள் அறை, திருக்கோயிலில், அக்கோயிலுக்குரிய தெய்வத் திருமேனி இடங்கொண்டிருக்கும் இடத்தைப் போலவே கர்ப்பக் கிரகம் அதாவது அவ்வீட்டின் கருப்பை, அல்லது கருப்பையாகிய வீடு என்றே அழைக்கப்படும்; கர்ப்பம் தமிழில் கருவாம். கரு என பெயர் பெற்ற காண்பதற்கு இனிய வீடு எனும் பொருளில் ‘கருவொடு பெயரிய காண்பின் நல் இல்’ (நெடு நல்:114) என வந்துள்ளது”[82] என்று குறிப்பிடுகின்றார். கருவறையை கரு உருவாகுகின்ற அறை என்ற பொருளிலும் புலவர்கள் கையாண்டனர். கரு என்பதற்கு இணையான ‘சூல்’ என்ற சொல்லும் தமிழில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

“நாற்பது என்ற தமிழ்ச்சொல், “தச” என்ற வடமொழிச் சொல்லும், நான்கு என்ற தமிழ்ச் சொல்லும் இணைந்த தொகைச் சொல்லாகிய “தச நான்கு” (நெடுநல்:115) என வந்துள்ளது.”[83]

என்று குறிப்பிடுகின்றார். அரசியின் கட்டில் செய்யப்பட்ட விதம் குறித்துக் கூறுகையில், நாற்பது வயது அடைந்த யானையின் தந்தம் கொண்டு செய்யப்பட்டது என்று கூறப்பெற்றுள்ளது. இங்கு வெளிப்படையாக ‘தச’ என்ற வடமொழிச்சொல்லை நக்கீரர் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

### 3.9.5 உரோகிணியும் – ஆடும்:

வானவியல் குறித்த கண்ணோட்டம் சங்க கால தமிழ் மக்களிடம் இருந்துள்ளது. அது அனுபவத்தின் விளைவாகும். அந்த அனுபவம் பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்று தனது சந்ததியினருக்குக் கொடுக்கும் கொடையாகும். மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ இயற்கையைப் புரிந்துகொள்வது இன்றியமையாததாகும். அவ்வாறான புரிதல் சிற்சில ஆண்டுகளில் கிடைத்திடுவதில்லை. பன்னெடுங்காலம் அவற்றை உற்று நோக்கிக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அத்தனை ஆண்டுகள் மனிதனால் வாழ்வது எல்லா நேரங்களிலும் சாத்தியமில்லை. எனவே தனக்குக் கிடைத்த அனுபவத்தை அவன் எதிர்வரும் தலைமுறையிடம் விதைத்துச் செல்கிறான். அதனை உள்வாங்கிக் கொண்ட மனிதன் அதனை தன்னோடு எப்போதும் இணைத்துக் கொண்டு நிகழ்காலத்தோடு பொருத்திப் பார்த்து, அதிலிருந்து பெறும் புது அனுபவத்தைப் பின்வரும் சந்ததிகளிடம் எடுத்துக் கூறியுள்ளான். நெடுநல்வாடையில் குறிப்பிடப்படும் அரசியின் படுக்கையறையில் வரையப்பட்டிருந்த ஓவியம் பற்றிக் குறிப்பிடும் நக்கீரர் உரோகினியும் - ஆடும் குறித்துக் குறிப்பிடுகின்றார்.

**“புதுவது இயன்ற மெழுகு செய்படமிசை**
**திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக**
**வின் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்பித்து**
**முரண் மிகு சிறப்பின் செல்வனோடு நிலைஇய**
**உரோகிணி நினைவனள் நோக்கி நெடிது உயிரா”[84]**

என்று குறிப்பிடுகின்றார். இங்கு ‘ஆடு’ என்பதற்கு மேடராசி (மேஷராசி) எனவும் உரோகிணி – ரோகிணி என்றும் வடமொழிப் பெயர்களை நக்கீரர் குறிப்பிடுகின்றார். தலைவனோடு பிரியாது இருப்பேன் என்பதற்கான இவ்வோவியம் இங்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்புலத்தில் வடநாட்டாரின் நம்பிக்கைகளைச் சங்ககால பாண்டிய மன்னன் பின்பற்றியுள்ளதாகப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

நெடுநல்வாடையில் தென்நாட்டின் சந்தனம், தந்தூரி முதலியவற்றை அரைக்க வடநாட்டில் உள்ளவர் கொண்டு வந்த (சிலாவட்டம்) அம்மிக்கல் தலைவனைப் பிரிந்த காரணத்தால் பயன்படுத்தப்படாமல் தென்திசையில் அப்படியே கிடந்தது என நக்கீரர் குறிப்பினையும் தச’ என்ற வடமொழிச்சொல்லை நக்கீரர் பயன்படுத்தியுள்ளதையும், ‘ஆடு’ என்பதற்கு மேடராசி (மேஷராசி) எனவும், உரோகிணி – ரோகிணி என்று வடமொழிப் பெயர்களை பயன்படுத்தியதும் உள்ளிட்ட வடமொழிக் கூறுகளை காணமுடிகின்றது.

### 3.10 பட்டினப்பாலை:

பட்டினப்பாலை என்பது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் நூலாகும். இதனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியுள்ளார். இந்நூல் கரிகாலச்சோழனின் சிறப்பினையும், அவனது சோழ நாட்டினையும் சிறப்பித்துக் கூறுகின்றது. மேலும் சோழநாட்டின் காவிரியிலும் பட்டினத்திலும் நடைபெறும் வாணிகத்தை விரிவாக குறிப்பிடும் இந்நூல் ‘அகமாந்தர் பிரிவையும் சிறிதளவு கூறுகின்றது. வேற்று நாட்டுக்குப் பொருளீட்டச் செல்லும் தலைவன் இடைபடும் காட்டுப்பகுதி ஆபத்தானது என்று தெரிந்தும் தலைவியைப் பிரிய முற்படுகின்றான். அப்போது அவன் அவளை விட்டு பிரிய முடியாமலும் உடன் அழைத்துச் செல்ல முடியாமலும் தவிக்கிறான். இவ்வாறு இந்நூல் அமையப் பெற்றுள்ளது.

### 3.10.1 நூல் அமைப்பு:

தன் மனைவியை விட்டுப் பிரிந்து பொருள் தேடச் செல்லத் தொடங்கிய தலைவன் ஒருவன், தனது நெஞ்சை நோக்கி, தலைவியைப் பிரிந்து வாரேன் என்று செலவு அழுங்கிக்கூறும் கூற்றாகச் சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இது 301 அடிகளைக் கொண்டதாகும்.

### 3.10.2 தவச்சாலைகளும் – அவி உணவும்:

சோழநாட்டில் தவம் செய்யும் முனிவர்கள் வாழும் தவச்சாலைகள் இருந்ததாக கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார். அதாவது முனிவர்கள் இடைவிடாது யாகம் மேற்கொண்டமையால் அதன் புகை மேல் எழும்புகிறது. எனவே அதனை வெறுத்தக் குயில்கள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் பறந்துச் சென்றன என்று படம்பிடித்துக் காட்டுகிறார்.

**“பகட்டு எருத்தின் தகை முற்றத்து**
**தவப் பள்ளி தாழ் காவின்**
**அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்**
**ஆவுதி நறும்புகை முனைஇ குயில்தம்**
**மாஇரும் பெடையோடு இரியல் போகி”**[85]

என்று குறிப்பிடுவதிலிருந்து சோழநாட்டில் தவச்சாலைகள் இருந்தது எனவும் அங்கு இடைவிடாது யாகங்களை முனிவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. யாகத்தில் அவி உணவு இறைவனுக்கு வழங்கப்பட்டதையும் உருத்திரங்கண்ணனார் விளக்குகின்றார்.

**“அமரர்ப் பேணியும் ஆவூதி அருந்தியும்**
**நல் ஆனொடு பகடு ஓம்பியும்**
**நான் மறையோர் புகழ் பரப்பியும்”**[86]

என்று உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுவதிலிருந்து மக்கள் தேவர்களை வழிபட்ட விதமும், வேள்வி இயற்றியது, அதில் தேவர்களுக்கான ‘அவி’ உணவை அளித்தது, பசுவைக் காத்தது, வேதம் ஓதக்கூடிய அந்தணர்களின் புகழைக் காத்தது போன்றவற்றை அறிய முடிகின்றது. இன்றைய உழவுத் தொழிலை மேற்கொள்ளும் மக்களிடம் வேள்வி இயற்றுகிற முறை காணப்படவில்லை. எனினும், மக்கள் யானையில் வரும் அய்யனார் என்ற தெய்வத்தை வணங்கி வருகின்றனர். யானையில் வரும் ஓரே தெய்வமாக இந்திரன் சித்தரிக்கப்பட்டுள்ளார். இவ்விந்திரனே மருத நில கடவுளாகவும் விளங்கியுள்ளார். இவ்விந்திரன் என்னும் கடவுளே ரிக் வேதத்தில் முதன்மையான கடவுளாகவும் விளங்குகின்றார். பட்டினப்பாலை அந்தணர் வழக்கத்தைக் குறிப்பதோடு அக்கால வாழ்வியலை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

### 3.10.3 வடநாட்டின் பொருட்கள்:

தமிழ்நாட்டிற்கும் வடநாட்டிற்கும் சங்க காலத்தில் பல நிலைகளில் உறவு மேம்பட்டு இருந்துள்ளது. அதில் வணிக உறவு மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும். இது சங்க இலக்கியத்தரவுகள் வழி உறுதி பெறுகிறது. அங்ஙனம் பட்டினப்பாலையில் உருத்திரங்கண்ணனார் சோழநாட்டின் துறைமுகத்தில் வடநாட்டின் பொருட்கள் இருந்தது என்ற குறிப்பைக் கூறுகின்றார்.

“வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்”[87]

என்று குறிப்பிடுகின்றார். வடமலை என்பதற்கு உரையாசிரியர்கள் இமயமலை என்றே பொருள் கொள்கின்றனர். இமயமலையில் உண்டான மாணிக்க மணி, சாம்பூ நதப் பொன் முதலியன குவிந்து கிடந்தன என்கின்றார். இவற்றோடு ஈழ நாட்டின் பொருட்களையும், கடாரத்தின் பொருட்களையும் குறிப்பிடுகின்றார்.

பட்டினப்பாலை என்னும் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் நூலில் முனிவர்கள் வாழும் தவச்சாலைகள் இருந்ததாக கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார். அதாவது முனிவர்கள் இடைவிடாது யாகம் மேற்கொண்டமையால் அதன் புகை மேல் எழும்புகிறது. எனவே அதனை வெறுத்தக் குயில்கள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் பறந்துச் சென்றன என்று படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும் வேள்வி இயற்றி, அதில் தேவர்களுக்கான ‘அவி’ உணவை அளித்தது, இமயமலையில் உண்டான மாணிக்க மணி, சாம்பூ நதப் பொன் முதலியன குவிந்து கிடந்த குறிப்புகள் காணப்படுவதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 3.11 தொகுப்புரை:

திருமுருகாற்றுப்படை உருவான விதத்தில் உள்ள வடமொழி வைதீக சார்பு, நக்கீரர் குறித்த ஆரியம் தொடர்பான கதை, முருகனின் ஆறுமுகம், முருகனின் பன்னிரு கைகள், முருகன் வழிபாட்டில் இடம்பெறும் ஆரிய சடங்குகள், ஆரிய வழியில் முருகனை அந்தணர் வழிபட்ட முறை, திருமால், உருத்திரன், இந்திரன் உள்ளிட்ட வடநாட்டின் கடவுள் தொடர்பான கருத்துக்கள், வடமொழி புராணங்கள் குறிப்பிடும் தேவர் வருகை குறித்த கருத்துகள் என திருமுருகாற்றுப்படை வடமொழிக் கூறுகள் நிரம்பப் பெற்ற இலக்கியமாக திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

இங்ஙனம் சங்க காலத்தின் வழக்கம் இன்னும் தமிழ் மக்களால் எவ்வித ஆரிய புனைவும் இன்றி நிகழ்த்தப்படுகிறது. பொருநராற்றுப்படையில் வடமொழிக் கூறுகளான வடமொழி நம்பிக்கை, பண்பாடுகள், கதைகள், மனிதர்கள் என்று எவையும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுபாணாற்றுப்படையில் சேரன் இமயத்தில் வில் சின்னம் பொறித்த குறிப்பு இடம்பெற்றுள்ளது. மேலும் சிவனுக்கு ஆய் என்னும் குறுநில மன்னன் கொடுத்த பரிசில், இராமயண கதையின் சிறுகூறு ஒன்று, மகாபாரத புராணத்தில் வீமன் பற்றிய குறிப்பு ஆகிய வடமொழிக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. நெடும்பாட்டான சிறுபாணாற்றுப்படையில் குறைந்த அளவில் வடமொழிக் கூறுகள் பதிவாகியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

பெரும்பாணாற்றுப்படை திருமால் வழி வந்தவன் தொண்டைமான் இளந்திரையன் என்று எடுத்தியம்புகின்றது. இந்திர வில் பற்றிய குறிப்பும் அந்தணர் எவ்வாறு குடியிருப்பை அமைத்திருந்தனர் என்பதனையும் வடநாட்டின் கற்பின் அடையாளமான அருந்ததி குறித்தும் அந்தணர் விருந்தோம்பும் முறை மற்றும் வேள்வி இயற்றுவதில் சிறந்து விளங்கிய நிலையையும் தமிழகம் வடநாட்டோடு கொண்டிருந்த வணிக உறவு பற்றியும் திருமால் குறித்த பதிவுகளை கொண்டும் மேலும் பாரதக் கதை மற்றும் கங்கை ஆறு போன்ற வடமொழிக் கூறுகள் இடம்பெற்ற இலக்கியமாக திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

மலைபடுகடாம் இரண்டு வடமொழிக் கூறுகளை மட்டும் பெற்றுள்ளது. ஒன்று சைவ சமயத்தின் கூறு, அதுவும் 'நஞ்சினை உட்கொண்ட சிவன் வீற்றிருக்கும் நவிரம் மலை' என்று இடம்பெற்றுள்ளது. மேலும் வடசொற்கள் தமிழ் மொழியில் யானையை பாகன் பழக்கப்படுத்தும்போது பயன்படுத்தியதாக குறிப்பிடுகின்றது. இதனைத் தவிர வேறு வடமொழிக் கூறுகள் எதுவும் இடம்பெறவில்லை.

குறிஞ்சிப்பாட்டை இயற்றிய கபிலர் அந்தண இனத்தைச் சேர்ந்தவர் என்பது புலனாகியது. குறிஞ்சிப்பாட்டு' என்னும் இந்நூலைக் கபிலர், 'ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு' தமிழ் மரபினை உணர்த்துவற்காக இயற்றியதாக குறிப்பு ஒன்று நூலின் முகமையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாட்டில் வடமொழி சார்ந்த கருத்துக்களைச் சங்கப் புலவர் கபிலர் பதிவுசெய்துள்ளார். மேலும் அந்தணர்கள் மாலை நேரம் மேற்கொண்ட வழிபாட்டினைக் கூறுகிறார். இங்ஙனம் வடமொழிக் கூறுகள் குறைந்த இலக்கியமாக குறிஞ்சிப்பாட்டு திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

முல்லைப்பாட்டு மாவலி மன்னன் வார்த்த நீர் தன் கையில் விழுந்த உடனே வானளவில் உயர்ந்தவன் என்ற புராண கருத்தினை தாங்கியுள்ளது. அதேபோல் யானையினை உணவு உண்ண வைக்கப் பாகர்கள், கையில் அங்குசத்தை வைத்தப்படி வடமொழி சொற்களைப் பயன்படுத்தினர் என்று நப்பூதனார் கூறுகிறார். தலைவனது பாசறையில் துணிகள், அம்புகள் மீது காய வைக்கப்படடுள்ளது. அது புலவருக்கு முக்கோல் அந்தணர் தமது துணிகளைக் காய வைப்பது போல் இருக்கிறது என்று உவமையாக கூறுகின்றார். இதன்மூலம் இவ்விலக்கியம் உருவான காலத்தை அறிந்துகொள்ள முடிகின்றது.

மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் வடமொழிக் கூறுகளில் சிவன் மற்றும் அகத்தியர் குறித்த கருத்துக்கள் இன்றியமையாதது. வடநாட்டின் மன்னர்கள் பலரையும் வென்றதாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. மதுரையில் பௌத்தப் பள்ளியில் பூவோடு புத்தர் வழிபாட்டுக்கு மக்கள் காத்திருந்தமை விளக்கப்படுகிறது. அந்தணர் பள்ளியில் அந்தணர்கள் 'அதர்வன வேதம்' தவிர ஏனைய இருக்கு, யசூர், சாமம் ஆகிய வேதங்களை மாணவர்களுக்குப் போதித்துள்ளனர்.

மதுரையில் அமைந்திருந்த அமண் பள்ளி, குளிர்ச்சியாக இருந்ததாகவும், சுவர்களில் சிவந்த நிறத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன எனவும் மதுரைக்காஞ்சி விளக்குகிறது. மேலும் திருமாலின் பிறந்த நாளினை பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளதை காணமுடிகிறது. வேள்வி இயற்றப்பட்டதற்கான குறிப்புகள் போன்றன மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்தை அறிந்துகொள்ள முடிகிறது.

நெடுநல்வாடையில் தென்னாட்டின் சந்தனம், தந்தூரி முதலியவற்றை அரைக்க வடநாட்டில் உள்ளவர் கொண்டு வந்த (சிலாவட்டம்) அம்மிக்கல் தலைவனைப் பிரிந்த காரணத்தால் பயன்படுத்தப்படாமல் தென்திசையில் அப்படியே கிடந்தது என நக்கீரர் குறிப்பினையும், தச' என்ற வடமொழிச்சொல்லை நக்கீரர் பயன்படுத்தியுள்ளதையும், 'ஆடு' என்பதற்கு மேடராசி (மேஷராசி) எனவும் உரோகிணி – ரோகிணி என்று வடமொழிப் பெயர்களை பயன்படுத்தியதும் உள்ளிட்ட வடமொழிக் கூறுகளை காணமுடிகின்றது.

பட்டினப்பாலை என்னும் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் நூலில் முனிவர்கள் வாழும் தவச்சாலைகள் இருந்ததாக கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார். அதாவது முனிவர்கள் இடைவிடாது யாகம் மேற்கொண்டமையால் அதன் புகை மேல் எழும்புகிறது. எனவே அதனை வெறுத்தக் குயில்கள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் பறந்துச் சென்றன என்று படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும் வேள்வி இயற்றி, அதில் தேவர்களுக்கான 'அவி' உணவை அளித்தது, இமயமலையில் உண்டான மாணிக்கமணி, பொன் முதலியன குவிந்து கிடந்த குறிப்பு போன்றன காணப்படுகின்றன.

## சான்றெண் விளக்கம்


1. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, பக்.57-58
2. டாக்டர் கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.92
3. மேலது, ப.92
4. எஸ்.வையப்புரிப்பிள்ளை, இலக்கிய சிந்தனைகள், ப.145
5. மேலது, ப.146
6. திரு.மு.ப. பா.அடி. 91-103
7. மேலது, பா.அடி. 107-117
8. மேலது, பா.அடி. 227-229
9. மேலது, பா.அடி. 230-234
10. மேலது, பா.அடி. 176-189
11. மேலது, பா.அடி. 260-274
12. மேலது, பா.அடி. 260-274
13. மேலது, பா.அடி. 148-151
14. மேலது, பா.அடி. 153-154
15. மேலது, பா.அடி. 155-159
16. மேலது, பா.அடி.165-174
17. அ.மாணிக்கம், திருமுருகாற்றுப்படை உரை, ப.157
18. அ.தட்சிணமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்.194-195

19. திரு.மு.ப. பா.அடி.46
20. மேலது, பா.அடி.57-60
21. மேலது, பா.அடி. 210-211
22. மேலது, பா.அடி.253-259
23. மேலது, பா.அடி.275-276
24. பொருந. பா.அ.48-52
25. மேலது, பா.அ.91-93
26. பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, சங்க நூல்களும் வைதீக மார்க்கமும், ப.32
27. பொருந. பா.அடி. 165-166
28. பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, சங்க நூல்களும் வைதீக மார்க்கமும், ப.28-29
29. சிறுபா. பா.அடி.47-49
30. மேலது, பா.அடி.95-98
31. மெய்யப்பன் தமிழகராதி, ப.112
32. கழத் தமிழ் அகராதி, ப.206
33. வி.சிவசாமி, ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும், ப.58
34. சிறுபா. பா.அடி.119-121
35. மேலது, பா.அடி.237-241
36. அ.மாணிக்கம், சிறுபாணாற்றுப்படை உரை, ப.402-403
37. பெரும். பா.அடி.29-31
38. த.கோவேந்தன், தமிழர் இலக்கியம், ப.361
39. பெரும். பா.அடி.292
40. அ.மாணிக்கம், பெரும்பாணாற்றுப்படை உரை, ப.522
41. வி.சிவசாமி, ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும், ப.58
42. பெரும். பா.அடி.298-301
43. மேலது, பா.அடி.303-304
44. ராகுல சாங்கருத்தியாயன், ரிக் வேத கால ஆரியர்கள், ப.45
45. பெரும். பா.அடி.315-316
46. மேலது, பா.அடி.496-500
47. அ.தட்சிணமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்.202-203
48. பெரும். பா.அடி.19-321
49. மேலது, பா.அடி.373-374
50. மேலது, பா.அடி.391-392
51. மேலது, பா.அடி.411-417
52. மெ.சுந்தம், சங்க காலத் தமிழரின் கடல் வாணிகம், ப.11
53. பெரும். பா.அடி.457-460
54. மலை. பா.அடி.81-83
55. மேலது, பா.அடி.325-327
56. ந.சுப்பிரமண்யன், கபிலர், ப.19
57. சாமி.சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.103
58. குறிஞ். பா.அடி.15-18
59. த.கோவேந்தன், தமிழர் இலக்கியம், பக்.175-176
60. மேலது, பக்.180
61. குறிஞ். பா.அடி.224
62. த.கோவேந்தன், தமிழர் இலக்கியம், ப.171
63. முல்லை. பா.அடி.1-4
64. மேலது, பா.அடி.31-38
65. சீவகசிந்தாமணி, பாடல் எண்.1824
66. முல்லை. பா.அடி.37-38
67. தொல். நூற்.1022
68. த.கோவேந்தன், தமிழர் இலக்கியம், ப.355

69. மதுரை. பா.அடி.40-42
70. மேலது, பா.அடி.55-58
71. மேலது, பா.அடி.461-467
72. மேலது, பா.அடி.468-474
73. கா.கைலாசநாத குருக்கள், வடமொழி இலக்கிய வரலாறு, ப.39
74. மதுரை. பா.அடி.475-488
75. ந.சி.கந்தையா, ஆரியர் தமிழர் கலப்பு, ப.39
76. மதுரை. பா.அடி.591-592
77. மேலது, பா.அடி.759-762
78. நெடு.ந. பா.அடி.42-44
79. மேலது, பா.அடி.166-168
80. சிலப்பதிகாரம்.9-1-4
81. நெடு.ந. பா.அடி.50-52
82. கா.கோவேந்தன், தமிழர் இலக்கியம், ப.168
83. மேலது, ப.168
84. நெடு.ந. பா.அடி.159-163
85. பட்டி.பா. பா.அடி.52-56
86. மேலது, பா.அடி.200-202
87. மேலது, பா.அடி.187

## இயல் - 4

# சங்ககால தொல்லியல் சான்றுகளில் வடமொழிக் கூறுகள்

### 4.0 முன்னுரை:

வரலாற்றைக் கட்டமைக்க அக மற்றும் புறச்சான்றுகள் இன்றியமையாததாகத் திகழ்கின்றன. அகச் சான்றுகளைக் காட்டிலும் புறச்சான்றான தொல்லியல் சான்றுகள் அறிஞர்களால் பெரிதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளன. அங்ஙனம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் வழிக்கிடைக்கும் சான்றுகள், இந்தியாவின் வடப்பகுதியில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகள், இலங்கை மற்றும் வேறு நாடுகளில் கிடைக்கும் சான்றுகள் முதலியன தமிழக வரலாற்றைக் கட்டமைப்பதில் பெரிதும் துணைபுரிகின்றன. இச்சான்றுகள் சங்க இலக்கிய வாசிப்பிற்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்துகின்றன. சங்கப் பாடல்கள் உருவாக்கத்திற்குப் பின்பு அதனைத் தொகுக்கும் மரபு உருவானது. இக்காலமானது சமயங்கள் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய காலமாகும். பெரும் வள்ளல்களும், மன்னர்களும் தொகுப்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது அவர்களுக்கு ஏற்புடைய பாடல்களை மட்டுமே பதிப்பித்துள்ளனர். அதற்குப்பின் பன்னெடுங்காலம் அவ்விலக்கியம் சமயங்களின் ஆதிக்கத்தால், பிறமொழி மன்னர்களின் படையெடுப்புகளால் முழுமையாக வெளிப்படவில்லை. இந்நிலையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய அரசியல் பின்புலத்தில் வடமொழி இலக்கியங்கள் முதன்மைப்படுத்தப்பட்டு ஏனைய மொழிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. அவற்றில் தமிழும் ஒன்றாகிப்போனது.

வடமொழி இலக்கிய மரபிற்கு இணையான தமிழ் மரபைக் கட்டமைக்க தமிழ் அறிஞர்கள் முனைந்தபோது சங்கப் பாடல்கள் கிடைத்தன. அவ்விலக்கியங்களை ஆய்வதும், விவாதிப்பதும், பதிப்பதுமான பணிகளில் ஈடுபட்டனர். அங்ஙனம் உருவான பதிப்புகளின் பின்புலம் சங்க இலக்கிய படிப்பிற்கு இன்றிமையாததாகும். தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்த குறியீடுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், ஓடுகள் இவற்றில் கிடைக்கும் வடமொழிச் சொற்கள், வடமொழி சடங்குகள், நம்பிக்கைகள், பொருட்கள், புராண கருத்துகள், கடவுள் பற்றிய குறிப்புகள் மற்றும் சங்க இலக்கியத் தொகுப்பு மற்றும் பதிப்புகளில் வடமொழிச் சார்புடைய நிகழ்வுகள் பெரிதும் காணக்கிடக்கின்றன.

### 4.1 தொல்லியல் ஆய்வுகள்:

தமிழியல் ஆய்வுகளில் தொல்லியல் ஆய்வுகள் மிகவும் இன்றியமையாததாகும். அண்மைக் காலங்களில் இவ்வியல் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. தொல்லியல்

என்ற சொல் ‘குறியீடுகள், புழங்குப் பொருட்கள், நடுகற்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், செப்புப்பட்டயங்கள்’ என்று அகழாய்வு சார்ந்ததாக அமைகின்றது.

### 4.2 குறியீடுகள் :

நமக்குக் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளில் முதன்மையானது குறியீடுகள் ஆகும். மனித இனம் தன் எண்ணங்களை எதிர்வரும் சமூகத்திற்குத் தெரியப்படுத்தும் பொருட்டு தமக்குத் தெரிந்த முறையில் கிறுக்கிய கிறுக்கல்களே ‘குறியீடுகள்’ என்பர். அக்குறியீடுகளை ‘எழுத்து’ என்றும் ‘சித்திரங்கள்’ எனவும் இருவகையாக பகுக்கப்படும்.

இந்தியாவில் கிடைக்கும் குறியீடுகளில் மிகப் பழமையானது சிந்துவெளி குறியீடுகள் ஆகும். சிந்துவெளி எழுத்தில் சுமார் 400 வேறுபட்ட குறியீடுகள் இருக்கின்றன. தனிப்பட்ட குறியீடுகளால் சொற்கள் பிரிக்கப்படவில்லை. சிந்துவெளி வாசகங்களின் சராசரி நீளம் ஐந்து குறியீடுகளாகும். அங்ஙனம் சிந்துவெளி குறியீடுகள் குறித்து அஸ்கோ பர்போலா,

“சொல்லின் நீளம் ஒரு குறியீடு முதல் மூன்று குறியீடு வரை உள்ளதாகத் தோன்றுகிறது. இந்தப்புள்ளி விவரமும், தொன்மையான இதன் காலமும், சிந்துவெளி எழுத்து பழமையான சிக்கலான எழுத்து முறையைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது. கி.மு 2500-ல் சிந்துவெளி எழுத்து தோன்றியபோது சித்திர -அசை எழுத்து (Logo Syllabic) என்று அழைக்கப்படும் இந்த எழுத்துமுறை மட்டுமே இருந்துவந்தது”[1] என்றுரைக்கின்றார். அஸ்கோ பர்போலா அவர்களின் கூற்றுவழி இந்தியாவில் கிடைக்கும் குறியீடுகளில் தொன்மை வாய்ந்தது சிந்துவெளிக் குறியீடுகள் என்பது புலனாகின்றது.

### 4.3 சிந்துவெளி நாகரிகம்:

உலகின் மிகவும் பழமை வாய்ந்த நாகரிகங்களுள் ஒன்றான சிந்துவெளி நாகரிகம் மிகுந்த கவனத்திற்கு உரியதாகிறது. அங்குக் கிடைக்கும் குறியீடுகள் பலகட்ட ஆய்விற்குப் பிறகு இருவேறு கருத்துக்களை முன் நிறுத்துகின்றன. மனிதஇனம் அறிவியலோடு கைகோர்த்து முன்னோக்கிப் பயணிப்பதாக இருப்பினும், அவ்வினம் தன் பழைய மரபுகளைத் தோண்டி எடுத்து தமது இனத்தின் தொன்மையைப் பறைசாற்றிக்கொள்ள அண்மைக் காலங்களில் முனைந்து வருகின்றது. அங்ஙனம் தமிழினமும் தனக்கான தேடுதலில் கவனம் செலுத்தத் துவங்கி இருக்கின்றது. அதற்கான மிக இன்றியமையாத காரணம் இந்தியாவின் மூத்த இனம் எது என்ற வினா ஆகும். கல்வி பரவலாக்கம் இல்லாத காலங்களில் அவைகள் குறித்த அக்கறை இல்லாமல் போனது. கல்வி பரவலாக்கம் பெற்றப் பின்பு தன் அடையாளங்களைத் தேடிப் பயணிக்கையில் ஆங்கிலேயர்களின் சிந்துவெளி ஆய்வுகள் பெரிதும் கவனத்திற்கு உள்ளாகின.

இதன் காரணமாக அகச்சான்றான சங்க இலக்கியம் சொல்லும் கருத்துக்கள், சமூக நடப்பியல் உண்மை என்ற எண்ணம் அறிவியல் பூர்வமாக நிரூபணமாகின்றது. இதன் விளைவாக 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகு' என்ற கட்டுமானம் உடைபட்டு தமிழர் நிலவியல் அடையாளம் இந்தியாவின் வடபகுதியான சிந்துவெளிவரை நீள்கிறது. சங்க இலக்கியங்களில் இமயமலை குறித்தப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இதனை அத்தனை எளிதில் விட்டுவிட இயலாது. உளவியல் அடிப்படையில் தன் சொந்த மண்ணை இழந்த அல்லது நீங்கிய இனம் அதனை மறந்துவிடாமல் தொடர்ந்து அசை போடுவதாக கருத இடமுண்டு. இந்தப் பின்புலத்திலேயே சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடையதா? ஆரியர்களுடையதா? என்ற ஆய்வுகள் நீட்சிப் பெற்று வருகின்றன. இக்கருத்தை அ.இராமசாமி,

"வேதங்களைப் பற்றிய தம்முடைய ஆய்வுநூலில் (RG Vedic Studies) எம்.சுந்தர்ராசு சிந்துச் சமவெளி நாகரிகம் திராவிடர்களுடையது என்ற கருத்தை இப்போது ஏராளமான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். திராவிடர்களின் மொழி, சமயம், சமுதாயம் ஆகிய பண்பாட்டுக் கூறுகளின் பெருமளவு தாக்கத்தால் இருக்குவேதமும் சமற்கிருதமும் உருப்பெற்றன என்ற கருத்து மேலும் மேலும் வலுப்பெற்று வருகிறது"[2] என்று கூறுகிறார். சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம் என்ற கருத்தினை அறிஞர்கள் பலர் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

மொகஞ்சதாரோ மொழியை அறிவியல் முறையில் ஆராய்ந்து, அம்மொழி திராவிட மொழியின் தொடக்க நிலையென்று அறிஞர்கள் முடிவு செய்கின்றனர். மொகஞ்சதாரோ முத்திரைகளின்மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்கும் கி.மு.இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துகளுக்குமிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துகள் வெளியிடும் கருத்துக்கள் அனைத்துமே கடவுளிடம் கொடுத்துக் வாங்கும் விண்ணப்பங்களாக இருக்கின்றன. சிந்துவெளி எழுத்துக்களை ஆராயும் பணியை மேற்கொண்ட ஐ.மகாதேவன் அவர்கள், சிந்துவெளி மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே நெருங்கிய தொடர்பைக் காண்கின்றார்.

"சிந்துவெளி முத்திரைகளின்மேல் மக்களின் இடுகுறிப் பெயர்களும், சிறப்புப் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. இப்பெயர்களைத் தமிழ் - பிராமிக் கல்வெட்டுகளிலும், சங்கச் செய்யுள்களிலும், பதிகங்களிலும் காணமுடிகிறது. சிந்துவெளி அரசியலும், பழந்தமிழர் அரசியலும் ஆகிய இரண்டுமே மிகத் திறம்பட நடைபெற்று வந்தன. சிந்துவெளி முத்திரைகளின்மேல் காணப்படும் சில குறிகள் ஒருவருடைய பெயருக்கு முன்பு இணைந்துவரும் அவருடைய ஊரைத் தெரிவிப்பதாக இருக்கலாம். சங்க இலக்கியத்திலும், பிற்பட்ட இலக்கியங்களிலும் மக்கள் பெயர்கட்கு முன்பு அவர்களுடைய ஊரின் பெயர் இணைந்து வருவது உண்மைதான். தம் பெயர்களுக்கு முன்பு தாம் பிறந்த ஊரின் பெயரை இணைத்துக்கொள்ளும்

மரபு சிந்துவெளி மக்களுக்கும் சங்ககாலத் தமிழ் மக்களுக்கும் பொதுவானதொன்றாகத்தான் காணப்படுகின்றன. பண்டைய சங்க இலக்கியங்களில் கற்பனை செய்யப்பட்டுள்ள புராணக் கதைகளுக்கும், சிந்துவெளி முத்திரைகளின்மேல் பொறிக்கப்பட்டுள்ள சித்திரக் காட்சிகள் சிலவற்றுக்குமிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம்."[3]

என்று ஐராவதம் மகாதேவன் அவர்களின் கருத்தினை முன்மொழிகிறார் கே.கே.பிள்ளை. இதனை முற்றிலும் மறுத்துவிட முடியாது. மேலும் அறிஞர்கள் பலர் சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகத்தோடு தொடர்பு கொண்டது என்று கூறுகின்றனர். சிந்துவெளி நாகரிகத்தை ஆரிய நாகரிகத்துடன் வேறு சிலரும் ஒப்பிட்டுள்ளனர். சிந்துவெளி எழுத்துக்கள் மிகப் பழங்கால வேதமொழி எழுத்துகளுடன் தொடர்புடையன என்றும், களிமண் முத்திரைகளின்மேல் காணப்படும் விலங்குகளின் வடிவங்கள் ஆரியரின் வேள்விகளையும் அவற்றில் பலியிடப்பட்ட விலங்குகளையும் குறிப்பன என்றும் சிலர் கருதுகின்றனர். ஆரியர்கள் வேள்விகளில் பசுக்களையும் ஆடுகளையும் பலியிடுவது வழக்கம். ஆனால், மொகஞ்சதாரோ முத்திரைகளின்மேல் யானையின் உருவங்களும், காண்டாமிருகங்களின் உருவங்களும், எக்காலத்திலும் இவ்விலங்குகள் ஆரியரின் வேள்விகளில் பலியானதில்லை. சிந்துவெளி பகுதிகளில் கிடைக்கும் சான்றுகளை வைத்து, அது ஆரிய நாகரிகம் என்று கூற முடியாது. இதிலிருந்து சிந்துவெளி நாகரிகத்திற்கு உரிமையானவர்கள் தமிழர்கள் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

## 4.4 சிந்துவெளியில் குதிரை:

சிந்துவெளியில் கிடைக்கும் குறியீடுகளில் குதிரை போன்ற வடிவமும் ஒன்று. அம்முத்திரை குறித்து இரண்டு கருத்துகள் கூறப்படுகின்றன. ஒன்று அக்குறியீடு 'குதிரை' என்பது. இரண்டு அக்குறியீடு 'காளை' என்பது, இந்நிலையில் சிந்துவெளி குறியீடுகளை ஆராயும் அறிஞர்களில் ஒருவரான ஐராவதம் மகாதேவனின் கருத்து கூர்ந்து கவனிக்கத் தக்கது.

"சிந்துவெளி முத்திரைகளில் முக்கியமானதாக விளங்கும் விலங்குகளில் குதிரை முற்றிலுமாக இடம் பெறாமல் இருப்பது, சிந்துவெளி நாகரிகத்தின் ஆரியமில்லாத தன்மைக்குச் சிறந்த ஆதாரம் என்று அடிக்கடி சுட்டப்படுகிறது. கி.மு.இரண்டாயிரத்தின் இறுதிக்கு முன்னதாகக் குதிரைகள் இருந்தன என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் தென்னாசியாவிலுள்ள தொல்லியல் களங்களில் இதுவரையில் கிடைக்கவில்லை என்பதை மிகச் சமீபத்தியதும் அதிகாரப்பூர்வமானதுமான ரிச்சர்ட் மெடோ (Richard Meadow)வின் அறிக்கையை மேற்கோள் காட்டி பர்போலா கூறுகிறார். குதிரை மற்றும் கழுதையின் இனத்தோடு தொடர்புடைய காட்டில் வாழும் விலங்கினங்கள் தென்னாசியாவிற்குச் சொந்தமானதல்ல"[4] என்று குறிப்பிடுகிறார். இவ்வகையான விவாதங்கள் சிந்துவெளி நாகரித்திற்கு புதிய வெளியைக் காட்டுகின்றன. எனவே சிந்துவெளிப்

பகுதிகளில் கிடைக்கும் உருவம் குதிரை அல்ல காளை உருவம் என்பதும் அது தமிழர்களுடையது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.5 பெருங்கற்காலம்:

பெருங்கற்காலம் என்பது பெரிய கற்களைக்கொண்டு அமைப்புகளை மக்கள் உருவாக்கிய காலப்பகுதியைக் குறிக்கும். இத்தகைய அமைப்புகள் பெரும்பாலும் இறந்தவர்களுடைய புதைகுழிகளின்மேல் அமைக்கப்பட்டன. இவ்வாறான அமைப்புகள் உலகம் முழுவதிலும் பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்களால் பல்வேறு காலக்கட்டங்களில் கட்டப்பட்டன. இவ்வாறு பெருங்கல் நினைவுச் சின்னங்களை அமைத்த காலம் புதிய கற்காலத்திலும் செம்புகாலம், வெண்கலக்காலம் உள்ளிட்ட அதனைத் தொடந்து வந்த காலப்பகுதிகளிலும் மக்கள் அமைத்தனர். இதனால் இக்காலத்தைப் பெரும் கற்படைக்காலம் என்பர். இக்காலத்தைச் சார்ந்த பெருங்கல் அமைப்புகள் கற்பதுக்கை, கற்கிடை, கற்குவை, பரல், உயர்பதுக்கை, தொப்பிக்கல், குடைக்கல், நெடுநிலைநடுகல் எனப் பலவகைகளாக உள்ளன. இந்தியாவின் தென்பகுதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய காலம் பெருங்கற்காலமும் இரும்புக்காலமும் ஆகும். தமிழகத்தில் கி.மு. 1000 முதல் கி.பி.100-200 வரை நிலவிய பண்பாட்டிற்குப் பெருங்காற்கால பண்பாடு என தொல்லியலாளர்கள் வரையறை செய்துள்ளனர். இது புதிய கற்காலத்திற்குப் பிற்பட்ட வளர்ச்சியாகும். இக்காலத்தில் கல் ஆயுதங்கள் பயன்படவில்லை. இக்கால மக்கள் இரும்பைப் பயன்படுத்த அறிந்திருந்தனர். பெருங்காற்கால சான்றுகள் தமிழகத்தின் குடியாத்தம், ஈரோடு ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன.

தமிழகத்தின் மிகப்பெரிய பெருங்கற்காலத் தளமான ஆதிச்சநல்லூரில் பெருங்கற்கால ஈமத்தாழிகள் மற்றும் பானை ஓடுகள் பரந்த அளவில் அதிகமான எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்காசியிலுள்ள சிற்றாற்றின் துணை ஆறான அமுதகன்னி ஆற்றுப்படுகையில் கற்காலச் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் நிலஅடையாள கற்குவைகளும் அவர்கள் பயன்படுத்திய பெருங்கற்கால ஆயுதங்கள், இடைக்கற்கால ஆயுதங்கள் போன்றவை 1980 களில் தமிழகத் தொல்லியல் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டன. இதை வைத்து பெருங்கற்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் சிறிய ஓடைகளைச் சுற்றியும்கூட தங்கள் நாகரிகத்தை பரவ விட்டிருந்தனர். இதுபோன்ற ஆதாரங்களை வைத்து தமிழரின் தனி பண்பாட்டை வரையறை செய்கின்றனர். இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் பண்டைய இந்தியாவில் தமிழ்ப் பேசும் மக்களிடையே இருந்த சிறந்த பண்பாடாகும். இதன் பின்புலத்தில் அக்கால மனிதனின் பயம் இருந்தது என்பர். எனினும் அவர்கள் பிணத்தை எரியூட்டவில்லை. அங்ஙனம் இறந்தவர்களைப் புதைப்பதற்கு பெரும் கற்களைப் பயன்படுத்தியதால் அக்காலத்தைப் பெருங்கற்காலம் என்று கூறுகின்றனர்.

தமிழக பெருங்கற்காலப் பண்பாடுச் சின்னங்களின்வழி அது எவ்வித ஆரிய புனைவுமின்றி இருக்கின்றன. இவ்வழக்கம் தமிழரின் ஆதிப்பண்பாடாகும்.

### 4.6 தமிழக ஓவியங்கள்:

குறியீடுகளோடு ஒப்பு நோக்கத் தக்கது ஓவியங்களாகும். குறியீடுகளுக்கும் ஓவியங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டையும் பிரித்தரிய முடியாதெனினும், சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. உலகில் மூத்த எழுத்து வடிவமும் இதுவாகும். இத்தகைய ஓவியங்கள் உலகின் பெரும்பான்மையான இடங்களில் காணக்கிடக்கின்றன. குகைகள், பாறைகள், மரப்பட்டைகள், மட்பாண்டங்கள் போன்றவற்றில் அத்தகைய பழங்காலச் சின்னங்கள் கிடைக்கின்றன. தமிழகத்திலும் இதுபோன்ற ஓவியங்கள் கிடைப்பதாகக் கூறும் ஏ.எஸ்.இராமன் அவர்கள் பின்வரும் கருத்துக்களை முன் வைக்கின்றார்.

“இரும்புக் காலத்தில் தென்னகத்தில் ஒருவித சிவப்பு கறுப்பு நிறம் மட்பாண்ட வகை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அதில் ஓவியங்களைக் காண முடியவில்லை. இருப்பினும், ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட ஒருசில பானை ஓடுகளின் மீது வெள்ளை நிறக் கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. அவை சாய்ந்த கோடுகளாகவோ அல்லது புள்ளிகளாலான கோடுகளாகவோ உள்ளன. மனித உருவங்களையோ, விலங்குகளையோ காணமுடியவில்லை. மொத்தத்தில் மட்பாண்டக் கலையைப் பொறுத்தவரை, தொடக்கம் முதல் வரலாற்றுக் காலம் வரையில், அது சிந்துவெளி மட்பாண்டங்களுக்கு மாறுபட்டதாக உள்ளது எனலாம்”[5] என்கிறார் ஏ.எஸ்.இராமன்.

### 4.7 தமிழெழுத்தின் வரிவடிவம்:

கி.மு. முதல் நூற்றாண்டில் உருவான சமண நூலான ‘சமவயங்கணசுத்த’ (இது பாலி மொழியில் எழுதப்பட்டது இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு, 18 மொழிகளின் பெயர்த் தொகுப்பு கூறப்பட்டுள்ளது) என்னும் நூலில் இந்தியாவில் வழக்கில் இருந்த மொழிகளைப் பற்றிக் குறிக்கும் பட்டியல் உள்ளது. இதில் தமிழ் மொழி குறிக்கப்பட்டுள்ளது. அங்ஙனம் இந்தியாவின் தொன்மையான மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியில் எழுத்து வடிவம் கல்வெட்டுகளில் காணக்கிடக்கின்றன. இது குறியீடு, ஓவியங்களுக்கு அடுத்ததாக உருவானது அகும். அங்ஙனம் உருவான இதனைக் கண்டெடுத்து ஆராயும்போது தொடக்கத்தில் வடநாட்டில் கிடைத்த அசோகர் காலத்து பிராமி வடிவம் என்றே கருதினர். எனினும் அக்கருத்து தொடர்ந்து நிலைபெறவில்லை. அதுபோல பிற கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து அசோகர் பிராமியிலிருந்து

வேறுபட்டிருப்பதைக் கண்டு இதற்கு வேறு பெயரினையும் சூட்டினர். இக்கருத்தினை சி.கோவிந்தராசனார்,

‘‘தமிழகத்தில் தொன்மையான கல்வெட்டுகள் எனத் தொல்பொருள் துறையினரால் சுட்டப்படும் எழுத்துக்கள், அசோக மன்னன் காலத்துப் பிராமி எழுத்துக்களினின்றும் தமிழ்மொழி வழக்கிற்கேற்ப ஓரளவு ஒருசில எழுத்துக்கள் மாற்றம் பெற்றதாக உள்ள பிராமி எழுத்துக்களாகும். இதனை அறிஞர் பர்னல், திரு.கோபிநாதராயர் போன்று தென்னக எழுத்துக்களை ஆராய்ந்தவர்கள், தென்னிந்திய பிராமி என்று பெயர் குறித்துள்ளனர். இதனை, தமிழி எழுத்துக்கள் என்று பெயர் குறித்துள்ளனர். இவ்வெழுத்துக்களே தமிழின் பண்டைய வரி வடிவமென்றும் இக்காலத்தில் கூறப்படுகின்றது’’[6] என்று குறிப்பிடுகின்றார். இதன்வாயிலாக தமிழ் எழுத்துக்களின் அறிமுகத்தை அறியமுடிகின்றது. மேலும் இவ்வாசிரியர், தமிழகத்தில் சமயத்தை வளர்க்கும் நோக்கில் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வந்து மலைகளில் தொடர்ந்து தங்கிய திகம்பரர்களாகிய சமணர்கள் பாறைகளில் காணப்படும் ‘பாலி’ எழுத்துக்களைக் கூறி அதனைத் தமிழின் வரிவடிவம் என்று கூறுவதை மறுக்கவும் செய்கின்றார். மேலும்,

‘‘சமணர்கள் ‘பாறைகளில் சில வரிகளில் தமிழொலிச் சொற்களில் பிழைபட வெட்டி வைத்த பிராமி எழுத்துக்களாலான கல்லெழுத்துக்கள் பண்டைத் தமிழுக்குரிய எழுத்தின் வரிவடிவமாகுமா? என்பதை நடுநிலைமையுடன் ஆராய்தல் இன்றியமையாததாகும்’’[7] என்று கூறுகிறார் சி.கோவிந்தராசனார். கிடைக்கக்கூடிய தரவுகளை வைத்து ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் அவ்வாறு இருப்பதை நாம் முற்றிலும் மறுத்துவிட இயலாது. சமணர்கள் வாழ்ந்த குகைகளில் வடமொழியான பாலி மொழியில் மருத்துவக் குறிப்புகள், இயற்கை நிகழ்வுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

### 4.8 சித்தன்னவாசல் கல்வெட்டு:

தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு வடமேற்கே சித்தனவாசல் என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூரைச் சார்ந்துள்ள மலை சித்தன்னவாசல் மலை என்றே பெயர் பெற்றுள்ளது. இம்மலையின் மேற்பகுதியில் நீண்ட மலைப் பிளவொன்று இயற்கையாகவே அமைந்துள்ளது. அப்பிளவிடத்தை ‘பாழி’ என்று கூறுவர், அப்பாழியில் கிறித்து காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து சமண சமய முனிவர்களும் சமணச் சாரணர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். ஆடையற்ற நிலையில் ஆன்ம சக்தியும், அறிவாற்றலும் தெய்வீகமும் பெற்றிருந்த முனிவர்கட்கு, பாழியின் கீழ்தளப் பாறைகளில் நீண்ட சதுரமானதும் சிறிதளவு குழிப்பானதுமான கற்படுக்கைகளைச் செய்தமைத்துத் தந்துள்ளனர். அக்கற்படுக்கையில் நடுவிலமைந்த கற்படுக்கை

அளவில் பெரியதாகச் செய்யப்பட்டுள்ளது. அதில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை சி.கோவிந்தராசனார் பின்வருமாறு கூறுகிறார்.

“அப்படுக்கையின் விளிம்புப் பகுதியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், வடக்கே அசோக மன்னன் கையாண்ட பிராமி எழுத்துக்களில் உள்ள கல்வெட்டினை ஆராய்ச்சியாளர்கள் குறிக்கின்றனர். அதனைச் சார்ந்துள்ள பழைய தமிழகத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினையும் அதனால் பெறப்படும் செய்தியினையும் குறிக்கப்பெறாமல் பிராமி எழுத்திலான கல்வெட்டே எடுத்துக்காட்டப் பெறுகின்றது. இக்கல்வெட்டின் காலம் இரண்டாயிரத்துக்கும் முற்பட்ட காலமென்று குறிக்கப்படுகின்றது”[8] என கூறும் கோவிந்தராசனார் ஆராய்ச்சியாளர்களிடம் நடுநிலைமை இல்லாததையும் சுட்டிக்காட்டுகிறார். இங்கு சமண சமயமும், அதன்மொழியான பாலியையும் தமிழக நிலப்பகுதி பண்டைய காலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதை அறியமுடிகின்றது. தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கின்ற கீறல் குறியீடுகள் குறித்து தொல்லியல் அறிஞர் சு.இராசவேலு,

“தமிழகத்தின் அகழாய்வுகளில் பரவலாகக் கிடைக்கின்ற கீறல் குறியீடுகளில் இருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்ற தமிழி (தமிழ் - பிராமி) எழுத்துக்கள் தோன்றியிருத்தல் வேண்டும். இவ்வெழுத்துக்கள் அசோக பிராமியின் கூட்டெழுத்து முறையின் தாக்கத்தின் விளைவான கூட்டெழுத்து முறைக்கு கி.மு. ஒன்றாம் நூற்றாண்டளவில் தமிழி எழுத்துக்களில் மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றும் எகர ஒகர ஒலியைக் குறைக்கப் புள்ளி பெற்றும் முழுமையான வளர்ச்சி அடைந்தது”[9] என்று குறிப்பிடுகின்றார். இவர்தம் கூற்றின்படி தமிழிக்கு அடிப்படையாக அமைந்தது வடநாட்டின் அசோகர் பிராமி என்பதாகும். எனினும் வடமொழி இலக்கிய வரலாறு நூல் இயற்றிய கா.கைலாசநாதகுருக்கள் இந்தியாவில் எழுத்து அறிமுகமானது பண்டைய தமிழ் வணிகர்களால்தான் என்கிற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனவே இக்கருத்து ஏற்புடையதன்று.

### 4.9 செஞ்சி கல்வெட்டு:

தமிழக ஊர்களில் செஞ்சிக்குப் பல சிறப்புகள் உள்ளன. அதற்கு அங்கு இருக்கும் கோட்டைகள் சான்றுகளாக அமைகின்றன. செஞ்சிக்கு அடுத்துள்ள திருநாதர் குன்றிலுள்ள கல்வெட்டு பழமையான கல்வெட்டாகும். இதனைக் கண்டுபிடித்துப் படியெடுத்து எழுத்துக்களைப் படித்தறிந்து வெளியிட்டவர் கோபிநாதராவ் அக்கல்வெட்டு குறித்து சி.கோவிந்தராசனார் பின்வருமாறு விவரிக்கிறார்.

“இக்கல்வெட்டில், சந்திரநந்தி எனும் சமண ஆசிரியர் ஐம்பத்தேழு நாட்கள் உண்ணா நோன்பாகிய சல்லேகணம் இருந்து உயிர்நீர்தாருக்குச் செய்யப்பட்ட நிசீதிகை என்னும்

கற்படையினைக் குறிக்கும் செய்தி புலனாகிறது"[10] எனக் கூறுகிறார். இதன்வழி சமண ஆசிரியர்கள் தமிழகத்தில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. இதுபோன்ற பிராமி எழுத்துக்களில் கிடைக்கும் கல்வெட்டுகள் தமிழகத்தில் பல பகுதிகளில் கிடைத்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மதுரை மாவட்டம் | - | அழகர் மலை |
| 2. | மதுரை மாவட்டம் | - | ஆனைமலை (குகை) |
| 3. | மதுரை மாவட்டம் | - | கருங்காலக்குடி (குகை) |
| 4. | மதுரை மாவட்டம் | - | கீழவளவு (குகை) |
| 5. | பாண்டிய நாடு | - | சித்தனவாசல் மலை (குகை) |
| 6. | மதுரை மாவட்டம் | - | கொங்கர் புளியகுளம் (குகை) |
| 7. | பாண்டிய நாடு | - | சித்தன்னவாசல் மலை (குகை) |
| 8. | பாண்டிய நாடு | - | திருவாதவூர் (குன்று) |
| 9. | மதுரை மாவட்டம் | - | திருப்பரங்குன்றம் (குகைத்தளம்) |
| 10. | பாண்டிய நாடு | - | பிள்ளையார்பட்டி (குன்றின் குடைவாத்தம்) |
| 11. | தென்பாண்டிய நாடு | - | மாறுகால்தலை (குன்று, பாறை முப்பு) |
| 12. | மதுரை மாவட்டம் | - | முத்துப்பட்டிஉம்மணர்மலை(குகைத்தளம்) |
| 13. | மதுரை மாவட்டம் | - | வரிச்சியூர் – குன்று (குகைத்தளம்) |
| 14. | மதுரை மாவட்டம் | - | உண்டாங்கல் - குன்று |
| 15. | மதுரை மாவட்டம் | - | மீனாட்சிபுரம், மாங்குளம் - அரிட்டாபட்டி ஆகிய ஊர்கள் சூழ்ந்த மலை (பழைய பெயர் :கழுகுமலை, ஓவாமலை) |
| 16. | திருச்சி மாவட்டம் | - | புகளூர் ஆறுநாட்டார் – மலை குகை |
| 17. | கொங்குநாடு | - | அரச்சலூர், மலை (குகைத்தளம்) |

போன்ற இடங்களில் பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இதிலிருந்து வடநாட்டில் உருவான சமயமான சமண சமயத்தைப் பற்றிய குறிப்பும், அக்குறிப்புகள் பிராமி எழுத்து வடிவில் இருந்துள்ளதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.10 இலங்கை கல்வெட்டுகள்:

தமிழ் ஆய்விற்கு இந்திய நிலவியல் புரிதலோடு, பண்டையத் தமிழக, நிலவியலோடு ஒத்திருக்கும் இலங்கை நிலப்பகுதியும், அங்கு நிலவிய இலக்கிய, இலக்கண, பண்பாட்டுக் கூறுகளும் தேவைப்படுகின்றன. தமிழகம் இலங்கையோடு பல்வேறு நிலைகளில் உறவு வைத்துள்ளது. அங்கு தமிழ் மொழி பேசும் மக்களும், மன்னர்களும் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். இன்னும் ஒருபடி சொல்ல வேண்டுமானால் தமிழகத்திலிருந்து கடல்கோள் காரணமாக பிரிந்த நிலப்பகுதிதான் இலங்கை என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். எனவே இலங்கையில் உருவான இலக்கிய, இலக்கண, பண்பாட்டு மாற்றங்களை எடுத்துக்கொள்வதில் தவறில்லை. இலங்கையின் அனுராதபுரத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் குறித்தக் கருத்துக்களை 'பெர்ப்பெ ஆராச்சி' பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இலங்கையின் அனுராதபுரம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பிராமி கல்வெட்டிலிருந்துதான் இந்தப் பிரச்சனை துவங்கியது. அதைக் கண்டெடுத்த தெரிணியகலா அதை கார்பன் டேட்டிங்

செய்து அது கி.மு.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்ற போதுதான் பிரச்சனை எழுந்தது. இது சாத்தியமல்ல, ஏதோ தவறு நடந்திருக்கிறது என்றேன். இலங்கையில் கிடைத்த கல்வெட்டுகள் பிராகிருதத்தால் ஆனவை.''[11] எனக் கூறுகிறார். இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் பிராகிருதம் ஆட்சி செலுத்தியது என்று கூறும் சி.பத்மநாதன் அவர்கள் அதனால் அப்பகுதியின் மொழிகள் வளர்ந்தன என்றும் கூறுகின்றார். இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியில், ஆந்திரம், கர்நாடகம், தமிழகம், ஈழம் முதலிய நாடுகளில் பிராகிருதம் ஒரு தொடர்பு மொழியாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

``வட இந்தியாவிலிருந்து சென்ற வணிகரும், சமண, பௌத்த சங்கத்தாரும், அங்கெல்லாம் பிராகிருத மொழியினை அறிமுகம் செய்தனர். அங்குள்ள மொழிகளில் பிராகிருதம் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது. ஆயினும் ஈழம் தவிர்த்த தேயங்களிலே பிராகிருதத்தின் செல்வாக்கினில் அங்கு நிலவிய ஆதியான மொழிகள் அழிந்துவிடவில்லை. அவை அதனால் வலுவும் வளமும் பெற்றன என்று சொல்லலாம்''[12] என்று விளக்குகிறார். இந்நிலையில் தென் மாவட்டங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளில் இருக்கும் மொழி தமிழ் மொழியின் முந்தைய எழுத்து வடிவமென்றும், ஆனால் அதில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் பிராகிருதம் - தமிழ் கலந்தது என்றதொரு கருத்தையும் முன்வைக்கின்றார் தெ.பொ.மீ. மேலும்,

``இக்குகைக் கல்வெட்டு மொழி தமிழ், பிராகிருதம் ஆகிய மொழிகளின் கலப்பு மொழி (Hybrid language) போல இருப்பதையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் பிராகிருதத்தில் பேரறிஞர்களாயிருந்த போதிலும் தமிழைத் தாய்மொழியாக உடையோரல்லர். தமிழ் மக்கள் புரிந்து கொள்வதற்காகவென்றே அவர்கள் இக்கல்வெட்டுக்களைச் செதுக்கினார்கள்''[13] எனவும் விவரிக்கிறார். சங்க காலம் எனப்படுவது கி.மு.300 முதல் கி.பி.200 வரையுள்ள காலத்தைப் பொதுவாகக் குறித்தாலும் அக்காலத்தில் உருவான புலவர் மரபும், அதனால் பாடப்பட்ட தலைமைகளும், சமூகங்களும் கி.மு.100 முதல் கி.பி.300 கால வரம்பிற்கு உட்பட்டவை. அங்ஙனம் ராஜ் கௌதமன் அவர்களும் தமிழகத்தில் கிடைத்த சில குகைக் கல்வெட்டுக்களை எடுத்துக்கூறி அவை சமயம் தொடர்புடையதாக இருப்பதாக விவரிக்கின்றார்.

``கி.மு.200-இல் இருந்த சமணக் குகைகளில் காணப்பட்ட குகை தான சாசனத்தின் (பிராமி கல்வெட்டு) வழியாக 'நெடுஞ்செழியன்', 'பெருவழுதி' என்ற பாண்டிய வேந்தர் பற்றியும், புகளூரில் கிடைத்த குகைக்கல்வெட்டு வழியாக கி.பி.100-200 கால கட்டத்தில் வாழ்ந்த 'இரும்பொறை', 'பெருங்கடுங்கோன்', 'இளங்கடுங்கோன்', கோ ஆதன்செல் இரும்பொறை' எனும் சேர வேந்தர் பற்றியும் தகவல் கிடைத்துள்ளன (ஐராவதம் மகாதேவன் (2003)). எனவே சமணர் குகைகளில் காணப்படுகிற பிராமி கல்வெட்டு வழி அறியலாகும் தமிழகம், சமண மயமான தமிழகம் போலத் தெரியும். பிராகிருதத்தின் வரிவடிவமான பிராமி வரிவடிவம் தவிர்த்து

சின்னங்கள் (Graffiti) எனும் ஒருவித வடிவம் குகைக் கல்வெட்டுகளிலும் மண்பாண்டங்களிலும் வரையப்பட்டுள்ளன’’[14] என்று விவரிப்பதிலிருந்து சமண சமயம் சார்ந்த கல்வெட்டுகளில், குறிப்பாக சமணம் சார்ந்த கருத்துக்களே மிகுதியாகக் கிடைக்கின்றதை அறிய முடிகின்றது.

தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் எனச் சுட்டப்பெறும் கல்வெட்டுத்தொகுதி கி.மு.3ம் நூற்றாண்டு முதல் கி.பி.4ம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலப்பிரிவுக்குள் உள்ள கல்வெட்டுகள் குறித்துப் பேராசிரியர் கா.சிவத்தம்பி,

“பிராமி எழுத்துருவில் எழுதப்பெற்ற சமணமதக் கொடைகள் சார்ந்த கல்வெட்டுக்களைக் குறிக்கும்”[15] என்று குறிப்பிடுகின்றார். மேலும் ‘காவிதி’ எனும் சொல்லை மகாதேவன் போன்றோர் ‘Gahapathi’ எனும் சொல்லின் வழியாகவே தோற்றம் பெற்றது என்கிறார். இத்தகைய ஒற்றுமை இணைவுகள், தமிழ் பிராமி, சிங்கள பிராமிக்கு இடையிலே காணப்படுகின்ற ஒப்புமைகள், தனித்துவங்களுக்கான பண்பாட்டு பின்புலங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை நோக்க வேண்டும். இதனை,

‘‘தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சமண மதச் சார்புடையனவாக இருக்கும். அதே வேளையில் சிங்கள பிராமிக் கல்வெட்டுக்கள் பௌத்த மதச் சார்புடையனவாக இருக்கின்றன. இவையிரண்டுமே அசோக பிராமியிலிருந்து உருப்பெற்று வளர்ந்தனவென்றும், இரண்டும் சமாந்தர இருப்பினைக் கொண்டவையென்றும் மகாதேவன் கூறுகின்றார். இவற்றுக்கான வரலாற்றுப் பின்புலம், தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால், இந்தக் கல்வெட்டுத் தரவுகளை வைத்துக் கொண்டு ஒரு வரலாற்று உண்மையை அழுத்திக் கூறலாம் போலத் தெரிகிறது. அது, இலங்கைக்கான பௌத்தம் தென்னிந்தியா வழியாக – தமிழகம் வழியாக வந்திருத்தல் வேண்டும் என்பதாகும்”[16] என்று மிக விரிவாக எடுத்துரைக்கின்றார். எழுதப்படும் மரபு படிப்படியாக சங்க இலக்கியக் காலத்திற்கு இடையே வளர்ந்து வருகின்ற வந்துள்ளது. முதலில் சித்திரம் எழுதுவதைக் குறித்த எழுத்து என்னும் இச்சொல், பின்னர் எழுத்தோடு, அதாவது எழுத்தொலிகளைப் பதிவு செய்யும் வடிவங்களாக பொருள் கொள்ளும்படியாகியுள்ளது. மொழி எனும் சொல்லுக்கு பேசு, பேசுதல் எனும் கருத்து உண்டென்பதை கருத்திற் கொள்ள வேண்டும். அங்ஙனம் கா.சிவத்தம்பி எழுத்து வளர்ச்சிக்கு சமண முனிவர்களின் கொடை இன்றியமையாதது என்கிறார்.

“உண்மையில் தொல்காப்பியர் ஒலி வடிவங்களையும், சில இடங்களில் வரிவடிவ முறைமைகளையும் குறித்துச் சொல்வதைக் காணலாம். இந்த எழுத்து முறைமை வளர்ச்சிக்கு சமண முனிவர்களின் தொழிற்பாடு ஒரு முக்கிய காரணமாக இருந்திருத்தல் வேண்டும்”[17] என விவரிக்கின்றார்.

தமிழகத்தில் எழுத்து எப்போது உருவானது என்ற விவாதம் இன்றியமையாதது. கா.சிவத்தம்பி தமிழகத்தில் எழுத்து உருவானதன் பின்புலத்தைச் சங்கப்பாடல்கள் வழி பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

“சங்க இலக்கியப் பாடல்களில் பாடப்பெற்ற அரசர் என ஐயந்திரிபறக் கூறக் கூடியவர் “யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை” ஆவார். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பதற்கான அடையில் வேறுபாடு உண்டு. மாறன் வழுதி என்ற பெயர் பற்றியும் அத்தகைய ஒரு சிக்கல் உண்டு. தொகுத்தோர் பெயர்களை நோக்கும்பொழுது, புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் என்றே சொல்லப்படுகிறது. ஆனால், கூடலூர்க் கிழாரின் பாடல்கள் இவ்விலக்கியங்களில் (குறு. 166, 167, 214 – புறம் 229) காணப்படுகின்றன. பெயர் ஒப்புமை அடிப்படையில் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையை முதன்மையாகவும் கூடலூர்க் கிழாரின் பெயரை ஓரளவிற்கும் எடுத்துக் கொண்டால், சங்க இலக்கிய காலத்திலேயே இந்த எழுத்து முயற்சி நடைபெற்றிருக்க வேண்டும் போலத் தெரிகிறது”[18] என்று குறிப்பிடுகின்றார் கா. சிவத்தம்பி. மேலும் சங்க இலக்கியப் பாடல்களை நோக்கும் பொழுது அவற்றில் உணரும் வகையிலான வட இந்தியக் குறிப்புகளும், சமஸ்கிருதப் பண்பாட்டு நிகழ்வுகளும் தென்படுகின்றன என்று கா. சிவத்தம்பி,

“இங்கு வற்புறுத்திக் கூறவேண்டியதாக உள்ளது எதுவெனில் வைதீக இந்துமதம் பற்றியோ அல்லது சமஸ்கிருதம்சார் பண்பாடு பற்றியோ வரும் சங்க இலக்கியக் குறிப்புகள் எத்துணை ஆழமாக வேரூன்றியிருந்தன என்பதாகும்”[19] என மிக ஆழமானதொரு கருத்தை முன்வைக்கின்றார். இதன் மூலம் இலங்கையில் வடமொழி ஆழமாக வேரூன்றி இருந்துள்ளமையை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.11 இலங்கை நாணயங்கள்:

பண்டையத் தமிழர் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளில் நாணயங்களும் ஒன்றாகும். நாணயங்கள் வணிக முறைக்காக பயன்படுத்துப்பட்டுள்ளன. நாணயங்களைப் பல்வேறு வகைகளில் வகைப்படுத்துவர். களிமண், இரும்பு, செம்பு, பொன் என்று பல நிலைகளில் காணப்படுகின்றன. இலங்கையில் அகழாய்வு மற்றும் களாய்வுகளில் இருந்து கி.மு.3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன. அங்ஙனம் கிடைக்கும் நாணயங்கள் குறித்து கலாநிதி பரமு.புஷ்பரட்ணம்,

“தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்த சில பண்டைய கால முத்திரைகளில் பிராகிருத, வடபிராமி எழுத்துக்களின் செல்வாக்குக் காணப்பட்டாலும், நாணயங்கள் அனைத்தும் தமிழ்ப்பிராமியில் எழுதப்பட்டுள்ளன. (Krishnsmurty 1997, சீதாராமன் 1994). ஆனால் எமது

ஆய்வில் தமிழ்ப் பெயர் கொண்ட நாணயங்களுடன், பிராகிருத மொழிக்குரிய ஒருசில நாணயங்களையும் இலங்கைத் தமிழர்கள் வெளியிட்ட நாணயங்களாக எடுத்துள்ளேன்”[20] என்று இலங்கையின் ஆதிகால வரலாற்றை அறிய உதவும் முக்கிய மூலாதாரங்களைப் பாளி (பாலி) இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுகள் தாங்கியுள்ளதாகவும், இவை பௌத்த மத வரலாற்றைக் கூறுவதை நோக்காகக் கொண்டு அம்மதத்திற்குரிய பாளி(பாலி), பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளதாகவும் விளக்குகின்றார்.

மேலும் இவர் அநுராதபுரத்தில் பிரித்தாணிய ஜெர்மன் ஆய்வுக் குழுவினர் இணைந்து மேற்கொண்ட அகழாய்வின்போது சங்ககாலப் பாண்டியரின் குலச்சின்னமான மீன்பொறித்த நாணயங்களுடன் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் பிராகிருத சொற்கள் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

“அதில் ஒன்றில் ‘பருமக’ என்ற பெயர் காணப்படுகிறது. (Conningham 1999 : 84 - 85). இப்பெயர் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் 375 இடங்களில் வருகின்றது. (Paranarithana 1970 : IXXIV-LXX XVI). இது ‘பெருமகன்’ என்ற தமிழ்ச் சொல்லின் பிராகிருத வடிவமாகும்”[21] எனக் கூறுவதிலிருந்து அங்கு நிலவிய மொழிச் சூழலை அறிய முடிகின்றது. 2.19 கிராம் எடையும், 17 மில்லி மீட்டர் விட்டமும் உடைய ஒரு நாணயத்தின் முன்புறத்தில் வலப்புறம் நோக்கிய நிலையில் சேவல் உருவமும், பின்புறத்தில் நாணயத்தின் மத்தியில் சுவஷ்திகா சின்னமும், நாணயத்தின் விளிம்பை ஒட்டி வட்டமாக ஆறு பிராமி எழுத்துக்களும் உள்ளன. இதிலுள்ள எழுத்துக்கள் மஹசிதஅபொ (Mahacita apo) எனப் படிக்கப்பட்டுள்ளது ஆனால் இவற்றின் வாசிப்புக்கும் சரியான பொருளை ஆசிரியரால் கொடுக்க முடியவில்லை. அவ்வாறு சிற்சில நாணயங்களை எடுத்துக்காட்டி புஷ்பரட்ணம்,

“முந்தைய நாணயத்தில் குறிப்பிடப்பட்டது போலவே இந்நாணயத்தின் இறுதியில் வரும் பெயர் “அன்” என முடிவதால் இதை மஹாசாத்அன் என வாசிக்கலாம். சாத்தன் என்ற பெயர் சங்க இலக்கியத்திலும் (புறம் 227, அகம் 50, குறு 349), தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் பல இடங்களிலும் வந்துள்ளன (Mahadevan 1966 : 69). இதற்கு வணிகன் அல்லது வணிகக் குழு, வணிகக் கூட்டத் தலைவன், தனி நபருக்குரிய பெயர் எனப் பல கருத்துக்கள் உண்டு (T.L.:III1360)”[22] என்று புஷ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

மகாவம்சம் என்ற பாலி நூல் கி.மு.2ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த ‘எல்லாளன்’ என்ற தமிழ் மன்னனை ‘துட்டகாமினி’ என்ற மன்னன் வெற்றி கொள்ள முன்னர் இலங்கையில் ஆட்சி புரிந்த சாத்தன் என்ற தமிழ் படைத்தளபதியை வெற்றி கொண்டதாகக் கூறுகிறது. இதிலிருந்து சாத்தன் என்ற பெயர் இலங்கைத் தமிழரிடையேயும் வழக்கிலிருந்தமை தெரிகிறது. நாணயத்தில் வரும் “மஹா” எனப் பல இடங்களில் தனிநபர் கல்வெட்டுகளில்

“மஹா” “மகா” எனப் பல இடங்களில் தனிநபர் மற்றும் அரச பெயர்களுக்கு முன்னால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பெரிய, பெருமை, மிகுந்த, அளவற்ற அல்லது உயர்ந்த எனப் பல பொருள் கொள்கின்றனர். இதை குறுந்தொகை போன்ற சங்க நூல்களில் வரும் பெருஞ்சாத்தனார் போன்ற பெயர்களுடன் ஒற்றுமைப்படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது(குறும் 263). இலங்கையில் எல்லாள மன்னனுக்குச் சார்பாகப் போரிட்ட மகா சாத்தன் என்ற தமிழ்ப் படைத் தளபதியை வெற்றி கொண்டதாகவும் மகாவம்சம் கூறுகிறது. மேலும் இலங்கையின் தென்பகுதியில் கிடைக்கும் நாணயங்கள் குறித்து புஷ்பரட்ணம்,

“தென்னிலங்கையில் ‘குதஹ’ என்ற பெயரில் நாணயங்களும், நாணய அச்சுக்களும் ஏனைய நாணயங்களைவிட எண்ணிக்கையில் சற்றுக் கூடுதலாகக் கிடைத்துள்ளன(Bopeara chchi 1999:Nos 2.3.4). இலக்கிய நடையில் இரட்டிக்கும் ஒற்றுக்கள் தமிழ்ப் பிராமி வாசகங்களில் பெரும்பாலும் ஒற்றையாகவே வரும்(மகாதேவன் 2000:117). இதனால் நாணயத்தில் வரும் குதஹ என்ற பெயரைப் பொப்பியாராச்சி குத்தஹ என எடுத்துக் கொள்வது பொருத்தமாகும். இப்பெயர் முதன்முதலாகப் பாளி இலக்கியங்களில் தமிழ் மன்னனுக்குரிய பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வரும் குதக என்ற பெயர் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்கள் பலவற்றில் வருகின்றது (Paranavi thana 1970:Nos 43. 143.177.617.646.828.842). இவற்றில் பெரும்பாலான கல்வெட்டுக்களில் இப்பெயருக்குரியவன் குடும்பத் தலைவனாகவே குறிப்பிடப்பட்டுள்ளான்”[23] எனக் குறிப்பிடுகிறார். இலங்கையின் வரலாற்று இலக்கியமான மகாவம்சம் என்ற நூல் வெளிநாட்டிலிருந்து குதிரைகளைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் கப்பல் தலைவனின் (நாவாய்) பிள்ளைகளான சேன, குத்தக என்ற தமிழர்கள் அநுராதபுரத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த சூரதீசனை வெற்றி கொண்டு 22 வருடங்கள் (கி.மு.177-155) நிதீ தவறாது ஆட்சி புரிந்தான் எனக் கூறுகிறது. இதிலிருந்து வட எழுத்துக்கள் இலங்கையில் வழக்கில் இருந்ததை அறியமுடிகின்றது. அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கை பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் மல்லஹ, மல்லஸ, மல்லந என வரும் இப்பெயர் (Paranavithana 1970:Nos 1148, 1183, 202). நாணயத்தில் தமிழில் மல்லக என எழுதப்பட்டுள்ளமை ஒரு முக்கிய வேறுபாடாக உள்ளது. அத்துடன் நாணயத்தின் பின்புறத்திலும், முன்புறத்திலும் திரிசூலமும் இடம் பெற்றுள்ளது. இச்சின்னம் இந்தியா குறிப்பாக, சங்ககால தமிழக நாணயங்களிலும் காணப்படுகின்றன. (Krishnsmurthy 1997:80-90). இதில் வரும் திசஹ என்ற பெயர் பிராகிருத மொழிக்குரியதாக இருப்பினும் இப்பெயரில் தமிழர்களும் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு”[24] என புஷ்பரட்ணம் விவரிப்பதிலிருந்து பிராகிருத மொழி இலங்கையில் இருந்ததை அறியமுடிகின்றது.

வடநாட்டிலிருந்து இறக்குமதியான சமண சமயம் குறித்தப் பதிவுகள் இலங்கையின் நாணயங்களில் இடம்பெற்றுள்ளன. மேலும் சமண என்ற தமிழனும், தமிழ் குடும்பத் தலைவனுடன் சேர்ந்து மண்டபம் அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. அது குறித்து,

"இதில் கபதிகந என வாசிக்கப்பட்டதைக் கபதிகன் எனவும் படிக்கலாம். தொடக்க காலத் தமிழப் பிராமிக் கல்வெட்டுக்களில் "ன்" என்ற எழுத்துக்குப் பதிலாக "ந்" என்ற எழுத்து எழுதப்பட்டதற்கும் அது "ன்" என வாசிக்கப்பட்டதற்கும் சான்றுகள் உண்டு. உதாரணமாக தமிழ்நாட்டில் ஜம்பையில் கிடைத்த அதியமான் பற்றிய கல்வெட்டில் அதியன் என்ற பெயர் அதியந் என எழுதப்பட்டதையும், அதை அதியன் என வாசித்ததையும் இங்கு குறிப்பிடலாம். (சீனி வேங்கடசாமி 1981 : 145-148). அதன் அடிப்படையில் கபதி என்ற பிராகிருதப் பெயர் கபதிகன் எனத் தமிழ் மயப்படுத்தப்பட்டதாகக் கூறலாம்."[25] என்று புஷ்பரட்ணம் விளக்குவதிலிருந்து, பிராகிருத சொல் மக்கள் பயன்பாட்டில் இருந்துள்ளமையை அறியமுடிகின்றது. மேலும்,

ஒரு நாணயத்தில் ரா(ா)சன் என்பது ராஜ என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவமாக இடம்பெற்றுள்ளது. இந்நாணயத்தில் பிராகிருதமும் தமிழும் கலந்திருப்பதால் இதை இரு மொழிக் கலப்புள்ள நாணயம் எனக் கூறலாம் என்று குறிப்பிடும் புஷ்பரட்ணம்,

"இதில் ராசன் என எடுக்கப்பட்ட சொல் சங்க இலக்கியத்தில் காணப்பட்டாலும் (ஆரியம் அரசன் யாழ்பிரமதத்தன், புறம் 227), தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் வழக்கில் இருந்ததற்கு இதுவரை சான்றுகள் இல்லை. ஆனால் சமகாலத்தில் ஆந்திராவில் வெளியிட்ட ஒரே நாணயங்களில் மன்னனின் பெயர் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அரசனைக் குறிக்கும் ராஞோ என்ற பிராகிருதச் சொல்லுக்கு அரசன் என்ற தமிழ்ச் சொல் பயன்படுத்தப்பட்டதையும் அதில் காண முடிகிறது(Panneerselvam 1969:286). இவற்றின் அடிப்படையில் மேற்குறித்த நாணயத்தில் வரும் பெயரை திரிபுரத்தைச் சேர்ந்த சடணாகராசன் என்பவன் வெளியிட்டது எனக் கூறலாம்."[26]

எனக் குறிப்பிட்டுள்ளார். பௌத்த மதம் பரவிய வட்டாரங்களில் எல்லாம் பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. இதற்கு தமிழ்நாடு விதி விலக்காக இருந்தபோதிலும் இங்கும் பல பிராகிருதச் சொற்களைக் காண முடியும். ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் தனியாக மொழிகள் இருந்தும் அங்கு கி.பி.5ஆம் நூற்றாண்டு வரை பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. ஆனால் அரிதாகச் சில தனி மொழிச் சொற்களைக் காண முடிகிறது. இலங்கையைப் பொறுத்தவரை பிராகிருதம் கல்வெட்டு மொழியாக இருந்தும் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் தமிழ் மொழிப் பெயர்கள், சொற்கள் கல்வெட்டுக்களில்

பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென மிக விரிவானதொரு பதிவை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசர்களைப் பற்றியும் அவர்கள் ஆதரித்த, பின்பற்றிய சமயங்களைப் பற்றி குறிப்பிடும் புஷ்பரட்ணம்,

"திரிதரன், தாடிகன் (460-463), பிட்டியன் (463) ஆகிய தமிழர்கள் மாறிமாறி இருபத்தியேழு ஆண்டுகள் ஆட்சி புரிந்த போது அவர்களில் சிலர் பௌத்தர்களாகவும், பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாகவும் இருந்தனர். இதைத் தென்னிலங்கையில் அறகம என்ற இடத்தில் கிடைத்த பரிந்தனின் கல்வெட்டும், கதிர்காமத்தில் கிடைத்த தாடிகளின் கல்வெட்டும் கூறுகின்றன. அதேபோல் 16 ஆண்டுள் ஆட்சி புரிந்த குட்டபரிந்தனின் அநுராதபுரக் கல்வெட்டு இம்மன்னனும், மனைவியும் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகளைக் கூறுவதுடன் இவனைப் பரிதேவன் எனவும், புத்ததாசன் எனவும் வர்ணிக்கின்றது(E.Z.IV:111-115)."[27]

இம்மன்னர்கள் தமிழராக இருந்தும் பிராகிருதத்தையே கல்வெட்டு மொழியாகப் பயன்படுத்தியமை மொழிக்கும் மதத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமையைக் காட்டுவதாக எடுத்துக் கொள்ளலாம். சங்க காலத்தில் கல்வெட்டு மொழியாக தமிழ் இருந்தும், சமண மதம் பற்றிக் கூறப்படும் இடங்களில் அம்மத மொழியான பிராகிருதமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திராவில் தனி மொழியிருந்தும் இந்நாட்டையாண்ட சாதவாகனர் தமது நாணயங்களில் தமிழையும், பிராகிருதத்தையும் பயன்படுத்தினர். பல்லவர் தமிழோடு பிராகிருதத்தையும், சமஸ்கிருதத்தையும் கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு சமண சமயமும் அதன் மொழியான பிராகிருதமும் பண்டைய தமிழகத்தோடு பலநிலைகளில் தொடர்பில் இருந்ததை அறிய முடிகின்றது.

### 4.12 இலட்சுமி நாணயங்கள்:

இலங்கையில் கிடைத்த பண்டைய நாணயங்களில் இலட்சுமி உருவம் பொறித்த நாணயங்கள் குறிப்பிடத்தகுந்தன.

"இவை பண்டைய காலக் குடியிருப்புக்களுக்குரிய கலாச்சாரச் சின்னங்கள் தொட்டு கி.பி.5ஆம் நூற்றாண்டுக்குரிய ரோம நாணயங்கள் காணப்படும் கலாச்சாரப் படைகளுடனும் சேர்ந்து கிடைத்திருப்பதால் ஏனைய நாணயங்களைவிட இவற்றின் வெளியீடும், இதன் பயன்பாடும் நீண்ட காலத்திற்கு இருந்ததெனக் கூறலாம். இவற்றை நாணயமாக எடுக்காது சமயச் சின்னமாகக் கருதப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இவை புராதன நகரங்களிலும், வர்த்தக மையங்களிலும் ஏனைய நாணயங்களுடனும், கிடைத்ததால் இவை பண்டைய காலத்தில் புழக்கத்திலிருந்த நாணயங்கள் என்பது தெரியவந்தது."[28]

என்று புஷ்பரட்ணம் குறிப்பிடுகின்றார். அண்மையில் தமிழ்நாட்டில் சங்க காலச் சேரரின் தலைநகராக இருந்த கரூரிலும் ரோம, சங்க கால நாணயங்களுடன் இவை கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து இவை உள்நாட்டு வர்த்தகத்தில் மட்டுமின்றி வெளிநாட்டு வர்த்தகத்திலும் பயன்படுத்தப்பட்டமை தெரிகிறது. தமிழகத்தின் தெற்கே உள்ள இலங்கையில் கிடைக்கும் நாணயங்களில் பெரும்பாலும் தமிழும் பிராகிருதமும் கலந்த வடிவமாக இருக்கின்றன என்பதை மேற்கண்ட சான்றுகள் நமக்கு உணர்த்துவதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.13 இலங்கை சாசனங்கள்:

சாசனம் என்பதற்குக் கட்டளை என்று பொருள். அரசாணை உடன்படிக்கை, ஒப்பந்தம் போன்றவற்றைத் தாங்கி நிற்கும் ஆவணம் என்றும் பொருள்படும். தமிழகத்தோடு பல நிலைகளில் தொடர்பு கொண்டது இலங்கை. இலங்கையில் வாழும் மக்களும் தமிழக மக்களும் தொப்புள்கொடி உறவுகள் ஆங்கிலேயர்களின் கட்டாய குடியமர்த்தலுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர் நிலமாகவே இங்கே இருந்துள்ளன. தமிழகத்தில் இருக்கும் அனைத்துப் பண்பாடுகளையும் அங்கும் நாம் காண முடியும். பெருங்கற்படைக் காலப்பண்பாடு திராவிட மொழிகளோடு நெருங்கிய தொடர்புடையது என்பது கவனித்தற்குரியது. அது பரவியிருந்த நிலப்பகுதி திராவிடமொழிகள் வழங்கும் பகுதிகளாகிய தென்னிந்திய தீபகற்பம், பெருங்கற்படைக் காலத்து மக்களிடையே திராவிட மொழிகள் பேச்சு வழக்கான மொழிகளாகி விட்டன. அக்காலக்கட்டம் தமிழ் மொழியின் வளர்ச்சி காலம் என்பதைச் சாசனத் தமிழ் வாயிலாக அறிய முடிகின்றது. தமிழிலக்கிய மரபும் அக்காலத்தில் உருவாகி விட்டது. அங்குக் கிடைக்கும் சாசனங்களும் பெரும்பாலும் இருமொழிக் கலப்பாகவே கிடைப்பதாக சி.பத்மநாதன்,

“அந்தக் கால கட்டத்தில் பிராகிருதமும் தமிழகத்தில் அறிமுகமாகி விடுகின்றது. பிராமித் தமிழ்ச் சாசனங்களில் வரும் பெயர்களிற் சில தமிழ்ப் பெயர்கள்; வேறு சில பெயர்கள் பிராகிருத மொழிப் பெயர்கள், இன்னுஞ்சில பெயர்கள் தமிழாக்கம் பெற்ற பிராகிருத மொழிப் பெயர்கள். இச்சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் நாகர், பரதவர், பிராமணர் முதலான சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த எல்லோரிடையிலும் தமிழ்ப் பேச்சு வழக்கு மொழியாகிவிட்டது”[29] என்று குறிப்பிடுகின்றார் சி.பத்மநாதன். சங்க காலத்தில் தமிழகத்துக் கரையோரங்களில் வாழ்ந்தவர்கள் கப்பல் பயணங்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர். தூரத்து நாடுகளோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். ஈழம், தாய்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பொறித்த கல்வெட்டுகளும் பிற சின்னங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியது.

இலங்கையில் இரண்டாயிரத்துக்கும் மேலாக பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவை பிராகிருத மொழிச் சாசனங்கள்; பிராமி வரி வடிவங்களில் எழுதப்பட்டவை. அச்சாசனங்களிற்

கையாளப்படும் பிராகிருதம் ஒரு கலப்பு மொழியாக உள்ளது. இந்தியாவிலுள்ள பிராகிருத மொழிக் கல்வெட்டுகளிற் காணப்படாத பல சொற்கள் அவற்றில் இடம் பெற்றுள்ளதாகவும் அவற்றிலே பல தமிழ்மொழிச் சொற்களாகவும் சில திராவிட மொழிகள் சிலவற்றுக்குப் பொதுவான சொற்களாகவும் காணப்படுகின்றன. அங்ஙனம் ஈழத்தில் கிடைக்கும் சாசனங்களில் பெரும்பாலும் பிராகிருத மொழியே காணப்படுவதாக விளக்குகிறார்.

“ஈழத்தின் பல பகுதிகளிலே தமிழ் மொழி வழங்கியமைக்குப் பிராமிச் சாசனங்கள் உறுதியான சான்றுகளாகும். அவற்றிலே காணப்படும் பருமக(ன்), பருமகள, மருமகன, மருமான, மருக மாற, ஐ, வேள, ப(ா)ளி முதலியன தமிழ்ச் சொற்களாகும். தமிழ்ச் சொற்களைப் பிராகிருத மொழியில் எழுதுமிடத்து அம்மொழி இலக்கண மரபுகளுக்கேற்ப அவற்றை அமைத்துள்ளனர்.”[30]

என்று மிக விளக்கமாக எடுத்து இயம்புகின்றார் சி.பத்மநாதன். மேலும் சில சாசனங்களைக் குறிப்பிடும் அவர் தமிழின் கடலன் என்ற சொல் சாசனத்தில் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார். கடலன் என்பது மாலுமி, கப்பல் செலுத்துவோன், கடல் வழிப் பிரயாணஞ் செய்வோன், மாலுமிகள் தலைவன், கடல் வணிகன் எனப் பலவாறு பொருள்படும். இதனை,

**“ப$_3$ரத ஸாக$_3$ ரிகஸ்ஸ லெணே**
**‘கடலனான பரதனின் குகை’**

தமிழ்ப்பிராமிச் சாசனங்களிலே கடலன் என வரும் சொல் இங்கு ஸாக$_3$ரிக எனப் பிராகிருதமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது”[31] என்று குறிப்பிடுகின்றார். பிராமிச் சாசனங்களிற் பிராமணரைப் பற்றிய குறிப்புகள் மிகுதியானவை. அதனைக் குறித்து,

“பிராமணரை அரண்மனையிலே புரோகிதராக நியமிப்பது வழக்கம். விஜயராசன் இறந்த பொழுது அடுத்த மன்னன் அதிகாரம் பெறும்வரை உபதிஸ்ஸகாமத்திலே அரசனின் அதிகாரங்கள் புரோகிதரின் வசமாயிருந்தன என்பது மகாவம்சக் குறிப்பு. இந்நாட்களிலும் பொற்கொல்லரைப் பத்தர் என்று கௌரவமாகக் குறிப்பதுண்டு. தமிழ்ப் பிராமியில் ஒற்றுகள் இரட்டிப்பதில்லை என்பதாற் பதன் என்பது பத்தன் என்பதையே குறிக்கின்றதெனக் கொள்ள முடிகின்றது. பகரம் பிராகிருதத்திலே ப$_3$கரமாவதால் பத்தன் என்ற தமிழ்ச்சொல் பிராமிச் சாசனங்களில் ப$_3$த என மாற்று வடிவம் பெறுவது இயல்பாகும்.

ஒரு நாணயத்திலே சடணாகஸ, “சட நாகனது”, என்று எழுதப்பட்டுள்ளது. சடை நாகன் என்ற தமிழ்ப் பெயரைப் பிராகிருத மயப்படுத்திச் சடணாக என்று எழுதியுள்ளனர் போலத் தெரிகின்றது. ணாக என்பதில் முதலாவது எழுத்தான ணாகாரத்தை நகரத்திற்குப் பதிலாகவும் இரண்டாவது எழுத்தான க$_3$கரத்தை க எனவும் எழுதியுள்ளமை குறிப்பிடற்குரியது.

தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரிடையே தமிழ், பிராகிருதம் என்னும் மொழிகளின் கலப்பு ஏற்பட்டமைக்கு இது நல்ல உதாரணமாகும்"[32] என விவரிக்கின்றார் சி.பத்மநாதன்.

இலங்கையில் இரண்டாயிரத்துக்கும் மேலாக பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவை பிராகிருத மொழிச் சாசனங்களாக இருக்கின்றன. பிராமிச் சாசனங்களிற் பிராமணரைப் பற்றிய குறிப்புகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. ஒரு நாணயத்திலே சடணாகஸ, "சட நாகனது" என்று எழுதப்பட்டுள்ளது. சடை நாகன் என்ற தமிழ்ப் பெயரைப் பிராகிருத மயப்படுத்திச் சடணாக என்று எழுதியுள்ளனர் என்பது போன்ற கருத்துகளை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.14 பிராகிருத மொழி சாசனங்கள்:

தமிழ்நாட்டிற்கு வடநாட்டிலிருந்த வந்த மொழிகளில் ஒன்றான பிராகிருதம் பண்டைய இலங்கையில் மிகுந்த செல்வாக்கு செலுத்தியுள்ளன.

''ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் சாசனங்களைப் பிராகிருத மொழியில் எழுதினார்கள். பிராகிருதம் கி.பி.நான்காம் நூற்றாண்டுவரை தென்னாசியா முழுவதிலும் தொடர்பு மொழியாக விளங்கியது. 'இலங்கையில் வாழ்ந்த எல்லாச் சமூகத்தவரும் பிராகிருத மொழியினையே சாசன மொழியாகப் பயன்படுத்தினார்கள்.' இலங்கையிற் சாசன வழக்கான பிராகிருதம் தமிழ்மொழியின் செல்வாக்கினைக் கணிசமான அளவிற்குப் பிரதிபலித்தது. பல தமிழ்ச் சொற்கள் பிராகிருத மொழி இலக்கண அமைதிகளுக்கு ஏற்ப உருமாறிய வடிவத்திலே ஆதியான பிராமிச் சாசனங்களில் வருகின்றன. அவற்றுட் பெரும்பாலானவை பெயர்ச் சொற்கள்: அவை இயற்பெயர், காரணப்பெயர், பண்புப் பெயர், பதவிப் பெயர், இன உறவு சம்பந்தமான பெயர், இடப்பெயர் எனப் பலவகைப்படும்"[33] என்று குறிப்பிடுகின்றார் சி.பத்மநாதன். இதிலிருந்து தமிழகத்தின் நிலநீட்சியான இலங்கையின் மொழிச்சூழலை அறியமுடிகின்றது. மேலும் இயக்கர், நாகர் என்போர் இலங்கையின் பூர்வ குடிகளென்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவர்கள் பௌத்த சமயம் பரவுவதற்கு முன்பு இலங்கையின் பல பகுதிகளிற் பரந்து காணப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். அக்குறுகொட என்னும் இடத்திலே கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு நிலத்தை வெட்டிய பொழுது பெருமளவிலான, சங்க காலத்து நாணயங்கள் கிடைத்துள்ளன. அவற்றில ஈய நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் அடங்கும். அவற்றுட் சிலவற்றிலே பிராமி வடிவங்களிற் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. சில பெயர்கள் தமிழ்ப் பெயர்கள் என்பது இந்நாணயங்களின் குறிப்பிடத்தக்கவொரு அம்சமாகும். அவற்றோடு பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களான கருப்பு – சிவப்பு மட்கலங்களின் ஓடுகளும் மணிகளும் கிடைத்துள்ளன. இது குறித்து,

"தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரின் மொழி வழக்கிலே தமிழும் பிராகிருதமும் கலந்துள்ளமைக்கான ஆதாரம் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள மிகவும் புராதனமான

நாணயங்கள் மூலம் கிடைத்துள்ளது. பெருங்கற் பண்பாடு, தமிழ் மொழி வழக்கு, பிராகிருத மொழி, பிராமி வரி வடிவங்கள், அரச உருவாக்கத்தின் தொடக்க நிலை என்பவற்றோடு நாகர் கொண்டிருந்த தொடர்புகளைப் பிரதிபலிக்கின்றமை இத்தொல்பொருட் சின்னங்களின் சிறப்பம்சமாகும். இந்நாணயங்கள் கி.மு.200 – கி.பி.200 ஆகிய காலத்துக்குரியவை"[34] என்று விவரிக்கின்றார் சி.பத்மநாதன்.

பிராகிருதம் கி.பி.நான்காம் நூற்றாண்டுவரை தென்னாசியா முழுவதிலும் தொடர்பு மொழியாக விளங்கியுள்ளது. இலங்கையில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் பிராகிருத மொழியினையே சாசன மொழியாகப் பயன்படுத்தினார்கள் என்பதும் மேற்கண்ட சான்றுகள் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.15 பிற்கால கல்வெட்டுகளில் சங்ககால கருத்துக்கள்:

சங்க இலக்கியப் பதிவுகள் அண்மைக் காலங்களில் மெய்ப்பிக்கப்பட்டு வரும் நிலையில், சங்க இலக்கியம் உருவாக்கப்பட்டதற்குப் பின்பும் அவ்விலக்கியம் குறித்த பல பதிவுகள் தொடர்ந்து இருந்து வந்துள்ளன. அவற்றுள் வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பிடத்தகுந்தனவாகும். இச்செப்பேட்டை வெளியிட்டவர் 'ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன்' என்னும் பாண்டிய மன்னன் ஆவார். இச்செப்பேட்டில் பல கருத்துக்கள் கிடைக்கின்றன. செப்பேட்டில், பாண்டியன், 'மநுதர்மத்தின் அடிப்படையில் குருசரிதம் கொண்டாடியதைக் குறிப்பிடுகின்றான். இவ்வூரை நம்மாழ்வார் பாடியிருக்கிறார். பாண்டியனும் தன்னை பரமவைஷ்ணவன் என்றும் குருசரிதம் கொண்டாடியவன் என்றும் கூறிக் கொள்கிறான். எனவே பாண்டியனின் குரு நம்மாழ்வாராகவே இருத்தல் வேண்டும். வேள்விக்குடிச் செப்பேட்டில் கொற்கைக்கிழானற் கொற்றன் என்பவன் குறிப்பிடப்பட்டுள்ளான். அங்ஙனம் இம்மன்னன் பின்பற்றிய சமயம் குறித்து ஆ.பத்மாவதி,

"ஸ்ரீவரமங்கலச் இவன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதிக்கு வேள்வி செய்து அவனிடம் தானமாக வேள்விக்குடி என்ற ஊரைத் தானமாக பெற்றவன். அவனை இச்செப்பேடு, 'சொற்கண்ணாளர் சொல்லப்பட்ட ஸ்ருதி மார்க்கம் பிழையாத'வன் என்று கூறியுள்ளது. அவன் சங்க காலத்தில் வாழ்ந்தவன் என்றாலும், சுருதி மார்க்கம் பிழையாதவன் என்று எட்டாம் நூற்றாண்டுச் செப்பேடு குறிப்பானது சிறப்புடையதாகும். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் 'சுருதி' என்பது பற்றி தம் உரையில் குறிப்பிடும்போது, 'நான்மறை அந்தணர்கள், மறைக்கு விதித்த மரபினையுடைய சுருதி குன்றாமல் உச்சரிக்கும் போதை,' என்கிறார். (சிலப்.13:14) இவ்வாசகம் வேள்விக்குடிச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ள "சொற் கண்ணாளர் சொல்லப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத' – என்ற வரிக்கு அப்படியே உரை

எழுதியது போலுள்ளது கண்டு இன்புறத் தக்கது"[35] என்று கூறுகிறார். இதிலிருந்து சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் பல யாகங்கள் செய்ததற்கு உதவிய முதுகுடுமிப் பெருவழுதி வடவரின் வேள்வி இயற்றுதற்கு தானம் கொடுத்தது பல நூற்றாண்டுகள் கடந்து அவை சமுதாயத்தில் சொல்லப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகின்றது.

சங்க இலக்கியத்தை மெய்ப்பிக்கும் சான்றுகளில் வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பிடத்தகுந்தனவாகும். பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதிக்கு வேள்வி செய்து அதற்குத் தானமாக வேள்விக்குடி என்ற ஊரைத் கொடுத்த குறிப்பினை இச்செப்பேடு கொண்டுள்ளது. இதன் வழி வடமொழி வேதம் ஓதி வேள்வி இயற்றும் அந்தணர்களின் நிலையையும் அவர்கள் ஆரிய சடங்குகளை தமிழகத்தில் நிகழ்த்தியதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.16 நடுகற்கள்:

போரில் இறந்துவிட்ட வீரனுக்கு அவர் இறந்த இடத்தின்மேல் ஒரு கல்லில் அவரது உருவம் வரைந்து நடுவது நடுகல் எனப்பட்டது. இந்நடுகல் ஊரின் எல்லைப் பகுதிகளில் அமைக்கப்படும். இவ்வாறு நடுகல் அமைக்கப்படும் வழக்கினை உலகின் பெரும்பாலான நாடுகளில் காண முடிகிறது. இந்நடுகற்கள் பிற்காலங்களில் வழிபாட்டுக்குரிய தெய்வங்களாகவும் மாறின. தமிழகத்தில் மிகவும் தொன்மை வாய்ந்த மரபாகவும் இது கருதப்படுகின்றது. அக்காலத்தில் ஆணுக்குரிய இலக்கணமாக போர் நிகழ்வு இருந்தது. சங்க இலக்கியங்கள் இத்தகையை நடுகல் பற்றிய பல குறிப்புகளைத் தருகின்றன. சான்றாக புறநானூற்றில் 12 பாடல்களிலும் அகநானூற்றில் 11 பாடல்களிலும் ஐங்குறுநூற்றில் ஒரு பாடலிலும், மலைபடுகடாம், பட்டினப்பாலை ஆகிய பத்துப்பாட்டு நூல்களிலும் நடுகற்களைப்பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. அங்ஙனம் போரில் இறக்கும் வீரர் நிலையை ரிக்வேதமும் அதர்வண வேதமும்,

"ஆயிரம் பசுக்களைத் தானம் செய்தால் எத்தகு புண்ணியம் கிடைக்குமோ அத்தகு புண்ணியம் போரில் இறக்கும் வீரனுக்குக் கிடைக்கும் (History of Pharma sastra Kol III P58)"[36] என்று குறிப்பிடுவதாக ச.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

அங்ஙனம் சங்க கால நடுகற்கள் குறித்த தனது கருத்தை ச.கிருஷ்ணமூர்த்தி,

"சங்க இலக்கியங்களை ஆழ்ந்து படித்ததுடன், முதன் முதலில் கல்திட்டைகளில் பெருங்கற்கால ஓவியங்கள் மகாராஜக் நடையில் இருப்பதைக் கண்டறிந்த நான் சங்க கால நடுகற்கள் ஓவியங்களில் மட்டுமே இருந்தன. 'கல்வெட்டாக (எழுத்தாக) இல்லை என்பதை ஒரு கட்டுரையாகத் தொல்லியல் கருத்தரங்கு நூலில் எழுதினேன் (1985). பிறகு 'தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும்' என்ற நூலிலும் (1908) எழுதினேன். மகாராஜக்கடை ஓவியக்

கண்டுபிடிப்பிற்குப் பின் மல்ல சமுத்திரம், குருவிநாயனப்பள்ளி, கிருஷ்ணகிரி, தாளப்பள்ளி எனப் பல ஊர்களிலும் பெருங்கற்கால ஓவியங்களைக் கண்டறிந்தேன். என் கள ஆய்வின் விளைவாகச் சங்ககால நடுகற்கள் ஓவியங்களில் கூடியவையே என்று குறிப்பிட்டேன். சங்க கால நூல்கள் தொடக்கம் குறித்த கால வரையறை செய்வது சிரமமாகும். ஆயின் முடிவு பல்லவர் காலத் தொடக்கம் வரை என்று குறிப்பிடலாம்.'' [37]

என்று குறிப்பிடுகின்றார். நடுகல் வழிபாடு இன்றுவரை புழக்கத்தில் இருந்து வருகிறது. நடுகற்கள் சிறுதெய்வங்களாக மாற்றம் பெற்றுள்ளன. நடுகற்களில் உருவமே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. எழுத்துக்கள் மிக குறைவாக பதிவாகியுள்ளன உள்ளிட்ட கருத்துக்களை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.17 புழங்கு பொருட்கள்:

ஒரு காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு சமூகத்தில் தம் வாழ்வுக்காக பயன்படுத்தி வந்த பொருள்களே புழங்குப்பொருட்களாகும். அவ்வாறு அவர்கள் புழங்கிய பொருட்களே அவர்களின் வாழ்வின் நிலைப்பாடடினைப் புலப்படுத்துகின்றது. புழங்குதல் என்பதற்கு 'கையாளுதல், பழகுதல் என திருமகள் அகராதி பொருளுரைக்கிறது. பண்பாட்டின் கண்ணாடி புழங்குப்பொருட்கள் என்பார் பக்தவச்சலபாரதி. ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினை மற்றொரு குழுவினரோ அல்லது காலம்கடந்த பின்னர் அதே குழுவினரோ அறிந்துகொள்வதற்கு புழங்குப்பொருட்கள் துணைபுரிகின்றன.

இப் புழங்குப்பொருள் பண்பாட்டைப் பொருத்தவரையில் பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன? எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொருத்தே புழங்குப்பொருள்களின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். அங்ஙனம் சங்க இலக்கியங்களில் புழங்குப்பொருட்கள் பற்றிய குறிப்புகள் பலவற்றைக் காணமுடிகிறது. சான்றாக ஐங்குறுநூற்றில் வேளாண் புழங்குப்பொருட்களான ஏர், வட்டி, அம்பணம், குறுந்தடி, தட்டை, பொய்ப்புலி போன்ற பொருட்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

> **"கார் கலந்தென்றால் புறவே பல உடன்**
> **ஏர் பரந்தனவால் புனமே ஏர்கலந்து**
> **தாது ஆர் பிரசம் மொய்ப்ப,**
> **போது ஆர் கூந்தல் முயங்கினள், எம்மே''** [38]

என்று ஐங்குறுநூறு வேளாண் புழங்குப்பொருளான ஏர் குறித்து குறிப்பிட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

## 4.18 தொகுப்பும் பதிப்பும்:

நம் கையில் இருக்கும் படைப்பு வெறுமனே பொழுது போக்கிற்கு மட்டுமின்றி பல வரலாற்றுக் குறிப்புகளைச் சுமந்து இருப்பின் அப்படைப்பு மிகுந்த கவனத்திற்குரிய படைப்பாக மாறுகிறது. மேலும் அப்படைப்பு பயணித்து வந்த நெடும் பரப்பையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அங்ஙனம் தமிழ் மக்களின் வரலாற்றைக் கட்டமைப்பதில் மிக இன்றியமையாத தரவாக இருப்பது சங்க இலக்கியம் மற்றும் சங்க இலக்கியம் உருவான காலம். அதன் தொகுப்பு காலம் - தொகுத்தோர், தொகுப்பித்தோர். உரையாசிரியர்கள், பதிப்பித்தவர்கள், பதிப்பிற்கு முன் அத்தரவுகள் இருந்த இடம் போன்றவையாகும். இவற்றை அனைத்து நிலைகளிலும் ஆழ்ந்து படிக்க வேண்டியுள்ளது.

அவ்வாறு தொகுக்கும் காலத்திற்கும் பாடல்கள் இயற்றப்பட்ட காலத்திற்கும் பல நூற்றாண்டுகள் இடைவெளி உள்ளது. இதில் தொகுப்பவரின் மனநிலை, அவர் சார்ந்த சமயம், மொழி, அவரது விருப்பம், விருப்பமின்மை போன்றவைகளை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதே போல உரையாசியர், மற்றும் பதிப்பாசிரியர்களின் மனநிலை, அவர் சார்ந்த சமயம், மொழி, அவரது விருப்பம், விருப்பமின்மை போன்றவைகளை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் பின்புலத்தில் சங்க இலக்கியத்தின் உண்மைத்தன்மை கேள்விக்குட்படுத்த வேண்டியுள்ளது.

## 4.19 தொகுப்பு – விளக்கம்:

தொகுத்தல் என்ற சொல் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது.

**"தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த்**
**ததர்ப்பட யாத்திலோ டனைமர பினவே"**[39]

என தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இந்நிலையில் தொகை என்ற சொல்லிற்குப் பலவகையானப் பொருள்கள் கூறப்படுகின்றன. இவற்றில் சென்னைப் பல்கலைக் கழக அகராதி,

"கூட்டம், சேர்க்கை, விலங்கு முதலியவற்றின் திரள், கொத்து, மொத்தம், பணம், எண், கணக்கு, கூட்டல், தொகுத்துக் கூறுகை, தொகைச் சூத்திரம், உருபு முதலியன மறைகை, ஆசிரியம், நற்றிணை முதலான எட்டுத்தொகை நூல்கள்"[40] போன்ற பொருள்களைச் சுட்டுகின்றது. இது தமிழுக்கு மட்டும் தனித்துவமானது அன்று. கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், சீனம், வடமொழி போன்றவற்றிலும் இத்தகைய மரபு காணப்படுகிறது. அங்ஙனம் தொகுப்பு குறித்து சுந்தர சண்முகனார் கூறும் கருத்துக்களை, முனைவர் ந.இராணி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பாடல்கள் தவிர உரைநடைகளும் தொகை நூல்களில் இடம்பெறத் தொடங்கின. இச்சூழல் குறித்து சுந்தர சண்முகனார் (1990:36), 'புலவர்கள் பலர் எழுதிய செய்திகளின் தொகுப்புகள் எல்லாம் தொகை நூல்கள் ஆயின. குறிப்பிட்ட ஒரு மொழியைப் பற்றிய

தொகுப்புகள், குறிப்பிட்ட ஒரு நாட்டைப் பற்றிய தொகுப்புகள், குறிப்பிட்ட ஓர் இலக்கியம் பற்றிய தொகுப்புகள், குறிப்பிட்ட – ஒரு கொள்கையை – ஒரு பொருளை – ஒரு தலைப்பைப் பற்றிய தொகுப்புகள், குறிப்பிட்ட ஒரு கருத்தை – ஒரு தலைப்பைப் பற்றிய தொகுப்புகள்' என்று கிரேக்கத் தொகை நூல்களின் இயல்பைக் குறிப்பிடுகின்றார்"[41] என்று விரிவாக எடுத்துரைக்கின்றார். எனவே தொகுப்பு மரபு என்பது தொல்காப்பியர் காலத்தில் இருந்தே இருந்து வந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.20 சங்க இலக்கியத் தொகுப்பு வரலாறு:

சங்க இலக்கியங்களைத் தொகுத்தது குறித்து அறிஞர்கள் பின்வரும் கருத்தை முன்வைக்கின்றனர்.

சுந்தர சண்முகனார் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியன கடைச் சங்க காலத்தில் தொகுக்கப்பட்டன.

உ.வே.சாமிநாதையர் - கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் இருந்த புலவர்களும் அரசர்களும் தமிழாராய்ச்சியில் ஊக்கங்கொண்டு பழந்தமிழ்ச் செய்யுட்களை தொகுக்கத் தொடங்கினர். அங்ஙனம் தொகுத்தவை முற்கூறிய மூன்றுவகை (நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு) நூற்றொரு திணைகளாதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கா.சிவத்தம்பி | - | கி.பி.3ஆம் நூற்றாண்டு |
| இரா.நெடுஞ்செழியன் | - | கி.பி.3ஆம் நூற்றாண்டு |
| லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் | - | எட்டுத்தொகை நூல்கள் கி.பி.2 முதல் கி.பி.6 வரையிலான காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கலாம். |
| ஆ.வேலுப்பிள்ளை | - | சமண பௌத்த காலம் |
| மா.இராசமாணிக்கனார் | - | கி.பி.3 முதல் 6 வரை |
| முனைவர் ந.இராணி | - | கி.பி.3 முதல் 6 வரை |
| ஏவி.சுப்பிரமணிய அய்யர் | - | கி.பி.3 முதல் கி.பி.9 வரை |
| வையாபுரிப்பிள்ளை | - | கி.பி.5ம் நூற்றாண்டு |
| கா.கோவிந்தன் | - | கி.பி.5ம் நூற்றாண்டு |
| செ.வை.சண்முகம் | - | கி.பி.5 முதல் 9ஆம் நூற்றாண்டு |

என்று பல்வேறு கால வரையறைகள் அறிஞர்களால் முன் வைக்கப்படுகின்றன. எனவே கி.பி.2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்குள் தொகுப்புப் பணி நடைபெற்றது என்று அறிந்துகொள்ள முடிகிறது.

## 4.21 தொகுப்பு நடைபெற்ற காலச் சூழல்:

தொகுப்பு நடைபெற்ற காலத்தில் வைதீக, அவைதீக சமயங்கள் தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்துள்ளன. அது குறித்து கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி,

‘‘தர்ம சாஸ்திரங்களின் நீதி நெறிகளையும் தமிழ்ப் புலவர்கள் கற்றறிந்தனர் என்பதையும் சங்க இலக்கியங்கள் எண்ணற்ற உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுகின்றன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வடநாட்டுப் புராணக் கதைகளையும் பழங்கதைகளையும் மிகுதியாக பயன்படுத்தியுள்ளதால், சங்க காலத்திற்குப் பிறகு இல்லாவிடிலும் சங்க காலத்தின் இறுதியிலிருந்து இவை இயற்றப்பட்டிருக்க வேண்டும்’’[42] என்று குறிப்பிடுகிறார். இந்நிலையில், கி.பி.3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நடைபெற்றதெனவும் அப்போது வைதீக சமயக் கருத்துகளை ஒழிக்க சமண பௌத்த சமயங்கள் உதவின எனவும் கூறும் பொ.வேல்சாமி பின்வரும் கருத்தை முன் வைக்கிறார்.

“கி.பி.3 லிருந்து கி.பி.6 வரை தமிழகத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற களப்பிரர்கள் இத்தகைய வேள்விகளையும் பார்ப்பனர்க்கான தானங்களையும் ஒழிக்கின்றனர். மீண்டும் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் களப்பிரரை அழித்து ஆட்சிக்கு வருகிற பாண்டிய மன்னர்கள் வேள்விகளையும் தானங்களையும் நிலமான்யங்களையும் ஊக்குவிக்கின்றனர். ‘களிப்பிறர் காலம்’ என அழைக்கப்படுகின்ற மேற்குறிப்பிட்ட மூன்று நூற்றாண்டுகளை இருண்ட காலம் எனவும் கலியரசர்களின் ஆட்சிக் காலம் எனவும் ‘‘தமிழ் நாகரிகம்’’ அழிக்கப்பட்ட பிறமொழி மன்னர்களின் காட்டாட்சிக் காலம் எனவும் தமிழக வரலாறெழுதிகளால் இதுவரை குறிக்கப்பட்டு வந்திருக்கின்றது. மேற்குறிப்பிட்ட வேள்விக்குடிச் செப்பேட்டிற்கு வாசகங்கள் தயாரித்தவனிலிருந்து, பெரியபுராணம் எழுதிய சேக்கிழார், நீலகண்ட சாஸ்திரியார், மு.அருணாசலம், ஔவை துரைசாமிப் பிள்ளை, பெங்களூர் குணா வரை அதில் அடக்கம்’’[43] என்று தமிழக வரலாறு எழுதியதில் உள்ள அரசியலை முன்னெடுக்கிறார் பொ.வேல்சாமி. மேலும் அவர் குறிப்பிடுகையில்,

‘‘களப்பிரர்கள் தமிழர்கள் அல்லர் என்கிற கூற்றைப் பார்ப்பன, சைவப் பாரம்பரிய ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். களப்பிரர்கள் யாவர்? எங்கிருந்து வந்தனர்? என்பன குறித்தெல்லாம் இதுவரை ஐயத்துக்கிடமற்ற முடிவுகள் எதையும் தமிழாய்வு நிறுவி விடவில்லை என்பதை நான் வலியுறுத்தி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். களப்பிரர்கள்

தமிழர்கள் எனவும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். க.ப.அறவாணன் அவர்களில் ஒருவர்.''[44] என்று குறிப்பிடுகின்றார்.

அதனைப் போலவே தொகுப்பு காலச்சூழல் குறித்து ஆ.வேலுப்பிள்ளை,

''எட்டுத்தொகை நூல்களிலுள்ள செய்யுட்களுட் பெரும்பாலான களப்பிரர் படையெடுப்புக்கு முந்தியன என்பதில் கருத்து வேறுபாடில்லை. அவை களப்பிரர் ஆட்சிக் காலத்திலேயே தொகுக்கப்பட்டன எனலாம். அந்நூல்கள் சமண, பௌத்த சங்கத்தாராலேயே தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவதற்கு இடம் உண்டு. நெடுந்தொகை, குறுந்தொகை என்பன எட்டுத்தொகை நூல்களிரண்டுக்குப் பெயர்கள். பௌத்த சமண முதனூலான, பாலி மொழியிலுள்ள திரிபீடகத்திலும் இவ்வாறு பிரிவுகள் காணப்படுகின்றமையால், இப்பெயர்கள் திரிபீடகத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கலாம்''[45] என்று கூறுகின்றார். இதைப்போல கி.பி.2 முதல் கி.பி.6 வரையிலான காலத்தை வரலாற்று ஆய்வாளராக மா.இராசமாணிக்கனார் பின்வருமாறு கூறுகிறார்.

''களப்பிரர் ஏறக்குறைய கி.பி.250இல் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினர் எனலாம். புகாரைத் தலைநகரமாகக் கொண்டு அச்சுத விக்கந்தன் என்றும் களப்பிர அரசன் ஆண்டு வந்தான் என்பதைப் புத்ததத்தர் குறிப்பிடுதல் கொண்டு உணரலாம். புத்ததத்தர் தென்னாட்டில் இருந்த பௌத்த துறவியாவார்''[46] என்று குறிப்பிட்டுள்ளார். இதைப்போல மயிலை சீனி வேங்கடசாமியும் அக்காலத்தைச் சமண சமய காலம் என்று குறிப்பிடுகின்றார்.

''கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பத்திரபாகு முனிவரின் சீடராகிய வைசாக முனிவரால் தமிழ்நாட்டிலே சமண சமயம் பரவச் செய்யப்பட்டது''[47] என்று குறிப்பிடுவதிலிருந்து சமண சமயம் தொடர்ச்சியாக தமிழகத்தில் செழித்து இருந்து வந்ததை அறிய முடிகின்றது. இந்நிலையில் எஸ்.வையாபுரிப்பிள்ளையவர்கள்,

"உத்திரசன்மன் என்பவன் அகநானூறு தொகுத்தவன். எனவே அகப்பொருளுரை கண்ட காலமும் அகநானூறு தொகுக்கப்பட்ட காலமும் 5ம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது ஒரு வகையாகப் புலனாகிறது"[48] என்று கூறுகின்றார். மேலும் புறநானூற்றின் காலத்தைக் குறிப்பிட வரும் இராசமாணிக்கனார்,

"கி.பி.4-ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்கே புதியவரும் பிராகிருத-வடமொழி வல்லுநருமாகிய பல்லவர் காஞ்சியைக் கைப்பற்றித் தொண்டை நாட்டை ஆளலாயினர் என்பது ஆராய்ச்சியாற் போந்த உண்மையாகும். பல்லவரால் தெற்கு நோக்கி உந்தப்பட்ட களப்பிரர் முறையே தொண்டை, சோழ, பாண்டிய நாடுகளைக் கைப்பற்றி ஆளலாயினர். அவர்கள் கி.பி.575 வரை சோழ, பாண்டிய நாடுகளை ஆண்டனர்."[49]

என்று குறிப்பிடுகின்றார். மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுவழி சங்க இலக்கியங்கள் தொகுப்பு நடைபெற்ற காலம் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கு செலுத்திய காலம் என்பதில் ஐயமில்லை. இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை எனில் சங்க இலக்கியத் தொகுப்புப் பின்புலத்தில் சமய செல்வாக்கு இருந்திருக்கின்றன என்பதை மேற்கண்ட அறிஞர்களின் சான்றுகளின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.22 சங்க நூல்களைத் தொகுப்பித்தோன்:

தொகுப்பித்தோருக்கும் தொகுப்பினுள் இடம் பெற்றிருக்கும் கருத்துக்களுக்கும் ஏதும் தொடர்பு இருக்குமா? என்றால் இருப்பதற்கான காரணங்கள் பல உண்டு. அங்ஙனம் சங்க இலக்கியத் தொகுப்பு நெறிமுறைகள் குறித்து ஆராய்ந்த முனைவர் ந.இராணி,

“தொகுத்தார், தொகுப்பித்தார், பாடலில் இடம் பெற்ற மதுரை பாண்டியர் பற்றிய தகவல்கள், சில தொகை நூல்களில் சேரர் பற்றிய பாடல்கள் முன்னமைந்துள்ளமை இவற்றைக் காரணம் காட்டி பாண்டிய நாட்டிலும் சேர நாட்டிலும் தொகை நூல்கள் தொகுக்கப்பட்டன என்கின்றனர் ஆய்வறிஞர். இவர்களுள் சுந்தரசண்முகனார் மட்டுமே ஏனையவர்களிலிருந்து வேறுபட்டுப் புறநானூறு பாண்டிய நாட்டில் தொகுக்கப்பட்ட தொகை என்கிறார். பிற தொகை நூல்களின் தொகுப்பிடம் பற்றிய கருத்தில் ஏனைய அறிஞர்களோடு இவரும் உடன்பட்டுள்ளார் (எஸ்.வையாபுரிப்பிள்ளை, அ.பாண்டுரங்கன், ச.அகத்தியலிங்கம், செ.வை.சண்முகம்) இவர்கள் கருத்தடிப்படையில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, புறநானூறு என்றும் மூன்றும் சேரநாட்டுத் தொகைகளாகின்றன. எஞ்சிய ஐந்து நூல்களும் பாண்டிய நாட்டுத் தொகையாக்கங்களாகின்றன”[50] என்று குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியங்கள் பாண்டிய மற்றும் சேர நாடுகளில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தொகுக்கப்பட்ட காலத்தில் சேரநாடு, வடநாட்டு பண்பாட்டுக் கூறுகளை சோழ, பாண்டிய நாடுகளைக்காட்டிலும் அதிகம் ஏற்றுக்கொண்ட நாடாகியுள்ளது. பாண்டிநாட்டிலும் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கு இழந்து வைதீக சமயங்கள் அதிகமாக செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன. எனவே சங்க இலக்கிய தொகுப்பில் சமயச் செல்வாக்கு இருந்துள்ளது என்பதனை மேற்கண்ட கருத்தின் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது.

### 4.23 பாரதம் பாடிய பெருந்தேவனார்:

இயற்கை நெறி காலமாக கருதப்படும் சங்க காலத்தில் உருவான இலக்கியங்களைத் தொகுத்த காலத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவர் பாடிய பாடலில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் வைதீக சமயம் சார்ந்தவை.

இது சங்க இலக்கியத்திற்கு முற்றிலும் முரணானது. கடவுள் வாழ்த்துப் பாடல்கள் குறித்து கா.கோவிந்தன்,

“கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டுப் புலவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கடவுள் வாழ்த்துப் பாடல் ஆகமச் சமயக் கொள்கைகள் கி.பி.6 முதல் 9 வரையான நூற்றாண்டுகளில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்ட பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிவன் புகழ்ப் பாடுகிறது. இப்பெருந்தேவனார் பழங்காலப் பாக்களைத் தொகுப்பதில் பெருமுயற்சி கொண்டார் எனத் தெரிகிறது.”[51]

என்று கூறுகின்றார். இதனைப் போலவே கடவுள் வாழ்த்துப் பாடல் குறித்து தனது கருத்தை செ.வை.சண்முகம் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

“தொகையைப் பற்றி முதன் முதலில் இறையனார் களவியல் உரைதான் குறிப்பிடுகின்றது. அதாவது கி.பி.9-ஆம் நூற்றாண்டுக்கு முன் தொகை முழுமை அடைந்துவிட்டது. தொகுக்கப்பட்ட காலத்தின் சூழலை இந்தக் கடவுள் வாழ்த்துகள் புலப்படுத்துவதாகவே தோன்றுகிறது. ஏனெனில், சங்க காலத்தின் இறுதியிலே பரிபாடல் தோன்றி கடவுள் உரிப்பொருளாகப் பாடு பொருளாக அமைந்துவிட்டார். எனவே, தொகையாக்கத்தின் காலச் சூழலைப் பிரதிபலிப்பதாகவே கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தோன்றுகின்றன.”[52]

என்று கூறுகின்றார். இதுபோல புறநானூறு, குறுந்தொகை ஆகியவற்றுக்கும் கடவுள் வாழ்த்தைப் பெருந்தேவனார் பாடியுள்ளார். இவரது பெயர் குறித்து அ.மாணிக்கம்,

“பெருந்தேவனார் என்று இயற்பெயர், பாரதத்தை உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுளாக இவர் பாடியமையால் ‘பாரதம் பாடிய’ என்ற அடைமொழியைப் பெறுகிறார். தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இவரைப் பெருந்தேவனார் என்று சுட்டிச் செல்கிறார். இவரது பிறந்த இடம் தொண்டை நாட்டில் உள்ளது.”[53]

என்று விவரிக்கிறார். இக்கடவுள் வாழ்த்துப் பாடல்கள் மேலோட்டமாக பார்த்தால் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தாது போல் தோன்றகிறது. ஆனால் இப்பாடல்கள் சங்க இலக்கியத்தை படிக்க அணுகும் புதிய படிப்பாளனை உளவியல் அடிப்படையில் அவரது படிப்பை மடைமாற்றம் செய்வதாகும். மேலும் அவ்விலக்கியத்தை ஒரு பொதுத் தளத்திலிருந்து அதனை ஒரு குறிப்பிட்ட சமய எல்லைக்குள் நிறுத்தும் முயற்சியாகவும் பார்க்க இடமுண்டு. இதன் காரணமாக சங்க இலக்கியத்திற்கு வைதீக அடையாளத்தையும் குறிப்பாக சைவ அடையாளத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடுகின்றது. உண்மையிலேயே அக்கால பண்பு அதுவெனில் அதனை ஏற்றுக்கொண்டுத்தான் ஆகவேண்டும். அல்லது அது தமிழைத் தாய்மொழியாக பேசும் மக்களின் ஒற்றை சமயமாக இருந்தாலும் அது குறித்த ஐய கேள்விகள் எழுப்ப

வேண்டியதில்லை. மாறாக அவ்விலக்கியம் பல்வேறு சமயங்கள், பண்பாட்டுக் கூறுகள் உடைய ஓர் இனத்தின் அடையாளமாக இருப்பதால் வினவ வேண்டியுள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட அச்சமயம் தமிழர்களின் ஆதி சமயமா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை. காரணம் அங்குக் காணப்படும் கருத்துக்கள் வடமொழிப் புராணங்கள் தரும் கருத்துக்களைப் போன்று ஒத்திருத்தல் மற்றும் இன்றைய தமிழ் மக்களாக அடையாளப்படுத்தப்படும் மக்களிடம் இத்தகைய போக்கை நம்மால் காண முடிவதில்லை.

## 4.24 பாடல் குறிப்புகள்:

சங்க இலக்கியம் தொகுக்கப்படுகின்ற காலத்தில் பாடலின் முன்னர் சில குறிப்புகள் இடம் பெறுகின்றன. அவற்றில் ஆசிரியர் பெயர், பாடப்பட்டவர் பெயர், திணை, துறை, புலவர் பெற்ற பரிசில், எதற்காகப் பாடல் பாடப்பட்டது முதலியன குறிப்பிடத்தகுந்தனவாகும்.

குறிஞ்சிப்பாட்டினைக் கபிலர் பாடியுள்ளார். அப்பாடலை ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழை அறிவுறுத்த பாடியதாக ஒரு குறிப்பு உள்ளது.

"சங்கப் பெருஞ்சான்றோர் கபிலர், ஆரியவரசன் பிரகதத்தனுக்குத் தமிழின் மேன்மையை அறிவுறுத்த விரும்பினார்; விரும்பியவர் அவனுகெனத் தாமே குறிஞ்சிப்பாட்டு ஒன்று இயற்றினார். 'ஆரியவரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது' எனக் குறிஞ்சிப் பாட்டுக்குத் துறைக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது"[54] எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு இயற்றப்படும் குறிப்பினைப் படித்துவிட்டு குறிஞ்சிப்பாட்டிற்குள் நுழைந்தால் அவ்வரசன் குறித்த எவ்விதக் குறிப்புகளும் இடம்பெறவில்லை. இந்த குறிப்பின் பயன் என்ன? இக்குறிப்புகள் சங்க இலக்கிய வாசிப்பை மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதோடு, பிறமொழியாளர்களுக்கு இலக்கியம் குறித்த நம்பகத்தன்மை போகின்றது. இதே போன்றொரு கருத்தை சென்னைப் பல்கலைக்கழக ஆய்வாளர். சு.சுஜா முன்வைக்கிறார்.

"ஒரு பாடலைப் பாடியவரும் பாடப்பட்டவருமே பின் தொடரும் பாடலுக்கும் உரியவர்களாயின் 'அவனை அவர் பாடியது' என்ற குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பினைச் சுவடியைப் பெயர்த்து எழுதியவரின் சுருக்கக் குறிப்பாகக் கொள்ளலாம். எனினும் 'சேரமான் கோக்கோதை மார்பனைப் பொய்கையார் பாடியது' (புறம்.48), 'சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடியது' (புறம்.66) என்று பாடியவரையும் பாடப்பட்டவரையும் குறிக்கும் இக்குறிப்புத் தகவலாக) செய்தியாக அமைகின்றன"[55] என்று கூறும் ஆய்வாளர். புறம் - 59, புறம் - 197, புறம் - 387, என்று இருபத்தொன்று பாடல்களைக் குறிப்பிட்டு, சில வினாக்களைத் தொடுத்து, அதற்கான சான்றினையும் எடுத்துக் காட்டுகிறார்.

“ - இந்த மூன்றாம் நபர் எந்த அடிப்படையில்
இக்குறிப்புகளை அக்குறிப்பிட்ட பாடல்களுக்கு வழங்கினான்?
- அவருக்கு ஆதாரமாக விளங்கியவை எவை?
- அவர், பாடியவர் – பாடப்பட்டவர் காலத்திற்கு உடன் காலத்தவரா?

**சான்று** 1 : புறநானூற்றின் 80 ஆம் பாடலுக்குச் சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி பாட்டுடைத் தலைவனாகக் குறிப்புத் தொடர் மூலம் சுட்டப்படுகின்றான்.

முக்காவனாட்டு ஆமூர் மல்லனுடன் ஒருவர் மற்போர் செய்வது இப்பாடலில் சுட்டப்பட்டுள்ளது. பாடலில் சுட்டப்படுபவனின் வீரம் குறிப்புத்தொடரின் மூலம் சோழனுக்குரியதாகக் கூறப்படுகின்றது. உலோச்சனாரும் ஒரு உத்தனாரும் பாடிய 274, 275 ஆம் பாடல்களிலும் மற்போர் நுணுக்க முறைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் இப்பாடல்களில் பாடப்பட்டவர் சிறப்புப்படுத்தப்படவில்லை.”[56]

என்று கூறும் சுஜா, தொகுப்பு என்பது பல குழப்பங்கள் நிறைந்ததாக குறிப்பிடுகின்றார். மேலும் புறநானூறு பிற்காலத்திய இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலையின் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது என்ற கருத்தும் உள்ளது. எனவே தொகுப்புப்பணியின் போது குறிப்பிடப்பட்ட குறிப்புகள் சங்க இலக்கிய படிப்பை எளிமைப் படுத்தும் அதே வேளையில் அதன் உண்மைத்தன்மையை படிப்பாளன் அறிந்துகொள்ளாமல் இருப்பதற்கும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றது என்கிறார். காரணம் குதிரைக்கு சேணம் கட்டுதல் போல ஒரே நோக்கில் குறிப்புகள் கூறப்பட்டுள்ள வட்டத்திற்குள் வாசகன் நின்றுவிடும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது.

### 4.25 சங்க இலக்கிய பதிப்புகள்:

சங்க இலக்கியங்களின்வழி தமிழர் தொன்மையை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் பதிப்பாசிரியர்கள். அந்த சான்றோர்கள் மிகுந்த சிரமத்திற்கு இடையே அவற்றைப் பதிப்பிக்கவில்லை எனில் இத்தனை விழிப்புணர்வு, வரலாற்று மீட்டுருவாக்கம் போன்றன நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் என்றென்றும் போற்றுதலுக்குரியவர்கள். இருப்பினும் அப்படைப்புக்குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்போது அவர்களும் அதற்குள் தவிர்க்க முடியாதவர்களாக மாறுகிறார்கள்.

### 4.26 சமயம் சார்ந்த அணுகுமுறை:

பதிப்பில் ஈடுபட்ட பெரியவர்கள் நடுவுநிலையோடு செயல்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும் சிலர் அவர்கள் சார்ந்திருக்கும் சமயம் சார்ந்த அணுகுமுறையோடு நடந்துகொண்டுள்ளனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும். மொழிவுணர்வைத்தாண்டி சமய உணர்வு இவர்களிடம் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

“பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை, நமது நூல்மரபு சமயநூல் மரபாகவே பெரிதும் அறிந்து கொள்ளப்பட்டிருந்தது. சமயம் சாராத புலமை மரபு என்பது தமிழ்ச் சூழலில் செயல்பட்டதா? என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்கலாம். திண்ணைப் பள்ளிக்கூட மரபில் எண் - எழுத்துப் பயிற்சிக்குப் பின் புராணங்கள் எனும் பெயரில் மதம் தொடர்பான செய்திகளே போதிக்கப்பட்டன. ‘தமிழே சைவம், சைவமே தமிழ்’ எனும் உரையாடல் நாம் அறிந்த ஒன்றுதானே! சங்க இலக்கியப் பிரதிகள் அனைத்தும் ‘புறச்சமயம்’ பற்றிப் பேசுவன. இதனைப் பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டு சைவ இலக்கணக்காரர்களான இலக்கணக் கொத்து சாமிநாத தேசிகர் ஆகிய பிறர் எதிர்கொண்ட முறைமையை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

எனவே, சங்க இலக்கியப் பிரதி அச்சுக்கு வருதல் என்பது சமய மரபில் இருந்த தமிழ் இலக்கியம் சமயம் சாரா மரபையும் உள்ளடக்கியதாக அறியப்பட்டது. இதனைச் சமயம் சார்ந்த புலமை உலகம் ஏற்றுக் கொண்டதாகக் கூறமுடியாது. தம்மிடம் சங்க இலக்கியச் சுவடிகள் அனைத்தும் இருந்தும், அதில் திருமுருகாற்றுப்படையை மட்டும் பதிப்பித்த ஆறுமுக நாவலர் செயல்பாட்டை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். அவரது பிற்கால நூல்களின் பின்னட்டை விளம்பரங்களில் சங்க நூல்கள் தொடர்பான அச்சிடல் குறித்துக் கூறியுள்ளார். ஆனால் வெளிவந்ததாக அறிய முடியவில்லை”[57] என்று வீ.அரசு குறிப்பிடுவதிலிருந்து சங்க இலக்கிய பதிப்புக் காலச் சூழலையும் ஆறுமுக நாவலரிடம் இருந்த சமயப் பற்றினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

பேராசிரியர் வீ.அரசு குறிப்பிட்டது போன்றதொரு கருத்தினை சாரதா நம்பி ஆருரன் கூறும் மேற்கோளை மிக விரிவாக பெருமாள் முருகன் விவரிக்கிறார்.

“புறநானூறு 34 ஆம் பாடலில் ‘குரவர்த் தப்பிய கொடுமையோக்கும்’ என்று பாடம் உள்ள அடியைப் ‘பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்’ என மாற்றி உ.வே.சா பதிப்பித்துள்ளார் என்பது அந்தக் குற்றச்சாட்டு. இது தொடர்பாகச் செந்தமிழ்ச் செல்வி இதழில் வந்த கட்டுரையை மேற்கோள் காட்டு சாரதா நம்பி ஆருரன் இவ்வாறு எழுதுகின்றார் :

‘சங்க இலக்கியங்கியங்களை அரும்பெரும் முயற்சியுடன், அயரா உழைப்புடன் ஏட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுத்தளித்தவர் உ.வே.சா. ஆயினும் ஆங்காங்கு வடமொழிப் பற்றுடனும் இனப் பற்றுடனும் செயல்பட்டதையே இச்சான்றுகள் உணர்த்துகின்றன.

எட்டுத்தொகை நூல்களில் ஆறு, பத்துப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர் உ.வே.சா. ஏறத்தாழ 70க்கும் மேற்பட்ட இலக்கியங்கள் அவர் பதிப்பித்தவை. அவர் கொண்ட பாடம் தவறு

என்று மூலபாட ஆய்வுமுறை மூலம் வையாபுரிப்பிள்ளை போன்றோர் நிறுவியுள்ளனர். ஆனால் எங்குமே அவர் பாடத்தை மாற்றிவிட்டதாக யாராலும் எந்தச் சான்றும் காட்ட இயலவில்லை.

குரவர் என்பது பார்ப்பார் என மாற்றப்பட்டதா? பார்ப்பார் என்பது குரவர் என்று மாற்றப்பட்டதா? என்பது ஆய்வுக்குரியது. திருக்குறள் பதிப்பில் (ஆறுமுக நாவலர்) 110ஆவது குறளின் பரிமேலழகர் உரைமூலத்தில் 'பார்ப்பார்த் தாதலும்' என்றே வருகிறது. அடிக்குறிப்பில் புறநானூற்றுப் பாடலைக் காட்டும்போது 'குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்' என ஆறுமுக நாவலர் தந்துள்ளார். (ப.34) குரவர் என்னும பாடம் வேறு எங்குமே தரப்படவில்லை. வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு, மர்ரே ராஜம் பதிப்பு ஆகியவற்றில் பாடபேதமாகக்கூடக் குரவர் வரவில்லை. இப்புறநானூற்றுப் பாடல் புறத்திரட்டில் உள்ளது. அதிலும் பார்ப்பார்தான். குரவர் இல்லை. வ.உ.சி. பதிப்பித்த தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையில் இப்பாடல் மேற்கோளாக வருகிறது. அதிலும் பார்ப்பார் என்றுதான் உள்ளது.

குரவர் என்று பாடம் கொண்டவர் ஆறுமுக நாவலரை அடுத்து ஔவை துரைசாமிப்பிள்ளைதான். அவரும்கூட விளக்கவுரையில் 'குரவர்த் தப்பிய என்பது பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்குமெனத் திருத்தப்பட்டிருக்கிறது. இத்திருத்தம் பரிமேலழகர் காலத்தையே செய்யப்பட்டுள்ளதென்பது திருக்குறளுரையாற் காணப்படுகிறது' (ப.98) என்று எழுதியுள்ளார். ஆகவே குரவர் என்னும் பாடம் இருந்ததா என்பதே ஐயத்திற்குரியதாகிவிடுகின்றது. உ.வே.சா. மாற்றினார் என்று எவ்விதம் சொல்வது? இனப்பற்றை அம்பலப்படுத்த இந்த இட்டுக்கட்டிய சான்று போதாது என்பது வெளிப்படை."[58]

என கூறுவதிலிருந்து பதிப்பாளர்களுக்குள் இருந்த வர்க்க ரீதியான காழ்ப்புணர்வை அறிய முடிகின்றது. மேலும் இலக்கியத்தில் இருக்கும் தரவுகளைக்கூட மாற்றியமைக்க வாய்ப்புண்டு என்பதை இது காட்டுகின்றது. மேலோட்டமாக பார்த்தால் அவர்களது மொழி உணர்வு வெளிப்படும். ஆனால் நுணுகி ஆராயும் ஆய்வாளனுக்கு அவர்தம் உண்மைத்தன்மை ஓரளவுக்கேனும் வெளிபட்டுவிடும் என்பது மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.27 சங்க இலக்கிய பதிப்பு முறைகள்:

சங்க இலக்கியப் பதிப்பு முறைகளில் பல நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. அதற்குப் பதிப்பாளர்கள் தகுந்த காரணங்களையும் கொண்டுள்ளனர்.

ச. வையாபுரிப்பிள்ளை - புலவர் அகர வரிசைப் பதிப்பு
உ.வே.சாமிநாதையர் - பழம் உரை முறையிலான உரைப் பதிப்பு
பொ.வே.சோமசுந்தரனார், - பாடத்திட்ட நோக்கு உரைகள்

அதைப்போலவே குறுந்தொகை நூலை முதலில் பதிப்பித்த சௌரிப்பெருமாள் அரங்கன் குறித்த கருத்தையும் பெருமாள் முருகன் முன்வைக்கிறார்.

“சங்க இலக்கிய நூல்களுள் செறிவான கவிதைகளைக் கொண்ட நூலாகக் கருதப்படுவது குறுந்தொகை. அதை முதலில் பதிப்பித்தவர் திருமாளிகை சௌரிப்பெருமாள் அரங்கன் ஆவார். 1915இல் அவரே உரையெழுதி இந்நூலைப் பதிப்பித்தார். இடக்கர் சொல் என்று அவர் கருதிய சொற்களை நீக்கிவிட்டு வேறு சொற்களை அவராகவே போட்டு நிரப்பிப் பல பாடல்களில் மாற்றங்களைச் செய்துள்ளார். வெள்ளி வீதியாரின் பாடலான ‘கன்றும் உண்ணாது கலத்தினும் படாது’ என்பதன் கடைசி அடி’ திதலை அல்குல் என்மாமைக் கவினே’ என்று முடியும். இதனைத் ‘திதலை ஆகம்’ என்பதற்குச் சுணங்கு நிறைந்த மார்பு’ என்று பொருளும் எழுதியுள்ளார். ‘அல்குல்’ வரும் இடங்களை எல்லாம் இப்படி அவர் மாற்றிவிட்டார். ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ என்னும் நம் இலக்கண மரபைக்கூட அவர் புறந்தள்ளியுள்ளார்”[59] என்று கூறும் பெருமாள் முருகன் அவர்கள், சங்க இலக்கியப் பார்வை குறித்தும் பதிவு செய்கிறார்.

“சங்க இலக்கியம் தமிழர் பெருமை பேசுவதற்கானது என்றும் ஒற்றைத் தன்மையில் கட்டமைக்கபட்ட காரணத்தால் பல்நோக்கு ஆய்வுகள் வளராமல் போயின’; ‘தமிழ்ப்பண்பாடு என்பதை வலியுறுத்தி அதற்குள் சங்கப் பாடல்கள் அனைத்தையும் போட்டு அடைத்துவிடும் வேலையைப் பாடத்திட்டங்கள் செய்கின்றன”[60] என்று சங்க இலக்கிய எல்லையை சுருக்குவதாக குறிப்பிடுகின்றார். மொழி ஆய்வாளர்களுக்கு இத்தகைய நெருக்கடி ஏற்படுமானால் போலி முடிவுகளும், வெற்று ஆய்வுகளும் மட்டும்தான் எஞ்சும். இதனால் தமிழில் ஆய்வுகள் சர்வதேச அளவில் நம்பகத்தன்மையற்றதாக அமைந்துவிட வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே உண்மையாக உள்ளவற்றை நீக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. படைப்பு படைப்பாளன் கையிலிருந்து வெளியே வந்துவிட்டால் அது சமுதாயத்தின் சொத்தாகிறது. அதுவும் சங்க இலக்கியம் போன்றதொரு பிரதி அடையாளமாக திகழும் நிலையில் இத்தகைய மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு சான்றுதான் இதேபோல தனக்குப்பிடிக்காத பல கருத்துக்களை இவர்கள் மாற்றியிருக்கவும் கூடும்.

### 4.28 இதழ்களும் சங்க இலக்கியப் பதிப்புகளும்:

சங்க இலக்கிய வாசிப்பிற்கு இதழ்கள் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துள்ளன. அச்சு இயந்திரம் வருகைக்குப் பிறகு கருத்துப் பரவலாக்கம் ஏற்படத்தொடங்கியது. அதில் இதழ்களுக்கு முதன்மையான இடமுண்டு. இதழ்களைச் சிலர் இலாப நோக்கத்தோடு வெளியிட்ட நிலையில், சில சமய நிறுவனங்களும், சமயம் சாராத நிறுவனங்களும் கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்தும் களமாகக் கொண்டன. சங்க இலக்கியத் தொடக்க காலப் பதிப்பு காலத்தில் செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், சித்தாந்த தீபிகை, வாழியன் இதழ்கள் சங்க இலக்கிய பன்முக வாசிப்பிற்கு இடம் கொடுத்தன.

## 4.29 பதிப்பு காலத்தின் சூழல்:

சங்க இலக்கியமானது பதிப்பித்த காலம் சமஸ்கிரும் பல நிலைகளில் நன்கு வேரூன்றி நின்ற காலமாகும். இருப்பினும் சமஸ்கிருதம் முழுமையாக வெளிப்படாமல் தமிழோடு கலந்து பேசப்பட்டது. இக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலில் தமிழ் மொழியை இகழ்ந்து பேசுகின்ற அளவிற்கு இங்கு நிலைமை இருந்தது, இதனை, கா. அப்பாதுரைப்பிள்ளையின் கூற்று வழி உணர முடியும்.

“இந்தியாவிலேயே சமஸ்கிருத ஆதிக்கவாதிகளின் தலைவா் என்று, இலக்கணக்கொத்து ஆசிரியரான சாமிநாத தேசிகரைக் கூறலாம். தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொதுவான எழுத்துக்களைச் சமஸ்கிருத எழுத்துக்கள் என்று அவா் முடிவுசெய்தாா். தமிழச் சிறப்பு எழுத்துக்களான ற ன ழ எ ஒ என்ற ஐந்துமே தமிழ் எழுத்துக்கள் என்று கொண்டாா். ‘ஐந்தெழுத்தால் ஒருபாடை’ எப்படி தனிமொழி ஆகும்? என்று வீறாப்புடன் அவா் வினவினாா், தமிழைப் பழித்து அவா் தமிழிலேயே எழுதத் துணிந்தாா்”[61] என்று குறிப்பிடுவதிலிருந்து பதிப்பு காலச் சூழலை அறிந்துகொள்ள முடிகின்றது.

## 4.30 உ.வே.சா பெற்ற பத்துப்பாட்டுச் சுவடிகள் விபரம்:

உ.வே.சாமிநாதையா் பத்துப்பாட்டினைப் பதிப்பிப்பதற்காக தேடி அலைந்தபோது கீழ்க்காணும் இடங்கள், நபா்களிடமிருந்தே சுவடிகளைப் பெற்றுள்ளாா். இவ்விடங்கள் சமய மடங்களாகவும் மனிதா்கள் சமயங்களைப் பின்பற்றுபவா்களாகவும் இருந்துள்ளனா். இது மிகவும் கவனத்தில்கொள்ள வேண்டியது ஆகும். சமய மடங்கள் மற்றும் மனிதா்கள் சுவடிகளில் இடைச்செறுகலை, நீக்கலை செய்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

1. திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
2. வேலூா் ம-ள-ள-ஸ்ரீ குமாரசாமி ஐயா்
3. திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிகா்
4. திருநெல்வேலி ம-ள-ள-ஸ்ரீ கவிராஜ நெல்லையப்ப பிள்ளை
5. கவிராஜ ஈசுவர மூா்த்தி பிள்ளை
6. திருப்பாற்கடனாத கவிராயா்
7. தேவா்பிரான் கவிராயரவா்கள்
8. சிவன் பிள்ளை
9. தருமபுர ஆதீன மடத்து பிரதி
10. ஸ்ரீ.வை.விசுவநாத சாஸ்திரிகள்
11. ஸ்ரீ.வி.கனகசபை பிள்ளை

இவா்களில் பெரும்பாலோனோா் சைவா்களாகவும் வைணவா்களாகவும் இருந்துள்ளனா் என்பது இவா்தம் பெயா்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடியும்.

### 4.31 சங்க இலக்கிய நூற்கள் பதிப்பு:

சங்க இலக்கியம் ஒன்றுதான். ஆனால் அவை பின்வரும் எண்ணிக்கையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

நற்றிணை – 17
குறுந்தொகை – 29
ஐங்குறுநூறு – 17
பதிற்றுப்பத்து – 11
பரிபாடல் - 14
கலித்தொகை – 24
அகநானூறு - 17
புறநானூறு - 24
திருமுருகாற்றுப்படை – 52
பொருநராற்றுப்படை – 5
பெரும்பாணாற்றுப்படை – 5
சிறுபாணாற்றுப்படை – 7
முருகாற்றுப்படை – 10
மதுரைக்காஞ்சி – 3
நெடுநல்வாடை – 5
குறிஞ்சிப்பாட்டு – 5
பட்டினப்பாலை – 6
மலைபடுகடாம் - 4
பத்துப்பாட்டு முழுவதும் – 17
எட்டுத்தொகை – 1

போன்ற பதிப்புகள் வெளிவந்துள்ளன. இதன் வாயிலாக சங்க இலக்கியம் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்திய தாக்கத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.32 சமகாலப் பதிவுகளும் சங்க இலக்கியமும்:

சங்க இலக்கியத்தில் காணப்படும் கருத்துகளைத் தற்போது இருக்கும் தமிழக வாழ்வியலோடு ஒப்புமைப்படுத்தி பார்க்க வேண்டிய தேவை உள்ளது. காரணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்ட ஒரு மொழி இன்றளவும் வழக்கில் இருந்து வருகின்றது. அந்த மொழியைப் பேசும் மக்களை எப்படி அடையாளப்படுத்திட முடியுமெனில் அவர்கள் தமிழைத் தாய்மொழியாக பேசுவது மற்றும் அவர்களின் பண்பாட்டுக் கூறுகளான பிறப்பு முதலான இறப்பு வரையிலான சடங்குகள், குடும்ப வாழ்க்கை முறை, விழாக்கள் முதலியனவனவாகும்.

### 4.33 இந்து – சைவ, வைணவம்:

இன்று தமிழர்களாக அறியப்படுபவர்கள் இந்து என்று அடையாளப் படுத்தப்படுகிறார்கள். தமிழர்கள், இந்து மதத்தின் மிகப்பெரிய மையமான சைவ, வைணவ சமயங்களுக்குள்

அடக்கப்படுகின்றனர். எதன்வழி அவர்கள் அவ்வாறு சேர்க்கப்பட்டார்கள் எனில் சமய நூற்கள், சமயம் தொடர்பான கதைகளின் வழி அதனை நாம் அறியமுடிகிறது. சிவனின் மகனாக முருகனும், முருகனுக்குத் தாயாக சக்தியும், அந்த சக்தியின் வடிவமாக மாரியம்மன், காளியம்மன் உள்ளிட்ட சிறு தெய்வங்களைக் குறிப்பதும், முருகனின் மாமனாக திருமால் அல்லது கிருஷ்ணன், விஷ்ணுவைக் கூறுவதுமாக இக்கதைகள் நீள்கின்றன. மேற்கூறிய கதைகள் உண்மையானதா? என நாம் கள ஆய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியும்.

தமிழகத்தில் தடுக்கி விழுந்தால் மாரியம்மன் கோவில்கள் காணப்படுகின்றன. ஊருக்கு வெளியே காளியம்மன், மாரியம்மன் போன்ற பெண் தெய்வங்கள் காண முடியும். இக்கோவில்கள் எவற்றிலும் சிவனோ? திருமாலோ? இடம் பெறவில்லை கோவிலுக்குள்தான் இந்த நிலை, அத்தெய்வங்களை வழிபடும் வீடுகளுக்குள்ளாவது சிவனும், விஷ்ணுவும் இருக்கிறார்களா எனில் அதுவும் இல்லை.

சரி இவர்கள் புறச்சமயங்கள் என்று சொல்லப்படுகின்ற சமண, பௌத்த சமய கடவுள்களின் சின்னங்கள் இருக்கின்றனவா? எனில் அவைகளும் இல்லை. தமிழகத்தில் வாழும் தமிழைத் தாய்மொழி பேசும் மக்கள் மிகப் பெரும்பான்மையாக வழிபடுவது, தன் இல்லத்திலும் உள்ளத்திலும் பெண் தெய்வங்களையும், பண்டைய நடுகல் வழிபாட்டு முறையின் முன்னோடியான முன்னோர்களையுமே என்று கருத வாய்ப்புள்ளது.

இம்மக்களின் வேண்டுதல்கள். நிவர்த்திக்கடன்கள் அனைத்தும் இக்கடவுள்களிடம் காணப்படுகின்றன. சங்க காலத்தில் காணப்படும் சமண, பௌத்த, சைவ, வைணவ சமயங்களைக் கடந்த மிக மிக நுட்பமான, எதார்த்தமான வழிபாட்டு முறைமையாக இதனைக் காண முடிகின்றது. இதில் ஆச்சரியம் என்னவெனில் சங்க இலக்கியங்கள் தொடங்கி சிற்றிலக்கியங்கள்வரை மிக சிலாகித்து கூறும் பெருந்தெய்வங்கள் எவையும் இன்று வரை தமிழ்த் தாய்மொழியாளர்களின் இல்லங்களில் சென்று சேரவில்லை.

ஆனால் இம்மக்கள் சிவன், திருமால், ஆலயங்கள் என்று எல்லா திருத்தலங்களும் செல்கிறார்கள். அதனை மறுத்துவிட முடியாது. ஆனால் ஏனோ இம்மக்கள் இன்றளவும் தன்னிலையிலிருந்து அச்சமயங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று தமிழ்த் தாய்மொழியாளர்கள் பின்பற்றும் இம்முறையானது உலக பொதுப் பண்பாடு, சங்க இலக்கிய பண்பாடு என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இவர்களின் வாழ்க்கை முறையிலிருந்து பார்க்கும்போது மேற்கூறிய சமயங்கள் அனைத்துமே புறச்சமயங்களாக இருக்க வேண்டும்.

## 4.34 தாய்வழிச் சமூகம்:

தமிழ்ச் சமூகம் தாய்வழிச் சமூகம் என்ற கருத்து நிலை உள்ளது. உளவியல் அடிப்படையில் நோக்கினால்கூட தமிழ் தாய்மொழியாகப் பேசும் குடும்பங்களின் குடும்ப அட்டையில் தலைவர் என்ற இடத்தில் ஆணின் பெயர் இருந்தாலும், பெண்தான் பெரும்பாலான குடும்பங்களை வழி நடத்துகின்றனர் என்ற கருத்து நிலவுகிறது. இங்கு பெண்ணாதிக்கச் சிந்தனையை விடுத்துப் பார்த்தோம் எனில் இங்கு மரபார்ந்த அந்தத் தொடர்ச்சி இழையோடுவதை உணரமுடிகிறது. தமிழ்ச் சமூகத்தில் பெண் சுதந்திரம், பெண்ணுரிமை என்கின்ற எந்த சொல்லாடலும் தேவையற்றதென்பர். எக்காலத்திலும் இவர்கள் பிறரை மதித்து வாழ்வதையே விரும்பியுள்ளனர். இதனை இன்றளவும் பார்க்க முடியும். தாய்மொழி, தாய்மண். இவை எவையும் வெற்றுச் சொற்கள் அல்ல. இவை உயிரோடு, உணர்வோடு கலந்தவையாகும்.

## 4.35 சடங்குகள் பின்பற்றப்படுதல்:

சங்க இலக்கியத்தில் கூறப்படும் சடங்குகள் பெருமளவு இன்றும் தமிழ்நாட்டில் பின்பற்றப்படுகின்றன. சடங்குகளில் நெல் பயன்படுத்துதல். வெறியாட்டு. கொற்றவை வழிபாடு, நடுகல் வழிபாட்டு முறையின் நீட்சியான சிறு தெய்வ வழிபாடு, பிணத்தைப் புதைக்கும் வழக்கம், கிராமத்தில் ‘மூப்பன்’ என்ற பெயரில் குழுவின் தலைவர் வழிகாட்டுதல், பார்ப்பார் அற்ற திருமணச் சடங்குகள், குறி கேட்கும் வழக்கம், பறவைகள், விலங்குகளின் அறிவியல் செயல்பாட்டை அறிதல், அதாவது பறவை, விலங்குகளின் மொழியறிதலின் வழியான சகுனம் பார்த்தல் போன்றன இன்னும் தமிழக மக்களால் பின்பற்றப்படுகின்றன. ஓர் இனம் இத்தனை நூற்றாண்டுகளாக இவற்றைத் தொடர்ந்து பின்பற்றுவதும் அதற்கு மொழி உற்றத்துணையாக இருப்பதும் வியப்பிலும் வியப்பு. இதற்குக் காரணம் இயற்கையோடு இணைந்து தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். இயற்கையிடமிருந்து பாடம் கற்றுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## 4.36 விழாக்கள்:

பண்டைய காலத்தில் தமிழர்களின் அடையாளமான நீர் வழிபாடு, சூரியன் வழிபாடு, காளை வழிபாடு, பொங்கல் விழா, அதன் காரணமாக வீரத்தை வெளிப்படுத்தும் போட்டிகள் நடத்துவது போன்றன இன்றும் கிராமங்களில் நிகழ்த்தப்படுகின்றன. இங்கு வீரம் என்பது ஆணுக்கு உரியது மட்டுமன்று, அது இருவருக்கும் உரியது என்றனர். ஆணுக்கு நிகரான உழைப்பை ஆணைவிட கூடுதலான உழைப்பை பெண் கொடுக்கிறாள். ‘மாடுபிடித்தல் விழா’ இன்றளவும் நடத்தப்படுகின்றது.

‘முயல்வேட்டை’ என்ற ஒன்று தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களில் சித்திரை மாதங்களில் நடைபெறுகின்றது. இந்நிகழ்ச்சியையும் சங்க இலக்கிய வெட்சி முதலான பாதீடு ஈறாக உள்ள திணைகளையும் ஒப்பிட்டு பார்த்தோம் எனில் இரண்டும் ஒன்று போல இருப்பதைக் காணமுடிகிறது. போருக்கு அழைப்பு விடுப்பது போல வீட்டுக்கு ஒருவர் வேல் கம்புகளுடன் வருதல், வேட்டைக்குச் செல்பவர்கள் விரதம் இருந்து வீட்டினைத் தூய்மை செய்து ஆயுதத்தை படைத்து, அதற்கு பூமாலைகள் சூட்டி வீட்டில் இருக்கும் ஆண்கள் வெளியில் வீரத்தோடு வருவர். வருபவர்களை உற்காசப்படுத்த பாட்டு, நடனம், இசை, பெண்களின் மிகப் பழைய இசை வடிவமாக குலவைப் பாடல், இவற்றோடு சேர்ந்து ஊரின் எல்லைவரை சென்று அங்கு பெண்கள் தம் ஆடவரை வாழ்த்தி வழி அனுப்புவர்.

போரில் தம் மண் மானம் காக்க போரிட்டு வெற்றி பெற்ற வீரர்கள் கிடைத்தப் பொருட்களை இசை, நடனத்தோடு தம் ஊருக்குள் நுழைவது போல் முயல்வேட்டை ஆடி வென்ற வீரர்களும் வருகின்றனர். கிடைத்த பொருட்களை வீரர்களுக்குப் பாதீடு செய்வது போல, முயலும் வேட்டைக்கு வந்தவர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகின்றது.

அங்ஙனம் முயல்வேட்டை நடந்த நிகழ்வினை புறநானூற்றுப் பாடல்,

**“படலை முன்றிற் சிறு திணையுணங்கல்**
**புறவு மிதலுமறவு முண்கெனப்**
**பெய்தற் செல்லின்று பொழுதேயதனால்**
**முயல் சுட்டவாயினும் தருவேம் புகுதக்**
**தீங் கிருந்தீமோ முதுவாய்ப்பாண”**[62]

என்று கூறுகிறது. அவ்வாறு முயல்வேட்டை ஆடியது குறித்து வெ.பெருமாள்சாமி,

“உடும்பைப் போலவே முயலும் ஒரு சிறிய விலங்குதான் மக்கள் இன்றும் அதனை விரும்பி வேட்டையாடுகின்றனர். பண்டைய நாள் போலவே இன்றும் உணவுக்காகவே முயல்வேட்டையாடப்படுகிறது. முயல் சாதுவான, ஆபத்தில்லாத விலங்கு. அதை வேட்டையாடுவதும் எளிது. எனவே எயினர் முயலை மிகுதியாக வேட்டையாடினர். வேட்டுவர் குடிமையிலும் முயற்கறி முக்கிய உணவாக இருந்தது. அங்கு எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் முயற்கறி உணவு கிடைத்தது. வேட்டுவர் முயல் வேட்டையாடியது குறித்துச் சங்க இலக்கியங்கள் விரிவாகவே பேசுகின்றன”[63] என்கின்றார். எத்தனைச் சமயங்கள் வந்தாலும், எத்தனை படையெடுப்புகள் வந்தாலும் தமிழர்களின் தொன்மைக் கூறுகள் என்றும் நிலைத்திருக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

### 4.37 தமிழ் இலக்கியப் பிரதிகளுக்கு வெளியே மக்கள் வாழ்வுநிலை:

தமிழ் இலக்கியப் பிரதிகளை வைத்துக்கொண்டு மட்டும் வைத்து நாம் தமிழர் பண்பாட்டை முன்னிறுத்துவோமானால் அது முற்றிலும் தவறானதாக உருவாகும். உண்மையில்

பிரதிகளுக்கும் தமிழ் மக்கள் வாழ்வியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இம்மக்கள் தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் இவற்றை படித்துவிட்டு தமிழ்ப்பேசுபவர்கள் அல்ல. மேலும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் என்றதொரு நூல் இருப்பதுகூட பலருக்குத் தெரியாது. புராண இதிகாசங்கள் பற்றிய கதைகள் தமிழகத்தின் பாமர மக்களுக்கும் அறிமுகமான நிலையில் சங்க இலக்கியத்தைக் கொண்டு சேர்க்காததன் பின்புலம் என்ன? அவர்கள் வைதீக புராணங்களைக் கொண்டு சேர்த்தும் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. அல்லது அது அவ்வெல்லைக்கோடு வரையே நிற்கட்டும் என்று பரப்பப்பட்டதா? என்ற கேள்வி எழுகிறது. எனவே அப்படியான கேடயத்தை உருவாக்க வேண்டிய பின்புலம் என்ன? என ஆராய்ந்தால் இந்த சமய அரசியல் ஆரியப் பண்பாட்டோடு தொடர்பு கொண்டது என்பது புரியும். ஆரிய அல்லது வடமொழிப் பண்பாடும் சமயமும் வேறில்லை. காரணம் வடமொழி மரபு முழுதும் சமயம் சார்ந்த இலக்கிய மரபாக உள்ளது. தமிழிலும் அத்தகைய நிலை உள்ளது. ஆனால் தமிழகத்தில் அத்தகைய நிலை இல்லை. வடநாட்டில் புத்தர் சிலை பலரது வீடுகளில் உள்ளது. சமணரின் படங்கள் கூட உள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் நிலை வேறு. இன்னும் எத்தனை மதங்கள் வந்தாலும் அதனை ஒருபோதும் தமிழர்கள் எதிர்க்க மாட்டார்கள், அவற்றைக் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் உலகின் ஆதி தாய்ப் பண்பாட்டின் மேல் நின்று அதனைப் பின்பற்றுவர். ஒருபோதும் இந்த கட்டுமானம் மாற்றம் அடைய வாய்ப்பில்லை. அங்ஙனம் இச்சமயத்தின் தாக்கம் குறித்து அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் பின்வருமாறு,

"இந்தியச் சமூக வாழ்வில் வலுவான சக்தியாக விளங்கும் மதத்தை "மதம் மக்களுக்கு ஓர் அபின்" என்ற ஒற்றை வரியைக் கூறி எளிதாக ஒதுக்கிவிட்டனர்."[64]

என்று ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். மதம் இந்தியாவில் மிகப் பெரிய சக்தியாக விளங்குகின்றது. இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதுமே இத்தகையச் சூழல் நிலவத்தான் செய்கின்றன. அங்ஙனம் தமிழண்ணல், கால்டுவெல் மற்றும் கே.என்.சிவராச பிள்ளை கருத்துக்களைப் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஏனை இந்திய மொழிகளைப் போலச் சமஸ்கிருதத்தின் தாக்கத்திற்கு உடன்பட்டதும் மிகவும் பண்பட்டதுமான மொழி இந்தியாவிலேயே தமிழ் ஒன்றேயாகும். டாக்டர் கால்டுவெல்லும் பிறரும் கூறுமாறு தென்னிந்தியாவில் ஏனைத் திராவிட மொழிகள் சமஸ்கிருதத் தாக்கம் என்னும் படையெடுப்பிற்கு எதிராக நிற்க முடியாத நிலைகளில் தூயதாக நின்றது. ஆயிரம், அது தமிழர் வாழ்வின் மேற்பகுதி முழுவதிலும் ஓர் அழுத்தமான வண்ணத்தைப் பரப்பிவிடத் தவறவில்லை' என்று கே.என்.சிவராச பிள்ளை கூறுகின்றார். ஆனால் சமயத்துறையில் மட்டுமே இவ்விரண்டும் பிரிக்க இயலாதவாறு பிண்ணிப் பிணைந்து போயின"[65] என்று கூறுகின்றார். இக்கருத்து ஏற்புடையதாகும். அத்தகையதொரு சான்றை ச.கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்கள் வழி உணர முடியும்.

“சமண, பௌத்த, வைணவ, சைவ எழுச்சி காரணமாகத் தென்னிந்தியாவில் நடுகல் வழிபாடு மக்களிடையே சிறிது குறைந்தாலும் அடித்தட்டு மக்களிடையே பெரிய மாற்றம் ஏற்பட்டு விடவில்லை. சமய நம்பிகையுடன் நடுகல் வழிபாட்டையும் அவர் மேற்கொண்டு வருகிறார்கள்.

அய்யப்பன், அய்யனார் வழிபாடு, மதுரை வீரன் வழிபாடு, சங்கிலிக்கறுப்பன் வழிபாடு, பாவாடைராயன் வழிபாடு, முனியப்பன் வழிபாடு ஆகியவை நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடையவை ஆகும்.

கன்னிகா பரமேஸ்வரி, இரேணுகாதேவி ஆகியோர அம்மன்களாகவே மக்கள் வழிபடுகின்றனர். மானிட வடிவில் வாழ்ந்த பதிவிரதையர்களாக இவர்களைக் குறிப்பிட வேண்டும். கண்ணகி என்ற பத்தினிப் பெண்களின் வழிபாடு, சிலம்பில் மட்டுமின்றி நாட்டுப்புறப்பாடலான கோவலன் கதையிலும் இடம் பெறுகின்றன.”[66] என்று விவரிக்கிறார். இதன்வழி வேற்றுச் சமயங்கள் (சமணம், பௌத்தம்) அல்லது அக சமயங்கள் (சைவம், வைணவம்) என்று கூறப்படுகின்ற எந்த சமயமும் பெரியதொரு தாக்கத்தை தமிழர் பண்பாட்டில் ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### 4.38 தொகுப்புரை:

தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்த குறியீடுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், ஓடுகள் இவற்றில் கிடைக்கும் வடமொழிச் சொற்கள், வடமொழி சடங்குகள், நம்பிக்கைகள், பொருட்கள், புராண கருத்துகள், கடவுள் பற்றிய குறிப்புகள் மற்றும் சங்க இலக்கியத் தொகுப்பு மற்றும் பதிப்புகளில் வடமொழிச் சார்புடைய நிகழ்வுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன். சிந்துவெளி நாகரிகத்திற்கு உரிமையானவர்கள் தமிழர்கள் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் சிந்துவெளிப் பகுதிகளில் கிடைக்கும் உருவம் குதிரை அல்ல காளை உருவம் என்பதும் அது தமிழர்களுடையது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. தமிழகத்தில் சமயத்தை வளர்க்கும் நோக்கில் இன்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வந்து மலைகளில் தொடர்ந்து தங்கிய சமணர்கள் ‘பாறைகளில் சில வரிகளில் வெட்டி வைத்தவை பிராமி எழுத்துக்களாக காணப்படுகின்றன.

தமிழ்நாட்டின் புதுக்கோட்டைக்கு வடமேற்கே சித்தனவாசல் எனனும் சிற்றூரில் பாழி ஒன்று உள்ளது. அப்பாழியில் கிறித்து காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து சமண சமய முனிவர்களும் சமணச் சாரணர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். அப்படுக்கையின் விளிம்புப் பகுதியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டள்ளன. அவற்றுள், வடக்கே அசோக மன்னன் கையாண்ட பிராமி எழுத்துக்களில் உள்ள கல்வெட்டு உள்தை அறிந்துகொள்ள முடிகின்றது. செஞ்சிக்கு அடுத்துள்ள திருநாதர் குன்றிலுள்ள கல்வெட்டு பழமையான கல்வெட்டாகும்.

இதனைக் கண்டுபிடித்துப் படியெடுத்து எழுத்துக்களைப் படித்தறிந்து வெளியிட்டவர் கோபிநாதராவ். இக்கல்வெட்டில், சந்திரநந்தி எனும் சமண ஆசிரியர் ஐம்பத்தேழு நாட்கள் உண்ணா நோன்பாகிய சல்லேகணம் இருந்து உயிர்நீர்தாருக்குச் செய்யப்பட்ட நிசீதிகை என்னும் கற்படையினைக் குறிக்கும் நிகழ்வு புலனாகிறது. சங்க இலக்கிய ஆய்வில் இலங்கையில் உருவான இலக்கிய, இலக்கண, பண்பாட்டு மாற்றங்கள் இன்றியமையாத இடம்பெறுகின்றன. இலங்கையில் கிடைத்த கல்வெட்டுகள் பிராகிருதத்தால் ஆனவை. மேலும் வட இந்தியாவிலிருந்து சென்ற வணிகரும், சமண, பௌத்த சங்கத்தாரும் அங்கெல்லாம் பிராகிருத மொழியினை அறிமுகம் செய்தனர். அங்குள்ள மொழிகளில் பிராகிருதம் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது.

இலங்கையின் குகை கல்வெட்டு மொழி தமிழ், பிராகிருதம் ஆகிய மொழிகளின் கலப்பு மொழி போல இருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. சமணர் குகைகளில் காணப்படுகிற பிராமி கல்வெட்டுவழி அறியலாகும் தமிழகம், சமண மயமான தமிழகம் போலத் தெரியும் என்பதனையும் புரிந்துகொள்ள முடிகின்றது. தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் எனச் சுட்டப்பெறும் கல்வெட்டுத்தொகுதி கி.மு.3ம் நூற்றாண்டு முதல் கி.பி.4ம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலப்பிரிவுக்குள்ள, பிராமி எழுத்துருவில் எழுதப்பெற்ற சமணமதக் கொடைகள் சார்ந்த கல்வெட்டுக்களைக் குறிக்கின்றன. இலங்கைக்கான பௌத்தம் தென்னிந்தியா வழியாக – தமிழகம் வழியாக வந்திருத்திருக்கின்றது. எழுத்து முறைமை வளர்ச்சிக்கு சமண முனிவர்களின் செயல்பாடு ஒரு இன்றியமையாத காரணியாக இருந்திருக்கிறது. குறைந்தபட்சம் 2-ம் நூற்றாண்டளவில், கி.பி.4ம் நூற்றாண்டிற்கு முன்னர் சமண மதத்துறவியர் மட்டத்திலும் சமண மதத்தைப் பின்பற்றுகின்ற வணிகர்கள், அவர்களைச் சார்ந்த குழுக்கள் மட்டத்திலும் எழுத்து வழக்கு நிரந்தரமாக வந்துவிட்டதை அறிந்துகொள்ள முடிகிறது. தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்த பண்டைய கால முத்திரைகளில் பிராகிருத, வடபிராமி எழுத்துக்களின் செல்வாக்குக் காணப்பட்டாலும் நாணயங்கள் அனைத்தும் தமிழ்ப்பிராமியில் எழுதப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தில் பிரித்தாணிய ஜெர்மன் ஆய்வுக் குழுவினர் இணைந்து மேற்கொண்ட அகழாய்வின்போது சங்ககாலப் பாண்டியரின் குலச்சின்னமான மீன்பொறித்த நாணயங்களுடன் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ‘பெருமகன்’ என்ற தமிழ்ச் சொல் பிராகிருத வடிவமாகும் என்ற கருத்தையும் விளங்கிக்கொள்ள முடிகிறது.

இலங்கை பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் மல்லஹ, மல்லஸ, மல்லந என வரும் இப்பெயர் நாணயத்தில் தமிழில் மல்லக என எழுதப்பட்டுள்ளமை இன்றமையாத வேறுபாடாக உள்ளது. அத்துடன் நாணயத்தின் பின்புறத்திலும், முன்புறத்திலும் திரிசூலமும் இடம் பெற்றுள்ளது. இச்சின்னம் சங்ககால தமிழக நாணயங்களிலும் காணப்படுகின்றன என்பதனை

அறிய முடிகின்றது. தமிழ்நாட்டில் ஜம்பையில் கிடைத்த அதியமான் பற்றிய கல்வெட்டில் அதியன் என்ற பெயர் அதியந் என எழுதப்பட்டதையும், அதை அதியன் என வாசித்ததையும் அறிய முடிகிறது. ஒரு நாணயத்தில் ரா(ா)சன் என்பது ராஜ என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவமாக இடம்பெற்றுள்ளது இலங்கையில் இரண்டாயிரத்துக்கும் மேலாக பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவை பிராகிருத மொழிச் சாசனங்களாக இருக்கின்றன. பிராமிச் சாசனங்களிற் பிராமணரைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பிராகிருதம் கி.பி.நான்காம் நூற்றாண்டுவரை தென்னாசியா முழுவதிலும் தொடர்பு மொழியாக விளங்கியுள்ளது.

இலங்கையில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் பிராகிருத மொழியினையே சாசன மொழியாகப் பயன்படுத்தினார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. சங்க இலக்கியத்தை மெய்ப்பிக்கும் சான்றுகளில் வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பிடத்தகுந்தனவாகும். பல்யாகசாலை முதுகுருமிப்பெருவழுதிக்கு வேள்வி செய்து அவனிடம் தானமாக வேள்விக்குடி என்ற ஊரைத் தானமாகக் கொடுத்த குறிப்பினை இச்செப்போடு கொண்டுள்ளது. இதன்வழி வடமொழி வேதம் ஓதி வேள்வி இயற்றும் அந்தணர்களின் நிலையையும் அவர்கள் ஆரிய சடங்குகளை தமிழகத்தில் நிகழ்த்தியதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

நடுகற்களைப் பொறுத்தவரை அதில் சமய சார்போ, வேறெந்த வடமொழிக் கூறுகளோ இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை என்பதை அறிய முடிகின்றது. அதன் வழிபாடுகளும் இன்றுவரை பழைய முறையில்தான் நிகழ்த்தப்படுகிறது. தொகுப்பு மரபு என்பது தொல்காப்பியர் காலத்தில் இருந்தே இருந்து வந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது. கி.பி.3 லிருந்து கி.பி.6 வரை தமிழகத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற களப்பிரர்கள் இத்தகைய வேள்விகளையும் பார்ப்பனர்க்கான தானங்களையும் ஒழிக்கின்றனர். மீண்டும் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் களப்பிரரை அழித்து ஆட்சிக்கு வருகிற பாண்டிய மன்னர்கள் வேள்விகளையும் தானங்களையும் நிலமான்யங்களையும் ஊக்குவிக்கின்றனர்.

எட்டுத்தொகை நூல்களிலுள்ள செய்யுட்களுட் பெரும்பாலான களப்பிரர் படையெடுப்புக்கு முந்தியன என்பதில் கருத்து வேறுபாடில்லை. அவை களப்பிரர் ஆட்சிக் காலத்திலேயே தொகுக்கப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் பாண்டிய மற்றும் சேர நாடுகளில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தொகுக்கப்பட்ட காலத்தில் சேரநாடு வடநாட்டு பண்பாட்டுக் கூறுகளை சோழ, பாண்டிய நாடுகளைக்காட்டிலும் மிகுதியும் ஏற்றுக்கொண்ட நாடாகியுள்ளது. பாண்டிநாட்டிலும் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கு இழந்து வைதீக சமயங்கள் மிகுதியாக செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன. சங்க இலக்கியம் தொகுப்பில் சமயச் செல்வாக்கு இருந்திருக்கிறது. ஆனால் அதற்கான சான்றுகள் இல்லை என்பதனை மேற்கண்ட கருத்தின் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது. இயற்கை நெறி காலமாக கருதப்படும் சங்க காலத்தில் உருவான இலக்கியங்களைத் தொகுத்த காலத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள்

வாழ்த்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவர் பாடிய பாடலில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் வைதீக சமயம் சார்ந்தவை. இதன் காரணமாக சங்க இலக்கியத்திற்கு வைதீக அடையாளத்தையும் குறிப்பாக சைவ அடையாளத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடுகின்றன.

சங்க இலக்கியம் தொகுக்கப்படுகின்ற காலத்தில் பாடலின் முன்னர் சில குறிப்புகள் இடம் பெறுகின்றன. குறிஞ்சிப்பாட்டினைக் கபிலர் பாடியுள்ளார். அப்பாடலை ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழை அறிவுறுத்தப் பாடியதாக ஒரு குறிப்பு உள்ளது தொகுப்புப்பணியின் போது குறிப்பிடப்பட்ட குறிப்புகள் சங்க இலக்கிய படிப்பை எளிமைப் படுத்தும் அதேவேளையில் அதன் உண்மைத்தன்மையை படிப்பாளன் அறிந்துகொள்ளாமல் இருப்பதற்கும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றது.

பதிப்பில் ஈடுபட்ட பெரியவர்கள் நடுவுநிலையோடு செயல்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும் சிலர் அவர்கள் சார்ந்திருக்கும் சமயம் சார்ந்த அணுகுமுறையோடு நடந்துகொண்டுள்ளனர். மொழிவுணர்வைத்தாண்டி சமய உணர்வு இவர்களிடம் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியப் பிரதி அச்சுக்கு வருதல் என்பது சமய மரபில் இருந்த தமிழ் இலக்கியம் சமயம் சாராத மரபையும் உள்ளடக்கியதாக அறியப்பட்டது. இதனைச் சமயம் சார்ந்த புலமை உலகம் ஏற்றுக் கொண்டதாகக் கூறமுடியாது. தம்மிடம் சங்க இலக்கியச் சுவடிகள் அனைத்தும் இருந்தும், அதில் திருமுருகாற்றுப்படையை மட்டும் பதிப்பித்த ஆறுமுக நாவலர் செயல்பாட்டை அறிந்துகொள்ள முடிகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. அஸ்கோ பர்போலா, சிந்துவெளி எழுத்து, ப.9
2. அ.இராமசாமி, தொன்மைத் தமிழர் நாகரிக வரலாறு, பக்.5-6
3. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் பக்.43-45
4. ஐராவதம் மகாதேவன், நூ.ஆ.அஸ்கோ பர்போலா (கட்டுரை), சிந்துவெளி எழுத்து, ப.37
5. ஏ.எஸ்.இராமன், தமிழ்நாட்டு ஓவியங்கள், ப.33
6. சி.கோவிந்தராசனார், தமிழெழுத்தின் வரிவடிவம், ப.vii
7. மேலது, ப.viii
8. மேலது., பக்.22-23
9. சு.இராசவேலு, மணற்கேணி, இதழ் 16(ஜனவரி-பிப்ரவரி), ப.19
10. சி.கோவிந்தராசனார், தமிழெழுத்தின் வரி வடிவம், ப.23
11. பெர்ப்பெ ஆராச்சி, மணற்கேணி (இதழ்), ப.25
12. சி.பத்மநாதன், மணற்கேணி, ப.30
13. தெ.பொ.மீ, தமிழ்மொழி வரலாறு, தெ.பொ.மீ களஞ்சியம் 1, ப.59
14. ராஜ் கௌதமன், பதிற்றுப்பத்து ஐங்குறுநூறு சில அவதானிப்புகள், ப.11
15. கா.சிவத்தம்பி, சங்ககால வரலாறும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளும், ப.3
16. மேலது, ப.13
17. மேலது, பக்.29-30

18. மேலது, பக்.34-35
19. மேலது, ப.44
20. கலாநிதி பரமு புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், ப.33
21. மேலது, ப.34
22. மேலது, பக்.43-44
23. மேலது, பக்.54-55
24. மேலது, பக்.45-47
25. மேலது, பக்.49-50
26. மேலது, ப.66
27. மேலது, பக்.70-71
28. மேலது, பக்.90-91
29. சி.பத்மநாதன், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், ப.67
30. மேலது, ப.69
31. மேலது, பக்.72-74
32. மேலது, பக்.80-81
33. மேலது, ப.27
34. மேலது, பக்.34-35
35. ஆ.பத்மாவதி, தொல்லியல் ஆவணங்களில் இசைக்கலை, பக்.29-31
36. ச.கிருஷ்ணமூர்த்தி, நடுகற்கள், ப.7
37. மேலது, ப.21
38. ஐங். பா.417
39. தொல். பொருள். மரபியல். நூற்.97
40. சென்னைப் பல்கலைக் கழக அகராதி. ப.
41. முனைவர். ந.இராணி, சங்க இலக்கியத் தொகுப்பு நெறிமுறைகள், பக். 8-9
42. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி சங்க கால ஆட்சி முறையும் சமூக வாழ்வும், ப.34
43. பொ.வேல்சாமி, பொற்காலங்களும் இருண்ட காலங்களும், ப.33
44. மேலது, ப. 36
45. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.49
46. மா.இராசமாணிக்கனார், சங்க இலக்கிய வரலாறு, ப.36
47. மயிலை சீனி வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், ப.36
48. எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள் முதல் தொகுதி, ப.210
49. மா.இராசமாணிக்கனார், தமிழ் நூல்களின் - புலவர்களின் கால ஆராய்ச்சி, ப.3
50. முனைவர் ந.இராணி, சங்க இலக்கியத் தொகுப்பு நெறிமுறைகள், ப.28
51. கா.கோவிந்தன், ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு, ப.242
52. மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும், செ.வை.சண்முகம், ப.108
53. அ.மாணிக்கம், சங்க இலக்கியங்கள் தொகுதி 3, ப.9
54. வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல், ப.6
55. சு.சுஜா, சங்க இலக்கிய பன்முக வாசிப்பு, ப.38
56. மேலது, பக்.38-39
57. இரா.ஜானகி, (வீ.அரசு, முன்னுரை), சங்க இலக்கியப் பதிப்புரைகள், பக்.5-6
58. பெருமாள் முருகன், பதிப்புகள் மறுபதிப்புகள், பக்.26-27
59. மேலது, ப.32
60. மேலது, ப.21,34
61. கா.அப்பாதுரையார், சரித்திரம் பேசுகிறது, ப.77
62. புறம். பா.319
63. வெ.பெருமாள்சாமி, சங்க காலத் தமிழகத்தின் சமூகநிலை, ப.27
64. பொன்னீலன் (ஆ.சிவசுப்பிரமணியன் அறிமுக உரை), தெற்கிலிருந்து, ப.17
65. தமிழண்ணல், சங்க மரபு, பக்.35-36
66. ச.கிருஷ்ணமூர்த்தி, நடுகற்கள், பக்.26-27

# முடிவுரை

கருத்துக் கருவியான மொழி பிற்காலங்களில் அம்மொழி பேசும் மனிதர்களின் அடையாளமாகிப் போகின்றது. மொழி, 'கருவி' என்ற நிலையிலிருந்து மாற்றம் பெற்று, மனிதர்களின் உணர்வோடு, உயிரோடு கலந்து நிற்கின்றது. தனிச்சிறப்புடன் திகழும் தமிழ் மொழி செவ்வியல் மொழியாக அங்கீகரிக்கபட்டு வளர்ந்து வரும் மொழியாக விளங்குகின்றது. இம்மொழிப் பேசும் மக்களின் தொன்மை, செழுமை, உயர்வு குறித்த கருத்தாக்கங்கள் அண்மைக்கால தொல்லியல் சான்றுகளின் வழி உண்மைத்தன்மை நிறுவப்படுவதோடு, அதன் கால வரையறையும் முன்னோக்கி செல்கிறது. இது உலக பண்பாடு, நாகரிக வரலாற்றில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. மேலும் இந்தியாவின் பழமையான மொழி 'திராவிடம்' என்ற புதிய கட்டுமானம் உருவாகியுள்ள சூழ்நிலையையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ் மொழி ஆய்வுக்கு வடமொழி அறிவு இன்றியமையாததாகிறது, தவிர்க முடியாததாகின்றது. வடமொழி என்ற கலவைக்குள் உள்ள சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் இவை மூன்றும் சங்ககாலத்திய மக்களால் அறியப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. வடமொழியாளர்களும் தமிழ் மொழியை நன்கு அறிந்து, பயன்படுத்தி, பாடல் இயற்றும் புலமை பெற்றிருக்கின்றனர். தமிழர்களும் வடநாடு சென்றுள்ளனர், வடவர்களும் தமிழகம் வந்து தங்கி தமது சமயப் பரப்புதலோடு, வணிகத்திலும் ஈடுபட்டுள்ளனர். வடவர்களின் வருகையால் தமிழ்ப் பண்பாட்டுத்தளத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்றட்டுள்ளன. இதனால் தமிழ், சமயம் என்கிற பந்தல்மேல் படரும்படி செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்பு தமிழர்களிடம் இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, நடுகல் வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள் இருந்துள்ளன. எனினும் வடமொழிப் புராணங்கள் குறிப்பிடும் குறிப்புகளில் இல்லாத 'பல சமயப் பண்பாட்டைக்' கொண்டிருந்துள்ளது. சமச்சீரற்ற வாழ்வியல் கொண்ட சங்ககாலத்தில் சமயமும் சமச்சீரற்ற முறையில் இருந்துள்ளது. அங்ஙனம் சங்ககால இலக்கியவடிவமாகத் திகழ்வது சங்க இலக்கியங்களாகும். இவ்விலக்கியம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலத்தில் உருவாக்கப்பட்டதாகும். இத்தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் கி.பி ஏழாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இறையனார் களவியல் உரையில்தான் முதன்முதல் காணப்படுகின்றது. சங்கம் இருந்தது பற்றி தமிழின் பிற்கால இலக்கண இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. சங்கம் உருவானது தொடர்பான கதைகளும் இருக்கின்றன.

சங்கம் பற்றிய மரபு கருத்தாக்கம் இலக்கிய மற்றும் சமயவாதிகளால் செயற்கையாக பிற்காலங்களில் உருவாக்கப்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது. அதேபோல் சங்கம் என்ற சொல் குறித்த ஆய்வுகளும் சர்ச்சைகளும் நீடிக்கத்தான் செய்கின்றன. அக்காலம் குறித்த வரையறைகளும் இன்றுவரை இறுதி செய்ய முடியததாக உள்ளது. இவ்வாறு சங்ககாலம் பற்றிய பல்வேறு கால வரையறை நிலவினாலும் கி.மு.4 முதல் கி.பி.4 வரை என்று அறிஞர்கள்

பெரும்பாலானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சங்க காலம் என்பது நிலைபெற்ற பின்பு அக்காலத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களை எவ்வாறு அழைப்பது என்பது பெரும் சிக்கலாக இருந்தது. அதோடு இந்த இலக்கியத்தை முன்னிறுத்த வேண்டிய பெரும் தேவை இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக 1940களில்தான் அச்சொல் விரிவாக ஆராயப்பெற்றது. எல்.டபிள்யூ.எல்லீஸ் திராவிடமொழிகள் ஏழு என்று தமது ஆய்வை வெளியிட்டார். அதன்பின்பு கால்டுவெல் ‘திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்ற நூலின் வாயிலாக திராவிடமொழிகள் பதிமூன்று என்று கூறியுள்ளார். அதன் தொடர்ச்சியாக சங்க இலக்கிய பதிப்புப்பணி தொடங்கியது, இவ்விலக்கியத்தின் தொன்மைக் கண்டறியப்பட்டு சமஸ்கிருத்திற்கு இணையாக முன்னிறுத்தப்பட்டது. தமிழை உள்வாங்க வடமொழியும் அதன் கிளைமொழிகளும் தேவைப்பட்டன. மொழியை ஆராய்கையில் அம்மொழி மாந்தர்களும் விவாத பொருளாகின்றனர். அதில் இன்றமையாதது வடமொழி பேசும் ஆரியர்களின் இடம்பெயர்வு. ஆரிய நுழைவு தமிழகத்தில் பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே இருந்துள்ளமை பல ஆய்வாளர்களின் கூற்று மெய்ப்பிக்கின்றது. ஆரியர் வருவதற்கு முன்பிருந்தே தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளன. அவை அண்மைக்கால தொல்லியல் சான்றுகளாலும் நிரூபிக்கப்பட்டு வருகின்றன. தொல் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகம் முதலில் இந்தியாவின் வடபகுதியாக இருந்துள்ளது. அம்மக்கள் பல நூற்றாண்டுகள் கடந்தே தென்பகுதிக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். தமிழர் நிலவியல் இந்திய நாட்டினைத்தாண்டி விரிவடைந்து நிற்கின்றது.

உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களுள் ஒன்றாகத் திகழ்வது ‘சிந்துவெளி நாகரிகம்’. இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாகவே இந்நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் இருந்த உருவங்களும், குறியீடுகளும் பல வருடங்களாக ஆராயப்பட்டுள்ளன. அதில் இரண்டு நிலைப்பாடுகள் விவாதிக்கப்படுகின்றன. ஒன்று அது ஆரிய பண்பாடு, மற்றொன்று அது திராவிடப் பண்பாடு என்பதாகும். சிந்துவெளி காலத்தைத் தொடர்ந்து வேத காலத்தில் இரு நிலப்பகுதிக்கும் தொடர்பு இருந்துள்ளது. வேதத்தில் இடம் பெற்றுள்ள கருத்துகளும் சங்க இலக்கியக் கருத்துகளும் ஓரளவு ஒத்திருக்கின்றன. வேத காலத்தில் வடஇந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் பல நிலைகளில் உறவு இருந்துள்ளது. சங்க காலத்திற்குச் சற்று முன்பும் சங்க காலத்திலும் வட நாட்டாரோடு இருந்த தொடர்பு ஆரிய தொடர்பாக இருந்துள்ளது. மேலும் இதில் பெரும் பங்கு வகிப்பது சமயங்கள். சமயத்தொடர்பின் விளைவாக பிற தொடர்புகள் இயல்பாக ஏற்பட்டிருக்கின்றன அல்லது இயல்பை மாறிய வளமையான நிலப்பகுதியான திராவிடப் பகுதிகளைக் கைப்பற்றுவதும்கூட நோக்கமாக இருந்ததுள்ளன. அது நிறைவேறாதபோது தங்களது வாழிடங்களை நிலைபடுத்திக்கொண்டுச் தமது சமயத்தைப் பின்பற்றுபவர்களாகவும்

சமயங்களைப் போதிப்பவர்களாகவும் வாழ்ந்ததுள்ளனர். மேலும் வடவர்கள் அரசனுக்கு அடுத்த இடத்தை வகித்திருக்கின்றனர். தமிழர் சமயமானது, இயற்கை வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாடு மற்றும், முன்னோர் வழிபாடு கொண்டவையாக இருக்கிறது. வடநாடு, பல சமயங்கள் உருவாக களமாக இருந்திருக்கிறது. இன்றைய இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றக்கூடிய சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்களின் பிறப்பிடமாக வடநாடு திகழ்ந்திருக்கின்றது. அப்பகுதியில் உருவான இச்சமயங்கள் படிப்படியாக தென்னகம் நோக்கி நகர்ந்து தமிழகம் வந்தடைந்தது மட்டுமின்றி, இலங்கையிலும் வேரூன்றி இன்றுவரை நிலைபெற்று இருக்கின்றன. இச்சமயங்கள் இன்றைய தமிழகத்தில் பிரித்து அறியமுடியா சூழலில் இரண்டற கலந்து இருப்பினும், பண்டையத் தமிழ் இலக்கியங்கள் பிரித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பை சுமந்து நிற்கின்றன. தமிழக மற்றும் வடபுல நிலத்தினும் இருந்த உறவுகளில் தொல்-பொருட்களின் கண்டுப்பிடிப்புகள் இந்த உறவுநிலை மனித எண்ணவோட்டங்களுக்கு அப்பால் நிலைப்படுத்தப்படுகின்றன.

தமிழர்கள் பிறநாட்டோடு வணிக உறவு வைத்திருந்தாற்போல் வடநாட்டோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்திருந்தனர். தமிழர்களின் வாணிபத்தின் மீது, வடநாட்டினரின் ஒரு கண் வைத்துள்ளனர். காரணம் தமிழர்கள் விலை உயர்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளனர். வடவர்கள் விலை குறைவான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளனர். எனவே வடநாட்டு மன்னர்கள் அந்நாட்டு வணிகர்களைக் கடிந்துகொள்ளும் அளவிற்கு தமிழகத்தின் வாணிக நிலை இருந்துள்ளது. இதனை சங்க இலக்கியங்களும் வெளிநாட்டார் குறிப்புகளும் உறுதி செய்கின்றன.

தமிழகமும் வடநாடும் கொண்டிருந்த இன்றியமையாததொரு உறவு அரசியல் உறவு ஆகும். தமிழியல் ஆய்வுகளுக்கு உலகியல் அறிவு இன்றியமையாததாகின்றது. தமிழியல் புலம் தமிழக எல்லைகளைக் கடந்து பரந்து விரிந்து இருக்கின்றது. அவ்வகையில் தமிழக நிலப்பகுதியோடு மட்டுமல்லாது தொப்புள்கொடி உறவாகவும் விளங்கும் இலங்கையுடனான வடநாட்டு உறவும் இங்கு நோக்கத்தக்கதாகும். இலங்கையில் சங்க காலத்திற்கு முன்பே பௌத்தம் சென்றிருக்கிறது. அவர்கள் சிங்களம் என்னும் மொழியைப் பேசியிருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்களை இயற்றிய புலவர்களில் பலருக்கு வடமொழி அறிமுகம் இருந்திருக்கின்றது. இதனாலேயே அவர்கள் வடமொழியின் பண்பாட்டுக் கூறுகளைத் தமது பாடல்களில் இயல்பாக குறிப்பிட்டுள்ளனர்.

இலக்கியங்கள் காலத்தைக்காட்டும் கண்ணாடியாக திகழ்கிறது என்கின்றனர். எனினும் இலக்கிங்கள் குறிப்பிடும் கருத்துகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. காரணம் அதில் சில மிகைப்படுத்தப்பட்ட கருத்துகள் இருக்கின்றன. சங்க இலக்கியங்களும் அவ்வாறு பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது கிடைத்துவரும் அகழாய்வு சான்றுகளில் சங்க இலக்கிய கருத்துகள் பெரும்பாண்மையாக இடம்பெற்றுள்ளமையால் சங்க இலக்கியம் குறிப்பிடும்

கருத்துகள் நம்பகத்தன்மையைப் பெற்றுள்ளன. நானூறு பாடல்கள் கொண்ட நற்றிணையில் ஒன்றிரண்டு பாடல்களில் மட்டுமே வடமொழிக் கூறுகள் இடம்பெற்றிருக்கின்றன. அக இலக்கியங்களில் நற்றிணையில்தான் வடமொழிக் கூறுகள் குறைந்து காணப்படுகின்றன. குறுந்தொகையில் வடசொற்கள், வடநாட்டின் இடம் குறித்தப் பதிவுகள், வடநாட்டின் சமயங்கள் குறித்தப் பதிவுகள், வடநாட்டினராகிய பார்ப்பனர் குறித்தக் கருத்துக்கள், வேள்வி இயற்றியது தொடர்பானக் கருத்து நிலைகள், ஆரிய கூத்து தொடர்பானக் கருத்துகள், மேலுலகம்(சொர்க்கம்) மற்றும் அமிழ்தம் தொடர்பான குறிப்புகள், ஆரியர்களின் பெண்பற்றிய மனநிலை, பிணத்தை எரியூட்டும் சடங்கு போன்ற வடமொழிக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதன் வழி அக இலக்கியமான குறுந்தொகை வடமொழிக் கூறுகளை மிகுதியாக தாங்கிய இலக்கியமாக திகழ்கிறது.

ஐங்குறுநூற்றில் வடசொற்களும் வேதம் ஓதியது தொடர்பான குறிப்புகள், அந்தணர்கள் குடுமி வைத்து வாழ்ந்த கருத்து, இந்திரனுக்கு விழா எடுத்த குறிப்புகள், கற்பின் அடையாளமாக விளங்கும் வடமொழி புராணங்கள் போற்றும் அருந்ததி போல் வாழவேண்டும் என பெண்ணை வாழ்த்தும் கருத்துகள் உள்ளிட்ட வடமொழிக் கூறுகள் மட்டுமே காணப்படுகின்றன.

பெண் காமத்திற்காக ஏங்குபவளாக கலித்தொகையின் பாடல் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்களின் ஏனைய பாடல்களில் இத்தகைய நிலையை காணமுடியாது. தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சி என்பது தாய்வழிச் சமூகத்தின் வீழ்ச்சியிலிருந்துத் தொடங்குகிறது. தமிழ்ச்சமூகம் பெண்ணை வெறும் போகப் பொருளாக பார்ப்பதன்று. பெண்ணை உயிர்களின் பிறப்பிடமாக வைத்து போற்றிய பண்பாடு தமிழ்ப்பண்பாடு. ஆனால் கலித்தொகைக்கண் இந்நிலை மாறுபட்டே காணப்படுகின்றது.

அகம் தொடர்பான நெடும்பாட்டுக்கள் நானூறு கொண்ட அகநானூற்றில் வடசொற்கள் காணப்படுகின்றன. வடநாட்டினராகிய ஆரியர், பார்ப்பனர் பற்றிய குறிப்புகள், வடநாட்டின் நிலங்களான இமயம், பாடலிப்புத்திரம், யமுனை, கங்கை தொடர்பான குறிப்புகள், வடநாட்டினரின் சமயக் கொள்கையான வடக்கு நோக்கி இருத்தல் குறிப்புகள், வடநாட்டின் புராண கதாபாத்திரங்களான இராமன், பரசுஇராமன், இந்திரன் ஆகியோர் பற்றிய குறிப்புகள், சிவன் கோயில் இருந்தமைக்கான சான்றுகள், வேள்வி இயற்றியது தொடர்பான கருத்துகள், ஆரிய முருகன் பற்றியச் செயல்பாடுகள், அமிழ்தம் குறித்த கருத்துகள், அருந்ததி, ரோகிணி ஆகிய இராசிகள் பற்றியப் பதிவுகள், வடநாட்டினரோடு கொண்டிருந்த வணிக உறவு, சமணர் தொடர்பான கருத்துகள் என அகநானூறு வடமொழிக் கூறுகள் சிலவற்றை கொண்ட இலக்கியமாக திகழ்கிறது.

புறப் பாடல்கள் நானூறு கொண்ட புறநானூற்றில் அந்தணர்கள் மேற்கொள்ளும் அந்திகடன், இமயமலை பற்றிய குறிப்புகள், கங்கை ஆறு குறித்தப் பதிவு, அருந்ததி பற்றியக் குறிப்பு, புத்தர் குறித்தப் பதிவு, வடமொழி இலக்கிய வகைகளில் இன்றியமைததான புராணங்கள் பற்றியக் கருத்துகள், வடமொழிச் சொற்கள், வேதம் ஓதப்பட்டமைக்கான சான்றுகள், சிவன் பற்றியக் குறியீடுகள், அந்தணர்களின் செயல்பாடுகள், பிறப்பில் உயர்வு தாழ்வு வடவர் வழக்கம், திருமால், முருகன், பலதேவன் ஆகிய ஆரிய மயமாக்கப்பட்ட தெய்வங்கள் பற்றியப் பதிவுகள், வேள்வி பற்றியக் குறிப்புகள், இறைவனுக்கு வழங்கிடும் அவி உணவுச் சடங்குகள், பெண் கைம்மை நோம்பு, பெண் தீப்பாயும் ஆரிய வழக்கம், பிணங்களைச் சுடுவது உள்ளிட்ட கூறுகள் இடம்பெற்றுள்ளன.

பதிற்றுப்பத்தில் சமயக் கருத்துக்கள், வடமொழியாளரின் செல்வாக்கு, இமயமம் குறித்த பதிவுகள், வடநாட்டினராகிய ஆரியர் தொடர்பானக் குறிப்புகள், வடமொழி புராணங்கள் குறிப்பிடும் கார்த்திகேய முருகன் பற்றிய கருத்துகள், வடமொழியின் இலக்கிய வடிவமான புராணம் குறித்தக குறிப்புகள், பார்ப்பனர் பற்றிய பதிவுகள், சேரநாட்டில் வேள்வி இயற்றிய முறைகள், வைதீக நியதிகள், வடமொழியாளர் குறிப்பிடும் கற்பின் அடையாளமான அருந்ததி குறித்த கருத்துகள் போன்ற வடமொழிக் கூறுகள் இடம்பெற்றுள்ளன.

பரிபாடலில் வடமொழிக்கூறான புராணக் கருத்துகள் ஏனைய எட்டுத்தொகை நூல்களைக்காட்டிலும் சற்று மிகுந்து காணப்படுகின்றன. வடசொற்கள் இடம்பெற்றுள்ளன. இது பரிபாடலின் காலத்தைத் தெரிந்துகொள்ள உதவுகிறது. வடமொழிப்பெயர்கள் சிலவற்றை மொழிபெயர்த்துக் கூறுவதையும் பரிபாடலின்கண் காணமுடிகிறது. மேலும் பலதேவன் பற்றிய குறிப்புகள், வேள்வி இயற்றப்பட்டது தொடர்பானக் கருத்துகள், அந்தணர் குறித்தப் பதிவுகள், வேதம் பற்றியக் கருத்துகள், வடமொழியின் புராணங்களுக்குப் பிறகு உருவான ஆகமங்கள் குறித்தப் பதிவுகள், பிரம்மன் தொடர்பான பதிவுகள், இந்திரன் - முருகன் இடையேயான சமயப் பூசல், சிவன் திருவிழா நடந்தக் கருத்து என வடமொழிக் கூறுகள் இடம்பெறுவதாக பரிபாடல் திகழ்கிறது.

திருமுருகாற்றுப்படை உருவான விதத்தில் உள்ள வடமொழி வைதீக சார்பு, நக்கீரர் குறித்த ஆரியம் தொடர்பான கதை, முருகனின் ஆறுமுகம், முருகனின் பன்னிரு கைகள், முருகன் வழிபாட்டில் இடம்பெறும் ஆரிய சடங்குகள், ஆரிய வழியில் அந்தணர்கள் முருகனை வழிபட்ட முறை, திருமால், உருத்திரன், இந்திரன் உள்ளிட்ட வடநாட்டின் கடவுளர் தொடர்பான கருத்துக்கள், வடமொழி புராணங்கள் குறிப்பிடும் தேவர் வருகைக் குறித்த கருத்துகள் என திருமுருகாற்றுப்படை வடமொழிக் கூறுகளை நிரம்ப பெற்ற இலக்கியமாக திகழ்கிறது.

பொருநராற்றுப்படையில் தவம் குறித்தப் பதிவு மட்டும் இடம்பெற்றுள்ளது. வேறு வடமொழிக் கூறுகளான வடமொழி நம்பிக்கை, பண்பாடுகள், கதைகள், மனிதர்கள் என்று எவையும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுபாணாற்றுப்படையில் சேரன் இமயத்தில் வில் சின்னம் பொறித்த குறிப்பு இடம்பெற்றுள்ளது. மேலும் சிவனுக்கு ஆய் என்னும் குறுநில மன்னன் கொடுத்த பரிசில்கள், இராமயண கதையின் சிறுகூறு ஒன்று, மகாபாரத புராணத்தின் வீமன் பற்றிய குறிப்பு ஆகிய வடமொழி கூறுகள் இடம்பெற்றுள்ளன. நெடும்பாட்டான சிறுபாணாற்றுப்படையில் குறைந்த அளவில் வடமொழி கூறுகள் பதிவாகியுள்ளன.

பெரும்பாணாற்றுப்படை திருமால் வழி வந்தவன் தொண்டைமான் இளந்திரையன் என்று கூறப்பட்டுள்ளது. இந்திரவில் பற்றிய குறிப்பும் அந்தணர் எவ்வாறு குடியிருப்பை அமைத்திருந்தனர் என்பதனையும் வடநாட்டின் கற்பின் அடையாளமான அருந்ததி குறித்தும் அந்தணர் விருந்தோம்பும் முறை மற்றும் வேள்வி இயற்றுவதில் சிறந்து விளங்கிய நிலையையும் தமிழகம் வடநாட்டோடு கொண்டிருந்த வணிக உறவு பற்றியும் திருமால் குறித்த பதிவுகளை கொண்டும், பாரதக் கதை மற்றும் கங்கை ஆறு போன்ற வடநாட்டு நிலவியல் போன்ற கூறுகள் இடம்பெற்ற இலக்கியமாக திகழ்கிறது.

மலைபடுகடாம் இரண்டு வடமொழிக் கூறுகளை மட்டும் பெற்றுள்ளது. ஒன்று சைவ சமயத்தின் கூறு, அதுவும் 'நஞ்சினை உட்கொண்ட சிவன் வீற்றிருக்கும் நவிரம் மலை' என்று இடம்பெற்றுள்ளது. மேலும் யானையைப் பாகன் பழக்கப்படுத்தும்போது வடசொற்களைப் பயன்படுத்தியதமை குறிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேறு வடமொழிக் கூறுகள் எதுவும் இடம்பெறவில்லை.

குறிஞ்சிப்பாட்டை இயற்றிய கபிலர் அந்தண இனத்தைச் சேர்ந்தவர் என்பது புலனாகியது. குறிஞ்சிப்பாட்டு என்னும் இந்நூலைக் கபிலர், 'ஆரிய அரசன் பிரகத்தனுக்குத்' தமிழ் மரபினை உணர்த்துவற்காக இயற்றியதாகக் குறிப்பு ஒன்று நூலின் முகமையில் காணப்படுகிறது. மேலும் அந்தணர்கள் மாலை நேரம் மேற்கொண்ட வழிபாட்டினையும் காணமுடிகிறது. இங்ஙனம் வடமொழிக் கூறுகள் குறைந்த இலக்கியமாக குறிஞ்சிப்பாட்டு திகழ்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

முல்லைப்பாட்டு 'மாவலி' மன்னன் வார்த்த நீர் தன் கையில் விழுந்த உடனே வானளவில் உயர்ந்தவன் என்ற புராண கருத்தினைத் தாங்கியுள்ளது. அதேபோல் யானையினை உணவு உண்ண வைக்க, பாகர்கள் கையில் அங்குசத்தை வைத்தப்படி வடமொழி சொற்களைப் பயன்படுத்தினர் என்று நப்பூதனார் கூறுகிறார். தலைவனது பாசறையில் துணிகள், அம்புகள் மீது

காய வைக்கப்பட்டள்ளது. அது புலவருக்கு முக்கோல் அந்தணர் தமது துணிகளைக் காய வைப்பது போல் இருக்கிறது என்று உவமை கூறுவதும் இடம்பெற்றுள்ளது.

மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் வடமொழிக் கூறுகளில் சிவன் மற்றும் அகத்தியர் குறித்த கருத்துக்கள் இன்றியமையாததாகும். தமிழ் மன்னர்கள் வடநாட்டின் மன்னர்கள் பலரையும் வென்றதாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. மதுரையில் பௌத்தப் பள்ளியில் பூவோடு புத்தர் வழிபாட்டுக்கு மக்கள் காத்திருந்தமை விளக்கப்படுகிறது. அந்தணர் பள்ளியில் அந்தணர்கள் 'அதர்வன வேதம்' தவிர ஏனைய இருக்கு, யசூர், சாமம் ஆகிய வேதங்களை மாணவர்களுக்குப் போதித்துள்ளனர். மதுரையில் அமைந்திருந்த அமண் பள்ளி, குளிர்ச்சியாக இருந்ததாகவும், சுவர்களில் சிவந்த நிறத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன எனவும் மதுரைக்காஞ்சி விளக்குகிறது. மேலும் திருமாலின் பிறந்த நாளினை பற்றியக் குறிப்பும் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. வேள்வி இயற்றப்பட்தற்கானக் குறிப்புகள் போன்றன மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்தை அறிந்துகொள்ள முடிகிறது.

நெடுநல்வாடையில் தென்நாட்டின் சந்தனம், தந்தூரி முதலியவற்றை அரைக்க வடநாட்டில் உள்ளவர் கொண்டு வந்த (சிலாவட்டம்) அம்மி தலைவனைப் பிரிந்த காரணத்தால் பயன்படுத்தப்படாமல் தென்திசையில் அப்படியே கிடந்தது என நக்கீரர் குறிப்பினையும், 'தச' என்ற வடமொழிச்சொல்லை நக்கீரர் பயன்படுத்தியுள்ளதையும் 'ஆடு' என்பதற்கு மேடராசி (மேஷராசி) எனவும் உரோகிணி – ரோகிணி என்று வடமொழிப் பெயர்களை பயன்படுத்தியது உள்ளிட்ட வடமொழிக் கூறுகளை காணமுடிகின்றது.

பட்டினப்பாலை என்னும் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் நூலில் முனிவர்கள் வாழும் தவச்சாலைகள் இருந்ததாக கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார். அதாவது முனிவர்கள் இடைவிடாது யாகம் மேற்கொண்டமையால் அதன் புகை மேல் எழும்புகிறது. எனவே அதனை வெறுத்தக் குயில்கள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் பறந்துச் சென்றன என்று படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும் வேள்வி இயற்றி, அதில் தேவர்களுக்கான 'அவி' உணவை அளித்தது, இமயமலையில் உண்டான மாணிக்க மணி, பொன் முதலியன குவிந்து கிடந்த குறிப்பு ஆகியன காணப்படுவதை அறிந்துகொள்ள முடிகிறது.

தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்த குறியீடுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், ஓடுகள் இவற்றில் கிடைக்கும் வடமொழிச் சொற்கள், வடமொழி சடங்குகள், நம்பிக்கைகள், பொருட்கள், புராண கருத்துகள், கடவுள் பற்றியக் குறிப்புகள் மற்றும் சங்க இலக்கியத் தொகுப்பு மற்றும் பதிப்புகளில் காணப்படும் வடமொழிச் சார்புடைய நிகழ்வுகள் ஆகியன இன்றியமையாததாக அமைகின்றன. அங்ஙனம் சிந்துவெளி நாகரிகத்திற்கு உரிமையானவர்கள் தமிழர்கள் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் சிந்துவெளிப் பகுதிகளில் கிடைக்கும் உருவம் 'குதிரை'

அல்ல ‘காளை’ உருவம் என்பதும் அது தமிழர்களுடையது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழகத்தில் சமயத்தை வளர்க்கும் நோக்கில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வந்து மலைகளில் தொடர்ந்து தங்கிய சமணர்கள் ‘பாறைகளில் சில வரிகளில் வெட்டி வைத்த பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டின் புதுக்கோட்டைக்கு வடமேற்கே சித்தனவாசல் என்னும் சிற்றூரில் பாழி ஒன்று உள்ளது. அப்பாழி கிறித்து காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து சமண சமய முனிவர்களும் சமணச் சாரணர்களும் வாழ்ந்து வந்துள்ளதைத் தெரிவிக்கிறது. அப்படுக்கையின் விளிம்புப் பகுதியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டள்ளன. அவற்றுள், வடக்கே அசோக மன்னன் கையாண்ட பிராமி எழுத்துக்களில் உள்ள கல்வெட்டு உள்தை அறிந்துகொள்ள முடிகின்றது.

செஞ்சிக்கு அடுத்துள்ள திருநாதர் குன்றிலுள்ள கல்வெட்டு பழமையான கல்வெட்டாகும். இதனைக் கண்டுபிடித்துப் படியெடுத்து எழுத்துக்களைப் படித்தறிந்து வெளியிட்டவர் கோபிநாதராவ். இக்கல்வெட்டில், சந்திரநந்தி எனும் சமண ஆசிரியர் ஐம்பத்தேழு நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர்நீர்தாருக்குச் செய்யப்பட்ட நிசீதிகை என்னும் கற்படையினைக் குறிக்கும் கருத்துப் புலனாகிறது.

சங்க இலக்கிய ஆய்வில் இலங்கையில் உருவான இலக்கிய, இலக்கண, பண்பாட்டு மாற்றங்கள் இன்றமையாத இடத்தைப்பெறுகின்றன. இலங்கையில் கிடைத்த கல்வெட்டுகள் பிராகிருதத்தால் ஆனவை. மேலும் வட இந்தியாவிலிருந்து சென்ற வணிகரும், சமண, பௌத்த சங்கத்தாரும் அங்கெல்லாம் பிராகிருத மொழியினை அறிமுகம் செய்தனர். இலங்கையின் குகைக் கல்வெட்டு மொழி, தமிழ் மற்றும் பிராகிருதம் ஆகிய மொழிகளின் கலப்பு மொழியாக இருந்துள்ளது.

சமணர் குகைகளில் காணப்படுகிற பிராமி கல்வெட்டுவழி அறியலாகும் தமிழகம், சமண மயமான தமிழகம் போலத் தெரியும் என்பதனையும் புரிந்துகொள்ள முடிகின்றது. தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் எனச் சுட்டப்பெறும் கல்வெட்டுத்தொகுதி கி.மு.3ம் நூற்றாண்டு முதல் கி.பி.4ம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலப்பிரிவுக்குள்ள, பிராமி எழுத்துருவில் எழுதப்பெற்ற சமணமதக் கொடைகள் சார்ந்த கல்வெட்டுக்களைக் குறிக்கும் என்ற கருத்தினையும் உணர்ந்துகொள்ள முடிகிறது. இலங்கைக்கான பௌத்தம் தென்னிந்தியா வழியாக – தமிழகம் வழியாக வந்திருத்திருக்கின்றது. எழுத்து முறைமை வளர்ச்சிக்கு சமண முனிவர்களின் செயல்பாடு ஒர் இன்றிமையாத காரணியாக இருந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ளப் பண்டைய கால முத்திரைகளில் பிராகிருத, வடபிராமி எழுத்துக்களின் செல்வாக்குக் காணப்பட்டாலும், நாணயங்கள் அனைத்தும் தமிழ்ப்பிராமியில் எழுதப்பட்டுள்ளன. அநுராதபுரத்தில் சங்ககாலப் பாண்டியரின் குலச்சின்னமான மீன்பொறித்த நாணயங்களுடன் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'பெருமகன்' என்ற தமிழ்ச் சொல்லின் மூலமொழி பிராகிருத வடிவமாகும் என்ற கருத்தையும் விளங்கிக்கொள்ள முடிகிறது. இலங்கை பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் மல்லஹ, மல்லஸ, மல்லந என வரும் இப்பெயர் நாணயத்தில் தமிழில் மல்லக என எழுதப்பட்டுள்ளது. அத்துடன் நாணயத்தின் பின்புறத்திலும், முன்புறத்திலும் திரிசூலமும் இடம் பெற்றுள்ளது. சங்ககால தமிழக நாணயங்களிலும் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஜம்பையில் கிடைத்த அதியமான் பற்றிய கல்வெட்டில் அதியன் என்ற பெயர் 'அதியந்' என எழுதப்பட்டதையும், அதை அதியன் என வாசித்ததையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஒரு நாணயத்தில் ரா(ா)சன் என்பது 'ராஜ' என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவமாக இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் இரண்டாயிரத்துக்கும் மேலாக பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன, அவை பிராகிருத மொழிச் சாசனங்களாக இருக்கின்றன. பிராகிருதம் கி.பி.நான்காம் நூற்றாண்டுவரை தென்னாசியா முழுவதிலும் தொடர்பு மொழியாக விளங்கியுள்ளது. இலங்கையில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் பிராகிருத மொழியினையே சாசன மொழியாகப் பயன்படுத்தினார்கள் என்பதனை சான்றுகள்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

சங்க இலக்கியத்தை மெய்ப்பிக்கும் சான்றுகளில் வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பிடத்தகுந்தனவாகும். பல்யாகசாலை முதுகுருமிப்பெருவழுதிக்கு வேள்வி செய்து அவனிடம் தானமாக வேள்விக்குடி என்ற ஊரைத் தானமாகக் கொடுத்த குறிப்பினை இச்செப்போடு கொண்டுள்ளது. இதன்வழி வடமொழி வேதம் ஓதி, வேள்வி இயற்றும் அந்தணர்களின் நிலையையும் அவர்கள் ஆரிய சடங்குகளைத் தமிழகத்தில் நிகழ்த்தியதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

நடுகற்களைப் பொறுத்தவரை அதில் சமயச் சார்போ, வேறெந்த வடமொழிக் கூறுகளோ இடம்பெறவில்லை. நடுகல் வழிபாடுகளும் இன்றுவரை பழைய முறையில்தான் நிகழ்த்தப்படுகிறது. தொகுப்பு மரபு என்பது தொல்காப்பியர் காலத்தில் இருந்தே இருந்து வந்துள்ளது. கி.பி.3 லிருந்து கி.பி.6 வரை தமிழகத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற களப்பிரர்கள் இத்தகைய வேள்விகளையும் பார்ப்பனர்க்கான தானங்களையும் ஒழித்துள்ளனர். மீண்டும்

கி.பி.ஆறாம் நூற்றாண்டில் களப்பிரரை அழித்து ஆட்சிக்கு வருகிற பாண்டிய மன்னர்கள் வேள்விகளையும் தானங்களையும் நிலமான்யங்களையும் ஊக்குவிக்கின்றனர்.

எட்டுத்தொகை நூல்களிலுள்ள செய்யுட்களுட் பெரும்பாலானவை களப்பிரர் படையெடுப்புக்கு முந்தியன. ஆனால் அவை களப்பிரர் ஆட்சிக் காலத்திலேயே தொகுக்கப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் பாண்டிய மற்றும் சேர நாடுகளில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தொகுக்கப்பட்ட காலத்தில் சேரநாடு வடநாட்டு பண்பாட்டுக் கூறுகளைச் சோழ, பாண்டிய நாடுகளைக்காட்டிலும் மிகுதியாக ஏற்றுக்கொண்ட நாடாகியுள்ளது. பாண்டியநாட்டிலும் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கு இழந்து வைதீக சமயங்கள் மிகுந்த செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன. எனவே சங்க இலக்கியம் தொகுப்பில் சமயச் செல்வாக்கு இருந்திருக்கிறது. ஆனால் அதற்கான சான்றுகள் இல்லை.

இயற்கை நெறி காலமாக கருதப்படும் சங்க காலத்தில் உருவான இலக்கியங்களைத் தொகுத்த காலத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவர் பாடிய பாடலில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் வைதீக சமயம் சார்ந்தவை. இதன் காரணமாக சங்க இலக்கியத்திற்கு வைதீக அடையாளத்தையும் குறிப்பாக சைவ அடையாளத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடுகின்றது.

சங்க இலக்கியம் தொகுக்கப்படுகின்ற காலத்தில் பாடலின் முன்னர் குறிப்புகள் இடம் பெறுகின்றன. தொகுப்புப்பணியின்போது குறிப்பிடப்பட்டக் குறிப்புகள் சங்க இலக்கிய படிப்பை எளிமைப் படுத்தும் அதேவேளையில் அதன் உண்மைத்தன்மையை படிப்பாளன் அறிந்துகொள்ளாமல் இருப்பதற்கும் வாய்பாக அமைந்து விடுகின்றது.

பதிப்பில் ஈடுபட்ட பெரியவர்கள் நடுவுநிலையோடு செயல்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும் சிலர் அவர்கள் சார்ந்திருக்கும் சமயம் சார்ந்த அணுகுமுறையோடு நடந்துகொண்டுள்ளனர். மொழிவுணர்வைத்தாண்டி சமய உணர்வு இவர்களிடம் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியப் பிரதி அச்சுக்கு வருதல் என்பது சமய மரபில் இருந்த தமிழ் இலக்கியம் சமயம் சாரா மரபையும் உள்ளடக்கியதாக அறியப்பட்டது. இதனைச் சமயம் சார்ந்த புலமை உலகம் ஏற்றுக் கொண்டதாகக் கூறமுடியாது. தம்மிடம் சங்க இலக்கியச் சுவடிகள் அனைத்தும் இருந்தும், அதில் திருமுருகாற்றுப்படையை மட்டும் பதிப்பித்த ஆறுமுக நாவலர் செயல்பாடு குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் ‘சங்க இலக்கியத்தில் வடமொழிக் கூறுகள்’ குறைந்த அளவிலான சதவிகிதத்தில் மட்டுமே காணப்படுகின்றன. இரண்டாயிரத்து முன்னூற்று எண்பத்து ஒரு (2381) சங்கப் பாடல்களில் வடமொழிக் கூறுகள் இடம்பெறும் பாடல்கள் குறைந்த சதவீகிதமே ஆகும். எனவே சங்ககாலத்தில் வாழ்ந்த பெரும்பாலான தமிழ்ப் பேசும் மக்கள்

வடமொழிகளையோ, வடமொழிப் பண்பாட்டுக் கூறுகளான நம்பிக்கைகள், சடங்குகள், வாழ்வியல் முறைகளையோ பெரிதும் பின்பற்றவில்லை எனவும், மன்னர்கள் மட்டத்திலும், செல்வந்தர்கள் மட்டத்தில் மட்டுமே வடமொழிக் கூறுகள் அறிமுகமாகியிருந்தன என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும் இந்த ஆய்வினை உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டு கடல்சார் ஆய்வுகள் மூலமும் முன்னெடுத்தால் தமிழர்களின் உலக குடியேற்றத்தையும், தமிழர்தம் அறிவியல் அறிவையும், தமிழ் மொழியின் நெடும்பரப்பையும் அறிந்துகொள்ள வழிவகுப்பதோடு தமிழ் இனத்தின் தொன்மையினை உலகம் அறிந்துகொள்ள வாய்ப்பும் ஏற்படும்.

# முடிவுரை

- ✷ அறிவியல், தொழில்நுட்பத்திற்கு முன்னோடி என்றும், அறிவியல் வளர்ச்சியில்லை என்றால் தொழில்நுட்பமும் இருக்காது என்றும் பரவலாக நம்பப்படுகிறது. எனினும், பழங்கால வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுவது என்னவென்றால். அறிவியலுக்கு வெகுகாலம் முன்பே பல தொழில்நுட்பங்கள் பிறந்து வளர்ந்திருக்கின்றன என்பதுதான்.
- ✷ புவியில் இருந்து தமக்குக் கிடைக்கும் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி பண்டைய மக்கள் பல கருவிகளையும் பயனுள்ள பொருட்களையும் நிர்மாணித்துள்ளார்கள் என்பதும், இந்தக் கருவிகளைக் கொண்டு தம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தை தம்முடைய கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதும் ஆதாரங்கள் மூலம் அறிஞர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளன.
- ✷ பழந்தமிழர் உருவாக்கிய எந்திர, தொழில்நுட்ப தயாரிப்பின் பின்னணியில் உள்ள அறிவியல் அவர்களுக்குத் தெரியாது.
- ✷ ஒன்றை உருவாக்குவதற்கு பழந்தமிழர்களது அனுபவத்தாலும், முயற்சியின் வெற்றி தோல்விகளாலும் நிகழ்ந்ததே ஒழிய, அறிவியல் ரீதியாக நிகழவில்லை. தாங்கள் செய்யக்கூடிய கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்குப் பின்னால் அமைந்துள்ள அறிவியல் பற்றி மக்கள் அறியவில்லை. இந்த எளிய கருவிகளையும், தொழில்நுட்பங்களையும் அவர்கள் உருவாக்கி பயன்படுத்த முடிந்தது என்றால் அதன் பின்னணியில் அமைந்துள்ள தாக்கம், விவேகம், மற்றும் அறிவுக் கருத்துக்களை ஒன்றாகத் திரட்டுதல் போன்றவை அவர்களிடம் இருந்திருக்க வேண்டும்.
- ✷ மனிதனின் அறிவு வளர்ச்சியோடிணைந்த அறிவியல் வளர்ச்சியே சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதையும் அறியலாகிறது. காலத்திற்கேற்ற வளர்ச்சியும், வளர்ச்சிக்கேற்ற மாற்றங்களும் சமுதாயத்திற்குத் தேவையானவையாகும்.
- ✷ அறிவியல், கருவிகளின் வளர்ச்சி வேகம் மனித வாழ்வியலை மாற்றியதோடல்லாமல், மனித மனத்தின் கலைவெளியீடான இலக்கியத்தையும் மாற்றியுள்ளது.

* பண்டைய தமிழர்களின் வானியல் சிந்தனைகள் பிற நாட்டினரின் வானியல் கருத்துகளுக்கு ஒப்ப காப்பியப் புலவர்கள் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளது சிறப்பிற்குரியதாகும்.
* நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களையும் உள்ளடக்கியதாக புவி காணப்படுகிறது என்ற கூற்றை நீலகேசி குறிப்பிடுகின்றது.
* கோள்களையும், நாள்மீன்களையும் கண்டறிந்து அவற்றை மனித வாழ்விற்கு ஏற்ப ஒப்பிட்டுக் கூறுவது என்பது அவர்கள் அறிவியலோடு இணைந்து வாழ்வினை நடத்தினர் என்பதை அறியமுடிகிறது. சூரியன் ஒரு வருடத்தில் வடக்கு தெற்கு நோக்கி நகர்ந்து செல்வதால் ஏற்படும் பருவநிலை மாற்றங்களை சிலப்பதிகாரமும், சீவகசிந்தாமணியும் உணர்த்துகின்றது.
* சூரியன், சந்திரன், கோள்கள் போன்ற விண்பொருட்களின் இயக்கங்கள் தொடர்பான அறிவு சங்ககாலத்தில் தமிழ் மக்களுக்கு இருந்தது. கவனிப்புகள் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளை வைத்தே இவ்வியக்கங்கள் தொடர்பான புரிந்துணர்வுகளை அவர்கள் வளர்த்துக் கொண்டனர். புலன்களால் உணர்ந்து கொள்ளக் கூடியவற்றுக்கு அப்பால், நிகழ்வுகளுக்கு ஊகங்கள் மூலம் விளக்கங்களும் கொடுக்கப்பட்டன.
* பழுதுபட்ட ஒரு உறுப்பை எடுத்துவிட்டு வேறொரு உறுப்பைப் பொருத்துதல் என்பது இன்றைய மருத்துவ உலகின் சாதனை. இதனைப் பற்றிய குறிப்பொன்று சிலம்பில் காணப்படுவதும் உண்மை.
* மனிதனின் பறக்க வேண்டும் என்ற ஆசை கற்பனையாக இலக்கியமாக, தேடலாகத் தொடர்ந்து இன்று நிறைவேறியுள்ளது.
* சீவகசிந்தாமணியில் இடம்பெற்றுள்ள மயிற்பொறியினை வலஞ்சுழி மற்றும் இடஞ்சுழியாக திருகுவதன் மூலம் அம்மயிற்பொறி வானமேகங்களிடையே பறக்கவோ மயிர் சிலிர்க்கும் வகையில் தரையில் இறங்கச் செய்யவோ முடியும் என்கின்றது அந்நூல். இது வியப்பிற்குரிய செய்தியாகும்.
* இரும்பு, வெள்ளி, பொன், செம்பு ஆகிய உலோகங்களைப் பயன்படுத்தி உள்ளனர். அவற்றைக் கொண்டு பல பொருள்களைச் செய்து பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

- *சீவகசிந்தாமணி எந்திரத்தால் இயக்கப்பட்ட திரைச்சீலை பற்றிப் பேசுகின்றது.*
- *ஆர்க்கிமிடிஸ் தத்துவம், பாஸ்கல் விதி, நியூட்டன் புவிஈர்ப்பு விசையின்படி, காய் முதிர்ந்து பூமி நோக்கி கீழே விழுவதைப் பற்றி சீவகசிந்தாமணி குறிப்பிட்டுள்ளது.*
- *உலோகத் தொழில்நுட்பம், தச்சுத்தொழில்நுட்பம், தோல் தொழில்நுட்பம், துகிலியல் தொழில்நுட்பம், மட்பாண்டத் தொழில்நுட்பம் ஆகிய தொழில்நுட்பங்கள் பற்றிய குறிப்புகள் காப்பியத்துள் இடம்பெற்றுள்ளன.*
- *நீர் புவியீர்ப்பு விசையின் காரணமாக எப்போதும் மேலிருந்து கீழ் நோக்கியே ஓடும் என்ற அறிவியல் உண்மையை அடிப்படையாகக் கொண்டு பாசனம் செய்கின்றனர். அத்தகைய பயிர்த்தொழிலில் ஊடுபயிர் முறையினை எவ்வாறு கைகொள்ள வேண்டும் என சீவகசிந்தாமணி தெளிவாக எடுத்துரைக்கின்றது.*
- *நீரை முறைப்படுத்தி சேமிக்க சுருங்கை குழாய், நீர்த்தேக்கம் பற்றியும் காப்பியம் பதிந்துள்ளது.*
- *வளர்ச்சியடைந்த சமுதாய மனிதனுக்கு சமூகச்சூழல் மட்டும் போதுமானதல்ல. அதற்குப் பொருத்தமான இயற்கைச் சூழ்நிலையும் இன்றியமையாதது. அதைத் தூய்மையுடன் காக்கும் வாழ்வியல் கோட்பாட்டைக் கண்டது தமிழிலக்கிய நெறி. இன்றைய காலக்கட்டத்தில் சுற்றுப்புறச் சூழலியல் குறித்த அறிவினைப் பெற்றிருத்தல் அவசியம் என வலியுறுத்துகின்றனர். ஆனால் மனிதனை இயற்கைக்குள் கொண்டு வரும் சூழலியல் காப்பியங்களில் மிகுதியும் போற்றப்பட்டுள்ளது. நீர், காற்று, மண் போன்றவை மாசடைந்ததாக காப்பியத்துள் செய்தியில்லை. மாறாக இயற்கையைப் போற்றி வழிபட்ட நிலையினைக் காணமுடிகிறது.*
- *காப்பியங்களில் இடம்பெற்றுள்ள வருணனை கூட சுற்றுச்சூழலியலோடு தொடர்புடையதாக அமைந்துள்ளதை காப்பிய இலக்கியம் புலப்படுத்துகிறது. மேலும், இவை குறித்த ஆய்வில் சூழலியல் சார்ந்த வாழ்விற்கு மக்கள் தங்களை தயார்படுத்தியிருந்தனர் என்பதையும் காப்பிய இலக்கியத்தின் வழி அறியலாகிறது.*
- *மணிமேகலைக் காப்பியம் சுனாமி பற்றிக் குறிப்பிடுகின்றது.*

- தகவல் மேலாண்மை எனும் துறையில் தகவல் அனுப்புதல், பெறுதல், பரப்புதல் எனும் நிலைகளில் வாய்மொழியாகவும் எழுத்து மொழியாகவும் தகவல் மேலாண்மை நிகழ்ந்துள்ளதை காப்பியம் பதிவு செய்கிறது.
- காப்பிய இலக்கியத்துள் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் செய்திகள், தகவல் தொடர்பியல், வானியல், மருத்துவம் யாவும் பிறவும் இன்றைய தொழில்நுட்பக் கூறுகளுடன் ஒப்பிடும் வகையில் தொடக்க அளவிலான அறிவியல் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது எனலாம்.
- மழைவளம் குறையும்போது பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதையும், விளைபொருட்கள் விளையாது போகின்ற நிலையையும், காட்டுத்தீ மிகுதியாகக் காணப்படுவதையும், உயிர்கள் அழிவதையும் பஞ்சம் ஏற்படுவதையும் மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.
- கடல் உள்வாங்கும் நிகழ்வை 'கடல் ஓதம்' என சிலப்பதிகாரம் பதிவுசெய்துள்ளது.
- தொலைக்காட்சி வழி நேரலை ஒளிபரப்பை இன்றைய அறிவியல் நமக்கு காட்டுகிறது. ஆனால் சீவகசிந்தாமணி அன்றே நேரலைக்காட்சியை நமக்குக் காட்டுவது வியப்பிற்குரியது.

## மேலான ஆய்வு

'காப்பியங்களில் சுற்றுச்சூழலியல்' என்ற நோக்கில் ஆய்வு செய்வதை உரிய எதிர்கால ஆய்வுக்களமாகக் கருதலாம்.

# முன்னுரை

புவியில் உயிரின உருவாக்கம் ஒரு செல் உயிரியான அமீபாவில் தொடங்கி, பல இலட்சம் செல்களின் தொகுப்பான மனிதனிலிருந்தும் நீள்கிறது. அவ்வாறு உருவான மனிதன் சக மனிதனுக்குத் தனது கருத்தைத் தெரிவிப்பதற்குக் கருவியாகப் பயன்படுத்திய மொழி, ஓர் இனக்குழுவின் குழுக்குறியீட்டிலிருந்து நீண்டு பல இனக்குழுக்களின் குறியீடுகளைத் தனக்குள் ஈர்த்து கலவையாக்கி புதுவடிவம் பெற்றுப் பரந்துபட்ட நிலம் முழுவதும் கருத்துப்பரப்பும் கருவியாக விரிவடைகின்றது. அக்கருத்துக் கருவாகிய மொழி அம்மொழியை பேசும் மனிதனின் அடையாளமாகவும் விளங்குகின்றது. அங்ஙனம் பாரத தேசத்தில் இருபெரும் மொழிக்குடும்பங்களாக விளங்கியவை தென்மொழியும் வடமொழியும் ஆகும். இவ்விரண்டு மொழிக்குடும்பங்களுள் முதன்மையானவை சமஸ்கிருதமும் தமிழுமாகும். எனினும் வடமொழி என்ற பதம் சமஸ்கிரும், பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளைக் குறிக்கும் பொதுச் சொல்லாகவும், தென்மொழி என்ற பதம் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு உள்ளிட்ட மொழிகளைக் குறிக்கும் பொதுச்சொல்லாகவும் விளங்கி வருகின்றன. இந்த இரண்டு மொழிக் குடும்பங்களுள் பல ஒற்றுமை வேற்றுமைகள் மொழி மற்றும் பண்பாடு அடிப்படையில் காணப்படுகின்றன.

இந்த வேற்றுமை, ஒற்றுமைகள் எதர்த்தமாகவோ அல்லது செயற்கையாகவோ நிகழ்ந்திருக்க வாய்ப்புகளுண்டு. எனினும் இவ்விரண்டு மொழியில் எது முதன்மையான மொழி? எம்மொழியிலிருந்து எம் மொழி உருவாகியிருக்கும் என்ற ஆய்வுகள் பன்னெடுங்காலமாக இந்திய நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் மேலை நாட்டாரின் இந்திய வருகைக்குப் பின்பு இலக்கிய ஆய்வுகளில் பல புதுமையான ஆய்வு முறைமைகள் பின்பற்றப்பட்டன. இதன் விளைவாக இந்தியாவில் உருவான முதன்மையான மொழியாக சமஸ்கிருதத்தை மாக்ஸ் முல்லர் போன்ற அறிஞர்கள் பலர் கருத்துருவாக வெளியிட்டனர்.

வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களான ஹீராஸ் பாதிரியார், எமனோ, பர்ரோ, கால்டுவெல் போன்றோர் தமிழ்மொழியை சிந்துவெளி நாகரிகத்தோடு தொடர்புபடுத்தலாயினர். இதனை உறுதிபடுத்தும் வகையில் சங்க இலக்கியம் சி.வை.தா., வே.இராஜகோபால் அய்யங்கார், ஆறுமுக நாவலர், உ.வே.சா., எஸ்.வையாபுரிப்பிள்ளை போன்றோர்களால் அச்சேறியது. அதன்பின் சங்க இலக்கியக் கருத்தியல்களை முன்வைத்து பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளால் தமிழ்மொழியின் காலம், இலக்கியச் செழுமை ஆகியன மறுகட்டமைப்பு செய்யப்பட்டன. பாவாணர் ஒருபடி மேலேசென்று உலகின் மூத்தமொழி தமிழ் என நிறுவ முற்பட்டார். இந்நிலைக்கு மாறாக எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கருத்து மாறியிருந்தது.

தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள், தமிழ் இலக்கிய வடிவங்களான காப்பியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், புதுக்கவிதை, நாவல், சிறுகதை போன்றன பிறமொழிகளிலிருந்து கடன்வாங்கப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளனர். அதற்கேற்றார்போல அவ்வடிவங்களில் இடம்பெற்றுள்ள இலக்கியங்கள் சில தழுவலாகவும் இருக்கின்றன. தமிழ்மொழியின் தனித்துவம்மிக்க இலக்கியமாக அறிஞர்களால் குறிப்பிடப்படுகின்ற சங்க காலத்திலும், அக்காலத்தில் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் வடமொழியின் புராணகதைகள், சடங்குகள், சமயங்கள், நம்பிக்கைகள், வாழ்வியல் நிலைகள், சொற்கள் போன்ற கூறுகள் மிகுதியாக காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள வடமொழிக்கூறுகள் அக்காலப்புலவர்களின் எழுத்தாளுமை, காலத்தின் தேவை, மொழியைக் கையாண்ட எதார்த்தம், மக்களின் நம்பிக்கையை உள்ளடக்கிய வாழ்வியல்முறை போன்றவற்றை வெளிப்படுத்துவனவாக உள்ளன. சங்க இலக்கியத்தில் காணலாகும் வடமொழிக் கூறுகள் குறித்த இந்த ஆய்வு, தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பையும், தனித்தன்மையையும், சிதைவுகளையும், வடமொழி கலப்பால் ஏற்பட்ட விளைவுகளையும், விளைந்த மக்களின் வாழ்க்கைமுறை மாற்றங்களையும், தமிழ்மொழியின் நிலையையும் எதிர்கால தமிழ்ச்சமூகத்திற்கு வெளிகொணரும் வகையிலும், தமிழ் மொழியின் திறத்தை மேலும் பேணிப் பாதுகாப்பதற்கு வழிவகுக்கும் வகையிலும் அமைகின்றது.

## 1.ஆய்வுத் தலைப்பு:

‘‘**சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள்**’’ என்பது இந்த ஆய்வின் தலைப்பாகும்.

## 2.ஆய்வுத் தலைப்புத் தேர்விற்குக் காரணங்கள்:

இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் காலத்தில் சங்க இலக்கியத்தை ஆழ்ந்து பயின்றபோது வடமொழிக் கூறுகள் மிகுதியாக இடம்பெற்றிருப்பதை அறிந்து வியப்படைந்தேன். மணிப்பிரவாள நடையையும், தனித்தமிழ் நடையையும் உணர்ந்து கொண்டபின் சங்க இலக்கியத்தில் வடமொழிக் கூறுகள் இழையோடியிருப்பதைத் தெள்ளிதின் உணரமுடிந்தது. இத்தகைய வடமொழிக் கருத்துக்களை சங்கப்புலவர்கள் எடுத்தாள வேண்டிய தேவைதான் என்ன இருந்தது என்பதை அறியும் ஆவலும், அவற்றிற்கான விடைத்தேடுதலும் இத்தலைப்புத் தேர்விற்கான காரணங்களாகும்.

## 3.ஆய்வு நோக்கம்:

சங்க இலக்கியங்களில் காணலாகும் வடமொழிக் கூறுகளாகிய சொற்கள், வாழ்வியல் நிலைகள், நம்பிக்கைகள், சடங்குகள், சமயம், புராணக்கதைகள், நிலவியல் ஆகியவற்றை

கண்டறிந்து, அவை எதார்த்தமாகவா, வற்புறுத்தலுக்காகவா, சமயக் கட்டுப்பாடுகளுக்காகவா, வடமொழிப்புலமையை வெளிப்படுத்துவதற்காகவா, இருமொழி ஆளுமையை வெளிப்படுத்துவதற்காகவா என்பன போன்ற காரணிகளை ஆய்ந்து வெளிக்கொணர்வதும், அவை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், வடமொழிக்கூறுகள் வாயிலாகப் புலப்படும் மொழி, சமூக நிலைகளையும் ஆய்ந்தறிந்து எதிர்காலத்தில் தமிழ்மொழி தனித்தன்மையோடு வாழ வழிவகுக்கும் வகையிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பெறுகிறது.

## 4.ஆய்வு மூலங்கள்:

### 01.முதன்மை ஆதாரங்கள்:

சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பதினெட்டு நூல்கள் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

### 02.துணைமை ஆதாரங்கள் :

வடமொழி இலக்கியங்கள் குறித்த தமிழ் மொழிப்பெயர்ப்பு ஆய்வுநூற்கள், சங்க இலக்கிய ஆய்வுநூற்கள், வடமொழி குறித்த திறனாய்வு நூற்கள், தமிழ்-வடமொழி ஒப்பீடு குறித்த நூற்கள், சங்க இலக்கியம் தொடர்பான ஆய்வேடுகள், சங்க இலக்கிய பழைய உரைகள், கட்டுரைகள், இதழ்கள், கருத்தரங்க கட்டுரைகள் ஆகியன துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

## 5.ஆய்வு எல்லை:

சங்க இலக்கியங்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பதினெட்டு நூல்களில் இடம்பெற்றுள்ள பாடல்கள் ஆய்வு எல்லையாக அமைகின்றன.

## 6.ஆய்வு முன்னோடிகள்:

01. கோவேந்தன், கா., - தமிழர் இலக்கியம்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை – 18. பதிப்பு - 2000.

02. தட்சிணாமூர்த்தி, அ., - தமிழர் நாகரிகமும் பண்பாடும்,
யாழ் வெளியீடு,
ஏ.பி 1108, தென்றல் குடியிருப்பு,
மூன்றாவது தெரு, மேற்கு அண்ணாநகர்,
சென்னை – 40.
பதிப்பு - 2000.

03. வேங்கடராஜீலு ரெட்டியார், வே., - கபிலர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை – 600 113.
பதிப்பு - 1998.

04. வையாபுரிப்பிள்ளை, எஸ்., - இலக்கியச் சிந்தனைகள் தொகுதி 1,
இன்ஸ்டியூட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடீஸ்,
6, நல்லத்தம்பி தெரு, எல்லிஸ் ரோடு,
சென்னை – 600 002.
பதிப்பு - 1992.

போன்ற நூல்கள் ஆய்வு முன்னோடிகளாக அமைகின்றன.

## 7.ஆய்வு கருதுகோள்:

சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகளாகிய சொற்கள், வாழ்வியல் நிலைகள், நம்பிக்கைகள், சடங்குகள், சமயம், புராணக்கதைகள், நிலவியல் கருத்துக்கள் போன்றவை மிகுதியாக பதிவாகியுள்ளன என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

## 8.ஆய்வு அணுகுமுறை:

சங்க இலக்கியங்களில் காணலாகும் வடமொழிக் கூறுகளைப் பகுத்துக் காண்பதற்குப் பகுப்புமுறை ஆய்வும்; சமய நம்பிக்கை, சடங்கு போன்றவற்றை விளக்க விளக்கமுறை ஆய்வும்; வடமொழி இலக்கிய நூல்களோடு தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டுக் காண்பதற்கு ஒப்பாய்வுமுறை ஆய்வும் ஆகிய ஆய்வு அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன.

## 9.ஆய்வேட்டின் அமைப்பு:

“**சங்க இலக்கியங்களில் வடமொழிக் கூறுகள்**” என்னும் இந்த ஆய்வு முன்னுரை, நிறைவுரை நீங்கலாக,

இயல் 1. **சங்ககால தமிழ் - வடமொழி உறவு நிலை**

இயல் 2. **எட்டுத்தொகை நூல்களில் வடமொழிக் கூறுகள்**

இயல் 3. **பத்துப்பாட்டு நூல்களில் வடமொழிக் கூறுகள்**

இயல் 4. **சங்ககால தொல்லியல் சான்றுகளில் வடமொழிக் கூறுகள்**

என்னும் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இயலின் இறுதியில் அவற்றிற்குரிய ஆய்வு முடிவுகளும், சான்றெண் விளக்கமும் இடம்பெறுகின்றன. ஆய்வு முடிவுகள் தொகுக்கப்பெற்று முடிவுரையாக தரப்பெற்றுள்ளன. முடிவுரைக்குப்பின் பின்னிணைப்புகள் இடம் பெற்றுள்ளன.

0.1 '**சங்ககால தமிழ் - வடமொழி உறவு நிலை**' என்னும் முதல் இயல், சங்க காலத்திற்கு முன்பு தமிழப்பேசும் நிலப்பகுதிக்கும் வடமொழிநிலப் பகுதிக்கும் நிலவியல், அரசியல், சமயம், வணிகம் போன்ற தொடர்புகள்; வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இரு நிலப்பகுதிக்குமான தொடர்புகள், வரலாற்றுக்குப் பிற்பட்ட காலமான சங்ககாலத்திற்கு முன்பான காலப்பகுதியில் நிலவிய தொடர்புகள், சிந்துவெளிப் பகுதியில் நிலவிய கருத்து வேறுபாடுகள், ரிக் வேதத்தில் இடம்பெற்றுள்ள திராவிட இனத்தின் கருத்துக்கள், அசோகர் காலத்துத் தொடர்புகள்; சமண, பௌத்த தென்னாட்டு வருகை; இலங்கையில் பாலி, பிராகிருத மொழியின் வருகை, அகத்தியர் தமிழை உருவாக்கிய கதை, சங்கம் உருவாதன் பின்புலம், தொல்காப்பியம் போன்ற சங்ககாலத்துத் தமிழ் - வடமொழி இலக்கண நூல்களில் இடம்பெறும் கருத்துக்கள், வெளிநாட்டவர் நூற்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பதிவுகள், வாணிப தொடர்பு குறித்த குறிப்புகள், புராணத் தொடர்புகள் போன்றவற்றை இவ்வியல் விரிவாக ஆராய்கிறது.

0.2. '**எட்டுத்தொகை நூல்களில் வடமொழிக் கூறுகள்**' என்னும் இரண்டாவது இயல், சங்கம், சங்க இலக்கியம் பெயரிடுதல், சங்க இலக்கியம் முன்நிறுத்தலின் தேவை, எட்டுத்தொகை, எட்டுத்தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள், நற்றிணையில் வடமொழிக் கூறுகள், குறுந்தொகையில் வடமொழிக் கூறுகள், ஐங்குறுநூற்றில் வடமொழிக் கூறுகள், கலித்தொகையில் வடமொழிக் கூறுகள், அகநானூற்றில் வடமொழிக் கூறுகள், புறநானூற்றில் வடமொழிக் கூறுகள், பதிற்றுப்பத்தில் வடமொழிக் கூறுகள், பரிபாடலில் வடமொழிக் கூறுகள் போன்றவற்றை விரிவாக விளக்குகிறது.

0.3. '**பத்துப்பாட்டு நூல்களில் வடமொழிக் கூறுகள்**' என்னும் மூன்றாவது இயல், பத்துப்பாட்டு - விளக்கம், பத்துப்பாட்டிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களின் கருத்துக்கள், திருமுருகாற்றுப்படையில் வடமொழிக் கூறுகள், பொருநராற்றுப்படையில் வடமொழிக் கூறுகள், சிறுபாணாற்றுப்படையில் வடமொழிக் கூறுகள், பெரும்பாணாற்றுப்படையில் வடமொழிக் கூறுகள், முல்லைப்பாட்டில் வடமொழிக் கூறுகள், மதுரைக்காஞ்சியில்

வடமொழிக் கூறுகள், நெடுநல்வாடையில் வடமொழிக் கூறுகள், குறிஞ்சிப்பாட்டில் வடமொழிக் கூறுகள், பட்டினப்பாலையில் வடமொழிக் கூறுகள், மலைபடுகடாமில் வடமொழிக் கூறுகள் போன்றவற்றை விரிவாக ஆராய்கின்றது.

0.4. **'சங்ககால தொல்லியல் சான்றுகளில் வடமொழிக் கூறுகள்'** என்னும் நான்காவது இயல், தொல்லியல் விளக்கம், தொல்லியல் சான்றுகளின் தேவை, சிந்துவெளி குறியீடுகள், நடுகற்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், நாணயங்கள், செப்புப் பட்டயங்கள், புழங்குப்பொருட்கள் போன்ற தொல்பொருட்களில் பதிவாகியுள்ள வடமொழிக் கூறுகள், அவற்றின் இயல்புகள், இலக்கியத்தை தொகுப்பித்தோர், தொகுத்தோர், சங்க இலக்கியப் பதிப்புப் பணி, சங்க இலக்கியம் முழு வடிவம் பெறுதல் போன்றவற்றை விரிவாக விளக்குகிறது.

## 10.சான்றெண் விளக்கம்:

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் சான்றெண் விளக்கம் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்களின் ஆசிரியர் பெயர், நூல் பெயர், பக்க எண் முறையே தரப் பெற்றுள்ளன.

## 11.துணைநூற் பட்டியல்

துணைநூற் பட்டியல் பகுதியில் இவ்வாய்வுக்குப் பயன்பட்ட நூற்கள், கட்டுரைகள் முதலியவற்றின் பட்டியல்கள் இடம்பெறுகின்றன. இப்பட்டியல் முறையே அகர வரிசையில் ஆசிரியர் பெயர், நூற்பெயர், பதிப்பகம், வெளியான ஆண்டு என்ற முறையில் அமைக்கப் பெற்றுள்ளன.

## 12.பின்னிணைப்பு:

01. வடமொழிக் கூறுகள் இடம்பெற்றுள்ள பாடல் எண் பட்டியல்.
02. வடமொழிக் கூறுகள் இடம்பெற்றுள்ள தொல்லியல் சான்றுகளின் பட்டியல்

போன்ற பட்டியல்கள் பின்னிணைப்பில் இடம் பெற்றுள்ளன.

# துணைநூற் பட்டியல்

01.அகத்தியலிங்கம், ச., சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மாணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை – 108. முதற்பதிப்பு – 2010.

02.அய்யப்பன், கா., (ப.ஆ.) செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு, காவ்யா வெளியீடு, முதற்பதிப்பு – 2009.

03.அரங்கசாமி, கா., கபிலர், சாகித்திய அகாதெமி, இரவீந்திரபவன் 35, பெரோஸ் ஷா சாலை, புதுதில்லி 110 001. முதற்பதிப்பு -2012.

04.அரசு, வீ., ரிக் வேதம் (மூன்று தொகுதிகள்), அலைகள் வெளியீட்டகம், சென்னை 600 024. முதற்பதிப்பு - 2004.

05.அரசு, வீ., சங்க இலக்கியம் பன்முக வாசிப்பு, மாற்று வெளியீட்டகம், எண் 96, ஜே பிளாக், நல்வரவு தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், சென்னை 106.

06.அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், மாணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை – 108. மூன்றாம் பதிப்பு - 2010

07.அருணாசலம், ப., சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர் – 613 005. 1988

08.அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, தி பார்கர், 293, அகமது வணிக வளாகம், 2வது தளம், இராயப்பேட்டை, சென்னை – 14.

09.அழகிரிசாமி, அ., காலந்தோறும் தமிழ், எழில் பதிப்பகம், விருத்தாசலம் - 606 001. முதற்பதிப்பு - 1999

10.அறிவுடைநம்பி, ம.சா., (ப.ஆ.) பதிப்பியல் நெறிமுறைகள்,
பி2, குடியிருப்பு வளாகம், தமிழ்ப் பல்கலைக்கழகம்,
திருச்சி நெடுஞ்சாலை, வாகையூர்,
தஞ்சாவூர் – 613 005.
முதற்பதிப்பு 2003

11.அன்னிதாமசு, இலக்கியவியல்,
கோட்பாடும் அணுகுமுறையும்,
அமுத நிலையம்,
7, ஸ்ரீபுரம் 2வது தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 14.
முதற்பதிப்பு – 1999

12.அஜி, த., தமிழ் வடமொழி இலக்கண உறவு,
திருக்குறள் பதிப்பகம்,
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர் நகர்,
சென்னை – 78.
முதற்பதிப்பு - 2008

13.அஸ்கோபர்போலா, சிந்துவெளி எழுத்து,
தமிழோசை பதிப்பகம்,
21/8 கிருஷ்ணா நகர்,
மணியகாரம்பாளையம் சாலை, கணபதி,
கோயம்புத்தூர் 641 012.
முதற்பதிப்பு – 2009

14.ஆதி நாராயணன், கி., மொழி இலக்கியச் சிந்தனைகள்,
14, 1302, முகப்பேர் மேற்கு, சென்னை – 600 058.
வெளியீடு - 1998

15.ஆலிஸ், அ., (ப.ஆ.) பிறமொழி இலக்கியங்களில் சங்க இலக்கியங்களின்தாக்கம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி – 620 024. முதற்பதிப்பு – 2009

16.இரத்தினம் பிள்ளை, கோ., சங்க காலக் கதைகள்,
P. சுந்தரேசன் கம்பெனியார்,
93, எல்லை அம்மன் கோயில் தெரு,
தஞ்சாவூர். முதற்பதிப்பு - 1968

17.இராகவையங்கார், இரா., தமிழ் வரலாறு,
மாணவர் பதிப்பம்,
பி.11 கல்மொகர் குடியிருப்பு,
35, செவாலிய சிவாஜி கணேசன் சாலை,
தி நகர், சென்னை – 17.
மறுபதிப்பு - 2009

18.இராசசேகர தங்கமணி, மு., பாண்டிய வரலாறு (முதல் பாகம்),
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.
முதற்பதிப்பு - 1978

19.இராசமாணிக்கம், கி., ஆரியம் அழிந்த ஆட்சி பீடங்கள்,
தமிழ் இன விடுதலைக் கழகம்,
137, மகாதானத் தெரு,
மயிலாடுதுறை – 609 001.

20.இராசமாணிக்கனார், மா., கல்வெட்டுக்களும் தமிழ்ச் சமூக வரலாறும்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98. முதற்பதிப்பு – 2008

21.இராசமாணிக்கனார், மா., கால ஆராய்ச்சி,
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 14.
முதற்பதிப்பு – 2011

22.இராசமாணிக்கனார், மா., தமிழக கலைகளும் கல்வெட்டுகளும்,
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 14.
முதற்பதிப்பு – 2011

23.இராசு பவுன்துரை, தமிழகப் பாறை ஓவியங்கள்
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.
முதற்பதிப்பு – 2001

24.இராசேந்திரன், க., சங் பரிவாரின் சதி வரலாறு,
தந்தை பெரியார் திராவிடர் கழகம்,
தலைமை நிலையம்,
27, 2வது தளம், கே.எம்.என். வீதி
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
முதற்பதிப்பு – 2004

25.இராணி, ந., சங்க இலக்கியத் தொகுப்பு நெறிமுறைகள்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு - 2012

26.இராமசாமி, அ., தொன்மைத் தமிழர் நாகரிக வரலாறு,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு 2013

27.இராமலிங்கம், அரங்க., சங்க இலக்கியத்தில் வேந்தர்,
பாரதி புத்த காலயம்,
7/40, கிழக்குச் செட்டித்தெரு,
பரங்கிமலை, சென்னை – 16. 2009

28.இராமன், ஏ.எஸ்., தமிழ்நாட்டு ஓவியங்கள்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 613 005,
முதற்பதிப்பு – 2006

29. இலக்குவனார், சி., பழந்தமிழ்,
அபிராமி பதிப்பகம்,
17, சொடிமரத் தெரு,
இராயபுரம், சென்னை – 600 013.
முதற்பதிப்பு – 2000

30.இளங்குமரன், இரா., தமிழ் வளம் - சொல்,
விக்னேஷ் வெளியீடு,
(இரண்டாவது மாடி)19, நியூ காலனி, ஜோசியர் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
முதற்பதிப்பு – 1998

31.இளங்கோவன், கு.வை., சங்கக் காலக் கடவுளர்,
சேகர் பதிப்பகம்,
66/1 பெரியார் தெரு, எம்.ஜி.ஆர் நகர், சென்னை – 78.
முதற்பதிப்பு – 1995

32.இளமாறன், பா., அறியப்படாத தமிழ் உலகம்,
புதிய புத்தகம் பேசுது, 421, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை – 18.
2011

33.கணேசன், டி.சி., தமிழ்க் கருவூலம்,
வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை – 17.
இரண்டாம் பதிப்பு – 2000

34.கண்ணன், இரா., பழந்தமிழ் ஆய்வுகள்,
அப்பர் பதிப்பகம்,
சிவனருள் நிலையம், 3/401, வள்ளலார் தெரு.
அண்ணா நகர், ஆவடி, IAF, சென்னை - 55
முதற்பதிப்பு 2009

35.கந்தையா, ந.சி., முச்சங்கம்,
அமிழ்தம் பதிப்பகம், சென்னை – 14.
மறுபதிப்பு – 2003

36.கந்தையா, ந.சி., ஆரியர் தமிழர் கலப்பு,
அமிழ்தம் பதிப்பகம், எ4 மாதவ் குடியிருப்பு,
5, டாக்டர் தாமச சாலை, தி நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு – 2003

37.கந்தையா, ந.சி., செவ்வியலக்கியக் கருவூலம்,
தமிழ்மண் அறக்கட்டளை, தி. நகர், சென்னை.
முதற்பதிப்பு – 2008

38.கமலக்கண்ணன், இரா.வ., இலக்கிய ஒப்பாய்வியல் ஒரு நோக்கு,
மோகன் பதிப்பகம்,
4, பைகிராப்பட்சு சாலை, சென்னை – 05.
முதற்பதிப்பு – 1985

39.கரிகாலன், நைசி., புறநானூற்று ஆய்வுகள்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு 2011

40.காசிநாதன், நடன., தமிழர் கரசு இயல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
2003

41.கார்த்திகேசு சிவத்தம்பி சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
முதற்பதிப்பு – 2009

42.கார்த்திகேசு சிவத்தம்பி தமிழ்நூற் பதிப்புப் பணியில்,
உ.வே.சா பாடவிமர்சனவியல் நோக்கு,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு – 2012

43.கிராக்கி, காலத்தின் சுவடுகள்,
வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு - 1995

44.குடவாயில் பாலசுப்பிரமணியம், கோபுரக் கலை மரபு (கோயிற் களஞ்சியம்),
வரலாறு மற்றும் கலையியல் ஆய்வு மையம்.
முதற்பதிப்பு - 2004

45.குமரன், இரெ., சங்க இலக்கிய அகப்பாடல்களில் கருத்துப்
புலப்பாட்டு உத்திகள்,
அனன்யா, 8/37, பி.ஏ.ஒய்.நகர்,
குழந்தை இயேசு கோவில் அருகில்,
புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர் 613 005.
நவம்பர் -2001.

46.குருசாமி சித்தர், தமிழ் இலக்கியத்தில் சேர சோழ பாண்டிய மரபினர் மூவேந்தர்,
மறுமலர்ச்சிக் கழகம்,
ஜோதி இல்லம், (அறக்கட்டளை),
L. புதூர், வாடிப்பட்டி, மார்க்கெட் ரோடு,
சோழவந்தான் மதுரை மாவட்டம்.
இரண்டாம் பதிப்பு - 2010

47.குலசேகரன், சு., தமிழ் வரலாற்றில் தலை & இடைச்சங்கங்கள்,
திருமகள் வெளியீடு,
இ 113, 16வது குறுக்குத் தெரு,
பெசன்ட் நகர், சென்னை – 600 090.
முதற்பதிப்பு - 2006

48.கேசவராஜ், வெ., தென்னிந்திய நடுகற்கள்,
காவ்யா வெளியீடு,
16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை – 24.
முதற்பதிப்பு – 2008

49.கேசவன், கோ., மண்ணும் மனித உறவுகளும்,
சரவண பாலு பதிப்பகம், 4/117ஏ அய்ந்திணைத் தெரு,
இந்திரா நகர், கீழ்பெரும்பாக்கம்,
விழுப்புரம் - 605 602.
திருந்திய முதல் பதிப்பு - 2001

50.கோவிந்தசாமி, மு., பல்லவர் வரலாறு,
வாசுகி பதிப்பகம்,
218, மாரியப்பா நகர், சிதம்பரம்.
முதற்பதிப்பு - 1997

51.கோவிந்தராசன், சி., கல்வெட்டுக் கலைச்சொல் அகராதி,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.
முதற்பதிப்பு - 1987

52.கோவிந்தராசனார், சி., தமிழெழுத்தின் வரிவடிவம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.
முதற்பதிப்பு – 1993

53.கோவிந்தன், கா., ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு,
ராமையா பதிப்பகம்,
சென்னை – 600 014.
முதற்பதிப்பு - 2011

54.கோவேந்தன், கா., தமிழர் இலக்கியம்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி.
முதற்பதிப்பு - 2000

55.கோவேந்தன், த., வடசொல் தமிழ் அகராதி வரிசை(1),
பாண்டியன் பாசறை,
17, வடக்கு போக் சாலை,
தியாசராயர் நகர், சென்னை – 17.
ஆகஸ்டு - 2003

56.கோவேந்தன், த., சங்க இலக்கியச் செய்திக் களஞ்சியம்,
பேபிமுத்து வெளியீடு,
33 பி-பிளாக், பிரகாசம் தெரு, தி.நகர், சென்னை - 17.
முதற்பதிப்பு – 2006

57.கைலாசநாதக் குருக்கள், வடமொழி இலக்கிய வரலாறு,
காலச்சுவடு பதிப்பகம்,
669 கே.பி.சாலை,
நாகர்கோவில் - 629 001.
மூன்றாம் பதிப்பு - 2010

58.சங்கரன், இரா., தமிழக வரலாற்றில் சில போக்குகள்,
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 14.
முதற்பதிப்பு - 2010

59.சஞ்சீவி, ந., சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
முதற்பதிப்பு - 1973

60. சண்முகசுந்தரம், க., சங்ககாலப் பாண்டிய வேந்தர்கள்,
பெ. கந்தசாமிநாயகர் கல்வி அறக்கட்டளை,
62, விலைத்தீர்த்த விநாயகர் கோயில்தெரு,
குயப்பேட்டை, சென்னை – 12.
முதற்பதிப்பு - 1997

61.சண்முகதாஸ், அ., (தொ.ஆ.) சங்க இலக்கிய ஆய்வுகள்,
க. கைலாசபதி நினைவுகள்,
கருத்தரங்கு கட்டுரைகள்,
தேசிய கலை இலக்கியப் பேரவை.
வெளியீடு - 2002

62.சதிஷ், அ., சங்க இலக்கிய உரைகள்,
அடையாளம்,
1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம்,
திருச்சி - 621 310.
மறுபதிப்பு - 2010

63.சர்மா., ஆர்.எஸ்., ஆரியரைத் தேடி,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098.
இரண்டாம் பதிப்பு - 2007

64.சாமிநாதஐயர், உ.வே., சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்,
டாக்டர். உ.வே.சாமிநாதஐயர் நூல்நிலையம்,
பெசன்ட்நகர், சென்னை – 90.
1996

65.சிதம்பரனார், சாமி., சங்கப் புலவர் சன்மார்க்கம்,
தமிழ்ப் புத்தகாலயம்,
393, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை – 14.
முதற்பதிப்பு – 1961

66.சிதம்பரனார், சாமி., எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்,
அறிவுப் பதிப்பகம்,
142, ஜானி ஜான்சான் ரோடு,
ராயப்பேட்டை, சென்னை – 1.
இரண்டாம் பதிப்பு – 2008

67.சிவஞானம், ம.பொ., தமிழும் சமஸ்கிருதமும்,
பூங்கொடி பதிப்பகம்,
14, மேற்கு சித்திரைக்குளம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 4.
இரண்டாம் பதிப்பு – 2002

68.சிவஞானம், ம.பொ., தமிழும் சமஸ்கிருதமும்,
பூங்கொடி பதிப்பகம், 14 மேற்கு சித்திரக்குளம் தெரு,
மயிலாப்பூர், சென்னை - 04.
இரண்டாம் பதிப்பு - 2002

69.சிவசாமி. வி., ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும்,
கலைவாணி அச்சகம்,
யாழ்ப்பாணம், இலங்கை.
முதற்பதிப்பு – 1976

70.சிவசுப்பிரமணியன், ஆ., வரலாறும் வழக்காறுகளும்,
காலச்சுவடு பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.
இரண்டாம் பதிப்பு – 2008

71.சிற்றம்பலம், சி.க., பண்டைய தமிழகம்,
குமரன் பப்ளிஷர்ஸ்,
3,மெய்கை விநாயகர் தெரு,வழி குமரன் காலனி 7வதுதெரு,
வடபழனி, சென்னை – 26.
முதற்பதிப்பு – 1991

72.சீனிவாசன். இரா., மொழி ஒப்பியலும் வரலாறும்,
அணியகம், சென்னை.
நான்காம் பதிப்பு - 1999

73.சுசீலா கோபாலகிருஷ்ணன், சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்,
பாலாஜி பதிப்பகம்,
5, சக்கான் தெரு, ஷெனாய் நகர்,
மதுரை – 625 020.
1982

74.சுந்தரமகாலிங்கம், பொ., புறத்திணை விருந்து,
திருக்குறள் பதிப்பகம்,
66, பெரியார் தெரு. எம்.ஜி.ஆர் நகர், சென்னை – 78.
முதற்பதிப்பு - 2006

75.சுந்தரம், மெ., சங்க காலத் தமிழரின் கடல் வணிகம்,
பாரி நிலையம்,
184, பிராட்வே, சென்னை – 01.
முதற்பதிப்பு - 1978

76. சுப்பிரமணியன், ச.வே.,(ப.ஆ.) மெய்யப்பன் தமிழ் அகராதி
மணிவாசகர் பதிப்பகம்
பிராட்வே, சென்னை.
முதற்பதிப்பு – 2006

77.சுப்பிரமணியம், சி., தமிழால் முடியும்,
மணிவாசகர் பதிப்பகம், பிராட்வே, சென்னை.
முதற்பதிப்பு - 2007

78.சுப்பிரமணியன், தி., தமிழகத்தல் பெருங்கற்காலப் பண்பாடு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர் சென்னை 908.
முதற்பதிப்பு – 2011

79.சுப்ரமணியன், ந., கபிலர்,
(செய்யுள் தொகை,ஆராய்ச்சி முகவுரை குறிப்புரையுடன்)
அன்னெஸ் பப்ளிகேஷன்ஸ்,
உடுமலைப் பேட்டை 642 128.
முதற்பதிப்பு - 2002

80.சுப்ரமண்யன், ந., கபிலர்,
அன்னெஸ் பப்ளிகேஷன்ஸ்,
உடுமலைப்பேட்டை 642 128.
முதற்பதிப்பு - 2002

81.சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ்., வடமொழி நூல் வரலாறு,
அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்.
1946

82.சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ்., சங்க நூல்களும் வைதீக மார்க்கமும்,
12, வடக்கு மட வளாகம்,
திருவையாறு.
1951

83.சுப்ரமணியாச்சாரி, வெ.சு., கரிகாலன் மூவர்,
பானு பதிப்பகம், ஏ/3/96 கைலாசபுரம்,
திருச்சி – 620 014.
முதற்பதிப்பு – 2007

84.சூசை சகாயராஜா, லூ., தமிழ்க் காதலும் களமும்,
சிறகுகள் வெளியீடு,
எண் : 37, சேக் மேஸ்திரி தெரு,
இராயபுரம், சென்னை – 13.
முதற்பதிப்பு – 2005

85.செயப்பிரகாசம். சு., (மொ.பெ.) தமிழ்மொழி வரலாறு தெ.பொ.மீ. களஞ்சியம்
காவ்யா, சென்னை.
முதற்பதிப்பு - 2005

86.சேதுராமன், பி., ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு – 2011

87.ஞானி, தமிழில் படைப்பியக்கம்,
லட்சுமி – சுந்தரம்,
காவ்யா, 16 – 17வது குறுக்குத்தெரு,
இந்திரா நகர், 2-வது தளம்,
பெங்களூர் - 560 038.
நவம்பர் - 1999

88.டாங்கே, எஸ்.ஏ., பண்டைக்கால இந்தியா,
செண்பகா பதிப்பகம்,
பாண்டிபஜார், சென்னை - 17.
முதற்பதிப்பு - 2011

89.தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும்,
யாழ் வெளியீடு,
ஏபி 1108, தென்றல் குடியிருப்பு,
மூன்றாவது தெரு. மேற்கு அண்ணாநகர்,
சென்னை – 40

90.தமிழண்ணல், தமிழ்த் தவம்,
மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.
முதற்பதிப்பு - 2005

91.தமிழண்ணல், தமிழ் ஒரு “கட்டமைபுள்ள” மொழி,
மெய்யப்பன் பதிப்பகம்,
53 புதுத்தெரு. சிதம்பரம் 608 001.
முதற்பதிப்பு – 2008

92.தமிழண்ணல், தமிழர் சமயமும் சமஸ்கிருதமும்,
மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு,
மதுரை - 625 001.
முதற்பதிப்பு – 2011

93.தமிழண்ணல், சங்க மரபு,
மீனாட்சி புத்தக நிலையம்,
மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு,
மதுரை - 625 001.
இரண்டாம் பதிப்பு – 2012

94.தமிழ்மொழி, வி., சங்க இலக்கியத்தில் வைதீகத் தாக்கம்,
தமிழ் ஆராய்ச்சித் துறை,
புதுச்சேரி அரசு.
ஜூலை – 2010

95.திராவிடமணி, போ., அகநானூற்றில் இல்லறமாண்பு,
சாந்தா பப்ளிஷர்ஸ்,
முத்து விழா இல்லம்,
13(5), ஸ்ரீபுரம் 2வது தெரு,
இராயப்பேட்டை – சென்னை – 17.

முதற்பதிப்பு – 2008

96.திருநாவுக்கரசு, செந்தமிழ்ச் செல்வி தொகுதி 1,2,3
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி.
1923 – 1924

97.துரைசாமிப்பிள்ளை, சு., பதிற்றுப்பத்து (மூலமும் விளக்க உரையும்),
பூம்புகார் பதிப்பகம்,
127, (ப.எண்.63), பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை – 108. முதற்பதிப்பு 2010

98.தெய்வம், இரா., சங்க இலக்கியத்தில்,
ஓரெழுத்து ஒருமொழி,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு – 2011

99.தேவநேயப் பாவாணர், ஞா., பழந்தமிழாட்சி,
தமிழ்மண் பதிப்பகம், தி.நகர், சென்னை.
மறுபதிப்பு – 2000

100.தேவநேயப்பாவாணர், ஞா., ஒப்பியன் மொழிநூல்,
தமிழ் மண் பதிப்பகம், தி.நகர், சென்னை.
மறுபதிப்பு - 2001

101.தேவநேயப்பாவாணர், ஞா., திராவிடத்தாய்,
பூம்புகார் பதிப்பகம்,
127, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை – 600 108.
முதற்பதிப்பு - 2006

102.தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, மதமும் சமூகமும்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.

103.நக்கீரன், அ., தமிழ் வரலாறு 2
(தேவநேயப் பாவாணர் மொழி ஞாயிறு)
தமிழ்மண் பதிப்பகம்,
அகமது வணிக வளாகம்,293,
திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை,
சென்னை – 14, மறுபதிப்பு 2000

104.நடராசன், தி., சங்ககால எழுத்தியல்,
சங்கம் பிரிண்டர்ஸ்,
69, பாண்டிய வேளாளர் தெரு,
மதுரை – 1.

105.நரசய்யா, கடல்வழி வணிகம்,
பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டாஸ் சாலை, சென்னை 17.
முதற்பதிப்பு - 2005

106.நாகசாமி, இரா., தமிழ் மாலை,
தமிழ் ஆர்ட்ஸ் அகாடமி,
சென்னை – 600 090.
பதிப்பு – 2004

107. நாராயணன், இரா., சங்க இலக்கிய பற்றிய வரலாற்றியல் ஆய்வுகள்,
(நெறியாளர் (ஆய்வேடு) க.பஞ்சாங்கம்)
தமிழ் ஆராய்ச்சிகள்,
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
புதுச்சேரி
புதிப்பு – 2010

108.நாவலியூர் நடராஜன், வடமொழி இலக்கிய வரலாறு,
சங்கீதா பதிப்பகம்,
32, IV – அவின்யூ,
பெசன்ட் நகர், சென்னை – 90.
இரண்டாம் பதிப்பு – 1988

109.நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ., சங்ககால ஆட்சிமுறையும் சமூக வாழ்வும்,
நியூ செஞ்சுரியன் சிறுநூல் வரிசை,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு – 2013

110.நு.ஃ.மான், எம். ஏ., பாரதியார் மொழிச் சிந்தனைகள்,
ஒரு மொழியியல் நோக்கு,
சவுத் விஷன், 6 தாயார் சாகிப், 2வது சந்து,
சென்னை.
முதற்பதிப்பு - 1984

111.நெடுஞ்செழியன், க., தமிழர் இயங்கியல்,
பாலம் வெளியீடு, சென்னை.
முதற்பதிப்பு – 2000

112.பகவதி, கு., தமிழர் ஆடைகள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
2003

113.பக்தவத்சல பாரதி, பெண்ணிய ஆய்வுகள்,
புதுவை மொழியியல் பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி – 605 001.
முதற்பதிப்பு – 1998

114.பத்மாவதி, ஆ., தொல்லியல் ஆவணங்களின்,
இசைக்கலை நுட்பங்கள்,
பாவை பப்ளிகேஷன்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை.
முதற்பதிப்பு – 2013

115.பரமசிவன், தொ., தெய்வம் என்பதோர்
மணி பதிப்பகம், 29A யாதவர் கீழத்தெரு
பாளையங்கோட்டை. 2012

116. பாம்பன் சுவாமிகள், சேந்தன் செந்தமிழ்,
(வடமொழி – தமிழ்ச் சொல் அகராதி)
அழகு பதிப்பகம்,
20, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.
அழகு பதிப்பு : 1999

117.பாலசுப்பிரமணியம் குடவாயில், கோபுரக் கலை மரபு,
கோயிற் களஞ்சியம்,
வரலாறு மற்றும் கலையியல் ஆய்வு மையம்,
6 நிர்மலா நகர், தஞ்சாவூர் – 613 007.
2004

118.பாலசுப்பிரமணியன், கு.வெ., சங்க இலக்கியக் கொள்கை,
மீனாட்சி புத்தக நிலையம்,
மயூரா புத்தக நிலையம், மதுரை – 625 001.
முதற்பதிப்பு - 2008

119.பாலசுப்பிரமணியன், கு.வெ., சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
முதற்பதிப்பு – 2008

120.பிள்ளை, கே.கே., தமிழக வரலாறும் பண்பாடும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 113.
2008

121.பிள்ளை, கா.சு., மொழிநூற் கொள்கையும் தமிழ் மொழி அமைப்பும்,
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
முதற்பதிப்பு - 2001

122.புரட்சிதாசன், தமிழ்ச் சங்கம்,
பசும்பொன் பதிப்பகம், மதுரை.
டிசம்பர் 1994

123.புரட்சிதாசன், சங்கத் தமிழ்ச் சான்றுகள்,
பாண்டியன் பாசறை,
17 வடக்கு டோக்சாலை,
தி.நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு – 1998

124.புஷ்பரட்ணம், பரமு., இலங்கைத் தமிழரின்,
பண்டைய கால நாணயங்கள்,
பவானி பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.
2001

125.பூரணச்சந்திரன், க., இந்திய மொழிகள் ஓர் அறிமுகம்,
நிவேதிதா நல்வாழ்வு கல்வி அறக்கட்டளை,
15, வங்கியர் குடியிருப்பு,
குமரன் நகர், திருச்சிராப்பள்ளி – 17.
முதற்பதிப்பு – 2004

126.பெருமாள்சாமி, வெ., சங்க காலத் தமிழகத்தின் சமூகநிலை,
பாரதி புத்தகாலயம் 421, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை சென்னை – 18.
முதற்பதிப்பு – 2007

127.பெருமாள் முருகன், பதிப்புகள் மறுபதிப்புகள்,
காலச்சுவடு பதிப்பகம்,
முதற்பதிப்பு - 2011

128.பொன்னீலன், தெற்கிலிருந்து,
மக்கள் வெளியீடு, 49, உனிசு சாகிப் தெரு,
எல்லீசு சாலை, சென்னை – 02.
முதற்பதிப்பு - 2001

129.மகேஸ்வரி, செ., பரிபாடலில் சமூகம்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு - 2013

130.மணவாளன், அ.அ., இலக்கிய ஒப்பாய்வு சங்க இலக்கியம்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு - 2009

131.மருதநாயகம், ப., தமிழின் செவ்வியல் தகுதி,
இராசகுணா பதிப்பகம்,
எண் 101, 3/3 ஜீனியஸ் சாலை,
சைதாப்பேட்டை, சென்னை – 15.
2012

132.மறைமலையடிகள், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை,
திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி – 6.
1966

133.மாணிக்கனார், வ.சுப., தமிழ்க்காதல்,
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,
40, பிஞ்சால சுப்பிரமணியத் தெரு,
த.பை. எண். 1040. தி.நகர்,
சென்னை – 17.
முதற்பதிப்பு – 2009

134.மாதவன், வே.இரா., (ப.ஆ) பதிப்புலகில் வையாபுரிப்பிள்ளை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
முதற்பதிப்பு - 2010

135.மாதையன், பெ., சங்க இலக்கியச் சொல்லடைவு,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
2007

136.மாதையன், பெ., தமிழ்ச்செவ்வியல் படைப்புகள்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு - 2009

137.மாதையன், பெ., அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்,
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானி ஜான்சான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை – 14.
முதற்பதிப்பு – 2009

138.மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., சமணத் தமிழ் இலக்கிய வரலாறு,
இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம்,
சூளைமேடு, சென்னை – 94.
முதற்பதிப்பு – 2008

139.முத்துசாமி, அ., சங்க இலக்கியத்தில் ஆயர்
1993

140.முருகேச பாண்டியன், ந., அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்,
காலச்சுவடு பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.
இரண்டாம்பதிப்பு - 2010

141.ராகுல சாங்கருத்தியாயன், ரிக்வேதகால ஆரியர்கள்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
முதற்பதிப்பு – 1991

142.ராஜ்கௌதமன், பதிற்றுப்பத்து ஐங்குறுநூறு சில அவதானிப்புகள்,
விடியல் பதிப்பகம், சென்னை.
கோவை – 641 015

143.ராஜ்கௌதமன், க. அயோத்திதாசர் ஆய்வுகள்,
காலச்சுவடு பதிப்பகம்,
நாகர்கோவில் - 629 001.
2004

144.ராஜ்கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்,
தமிழினி 67, பீட்டர்ஸ்சாலை, ராயப்பேட்டை,
சென்னை 14.
முதற்பதிப்பு – 2006

145.ராஜ்கௌதமன், கலித்தொகை – பரிபாடல் ஒரு விளிம்புநிலை நோக்கு,
விடியல் பதிப்பகம்,
கோவை – 641 015.
முதற்பதிப்பு - 2011

146.லட்சுமிநாராயணன், கே.சி., வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்,
எல்.கே.எம் பப்ளிகேஷன்,
பழைய எண் 15/4இ புதிய எண் 33/4,
ராமநாதன் தெரு, தியாகராய நகர், சென்னை 17.
முதற்பதிப்பு - 2005

147.வரதராசன், மு., காலத்தோறும தமிழ்,
பாரி நிலையம்,
90, பிராட்வே, சென்னை -108.
மறுபதிப்பு – 2003

148.விக்டர், ம. சோ., எபிரேயத்தின் தாய்மொழி தமிழே,
நல்லோர் பதிப்பகம்,
68, லஸ் சர்ச்ரோடு, மைலாப்பூர், சென்னை – 04.
இரண்டாம்பதிப்பு – 2007

149.விக்டர், ம. சோ., தமிழும் சமஸ்கிருதமும் (தொகுதி – 2),
நல்லோர் பதிப்பகம்,
68, லஸ் சர்ச்ரோடு,
மைலாப்பூர், சென்னை – 04.
2007

150.விக்டர் ராசமாணிக்கம், ஞா., சங்க இலக்கியத்தில் கலங்கள்,
அல்மைட்டி பதிப்பகம்,
தென்றல் 1, பல்கலைக்கழகக் குடியிருப்பு,
தமிழ்ப்பல்கலைக் கழகக் குடியிருப்பு,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர் – 5.
டிசம்பர் 1994

151.வின்சென்ட், இலா., தமிழ் நிலமும் இனமும்,
பாரதி புத்தகாலயம்,
முதற்பதிப்பு – 2010

152.வெங்கடேசன், இரா., செவ்வியல் நூல்கள்,
இராசகுணா பதிப்பகம்,
எண் 101, 313 ஜீனியஸ் சாலை,
சைதாப்பேட்டை, சென்னை – 15.
முதற்பதிப்பு – 2011

153.வெள்ளை வாரணனார், க., சைவ சித்தாந்த சரித்திர வரலாறு,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் – 613 005.
முதற்பதிப்பு - 2002

154.வேங்கடசாமி, சீனி மயிலை., பழங்காலத் தமிழர் வாணிகம்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
அம்பத்தூர், சென்னை – 98.
நான்காம் பதிப்பு – 199

155.வேங்கடசாமி, சீனி மயிலை., நுண்கலைகள் (பதிப்பு – சோ. தேவராசன்),
வெளியீடு, எம். ஏழுமலை,
8/65, எம்.கே. பத்மநாபன் தெரு,
கன்டோன்மென்டு, பல்லாவரம், சென்னை – 43.
முதற்பதிப்பு - 2003

156.வேங்கடசாமி நாட்டார், மு., நக்கீரர்,
சாமிபுக்ஸ்,
எண் 49/2, சோலையப்பன் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 4.
முதற்பதிப்பு – 2007

157.வேங்கடராஜீலு ரெட்டியா, வே., கபிலர்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
1998

158.வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம்,
குமரன் புத்தக இல்லம் - கொழும்பு – சென்னை.
மறுபதிப்பு – 2002

159.வேலுப்பிள்ளை, ஆ., தமிழர் சமய வரலாறு,
குமரன் புத்தக இல்லம் கொழும்பு.
2011

160.வேல்சாமி, பொ., பொற்காலங்களும் இருண்டகாலங்களும்,
காலச்சுவடு பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.
முதற்பதிப்பு – 2006

161.வையாபுரிப்பிள்ளை, எஸ், சங்க இலக்கியம் (இரண்டாம் தொகுதி),
முல்லை நிலையம்,
9 பாரதி நகர், முதல் தெரு,
தி.நகர். சென்னை – 17.

162.வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கியச் சிந்தனைகள்,
வையாபுரிப்பிளை நினைவு மன்றம்,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர்,
சென்னை – 98.
இரண்டாம்பதிப்பு – 1992

163.ஜகநாதராஜா, மு.கு., தமிழும் பிராகிருதமும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113.
1992

164.ஜகந்நாதன், கி.வா., கன்னித் தமிழ் (கட்டுரைகள்),
அமுத நிலையம்,
பிராட்வே லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை – 18.
இரண்டாம்பதிப்பு – 1960.

165.ஜகநாதன், கி.வா., — தமிழ்நூல் அறிமுகம்
கலா நிலையம்
ப.எண். 244. ராமகிருஷ்ண மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
2008

166.ஜானகி. இரா., (தொ.ஆ.) — சங்க இலக்கிய பதிப்புரைகள்,
பாரதி புத்தகாலயம், சென்னை.
முதற்பதிப்பு – 2010

167.ஸ்ரீநிவாச சர்மா, — வடமொழிநாடக இலக்கிய வரலாறு,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
வெளியீடு – 1989

168. … — கழகத் தமிழ் அகராதி,
திருநெல்வேலி தென்னிந்திய,
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டிடிகே சாலை,
சென்னை 18.
18ஆம் பதிப்பு – 2004

169. … — சங்க இலக்கியச் சொற்களஞ்சியம்,
திருவாடுதுறை ஆதினம்.
1963

170. … — கலைக்களஞ்சியம் (தொகுதி -1),
தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
முதற்பதிப்பு 1954

171. … — சங்க இலக்கியம் முழுவதும்,
வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.